உ

சிவமயம்

ஞான இரகசிய மென்னும்

# இருபது சித்தர் பாடல்கள்

இஃது

திரு சதானந்தம் அவர்களால்

பல ஞான நூல்களிலிருந்து

தொகுக்கப்பட்டது

பிரசுரித்தவர்:

ஆர். ஜி. பதி கம்பெனி,

4, வெங்கட்ராமய்யர் தெரு,

சென்னை-1.

இதன் விலை] :: [ரூபா. 5-00

# இருபது
# சித்தர் பாடல்கள்



பிரசுரித்தவர்:

ஆர். ஜி. பதி கம்பெனி

இதன் விலை]   சென்னை-1.   [ரூபா. 5-00

T.9990

# இருபது சித்தர் பாடல்கள்

## சிவ வாக்கியர் பாடல்

காப்பு.

**விநாயகர் வணக்கம்**

அரியதோர் நமச்சிவாய மாதியந்த மானதும்
ஆறிரண்டு நூறுதேவ ரன்றுரைத்த மந்திரம்
சுரியதோ ரெழுத்தையுன்னிச் சொல்லுவேன் சிவவாக்கியம்,
தோஷதோஷ பாவமாயை தூரதூர ஓடவே
கரியதோர் முகத்தையுற்ற கற்பகத்தைக் கைதொழக்
கலைகள்நூல்கள் ஞானமுங் கருத்தில்வந்து திக்கவே
பெரியபேர்கள் சிறியபேர்கள் கற்றுணர்ந்த பேரெலாம்
பேயனாகி ஓதிடும் பிழைபொறுக்க வேண்டுமே. 1

**அக்ஷர நிலை**

ஆன அஞ்செ ழுத்துளே அண்ட மும்அ கண்டமும்
ஆன அஞ்செ ழுத்துளே ஆதி யான மூவரும்
ஆன அஞ்செ ழுத்துளே அகார மும்ம காரமும்
ஆன அஞ்செ ழுத்துளே அடங்க லாவ துற்றவே. 2

**சரியை விலக்கல்**

ஓடி ஓடி ஓடி ஓடி உட்க லந்த சோதியை
நாடி நாடி நாடி நாடி நாட்க ளுங்க ழிந்துபோய்
வாடி வாடி வாடி வாடி மாண்டு போன மாந்தர்கள்
கோடி கோடி கோடி கோடி எண்ணி றந்த கோடியே. 3

### யோக நிலை

உருத்த ரித்த நாடியில் ஒடுங்கு கின்ற வாயுவைக்
கருத்தி னாலி ருத்தியே கபால மேற்ற வல்லிரேல்
விருத்த ராரும் பால ராவீர் ; மேனி யுஞ்சி வந்திடும் ;
அருட்ட ரித்த நாதர் பாதம் அம்மை பாதம் உண்மையே. 4

### வேத நிலை

வடிவு கண்டு கொண்ட பெண்ணை மற்றொருவ னத்தினால்
விடுவனோ அவனை முன்னம் வெட்ட வேணும் என்பனே ;
நடுவன்வந் தழைத்த போது நாறு மிந்த நல்லுடல்
சுடலை மட்டும் கொண்டு போகித் தோட்டிகைக் கொடுப்பரே

### ஞான நிலை

என்னிலே யிருந்த தொன்றை யான றிந்த தில்லையே !
என்னிலே யிருந்த தொன்றை யான றிந்து கொண்டபின்
என்னிலே யிருந்த தொன்றை யாவர் காண வல்லரோ
என்னிலே யிருந்தி ருந்தி யானு ணர்ந்து கொண்டனே. 6

நினைப்ப தொன்று கண்டிலேன் ; நீய லாது வேறிலை ;
நினைப்பு மாய்ம றப்புமாய் நின்ற மாயை மாயையோ ?
அனைத்து மாய்அ கண்டமாய் அனாதி முன்ன னாதியாய்
எனக்குள் நீயு னக்குள்நான் இருக்கு மாற தெங்ஙனே ? 7

மண்ணும் நீயவ் விண்ணும்நீ மறிக டல்கள் ஏழும்நீ ;
எண்ணும் நீயெ ழுத்துநீ இசைந்த பண்ணெ ழுத்தும்நீ ;
கண்ணும் நீம ணியும்நீ ; கண்ணு ளாடும் பாவைநீ ;
நண்ணும் நீர்மை நின்ற பாதம நண்ணுமா றருளிடாய். 8

அரியு மல்ல அரனுமல்ல அப்பு றத்தில் அப்புறம்
கருமை செம்மை வெண்மையைக் கடந்து நின்ற காரணம்
பெரிய தல்ல சிறிய தல்ல பற்று மின்கள் பற்றுமின் ;
துரிய மும்க டந்து நின்ற தூர தூர தூரமே. 9

அந்தி மாலை யுச்சி மூன்றும் ஆடுகின்ற தீர்த்தமும்
சந்தி தர்ப்ப ணங்களுந் தபங்க ளுஞ்செ பங்களும்
சிந்தை மேவு ஞானமுந் தினஞ்செ பிக்கு மந்திரம்
எந்தை ராம ராம ராம ராமவென்னும் நாமமே. 10

கதாவு பஞ்ச பாதங்க ளோத்து ரந்த மந்திரம்
இதாமி தாமி தல்ல வென்றிங் கெய்த்துழலு மேழைகாள்!
சதாவி டாமல் ஓதுவார் தமக்கு நல்ல மந்திரம்
இதாமி தாமி ராம ராம ராமஎன்னும் நாமமே. 11

நான தேது நீய தேது நடுவில்நின்ற தேதடா!
கோன தேது குருவ தேது கூறிடுங் குலாமரே!
ஆன தேத ழிவதே தப்பு றத்தில் அப்புறம்
ஈன தேதி ராம ராம ராமஎன்னும் நாமமே. 12

### யோக நிலை

சாத்தி ரங்கள் ஓதுகின்ற சட்ட நாத பட்டரே!
வேர்த்தி ரைப்பு வந்தபோது வேதம் வந்து தவுமோ?
மாத்தி ரைப்போ தும்முளே மறிந்து தொக்க வல்லிரேல்
சாத்தி ரப்பை நோய்களேது சத்தி முத்தி சித்தியே. 13

### ஞான நிலை

தூரந் தூரந் தூரமென்று சொல்லு வார்கள் சோம்பர்கள்;
பாரும் விண்ணும் எங்குமாய்ப் பரந்த அப்ப ராபரம்;
ஊரும் நாடுங் காடுமோடி உழன்று தேடு மூமைகாள்!
நேர தாக வும்முளே அறிந்து ணர்ந்து நில்லுமே 14

### யோக நிலை

நாலு வேதம் ஓதுவீர்; ஞான பாதம் அறிகிலீர்;
பாலுள் நெய்க லந்த வாறு பாவிகாள்! அறிகிலீர்;
ஆல முண்ட கண்டனார் அகத்து ளேயி ருக்கவே
கால னென்று சொல்லுவீர்; கனவி லும்மஃ தில்லையே. 15

வித்தி லாத சம்ப்ரதாய மேலு மில்லை கீழுமில்லை:
தச்சி லாது மாளிகை சமைந்த வாற தெங்ஙனே?
பெற்ற தாயை விற்றடிமை கொள்ளு கின்ற பேதைகாள்!
சித்திலாத போது சீவ னில்லை யில்லை யில்லையே. 16

அஞ்சு மூணும் எட்டதாய் அநாதி யான மந்திரம்
நெஞ்சி லேநி னைந்து கொண்டு நீருருச் செபிப்பிரேல்
பஞ்ச மான பாதகம்பன் னூறு கோடி செய்யினும்
பஞ்சுபோல் பறக்கு மென்று நான்ம றைகள் பன்னுமே. 17

அண்ட வாசல் ஆயி ரம்ப்ர சண்ட வாசல் ஆயிரம்
ஆறி ரண்டு நூறுகோடி யான வாசல் ஆயிரம்
இந்த வாசல் ஏழை வாசல் ஏகபோக மானதாம்.
எம்பிரா னிருக்கும் வாசல் யாவர் காண வல்லரே? 18

சாம நாலு வேதமும் சகல சாத்தி ரங்களும்
சேம மாக ஓதினும் சிவனை நீர றிகிலீர்;
காம நோயை விட்டுநீர் கருத்து ளேயு ணர்ந்தபின்
ஊமை யான காயமாய் இருப்ப னெங்கள் ஈசனே. 19

சங்கி ரண்டு தாரை ஒன்று சன்னபின்னல் ஆகையால்
மங்கி மாளு தேயுலகில் மானி டங்க ளெத்தனை!
சங்கி ரண்டை யுந்த விர்த்துத் தாரையூத வல்லிரேல்
கொங்கை மங்கை பங்கரோடு கூடி வாழ லாகுமே. 20

## ஞான நிலை

தங்க மொன்று ரூபம் வேறு தன்மையான வாறுபோல்
செங்கண் மாலும் ஈசனுஞ் சிறந்தி ருந்த தும்முளே.
விங்க ளங்கள் பேசுவீர் விளங்குகின்ற மாந்தரே!
எங்கு மாகி நின்றராம நாம மிந்த நாமமே. 21

## யோக நிலை

அஞ்செ ழுத்தி லேபிறந்தவ் வஞ்செ ழுத்தி லேவளர்ந்
தஞ்செ ழுத்தை ஓதுகின்ற பஞ்ச பூத பாவிகாள் !
அஞ்செ ழுத்தில் ஓரெழுத் தறிந்து கூற வல்லிரேல்
அஞ்சலஞ்ச லென்று நாத னம்ப லத்தி லாடுமே. 22

அஞ்சு மஞ்சு மஞ்சுமே அனாதி யான தஞ்சமே
பிஞ்சு பிஞ்ச தல்லவோ பித்தர் காள்பி தற்றுவீர் !
நெஞ்சி லஞ்சு கொண்டுநீர் நின்று தொக்க வல்லிரேல்
அஞ்சு மில்லை ஆறுமில் அனாதி யாகித் தோன்றுமே. 23

நீள வீடு கட்டி நீர்நெ டுங்கதவு சாத்துவீர்
வாழ வேணு மென்றலோ மகிழ்ந்தி ருந்த மாந்தரே !
கால னோலை வந்த போது கைகலந்து நின்றிடும்
ஆல முண்ட கண்டர்பாதம் அம்மை பாத முண்மையே. 24

## கிரியை நிலை

வீடெ டுத்து வேள்வி செய்து மெய்யினோடு பொய்யுமாய்
மாடு மக்கள் பெண்டிர் சுற்றம் என்றிருக்கு மாந்தர்காள் !
நாடு பெற்ற நடுவர் கையில் ஓலைவந் தழைத்திடில்
ஓடு பெற்ற வவ்விலை பெறாது காணும் உடலமே. 25

## யோக நிலை

ஓட முள்ள போதெ லாம்நீர் ஓடியே யுலாவலாம் ;
ஓட முள்ள போதெலா முறுதி பண்ணிக் கொள்ளலாம் ;
ஓட மும்மு டைந்த போதங் கொப்பிலாத வெளியிலே
ஆடு மில்லை கோலு மில்லை ஆருமில்லை ஆனதே. 26

## உற்பத்தி நிலை

அண்ண லேஅ னாதியே அனாதி முன்அ னாதியே ;
பெண்ணு மா ணு மொன்றலோ பிறப்ப தற்கு முன்னெலாம் ?
கண்ணில் ஆணின் சுக்கிலங் கருவில் ஒங்கு நாளிலே
மண்ணு ளோரும் விண்ணு ளோரும் வந்தவாற தெங்ஙனே ?

## ஞான நிலை

பண்டுநான் பறித்தெறிந்த பன்மலர்கள் எத்தனை ?
பாழிலே செபித்துவிட்ட மந்திரங்கள் எத்தனை ?
மிண்டனாய்த் திரிந்தபோதி றைத்தநீர்க ளெத்தனை ?
மீளவுஞ் சிவாலயங்கள் சூழவந்த தெத்தனை ?
அண்டர்கோ னிருப்பிடம் அறிந்துணர்ந்த ஞானிகள்
பண்டறிந்த பான்மைதன்னை யாரறிய வல்லரே ?
விண்டவேதப் பொருளையன்றி வேறுகூற வகையிலாக்
கண்டகோவில் தெய்வமென்று கையெடுப்ப தில்லையே.

## யோக நிலை

நெருப்பை மூட்டி நெய்யைவிட்டு நித்த நித்தம் நீரிலே
விருப்ப மோடு நீர்கு ளிக்கும் வேதவாக்யங் கேளுமின் :
நெருப்பு நீரு மும்முளே நினைந்து கூற வல்லிரேல்
சுருக்க மற்ற சோதியைத் தொடர்ந்து கூட லாகுமே. 29

பாட்டி லாத பரமனைப் பரம லோக நாதனை
நாட்டி லாத நாதனை நாரி மங்கை பாகனைக்
கூட்டி மெள்ள வாய்புதைத்துக் குணுகு ணுத்த மந்திரம்
வேட்ட காரர் குசுகு சுப்பைக் கூப்பிடா முகிஞ்சதே. 30

## தரிசனம்

செய்ய தெங்கி லேயிளநீர் சேர்ந்த கார ணங்கள்போல்
ஐயன் வந்திங் கென்னுளம் புகுந்து கோயில் கொண்டனன் ;
ஐயன் வந்திங் கென்னுளம் புகுந்து கோயில் கொண்டபின்
வைய கத்தில் மாந்தர் முன்னம் வாய்திறப்ப தில்லையே. 31

## சரியை நிலை

மாறு பட்ட மணிதுலக்கி வண்டி னெச்சில் கொண்டுபோய்
ஊறு பட்ட கல்லின்மீதே யூற்று கின்ற மூடரே !
மாறு பட்ட தேவரு மறிந்து நோக்கு மென்னையும்
கூறு பட்டுத் தீர்க்கவோ குருக்கள் பாதம் வைத்ததே ? 32

## யோக நிலை

கோயி லாவ தேதடா ! குளங்க ளாவ தேதடா !
கோயி லுங்கு ளங்களும் கும்பி டுங்கு லாமரே !
கோயி லும்ம னத்துளே ; குளங்க ளும்ம னத்துளே ;
ஆவ தும்ம ழிவதுவு மில்லை யில்லை யில்லையே. 33

செங்க லுங்க ருங்கலுஞ் சிவந்த சாதி லிங்கமும்
செம்பி லும்த ராவிலுஞ் சிவனி ருப்ப னென்கிறீர்
உம்ப தம்ம றிந்துநீ ரும்மை நீர றிந்தபின்
அம்ப லம்நி றைந்த நாத ராடல்பாட லாகுமே. 34

## கிரியை நிலை

பூசை பூசை என்றுநீர் பூசை செய்யும் பேதைகாள் !
பூசை யுள்ள தன்னிலே பூசை கொண்ட தெவ்விடம் ?
ஆதி பூசை கொண்டதோ, அனாதி பூசை கொண்டதோ,
ஏது பூசை கொண்டதோ இன்ன தென்றி யம்புமே. 35

## ஞான நிலை

இருக்கு நாலு வேத மும்எ ழுத்தையுற வோதினும்
பெருக்க நீறு பூசினும் பிதற்றி னும்பி ரானிரான் ;
உருக்கி நெஞ்சை யுட்கலந்திங் குண்மை கூற வல்லிரேல்,
சுருக்க மற்ற சோதியைத் தொடர்ந்து கூட லாகுமே. 36

## யோக நிலை

கலத்தின் வார்த்து வைத்தநீர் கடுத்த தீமு டுக்கினல்
கலத்தி லேக ரந்ததோ, கடுத்த தீக்கு டித்ததோ,
நிலத்தி லேக ரந்ததோ, நீள்வி சும்பு கொண்டதோ ?
மனத்தின் மாயை நீக்கியே மனத்து ளேக ரந்ததோ ? 37

## சரியை நிலை

பறைச்சி யாவ தேதடா பணத்தி யாவ தேதடா !
இறைச்சி தோலெ லும்பினும் இலக்க மிட்டி ருக்குதோ ?
பறைச்சி போகம் வேறதோ, பணத்தி போகம் வேறதோ ?
பறைச்சி யும்ப ணத்தியும் பகுந்து பாரு மும்முளே. 38

வாயிலே குதித்த நீரை யெச்சி லென் று சொல்கிறீர்;
வாயிலே குதப்பு வேதம் வரமெ னக்க டவதோ ?
வாயி லெச்சில் போக வென் று நீர்தனைக் குடிப்பிர்காள் !
வாயி லெச்சில் போன வண்ணம் வந்திருந்து சொல்லுமே.

ஓதுகின் ற வேத மெச்சில் ; உள்ள மந்த்ரங்க ளெச்சில் ;
போத கங்க ளான வெச்சில் ; பூதலமே ழுமெச்சில் ;
மா திருந்த விந்து வெச்சில் ; மதியுமெச்சி லொளியெச்சில் ;
ஏதிலெச்சி வில்ல தில்லை யில்லை யில்லை யில்லையே. 40

## உற்பத்தி

பிறப்ப தற்கு முன்னெலாம் பிறங்கு மாற தெங்ஙனே ?
பிறந்து மண்ணி றந்துபோ யிருக்கு மாற தெங்ஙனே ?
குறித்து நீர்சொ லாவிடிற் குறிப்பி லாத மாந்தரே !
அறுப்பனே செவியி ரண்டு மஞ்செ ழுத்து வாளினால். 41

## ஞானம்

அம்ப லத்தை அம்புகொண் டசங்கென் றால சங்குமோ ?
கம்ப மற்ற பாற்கடல் கலங்கென் றால்க லங்குமோ ?
இன்ப மற்ற யோகியை இருளும் வந்த ணுகுமோ ?
செம்பொ னம்ப லத்துளே தெளிந்த தேசி வாயமே. 42

## கடவுள் நிலை

சித்த மேது சிந்தையேது சீவ னேது சித்தரே !
சத்தி யேது சம்புவேது சாதி பேத மற்றெது ?
முத்தி யேது மூலமேது மூல மந்தி ரம்மெது ?
வித்தி லாத வித்திலேயி தின்ன தென் றி யம்புமே. 43

## ஒடுக்க நிலை

சித்த மற்றுச் சிந்தை யற்றுச் சீவனற்று நின்றிடம்
சத்தி யற்றுச் சம்புவற்றுச் சாதி பேத மற்றுநன்
முத்தி யற்று மூலமற்று மூல மந்தி ரங்களும்
வித்தை யித்தை யீன்ற வித்தில் விளைந்ததே சிவாயமே. 44

## கிரியை

சாதி யாவ தேதடா சலந்திரண்ட நீரெலாம்
பூத வாச லொன்றலோ பூத மைந்து மொன்றலோ ?
காதில் வாளி காரை கம்பி பாடகம்பொ னென்றலோ ?
சாதி பேத மோதுகின்ற தன்மை யென்ன தன்மையே ? 45

கறந்த பால்மு லைப்புகா ; கடைந்த வெண்ணெய் மோர்புகா ;
உடைந்து போன சங்கி னோசை யுயிர்களும் உடற்புகா ;
விரிந்தபூ வுதிர்ந்த காயும் மீண்டு போய்ம ரம்புகா ;
இறந்தவர் பிறப்ப தில்லை யில்லை யில்லை யில்லையே. 46

அறையி னிற்கி டந்தபோ தன்று தூமை யென்றிலீர் ;
துறைய றிந்து நீர்குளித்த தன்று தூமை யென்றிலீர் ;
பறைய றைந்து நீர்பிறந்த தன்று தூமை யென்றிலீர் ;
புரையி லாத ஈசரோடு பொருந்து மாற தெங்ஙனே ? 47

தூமை தூமை யென்றுளே துவண்ட லையும் ஏழைகாள் !
தூமை யான பெண்ணிருக்கத் தூமை போன தெவ்விடம் ?
ஆமை போல முழுகிவந் தனேக வேத மோதுறீர் ;
தூமையுந் திரண்டு ருண்டு சொற்கு ருக்க ளானதே. 48

சொற்கு ருக்க ளானதுஞ் சோதி மேனி யானதும்
மெய்க்கு ருக்க ளானதும் வேண பூசை செய்வதும்
சற்கு ருக்க ளானதுஞ் சாத்தி ரங்கள் சொல்வதும்
செய்க்கு ருக்க ளானதுந் திரண்டு ருண்ட தூமையே. 49

கைவ டங்கள் கொண்டுநீர் கண்சி மிட்டி நிற்கிறீர் ?
எவ்வி டங்கள் கண்டுநீர் எண்ணி யெண்ணிப் பார்க்கிறீர் ?
பொய்யு ணர்ந்த சிந்தையைப் பொருந்தி நோக்க வல்லிரேல்
மெய்க டந்த தும்முளே விரைந்து கூற லாகுமே. 50

ஆடு காட்டி வேங்கையை அகப்ப டுத்து மாறுபோல்
மாடு காட்டி யென்னைநீ மதிம யக்க லாகுமோ ?
கோடு காட்டி யானையைக் கொன்று ரித்த கொற்றவா !
வீடு காட்டி யென்னைநீ வெளிப்ப டுத்த வேணுமே. 51

இடத்த துன்கண் சந்திரன் ; வலத்த துன்கண் சூரியன் ;
இடக்கை சங்கு சக்கரம் ; வலக்கை சூல மான்மழு ;
எடுத்த பாதம் நீள்முடி எண்டி சைக்கு மப்புறம் ;
உடற்க லந்து நின்றமாயம் யாவர் காண வல்லரே ? 52

நாழி யப்பும் நாழி யுப்பும் நாழியான வாறுபோல்
ஆழி யோனு மீசனு மமர்ந்து வாழ்ந்தி ருந்திடம்
ஏறி லேறு மீசனு மியங்கு சக்ர தரனையும்
வேறு கூறு பேசுவார் வீழ்வர் வீண ரகிலே. 53

தில்லை நாய கன்னவன் ; திருவ ரங்க னும்மவன் ;
எல்லை யான புவனமும் ஏக முத்தி யானவன் ;
பல்லு நாவு முள்ளபேர் பகுந்து கூறி மகிழுவார் ;
வல்ல பங்கள் பேசுவார் வாய்பு ழுத்து மாயவரே. 54

எத்தி சைக்கு மெவ்வுயிர்க்கு மெங்க ளப்ப னெம்பிரான்
முத்தி யான வித்துளே முளைத்தெ ழுந்த வச்சுடர் ;
சித்தமுந் தெளிந்து வேத கோயி லுந்தி றந்தபின்
அத்த னாடல் கண்டபின் அடங்க லாடல் காணுமே. 55

உற்ற நூல்க ளும்முளே உணர்ந்து ணர்ந்து பாடுவீர் ;
பற்ற றுத்து நின்றுநீர் பராப ரங்க ளெய்திலீர் ;
செற்ற மாவை யுள்ளறைச் செருக்க றுத்தி ருத்திடில்
சுற்ற மாக வும்முளே சோதி யென்றும் வாழுமே. 56

போத டாவெ ழுந்ததும் புனல தாடி வந்ததும்
தாத டாபு குந்ததும் தான டாவி ளைந்ததும்
ஓத டாவ தஞ்சுமூன்று மொன்ற தான அக்கரம்
ஓதடா விராம ராம ராம வென்னும் நாமமே. 57

அகார மென்ற அக்கரத்துள் அவ்வு வந்து தித்ததோ ?
உகார மென்ற அக்கரத்தில் உவ்வு வந்து தித்ததோ ?
அகார மும்உ காரமுஞ் சிகார மின்றி நின்றவோ ?
விகார மற்ற யோகிகாள் ! விரித்து ரைக்க வேணுமே. 58

அறத்தி றங்க ளுக்கும்நீ ; அண்ட மெண்டி சைக்கும்நீ ;
திறத்தி றங்க ளுக்கும்நீ ; தேடு வார்கள் சிந்தைநீ ;
உறக்கம் நீ;உ ணர்வுநீ ; உட்க லந்த சோதிநீ;
மறக்கொ ணாத நின்கழல் மறப்பி னுங்கு டிகொளே. 59

அண்டம் நீ;அ கண்டம்நீ; ஆதி மூல மானநீ ;
கண்டம் நீ;க ருத்தும்நீ; காவி யங்க ளானநீ;
புண்ட ரீக மன்றுளே புணரு கின்ற புண்ணியர்
கொண்ட கோல மானநேர்மை கூர்மை யென்ன கூர்மையே!

மைய டர்ந்த கண்ணினர் மயக்கி டும்ம யக்கிலே
ஐயி றந்து கொண்டு நீங்க ளல்லலற் றிருப்பிர்காள் !
மெய்ய டர்ந்த சிந்தையால் விளங்கு ஞான மெய்தினல்
உய்ய டர்ந்து கொண்டு நீங்க ளூழிகாலம் வாழ்விரே. 61

கருவி ருந்த வாசலாற் கலங்கு கின்ற வூமைகாள் !
குருவி ருந்து சொன்ன வார்த்தை குறித்துநோக்க வல்லிரேல்
உருவி லங்கு மேனியாகி யும்ப ராகி நின்றுநீர்
திருவி லங்கு மேனியாகிச் சென்று கூட லாகுமே. 62

தீர்த்த மாட வேணுமென்று தேடு கின்ற தீனர்காள் !
தீர்த்த மாட லெவ்விடந் தெளிந்து நீரி யம்புவீர்.
தீர்த்த மாக வும்முளே தெளிந்து நீரி ருந்தபின்
தீர்த்த மாக வுள்ள துஞ்சி வாய வஞ்செ ழுத்துமே. 63

கழுத்தையும் நிமிர்த்தி நல்ல கண்ணை யும்வி ழித்துநீர்
பழுத்து வாய்வி ழுந்து போன பாவமென்ன பாவமே ?
அழுத்த மான வித்திலே அனாதி யாயி ருப்பதோர்
எழுத்தி லாவெ ழுத்திலே யிருக்க லாமி ருத்துமே. 64

கண்டு நின்ற மாயையுங் கலந்து நின்ற பூதமும்
உண்டு றங்கு மாறுநீ ருணர்ந்தி ருக்க வல்லிரேல்
பண்டை யாறு மொன்றுமாய்ப் பயந்த வேத சுத்தனைய்
அண்ட முத்தி யாகிநின்ற ஆதி மூல மூலமே 65

ஈன்ற வாச லுக்கிரங்கி எண்ணி றந்து போவிர்காள் !
கான்ற வாழை மொட்ட லர்ந்த காரணம் அறிகிலீர் :
நான்ற வாச லைத்திறந்து நாடி நோக்க வல்லிரேல்,
தோன்று மாயை விட்டொழிந்து சோதி வந்து தோன்றுமே.

உழலும் வாச லுக்கிரங்கி யூச லாடும் ஊமைகாள் !
உழலும் வாச லைத்திறந்து வுண்மை சேர வெண்ணிலீர்.
உழலும் வாச லைத்திறந்து வுண்மை நீரு ணர்ந்தபின்
உழலும் வாச லுள்ளிருந்த வுண்மை தானு மாவிரே 67

மூல நாடி தன்னிலே முளைத்தெ ழுந்த சோதியை
நாலு நாழி யும்முளே நாடி யேயி ருந்தபின்
பால னாகி வாழலாம் பரப்பி ரம்ம மாகலாம் ;
ஆல முண்ட கண்டராணை அம்மை யாணை யுண்மையே. 68

இருக்க வேண்டு மென்றபோ திருக்க லாயி ருக்குமோ ?
மரிக்க வேண்டு மென்றலோ மண்ணு ளேப டைத்தனர் ?
சுருக்க மற்ற தம்பிரான் சொன்ன அஞ்செ ழுத்தையும்
மரிக்க முன்வ ணங்கிடீர் மருந்தெ னப்ப தங்கெடீர். 69

அம்பத் தொன்றே னக்கர மடங்க லோரெ ழுத்துளோ ?
விண்ப ரந்த மந்திரம் வேத நான்கு மொன்றலோ ?
விண்ப ரந்த மூல வஞ்செ ழுத்துளே முளைத்ததே
அங்க லிங்க பீடமாய் அமர்ந்த தேசி வாயமே. 70

சிவாய மென்ற அட்சரஞ் சிவனி ருக்கு மட்சரம் ;
உபாய மென்று நம்புதற் குண்மை யான அட்சரம்
கபாட மற்ற வாயிலைக் கடந்து போன வாயுவை
உபாய மிட்ட ழைக்குமே சிவாய அஞ்செ ழுத்துமே. 71

உருவு மல்ல; வெளியு மல்ல; ஒன்றைமேவி நின்றதல்ல ;
மருவு வாசல் சொந்த மல்ல; மற்றதல்ல ; அற்றதல்ல ;
பெரிய தல்ல ; சிறிய தல்ல ; பேசலான தானுமல்ல ;
அரிய தாகி நின்ற நேர்மை யாவர்காண வல்லரே ? 72

ஆத்து மாஅ ளுதியோ? அளுத்து மாவ ளுதியோ ?
பூத்தி ருந்த ஐம்பொறி புலன்க ளும்ம ளுதியோ ?
தாக்க மிக்க நூல்களுஞ் சதாசி வம்ம ளுதியோ ?
வீக்க வந்த யோகிகாள்! விரித்து ரைக்க வேணுமே. 73

அறிவி லேபி றந்திருந் தாக மங்க ளோதுறீர் ;
நெறியிலே மயங்கு கின்ற நேர்மை யொன்ற றிகிலீர் ;
உறியிலே தயிரி ருக்க வூர்பு குந்து வெண்ணெய்தே
டறிவி லாத மாந்தரோ டணுகு மாற தெங்ஙனே ? 74

இருவ ரங்க மும்பொ ருந்தி யென்புருகி நோக்கிலீர் ;
உருவ ரங்க மாகிநின்ற வுண்மை யொன்றை யோர்கிலீர் ;
கருவ ரங்க மாகி நின்ற கற்பனை கடந்துபின்
திருவ ரங்க மென்றுநீர் தெளிந்தி ருக்க வல்லிரே. 75

கருக்குழியி லாசை யாகிக் காத லுற்று நிற்கிறீர்
குருக்கி டுக்கு மேழைகாள் ! குலாவு கின்ற பாவிகாள் !
திருத்தி ருத்தி மெய்யினுற் சிவந்த அஞ்செ ழுத்தையும்
உருக்க ழிக்கு முன்னமே யுரையு ணர்ந்து கொள்ளுமே. 76

மண்ணி லேபி றக்கவும் வழக்க லாது ரைக்கவும்
எண்ணி லாத கோடி தேவ ரென்னதுன்ன தென்னவும்
கண்ணி லேகண் மணியிருக்கக் கண்ம றைந்த வாறுபோல்
எண்ணில் கோடி தேவரும் இதன்க ணுல்வி ழிப்பதே. 77

மண்கலங் கவிழ்ந்த போது வைத்து வைத்த டுக்குவார் ;
வெண்கலங் கவிழ்நத போது வேணு மென்று பேணுவார் ;
நண்கலங் கவர்ந்த போது நாறு மென்று போடுவார்.
எண்கலந்து நின்ற மாய மென்ன மாய மீசனே ! 78

மிக்கசெல்வ நீர்படைத்த விறகுமேவிப் பாவிகாள் !
விறகுடன் கொளுத்திமேனி வெந்துபோவ தறிகிலீர்.
மக்கள்பெண்டிர் சுற்றமென்னும் மாயைகாணு மிவையெலாம்
மறலிவந் தழைத்தபோது வந்துகூட லாகுமோ ?

ஒக்கவந்து மாதுடன் செறிந்திடத்தி லழகியே
ஒருவராகி யிருவராகி யிளமைபெற்ற வூரிலே
அக்கணிந்து கொன்றைசூடி யம்பலத்தி லாடுவார்
அஞ்செழுத்தை யோதிடின் அனேகபாவ மகலுமே! 79

மாடு கன்று செல்வமும் மனைவி மைந்தர் மகிழவே
மாடமாளி கைப்பு றத்தில் வாழு கின்ற நாளிலே
ஓடிவந்து காலதூதர் சடுதியாக மோதவே
உடல்கிடந் துயிர்கழன்ற உண்மைகண்டு முணர்கிலீர்.
பாடுகின்ற வும்பருக்கு ளாடுபாத முன்னியே
பழுதிலாத கன்மகூட்ட மிட்டஎங்கள் பரமனே!
நீடுசெம்பொ னம்பலத்து ளாடுகொண்ட அப்பனே!
நீலகண்ட காளகண்ட நித்தியகல் யாணனே! 80

கானமற்ற காட்ட கத்தில் வெந்தெ ழுந்த நீறுபோல்
ஞானமற்ற நெஞ்ச கத்தில் நல்ல தேது மில்லையே;
ஊன மற்ற சோதியோ டுணர்வு சேர்ந்த டக்கினல்
தேன கத்தி னூறல்போல் தெளிந்த தேசி வாயமே. 81

பருகி யோடி யும்முளே பறந்து வந்த வெளிதனை
நிருவியே நினைந்து பார்க்கில் நின்ம லம்ம தாகுமே;
உருகி யோடி யெங்குமாய் உதய சோதி தன்னுளே
கருதடா வுனக்கு நல்ல கார ணம்ம தாகுமே. 82

சோதி யாதி யாகிநின்ற சுத்தமும் பலித்து வந்து
போதியாத போத கத்தை யோது கின்ற பூரணா!
வீதி யாக வோடி வந்து விண்ணடியி னூடுபோய்
ஆதி நாத னாதனென் றனந்த கால முள்ளதே. 83

இறைவனா லெடுத்த மாடத் தில்லை யம்ப லத்திலே
அறிவினா லடுத்த காய மஞ்சி னால மைந்ததே.
கருவினாத முண்டு போய்க்க ழன்ற வாச லொன்பதும்
ஒருவரா யொருவர் கோடி யுள்ளு ளேய மர்ந்ததே 84

நெஞ்சி லேயி ருந்திருந்து நெக்கி யோடும் வாயுவை
அன்பி னாலி ருந்துநீ ரருகி ருத்த வல்லிரேல்
அன்பர் கோயில் காணலா மகனு மெண்டி சைக்குளே
தும்பி யோடி யோடியே சொல்ல டாசு வாமியே! 85

தில்லையை வணங்கி நின்ற தெண்டனிட்ட வாயுவே
எல்லையைக் கடந்து நின்ற ஏக போக மாய்கையே
எல்லையைக் கடந்து நின்ற சொர்க்க லோக வெளியிலே
வெள்ளையுஞ் சிவப்பு மாகி மெய்க லந்து நின்றதே. 86

உடம் புயிரெ டுத்ததோ? உயிரு டம்பெ டுத்ததோ?
உடம் புயிரெ டுத்தபோ துருவ மேது செப்புவீர்.
உடம் புயிரி றந்தபோ துயிரி றப்ப தில்லையே!
உடம்பு மெய்ம்ம றந்துகண் டுணர்ந்து ஞான மோதுமே. 87

அவ்வெ னும்மெ ழுத்தினா லகண்ட மேழு மாக்கினாய்;
உவ்வெ னும்மெ ழுத்தினா லுருத்த ரித்து நின்றனை;
மவ்வெ னும்மெ ழுத்தினால் மயங்கி னார்கள் வையகம்;
அவ்வு முவ்வு மவ்வுமா யமர்ந்த தேசி வாயமே. 88

மந்தி ரங்க ளுண்டுநீர் மயங்கு கின்ற மானிடர்!
மந்தி ரங்க ளாவதும் மரத்தி லூற லன்றுகாண்;
மந்தி ரங்க ளாவது மதர்த்தெ ழுந்த வாயுவே;
மந்தி ரத்தை யுண்டவர்க்கு மரண மேது மில்லையே. 89

என்ன வென்று சொல்லுவேன் இலக்க ணம்இ லாததை?
பன்னு கின்ற செந்தமிழ்ப் பதங்க டந்த பண்பென
மின்ன கத்தில் மின்னொடுங்கி மின்ன தான வாறுபோல்
என்ன கத்து ளீசனும்மி யானு மல்ல தில்லையே. 90

ஆல வித்தி லாலொடுங்கி யால மான வாறுபோல்
வேறு வித்து மின்றியே விளைந்து போக மெய்திடூர்
ஆறு வித்தை யோர்கிலீ ரறிவி லாத மாந்தரே;
பாரு மித்தை யும்மு ளேப ரப்பிரம மானதே. 91

அவ்வு தித்த மந்திரம் மகார மாய்உ காரமாய்
எவ்வெ ழுத்த றிந்தவர்க் கெழுபி றப்ப திங்கிலே ?
சவ்வு தித்த மந்திரத்தைத் தற்ப ரத்தி ருத்தினல்
அவ்வு முவ்வு மவ்வுமா யமர்ந்த தேசி வாயமே. 92

நவ்வி ரண்டு காலதாய் நவின்ற மவ்வ யிறதாய்ச்
சிவ்வி ரண்டு தோளதாய்ச் சிறந்த வவ்வு வாயதாய்
யவ்வி ரண்டு கண்ணதா யெழுந்து நின்ற நேர்மையிற்
செவ்வை யொத்து நின்றதே சிவாய மஞ்செ ழுத்துமே. 93

இரண்டு மொன்று மூலமாய் இயங்கு சக்க ரத்துளே
சுருண்டு மூன்று வளையமாய்ச் சுணங்கு போற்கி டந்ததீ
முரண்டெ ழுந்த சங்கினேசை மூல நாடி யூடுபோய்
அரங்கன் பட்ட ணத்திலே அமர்ந்த தேசி வாயமே. 94

கடலிலே திரியு மாமை கரையி லேறி முட்டையிட்டுக்
கடலிலே திரிந்த போது ரூப மான வாறுபோல்
மடலுளே யிருக்கு மெங்கள் மணிய ரங்க சோதியை
உடலுளே நினைந்து நல்ல வுண்மை யான துண்மையே. 95

மூன்று மண்ட லத்திலும் முட்டி நின்ற தூணிலும்
நான்ற பாம்பின் வாயிலும் நவின்றெ ழுந்த அட்சரம்
ஈன்ற தாயு மப்பனும் எடுத்து ரைத்த மந்திரம்
தோன்று மோரெ ழுத்துளே சொல்ல வெங்கு மில்லையே. 96

மூன்று மூன்று மூன்றுமே மூவர் தேவர் தேடிடும்
மூன்று மஞ்செ ழுத்துமாய் முழங்கு மவ்வெ ழுத்துளே
ஈன்ற தாயு மப்பனும் இயங்கு கின்ற நாதமும்
தோன்று மண்ட லத்திலே சொல்ல வெங்கு மில்லையே. 97

சோறு கின்ற பூதம்போற் சுணங்கு போற்கி டந்தநீர்
நாறு கின்ற கும்பியி னயங்கெ ழுந்த மூடரே !
சீறு கின்ற ஐவரைச் சினுக்க றுக்க வல்லிரேல்
ஆறு கோடி வேணியா ராறி லொன்றி லாவிரே. 98

வட்ட மென்று நம்முளே மயக்கி விட்ட திவ்வெளி
அட்ட வக்க ரத்துளே அடக்க மும்மொ டுக்கமும் ;
எட்டு மெட்டு மெட்டுமா யியங்கு சக்க ரத்துளே
எட்ட லாமு தித்த தெம்பி ரானைநா மறிந்தபின். 99

பேசு வானு மீசனே ; பிரம ஞான மும்முளே ;
ஆசை யான ஐவரு மலைந்த லைகள் செய்கிறார் :
ஆசை யான ஐவரை அடக்கி யோரெ ழுத்திலே
பேசி டாதி ருப்பிரேல் நாதன் வந்து பேசுமே. 100

நமசி வாய அஞ்செ ழுத்தும் நல்குமேல் நிலைகளும்
நமசி வாய வஞ்சி லஞ்சும் புராணமான மாயையும்
நமசி வாய வஞ்செ ழுத்தும் நம்முளே யிருக்கவே
நமசி வாய வுண்மையை நன்கு ரைசெய் நாதனே ! 101

பரமு னக்கெ னக்கு வேறு பயமிலை பராபரா !
கரமெ டுத்து நிற்றலுங் குவித்தி டக்க டவதும்
சிரமுருகி யமுத ளித்த சீரு லாவு நாதனே !
உரமெ னக்கு நீயளித்த ஓம்ந மச்சி வாயவே. 102

பச்சை மண்ப துப்பிலே பழுப்ப திந்த வேட்டுவன்
நிச்ச லும்நி னைந்திட நினைந்த வண்ண மாயிடும் ;
பச்சை மண்ணி டிந்துபோய்ப் பறந்த தும்பி யாயிடும்
பிச்சர்கா ளறிந்து கொள்க பிராணி யற்று கோலமே. 103

ஒளிய தான காசிமீது வந்து தங்கு வோர்க்கெலாம்
வெளிய தான சோதிமேனி விசுவ நாத னானவன்
தெளியு மங்கை யுடனிருந்து செப்பு கின்ற தாரகம்
வெளிய தோரி ராமராம ராம விந்த நாமமே. 104

விழியினோடு புனல்வி ளைந்த வில்ல வல்லி யோனியும்
வெளியி லேபி றந்தலாம் விளைவு நின்ற தில்லையே
வெளிப ரந்த தேசமும் வெளிக்குள் மூல வித்தையும்
தெளியும் வல்ல ஞானிகள் தெளிந்தி ருத்தல் திண்ணமே.

ஓம்ந மச்சி வாயமே யுணர்ந்து மெய்யு ணர்ந்தபின்
ஓம்ந மச்சி வாயமே யுணர்ந்து மெய்தெ ளிந்தபின்
ஓம்ந மச்சி வாயமே யுணர்ந்து மெய்யு ணர்ந்தபின்
ஓம்ந மச்சி வாயமே யுட்க லந்து நிற்குமே. 106

அல்லல் வாச லொன்பதும் அறுத்த டைந்த வாசலும்
சொல்லு வாச லோரைந்தும் சொம்மி விம்மி நின்றதும்
நல்ல வாச லைத்திறந்து ஞான வாச லூடுபோய்
எல்லை வாசல் கண்டவ ரினிப்பி றப்ப தில்லையே. 107

ஆதி யான தொன்றுமே யனேக னேக ரூபமாய்ச்
சாதி பேத மாயெழுந்து சர்வ சீவ னானபின்
ஆதி யோடி ருந்துமீண் டெழுந்து சென்ம மானபின்
சோதி யான ஞானி யாகிச் சுத்தமா யிருப்பனே. 108

மலர்ந்த தாது மூலமாவ் வைய கம்ம லர்ந்ததும்
மலர்ந்த பூம யக்கவந் தடுத்த தும்வி டுத்ததும்
புலன்க ளைந்தும் பொறிக லங்கிப் பூமிமேல் விழுந்ததும்
இலங்கலங்கி நின்ற மாய மென்ன மாய மீசனே! 109

பார டங்க வுள்ள தும் பரந்த வான முள்ள தும்
ஓரி டம்மு மின்றியே யொன்றி நின்ற வொண்சுடர்
ஆரி டம்மு மின்றியே யகத்து ளும்பு றத்துளும்
சீரி டங்கள் கண்டவன் சிவன்தெ ரிந்த ஞானியே. 110

மண்கிடார மேசு மந்து மலையு ளேறி மறுகுநீர்;
எண்படாத காரி யங்க ளியலு மென்று கூறுநீர்;
தம்பிரானை நாள்க டோறுந் தரையி லேத லைபடக்
கும்பிடாத மாந்த ரோடு கூடி வாழ்வ தெங்ஙனே? 111

நாவில் நூல ழிந்ததும் நலங்கு லம்ம ழிந்ததும்
மேவு தேர ழிந்ததும் விசார முங்கு றைந்ததும்
பாவிகாளி தென்ன மாயம் வாம நாடு பூசலாய்
ஆவி யார டங்குநாளில் ஐவ ரும்ம டங்குவார். 112

இல்லை யில்லை இல்லையென் றியம்பு கின்ற ஏழைகாள் !
இல்லை என்று நின்றதொன்றை இல்லை என்ன லாகுமோ ?
இல்லை யல்ல ஒன்றுமல் இரண்டு மொன்றி நின்றதை
எல்லை கண்டு கொண்டபே ரினிப்பி றப்ப தில்லையே. 113

கார கார கார கார காவலூழி காவலன்
போர போர போர போர போரில்நின்ற புண்ணியன்
மார மார மார மார மரங்களேழு மெய்தசீ
ராம ராம ராம ராம ராமவென்னும் நாமமே. 114

நீடு பாரி லேபி றந்து நேயமான காயந்தான்
வீடு வேறி தென்றபோது வேண்டி யின்பம் வேண்டுமோ ?
பாடு நாலு வேதமும் பாரி லேப டார்ந்தவோ ?
நாடு ராம ராம ராம ராமவென்னும் நாமமே. 115

உயிரு நன்மை யாலுடல் எடுத்து வந்தி ருந்திடும்
உயிரு டம்பொ ழிந்த போது ரூபரூப மாயிடும்
உயிர்சி வத்தின் மாய்கையாய் ஒன்றை ஒன்று கொன்றிடும் ;
உயிருஞ் சத்தி மாய்கையாகி ஒன்றை ஒன்று தின்னுமே.

நெட்டெ ழுத்து வட்டமே நிறைந்த பல்லி யோனியும்
நெட்டெ ழுத்தில் வட்டமொன்று நின்ற தொன்று கண்டிலேன்
குட்டெ ழுத்தி லுற்றதென்று கொம்புகால் குறித்திடில்
நெட்டெ ழுத்தில் வட்டமொன்றில் நேர்படானம் மீசனே.

விண்ணி லுள்ள தேவர்க ளறியொ ணாத மெய்ப்பொருள்
கண்ணி லாணி யாகவே கலந்து நின்ற தெம்பிரான்
மண்ணி லாம்பி றப்ப றுத்து மலரடிகள் வைத்தபின்
அண்ண லாரு மெம்முளே அமர்ந்து வாழ்வ துண்மையே.

விண்க டந்து நின்ற சோதி மேலைவாச லைத்திறந்து
கண்க ளிக்க வுள்ளுளே கலந்து புக்கி ருந்தபின்
மண்பி றந்த மாயமும் மயக்க மும்ம றந்துபோய்
எண்க லந்த வீசனோ டிசைந்தி ருப்ப துண்மையே. 119

மூல மான மூச்சதில் மூச்ச ரிந்து விட்டபின்
நாலு நாளு முன்னிலோரு நாட்ட மாகி நாட்டிடில்
பால ஞகி நீடலாம் பரப்பி ரம்ம மாகலாம்;
ஆல முண்ட கண்ட ராணை யம்மையாணை யுண்மையே. 120

மின்னெ ழுந்து மின்பரந்து மின்னெ டுங்கு மாறுபோல்
என்னுள் நின்ற என்னு ளீசன் என்னுளே யடங்குமே;
கண்ணுள் நின்ற கண்ணின் நேர்மை கண்ணறிவி லாமையால்,
என்னுள் நின்ற என்னை யன்றி யானறிந்த தில்லையே. 121

இருக்க லாமி ருக்க லாம வனியி லிருக்கலாம்;
அரிக்கு மால்பி ரமனு மகண்ட மேழ கற்றலாம்;
கருக்கொ ளாத குழியிலே காலி லாத கண்ணிலே
நெருப்பறை திறந்த பின்பு நீயும் நானு மீசனே! 122

ஏக போக மாகியே இருவ ரும்மொ ருவராய்ப்
போக மும்பு ணர்ச்சியும் பொருந்து மாற தெங்ஙனே?
ஆக லும்ம ழிதலு மதன்க ணேய தானபின்
சாக லும்பி றத்தலும் இல்லை யில்லை யில்லையே. 123

வேத நாலு பூதமாய் விரவு மங்கி நீரதாய்ப்
பாத மேயி லிங்கமாய்ப் பரிந்து பூசை பண்ணிஞல்
காதில் நின்று கடைதி றந்து கட்டறுத்த ஞானிகள்
ஆதி யந்த முங்க டந்த தரியவீட டைவரே. 124

பருத்திநூல் முறுக்கி விட்டுப் பஞ்சி யோது மாந்தரே!
துருத்திநூல் முறுக்கி விட்டுத் துன்ப நீங்க வல்லிரேல்
கருத்தி னூல்க லைப்படுங் கால னூல்க ழிந்திடும்
திருத்தி நூல்க வல்ருஞ் சிவாய அஞ்செ ழுத்துமே. 125

சாவ தான தத்துவச் சடங்கு செய்யு மூமைகாள்!
தேவர் கல்லு மாவரோ? சிரிப்ப தன்றி என்செய்வேன்!
மூவ ராலு மறியொ ணாத முக்கணன்மு தற்கொழுந்து
காவ லாக வும்முளே கலந்தி ருப்பன் காணுமே. 126

காலை மாலை நீரிலே முழுகும் மந்த மூடர்காள்!
காலை மாலை நீரிலே கிடந்த தேரை என்பெறும்?
கால மேயெ ழுந்திருந்து கண்கள் மூன்றில் ஒன்றினால்
மூல மேநி னைப்பிராகில் முத்தி சித்தி யாகுமே. 127

எங்கள் தேவ ரும்கள்தேவ ரென்றி ரண்டு தேவரோ?
அங்கு மிங்கு மாகிநின்ற ஆதி மூர்த்தி யொன்றலோ?
அங்கு மிங்கு மாகிநின்ற ஆதி மூர்த்தி யொன்றெனில்
வங்க வாரஞ் சொன்ன பேர்கள் வாய்புழுத்து மாய்வரே. 128

அறையறை யிடைக்கி டந்த அன்று தூமை யென்கிறீர்;
முறைய றிந்து பிறந்தபோது மன்று தூமை யென்கிறீர்;
துறைய றிந்து நீர்குளித்தா லன்று தூமை யென்கிறீர்;
பொறையி லாத நீசரோடும் பொருந்து மாற தெங்ஙனே?

சத்தம் வந்த வெளியிலே சலமி ருந்து வந்ததும்
சுத்த மாக நீரிலே துவண்டு மூழ்கும் மூடரே!
சுத்தமேது கட்ட தேது தூய்மை கண்டு நின்றதேது?
பித்தர்காய முற்ற தேது பேத மேது போதமே. 130

மாத மாதந் தூமைதான்; மறந்து போன தூமைதான்;
மாத மற்று நின்றலோ வளர்ந்து ரூப மானது?
நாத மேது, வேத மேது, நற்குலங்க ளேதடா!
வேத மோதும் வேதியர் விளைந்த வாறும் பேசடா! 131

தூமை யற்று நின்றலோ சுதீப முற்று நின்றது?
ஆண்மை யற்று நின்றலோ வழக்க மற்று நின்றது?
தாண்மை யற்று ஆண்மை யற்றுச் சஞ்சலங்க ளற்றுநின்ற
தூமை தூமை யற்றகாலஞ் சொல்லு மற்று நின்றதே. 132

ஊறி நின்ற தூமையை யுறைந்து நின்ற சீவனை
வேறு பேசி மூடரே விளைந்த வாற தேதடா!
நாறு கின்ற தூமை யல்லோ நற்குலங்க ளாவன?
சீறு கின்ற மூடனேயத் தூமை நின்ற கோலமே 133

தூமை கண்டு நின்றபெண்ணின் தூமை தானு மூறியே
சீமை யெங்கு மாணும் பெண்ணும் சேர்ந்துலகங் கண்டதே;
தூமை தானும் ஆசையாய்த் துறந்தி ருந்த சிவனைத்
தீமை யற்றுக் கொண்டிருந்த தேச மேது தேசமே? 134

வேணும் வேணு மென்றுநீர் வீணு ழன்று தேடுவீர்;
வேணு மென்று தேடினு முள்ள தல்ல தில்லையே;
வேணு மென்று தேடு கின்ற வேட்கையைத் துறந்தபின்
வேணு மென்ற அப்பொருள் விரைந்து காண லாகுமே. 135

சிட்ட ரோது வேதமுஞ் சிறந்த ஆக மங்களும்
நட்ட காரணங்களும் நவின்ற மெய்ம்மை நூல்களும்
கட்டி வைத்த போதகங் கதைக்கு கந்த பித்தெலாம்
பெட்ட தாய்மு டிந்ததே பிரானை யான றிந்தபின் 136

நூறு கோடி ஆகமங்கள் நூறு கோடி மந்திரம்
நூறு கோடி நாளிருந்தும் ஓதி னால தென்பயன்?
ஆறு மாறு மாறுமாய் அகத்தி லோரெ ழுத்துமாய்
ஏறு சீரெ ழுத்தை யோத ஈசன்வந்து பேசுமே. 137

காலை மாலை தம்மிலே கலந்து நின்ற காலனார்
மாலை காலை யாய்ச்சி வந்த மாயமேது செப்பிடீர்!
காலை மாலை யற்றுநீர் கருத்தி லேயொ டுங்கினால்
காலை மாலை யாகிநின்ற கால னில்லை யில்லையே 138

எட்டு மண்ட லத்துளே யிரண்டு மண்ட லம்வளைத்
திட்டு மண்ட லத்துளே எண்ணி யாறு மண்டலம்
தொட்ட மண்ட லத்திலே தோன்றி மூன்று மண்டலம்
நட்ட மண்ட லத்துளே நாத னாடி நின்றதே. 139

நாலி ரண்டு மண்ட லத்துள் நாதனின்ற தெவ்விடம்?
காலி ரண்டு மூல நாடி கண்டதங் குருத்திரன்
சேலி ரண்டு கண்கலந்து திசைக ளெட்டு மூடியே
மேலி ரண்டு தான்கலந்து வீசி யாடி நின்றதே. 140

அம்மை யப்ப னுப்புநீர் அறிந்த தேய றிகிலீர் ;
அம்மை யப்ப னுப்புநீர் அரிய யன்ன ரனுமாய்
அம்மை யப்ப னுப்புநீ ராதி யாதி யானபின்
அம்மை யப்ப னின்னை யன்றி யாருமில்லை யானதே. 141

உருத்த ரிப்ப தற்குமுன் உடல்க லந்த தெங்ஙனே ?
கருத்த ரிப்ப தற்குமுன் கார ணங்க ளெங்ஙனே ?
பொருத்தி வைத்த போதமும் பொருந்து மாற தெங்ஙனே ?
குருத்தி ருத்தி வைத்தசொல் குறித்து ணர்ந்து கொள்ளுமே.

ஆதி யுண்டு அந்தமில்லை அன்று நாலு வேதமில் ;
சோதி யுண்டு சொல்லுமில்லை சொல்லி றந்த தேதுமில் ;
ஆதி யான மூவரி லமர்ந்தி ருந்த வாயுவும்
ஆதி யன்று தன்னை யும்மிங் காரறிவ ரண்ணலே ! 143

புலால் புலால் புலால தென்று பேத மைகள் பேசுறீர் ;
புலாலை விட்டு மெம்பிரான் பிரிந்தி ருந்த தெங்ஙனே ?
புலா லு மாய்ப்பி தற்றுமாய்ப் பேரு லாவுந் தானுமாய்ப்
புலாலிலே முளைத்தெ ழுந்த பித்தன் காணு மத்தனே ! 144

உதிர மாண பால்குடித் தொக்க நீர்வ ளர்ந்ததும்
இதர மாயி ருந்ததொன் றிரண்டு பட்ட தென்னலாம்
மதிர மாக விட்டதேது மாங்கி சம்பு லாலதென்
சதிரமாய் வளர்ந்த தேது சைவ ரான மூடரே ! 145

உண்ட கல்லை யெச்சிலென் றுள்ளெ றிந்து போடுறீர் ;
கண்ட எச்சில் கையலோ ? கரும னுக்கும் வேறதோ ?
கண்ட எச்சில் கேளடா ! கலந்த பாணி யப்பிலே
கொண்ட சுத்த மேதடா ? குறிப்பி லாத மூடனே ! 146

ஓதி வைத்த நூல்களும் உணர்ந்து கற்ற கல்வியும்
மாது மக்கள் சுற்றமு மறக்க வந்த நீர்த்திரை
ஏது புக்கொ ளித்ததோ எங்கு மாகி நின்றதோ ?
சோதி புக்கொ ளித்த மாயஞ் சொல்லடா சுவாமியே ! 147

ஈனும் எருமை யின்கழுத்தி லிட்ட பொட்ட ணங்கள்போல்
மூணு நாலு சீலையில் முடிந்த விழ்க்கு மூடர்காள் !
மூணு நாலு லோகமு முடிவி லாத மூர்த்தியை
ஊணி யூணி நீர்முடிந்த வுண்மை என்ன வுண்மையே ? 148

சாவல் நாலு குஞ்சதஞ்சு தாய தான வாறுபோல்
காவ லான கூட்டிலே கலந்து சண்டை கொள்ளுதே !
கூவ மான கிழநரியக் கூட்டி லேபு குந்தபின்
சாவல் நாலுங் குஞ்ச தஞ்சுந் தாமிறந்து போனவே. 149

மூல மாங்கு ளத்திலே முளைத்தெ ழுந்த கோரையைக்
காலமே யெழுந்தி ருந்து நாலு கட்ட றுப்பிரேல்
பால னாகி வாழலாம் பரப்பி ரம்ம மாகலாம் ;
ஆல முண்ட கண்டர் பாத மம்மை பாத முண்மையே. 150

செம்பினிற் களிம்பு வந்த சீத ரங்கள் போலவே
அம்பி னில்லெ ழுதொ ணாத அணியரங்க சோதியை
வெம்பி வெம்பி வெம்பியே மெலிந்து மேல்க லந்திடச்
செம்பினிற் களிம்பு விட்ட சேதி யேது காணுமே. 151

நாடி நாடி யும்முளே நயந்து காண வல்லிரேல்
ஓடி யோடி மீளுவா னும்மு ளேய டங்கிடும் ;
தேடி வந்த காலனும் திகைத்தி ருந்து போய்விடும் ;
கோடி கோடி காலமும் குறைவி லாதி ருப்பிரே. 152

பிணங்கு கின்ற தேதடா ! பிரஞ்ஞை கெட்ட மூடரே !
பிணங்கி லாத பேரொளிப் பிராண னைய றிகிலீர்.
பிணங்குமோ ரிருவி னைப்பி ணக்க றுக்க வல்லிரேல்
பிணங்கிலாத பெரிய இன்பம் பெற்றி ருக்க லாகுமே. 153

ஆட்டி றைச்சி தின்றதில்லை யன்று மின்றும் வேதியீர் !
ஆட்டி றைச்சி யல்லவோ யாகம் நீங்க ளாற்றலே ?
மாட்டி றைச்சி தின்றதில்லை யன்று மின்றும் வேதியீர் !
மாட்டி றைச்சி யல்லவோ மரக்க றிக்கி டுவது ? 154

மீனி றைச்சி தின்றதில்லை யன்று மின்றும் வேதியீர் !
மீனி ருக்கு நீரல்லோ மூழ்வ துங்கு டிப்பதும் ?
மானி றைச்சி தின்ற தில்லை யன்று மின்றும் வேதியீர் !
மானு ரித்த தோலலோ மார்பு நூல ணிவதும் ? 155

அக்கிட ரனைத்து யிர்க்கு மாதி யாகி நிற்பது
முக்கிட ருமைப்பி டித்து முத்தி ரித்து விட்டது
மைக்கிடர் பிறந்தி றந்து மாண்டு மாண்டு போவது
மொக்கிட ருமக்கு ஈனு ணர்த்து வித்த தன்மையே. 156

ஐயன் வந்து மெய்யகம் புகுந்த வாற தெங்ஙனே ?
செய்ய திங்க ளங்குரும்பை நீர்பு குந்த வண்ணமே.
ஐயன் வந்து மெய்யகப் புகுந்து கோவில் கொண்டபின்
வைய கத்தில் மாந்தரோடு வாய்தி றப்ப தில்லையே. 157

நவ்வு மவ்வை யுங்கடந்து நாடொ ணாத சிய்யின்மேல்
வவ்வு யவ்வு ளுஞ்சிறந்த வண்மை ஞான போதகம்
ஒவ்வு சுத்தி யுண்ணி றைந்த துச்சியூ டுருவியே
இவ்வகை அறிந்த பேர்க ளீச னாணை யீசனே. 158

அக்க ரம்ம னாதியோ ? ஆத்து மம்ம னாதியோ ?
புக்கி ருந்த பூதமும் புலன்க ளும்ம னாதியோ ?
தக்க மிக்க நூல்களுஞ் சாத்தி ரம்ம னாதியோ ?
தற்ப ரத்தை யூட றுத்த சற்குரு அனாதியோ ? 159

பார்த்த தேது பார்த்திடில் பார்வை யூட ழிந்திடும் ;
கூர்த்த தாயி ருப்பிரேல் குறிப்பி லாச்சி வமதாம் ;
பார்த்த பார்த்த போதெலாம் பார்வை யும்மி கந்துநீர்
பூத்த பூவுங் காயுமாய்ப் பொருந்து வீர்பி றப்பிலே. 160

நெற்றி பற்றி யுழலு கின்ற நீலமா விளக்கினைப்
பற்றி யொற்றி நின்றுநின்று பற்ற றுத்த தென்பலன் ?
உற்றி ருந்து பாரடா வுள்ளொ ளிக்கு மேலொளி
அத்த னைய மர்ந்திட மறிந்த வன்ன னாதியே. 161

நீரை யள்ளி நீரில் விட்டு நீர்நினைந்த காரியம்
ஆரை யுன்னி நீரெலா மவத்தி லேயி யிறைக்கிறீர் ?
வேரை யுன்னி வித்தை யுன்னி வித்திலே முளைத்தெழுஞ்
சீரை யுன்ன வல்லிரேல் சிவப தங்கள் சேரலாம். 162

நெற்றியிற் றயங்கு கின்ற நீல மாம்வி ளக்கினை
உற்று ணர்ந்து பாரடாவு னுள்ளி ருந்த சோதியைப்
பத்தி யிற்றொ டர்ந்தவர் பரம யம்ம தானவர்
அத்தலத் திருந்த பேர்க ளவரெ னக்கு நாதரே. 163

கருத்த ரிக்கு முன்னெலாங் காயம் நின்ற தெவ்விடம் ?
உருத்த ரிக்கு முன்னெலா முயிர்ப்பு நின்ற தெவ்விடம் ?
அருட்ட ரிக்கு முன்னெலா மாசை நின்ற தெவ்விடம் ?
திருக்க றுத்துக் கொண்டதே சிவாய மென்று கூறுவீர். 164

கருத்த ரிக்கு முன்னெலாங் காயம் நின்ற தேயுவில் ;
உருத்த ரிக்கு முன்னெலாம் உயிர்ப்பு நின்ற தப்புவில் ;
அருட்ட ரிக்கு முன்னெலா மாசை நின்ற வாயுவில் ;
திருக்க றுத்துக் கொண்டதே சிவாய மென்று கூறுவீர். 165

தாத ரான தாதருந் தலத்தி லுள்ள சைவரும்
கூத ரைப்ப றைச்சி மக்கள் கூடிச்செய்த காரியம்
வீதி போகு ஞானியை விரைந்து கல்லெ றிந்ததும்
பாத கங்க ளாகவே பலித்த தேசி வாயமே. 166

ஓடி யோடிப் பாவிழைத் துள்ளங் கால்வெ ளுத்ததும்
பாவி யான பூனை வந்து பாலிலே குதித்ததும்
பணிக்கன் வந்து பார்த்ததும் பார மில்லை யென்றதும்
இழைய றுந்து போனதும் என்ன மாய மீசனே ! 167

சதுர நாலு மறையு மிட்டுத் தானதங்கி மூன்றுமே
எதிர தான வாயுவா றென்னும் வட்ட மேவியே
உதிர தான வரைக ளெட்டு மெண்ணுமென் சிரசின்மேல்
கதிர தான காயகத்தில் கலந்தெ ழுந்த நாதமே. 168

நாலொ டாறு பத்துமேல் நாலு மூன்று மிட்டபின்
மேலு பத்து மாறுடன் மேதி ரண்ட தொண்றுமே
கோலி யஞ்செ ழுத்துளே குருவி ருந்து கூறிடில்
தோலு மேனி நாதமாய்த் தோற்றி நின்ற கோசமே. 169

கோச மாயெ ழுந்ததுங் கூடு முருவி நின்றதும்
தேச மாய்ப்பி றந்ததுஞ் சிவாய மஞ்செ ழுத்துமே
ஈச ஞரி ருந்திட மனேக னேக மந்திரம்
ஆசயம் நிறைந்து நின்ற வைம்பத் தோரெ ழுத்துமே. 170

அங்க லிங்க பீடமாய் ஐயி ரண்டெ ழுத்திலும்
பொங்கு தாம ரையினும் பொருந்து வார கத்தினும்
பங்கு கொண்ட சோதியும் பரந்த அஞ்செ ழுத்துமே
சிங்க நாத வோசையுஞ் சிவாய மல்ல தில்லையே. 171

உவமையில்லாப் பேரொளிக்கு ளுருவமான தெவ்விடம் ?
உவமையாகி யண்டத்து ளுருவிநின்ற தெவ்விடம் ?
தவமதான பரமனர் தரித்துநின்ற தெவ்விடம் ?
தற்பரத்தில் சலம்பிறந்து தங்கிநின்ற தெவ்விடம் ?
சுகமதாக எருதுமூன்று கன்றையீன்ற தெவ்விடம் ?
சொல்லுகீழு லோகமேழும் நின்றவாற தெவ்விடம் ?
அவளதான மேருவும் அமைவதான தெவ்விடம் ?
அவனுமவளு மாடலா லருஞ்சீவன்பி றந்ததே. 172

உதிக்க நின்ற தெவ்விடம்? ஒடுங்கு கின்ற தெவ்விடம் ?
கதிக்க நின்ற தெவ்விடம்? கண் ணு றக்க மெவ்விடம் ?
மதிக்க நின்ற தெவ்விடம்? மதிம யக்க மெவ்விடம் ?
விதிக்க வல்ல ஞானிகாள் ! விரித்து ரைக்க வேணுமே 173

திரும்பி யாடு வாசலெட்டுத் திறமு ரைத்த வாசலெட்டு ;
மருங்கி லாத கோலமெட்டு வன்னி யாடு வாசலெட்டு ;
துரும்பி லாத கோலமெட்டுச் சுற்றி வந்த மருளரே !
அரும்பி லாத பூவுமுண்டெ மைய ஞணை யுண்மையே. 174

தானிருந்து மூல வங்கி தணலெ ழுப்பி வாயுவால்
தேனிருந்து வரைதி றந்து தித்தி யொன்று மொத்ததே
வானிருந்த மதிய மூன்று மண்ட லம்பு குந்தபின்
ஊனிருந்த தளவு கொண்ட யோகி நல்ல யோகியே. 175

முத்தனாய் நினைந்த போது முடிந்த அண்டத் துச்சிமேல்
பத்த னாரு மம்மையும் பரிந்த வாட லாடினார் ;
சித்த ரான ஞானிகாள் ! தில்லை யாட லென்பிர்காள் !
அத்த னாட லுற்றபோ தடங்க லாட லுற்றவே. 176

ஒன்று மொன்று மொன்றுமே உலக னைத்து மொன்றுமே
அன்று மின்று மொன்றுமே அனாதி யான தொன்றுமே
கன்றல் நின்ற செப்பினைக் களிம்ப றுத்து நாட்டினால்
அன்று தெய்வ மும்முளே யறிந்த தேசி வாயமே. 177

நட்ட தாவ ரங்களும் நவின்ற சாத்தி ரங்களும்
இட்ட மான ஓமகுண்ட மிசைந்த நாலு வேதமும்
கட்டி வைத்த புத்தகம் கடும்பி தற்றி தற்கெலாம்
பெட்ட தாய்மு டிந்ததே பிரானை யான றியவே. 178

வட்ட மான கூட்டிலே வளர்ந்தெ ழுந்த வம்புலி
சட்ட மீப டத்திலே சங்கு சக்க ரங்களாய்
விட்ட தஞ்சு வாசலில் கதவி னால டைத்தபின்
முட்டையி லெழுந்த சீவன் விட்ட வாற தெங்ஙனே ? 179

கோயில் பள்ளி யேதடா ! குறித்து நின்ற தேதடா !
வாயினால் தொழுது நின்ற மந்தி ரங்க ளேதடா !
ஞாய மான பள்ளியில் நன்மை யாய்வ ணங்கினால்
காய மான பள்ளியிற் காண லாமி றையையே. 180

நல்ல வெள்ளி யாறதாய் நயந்த செம்பு நாலதாய்
கொல்லு நாக மூன்றதாய்க் குலாவு செம்பொ னிரண்டதாய்
வில்லி னோசை யொன்றுடன் விளங்க வூத வல்லிரேல்
எல்லை யொத்த சோதியான தெட்டு மாற்ற தாகுமே. 181

மனத்த கத்த ழுக்கறுத மவுன ஞான யோகிகள்
வனத்த கத்தி ருக்கினு மனத்த கத்த ழுக்கறார் ;
மனத்த கத்த ழுக்கறுத்த மவுன ஞான யோகிகள்
பினத்த டத்தி ருக்கினும் பிறப்ப றுத்தி ருப்பரே. 182

உருவு மல்ல வொளியுமல்ல ஒன்ற தாகி நின்றதே ;
மருவு மல்ல கந்தமல்ல மந்த நாடி யுற்றதல் ;
பெரிய தல்ல சிறியதல்ல பேசு மாவி தானுமன்
றரியதாக நின்ற நேர்மை யாவர் காண வல்லரே ? 183

ஓரெ ழுத்து லகெலா முதித்த அட்ச ரத்துளே
ஈரெ ழுத்தி யம்புகின்ற இன்ப மேத றிகிலீர் ;
மூவெ ழுத்து மூவராகி மூண்டெ ழுந்த மூர்த்தியை
நாலெ ழுத்து நாவிலே ந்வின்ற தேசி வாயமே. 184

ஆதியந்த மூல விந்து நாத மைந்து பூதமாய்
ஆதியந்த மூல விந்து நாத மைந்தெ ழுத்துமாய்
ஆதியந்த மூல விந்து நாத மேவி நின்றதும்
ஆதியந்த மூல விந்து நாத மேசி வாயமே. 185

அன்ன மிட்ட பேரெலா மனேக கோடி வாழவே
சொன்ன மிட்ட பேரெலாந் துரைத்த னங்கள் பண்ணலாம்
வின்ன மிட்ட பேரெலாம் வீழ்வர் வெந்ந ரகிலே.
கன்ன மிட்ட பேரெலாம் கடந்து நிற்றல் திண்ணமே. 186

ஓதொ ணாமல் நின்றநீ ருறக்க மூணு மற்றநீர்
சாதி பேத மற்றநீர் சங்கை யின்றி நின்றநீர்
கோதி லாத அறிவிலே குறிப்பு ணர்ந்து நின்றநீர்
ஏது மின்றி நின்றநீ ரியங்கு மாற தெங்ஙனே ? 187

பிறந்த போது கோவண மிலங்கு நூல்கு டுமியும்
பிறந்து டன்பி றந்தவோ ? பிறங்கு நூற்ச டங்கெலாம்
மறந்த நாலு வேதமும் மனத்து ளேயு தித்தவோ ?
நிலம்பி ளந்து வானிடிந்து நின்ற தென்ன வல்லிரே ! 188

துருத்தி யுண்டு கொல்லருண்டு சொன்ன மான சோதியுண்டு
திருத்தமாய் மனத்தி லுன்னித் திகழ வூத வல்லிரேல்
பெருத்த தூணி லங்கியே பிழம்ப தாய்வி ரிந்திடும்
நிருத்த மான சோதியு நீயு மல்ல தில்லையே. 189

வேட மிட்டு மின்து லக்கி மிக்க தூப தீபமாய்
ஆடறுத்துக் கூறு போட்ட அவர்கள் போலும் பண்ணுறீர்
தேடி வைத்த செம்பெலாந் திரள்ப டப்ப ரப்பியே
போடுகின்ற புட்ப பூசை பூசை யென்ன பூசையே? 190

முட்டுக் கண்ட தூமையின் முளைத்தெ ழுந்த சீவனைக்
கட்டிக் கொண்டு நின்றிடங் கடந்து நோக்க வல்லிரேல்
முட்டு மற்றுக் கட்டுமற்று முடியி னின்ற நாதனை
எட்டுத் திக்குங் கையினு லிருந்த வீட தாகுமே. 191

அருக்க னோடு சோமனு மதற்கு மப்பு றத்திலே
நெருக்கி யேறு தாரகை நெருங்கி நின்ற நேர்மையை
உருக்கி யோரெ ழுத்துளே ஒப்பி லாத வெளியிலே
இருக்க வல்ல பேரலோ யினிப்பி றப்ப தில்லை. 192

மூல வட்ட மீதிலே முளைத்த அஞ்செ ழுத்தின்மேல்
கோல வட்ட மூன்றுமாய்க் குலைந்த லைந்து நின்றநீர்
ஞால வட்ட மன்றுளே நவின்ற ஞான மாகிலோ
ஏல வட்ட மாகியே யிருந்த தேசி வாயமே. 193

சுக்கி லத்தி சையுளே சுரோணி தத்தின் வாசலுள்
முச்சதுர மெட்டுளேயம் மூலா தார அறையிலே
அச்ச மற்ற சவ்வுளே அரியு மரனும் அயனுமாய்
உச்ச ரிக்கு மந்திர முண்மை யேசி வாயமே. 194

பூவு நீரு மென்மனம் ; பொருந்து கோயி லென் னுளம் ;
ஆவி யோடி லிங்கமா யகண்ட மெங்கு மாகிலும்
மேவு கின்ற ஐவரும் விளங்கு தூப தீபமாய்
ஆடுகின்ற கூத்த னுக்கோ ரந்தி சந்தி யில்லையே. 195

உருக்க லந்த பின்னலோ வுன்னை நான றிந்ததும்?
இருக்கி லென்ம றக்கிலென் இணைந்தி ருந்த போதெலாம்
உருக்க லந்து நின்றபோது நீயு நானு மொன்றலோ?
திருக்க லந்த போதலோ தெளிந்த தேசி வாயமே? 196

சிவாய மஞ்செ ழுத்திலே தெளிந்து தேவ ராகலாம்;
சிவாய மஞ்செ ழுத்திலே தெளிந்து வான மாளலாம்;
சிவாய மஞ்செ ழுத்திலே தெளிந்து கொண்ட வான்பொருள்
சிவாய மஞ்செ ழுத்துளே தெளிந்துகொள்ளு முண்மையே.

பொய்க்கு டத்தி லைந்தொ துங்கிப் போக வீசு மாறுபோல்
இச்சடமு மிந்தி யம்மும் நீரு மேல லைந்ததே;
அக்குடஞ் சவத்தை மொண்ட மர்ந்தி ருந்த வாறுபோல்
இச்சடஞ் சிவத்தை மொண்டு கந்த மர்ந்தி ருப்பதே. 198

பட்டமும் கயிறும் போலப் பறக்க நின்ற சீவனைப்
பாவை யாலே பார்த்துநீ படுமு டிச்சுப் போடடா!
திட்ட வும்ப டாதடா; சீவ னைவி டாதடா;
கட்ட டாநீ சிக்கெனக் களவ றிந்த கள்ளனை. 199

அல்லி றந்து பகலிறந் தகம்பி ரம்ம மிறந்துபோய்
அண்ட ரண்ட முங்கடந் தனேக னேக ரூபமாய்ச்
சொல்லி றந்து மனமிறந்த சுகசொ ரூப வுண்மையைச்
சொல்லி யாற வென்னில்வேறு துணைவ ரில்லை யானதே 200

ஐயி ரண்டு திங்களா யடங்கி நின்ற தூமைதான்
கையி ரண்டு காலிரண்டு கண்ணி ரண்டு மாகியே
மெய்தி ரண்டு சத்தமாய் விளங்கி யிரச கந்தமும்
துய்ய காய மானதுஞ் சொல்லு கின்ற தூமையே. 201

அங்க லிங்க பீடமு மசவை மூன்றெ ழுத்தினுஞ்
சங்கு சக்க ரத்தினுஞ் சகல வான கத்தினும்
பங்கு கொண்ட யோகிகள் பரம வாச லஞ்சினும்
சிங்க நாத வோசையுஞ் சிவாய மல்ல தில்லையே. 202

அஞ்செ ழுத்து மூன்றெழுத்து மென்று ரைக்கு மன்பர்காள்
அஞ்செ ழுத்து மூன்றெ ழுத்து மல்ல காணும் அப்பொருள்
அஞ்செ ழுத்து நெஞ்ச ழுத்தி யவ்வெழுத் தறிந்தபின்
அஞ்செ ழுந்து மவ்வின் வண்ண மானம்த சிவாயமே. 203

ஆத ரித்த மந்திரம் அமைந்த ஆக மங்களும்
மாதர் மக்கள் சுற்றமும் மயக்க வந்த நித்திரை
ஏது புக்கொ ளித்ததோ எங்கு மாகி நின்றதோ?
சோதி புக்கொ ளித்திடஞ் சொல்ல டாசு வாமியே! 204

அக்க ரம்ம னாதியோ ஆத்து மாவ னாதியோ?
புக்கி ருந்த பூதமும் புலன்க ளும்அ னாதியோ?
தக்க மிக்க நூல்களுஞ் சதாசி வம்அ னாதியோ?
மிக்க வந்த யோகிகாள்! விரைந்து ரைக்க வேணுமே. 205

ஒன்ப தான வாசலு மொழியு நாளி ருக்கையில்
என்பதா மிராம ராம ராம வென்னு நாமமே;
வன்மமான பேர்கள் வாக்கில் வந்து நோய டைப்பதாம்;
அன்ப ரான பேர்கள்வாக்கி லாழ்ந்த மைந்தி ருப்பதே. 206

அள்ளி நீரை யிட்டதே ததங்கை யிற்கு ழைத்ததேது?
மெள்ளவே முணமு ணென்று விளம்புகின்ற மூடர்காள்!
கள்ள வேட மிட்டதேது? கண்ணை மூடி விட்டதேது?
மெள்ள வேகு ருக்களே! விளம்பி டீர்வி ளம்பிடீர்! 207

அன்னை கர்ப்பத் தூமையில் அவத ரித்த சுக்கிலம்
முன்னை யேத ரித்த தும்ப னித்துளிபோ ளாகுமே.
உன்னி தொக்கு ளூழலுந் தூமை யுள்ளுளே யடங்கிடும்;
பின்னை யேபி றப்பதுந் தூமை காணும் பித்தரே! 208

அழுக்க றத்தி னங்குளித் தழுக்க ரூத மாந்தரே !
அழுக்கி ருந்த தெவ்விடம் ? அழுக்கி லாத தெவ்விடம் ?
அழுக்கி ருந்த அவ்விடத் தழுக்க றுக்க வல்லிரேல்
அழுக்கி லாத சோதியோ டணுகி வாழ லாகுமே, 209

அணுத்தி ரண்ட கண்டமா யனைத்தும் பல்லி யோனியாய்
மனுப்பிறந்து ஓதி வைத்த நூலி லேம யங்குறீர் ;
சனிப்ப தேது சாவ தேது தாபரத்தி னூடுபோய்
நினைப்ப தேது நிற்பதேது? நீர்நி னைந்து பாருமே. 210

ஆதியாகி யண்ட ரண்ட மப்பு றத்து மப்புறம்
சோதியாகி நின்றி லங்கு சுருதி நாத சோமனைப்
பேதி யாமல் தம்முளே பெற்று ணர்ந்த ஞானிகாள் !
சாதிபேத மென்ப தொன்று சற்று மில்லை யில்லையே. 211

ஆக்கை மூப்ப தில்லையே யாதி கார ணத்திலே
நாக்கை மூக்கை யுண்மடித்து நாத நாடி யூடுபோய்
ஏக்க றுத்தி ரெட்டையு மிறுக்க மூத்த வல்லிரேல்
பார்க்கப் பார்க்கத் திக்கெலாம் பரப்பி ரம்ம மாகுமே. 212

அஞ்சு மஞ்சு மஞ்சு மஞ்சு மல்லல் செய்து நிற்பதும் ;
அஞ்சு மஞ்சு மஞ்சுமே யமர்ந்து ளேயி ருப்பதும் ;
அஞ்சு மஞ்சு மஞ்சுமே யாத ரிக்க வல்லிரேல்
அஞ்சு மஞ்சு மும்முளே யமர்ந்த தேசி வாயமே. 213

அஞ்செ ழுத்தி னாதியா யமர்ந்து நின்ற தேதடா !
நெஞ்ச ழுத்தி நின்றுகொண்டு நீசெ பிப்ப தேதடா !
அஞ்செ ழுத்தின் வாளதா லறுப்ப தாவ தேதடா !
பிஞ்செ ழுத்தி னேர்மைதான் பிரித்து ரைக்க வேணுமே.

உயிரி ருந்த தெவ்விட முடம்பெ டுத்த தன்முனம் ?
உயிர தாவ தேதடா ! உடம்ப தாவ தேதடா !
உயிரை யும்மு டம்பையு மொன்று விப்ப தேதடா !
உயிரி னூ டம்பெடுத்த வுண்மை ஞானி ! சொல்லடா !

சுழித்த வோரெ ழுத்தையுஞ் சொன்மு கத்தி ருத்தியே
துன்ப இன்ப முங்கடந்து சொல்லு மூல நாடிகள்
அழுத்த மான அக்கர மங்கி யுள்ளெ ழுப்பியே
ஆறு பங்க யங்கலந் தப்பு றத்த லத்துளே. 216

உருத்த ரிப்ப தற்குமுன் உயிர்பு குந்த நாதமும்
கருத்த ரிப்ப தற்குமுன் காய மென்ன சோணிதம்
அருட்ட ரிப்ப தற்குமுன் னறிவு மூலா தாரமாம்
குருத்த றிந்து கொள்ளுவீர் குணங்கெ டுங்கு ருக்களே ! 217

எங்கு முள்ள வீசனு ரெம்மு டல்பு குந்தபின்
பங்கு கூறிப் பேசுவார் பாடு சென்ற ணுகிலார்
எங்கள் தெய்வ முங்கள்தெய்வ மென்றி ரண்டு பேதமோ ?
உங்கள் பேத மன்றியே யுண்மை ரண்டு மில்லையே. 218

அரியுமாகி யயனு மாகி யண்ட மெங்கு மொன்றதாய்ப்
பெரியதாகி யுலகு தன்னில் நின்ற பாத மொன்றலோ ?
விரிவிதென்று வேறு செய்து வேட மிட்ட மூடரே !
அறிவினோடு பாரு மிங்கு மங்கு மொன்ற தானதே. 219

வெந்தநீறு மெய்க்க ணிந்து வேட முந்த ரிக்கிறீர் ;
சிந்தை யுள்நி னைந்துமே தினஞ்செ பிக்கு மந்திரம்
முந்து மந்தி ரத்திலோ மூல மந்தி ரத்திலோ
எந்த மந்தி ரத்திலோ ஈசன் வந்தி யங்குமே ? 220

அகார கார ணத்திலே யனேக னேக ரூபமாய்
உகார கார ணத்திலே யுருத்த ரித்து நின்றனன் ;
மகார கார ணத்திலே மயங்குகின்ற வையகம்
சிகார கார ணத்திலே தெளிந்த தேசி வாயமே. 221

அவ்வெ ழுத்தி லுவ்வுவந் தகார முஞ்ச னித்ததோ ?
உவ்வெ ழுத்து மவ்வெழுத்து மொன்றி லொன்று நின்றதோ?
செவ்வை யொத்து நின்றலோ சிவப தங்கள் சேரினும்
மிவ்வை யொத்த ஞானிகாள் ! விரித்து ரைக்க வேணுமே,

ஆதி யான அஞ்சிலும் அனாதி யான நாலினும்
சோதி யான மூன்றிலுஞ் சொரூப மற்ற ரண்டிலும்
நீதி யான தொன்றிலும் நிறைந்து நின்ற வத்துவை
ஆதி யான தொன்றுமே யற்ற தஞ்செ ழுத்துமே. 223

வானிலாத தொன்று மில்லை வானு மில்லை வானிடில்
ஊனிலாத தொன்று மில்லை யூனு மில்லையூனிடில்
நானிலாத தொன்று மில்லை நானு மில்லை நண்ணிடில்
தானி லாத தொன்றுமே தயங்கி யாடு கின்றதே. 224

சுழித்ததோ ரெழுத்தையுன்னிச் சொல்முகத்தி ருத்தியே
துன்பவின்ப முங்கடந்து சொல்லும்நாடி யூடுபோய்
அழுத்தமான அக்கரத்தி னங்கியையெ ழுப்பியே
ஆறுபங்க யங்கடந்த தப்புறத்து வெளியிலே
விழித்தகண்கு வித்தபோத டைந்துபோ யெழுத்தெலாம்
விளைந்துவிட்ட இந்த்ரசால வீடதான வெளியிலே
அழுத்தினாலு மதிமயங்கி யனுபவிக்கும் வேளையில்
அவனுமுண்டு நானுமில்லை யாருமில்லை யானதே. 225

நல்ல மஞ்ச னங்கள்தேடி நாடி நாடி யோடுறீர் ;
நல்ல மஞ்ச னங்களுண்டு நாத னுண்டு நம்முளே ;
எல்லை மஞ்ச னங்கள்தேடி யேக பூசை பண்ணினால்
தில்லை மேவு சீவனுஞ் சிவப தத்து ளாடுமே. 226

உயிர கத்தில் நின்றிடு முடம்பெ டுத்த தற்குமுன் ;
உயிர கார மாயிடு முடலு கார மாயிடும் ;
உயிரை யும்மு டம்பையு மொன்று விப்ப தச்சிவம் ;
உயிரி னாலு டம்புதா னெடுத்த வாறு ரைக்கினே. 227

அண்ட மேழு முழலவே யனந்த யோனி யுழலவே
பண்டு மால யனுடன் பறந்து நின்று முழலவே
எண்டி சைகள் கடந்துநின் றிருண்ட சத்தி யுழலவே
அண்ட ரண்ட மொன்றதா யாதி நட்ட மாடுமே. 228

உருவநீ றுருப்பு கொண்டு ருத்த ரித்து வைத்திடும்
பெரிய பாதை பேசுமே பிசாசை யொத்த மூடரே!
கரிய மாலு மயனுமாகக் காணொ ணாத கடவுளை
உரிமை யாக வும்முளே யுணர்ந்து ணர்ந்து கொள்ளுமே.

பண்ணி வைத்த கல்லையும் பழம்பொ ருள தென்றுநீர்
எண்ண முற்று மென்னபே ருரைக்கி றீர்க ளேழைகாள்!
பண்ண வும்ப டைக்கவும் படைத்து வைத்த ளிக்கவும்
ஒண்ணு மாகி யுலகளித்த வொன்றை நெஞ்சி லுன்னுமே.

நால தான யோனியுள் நவின்ற விந்து மொன்றதாய்
ஆல தான வித்துளே யமர்ந்தொ டுங்கு மாறுபோல்
சூல தான வுற்பனஞ் சொல்வ தான மந்திரம்
மேல தான ஞானிகாள்! விரித்து ரைக்க வேணுமே. 231

அருவ மாயி ருந்தபோ தன்னை யங்க றிந்திலை;
உருவ மாயி ருந்தபோ துன்னை நான றிந்தனன்!
குருவி னால்தெ ளிந்துகொண்டு கோதி லாத ஞானமாம்
பருவ மான போதலோ பரப்பி ரம்ம மானதே. 232

பிறப்ப தும்மி றப்பதும் பிறந்தி டாதி ருப்பதும்
மறப்ப துந்நி னைப்பதும் மறந்த தைத்தெ ளிந்ததும்
துறப்ப துந்தொ டுப்பதுஞ் சுகித்து வாரி யுண்பதும்
பிறப்ப தும்மி றப்பதும் பிறந்த வீட டங்குமே. 233

கண்ணி லேயி ருப்பனே கருங்க டல்க டைந்தமால்;
விண்ணி லேயி ருப்பனே மேவி யங்கு நிற்பனே;
தன்னு ளேயி ருப்பனே தராத லம்ப டைத்தவன்;
என்னு ளேயி ருப்பனே யெங்கு மாகி நிற்பனே. 234

ஆடு நாடு தேடினும் ஆனை சேனை தேடினும்
கோடி வாசி தேடினுங் குறுக்கே வந்து நிற்குமோ?
ஓடி யிட்ட பிச்சையு முகந்து செய்த தர்மமும்
சாடி விட்ட குதிரைபோல் தர்மம் வந்து நிற்குமே. 235

எள்ளி ரும்பு கம்பளி யிடும்ப ருத்தி வெண்கலம்
அள்ளி யுண்ட நாதனுக்கோ ராடை மாடை வத்திரம்.
உள்ளி ருக்கும் வேதியர்க் குற்ற தான மீதிரால்
மெள்ள வந்து நோய ணைத்து மீண்டிடுஞ் சிவாயமே. 236

ஊரி லுள்ள மனிதர்காள் ! ஒருமை மனமாய்க் கூடியே
தேரிலே வடத்தை யிட்டுச் செம்பை வைத்தி ழுக்கிறீர் ;
ஆரி னாலு மறியொணாத ஆதி சித்த நாதரைப்
போரிலான மனிதர் பண்ணும் புரளி பாரும் பாருமே. 237

மருள்ப ழுத்த சிந்தையால் மயங்கு கின்ற மாந்தரே !
குருக்கொ டுத்த மந்திரங் கொண்டு நீந்த வல்லிரேல்
குருக்கொ டுத்த தொண்டரும் குகனொ டிந்தப் பிள்ளையும்
பருத்தி பட்ட பன்னிரண்டு பாடு தான்ப டுவரே. 238

அன்னைகர்ப்ப அறையதற்கு ளங்கியின்ப்ர காசமாய்
அந்தறைக்குள் வந்திருந் தரியவிந்து ரூபமாய்த்
தன்னையொத்து நின்றபோது தடையறுத்து வெளியதாய்த்
தங்கநற் பெருமைதந்து தலைவனாய்வ ளர்ந்ததே,
உன்னையற்ப நேரமு மறந்திருக்க லாகுமோ ?
உள்ளமீது றைந்தனை மறைப்பிலாத சோதியே !
பொன்னைவென்ற பேரொளிப் பொருவிலாத ஈசனே !
பெண்ணடிப் பிறப்பிலாமை யென்றும்நல்க வேணுமே.

பிடித்த தண்டு மும்மதோ பிரம மான பித்தர்காள் !
தடித்த கோல மத்தை விட்டுச் சாதிபேதங் கொண்மினோ ;
வடித்தி ருந்த தோர்சி வத்தை வாய்மை கூற வல்லிரேல்
திடுக்க முற்ற ஈசனைச் சேன் று கூட லாகுமே. 240

சத்தி நீத யவுநீ தயங்கு சங்கி னோசைநீ
சித்தி நீசி வனுநீ சிவாய மாமெ ழுத்துநீ
முத்தி நீமு தலுநீ மூவ ரான தேவர்நீ
அத்தி றம்மு மும்முளே யறிந்து ணர்ந்து கொள்ளுமே. 241

சட்டை யிட்டு மணிது லக்குஞ் சாத்திரச் சழக்கரே !
பொத்தகத்தை மெத்த வைத்துப் போத மோதும் பொய்யரே
கிட்டையேது ஞான மேது நீரி ருந்த அட்சரம்
பட்டை யேது சொல்லிரே பாத கக்க படரே ! 242

உண்மை யான சுக்கில முபாய மாயி ருந்ததும்
வெண்மை யாகி நீரிலே விரைந்து நீர தானதும்
தண்மை யான காயமே தரித்து ரூப மானதும்
தெண்மை யான ஞானிகாள் ! தெளிந்து ரைக்க வேணுமே.

வஞ்ச கப்பி றவியை மனத்து ளேவி ரும்பியே
அஞ்செ ழுத்தி னுண்மையை யறிகி லாத மாந்தர்கள் !
வஞ்ச கப்பி றவியை வதைத்தி டவ்வும் வல்லிரேல்
அஞ்செ ழுத்தி னுண்மையை யறிந்து கொள்ள லாகுமே.

காயி லாத சோலையிற் கனியு கந்த வண்டுகாள் !
ஈயி லாத தேனையுண் டிராப்ப கல்லு றங்குறீர் ;
பாயி லாத கப்ப லேறி யக்கரைப் படுமுனே
வாயி னாலு ரைப்ப தாகு மோமவுன ஞானமே ? 245

பேய்கள் பேய்க ளென்கிறீர் பிதற்று கின்ற பேயர்காள் .
பேய்கள் பூசை கொள்ளுமோ ? பிடாரி பூசை கொள்ளுமோ ?
ஆதி பூசை கொள்ளுமோ ? அனாதி பூசை கொள்ளுமோ ?
காய மான பேயலோ கணக்க றிந்து கொண்டதே ? 246

மூல மண்ட லத்தி லேயு முச்சதுர மாதியாய்
நாலு வாச லெம்பிரான் நடுவு தித்த மந்திரம்
கோலி யெட்டி தழுமாய்க் குளிர்ந்த லர்ந்த தீட்டமாய்
மேலும் வேறு காண்கிலேன் விளைந்த தேசி வாயமே. 247

ஆதி கூட நாடியோடிக் காலை மாலை நீரிலே
சோதி மூல மானநாடி சொல்லி றந்த தூவெளி
ஆதி கூடி நெற்பறித் தகார மாதி யாகமம்
பேத பேத மாகியே பிறந்து டல்லி றந்ததே 248

பாங்கினோ டிருந்து கொண்டு பரம னஞ்செ ழுத்துளே
ஓங்கி நாடி மேலிருந்தங் குச்ச ரித்த மந்திரம்
மூங்கில் வெட்டி நாரு ரித்து முச்சில்தை விதத்தினின்
ஆய்ந்த நூலிற் றோன்றுமே அறிந்து ணர்ந்து கொள்ளுமே.

புண்ட ரீக மத்தியி லுதித்தெ ழுந்த சோதியை
மண்ட லங்கள் மூன்றொடு மன்னு கின்ற மாயனை
அண்ட ரண்ட மூட றுத்த றிந்துணர வல்லிரேல்
கண்ட கோயில் தெய்வ மென்று கையெ டுப்ப தில்லையே. 250

அம்ப லங்கள் சந்தியி லாடு கின்ற அப்பனே
அன்ப னுக்கு ளன்பனாய் நிற்ப னாதி வீரனே ;
அன்ப ருக்கு ளன்பனாய் நின்ற வாதி நாதனே
உம்ப ருக்கு முண்மையாய் நின்ற வுண்மை யுண்மையே. 251

அண்ண லாவ தேதடா அறிந்து ரைத்த மந்திரம்
தண்ண லாக வந்தவன் சகல புராணங் கற்றவன்
கண்ண னாக வந்தவன் கார ணத்து தித்தவன்
ஒண்ண தாவ தேதடா வுண்மை பான மந்திரம். 252

உள்ளதோ புறம்பதோ வுயிரொ டுங்கி நின்றிடம் ?
மெள்ள வந்து கிட்டிநீர் வினவ வேணு மென்கிறீர் ;
உள்ள தும்பு றம்பது மொத்த போது நாதமாம் ;
கள்ள வாச லைத்திறந்து காண வேணு மாந்தரே ! 253

ஆர லைந்து பூதமா யளவி டாத யோனியும்
பார மான தேவரும் பழுதி லாத பாசமும்
ஓரொ ணாத அண்டமு முலோக லோக லோகமும்
சேர வெந்து போயிருந்த தேக மோது செப்புமே. 254

என்ன கத்து ளென்னைநா னெங்கும் நாடி யோடினேன்
என்ன கத்து ளென்னைநா னறிந்தி லாத தன்மையால் ;
என்ன கத்து ளென்னைநா னறிந்து மேதெ ரிந்தபின்
என்ன கத்து ளென்னையன்றி யாது மொன்று மில்லையே.

விண்ணி னின்று மின்னெழுந்து மின்னொ டுங்கு மாறுபோல்
என்னுள் நின்று மெண்ணு மீச னென்னகத் திருக்கையால்
கண்ணி னின்று கண்ணில் தோன் றும் கண்ணறிவி லாமையால்
என்னு ணின்ற வென்னையு மியான றிந்த தில்லையே. 256

அடக்கி னும்ம டக்கொ ணாத அம்பலத்தி னூடுபோய்
அடக்கி னும்ம டக்கொணும லன்பு ருக்கு மென்னுளே
கிடக்கி னும்மி ருக்கினுங் கிசேலம் வந்தி ருக்கினும்
நடக்கி னும்மி டைவிடாத நாத சங்கொ லிக்குமே. 257

மட்டு லாவு தண்டுழா யலங்க லாய்!பு னற்கழல்
விட்டு வீழில் தாகபோக விண்ணில் நண்ணில் வெளியினும்
எட்டி னோடி ரண்டினு மிதத்தி னால்ம னந்தனைக்
கட்டி வீடி லாதுவைத்த காத லின்ப மாகுமே. 258

ஏக முத்தி மூன்றுமுத்தி நாலு முத்தி நன்மைசேர்
போக முற்றிப் புண்ணியத்தில் முத்தி யன்றி முத்தியாய்
நாக முற்ற சயனமாய் நலங்க டல்க டந்ததீ
யாக முற்றி யாகிநின்ற தென்கொ லாதி தேவனே! 259

மூன்று முப்பத் தாறினோடு மூன்று மூன்று மாயமாய்
மூன்று முத்தி யாகிமூன்று மூன்று மூன்று மூன்றுமாய்த்
தோன்று சோதி மூன்றதாய்த் துலக்க மில்வி ளக்கதாய்
ஏன்றெ னாவி னுள்புகுந்த தென்கொ லோவெம் மீசனே!

ஐந்து மைந்து மைந்துமா யல்ல வற்று ளாயுமாய்
ஐந்து மூன்று மொன்றுமாய் நின்ற வாதி தேவனே!
ஐந்து மைந்து மைந்துமா யமைந்த னைத்து நின்றநீ
ஐந்து மைந்து மாயநின்னை யாவர் காண வல்லரே? 261

ஆறு மாறு மாறுமாயொ ரைந்து மைந்து மைந்துமாய்
ஏறு சீரி ரண்டுமூன்று மேழு மாறு மெட்டுமாய்
வேறு வேறு ஞானமாகி மெய்யி னோடு பொய்யுமாய்
ஊறு மோசை யாயமர்ந்த மாய மாய மாயனே! 262

எட்டு மெட்டு மெட்டுமாயொ ரேழு மேழு மேழுமாய்
எட்டு மூன்று மொன்றுமாகி நின்ற வாதி தேவனே !
எட்டு மாய பாதமோ டிறைஞ்சி நின்ற வண்ணமே
எட்டெ ழுத்து மோதுவார்க ளல்லல் நீங்கி நிற்பரே. 263

பத்தி னோடு பத்துமாயொ ரேழி னோடு மொன்பதாய்
பத்து நாற்றி சைக்குணின்ற நாடு பெற்ற நன்மையாய்
அத்து மாய கொத்த மோடு மத்தலமிக் காதிமால்
பத்தர் கட்க லாது முத்தி முத்தி முத்தி யாகுமே. 264

வாசி யாகி நேசமொன்றி வந்தெ திர்த்த தென்னுக
நேச மாக நாளுலாவ நன்மை சேர்ப வங்களில்
வீசிமேல் நிமிர்ந்த தோளி யில்லை யாக்கி னைக்கழல்
ஆசை யால்ம றக்கலா தமர ராக லாகுமே 265

எளிய தான காய மீதி லெம்பிரா னிருப்பிடம்
அளிவு ருது னின்றதே அகார மும்உ காரமும்
கொளுகை யான சோதியுங் குலாவி நின்ற தவ்விடம்
வெளிய தாகு மொன்றிலே விளைந்த தேசி வாயமே. 266

அஞ்செ ழுத்து மூன்றெழுத்து மென்று ரைக்கு மன்பர்காள்
அஞ்செ ழுத்து மூன்றெழுத்து மல்ல காணு மப்பொருள் ;
அஞ்செ ழுத்தை நெஞ்ச ழுத்தி அவ்வெழுத் தறிந்தபின்
அஞ்செ ழுத்து மூன்றெ ழுத்து மவ்வுமாஞ் சிவாயமே. 267

பொய்யு ரைக்கப் போத மென்று பொய்யருக் கிருக்கையால்
மெய்யு ரைக்க வேண்டு தில்லை மெய்யர் மெய்க்கி லாமையால்
வைய கத்தி னுண்மை தன்னை வாய்தி றக்க அஞ்சினேன் ;
நைய வைத்த தென்கொலோ நமசி வாய நாதனே ! 268

ஒன்றை யொன்று கொன்றுகூட வுணவு செய்தி ருக்கினும்
மன்றி னூடு பொய்களவு மாறு வேறு செய்யினும்
பன்றி தேடு மீசனைப் பரிந்து கூட வல்லிரேல்
அன்று தேவ ரும்முளே யறிந்து ணர்ந்து கொள்ளுமே 269

மச்ச கத்து ளேயிவர்ந்து மாயை பேசும் வாயுவை
அச்ச கத்து ளேயிருந் தறிவு ணர்த்திக் கொள்விரேல்
அச்ச கத்து ளேயிருந் தறிவு ணர்த்திக் கொண்டபின்
இச்சை யற்ற எம்பிரா னெங்கு மாகி நிற்பனே. 270

வரகிலே முளைத்த செந்நெல் களைய தான வாறுபோல்
உரவி னோரும் உண்மை கூறின் உய்யுமாற தெங்ஙனே ?
விரகிலே முளைத்தெ ழுந்த மெய்ய லாது பொய்யதாய்
நரகிலே பிறந்தி ருந்து நாடு பட்ட பாடதே. 271

ஆடு கின்ற எம்பிரானை யங்கு மிங்கு மென்றுநீர்
தேடு கின்ற பாவிகாள் ! தெளிந்த ஒன்றை ஓர்கிலீர் ;
காடு நாடு வீடுவிண் கலந்து நின்ற கள்வனை
நாடி யோடி யும்முளே நயந்து ணர்ந்து பாருமே. 272

ஆடுகின்ற அண்டர் கூடு ப்பு றம்ம திப்புறம்
தேடு நாலு வேதமுந் தேவ ரான மூவரும்
நீடு வாழி பூதமும் நின்ற தோர்நி லைகளும்
ஆடு வாழி னொழியலா தனைத்து மில்லை யில்லையே. 273

ஆவ தும்ப ரத்துளே அழிவ தும்ப ரத்துளே ;
போவ தும்ப ரத்துளே புகுவ தும்ப ரத்துளே ;
தேவ ரும்ப ரத்துளே திசைக ளும்ப ரத்துளே ;
யாவ ரும்ப ரத்துளே யானு மப்ப ரத்துளே. 274

ஏழுபா ரெழுக டல்இ பங்க ளெட்டு வெற்புடன்
சூழு வான்கி ரிகடந்து சொல்லு மேழு லகமும்
ஆழி மால்வி சும்புகொள்பிர் மாண்ட ரண்ட அண்டமும்
ஊழி யானொ ளிக்குளே யுதித் தடனொ டுங்குமே 275

கயத்து நீரி றைக்கிறீர் கைகள் சோர்ந்து நிற்பதேன் ?
மனத்து ளீர மொன்றிலா மதியி லாத மாந்தர்காள் !
மனத்து ளீரங் கொண்டுநீ ரமுக்க றுக்க வல்லிரேல்
நினைத்தி ருந்த சோதியும் நீயும் நானு மொன்றலோ ? 276

நீரிலே பிறந்தி ருந்து நீர்ச டங்கு செய்கிறீர் ;
ஆரை யுன்னி நீரெலா மவத்தி லேயி றைக்கிறீர் ?
வேரை யுன்னி வித்தை யுன்னி வித்திலே முளைத்தெழுஞ்
சீரை யுன்ன வல்லிரேற் சிவப தம்ம டைவிரே. 277

பத்தொ டொத்த வாசலிற் பரந்து மூல வக்கரம்
முத்தி சித்தி தொந்தமென் றியங்கு கின்ற மூலமே
மத்த சித்த ஐம்புலன் மகார மான கூத்தையே
அத்தி யூரர் தம்முளே யமைந்த தேசி வாயமே. 278

அணுவி னோடு மண்டமா யளவி டாத சோதியைக்
குணம தாகி யும்முளே குறித்தி ருக்கின் முத்தியாம் ;
முணமு ணென்றே உம்முளே விரலை யொன்றி மீளவும்
தினந்தி னம்ம யக்குவீர் செம்பு பூசை பண்ணியே. 279

மூல மான அக்கர முகப்ப தற்கு முன்னெலாம்
மூல மாக மூடுகின்ற மூட மேது மூடரே !
கால னன அஞ்சு பூத மஞ்சிலே யொடுங்கினல்
ஆல னோடு கூடுமோ அனாதி யோடு கூடுமோ ? 280

முச்சதுர மூல மாகி முடிவு மாகி யேகமாய்
அச்சதுர மாகி யேய டங்கி யோரெ ழுத்துமாய்
யெய்ச்சதுர மெய்யு ளேவி ளங்கு ஞான தீபமாய்
உச்ச ரிக்கு மந்தி ரத்தி னுண்மையே சிவாயமே. 281

வண்டு லங்கு போலுநீர் மனத்து மாச றுக்கிலீர் !
குண்டு ரங்கள் போலுநீர் குடத்தி லேமு ழுகிறீர் ;
பண்டு முங்கள் நான்முகன பறந்து தேடிக் காண்கிலான் ;
கண்டி ருக்கு மும்முளே கலந்தி ருப்பர் காணுமே. 282

நின்ற தன்றி ருந்ததன்று நேரி தன்று கூரிதன்று
பந்த மன்று வீடுமன்று பாவ கங்க ளற்றது ;
கெந்த மன்று கேள்வியன்று கேடி லாத வானிலே
அந்த மின்றி நின்ற தொன்ற தெங்ஙனே யுரைப்பதே ? 283

பொருந்து நீரு மும்முளே புகுந்து நின்ற காரணம்
எருதி ரண்டு கன்றையீன்ற ஏக மொன்றை ஓர்கிலீர்
அருகி ருந்து சாவுகின்ற ஆவை யும்ம றிந்திலீர்
குருவி ருந்து லாவுகின்ற கோல மென்ன கோலமே? 284

அம்ப ரத்து ளாடுகின்ற அஞ்செ ழுத்து நீயலோ?
சிம்பு ளாய்ப்ப றந்து நின்ற சிற்பரமு நீயலோ?
எம்பி ரானு மெவ்வுயிர்க்கு மேக போக மாதலால்
எம்பி ரானு நானுமா யிருந்த தேசி வாயமே. 285

ஈரொளிய திங்க ளேயி யங்கி நின்ற தற்பரம்;
ஏரொளிய திங்க ளேயஃ தியாவ ரும்ம றிகிலீர்;
காரொளிய படல முங்க டந்து போன தற்பரம்
பேரொளிப் பெரும்ப தம்மு மேக நாத பாதமே. 286

கொள்ளொ ணாது மெல்லொ ணாது கோதறக் குதட்டடா!
தள்ளொணா தணுகொணாத தாக லான்ம னத்துளே
தெள்ளொணாது தெளியொ ணாது சிற்ப ரத்தி னுட்பயன்
விள்ளொணாத பொருளை நான்வி ளம்பு மாற தெங்ஙனே?

வாக்கி னால்ம னத்தினால் மதித்த கார ணத்தினால்,
நோக்கொ ணாத நோக்கையுன்னி நோக்கை யாவர்நோக்குவார்?
நோக்கொணாத நோக்கு வந்து நோக்க நோக்க நோக்கிடில்
நோக்கொணாத நோக்கு வந்து நோக்கை யெங்க ணோக்குமே?

உள்ளி னும்பு றம்பினு முலக மெங்க ணும்பரந்
தெள்ளி லெண்ணெய் போலநின் றியங்கு கின்ற எம்பிரான்
மெள்ள வந்தெ னுட்புகுந்து மெய்த்த வம்பு ரிந்தபின்
வள்ள லென்ன வள்ள லுக்கு வண்ண மென்ன வண்ணமே?

வேத மொன்று கண்டிலேன் வெம்பி றப்பி லாமையால்
போத நின்ற வடிவதாய்ப் புவன மெங்கு மாயினாய்
சோதி யுள்ளொ ளியுமாய்த் துரிய மோட தீதமாய்
ஆதி மூல மாதியா யமைந்த தேசி வாயமே. 290

சாணி ரும்ம டங்கினுற் சரிந்த கொண்டை தன்னுளே
பேணி யப்ப திக்குளே பிறந்தி றந்து ழலுவீர் !
தோணி யான ஐவரைத் துறந்த றுக்க வல்லிரேல்
காணி கண்டு கோடியாக் கலந்த தேசி வாயமே. 291

அஞ்சு கோடி மந்திரம் அஞ்சு ளேய டங்கினுல்
நெஞ்சு கூர வும்முளே நினைப்ப தோரெ ழுத்துளே
அஞ்சு நாலு மூன்ற தாகி யும்முளே யடங்கினுல்
அஞ்சு மோரெ ழுத்ததா யமைந்த தேசி வாயமே. 292

அக்க ரந்த அக்கரத்தி லுட்க ரந்த அக்கரம்
சக்கரத்துச் சிவ்வை யுண்டு சம்பு ளத்தி ருந்ததும்
எட்க ரந்த எண்ணெய் போல எவ்வெழுத்து மெம்பிரான்
உட்க ரந்து நின்றநேர்மை யாவர் காண வல்லரே ? 293

ஆக மத்தி னுட்பொரு ளகண்ட மூல மாதலால்
தாக போக மின்றியே தரித்த தற்ப ரமுநீ
ஏக பாதம் வைத்தனை யுணர்ந்து மஞ்செ ழுத்துளே
ஏக போக மாகியே யிருந்த தேசி வாயமே. 294

மூல வாசல் மீது ளேயோர் முச்சதுர மாகியே
நாலு வாச லெண்விரல் நடுவு தித்த மந்திரம்
கோல மொன்று மஞ்சு மாகு மிங்கலந்து நின்றநீ
வேறு வேறு கண்டிலேன் விளைந்த தேசி வாயமே. 295

சுக்கி லத்த டியுளே சுழித்த தோரெ ழுத்துளே
அக்க ரத்த டியுளே யமர்ந்த வாதி சோதிநீ
உக்க ரத்த டியுளே யுணர்ந்த அஞ்செ ழுத்துளே
அக்க ரம்ம தாகியே அமர்ந்த தேசி வாயமே. 296

குண்ட லத்து ளேயுளே குறித்த கத்து நாயகன்
கண்ட வந்த மண்டலங் கருத்தி ழித்த கூத்தனை
விண்ட லர்ந்த சந்திரன் விளங்கு கின்ற மெய்ப்பொருள்
கண்டு கொண்ட மண்டலஞ் சிவாய மல்ல தில்லையே. 297

சுற்று மைந்து கூடமொன்று சொல்லி றந்த தோர்வெளி
சத்தியுஞ் சிவனு மாக நின்ற தன்மை யோர்கிலீர் ;
சத்தி யாவ தும்முடல் ; தயங்கு சீவ னுட்சிவம் ;
பித்தர் காள்அ றிந்திலீர் பிரானி ருந்த கோலமே. 298

மூல மென்ற மந்திர முளைத்த அஞ்செ ழுத்துளே
நாலு வேத நாவுளே நவின்ற ஞான மெய்யுளே
ஆல முண்ட கண்ட னும்ம ரியயனு மாதலால்
ஓல மென்ற மந்திரஞ் சிவாய மல்ல தில்லையே. 299

தத்து வங்க ளென்றுநீர் தலைக்க டிந்து போவிர்காள் !
தத்துவஞ் சிவம தாகில் தற்ப ரம்மு நீரல்லோ ?
முத்தி சீவ னுதமே மூல பாதம் வைத்தபின்
அத்த னுரு மும்முளே யறிந்து ணர்ந்து கொள்ளுமே. 300

மூன்று பத்து மூன்றையு மூன்று சொன்ன மூலனே
தோன்று சேர ஞானிகாள் ! துய்ய பாத மென்றலை
ஏன்று வைத்த வைத்தபின் இயம்பு மஞ்செ ழுத்தையும்
தோன்ற வோத வல்லிரேல் துய்ய சோதி காணுமே. 301

உம்பர் வான கத்தினும் உலக பார மேழினும்
நம்பர் நாடு தன்னிலும் நாவ லென்ற தீவினும்
செம்பொன்மாட மல்கு தில்லை யம்ப லத்து ளாடுவான்
எம்பிரா னலாது தெய்வ மில்லை யில்லை யில்லையே. 302

பூவி லாய ஐந்துமாய்ப் புனலில் நின்ற நான்குமாய்த்
தீயி லாய மூன்றுமாய்ச் சிறந்த காலி ரண்டுமாய்
வேயி லாய தொன்றுமாய் வேறு வேறு தன்மையாய்
நீய லாமல் நின்றநேர்மை யாவர் காண வல்லரே ? 303

அந்த ரத்தி லொன்றுமா யசைவு காலி ரண்டுமாய்ச்
செந்தழலில் மூன்று மாகிச் சிறந்த அப்பு நான்குமாய்
ஐந்து பாரி லைந்துமா யமர்ந்தி ருந்த நாதனைச்
சிந்தையிற் றெளிந்த மாயை யாவர் காண வல்லரே ? 304

மனவி கார மற்றுநீர் மதித்தி ருக்க வல்லிரேல்
நினைவி லாத மணிவிளக்கு நித்த மாகி நின்றிடும் ;
அனைவ ரோதும் வேதமு மகம்பி தற்ற வேணுமேற்
கனவு கண்ட துண்மைநீர் தெளிந்த தேசி வாயமே. 305

இட்ட குண்ட மேதடா ! இருக்கு வேத மேதடா !
சுட்ட மட்க லத்திலே சுற்று நூல தேதடா !
முட்டி நின்ற தூணிலே முளைத்தெ ழுந்த சோதியைப்
பற்றி நின்ற தேதடா ! பட்ட நாத பட்டனே ! 306

நீரிலே முளைத்தெ ழுந்த தாம ரையி னேரிலை
நீரினோடு கூடி நின்றும் நீரி லாத வாறுபோல்
பாரிலே முளைத்தெ ழுந்த பண்டி தப்ப ராபரம்
பாரி னோடு கூடிநின்ற பண்பு கண்டி ருப்பிரே. 307

உறங்கி லென்வி ழிக்கிலென் உணர்வு சென்றொ டுங்கிலென்?
சிறந்த வைம்பு லன்களுந் திசைத்தி சைக ளொன்றிலென் ?
புறம்பு முள்ளு மெங்கணும் பொதிந்தி ருந்த தேகமாய்
நிறைந்தி ருந்த ஞானிகாள் ! நினைப்ப தேது மில்லையே. 308

ஓது வார்க ளோதுகின்ற வேறொ ழுத்து மொன்றதே ;
வேத மென்ற தேகமாய் விளம்பு கின்ற தன்றிது ;
நாத மொன்று நான்முகன் மாலு நாலு மொன்றதே ;
ஏது மன்றி நின்றதொன்றை யானு ணர்ந்த நேர்மையே. 309

பொங்கியே தரித்த அச்சுப் புண்ட ரீக வெளியிலே
தங்கியே தரித்த போது தாது மாது ளையதாம் ;
அங்கியுட் சரித்த போது வடிவு கள்ளொ ளியுமாய்க்
கொம்புமேல் வடிவு கொண்டு குருவி ருந்த கோலமே. 310

மண்ணு ளோரும் விண்ணு ளோரும் வந்தவாற தெங்கெனில்
கண்ணி னோடு சோதிபோற் கலந்த நாத விந்துவும்
அண்ண லோடு சத்தியு மஞ்சு பஞ்ச பூதமும்
பண்ணி னோடு கொத்தழிப்ப பாரொ டேழு மின்றுமே. 311

ஒடுக்கு கின்ற சோதியு முந்தி நின்ற வொருவனும்
நடுத்த லத்தி லொருவனும் நடந்து காலி லேறியே
விடுத்து நின்ற இருவரோடு மெய்யி னொடு பொய்யுமாய்
அடுத்து நின்ற றிபினொ அனாதி நின்ற வாதியே. 312

உதித்த மந்தி ரத்தினு மொடுங்கு மக்க ரத்தினும்
மதித்த மண்ட லத்தினு மறைந்து நின்ற சோதிநீ;
மதித்த மண்ட லத்துளே மரித்து நீயி ருந்தபின்
சிரித்த மண்ட லத்துளே சிறந்த தேசி வாயமே. 313

திருத்தி வைத்த சற்கு ருவைச் சீர்பெற வணங்கிலீர்
குருக்கொ டுக்கும் பித்தரே! கொண்டு நீந்த வல்லிரோ?
குருக்கொ டுக்கும் பித்தருங் குருக்கொள் வந்த சீடனும்
பருத்தி பட்ட பாடுதான் பன்னி ரண்டும் பட்டதே. 314

விழித்த கண்து திக்கவும் விந்து நாத வோசையும்
மேருவுங் கடந்த வண்ட கோள முங்க டந்துபோய்
எழுத்தெலா மறிந்து விட்ட இந்த்ர ஞால வெளியிலே
யானு நீயு மேகலந்த தென்ன தொன்மை யீசனே! 315

ஓம்ந மோவென் றும்முளே உபாதை யென்ற றிந்தபின்
பானு டற்க ருத்துளே பாவை யென்ற றிந்தபின்
நானு நீயு முண்ட டாந லங்குலம துண்டடா!
ஊனு மூனு மொன்றுமே யுணர்ந்தி டாயு னக்குளே. 316

ஐம்புலனை வென்ற வர்க்கிங் கன்ன தான மீவதால்
நன்பு லன்க ளாகிநின்ற நாத ருக்க தேறுமோ?
ஐம்பு லன்கள் வென்றிடா தவத்த மேயு மூன்றிடும்
வம்ப ருக்கு மீவதுங் கொடுப்ப தும்ம வத்தமே. 317

ஆணியான ஐம்பு லன்க ளவையு மொக்கு ளொக்குமோ?
யோனியிற் பிறந்தி ருந்த துன்ப மிக்கு மொக்குமோ?
வீணர் காள்!பி தற்றுவீர் மெய்ம்மை யேயு ணர்திரேல்
ஊனு றக்க போகமு முமக்கெ னக்கு மொக்குமே. 318

ஓடு கின்ற ஐம்புலன் ஒடுங்க அஞ்செ ழுத்துளே
நாடு கின்ற நான்மறை நவிலு கின்ற ஞானிகாள் !
கூடு கின்ற கண்டித குணங்கள் மூன்றெ ழுத்துளே
ஆடு கின்ற பாவையா யமைந்த தேசி வாயமே. 319

புவனசக்க ரத்துளெ பூதநாத வெளியிலே
பொங்குதீப அங்கியுள் பொதிந்தெழுந்த வாயுவைத்
தவனசோம ரிருவருந் தாமியங்கும் வாசலில்
தண்டுமாறி யேறிநின்ற சரசமான வெளியிலே,
மவுனஅஞ்செ ழுத்திலே வாசியேறி மெள்ளவே
வானளாய் நிறைந்தசோதி மண்டலம்பு குந்தபின்
அவனுநானு மெயகலந் தனுபவித்த அளவிலே
அவனுமுண்டு நானுமில்லை யாருமில்லை யானதே. 320

வாளுறைபில் வாள டக்கம் வாயுறையில் வாய்வ டக்கம்
ஆளுறையில் ஆள டக்கம் அருமை என்ன வித்தைகாண் !
தாளு றையில் தாளடக்கம் தன்மை யான தன்மையும்
நாளு றையில் நாளடக்கம் நானு நீயுங் கண்டதே. 321

வழுத்தி டான ழித்திடான் மாய ரூப மாகிடான்
கழன்றி டான்வெ குண்டிடான் கால கால காலமும்
துவண்டி டான சைநதிடான் தூய தூப மாகிடான்
சுவன்றி டானு ரைத்திடான் சூட்ச சூட்ச சூட்சமே. 322

ஆகி கூவென் றேயுரைத்த அட்ச ரத்தி னனந்தம்
யோகியோகி யென்பர் கோடி யுற்ற றிந்து கண்டிடார் ;
பூகமாய் மனக்கு ரங்கு பொங்கு மங்கு மிங்குமாய்
ஏக மேக மாகவே யிருப்பர் கோடி கோடியே. 323

கோடி கோடி கோடி கோடி குவலயத்தோ ராதியை
நாடி நாடி நாடி நாடி நாளகன்று வீணதாய்த்
தேடித் தேடித் தேடித் தேடித் தேகமுங் கசங்கியே
கூடிக் கூடிக் கூடிக் கூடி நிற்பர்கோடி கோடியே 324

கருத்தி லான்வெ ளுத்திலான் பரனி ருந்த காரணம்
ஒருத்தி லானெ ளித்திலா னென்றி ரண்டு மாகிலான்
ஒருத்தி லான்ம ரித்திலா னெழிந்தி டான ழிந்திடான்
கருத்திற் கீயுங் கூவுமுற்றோன் கண்ட றிந்த வாதியே. 325

வாதி வாதி வாதி வாதி வண்டலை யறிந்திடான்
ஊதி யூதி யூதி யூதி யொளிமழுங்கி யுளறுவான்
வீதி வீதி வீதி வீதி விடையெருப் பொறுக்குவோன்
சாதி சாதி சாதி சாதி சாகரத்தைக் கண்டிடான். 326

ஆண்மை யாண்மை யாண்மை யாண்மை ஆண்மைகூற மசடரே!
காண்மை யான வாதி ரூபங் காலகால காலமும்
பான்மை யாகி மோன மான பாசமாகி நின்றிடும்
நாண்மை யான நரலை வாயில் நங்குமிங்கு மங்குமே. 327

மிங்கு வென்ற அட்சரத்தின் மீட்டு வாகிக் கூவுடன்
துங்க மாகச் சோமனோடு சோமன் மாறி நின்றிடும்;
அங்க மாமு னைச்சுழியி லாகுமேக வாகையாய்க்
கங்கு லற்றுக் கியான முற்றுக் காணுவாய் சுடரொளி. 328

சுடரெ ழும்பும் சூட்சமும் சுழுமுனையின் சூட்சமும்
அடரெ ழும்பி யேகமாக அமர்ந்து நின்ற சூட்சமுந்
திடர தான சூட்சமுந் திரிபின் வாலை சூட்சமுங்
கடலெ ழும்பு சூட்சமுங் கண்ட றிந்தோன் ஞானியே. 329

ஞானி ஞானி என்றுரைத்த நாய்கள் கோடி கோடியே;
வானி லாத மழைநாளென்ற வாதி கோடி கோடியே!
தானி லான சாகரத்தின் தன்மை காணு மூடர்கள்
மூனி லாமற் கோடிகோடி முன்ன றிந்த தென்பரே. 330

சூட்ச மான கொப்பிலே சுழுமு னைச்சு டரிலே
வீச்ச மான வீயிலே விபுலை தங்கும் வாயிலே
கூச்ச மான கொம்பிலே குடியி ருந்த கோவிலே
தீட்சை யான தீவிலே சிறந்த தேசி வாயமே. 331

பொங்கி நின்ற மோனமும் பொதிந்து நின்ற மோனமுந்
தங்கி நின்ற மோனமுந் தயங்கி நின்ற மோனமுங்
கங்கை யான மோனமுங் கதித்து நின்ற மோனமுந்
திங்க ளான மோனமுஞ் சிவனி ருந்த மோனமே. 332

மோன மான வீதியில் முனைச்சு ழியில் வாலையில்
பான மான வீதியில் பசைந்த செஞ்சு டரினில்
ஞான மான மூலையில் நாலை தங்கும் வாயிலில்
ஓன மான செஞ்சுட ருதித்த தேசி வாயமே. 333

உதித்தெ ழுந்த வாலையு முயங்கி நின்ற வாலையும்
கதித்தெ ழுந்த வாலையுங் காலை யான வாலையும்
மதித்தெ ழுந்த வாலையு மறைந்து நின்ற ஞானமுங்
கொதித்தெ ழுந்து கும்பலாகிக் கூவும் கீயு மானதே. 334

கூவுங்கீயு மோன மாகிக் கொள்கை யான கொள்கையை
மூவிலே யுதித்தெ ழுந்த முச்சு டர்வி ரிவிலே
பூவிலே நறைகள் போலப் பொருந்தி நின்ற பூரணம்
ஆவி யாவி யாவி யாவி யன்பருள்ள முற்றதே. 335

ஆண்மை கூறு மாந்தரே ! அருக்க னேடும் வீதியைக்
காண்மை யாகக் காண்பிரே கசட றுக்க வல்லிரே
தூண்மை யான வாதி சூட்சஞ் சோபமாகு மாகுமே.
நாண்மை யான வாயிலில் நடித்து நின்ற நாதமே. 336

நாத மான வாயிலில் நடித்து நின்ற சாயலில்
வேத மான வீதியில் விரிந்த முச்சு டரிலே
கீத மான கீயிலே கிளர்ந்து நின்ற கூவிலே
பூத மான வாயி லைப்பு கலறிவ னாதியே. 337

ஆவி யாவி யாவி யாவி ஐந்துகொம்பி னாவியே
மேவி மேவி மேவி மேவி மேதினியின் மானிடர்
வாவி வாவி வாவி வாவி வண்டர்க ளறிந்திடார்
பாவி பாவி பாவி பாவி படியிலுற்ற மாந்தரே. 338

வித்திலே முளைத்த சோதி வில்வ லையின் மத்தியில்
முத்திலே யொளிவ தாகி மோன மான தீபமே
நத்தி லேதி ரட்சி போன்ற நாதனை யறிந்திடார்
வத்திலே கிடந்து மூன்ற வாலை யான சூட்சமே. 339

மாலை யோடு காலையும் வடிந்து பொங்கு மோனமே
மாலையோடு காலை யான வாற றிந்த மாந்தரே!
மூலை யான கோணமின் முளைத்தெ ழுந்த செஞ்சுடர்
தாலை யோடு பானகன்று தங்கி நின்ற மோனமே. 340

மோன மான வீதியில் முடுகி நின்ற நாதமே
ஈன மின்றி வேகமான வேக மென்ன வேகமே
கான மான மூலையிற் கனிந்தி ருந்த வாலையில்
ஞான மான செஞ்சுடர் நடந்த தேசி வாயமே. 341

உச்சி மத்தி வீதியி லொழிந்தி ருந்த சாதியிற்
பச்சி யுற்ற சோமனும் பரந்து நின்று லாவவே
செச்சி யான தீபமே தியான மான மோனமே
கச்சி யான மோனமே கடந்த தேசி வாயவே. 342

அஞ்சு கொம்பி னின்ற நாதம் ஆலைபோ லெழும்பியே
பிஞ்சி னோடு பூமலர்ந்து பெற்றி யுற்ற சுத்தமே
செஞ்சுட ருதித்த போது தேசி கன்சு மூன்றுடன்
பஞ்ச பூத மானதே பரந்து நின்ற மோனமே. 343

சடுதி யான கொம்பிலே தத்து வத்தின் ஹீதிலே
அடுதி யான ஆவிலே அரனி ருந்த ஹூவிலே
இடுதி யென்ற சோலையி லிருந்த முச்சு டரிலே
நடுதி யென்று நாத மோடி நன்குற அமைந்ததே. 344

அமையு மாவின் மோனமும் அரனி ருந்த மோனமும்
சமையும் பூத மோனமுந் தரித்தி ருந்த மோனமும்
இமையுங் கொண்ட வேகமும் இலங்கு முச்சி மோனமும்
தமைய றிந்த மாந்தரே சடத்தை யுற்று நோக்கிலார். 345

பாய்ச்ச லூர்வ ழியிலே பரனி ருந்த சுழியிலே
காய்ச்ச கொம்பி னுனியிலே கனியி ருந்த மலையிலே
வீச்ச மான தேதடா விரிவு தங்கு மிங்குமே
மூச்சி னோடு மூச்சை வாங்கு முட்டிநின்ற சோதியே. 346

சோதி சோதி யென்று நாடித் தோற்பவர் சிலவரே ;
ஆதி ஆதி யென்று நாடு மாடவர் சிலவரே ;
வாதி வாதி யென்று சொல்லும் வம்பருஞ் சிலவரே ;
நீதி நீதி நீதி நீதி நின்றிடு முழுச்சுடர். 347

சுடர தாகி யெழும்பி யங்குத் தூபமான காலமே
இடரதாய்ப் புவியும் விண்ணு மேக மாய மைக்கமுன்
படரதாக நின்ற வாதி பஞ்ச பூத மாகியே
அடர தாக அண்ட மெங்கு மாண்மையாகி நின்றதே. 348

நின்றி ருந்த சோதியை நிலத்தி லுற்ற மானிடர்
கண்ட றிந்து கண்கு ளிர்ந்து காதலுற் றுலாவுவோர்
கண்ட முற்ற மேன்முனையின் காட்சி தன்னைக் காணுவார்
நன்றி யற்று நரலை பொங்கி நாதமும் மகிழ்ந்திடும். 349

வயங்கு மோனச் செஞ்சுடர் வடிந்த சோதி நாதமும்
கயங்கள் போலக் கதறியே கருவூ ரற்ற வெளியிலே
பயங்கொ டின்றி யின்றியே படர்ந்து நின்ற பான்மையே
நயங்கள் கோவென் றேநடுங்கி நங்கை யான தீபமே. 350

தீப வுச்சி முனையிலே திவாக ரத்தின் சுழியிலே
கோப மாறு கூவிலே கொதித்து நின்ற தீயிலே
தாப மான மூலையிற் சமைந்து நின்ற சூட்சமுஞ்
சாப மான மோட்சமுந் தடித்து நின்றி லங்குமே. 351

தேசி கன்சு ழன்றதே திரிமு னையின் வாலையில்
வேச மோடு வாலையில் வியனி ருந்த மூலையில்
நேச சந்தி ரோதயம் நிறைந்தி ருந்த வாயிலில்
வீசி வீசி நின்றதே விரிந்து நின்ற மோனமே. 352

உட்கமல மோன மீதி லுயங்கி நின்ற நந்தியை
விக்கலோடு கீயு மாகி வில்வ ளேவின் மத்தியில்
முட்பொ திந்த தென்னவே முடுகி நின்ற செஞ்சுடர்
கட்கு வைகள் போலவுங் கடிந்து நின்ற காட்சியே. 353

உந்தி யிற்சு ழிவழியி லுச்சி யுற்ற மத்தியிற்
சந்தி ரன்ற னொளிக்கிரணந் தாண்டி நின்ற செஞ்சுடர்
பந்தமாக வில்வ ளேவிற் பஞ்ச பூத விஞ்சையாங்
கிந்து போலக் கீயில்நின்று கீச்சு முச்சு வென்றதே. 354

செச்சை யென்ற மூச்சி னோடு சிகாரமும் வகாரமும்
பச்சை யாகி நின்றதே பரவெ ளியின் பான்மையே
இச்சை யான ஹவிலே யிருந்தெ ழுந்த ஹீயிலே
உச்சி யான கோணத்தி லுதித்த தேசி வாயமே. 355

ஆறு மூலைக் கோணத்தி லமைந்த வொன்ப தாத்திலே
நாறு மென்று நங்கை யான நாவியுந் தெரிந்திடக்
கூறு மென்று ஐவரங்குக் கொண்டு நின்ற மோனமே
பாறு கொண்டு நின்றது பரந்த தேசி வாயமே. 356

பறந்ததே கறந்த போது பாய்ச்ச லூரின் வழியிலே
பிறந்ததே பிராண னன்றிப் பெண்ணு மாணு மல்லவே
துறந்த தோசி றந்ததோ தூய துங்க மானதோ?
இறந்த போதி லன்றதே இலங்கி டுஞ்சி வாயமே. 357

அருளி ருந்த வெளியிலே அருக்க னின்ற இருளிலே
பொருளி ருந்த சுழியிலே புரண்டெ ழுந்த வழியிலே
தெருளி ருந்த கலையிலே தியங்கி நின்ற வலையிலே
குருவி ருந்த வழியினின்று ஹவும் ஹீயு மானதே. 358

ஆன தோரெ ழுத்திலே அமைந்து நின்ற ஆதியே
கான மோடு தால மீதிற் கண்டறிவ தில்லையே
தானுந் தானு மானதே சமைந்த மாலை காலையில்
ஏன லோடு மாறுபோ லிருந்த தேசி வாயமே. 359

ஆறு கொண்ட வாரியு மைந்து நின்ற தெய்வமும்
தூறு கொண்ட மாரியுந் துலங்கி நின்ற தூபமும்
வீறு கொண்ட மோனமும் விளங்கு முட்க மலமும்
மாறு கொண்ட ஹுவிலே மடிந்த தேசி வாயமே. 360

வாயில் கண்ட கோணமில் வயங்கு மைவர் வைகியே
சாயல் கண்டு சார்ந்ததுந் தலைமன்னாயு றைந்ததுங்
காய வண்டு கண்டதுங் கருவூ ரங்குச் சென்றதும்
பாயு மென்று சென்றதும் பறந்த தேசி வாயமே. 361

பறந்ததே துறந்த போது பாய்ச்ச லூரின் வழியிலே
மறந்ததே கவ்வு முற்ற வாணர் கையின் மேவியே
பிறந்ததே யிறந்த போதிற் பீடி டாமற் கீயிலே
சிறந்து நின்ற மோனமே தெளிந்த தேசி வாயமே. 362

வடிவுபற்ற வாசனத் திருத்திமூல வனலையே
மாருதத்தி னாலெழுப்பி வாசலைந்து நாலையும்
முடிவுமுத்தி ரைப்படுத்தி மூலவீணா தண்டினால்
முளரியால யங்கடந்து மூலநாடி யூடுபோய்
அடிதுவக்கி முடியளவு மாறுமா நிலங்கடந்
தப்புறத்தில் வெளிகடந்த ஆதியெங்கள் சோதியை
உடுபதிக்க ணமுதருந்தி யுண்மைஞான உவகையுள்
உச்சிபட்டி றங்குகின்ற யோகிநல்ல யோகியே. 363

மந்தி ரங்க ளுண்டுநீர் மயங்கு கின்ற மானிடர்
மந்தி ரங்க ளாவதும் மறத்தி லூற லன்றுகாண்
மந்தி ரங்க ளாவது மதித்தெ ழுந்த வாயுவை
மந்தி ரத்தை யுண்டவர்க்கு மரண மேது மில்லையே. 364

மந்தி ரங்கள் கற்றுநீர் மயங்கு கின்ற மாந்தரே!
மந்தி ரங்கள் கற்றுநீர் மரித்த போது சொல்விரோ?
மந்தி ரங்க ளும்முளே மதித்த நீறு மும்முளே;
மந்தி ரங்க ளாவது மனத்தி னைந்தெ ழுத்துமே. 365

ஓரெ ழுத்தி லிங்கமா யோது மட்ச ரத்துளே
ஓரெ ழுத்தி யங்கு கின்ற வுண்மையை யறிகிலீர் ;
மூவெ ழுத்து மூவராய் முளைத்தெ ழுந்த சோதியை
நாவெ ழுத்து நாவுளே நவின்ற தேசி வாயமே. 366

முத்தி சித்தி தொநதமா முயங்கு கின்ற மூர்த்தியை
மற்று தித்த ஐம்பு லன்க ளாகு மத்தி மப்புலன்
அத்தர் நித்தர் காள கண்ட ரன்பினு லனுதினம்
உச்ச ரித்து ளத்திலே யறிந்து ணர்ந்து கொண்மினே. 367

மூன்றி ரண்டு மைந்துமாய் முயன்றெ ழுந்த தேவராய்
மூன்றி ரண்டு மைந்ததாய் முயன்ற தேயு லகெலாம்
ஈன்ற தாயு மப்பனு மியங்கு கின்ற நாதமாய்த்
தோன்று மோரெ ழுத்தினோடு சொல்ல ஒன்று மில்லையே

வெளியுருக்கி யஞ்செ ழுத்தும் விந்து நாத சந்தமுந்
தனியுருக்கி நெய்க லந்து சகல சத்தி யானதும்
வெளியி லும்மவ் வினையிலு மிருவ ரைய றிந்தபின்
தெளிக லந்த தன்மையால் தெளிந்த தேசி வாயமே. 369

முப்பு ரத்தி லப்புறம் முக்க ணன்வி ளைவிலே
சிற்ப ரத்து ளுற்பனஞ் சிவாய மஞ்செ ழுத்துமாந்
தற்பர முதித்து நின்று தாணு வெங்கு மானபின்
இப்புற மொடுங்கு மோடி யெங்கும் லிங்க மானதே. 370

ஆடி நின்ற சீவனோ ரஞ்சு பஞ்ச பூதமோ ?
கூடி நின்ற சோதியோ ? குலாவி நின்ற மூலமோ ?
நாடு கண்டு நின்றதோ ? நாவு கற்ற கல்வியோ ?
வீடு கண்டு விண்டிடின் வெட்ட வெளியு மானதே. 371

உருத்தரித்த போது சீவன் ஓங்க நின்ற வுண்மையுந்
திருத்த முள்ள தொன்றிலுஞ் சிவாய மஞ்செ ழுத்துமாம்
இருத்துநின் றுறுத்த டங்கி யேக போக மானபின்
கருத்தி னின்று தித்ததே கபால மேந்து நாதனே. 372

கருத்தரித் துதித்த போது கமல பீட மானதுங்
கருத்தரித் துதித்த போது கார ணங்க ளானதுங்
கருத்தரித் துதித்த போது காணி ரண்டு கண்களாய்க்
கருத்தி னின்று தித்ததே கபால மேந்து நாதனே. 373

ஆன வன்னி மூன்று கோண மாறிரண்டு எட்டிலே
ஆன சிவ னஞ்செழுத் தகார மிட்ட லர்ந்ததும்
ஆன சோதி யுண்மையும் அனாதி யான வுண்மையும்
ஆன தான தானதா யவல மாய்ம றைந்திடும். 374

ஈன்றெ ழுந்த வெம்பிரான் திருவ ரங்க வெளியிலே
நான்ற பாம்பின் வாயினால் நாலு திக்கு மாயினான்;
மூன்று மூன்று வளையமாய் முப்பு ரங்க டந்தபின்
ஈன்றெ ழுந்த அவ்வினோசை யெங்கு மாகி நின்றதே. 375

எங்கு மெங்கு மொன்றலோவீ ரேழு லோக மொன்றலோ?
அங்கு மிங்கு மொன்றலோ அனாதி யான தொன்றலோ?
தங்கு தாப ரங்களுந் தரித்து வார தொன்றலோ?
உங்க ளெங்கள் பங்கினி லுதித்த தேசி வாயமே. 376

அம்ப ரத்தி லாடுஞ்சோதி யான வன்னி மூலமாம்
அம்ப ரம்முந் தம்பரமும் அகோர மிட்ட லர்ந்ததும்
அம்ப ரக்கு ழியிலே அங்க மிட்டு ருக்கிட
அம்ப ரத்தி லாதியோ டமர்ந்த தேசி வாயமே. 377

வாடி லாத பூம லர்ந்து வண்டுரிசை காவிலே
ஓடி நின்று ருவெடுத் துகார மாய லர்ந்ததும்
ஆடி யாடி யங்கமு மகப்ப டக்க டந்தபின்
கூடி நின்று லாவுமே குருவி ருந்த கோலமே 378

விட்டடி விரைத்த தோவவ் வேரு ருக்கி நின்றதோ?
எட்டி நின்ற சிவனுமீ ரேழு லோகங் கண்டதோ?
தட்டுருவ மாகி நின்ற சதாசி வத்தொ ளியதே
வட்டவீ டறிந்த பேர்கள் வான தேவ ராவரே. 379

வானவர் நிறைந்த சோதி மாணி டக்க ருவிலே
வான தேவ ரத்தனைக்குள் வந்த டைவர் வானவர்
வான கம்மு மண்ண கம்மும் வட்டவீ டறிந்தபின்
வானெலா நிறைந்து மன்னு மாணிக் கங்க ளானவே. 380

பன்னி ரண்டு கால்நிறுத்திப் பஞ்ச வண்ண முற்றிடின்
மன்னியே வெளிக்கு ணின்று வேறி டத்த மர்ந்ததுஞ்
சென்னி யாந்த லத்திலே சீவ னின்றி யங்கிடும்
பன்னி யுன்னி யாந்த வர்ப ரப்பிரம மானதே. 381

உச்சி கண்டு கண்கள் கட்டி யுண்மை கண்ட தெவ்விடம்?
மச்சு மாளி கைக்குளே மானி டங்க லப்பிரேல்
எச்சி லான வாசலு மேக போக மாய்விடும்
பச்சை மாலு மீசனும் பரந்த தேசி வாயமே. 382

வாயி லிட்டு நல்லுரிசை யட்ச ரத்தொ ளியிலே
கோயி லிட்டு வாவி யும்மங் கொம்பிலே யுலர்ந்ததும்
ஆயி லிட்ட காயமு மனுதி யிட்ட சீவனும்
வாயு விட்ட வன்னியும் வளர்ந்த தேசி வாயமே. 383

அட்ச ரத்தை யுச்சரித் தனுதி யங்கி மூலமாய்
அட்ச ரத்தை யுந்தி றந்த கோரமிட் டலர்ந்ததும்
அட்ச ரத்தி லுட்கர மகப்ப டக்க டந்தபின்
அட்ச ரத்தி லாதியோ டமர்ந்த தேசி வாயமே. 384

கோயி லுங்கு ளங்களுங் குளியி னிற்கு ருக்களாய்
மாயி லும்ம டியிலு மனத்தி லேம யங்குறீர்;
ஆயனை யரனை யும்அ றிந்து ணர்ந்து கொள்விரேல்
தாயினுந் தகப்ப னோடு தான மர்ந்த தொக்குமே. 385

கோயி லெங்கும் ஒன்றலோ? குளங்க ணீர்கள் ஒன்றலோ?
தேயு வாயு ஒன்றலோ? சிவனு மங்கே ஒன்றலோ?
ஆய சீவ னெங்குமா யமர்ந்து வார தொன்றலோ?
காய பீத றிந்தபேர்கள் காட்சி யாவர் காணுமே. 386

காது கண்கள் மூக்குவாய் கலந்து வார தொன்றலோ ?
சோதி யிட்டெ டுத்ததுஞ் சுகங்க ளஞ்சு மொன்றலோ ?
ஓதி வைத்த சாத்திர முதித்து வார தொன்றலோ ?
நாதவீ டறிந்த பேர்க ளுத ராவர் காணுமே. 387

அவ்வு தித்த அட்ச ரத்தி னுட்கலந்த அட்சரம்
சவ்வு தித்த மந்திரஞ் சம்ப வத்தி ருந்ததால்
மவ்வு தித்த மாய்கையால் மயங்கு கின்ற மாந்தர்காள் !
உவ்வு தித்த தவ்வுமா யுருத்த ரித்த வுண்மையே. 388

அகார மென்னு மக்க ரத்தி லக்கர மொழிந்ததோ ?
அகார மென்னு மக்கரத்தி லவ்வு வந்து தித்ததோ ?
உகார மும்ம காரமு மொன்றி நன்று நின்றவோ ?
விகார மற்ற ஞானிகாள் ! விரித்து ரைக்க வேணுமே. 389

சத்தி யாவ துன்னுடல் ; தயங்கு சீவ னுட்சிவம் ;
பித்தர் காளி தற்குமேல் பிதற்று கின்ற தில்லையே
சுத்தி யைந்து கூடமொன்று சொல்லி றந்த தோர்வெளி
சத்தி சிவமு மாகிநின்று தண்மை யாவ துண்மையே. 390

சுக்கி லத்து ளையிலே சுரோணி தக்க ருவுளே
முச்சதுர வாசல் தன்னில் முளைத்தெ ழுந்த மோட் டினில்
மெய்ச்சதுர மெய்யு ளேவி ளங்கு ஞான தீபமாய்
உச்ச ரிக்கு மந்திரம் ஓம்ந மச்சி வாயமே. 391

அக்கர மனாதி யல்ல ; ஆத்து மம்ம னாதியல்ல ;
புக்கி ருந்த பூதமும் புலன்க ளும்அ னாதியல்ல ;
தக்க மிக்க நூல்களுஞ் சாத்தி ரம்அ னாதியல்ல ;
ஒக்க நின்று டன்கலந்த உண்மை காண்அ னாதியே. 392

மென்மை யாகி நின்றதேது விட்டு நின்று தொட்டதே
துண்மை யாக நீயுரைக்க வேணு மெங்க ளுத்தமா !
பெண்மை யாகி நின்ற தொன்று விட்டுநின்று தொட்டதை
உண்மையா யுரைக்க முத்தி யுட்க லந்தி ருந்ததே. 393

அடக்கி னூல டங்குமோ அண்ட மஞ்செ ழுத்துளே?
உடக்கின லெடுத்த காய முண்மை யென்று ணர்ந்துநீ
சடக்கி லாது வேதமுந் தரிக்க வோதி லாமையால்
விடக்கு நாயு மாயவோதி வேறு வேறு பேசுமோ? 394

உண்மை யான சக்கரம் உபாய மாயி ருந்ததுந்
தண்மை யான காயமுந் தரித்த ரூப மானதும்
வெண்மை யாகி நீரியே விளைந்து நின்ற தானதும்
உண்மை யான ஞானிகாள்! விரித்து ரைக்க வேணுமே. 395

எள்ள கத்தி லெண்ணெய்போல வெங்கு மாகி யெம்பிரான்
உள்ள கத்தி லேயிருக்க ஊச லாடு மூடர்காள்!
கொள்ளை நாயின் வாலினைக் குணக்கெ டுக்க வல்லிரேல்
கள்ள லாகி நின்றசோதி காண லாகு மெய்ம்மையே. 396

வேணு மென்ற ஞானமும் விரும்பு கின்ற நூலிலே
தாணு வுண்டங் கென்கிறீர் தரிக்கி லீர்ம றக்கிலீர்
தாணு வொன்று மூலநாடி தன்னுள் நாடி யும்முளே
காணு மன்றி வேறியாவுங் கனும யக்க மொக்குமே. 397

வழக்கி லேயு ரைக்கிறீர் மனத்து ளேத விக்கிறீர்;
உழக்கி லாது நாழியான வாறு போலு மூமைகாள்!
உழக்கு நாலு நாழியான வாறு போலு மும்முளே
வழக்கி லேயு ரைக்கிறீர் மனத்து ளீசன் மன்னுமே. 398

ஆடுகின்ற எம்பி ரானை யங்கு மிங்கு நின்றுநீர்
தேடு கின்ற வீணர்காள்! தெளிவ தொன்றை ஓர்கிலீர்;
நாடி நாடி யும்முளே நவின்று நோக்க வல்லிரேல்
கூடொ ணாத தற்பரங் குவிந்து கூட லாகுமே. 399

கத்தி யைந்து கூடமொன்று சொல்லி றந்த தோர்வெளி
சத்தியுஞ் சிவமு மாகி நின்ற தன்மை யோர்கிலீர்;
சத்தி யாவ தும்முடல்; தயங்கு சீவ னுட்சிவம்;
பித்தர் காள்! அ றிந்துகொண்ம் பிரானிருந்த கோலமே

அகார மான தம்பலம் அனாதி யான தம்பலம்
உகார மான தம்பலம் உண்மை யான தம்பலம்
மகார மான தம்பலம் வடிவ மான தம்பலஞ்
சிகார மான தம்பலம் தெளிந்த தேசி வாயமே. 401

சக்கரம் பறந்த தோடிச் சக்க ரம்மேல் பலகையாய்ச்
செக்கி லாடு மெண்ணெய்போலச் சிங்கு வாயு தேயுவும்
உக்கி லேயொ ளிகலந் துகங்க ளுங்க லக்கமாய்ப்
புக்கிலே புகுந்த போது போன வாற தெங்ஙனே? 402

வளர்ந்தெ ழுந்த கொங்கைதன்னை மாய மாமென் றெண்ணிநீர்
வளங்கொள் சீவ ராமுடம்பை உண்மை யாகத் தேர்விர்காள்!
விளங்கு ஞான மேவியேநீர் மிக்கோர் சொல்லைக் கேட்பிரேல்
களங்க மற்று நெஞ்சுளே கருத்து வந்து புக்குமே. 403

நா லு வேத மோது கின்ற ஞானமொன் றறிவிரோ?
நா லு சாம மாகியே நவின்ற ஞான போதமாய்
ஆல முண்ட கண்டனும் அயனு மந்த மாலுமாயச்
சால வுன்னி நெஞ்சுளே தரித்த தேசி வாயமே. 404

சுற்ற மென் று சொல்வதுஞ் சுருதி முடிவில் வைத்திடீர்;
அத்த னித்த மாடியே அமர்ந்தி ருந்த தெவ்விடம்?
பத்தி முற்றி யன்பர்கள் பரத்தி லொன் று பாழது;
பித்த ரே! இ தைக்கருதிப் பேச லாவ தெங்ஙனே. 405

எங்ங னேவி ளக்கதுக் கேற்ற வா று ணின் றுதான்
எங்ங னேயெ ழுந்தருளி யீச னேச ரென்பரேல்
அங்ங னேயி ருந்தருளும் ஆதியான தற்பரம்;
சிங்க மண்மி யானைபோலத் திரிம லங்க ளற்றவே. 406

அற்ற வுள்ள கத்தையும் அலகி டும்மெ ழுக்கிடும்
மெத்த தீப மிட்ட திற்ப்ர வாத பூசை யேத்தியே
நற்றவம் புரிந்தும் ஏக நா தர் பா தம் நாடியே
கற்றி ருப்ப தேசரிதை கண்டு கொள்ளு மும்முளே. 407

பார்த்து நின்ம தம்பலம் ; பரம ளுடு மம்பலம் ;
கூத்து நின்ற தம்பலம் ; கோரமான தம்பலம் ;
வார்த்தை யான தம்பலம் ; வன்னி யான தம்பலம் ;
சீற்ற மான தம்பலந் தெளிந்த தேசி வாயமே. 408

சென்று சென்றி டந்தோறும் சிறந்த செம்பொ னம்பலம்
அன்று மின்று நின்றதோ ரனுதி யான தம்பலம்
என்று மென்றி ருப்பதோர் இறுதியான அம்பலம்
ஒன்றி யொன்றி கின்றது ளொழிந்த தேசி வாயமே. 409

தந்தை தாய்த மரும்நீ சகல தேவ தையும்நீ
சிந்தை நீதெ ளிவுநீ சித்தி முத்தி தானும்நீ
விந்து நீவி ளைவுநீ மேல தாய வேதம்நீ
எந்தை நீஇ றைவனீ என்னை யாண்ட ஈசனே ! 410

எப்பிறப்பி லும்பிறந் திறந்த ழிந்த ஏழைகாள் !
இம்பி றப்பி லும்பிறந் தென்னை நீறு பூசுறீர் ?
அப்புடன் மலம றுத்தே ஆசை நீக்க வல்லிரேல்
செப்பு நாத வோசையிற் றெளிந்து காண லாகுமே. 411

எட்டி யோக மானதும் இயங்கு கின்ற நாதமும்
எட்டு வக்க ரத்துளே உகார மும்ம காரமும்
விட்ட லர்ந்த மந்திரம் வீணைத் தண்டி னூடுபோய்
அட்ட வக்க ரத்துளே யமர்ந்த தேசி வாயமே. 412

பிரான்பி ரான்பி ரானென்று பினத்து கின்ற மூடரே !
பிரானை விட்டு மெம்பிரான் பிரிந்த வாற தெங்ஙனே ?
பிரா னு மாய்ப்பி ரா னுமாய்ப் பேருலகந் தா னுமாய்ப்
பிரானிலே முளைத்தெ ழுந்த பித்தர் காணு மும்முடல். 413

ஆதியில்லை அந்த மில்லை ஆன நாலு வேதமில்லை ;
சோதி யில்லை சொல்லுமில்லை சொல்லி றந்த தூவெளி ;
நீதி யில்லை நேச மில்லை நிச்சயப் படாததும்
ஆதி கண்டு கொண்டபின் னஞ்செ ழுத்து மில்லையே. 414

அம்மை யப்ப னப்பனீ ரமர்ந்த போத றிகிலீர்
அம்மை யப்ப ஞனநீ ராதி யான பாசமே
அம்மை யப்ப னின்னே யன்றி யாரு மில்லே யானபின்
அம்மை யப்ப னின்னே யன்றி யாரு மில்லே யில்லேயே. 415

நூறு கோடி மந்திரம் நூறு கோடி யாகமம்
நூறு கோடி நாளி ருந்தூ டாடினலு மென்பயன் ?
ஆறு மா று மாறுமா யகத்தி லோரெ ழுத்ததாய்ச்
சீரை யோத வல்லிரேல் சிவப தங்கள் சேரலாம். 416

முந்த வோரெ ழுத்துளே முளைத்தெ ழுந்த செஞ்சுடர்
அந்த வோரெ ழுத்துளே பிறந்து காய மானதும்
அந்த வோரெ ழுத்துளே யனேக மாகி நின்றதும்
அந்த வோரெ ழுத்தையு மறிந்து ணர்ந்து கொள்ளுமே. 417

கூட்ட மிட்டு நீங்களுங் கூடி வேத மோதுறீர் !
எட்ட கத்து ளீசனு மிருப்ப தென்னெ ழுத்துளே ?
நாட்ட மிட்டு நாடிடு நா லு மூன்று தன்னுளே
ஆட்ட கத்து ளாடிடு மம்மை யாணே யுண்மையே. 418

காக்கை மூக்கை யாமையா ரெடுத்து ரைத்த காரணம்
நாக்கை யூன்றி யுள்வளைத்து ஞான நாடி யூடுபோய்
ஏக்கை நோக்க அட்சா மிரண்டெழுத்து மேத்திடிற்
பார்த்த பார்த்த திக்கெலாம் பரப்பி ரம்ம மானதே. 419

ஓசை யுள்ள கல்லேநீர் உடைத்தி ரண்டு செய்துமே
வா சலிற் பதித்த கல்லே மழுங்க வேமி திக்கிறீர் ;
பூச னைக்கு வைத்த கல்லில் பூவும்நீருஞ் சார்த்துறீர் ;
ஈசனுக் குகந்த கல்ல தெந்தக் கல்லு சொல்லுமே. 420

ஒட்டு வைத்துக் கட்டிநீ ருபாய மான மந்திரம்
கட்டுப் பட்ட போதிலுங் கருத்த னங்கு வாழுமோ ?
எட்டு மெட்டு மெட்டுளே யியங்கு கின்ற வாயுவை
வட்ட மிட்ட யவ்விலே வைத்து ணர்ந்து பாருமே. 421

இந்த வூரி லில்லையென் றெங்கு நாடி யோடுநீர்?
அந்த வூரி லீசனு மமர்ந்து வாழ்வ தெங்ஙனே?
அந்த மான பொந்தி லாரில் மேவிநின்ற நாதனை
அந்த மான சீயிலவ்வி லறிந்து ணர்ந்து கொள்ளுமே. 422

புக்கி ருந்த தும்முளே பூரி யிட்ட தோத்திரம்
தொக்குச் சட்சு சிங்குவை யாக்கி ராணன் சூழ்ந்திடில்
அக்கு மணியும் கொன்றைசூடி அம்ப லத்து ளாடுவார்
மிக்க சோதி யன்புடன் விளம்பி டாது பின்னையே. 423

பின்னெ ழுந்த மாங்கி சத்தைப் பேதையர்கண் பற்றியே
பின்பு மாங்கி சத்தில் போக பேதமாய்கை பண்ணினல்
துன்பு றும்வி னைகள்தாம் சூழ்ந்தி டும்பி னென்றலோ
அன்பரா யிருந்த பேர்க ளாறு நீந்தல் போல்விடே. 424

விட்டி ருந்த தும்முளே விதன மற்றி ருக்கிறீர்;
கட்டி வைத்த வாசல் மூன்று காட்சியான வாசலொன்று
கட்டி வைத்த வாசலுங் கதவு தாள்தி றந்துபோய்த்
திட்ட மான வீசனைத் தெளியு மாங்கி சத்துளே. 425

ஆகு மாகு மாகுமே அனாதி யான அப்பொருள்;
ஏகர் பாதம் நாடிநாடி யேத்தி நிற்க வல்லிரேல்
பாகுசேர் மொழியு மைக்குப் பால னாகி வாழலாம்;
வாகு டன்னீர் வன்னியை மருவி யேவ ருந்திடீர். 426

உண்மை யான தொன்ற தொன்றை யுற்றுநோக்கி யும்முளே
வண்மை யான வாசியுண்டு வாழ்த்தி யேத்த வல்லிரேல்
தண்மை பெற்றி ருக்கலாம் தவமும் வந்து நேரிடும்;
கன்ம தன்ம மாகுமீசர் காட்சி தானுங் காணுமே. 427

பால னாக வேணுமென்று பத்தி முற்று மென்பிரே;
நாலு பாத முண்டதில் நனைந்தி ரண்ட டுத்ததால்
மூல நாடி தன்னில்வன்னி மூடி யந்த நீருண
ஏலவார் குழலி யூடே யீசர் பாத மெய்துமே. 428

எய்து நின்னை யன்பினா லிறைஞ்சி யேத்த வல்லிரேல்
எய்து முண்மை தன்னிலே யிறப்பி றப்ப கற்றிடும் ;
மையி லங்கு கண்ணி பங்கன் வாசி வானி லேறிமுன்
செய்த வல்வி னைகளுஞ் சிதறு மஃது திண்ணமே. 429

திண்ண மென்று சேதி சொன்ன செவ்வியோர்கள் கேண்மினோ ;
அண்ண லன்பு ளன்புருகி யறிந்து நோக்க லாயிடும்
மண்ணு மதிர விண்ணு மதிர வாசியை நடத்திடில்
நண்ணி யெங்க ளீசனும் நமது டல்லி ருப்பனே, 430

இருப்ப னெட்டெட் டெண்ணிலே இருந்து வேற தாகுவன்
நெருப்பு வாயு நீருமண்ணும் நீள்வி சும்பு மாகுவன்
கருப்பு குந்து காலமே கலந்த சோதி நாதனைக்
குருப்பு னலில் மூழ்கினார் குறித்து ணர்ந்து கொள்ளவரே,

கொள்ளு வார்கள் சிந்தையிற் குறிப்பு ணர்ந்த ஞானிகள் ;
விள்ளு வார்கள் பக்குவத்தில் வேண்டி வேண்டி யேத்தினால்
உள்ளு மாய்ப்பு றம்புமா யுணர்வ தற்கு ணர்வுமாய்த்
தெள்ளி தாகி நின்ற சோதி செம்மையைத் தெளிந்திடே.

தெளிந்தநற் சரியை தன்னில் சென்று சாலோ கம்பெறும் ;
தெளிந்தநற் கிரியை பூசை சேர லாஞ்சா மீபமே ;
தெளிந்த நல்லி யோகந்தன்னில் சேர லாகுஞ் சாரூபம் ;
தெளிந்த ஞானம் நான்கிலும் சேர லாஞ்சா யுச்யமே. 433

சேரு வார்கள் ஞான மென்று செப்புவார் தெளிவுளோர் ;
சேரு வார்கள் நாலு பாதச் செம்மையென்ற தில்லையே ;
சேரு வார்கள் சிவகதி திருவ ருளைப் பெற்றபேர் ;
சேரு மாறு கண்டு நாலுஞ் செய்தொழில் திடப்படே 434

திறம லிக்கு நாலு பாதஞ் செம்மையுந் திடப்படார்
அறிவிலிகள் தேச நாடி அவத்தி லேய லைவதே ;
குறியதனைக் காட்டி யுட்கு றித்து நோக்க வல்லிரேல்
வெறிகமழ் சடையு டையோன் மெய்ப்ப தம்ம டைவிரே.

அடைவு ளோர்கள் முத்தியை யறிந்தி டாத மூடரே!
படை யுடைய தத்துவமும் பாத கங்க ளல்லவோ?
மடைதி றக்க வாரியின் மடையி லேறு மாறுபோல்
உடலில் மூல நாடியை யுயர வேற்றி யூன்றிடே. 436

ஊன்றி யேற்றி மண்டல முருவி மூன்று தாள்திறந்
தான்று தந்தி யேறிடி லமுதம் வந்தி றங்கிடும்;
நான்றி தென்று தொண்ட ருக்கு நாதனும் வெளிப்படும்;
ஆன்றியு முயிர்ப ரம்பொ ருந்தி வாழ்வ தாகவே 437

ஆக மூல நாடியி லனலெ ழுப்பி யன்புடன்
மோக மான மாயையில் முயல்வ தும்மொ ழிந்திடில்
தாக மேரு நாடி யேக னேகமான வாறுபோல்
ஏகர் பாத மன்புட னிறைஞ்சி ஞா றிவரே. 438

அறிந்து நோக்கி யும்முளே யயன்தி யான மும்முளே
பிறந்தி ரூம லேகர் பாதம் பெற்றிருப்ப துண்மையே;
அறிந்து மீள வைத்திடா வகையு மரண மேத்தினர்
செறிந்து மேலே வாசலைத் திறந்து பாரு மும்முளே. 439

சோதி யாக வும்முளே தெளிந்து நோக்க வல்லிரேல்
சோதி வந்து தித்திடுந் துரியா தீத முற்றிடும்;
ஆதி சக்க ரத்தினி லமர்ந்து தீர்த்த மாடுவன்
பேதி யாது கண்டுகொள் பிராண னைத்தி ருத்தியே. 440

திருவு மாகிச் சிவனு மாகித் தெளிந்து ளோர்கள் சிந்தையில்
மருவிலே யெழுந்து வீசும் வாச னைய தாகுவன்;
கருவிலே விழுந்தெ ழுந்த கன்ம வாத னையெலாம்
பருதிமுன் னிருள தாகிப் பறியு மங்கி பாருமே. 441

பாரு மெந்தை யீசன் வைத்த பண்பிலே யிருந்துநீர்;
சேருமே நடுவ றிந்து செம்மை யான அப்பொருள்;
வேரை யும்மு டியையும் விரைந்து தேடி மாலயன்
பாரி டந்து விண்ணிலே பறந்துங் கண்ட தில்லையே. 442

கண்டிலா தயன்மா லென்று காட்சி யாகச் சொல்கிறீர் ;
மிண்டி னால ரனுடன் மேவ லாயி ருக்குமோ ?
தொண்டு பட்டு மன்புடன் தொழுது நோக்க வல்லிரேல்
பண்டு மூப்பு ரயமெரித்த பத்தி வந்து முற்றுமே. 443

முற்றுமே யவனை ழிந்து முன்பி னென்றுங் காண்கிலேன் ;
பற்றி லாத தொன்று தன்னைப் பற்றிநிற்க வல்லது
கற்றி தாலே யீசர் பாதங் காணலா யிருக்குமோ ?
பெற்ற பேரை யன்புடன் பிரிய மாகக் கேளுமே. 444

கேட்டு நின்ற வுன்னிலை கிடைத்த காலந் தன்னுளே
வாட்ட முள்ள தத்துவ மயக்க மும்ம கற்றிடும் ;
வீட்டிலே வெளிய தாகும் விளங்க வந்து நேரிடும் ;
கூட்டி வன்னி மாருதங் குயத்தை விட்டெ ழுப்புமே. 445

எழுப்பி மூல நாடியை யிதப்ப டுத்த லாகுமே ;
மழுப்பி லாத சபையைநீர் வலித்து வாங்க வல்லிரேல்
சுழுத்தி யுங்க டந்துபோய்ச் சொப்ப னத்தி லப்புறம்
அழுத்தி யோரெ ழுத்துளே யமைப்ப துண்மை யையனே !

அல்ல தில்லை யென்றுதா னவி யும்பொ ருளுடல்
நல்ல வீசர் தாளி ணைக்கும் நாதனுக்கு மீந்திலை
எல்லு மென்னுள் நேசமும் வாசி யைவ ருந்தினல்
தொல்லை யாம்வி னைவி டென்று தூர தூர மானதே. 447

ஆன தேப தியதுய ரற்ற தேப சுபாசம்
போனவே மலங்க ளும்பு லன்க ளும்வி னைகளும்
கான கத்தி லிட்ட தீயிற் காற்றுவந் தடுத்ததோ
ஊன கத்தில் வாயு வுன்னி யொன்றியே யுலாவுமே. 448

உலாவு முவ்வு மவ்வுமா யுதித்த டர்ந்து நின்றதும்
உலாவி யைம்பு லன்களூ மொருத லத்தி ருந்திடும்
நிலாவு மங்கு நேசமாகி நின்ற மிர்த முண்டுதாங்
குலாவு மெங்க ளீசனைக் குறித்து ணர்ந்து கும்பிடே. 449

கும்பி டுங்க ருத்துளே குகனை யைங்க ரனையும்
நம்பி யேயி டம்வலம் நமக்க ரித்து நாடிட
எம்பி ரானு மம்மையு மிருத்தி யேக டுவணைத்
தும்பி போல வாசகந் தொடர்ந்து சோம்பி நீங்குமே 450

நீங்கு மைம்பு லன்களும் நிறைந்த வல்வி னைகளும்
ஆங்கா ரம்மா மாசையு மருந்த டர்ந்த பாவமும்
ஓங்கா ரத்தி னுள்ளி ருந்த ஒன்பதொ ழிந் தொன்றிலத்
தூங்க வீசர் சொற்படி துணிந்தி ருக்க சுத்தமே. 451

கருக்க லந்த காலமே கண்டு நின்ற காரணம்;
உருக்க லந்த போதலோ வுன்னை நானு ணர்ந்தது?
விரிக்கி லென்ம றைக்கிலென் வினைக்கி சைந்த போதெலாம்
உருக்க லந்து நின்றபோது நீயும் நானு மொன்றலோ? 452

ஞான நூல்கள் தேடியே நவின்ற ஞான யோகிகாள்!
ஞான மான சோதியை நாடி யுள்ள றிகிலீர்;
ஞான மாகி நின்றதோர் நாத னைய றிந்தபின்
ஞான மல்ல தில்லைவேறு நாமு ரைத்த துண்மையே. 453

கருத்த ரிப்ப தற்குமுன் காயம் நின்ற தெவ்விடம்?
உருத்த ரிப்ப தற்குமுன் உயிர்ப்பு நின்ற தெவ்விடம்?
மருட்பொ திந்த சிந்தையில் மயக்கம் நின்ற தெவ்விடம்?
விருப்பு ணர்ந்த ஞானிகாள்! விரித்து ரைக்க வேணுமே.

கருவி னிற்க ருவதா யெடுத்த வேழு தோற்றமும்
இருவி னைப்ப யத்தினால் பிறந்தி றந்து ழன்றிடும்
மறுவினைப் பிறவி மூன்று கால மும்வ குத்தபின்
உறுவினைப் பயனி தென்று ணர்ந்த ஞானி சொல்லுமே.

வாயி லெச்சில் போகவே நீர்கு டித்துத் துப்புவீர்;
வாயிருக்க எச்சில் போன வாயி லென்ப தெவ்விடம்?
வாயி லெச்சி லல்லவோ நீரு ரைத்த மந்திரம்?
நாயினை யறிந்த போது நாடு மெச்சி லேதுகொல்? 456

தொடக்க தென்று நீர்விழத் தொடங்கு கின்ற வூமர்காள்!
தொடக்கி ருந்த தெவ்விடம்? சுத்தி யான தெவ்விடம்?
தொடக்கி ருந்த வாறறிந்து சுத்தி பண்ண வல்லிரேல்
தொடக்கி லாத சோதியைத் தொடர்ந்து காண லாகுமே.

மேதி யோடும் ஆவுமே விரும்பி யேபு ணர்ந்திடில்
சாதி பேத மாயுருத் தரிக்கு மாறு போலவே
வேத மோது வானுடன் புலைச்சி சென்று மேவிடில்
பேதமாய்ப் பிறக்கி லாத வாற தென்ன? பேசுமே. 458

வகைக்கு லங்கள் பேசியே வழக்கு ரைக்கு மாந்தர்காள்!
தொகைக்கு லங்க ளான நேர்மை நாடியே யுணர்ந்தபின்
மிகைத்த சுக்ல மன்றியே வேறு மொன்று கண்டிலீர். 459

ஓதும் நாலு வேதமு முரைத்த சாத்தி ரங்களும்
பூத தத்து வங்களும் பொருந்து மாக மங்களும்
சாதி பேத வுண்மையுந் தயங்கு கின்ற நூல்களும்
பேத பேத மாகியே பிறந்து ழன்றி ருந்தவே. 460

உறங்கி லென்வி ழிக்கிலென் உணர்வு சென்றொ டுங்கிலென்?
திறம்பி லென்றி கைக்கிலென் சிலதி சைக ளெட்டிலென்?
புறம்பு முள்ளு மெங்கணும் பொதிந்தி ருந்த தேகமாய்
நிறைந்தி ருந்த ஞானிகள் நினைப்ப தேது மில்லையே. 461

அங்க லிங்கம் பூண்டுநீ ரகண்ட பூசை செய்கிறீர்;
அங்க லிங்கம் பூண்டுநீ ரமர்ந்தி ருந்த மார்பரே!
எங்கு மோடி யெங்கு மெங்கும் ஈடழிந்து மாய்கிறீர்:
செங்கல் செம்பு கல்லெலாஞ் சிறந்து பார்க்கு மூடரே! 462

தீட்டந் தீட்ட மென்று நீரில் தினமுழுகு மூடரே!
தீட்ட மாகி யல்லவோ திரண்டு காய மானதும்?
பூட்ட காய மும்முளே புகழு கின்ற பேயரே!
தீட்ட வந்து கொண்டலோ தெளிந்த தேசி வாயமே. 463

உந்தி மேலே நாலும் மூன்றும் ஓம்நமசி வாயமாம்;
சந்தி சந்தி யென்றுநீர் சாற்று கின்ற பேயரே!
முந்த வந்து நும்முளே மூல நாடி யூடுபோய்
அந்தி சந்தி யற்றிட மறிந்து ணர்ந்து பாருமே. 464

வன்னி மூன்று தீயினில் வாழு மெங்கள் நாதனும்
கன்னி யான துள்ளிருக்கக் காதல் கொண்ட தெவ்விடம்?
சென்னி நாலு கையி ரண்டு சிந்தையி லிரண்டிலொன்
றுன்னி யுன்னி யும்முளே யுய்த்து ணர்ந்து பாருமே. 465

தொண்டு செய்து நீங்களுஞ் சூழ வோடி மாள்கிறீர்;
உண்டு மூன்று நும்முளே யுற்று ணர்ந்து பார்க்கிலீர்;
வண்டு லாவு சோலை சூழ வாழுமெங்கள் நாதனும்
பண்டு போல நும்முளே பகுத்தி ருப்ப னீசனே. 466

அரியதோர் நமச்சி வாய மாதி யந்த மானதும்
ஆறி ரண்டு நூறு கோடி யளவிடாத மந்திரம்
தெரிய நாலு வேத மாறு சாத்திர புராணமும்
தேடு மாலு மயனுஞ் சர்வ தேவதேவ தேவனே. 467

பரமுனக்கெ னக்கு வேறு பயமு மில்லை பாரையா!
கரமு னக்கு நித்தமுங் குவித்தி டக்க டமைசிவம்;
சிரமு ருக்கி யமுதளித்த சீரு லாவு நாதனே!
உரமெ னக்கு நீயளித்த வுண்மை யுண்மை யுண்மையே. 468

மூல வட்ட மீதிலே முளைத்த வஞ்செ ழுத்திலே
கோல வட்ட மூன்றுமாய்க் குளிர்ந்த லர்ந்த நின்றதீ
ஞான வட்ட மன்றுளே நவின்ற ஞானி மேலதாய்
ஏல வட்ட மாகியே யிருந்த தேசி வாயமே. 469

என்ன கத்தி லென்னைநா னெங்கு மோடி நாடினேன்;
என்ன கத்தி லென்னை யன்றி ஏதுமொன்று கண்டிலேன்;
மின்னெ ழும்பி விண்ண கத்தின் மின்னொடுங்கு மாறுபோல்
என்ன கத்து ளீசனே டியானு மல்ல தில்லையே. 470

முச்ச துர மூல மாகி மூன்ற தான பேதமாய்
அச்சதுர மும்மு ளேய டங்க வாசி யோகமாய்
மெய்ச்சதுர மெய்யு ளேவி ளங்கு ஞான தீபமாய்
உச்ச ரித்த மந்திரம் ஓம்ந மச்சி வாயவே. 471

இடங்கள் பண்ணி சுத்திசெய்தே யிட்ட பீட மீதிலே
அடங்க நீரும் பூசல்செய் தருந்த வங்கள் பண்ணுவீர்;
ஒடுங்கி நின்ற நாதனு ருதிக்கு ஞான மெவ்விடம்?
அடங்கு கின்ற தெவ்விடம்? அறிந்து பூசை செய்யுமே. 472

புத்த கங்க ளைச்சுமந்து பொய்க ளைப்பி தற்றுவீர்;
செத்திடம் பிறந்தி டம்ம தெங்ங னென்ற றிகிலீர்;
அத்த னைய சித்தனை யறிந்து நோக்க வல்லிரேல்
உத்த மத்து ளாயசோதி யுணரும் போக மாகுமே. 473

அருளிலே பிறந்து தித்து மாயை ரூப மாகிய
இருளிலே தயங்கு கின்ற ஏழை மாந்தர் கேண்மினோ;
பொருளிலே தவம்பு னைந்து பொருந்தி நோக்க வல்லிரேல்
மருள தேது வன்னியின் மறைந்த தேசி வாயமே. 474

தன்ம சிந்தை யாமளவுந் தவம றியாத் தன்மையாய்க்
கன்ம சிந்தை வெயிலு மூன்று கருத்தழிந்த கசடரே!
சென்ம சென்மந் தேடியுந் தெளியொ ணாத செல்வனை
நன்மை யாக வும்முளே நயந்து காண வேண்டுமே. 475

கள்ள வுள்ள மேயிருக்கக் கடந்த ஞான மோதுவீர்!
கள்ள முள்ள றுத்த போது கதியி தன்றிக் காண்கிலீர்;
உள்ளமே விளக்கி நித்த மொளியை யணுக வல்லிரேல்
தெள்ளு ஞான மும்முளே சிறந்த தேசி வாயமே. 476

காண வேண்டு மென்றுநீர் கடன்ம லைக ளேறுவீர்;
ஆண வம்மஃ தல்லவோ அறிவி லாத மாந்தரே!
வேணு மென்றவ் வீசர் பாத மெய்யுளே தரிப்பிரேல்
தாணு வாக நின்ற சீவன் றன்சிவம தாகுமே. 477

அணுவி னோடு கண்டமா யளவி டாத சோதியைக்
குணம தாக வும்முளே குறித்து நோக்கின் முத்தியாம்;
மிணமிணென்று விரலை யெண்ணி மீளொணு மயக்கமாய்த்
துணிவி லாத படியினுற் றொடர்ந்து பூசை செய்குவீர். 478

எச்சி லெச்சி லென்றுநீ ரிடைந்தி ருக்கு மேழைகாள்!
துச்சி லெச்சி லல்லவோ தூய காய மானதும்?
வைச்ச வெச்சில் தேனலோ? வண்டி னெச்சில் பூவலோ?
கைச்சு தாவில் வைத்துடன் கறந்த பாலு மெச்சிலே. 479

தீர்த்த லிங்க மூர்த்தி யென்று தேடியோடுந் தீதரே!
தீர்த்த லிங்க முள்ளி நின்ற சீவனைத் தெளியுமே;
தீர்த்த லிங்க மும்முளே தெளிந்து காண வல்லிரேல்
தீர்த்த லிங்கந் தானதாய்ச் சிறந்த தேசி வாயமே. 480

ஆடு கொண்டு கூறுசெய் தமர்ந்தி ருக்கு மாறுபோல்
தேடு கின்ற செம்பினைத் திடப்ப டப்ப ரப்பியே
நாடு கின்ற தம்பி ரானு நம்முளே யிருக்கவே
போடு தர்ப்ப பூசையென்னும் பூசை யென்ன பூசையே?

என்னை யற்ப நேரமு மிறக்கி லாத நாதனே!
ஏக னே! இ றைவனே! இராச ராச ராசனே!
உன்னை யற்ப நேரமு மொழிந்தி ருக்க லாகுமே?
உனது நாம மெனதுநாவி லுதவி செய்க வீசனே! 482

எல்லை யற்று நின்ற சோதி யேகமா யெரிக்கவே
வல்ல பூர ணப்ரகாச யோக போக மாகியே
நல்ல வின்ப மோன சாக ரத்திலே யழுத்தியே
நாடொ ணாத வமிர்த முண்டு நானழிந்து நின்றநாள். 483

ஆன வாற தாயிடு மகண்ட மான சோதியை
ஊனைக் காட்டி யும்முளே யுகந்து காண வல்லிரேல்
ஊன காய மாளலா முலக பார மாளலாம்;
வான நாடு மாளலாம்; வண்ண நாட ராணையே. 484

நித்த லும்ம ணிதுலக்கி நீடு மூலை புக்கிருந்து
கத்தி யேக தறியே கண்கள் மூடி என்பயன் ?
எத்த னைபே ரெண்ணினு மெட்டி ரண்டும் பத்தலோ ?
அத்த னுக்கி தேற்குமோ அறிவி லாத மாந்தரே ! 485

எட்டி ரண்டுங் கூடியே யிலிங்க மான தேவனை
மட்ட தாக வும்முள்ளே மதித்து நோக்க வல்லிரேல்
கட்ட மான பிறவியென் கருங்க டல்க டக்கலாம்
இட்ட மான ஒளியினோ டிசைந்தி ருப்பீர் காண்மினே. 486

உண்மை யான மந்திரம் ஒளியி லேயி ருந்திடும் ;
தண்மை யான மந்திரஞ் சமைந்து ரூப மாகியே
வெண்மை யான மந்திரம் விளைந்து நீற தானதே
உண்மை யான மந்திரம் தொன்று மேசி வாயமே. 487

பன்னி ரண்டு நாளிருத்திப் பஞ்ச வன்ன மொத்திட
மின்னி யவ்வெ ளிக்கு ணின்று வேறெடுத் தமர்ந்தது
சென்னி யான தலத்திலே சீவ னின்றி யங்கிடும்
பன்னி யுன்னி யாய்ந்தவர் பரப்பி ரம்ம மாவரே. 488

தச்சு வாயி லுச்சிமே லாயி ரந்த லங்களாய்
முச்சுடரு மூவி ரண்டு மூண்டெ ழுந்த தீச்சுடர்
வச்சி ரம்ம தாகியே வளர்ந்து நின்ற தெவ்விடம் ?
இச்சுடரு மிந்தி யம்மு மேக மான தெங்ஙனே ? 489

முத்தி சித்தி தொந்தமாய் முயங்கு கின்ற மூர்த்தியை
மற்று தித்த வைம்புலன்க ளாகு மத்தி மப்புலன்
அத்த னித்த காள கண்ட ரன்பினு லனுதினம்
உச்ச ரித்து ளத்திலே யறிந்து ணர்ந்து கொண்மினே. 490

வல்ல வாச லொன்பதும் மருத்த டைத்த வாசலும்
சொல்லும் வாச லோரைந்துஞ் சொல்ல விம்மி நின்றதும்
நல்ல வாச லைத்திறந்து ஞான வாச லூடுபோய்
எல்லை வாசல் கண்டபின் இனிப்பி றப்ப தில்லையே. 491

வண்டுபூ மணங்க ளோடு வந்தி ருந்த தேனெலாம்
உண்டுளே யடங்கு வண்ண மோது லிங்க மூலமாய்க்
கண்டு கண்டு வேரிலே கருத்தொ டுங்க வல்லிரேல்
பண்டு கொண்ட வல்வினை பறந்தி டுஞ்சி வாயமே 492

ஓரெழுத்தி லிங்க மாக வோது மக்க ரத்துளே
ஓரெ ழுத்தி யங்கு கின்ற வுண்மையை யறிகிலீர் ;
மூவெ ழுத்தும் மூவராய் முளைத்தெ ழுந்த சோதியை
நாலெ ழுத்து நாவுளே நவின்ற தேசி வாயமே. 493

தூர தூர தூரமுந் தொடர்ந்தெ ழுந்த தூரமும்
பார பார மென்றுமே பரிந்தி ருந்த பாவிகாள் !
நேர நேர நேரமு நினைந்தி ருக்க வல்லிரேல்
தூர தூர தூரமுந் தொடர்ந்து கூட லாகுமே 494

குண்ட லங்கள் பூண்டுநீர் குளங்க டோறு மூழ்கிறீர் ;
மண்டு கங்கள் போலநீர் மனத்தின் மாச றுக்கிலீர் ;
மண்டை யேந்து கையரை மனத்தி ருத்த வல்லிரேல்
பண்டை மால யன்றொழப் பணிந்து வாழ லாகுமே. 495

கூடு கட்டி முட்டையிட்டுக் கொண்டி ருந்த வாறுபோல்
ஆடி ரண்டு கன்றை யீன்ற வம்பலத்து ளாடுதே ;
மாடு கொண்டு வெண்ணெ யுண்ணு மானிடப் பசுக்களே !
வீடு கண்டு கொண்ட பின்பு வெட்ட வெளியும் காணுமே

நட்ட கல்லைத் தெய்வமென்று நாலு புட்பஞ் சாத்தியே
சுற்றி வந்து முணமுணென்று சொல்லு மந்த்ர மேதடா !
நட்ட கல்லும் பேசுமோ நாத னுள்ளி ருக்கையில் ?
சுட்ட சட்டி சட்டுவங் கறிச்சு வைய றியுமோ ? 497

நானு மல்ல நீயுமல்ல நாத னல்ல ஓதுவேன்
வானி லுள்ள சோதியல்ல சோதி நம்மு ளுள்ளதே
நானு நீயு மொத்தபோது நாடிக் காண லாகுமே
தான தான தத்ததான நாத ஞன தானஞ. 498

நல்ல தல்ல கெட்ட தல்ல நடுவில் நிற்ப தொன்றுதான்
நல்ல தென்ற போதது நல்ல தாகி நின்றுபின்
நல்ல தல்ல கெட்ட தென்றல் கெட்ட தாகு மாதலால்
நல்ல தென்று நாடி நின்று நாமஞ் சொல்ல வேண்டுமே. 499

பேய்கள் கூடிப் பிணங்கள் தின்னும் பிரிய மில்லாக் காட்டிலே
நாய்கள் சுற்ற நடனமாடு நம்பன் வாழ்க்கை யேதடா !
தாய்கள் பாலு திக்குமிச்சை தவிர வேண்டி நாடினால்
நோய்கள் பட்டு ழல்வதேது நோக்கிப் பாரு மும்முளே. 500

உப்பை நீக்கி லழுகிப்போகு மூற்றை யாகு முடலில்நீ
அப்பி யாசை கொண்டிருக்க லாகு மோசொ லறிவிலா
தப்பி லிப்பொய் மானங்கெட்ட தடிய னாது மனமேகேள் :
ஒப்பி லாச்செஞ் சடைய னாகு மொருவன் பாத முண்மையே. 501

பிறப்ப தெல்லா மிறப்பதுண்டு பேதை மக்கள் தெரிகிலா
திறப்ப தில்லை யெனமகிழ்ந்தே யெங்க ளுங்கள் சொத்தெனக்
குறிப்புப் பேசித் திரிவரன்றிக் கொண்ட கோல மென்னவோ
சிறப்பும் பொந்தி யழிந்தபோது நேச மாமோ வீசனே ? 502

சுட்டெ ரித்த சாந்துபூசுஞ் சுந்த ரப்பெண் மதிமுகத்
திட்ட நெட்டெ ழுத்தறியா தேங்கி நோக்கு மதவலீர் !
பெட்ட கத்துப் பாம்பு றங்கும் பித்த லாட்ட மறியிரோ ?
கட்ட விழ்த்துப் பிரமன்பார்க்கில் கதியு மக்கு மேதுகாண்.

வேத மோது வேலையோ வீண தாகும் பாரிலே
காத காத தூரமோடிக் காதல் பூசை வேணுமோ ?
ஆதி நாதன் வெண்ணெயுண்ட அவனி ருக்க நம்முளே
கோ பூசை வேதமேது குறித்துப் பாரு மும்முளே. 504

பரமி லாத தெவ்விடம் ? பரமி ருப்ப தெவ்விடம் ?
அறமி லாத பாவிகட்குப் பரமி லைய துண்மையே ;
கரமி ருந்தும் பொருளிருந்தும் அருளி லாத போதது
பரமி லாத சூன்ய மாகும் பாழ்நரக மாகுமே. 505

மாதர் தோள்சே ராததேவர் மாநி லத்தி லில்லையே !
மாதர் தோள்பு ணர்ந்தபோது மனிதர் வாழ்சி றக்குமே ;
மாத ராகுஞ் சத்தியொன்று மாட்டிக் கொண்ட தாதலால்
மாத ராகும் நீலிகங்கை மகிழ்ந்து கொண்டான் ஈசனே. 506

சித்த ரென்றுஞ் சிறிய ரென்று மறியொ ணாத சீவர்காள் !
சித்த ரிங்கி ருந்தபோது பித்த ரென்றே எண்ணுவீர் ;
சித்த ரிங்கி ருந்துமென்ன பித்த னாட்டி ருப்பரே ;
அத்த னாடு மிந்தநாடு மவர்க ளுக்கெ லாமொன்றே. 507

மாந்தர் வாழ்வு மண்ணிலே மறந்த போது விண்ணிலே
சாந்த னான ஆவியைச் சரிப்ப டுத்த வல்லிரேல்
வேந்த னாகி மன்றுளாடும் விமலன் பாதம் காணலாம்
கூந்த லம்மை கோண லொன்றுங் குறிக்கொணாதி துண்மையே

சருக ருந்தி நீர்கு டித்துச் சாரல்வாழ் தவசிகாள்
சருக ருந்தில் தேகங் குன்றிச் சஞ்சலமுண் டாகுமே ;
வருவி ருந்தோ டுண்டு டுத்தி வளர்மனை சுகிப்பிரேல்
வருவி ருந்தோ னீசனாகி வாழ்வ ளிக்குஞ் சிவாயமே. 509

காடு மேடு குன்றுபள்ளம் கானி னார கற்றியும்
நாடு தேசம் விட்டலைவர் நாதன் பாதங் காண்பரோ ?
கூடு விட்ட கன்றன்னாவி கூத்த னார்க்கே நோக்கலால்
வீடு பெற்ற ரன்பதத்தில் வீற்றி ருப்ப ரில்லையே. 510

கட்டை யாற்செய் தேவருங் கல்லி னாற்செய் தேவரும்
மட்டை யாற்செய் தேவரும் மஞ்ச ளாற்செய் தேவரும்
சட்டை யாற்செய் தேவரும் சாணி யாற்செய் தேவரும்
வெட்ட வெளிய தன்றிமற்று வேறு தெய்வ மில்லையே. 511

தங்கள் தேகம் நோய்பெறின் தனைப்பி டாரி கோயிலிற்
பொங்கல் வைத்தும் ஆடுகோழிப் பூசைப் பலியை இட்டிட
நங்கச் சொல்லு நலிமிகுந்து நாளுந் தேய்ந்து மூஞ்சூராய்
உங்கள் குலத்துத் தெய்வமுங்க ளுருக்கு லைப்ப துண்மையே.

ஆசை கொண்ட னுதினமும் அன்னி யர்பொ ருளினை
மோசஞ் செய்த பகரிக்க முற்றி லும்ம லைபவர்
பூசை யோடு நேமமிட்டை பூரிக் கச்செய் பாதகர்
காசி னிய்யில் எழுநரகைக் காத்தி ருப்ப துண்மையே. 513

நேச முற்றுப் பூசைசெய்து நீறு பூசிச் சந்தனம்
வாச மோட ணிந்துநெற்றி மைதி லர்த மிட்டுமே
மோசம் பொய்ப்பு னைசுருட்டு முற்றி லுஞ்செய் மூடர்காள்!
வேசரிக ளப்பு ரண்ட வெண்ணீ றுகு மேனியே. 514

வாதஞ் செய்வேன் வெள்ளியும்பொன் மாற்று யர்ந்த தங்கமும்
போத வேகு ருமுடிக்கப் பொன்ப ணங்கள் தாவெனச்
சாத னைசெய் தெத்திச்சொத்துத் தந்த தைக்க வர்ந்துமே
காத தூர மோடிச்செல்வர் காண்ப தும்ம ருமையே. 515

யோக சாடை காட்டுவார் உயர வும்மெ ழும்புவார்
வேக மாக அட்டசித்து வித்தை கற்று நெட்டுவார்
மோகங் கொண்டு மாதரின் மூத்தி ரப்பை சிக்கிப்பின்
பேயது பிடித்த வர்போற் பேரு லகிற் சாவரே. 516

காய காய முண்பதாகக் கண்ட வர்ம தித்திட
மாய வித்தை செய்வதெங்கு மடிப்பு மோசஞ் செய்பவர்
நேய மாக்கஞ் சாவடித்து நேர பினியைத் தின்பதால்
நாய தாக நக்கிமுக்கி நாட்டி னில்ல லைவரே. 517

நீரி னிற்கு மிழியொத்த நிலையி லாத காயமென்
றூரி னிற்ப றையடித்து உதாரி யாய்த்தி ரிபவர்
சீரி னில்லு னக்குஞான சித்தி செய்வேன் பாரென
நேரி னிற்பி றர்பொருளை நீள வுங்கைப் பற்றுவார். 518

காவி.யுஞ்ச டைமுடி கமண்ட லங்க ளாசனம்
தாவு ருத்தி ராட்சம்யோகத் தண்டு கொண்ட மாடுகள்
தேவி யைய லையவிட்டுத் தேச மெங்குஞ் சுற்றியே
பாவி யென்ன வீடெலாம் பருக்கை கேட்ட லைவரே 519

முத்தி சேரச் சித்தியிங்கு முன்ன ளிப்பேன் பாரெனச்
சத்தி யங்கள் சொல்லியெங்குஞ் சாமி வேடம் பூண்டவர்

நித்தி யம்வ யிறுவளர்க்க நீதி ஞானம் பேசியே
பத்தி யாய்ப்ப ணம்ப றித்துப் பாழ்நரகில் வீழ்வரே. 520

செம்மை சேர்ம ரத்திலே சிலைத லைகள் செய்கிறீர்
கொம்மை யற்ற கிளையில்பாத குறடு செய்த ழிக்கிறீர்
நம்மு ளேவி ளங்குவோனை நாடி நோக்க வல்லிரேல்
இம்ம ளம்மு மும்மளம்மு மெம்ம ளப்பு மல்லவே. 521

எத்தி சையெங் கெங்குமோடி எண்ணி லாத நதிகளில்
சுற்றி யுந்த லைமுழுகச் சுத்த ஞானி யாவரோ ?
பத்தி யோட ரன்பதம் பணிந்தி டாத பாவிகாள் !
முத்தி யின்றிப் பாழ்நரகில் மூழ்கி நொந்த லைவரே. 522

கல்லு வெள்ளி செம்பிரும்பு காய்ச்சி டுந்த ராக்களில்
வல்ல தேவ ரூபபேத மங்க மைத்துப் போற்றிடின்
தொல்லை யற்றி டப்பெருஞ் சுகந்த ரும்மோ சொல்லுவீர்
இல்லை இல்லை இல்லையில்லை ஈச னாணை இல்லையே. 523

இச்ச கஞ்ச னித்ததுவும் ஈச னைந்தெ ழுத்திலே
மெச்ச வுஞ்ச ராசரங்கள் மேவு மைந்தெ ழுத்திலே
உச்சி தப்ப லவுயிர்கள் ஓங்க லஞ்செ ழுத்திலே
நிச்ச யம்மெய்ஞ் ஞானபோதம் நிற்கு மைந்தெ ழுததிலே.

சாத்தி ரங்கள் பார்த்துப்பார்த்துத் தாங்கு ருடா வதலால்
நேத்தி ரங்கெ டவெய்யோனை நேர்து திசெய் மூடர்காள் !
பாத்தி ரம்ம றிந்துபோன பத்தி செய்ய வல்லிரேல்
சூத்தி ரப்ப டியாவருஞ் சுத்த ராவ ரங்ஙனே 525

மனவு றுதி தானிலாத மட்டிப் பிணமா மாடுகள்
சினமு றப்பி றர்பொருளைச் சேக ரித்து வைத்ததைத்
தினந்தி னம்மூ ரெங்குஞ்சுற்றித் திண்டிக் கேய லைபவர்
இனம திற்ப லர்கள்வையும் இன்ப மற்ற பாவிகள். 526

சிவாய வசி யென்னவுஞ் செபிக்க இச்ச கமெலாம்
சிவாய வசி யென்னவுஞ் செபிக்க யாவுஞ் சித்தியாம்
சிவாய வசி யென்னவுஞ் செபிக்க வான மாளலாம்
சிவாய வசி யென்பதே இருத லைத்தீ யாகுமே. 527

# பட்டினத்தார் பாடல்

## முதல்வன் முறையீடு

### கண்ணிகள்

கன்னி வனநாதா ! கன்னி வனநாதா !

மூலம் அறியேன் ; முடியும் முடிவறியேன் ;
ஞாலத்துட் பட்டதுயர் நாட நடக்குதடா ! 1

அறியாமை யாமலத்தால் அறிவுமுதற் கெட்டனடா !
பிறியா வினைப்பயனாற் பித்துப் பிடித்தனடா ! 2

தனுவா தியநான்குந் தானாய் மயங்கினண்டா !
மனுவாதி சத்தி வலையிலகப் பட்டனடா ! 3

மாமாயை யென்னும் வனத்தில் அலைகிறண்டா !
தாமா யுலகனைத்துந் தாது கலங்கிறண்டா ! 4

கன்னி வனநாதா ! கன்னி வனநாதா !

மண்ணாசைப் பட்டேனை மண்ணுண்டு போட்டதடா !
பொன்னாசை பெண்ணாசை போகனே யென்குதே ! 5

மக்கள்சுற் றத்தாசை மறக்கேனே யென்குதே !
திக்கரசா மாசையது தீரேனே யென்குதே ! 6

வித்தைகற்கு மாசையது விட்டொழியே னென்குதே !
சித்துக்கற்கு மாசையது சிதையேனே யென்குதே ! 7

மந்திரத்தி லாசை மறக்கேனே யென்குதே !
சுந்தரத்தி லாசை துறக்கேனே யென்குதே ! 8

கன்னி வனநாதா ! கன்னி வனநாதா !

கட்டுவாக்கத் தாசை கழலேனே யென்குதே !
செட்டுதனி லாசை சிதையேனே யென்குதே ! 9

மாற்றுஞ் சலவை மறக்கேனே யென்குதே !
சோற்றுக் குழியுமின்னுந் தூரேனே யென்குதே ! 10

ஐந்து புலனும் அடங்கேனே யென்குதே !
சிந்தை தவிக்கிறதுந் தேறேனே யென்குதே ! 11

காமக் குரோதங் கடக்கேனே யென்குதே !
நாமே யரசென்று நாடோறு மெண்ணுதே ! 12

கன்னி வனநாதா ! கன்னி வனநாதா !

அச்சமாங் காரம் அடங்கேனே யென்குதே !
கைச்சுமின்னு மானங் கழலேனே யென்குதே ! 13

நீர்க்குமிழி யாமுடலை நித்தியமாயெண்ணுதே !
ஆர்க்கு முயராசை யழியேனே யென்குதே ! 14

கண்ணுக்குக் கண்ணெதிரே கட்டையில்வே கக்கண்டும்
என்றுந் திரமா யிருப்போமேமென் றெண்ணுதே ! 15

அநித்தியத்தை நித்தியமென் றுதாவா யெண்ணுதே !
தனித்திருக்கே னென்குதே தனைமறக்கே னென்குதே ! 16

கன்னி வனநாதா ! கன்னி வனநாதா !

நரகக் குழியுமின்னும் நான்புசிப்பே னென்குதே !
உரகப் படத்தல்குல் உனைக்கெடுப்பே னென்குதே ! 17

குரும்பை முலையுங் குடிகெடுப்பே னென்குதே !
அரும்பு விழியுமென்ற னாவியுண்பே னென்குதே ! 18

மாத ருருக்கொண்டு மறலிவஞ்ச மெண்ணுதே !
ஆதரவு மற்றிங் கரக்கா யுருகிறண்டா ! 19

கந்தனை யீன்றருளும் கன்னி வனநாதா !
எந்த விதத்தில்நான் ஏறிப் படருவண்டா ! 20

கன்னி வனநாதா ! கன்னி வனநாதா !

புல்லாகிப் பூடாய்ப் புலர்ந்தநாள் போதாதோ ?
கல்லாய் மரமாய்க் கழிந்தநாள் போதாதோ ? 21

கீரியாய்க் கீடமாய்க் கெட்டநாள் போதாதோ ?
நீரியாய் ஊர்வனவாய் நின்றநாள் போதாதோ ? 22

பூதமொடு தேவருமாய்ப் போனநாள் போதாதோ ?
வேதனைசெய் தானவராய் வீழ்ந்தநாள் போதாதோ ? 23

அன்னை வயிற்றில் அழிந்தநாள் போதாதோ?
மன்னவனாய் வாழ்ந்து மரித்தநாள் போதாதோ? 24

கன்னி வனநாதா! கன்னி வனநாதா!

தாயாகித் தாரமுமாய்த் தாழ்ந்தநாள் போதாதோ?
சேயாய்ப் புருடனுமாய்ச் சென்றநாள் போதாதோ? 25

நோயுண்ண வேமெலிந்து நொந்தநாள் போதாதோ?
பேயுண்ணப் பேயாய்ப் பிறந்தநாள் போதாதோ? 26

ஊனவுடல் கூன்குருடாய் உற்றநாள் போதாதோ?
ஈனப் புசிப்பில் இளைத்தநாள் போதாதோ? 27

பட்ட களையும் பரிதவிப்பும் போதாதோ?
கெட்டநாள் கெட்டேனென்று கேளாதும் போதாதோ? 28

கன்னி வனநாதா! கன்னி வனநாதா!

நில்லாமைக் கேயழுது நின்றநாள் போதாதோ?
எல்லாரு மென்பார மெடுத்தநாள் போதாதோ? 29

காமன் கணையாற் கடைபட்டல் போதாதோ?
எமன் கரத்தா லிடியுண்டல் போதாதோ? 30

நான்முகன் பட்டோலை நறுக்குண்டல் போதாதோ?
தேன்றுளபத் தானேமி தேக்குண்டல் போதாதோ? 31

உருத்திரனார் சங்காரத் துற்றநாள் போதாதோ?
வருத்த மறிந்தையிலை; வாவென் றழைத்தையிலை. 32

கன்னி வனநாதா! கன்னி வனநாதா!

பிறப்பைத் தவிர்த்தையிலை; பின்னாகக் கொண்டையிலை;
இறப்பைத் தவிர்த்தயிலை; என்னென்னு கேட்டையிலை. 33

பாச மெரித்தயிலை; பரிதவிப்பைத் தீர்த்தயிலை;
பூசிய நீற்றைப் புனையென் றளித்தையிலை. 34

அடிமையென்று சொன்னையிலை; அக்கமணி தந்தையிலை;
விடுமுலகப் போக்கியுன்றன் வேடம் அளித்தையிலை. 35

உன்னில் அழைத்தையிலை; ஒன்றாக்கிக் கொண்டையிலை;
நின்னடியார் கூட்டத்தில் நீயழைத்து வைத்தையிலை 36

கன்னி வனநாதா! கன்னி வனநாதா!

ஓங்கு பரத்துள் ஒளித்தவடி யார்க்கடியான்
ஈங்கோ ரடியா னெமக்கென் றுரைத்தையிலை. 37

நாமந் தரித்தையிலை; நானொழிய நின்றையிலை;
சேம அருளிலெனைச் சிந்தித் தழைத்தையிலை. 38

முத்தி யளித்தையிலை; மோனங் கொடுத்தையிலை;
சித்தி யளித்தையிலை; சீராட்டிக் கொண்டையிலை. 39

தவிர்ப்பைத் தவித்தையிலை; தானாக்கிக் கொண்டையிலை;
அவிப்பரிய தீயாமென் ஆசை தவித்தையிலை. 40

கன்னி வனநாதா! கன்னி வனநாதா!

நின்ற நிலையில் நிறுத்தியெனை வைத்தையிலை;
துன்றுங் கரணமொடு தொக்கழியப் பார்த்தையிலை. 41

கட்டவுல கக்காட்சிக் கட்டொழியப் பார்த்தையிலை;
நிட்டையிலே நில்லென்று நீநிறுத்திக் கொண்டையிலை. 42

கடைக்கண் அருள்தாடா! கன்னி வனநாதா!
கெடுக்கும் மலமொருக்கிக் கிட்டிவரப் பாரேடா! 43

காதல் தணியேனோ? கண்டு மகிழேனோ?
சாதல் தவிரேனோ? சங்கடந்தான் தீரேனோ? 44

கன்னி வனநாதா! கன்னி வனநாதா!

உன்னைத் துதியேனோ? ஊர்நாடி வாரேனோ?
பொன்னடியைப் பாரேனோ? பூரித்து நில்லேனோ? 45

ஓங்காரப் பொற்சிலம்பின் உல்லாசம் பாரேனோ?
பாங்கான தண்டை பலபணியும் பாரேனோ? 46

வீரகண் டாமணியின் வெற்றிதனைப் பாரேனோ?
சூரர்கண்டு போற்றுமந்தச் சுந்தரத்தைப் பாரேனோ? 47

இடையில் புலித்தோல் இருந்தநலம் பாரேனோ?
விடையில் எழுந்தருளும் வெற்றியினைப் பாரேனோ? 48

கன்னி வனநாதா! கன்னி வனநாதா!

ஆனை யுரிபோர்த்த அழகுதனைப் பாரேனோ?
மானைப் பிடித்தேந்தும் மலர்க்கரத்தைப் பாரேனோ? 49

மாண்டார் தலைபூண்ட மார்பழகைப் பாரேனோ?
ஆண்டார் நமக்கென் றறைந்து திரியேனோ? 50

கண்டங் கறுத்துநின்ற காரணத்தைப் பாரேனோ?
தொண்டர் குழுவில்நின்ற தோற்றமதைப் பாரேனோ? 51

அருள்பழுத்த மாமதியாம் ஆனனத்தைப் பாரேனோ?
திருநயனச் சடையொளிருஞ் செழுங்கொழுமை பாரேனோ? 52

கன்னி வனநாதா! கன்னி வனநாதா!

செங்குமிழின் துண்டம்வளர் சிங்காரம் பாரேனோ?
அங்கனியை வென்ற அதரத்தைப் பாரேனோ? 53

முல்லை நிலவெறிக்கு மூரலொளி பாரேனோ?
அல்லார் புருவத் தழகுதனைப் பாரேனோ? 54

மகரங் கிடந்தொளிரும் வள்ளை தனைப் பாரேனோ?
சிகர முடியழகுஞ் செஞ்சடையும் பாரேனோ? 55

கங்கையொடு திங்கணின்ற காட்சிதனைப் பாரேனோ?
பொங்கரவைத் தான்சடையிற் பூண்டவிதம் பாரேனோ? 56

கன்னி வனநாதா! கன்னி வனநாதா!

சரக்கொன்றை பூத்த சடைக்காட்டைப் பாரேனோ?
எருக்கறுகூ மத்தையணி யேகாந்தம் பாரேனோ? 57

கொக்கிறகு குடிநின்ற கொண்டாட்டம் பாரேனோ?
அக்கினியை யேந்திநின்ற ஆனந்தம் பாரேனோ? 58

தூக்கிய காலுந் துடியிடையும் பாரேனோ?
தாக்கு முயலகன்மேல் தாண்டவத்தைப் பாரேனோ? 59

வீசு கரமும் விகசிதமும் பாரேனோ?
ஆசை யளிக்கும் அபயகரம் பாரேனோ? 60

கன்னி வனநாதா! கன்னி வனநாதா

அரிபிரமர் போற்ற அமரர் சயசயெனப்
பெரியம்மை பாகம்வளர் பேரழகைப் பாரேனோ? 61

சுந்தர நீற்றின் சொகுசுதனைப் பாரேனோ?
சந்திர சேகரனைத் தயவுசெய்தல் பாரேனோ? 62

கெட்டநாள் கெட்டாலுங் கிருபையினிப் பாரேடா!
பட்டநாள் பட்டாலும் பதமெனக்குக் கிட்டாதோ? 63

நற்பருவ மாக்குமந்த நாளெனக்குக் கிட்டாதோ?
எப்பருவ முங்கழன்ற ஏகாந்தங் கிட்டாதோ? 64

கன்னி வனநாதா! கன்னி வனநாதா!

வாக்கிறந்து நின்ற மவுனமதுகிட்டாதோ?
தாக்கிறந்து நிற்குமந்தத் தற்சுத்தி கிட்டாதோ? 65

வெந்துயரைத் தீர்க்குமந்த வெட்டவெளி கிட்டாதோ?
சிந்தையைத் தீர்க்குமந்தத் தேறலது கிட்டாதோ? 66

ஆன அடியார்க் கடிமைகொளக் கிட்டாதோ?
ஊனமற வென்னை யுணர்த்துவித்தல் கிட்டாதோ? 67

என்னென்று சொல்லுவண்டா! என்குருவே கேளடா!
பின்னை யெனக்குநீ யல்லாற் பிறிதிலையே! 68

கன்னி வனநாதா! கன்னி வனநாதா!

அன்ன விசாரமது அற்றவிடங் கிட்டாதோ!
சொன்ன விசாரந் தொலைந்தவிடங் கிட்டாதோ? 69

உலக விசாரம் ஒழிந்தவிடங் கிட்டாதோ?
மலக்குழுவின் மின்னார் வசியாதுங் கிட்டாதோ? 70

ஏப்புவமை பற்றோ டொழிந்தவிடங் கிட்டாதோ?
செப்புதற்கு மெட்டாத் தெளிந்தவிடங் கிட்டாதோ? 71

வாக்கு மனாதீத அகோசரத்திற் செல்லவெனைத்
தாக்கு மருட்குருவின் றாளிணைக்கே யான்போற்றி? 72

## அருட்புலம்பல்

ஐங்கரனைத் தெண்டனிட்டேன்
அருளடைய வேண்டுமென்று
தங்காமல் வந்தொருவன்
தற்சொரூபங் காட்டி யெனை 1

கொள்ளைப் பிறப்பறுக்கக் கொண்டான் குருவடிவம்;
கள்ளப் புலனறுக்கக் காரணமாய் வந்தாண்டி? 2

ஆதாரம் ஓராறும் ஐம்பத்தோர் அட்சரமும்
சூதான கோட்டையெலாஞ் சுட்டான் துரிசறவே. 3

மெத்த விகாரம் விளைக்கும் பலபலவாம்
தத்துவங்க ளெல்லாந் தலைகெட்டு வெந்ததடி! 4

என்னோ டுடன்பிறந்தார் எல்லாரும் பட்டார்கள்;
தன்னந் தனியே தரித்திருக்க மாட்டேண்டி! 5

எல்லாரும் பட்டகளம் என்று தொலையுமடி?
சொல்லி யழுதாற் றுயரமெனக் காறுமடி! 6

மண்முதலாம் ஐம்பூதம் மாண்டுவிழக் கண்டேண்டி!
விண்முதலாம் ஐம்பொறிகள் வெந்துவிழக் கண்டேண்டி! 7

நீக்காப் புலன்களைந்தும் நீறாக வெந்ததடி!
வாக்காதி ஐவரையும் மாண்டுவிழக் கண்டேண்டி! 8

மனக்கரணம் அத்தனையும் வகைவகையே பட்டழிய
இனக்கரணத் தோடே எரிந்துவிடக் கண்டேண்டி! 9

ஆத்துமத் தத்துவங்கள் அடுக்கழிய வெந்ததடி!
போற்றும்வகை எப்படியோ போதம் இழந்தானை? 10

வித்தியா தத்துவங்கள் வெந்துவிழக் கண்டேண்டி!
சுத்தவித்தை ஐந்தினையுஞ் சுட்டான் துரிசறவே. 11

மூன்று வகைக்கிளையும் முப்பத் தறுவரையும்
கான்றுவிழச் சுட்டுக் கருவே ரறுத்தாண்டி! 12

குருவாகி வந்தானோ, குலமறுக்க வந்தானோ,
உருவாகி வந்தானோ, உருவழிக்க வந்தானோ? 13

கேடுவரு மென்றறியேன் கெடுமதிகண் தோற்றாமல்
பாடுவரு மென்றறியேன் பதியாண் டிருந்தேண்டி! 14

எல்லாரும் பட்டகளம் இன்னவிட மென்றறியேன்;
பொல்லாங்கு தீர்க்கும் பொறியிலியைக் கண்டேண்டி! 15

உட்கோட்டைக் குள்ளிருந்தார் ஒக்க மடிந்தார்கள்;
அக்கோட்டைக் குள்ளிருந்தார் அறுபதுபேர் பட்டார்கள். 16

ஒக்க மடிந்ததடி! ஊடுருவ வெந்ததடி!
கற்கோட்டை யெல்லாங் கரிக்கோட்டை யாச்சுதடி. 17

தொண்ணூற் றறுவரையுஞ் சுட்டான் துரிசறவே ;
கண்ணேறு பட்டதடி கருவேர் அறுத்தாண்டி ! 18

ஓங்காரங் கெட்டதடி ! உள்ளதெல்லாம் போச்சுதடி !
ஆங்காரங் கெட்டதடி ! அடியோ டறுத்தாண்டி ! 19

தரையாங் குடிலைமுதல் தட்டுருவ வெந்ததடி !
இரையு மனத்திடும்பை எல்லாம் அறுத்தாண்டி ! 20

முன்னை வினையெல்லாம் முழுதும் அறுத்தாண்டி !
தன்னை யறியவே தானொருத்தி யானேண்டி ! 21

என்னையே நானறிய இருவினையும் ஈடழித்துத்
தன்னை யறியத் தலமெனக்குச் சொன்னாண்டி ! 22

தன்னை யறிந்தேண்டி ! தனிக்குமரி யானேண்டி !
தன்னந் தனியே தனியிருக்கும் பக்குவமே ! 23

வீட்டில் ஒருவரில்லை ; வெட்டவெளி யானேண்டி !
காட்டுக் கெறித்தநிலா கனவாச்சே கண்டதெலாம் ! 24

நகையாரோ கண்டவர்கள் ? நாட்டுக்குப் பாட்டலவோ ?
பகையாரோ கண்டவர்கள் ? பார்த்தாருக் கேச்சலவோ ? 25

இந்நிலைமை கண்டாண்டி ! எங்கும் இருந்தாண்டி !
கன்னி அழித்தாண்டி : கற்பைக் குலைத்தாண்டி ! 26

கற்புக் குலைத்தமையும் கருவேர் அறுத்தமையும்
பொற்புக் குலைத்தமையும் போதம் இழந்தமையும் 27

என்ன வினைவருமோ இன்னமெனக் கென்றறியேன் ;
சொன்னசொல் லெல்லாம் பலித்ததடி சோர்வறவே ! 28

கங்குல்பக லற்றிடத்தைக் காட்டிக் கொடுத்தாண்டி !
பங்கம் அழித்தாண்டி ! பார்த்தானைப் பார்த்திருந்தேன். 29

சாதியிற் கூட்டுவரோ ? சாத்திரத்திற் குள்ளாமோ ?
ஓதி யுணர்ந்ததெல்லா முள்ளபடி யாச்சுதடி ! 30

என்னகுற்றஞ் செய்தேனோ எல்லாருங் காணாமல் !
அன்னைசுற்ற மெல்லாம் அறியாரோ அப்புவியில் ? 31

கொன்றாரைத் தின்றேனோ, தின்றாரைக் கொன்றேனோ,
எண்ணாதெல் லாமெண்ணும் இச்சை மறந்தேனோ ! 32

சாதியிற் கூட்டுவரோ, சமயத்தோர் எண்ணுவரோ?
பேதித்து வாழ்ந்ததெல்லாம் பேச்சுக்கிட மாச்சுதடி! 33

கண்டார்க்குப் பெண்ணலவோ? காணார்க்குக் காமமடி!
உண்டார்க ளுண்டதெலா மூணல்லா துண்பர்களோ? 34

கொண்டவர்கள் கொண்டதெல்லாங் கொள்ளாதார்கொள்ளுவரோ
விண்டவர்கள் கண்டவரோ, கண்டவர்கள் விண்டவரோ 35

பண்டாய நான்மறைகள் பாடும் பரிசலவோ?
தொண்டாய தொண்டருளந் தோற்றி ஒடுங்குமதோ? 36

ஓத எளிதோ? ஒருவர் உணர்வெளிதோ?
பேதமற எங்கும் விளங்கும் பெருமையன்காண்! 37

வாக்கும் மனமுங் கடந்த மனோலயன்காண்!
நோக்க அரியவன்காண்! நுண்ணியரின் நுண்ணியன்காண்!

சொல்லுக் கடங்கான்காண்! சொல்லிறந்து நின்றவர்காண்!
கல்லுள் இருந்த கனலொளிபோல் நின்றவன்காண்! 39

சுட்டிறந்த பாழதனிற் சுகித்திருக்கச் சொன்னவன்காண்!
ஏட்டி லெழுத்தோ எழுதினவன் கைப்பிழையோ? 40

சும்மா இருக்கவைத்தான் சூத்திரத்தை நானறியேன்;
அம்மா பொருளிதென அடைய விழுங்கினண்டி! 41

பார்த்த இடமெல்லாம் பரமாகக் கண்டேண்டி!
கோத்த நிலைகுலைத்த கொள்கை யறியேண்டி! 42

மஞ்சனம் ஆட்டி மலர்பறித்துச் சார்த்தாமல்,
நெஞ்சுவெறும் பாழானேன் நின்றநிலை காணேண்டி! 43

பாடிப் படித்திருந்தும் பன்மலர்கள் சார்த்தாமல்,
ஓடித் திரியாமல் உருக்கெட்டு விட்டேண்டி! 44

மாணிக்கத் துள்ளொளிபோல் மருவி இருந்தாண்டி!
பேணித் தொழுமடியார் பேசாப் பெருமையன்காண்! 45

அன்றுமுதல் இன்றளவும் அறியாப் பருவமதில்
என்றும் பொதுவாய் இருந்த நிராமயன்காண்! 46

சித்தவிகா ரத்தாலே சின்மயனைக் காணாமல்
புத்தி கலங்கிப் புகுந்தேன் பொறிவழியே! 47

பத்தி அறியாமற் பாழிற் கவிழ்ந்தேண்டி !
ஒத்தவிடம் நித்திரையென் றொத்து மிருந்தேண்டி ! 48

செத்தாரை யொத்தேண்டி ! சிந்தை தெளிந்தேண்டி !
மற்றொரு மில்லையடி மறுமாற்றங் காணேண்டி ! 49

கல்வியல்ல, கேள்வியல்ல, கைகாட்டுங் காரணங்காண் !
எல்லையள வற்றதடி ! எங்கும் நிறைந்ததடி ! 50

வாசா மகோசரத்தை மருவியிடங் கொண்டாண்டி !
ஆசூய மில்லாண்டி ! அறிவுக் கறிவாண்டி ! 51

பத்துத் திசைக்கும் அடங்காப் பருவமடி !
எத்திசைக்கும் எங்கும் இடைவிடாத் தேகமடி ! 52

தித்திக்க வூறுமடி சித்த முடையார்க்குப்
பத்திக் கடலுட் பதித்தபரஞ் சோதியடி ! 53

உள்ளுணர்வாய் நின்றவர்தம் உணர்வுக் குணர்வாண்டி !
எள்ளளவும் உள்ளத்திலே ஏறிக் குறையாண்டி ! 54

தூருந் தலையுமிலான் ; தோற்றம் ஒடுக்கமிலான் ;
ஆரும் அறியாமல அகண்டமாய் நின்றாண்டி ! 55

எத்தனையோ அண்டத் திருந்தவர்கள் எத்தனைபேர் ?
அத்தனைபே ருண்டாலும் அணுவுங் குறையாண்டி ! 56

வாக்கும் மனமும் வடிவுமிலா வான்பொருள்காண் !
போக்கும் வரவுமிலான் பொருவரிய பூரணன்காண் ! 57

காட்சிக் கெளியான்காண் ! கண்டாலுங் காணான்காண் !
மாட்சிமனம் வைத்தார்க்கு மாணிக்கத் துளவொளிகாண்! 58

வாழ்த்தி அவனை வழிபாட்டால் மன்னுயிர்கள்
தோற்ற அறியான்காண் ! சொல்லிறந்த சோதியன்காண்! 59

ஐயம் அறுத்தவனை ஆராய்வா ருண்டானால்,
வையகத்தே வந்து மலர்ப்பாதம் வைத்திடுவான். 60

அணுவுக்கும் மேருவுக்கும் அகம்புறமாய் நின்றான்காண் !
கணுமுற்றும் ஞானக் கரும்பின் தெளிவான்காண் ! 61

எந்நாளும் இந்நாளும் இப்படியாய் அப்படியாய்ச்
சொன்னாலுங் கேளான்காண் ! சோத்திரத்திற் கொள்ளான்காண்!

ஆத்தாளுக் காத்தாளாம்; அப்பனுக்கும் அப்பனுமாம்;
கோத்தார்க்குக் கோத்தனிலை கொண்ட குணக்கடல்காண்! 63

இப்போ புதிதோடி? எத்தனைநாள் உள்ளதடி?
அப்போதைக் கப்போ தருளறிவுந் தந்தாண்டி! 64

பற்றற்றார் பற்றுகப் பற்றி யிருந்தாண்டி!
குற்றம் அறுத்தாண்டி! கூடி யிருந்தாண்டி! 65

வெட்ட வெளியிலெனை மேவி யிருந்தாண்டி!
பட்டப் பகலிலடி பார்த்திருந்தா ரெல்லோரும். 66

வாழ்வான வாழ்வெனக்கு வந்ததடி வாழாமல்;
தாழாமற் றாழ்ந்தேண்டி சற்றுங் குறையாமல். 67

பொய்யான வாழ்வெனக்குப் போதுமெனக் காணேண்டி!
மெய்யான வாழ்வெனக்கு வெறும்பாழாய் விட்டதடி! 68

கன்னி யழித்தவனைக் கண்ணாரக் கண்டேண்டி!
என்னியல்பு நானறியேன், ஈதென்ன மாயமடி? 69

சொல்லாலே சொல்லுதற்குச் சொல்லவாய் இல்லையடி!
எல்லாருங் கண்டிருந்து மிப்போ தறியார்கள். 70

கண்மாயம் இட்டாண்டி! கருத்தும் இழந்தேண்டி!
உண்மாய மிட்டவனை யுருவழியக் கண்டேண்டி! 71

என்னசொல்லப் போறேனான் இந்த அதிசயத்தை!
கன்னி யிளங்கமுகு காய்த்ததடி கண்ணார 72

ஆர்ந்தவிடம் அத்தனையும் அருளா யிருக்குமடி!
சார்ந்தவிட மெல்லாம்சவ் வாது மணக்குதடி! 73

இந்த மணமெங்கும் இயற்கைமண மென்றறிந்தே
அந்தச் சுகாதீதத் தருட்கடலில் மூழ்கினண்டி! 74

இரும்புநிறை நீர்போல எனைவிழுங்கிக் கொண்டாண்டி!
அரும்புநிறை வாசனைபோ லன்றே யிருந்தாண்டி! 75

அக்கினி கற்பூரத்தை அறவிழுங்கிக் கொண்டாற்போல்
மக்கினம் பட்டுள்ளே மருவி யிருந்தாண்டி! 76

கடல்நீரும் ஆறும்போற் கலந்துகரை காணேண்டி!
உடலு முயிரும்போல் உட்கலந்து நின்றாண்டி! 77

பொன்னுமுரை மாற்றும்போற் பொருவரிய பூரணன்காண்
மன்னுமனு பூதியடி மாணிக்கத் துள்ளொளிபோல். 78

கங்குகரை யில்லாண்டி ! கரைகாணாக் கப்பலடி !
எங்குமள வில்லாண்டி ! ஏகமாய் நின்றாண்டி ! 79

தீவகம் போலென்னைச் சேர்ந்தபர சின்மயன்காண் !
பாவகமொன் றில்லாண்டி! பார்த்திடமெல் லாம்பரன்காண்!

உள்ளார்க்கும் உள்ளாண்டி! ஊருமில்லான் பேருமில்லான் ;
கள்ளப் புலனறுக்கக் காரணமாய் வந்தாண்டி ! 81

அப்பிறப்புக் கெல்லாம் அருளாம் அமர்ந்தாண்டி !
இப்பிறப்பில் வந்தா னிவனுகு மெய்ப்பொருள்காண் ! 82

நீரொளிபோ லெங்கும் நிறைந்த நிராமயன்காண்!
பாரொளிபோ லெங்கும் பரந்த பராபரன்காண் ! 83

நூலால் உணர்வரிய நுண்மையினும் நுண்மையன்காண் !
பாலாறு சர்க்கரைபோற் பரந்தபரி பூரணன்காண் ! 84

உளக்கண்ணுக் கல்லா தூன்கண்ணால் ஓருமதோ ?
விளக்குச் சுடரொளிபோல் மேவி யிருந்தாண்டி ! 85

கல்லு ளிருந்த கனலொளிபோற் காரணமாய்ப்
புல்லி யிருந்தும் பொருவரிய பூரணன்காண் ! 86

பொற்பூவும் வாசனைபோற் போதம் பிறந்தார்க்கு ;
கற்பூவும் வாசனைபோற் காணாக் கயவருக்கு. 87

மைக்குழம்பும் முத்தும்போல் மருவிமற வாதவர்க்கு !
கைக்குட் கனியாகுங் கருவறுத்த காரணர்க்கு. 88

பளிங்கிற் பவளமடி பற்றற்ற பாவலர்க்கு ;
கிளிஞ்சிலை வெள்ளியென்பார் கிட்டாதார் கிட்டுவரோ ? 89

எட்டுக் கடங்காண்டி ! எழுத்திற் பிறவாண்டி !
நாட்டில் நரிகளெல்லாம் நற்புரவி செய்தாண்டி ! 90

பஞ்சப் பிரளயத்து மிஞ்சி யிருப்பாண்டி !
நஞ்சு பொதிமிடற்றான் நயனத் தழல்விழியான். 91

அகங்காக்கும் புறங்காக்கும் அளவிலா அண்டமுதல்
செகங்காக்குங் காணாத் திசைபத்துங் காக்குமடி ! 92

பேசாப் பிரம்மடி ! பேச்சிறந்த பேரொளிகாண் !
ஆசாபா சங்கள் அணுகாத பேரொளிகாண்! 93

தேச மிறந்தவன்காண் ! திசையிறந்த தெண்கடல்காண் !
ஊசி முனையூன்ற இல்லா வுறுபொருள்காண் ! 94

சிப்பியில் முத்தொளிகாண் ! சின்மயநோக் கில்லார்க்கே
அப்பி லொளிபோல் அமர்ந்த அரும்பொருள்காண் ! 95

ஆலாம் விருட்சமடி ; அளவிலாச் சாகையடி !
மேலாம் பதங்கள்விசும் பூடுருவு மெய்ப்பொருள்காண் ! 96

வங்கிசமெல் லாங்கடந்து மருவா மலர்ப்பதங்காண் !
அங்கிசமா யெங்கும் ஆய்ந்த அரும்பொருள்காண் ! 97

நாமநட்ட மானதடி ! நவிலவிட மில்லையடி !
காமனைக்கண் ணாலெரிக்கக் கனல்வித்த காரணன்காண் ! 98

கொட்டாத செம்பொனடி ! குளியாத் தரளமடி !
எட்டாத கொம்பிலடி ஈப்புகாத் தேனமுதம் ; 99

காணிப்பொன் னாணியுடன் கல்லுரைமாற் றின்னதென்றே
ஆணியுடன் கூட்டி யடங்கலிட்டுக் கொண்டாண்டி ! 100

அளவிறந்த அண்டத்தார் அத்தனைபே ருண்டாலும்
பிளவளவுந் தான்சற்றும் பேசாப் பிரமமடி ! 101

கன்னெஞ்சி னுள்ளே கழுநீலம் பூத்தாற்போல்
என்னெஞ்சி னுள்ளே யிணையடிகள் வைத்தாண்டி ! 102

வேதப் புரவியடி ! விரைந்தோடி யுபமறியார் ;
காதற்ற ஞானமடி ! காண்பார் கருத்துடையோர். 103

பாச வினையைப் படப்பார்த்த பார்வையுடன்
நேசத்தைக் காட்டியவன் நில்லென்று சொன்னாண்டி ! 104

ஓசை யொடுங்குமிடம் ஓங்காரத் துள்ளொளிகாண் !
பேசா திருக்கும் பிரமமிது வென்றாண்டி ! 105

சின்மய நன்னோக்காற் சிற்சொருபங் காட்டியெனைத்
தன்மயமா யாக்கிய தானவனாய் நின்றாண்டி ! 106

தானென்னைப் பார்த்தாண்டி ! தன்னைத்தா னல்லாமல்
நானென்ன சொல்லுவண்டி ! நவிலவிட மில்லையடி ! 107

இன்றிருந்து நாளைக் கிறக்கிறபே ரெல்லாரும்
என்றும்பரி பூரணத்தி லினிதிருக்கச் சொன்னாண்டி ! 108

பார்க்கி லெளிதலவோ ? பற்றற்ற பற்றலவோ ?
ஆர்க்கு மிடங்காட்ட அவனிதனில் வந்தாண்டி ! 109

இத்தனை காலமடி இறந்து பிறந்ததெல்லாம்
இத்தனையு மில்லையடி ! இரும்பிலுறை நீரானேன். 110

எக்காலம் பட்டதடி இறந்து பிறந்தகெல்லாம் ?
அக்கால மெல்லாம் அழுந்தினேன் நானாகில் 111

காலங் கழிந்ததடி ! கர்மமெல்லாம் போச்சுதடி !
நாலு வகைக்கருவும் நாமநட்ட மாச்சுதடி ! 112

முப்பாழுக் கப்பால் முதற்பாழ் முழுமுதலாய்
இப்போது வந்தான்காண்! எனைவிழுங்கிக் கொண் ... ன்காண்!

பாலின்கண் நெய்யிருந்தாற் போலப் பரஞ்சோதி
ஆலிங்க னஞ்செய் தறவிழுங்கிக் கொண்டாண்டி ! 114

தெத்தபட மாணேண்டி ! தீயிருப்பில் நீரானேன் ;
ஒத்தவிடம் நித்திரையென் றோது முணாவறிந்தேன். 115

ஒப்பும் உவமையுமற் றோதவரி தாயபொருள்
இப்பூவி னிற்குருவே யென்னவந்தோன் தாள்வாழி ! 116

ஒப்பாரி சொல்லிடினும் உவமை பிழைத்திடினும்
முப்பாழுங் கற்றுணர்ந்தோர் முன்னோர் பொருத்தருள்வார்.

## இறந்த காலத்திரங்கல்

வார்த்தைத் திறமில்லா மனிதருக்குப் புன்சொல்லாஞ்
சாத்திரங்கள் சொல்லிச் சதிரிழந்து கெட்டேனே ! 1

மெத்தமெத்தச் செல்வாக்கில் வேறு மருளடுத்துத்
தத்தித் தலைகீழாய்த் தானடந்து கெட்டேனே ! 2

வழக்கத் தலங்களினு மண்பெண்பொன் னாசையினும்
பழக்கந் தவிராமற் பதியிழந்து கெட்டேனே ! 3

ஆணி பொருந்தும் அரும்பூமி யத்தனையுங்
காணி நமதென்று கனம்பேசிக் கெட்டேனே! 4

ஆசார மில்லா அசட ருடன்கூடிப்
பாசாங்கு பேசிப் பதியிழந்து கெட்டேனே! 5

குருமார்க்க மில்லாக் குருட ருடன்கூடிக்
கருமார்க்கத் துள்ளே கருத்தழிந்து கெட்டேனே! 6

ஆலம் அருந்தும் அரன்பெருமை யெண்ணாமல்
பாலர்பெண்டிர் மெய்யென்று பதியிழந்து கெட்டேனே! 7

பிணவாச முற்ற பெருங்காயம் மெய்யென்று
பணவாசை யாலே பதியிழந்து கெட்டேனே! 8

கண்ட புலவர் கனக்கவே தாம்புகழ
உண்ட வுடம்பெல்லா முப்பரித்துக் கெட்டேனே! 9

எண்ணிறந்த சென்மம் எடுத்தும் சிவபூசை
பண்ணிப் பிழையாமற் பதியிழந்து கெட்டேனே! 10

சிற்றெறும்பு சற்றுந் தீண்டப் பொறுவுடம்பை
உற்றுருக்க வுஞ்சுடவும் ஒப்பித்து மாண்டேனே! 11

தன்னுடம்பு தானே தனக்குப் பகையாமென்
றெண்ணுமுணர் வில்லாம லின்பமென்று மாண்டேனே! 12

தோலெலும்பும் மாங்கிசமுந் தொல்லன்னத் தால்வளரும்
மேலெலும்புஞ் சுற்றமென்று வீறாப்பாய் மாண்டேனே! 13

போக்கு வரத்தும் பொருள்வரத்துங் காணாமல்
வாக்கழிவு சொல்லி மனமறுகிக் கெட்டேனே! 14

## நெஞ்சொடு புலம்பல்

மண்காட்டிப் பொன்காட்டி மாய விருள்காட்டிச்
செங்காட்டி லாடுகின்ற தேசிகனைப் போற்றாமல்,
கண்காட்டும் வேசியர்தங் கண்வலையிற் சிக்கிமிக
அங்காடி நாய்போல் அலைந்தனையே நெஞ்சமே! 1

புட்பா சனவணையிற் பொற்பட்டு மெத்தையின்மேல்
ஒப்பா அணிந்தபணி யோடாணி நீங்காமல்,
இப்பாய்க் கிடத்தி இயமனுயிர் கொள்ளுமுன்னே
முப்பாலைப் போற்றி முயங்கிலையே நெஞ்சமே! 2

முப்பாழும் பாழாய் முதற்பாழ் வெறும்பாழாய்
அப்பாழுக் கப்பானின் ருடுமதைப் போற்றுமல்,
இப்பாழாம் வாழ்வைநம்பி யேற்றவர்க்கொன் றீயாமல்
துப்பாழாய் வந்தவினை சூழ்ந்தனையே நெஞ்சமே! 3

அன்னம் பகிர்ந்திங் கலந்தோர்க் குதவிசெயுஞ்
சென்ம மெடுத்துஞ் சிவனருளைப் போற்றுமல்,
பொன்னும் மனையுமெழிற் பூவையரும் வாழ்வுமிவை
இன்னுஞ் சதமாக எண்ணினையே நெஞ்சமே! 4

முற்றொடர்பிற் செய்த முறைமையால் வந்தசெல்வம்
இற்றைநாட் பெற்றோமென் றெண்ணுது பாழ்மனமே!
அற்றவர்க்கு மீயாமல் அரன்பூசை ஓராமல்
கற்றவர்க்கு மீயாமற் கண்மறைந்து விட்டனையே! 5

மாணிக்க முத்து வயிரப் பணிபூண்டு
ஆணிப்பொன் சிங்கா தனத்தி லிருந்தாலும்
காணித் துடலைநமன் கட்டியே கைப்பிடித்தால்
காணிப்பொன் கூடவரக் காண்கிலமே நெஞ்சமே! 6

கற்கட்டு மோதிரநற் கடுக்கனரை ஞாண்பூண்டு
திக்கெட்டும் போற்றத் திசைக்கொருத்த ரானாலும்
பற்கிட்ட ஏமனுயிர் பந்தாடும் வேளையிலே
கைச்சட்டங் கூடவரக் காண்கிலமே நெஞ்சமே! 7

முன்னம்நீ செய்ததவம் முப்பாலுஞ் சேருமன்றிப்
பொன்னும் பணிதிகளும் பூவையுமங் கேவருமோ?
தன்னைச் சதமாகச் சற்குருவைப் போற்றுமல்
கண்ணற்ற அந்தகன்போற் காட்சியற்றாய் நெஞ்சமே! 8

பையரவம் பூண்ட பரமர் திருப் பொற்றாளைத்
துய்ய மலர்பறித்துத் தொழுது வணங்காமல்,
கையில் அணிவளையுங் காலிலிடும் பாடகமும்
மெய்யென் றிருமாந்து விட்டனையே நெஞ்சமே ! 9

மாதுக் கொருபாகம் வைத்தவரன் பொற்றாளைப்
போதுக் கொருபோதும் போற்றி வருந்தாமல்,
வாதுக்குத் தேடியிங்க மண்ணிற் புதைத்துவைத்தே
ஏதுக்குப் போகநீ யெண்ணினையே நெஞ்சமே ! 10

அஞ்சருளைப் போற்றி யைந்துபுல னைத்துறக்க
நெஞ்சே யுனக்கு நினைவுநான் சொல்லுகிறேன் ;
வஞ்சகத்தை நீக்கி மறுநினைவு வாராமல்
செஞ்சரணத் தாளைச் சிந்தைசெய்வாய் நெஞ்சமே ! 11

அற்புதமா யிந்தவுட லாவி யடங்குமுன்னே
சற்குருவைப் போற்றித் தவம்பெற்று வாழாமல்,
உற்பத்தி செம்பொன் உடைமைபெரு வாழ்வைநம்பிச்
சற்பத்தின் வாயிற் றவளைபோ லானேனே ! 12

உற்றார் பெற்றார் உடன்பிறப்பார் பிள்ளைகளார்
மற்றா ரிருந்தாலென் ? மாளும்போ துதவுவரோ ?
கற்றா இழந்தவிளங் கன்றதுபோ லேயுருகிச்
சிற்றாகிச் சிற்றின்பஞ் சேர்ந்தனையே நெஞ்சமே ! 13

வீடிருக்கத் தாயிருக்க வேண்டுமனை யாளிருக்கப்
பீடிக்க வூணிருக்கப் பிள்ளைகளுந் தாமிருக்க
மாடிருக்கக் கன்றிருக்க வைத்த பொருளிருக்கக்
கூடியிருக்க நீபோன கோலமென்ன கோலமே ! 14

கந்தனமுங் குங்குமமுஞ் சாந்தும் பரிமளமும்
விந்தைகளாய்ப் பூசிமிகு வேடிக்கை யொய்யாரக்
கந்தமலர் சூடுகின்ற கன்னியருந் தாமிருக்க
எந்தவகை போனாயென் றெண்ணிலையே நெஞ்சமே ! 15

காற்றுத் துருத்தி கடியவினைக் குள்ளான
ஊற்றைச் சடலத்தை யுண்டென் றிறுமாந்து
பாத்திரங்கி யன்னம் பசித்தோருக் கீயாமல்,
ஆற்றுவெள்ளம் போல அளாவினையே நெஞ்சமே! 16

நீர்க்குமிழி வாழ்வைநம்பி நிச்சயமென் றேயெண்ணிப்
பாக்களவாம் அன்னம் பசித்தோர்க் களியாமல்,
போர்க்குளெம தூதன் பிடித்திழுக்கு மப்போது
ஆர்படுவா ரென்றே யறிந்திலையே நெஞ்சமே! 17

சின்னஞ் சிறுநுதலாள் செய்த பலவினையால்
முன்னந்த மார்பில் முளைத்த சிலந்திவிம்மி
வன்னந் தளதளப்ப மயங்கிவலைக் குள்ளாகி
அன்னம் பகிர்ந்துண்ண அறிந்திலையே நெஞ்சமே! 18

ஓட்டைத் துருத்தி யுடையும் புழுக்கூட்டை
ஆட்டுஞ் சிவசித்த ருளைமிகப் போற்றியே
வீட்டைத் திறந்து வெளியையொளி யாலழைத்துக்
காட்டும் பொருளிதென்று கருதிலையே நெஞ்சமே! 19

ஊன்பொதிந்த காயம் உளைந்த புழுக்கூட்டைத்
தான்சுமந்த தல்லால்நீ சற்குருவைப் போற்றாமல்,
கான்பரந்த வெள்ளங் கரைபுரளக் கண்டேகி
மீன்பரந்தாற் போலே விசாரமுற்றாய் நெஞ்சமே! 20

உடக்கை ஒருக்கி உயிரை யடைத்துவைத்த
சடக்கைச் சதமென்று சார்ந்தங் கிறுமாந்தை!
உடக்கைத் தகர்த்தே உயிரையெமன் கொள்கையிலே
அடக்கமாய் வைத்தபொரு ளங்குவர பாட்டாதே! 21

தித்திக்குந் தேனைத் தெவிட்டாத தெள்ளமுதை
முத்திக்கு வித்தான முப்பாழை போற்றாமல்,
பற்றிப் பிடித்தியமன் பாசத்தாற் கட்டும்வண்ணம்
சுற்றி யிருக்கும்வினை சூழ்ந்தனையே நெஞ்சமே! 22

அஞ்செழுத்தாய் எட்டெழுத்தாய் ஐம்பத்தோ ரட்சரமாய்ப்
பிஞ்செழுத்தாய் நின்ற பெருமானைப் போற்றாமல்,
வஞ்சகமா யுற்றமுலை மாதர்வலைக் குள்ளாகிப்
பஞ்சரித்துத் தேடிப் பாழுக் கிறைத்தோமே! 23

அக்கறுகு கொன்றைதும்பை அம்புலியுஞ் சூடுகின்ற
சொக்கர் திருத்தாளைத் தொழுது வணங்காமல்,
மக்கள்பெண்டிர் சுற்றமுடன் வாழ்வைமிக நம்பியன்பாய்
எக்கா லமுமுண்டென் றெண்ணினையே நெஞ்சமே! 24

ஆண்ட குருவின் அருளை மிகப்போற்றி
வேண்டுங் கயிலாய வீட்டுவழி பாராமல்,
பூண்டகுழல் மாதுநல்லார் பொய்மாய்கைக் குள்ளாகித்
தூண்டில் அகப்பட்டுத் துடிகெண்டை யானேனே! 25

ஏணிப் பழுவாம் இருளையறுத் தாளமுற்றும்
பேணித் தொழுங்கயிலைப் பேறுபெற மாட்டாமல்,
காண அரும்பொருளாய்க் கண்கலக்கப் பட்டடியேன்
ஆணியற்ற மாமரம்போ லாகினனே நெஞ்சமே! 26

கோத்துப் பிரகாசங் கொண்டுருகி அண்டமெல்லாம்
காத்தப் படியே கயிலாயஞ் சேராமல்,
வேற்றுருவப் பட்டடியேன் வெள்ளம்போ லுள்ளுருகி,
ஏற்றுங் கழுவில் இருந்தபிணம் ஆனேனே! 27

நிலைவிட் டுடலையுயிர் நீங்கி அகலுமுன்னே
சிலைதொட்ட வேடனெச்சில் தின்றானைச் சேராமல்
வலைபட் டுழலுகின்ற மான்போற் பரிதவித்துத்
தலைகெட்ட நூலதுபோற் றட்டறிந்தாய் நெஞ்சமே! 28

முடிக்குமயிர்ப் பொல்லா முழுக்குரம்பை மின்னாரின்
இடைக்கும் நடைக்கும் இதங்கொண்ட வார்த்தைசொல்லி
அடிகொண்ட தில்லைவனத் தையனே! நாயனையேன்
விடக்கை யிழந்த மிருகமது வானேனே! 29

பூவாணர் போற்றும் புகழ்மதுரைச் சொக்கரது
சீர்பாதம் போற்றிச் சிவலோகஞ் சேராமல்,
தாவாரந் தோறுந் தலைபுகுந்த நாய்போல
ஆகாத நெஞ்சமே! அலைந்து திரிந்தாயே! 30

பத்தெட்டாய் ஈரைந்தாய்ப் பதின்மூன் றிரண்டொன்றாய்
ஒத்திட்டு நின்றதோர் ஓவியத்தைப் போற்றாமல்,
தெத்திட்டு நின்ற திரிகண்ணிக் குள்ளாகி
வித்திட்டாய் நெஞ்சே! விடவும் அறியாயே! 31

அஞ்சு முருவாகி யைம்மூன் றுமெட்டுமொன்றாய்
மிஞ்சி யிருந்த விளக்கொளியைப் போற்றாமல்,
பஞ்சிலிடு வன்னியைப்போற் பற்றிப் பிடியாமல்,
நஞ்சுண்ட கெண்டையைப்போல் நானலைந்து கெட்டேனே!

ஊன முடனே யுடையும் புழுக்கூட்டை
மானமுட னேசுமந்து மண்ணுலகில் மாளாமல்,
ஆனதொரு பஞ்சவர்க ளாண்டிருந்த தேசம்விட்டுப்
போனது போலேநாம் போய்ப்பிழைத்தோ மில்லையே! 33

ஊறா யிறைக்கின்ற வுப்பிருந்த பாண்டத்தை
நாறாமல் நாறி நழுவும் புழுக்கூட்டை
வீறாம் புரதனை விரும்புகின்ற தெப்படியென்
றாறாத நாட்டில் அகன்றிருந்தே னில்லையே! 34

அரிய அரிதேடி அறியா ஒருமுதலைப்
பரிவுடனே போற்றும் பரஞ்சுடரைப் போற்றாமல்,
கரியபெரு வாழ்வைநம்பிக் காமத் தழுந்தியே
அரிவாயிற் பட்ட நரியதுபோ லானேனே! 35

தந்திரத்தை யுன்னித் தவத்தை மிகநிறுத்தி,
மந்திரத்தை யுன்னி மயங்கித் தடுமாறி,
விந்துருகி நாதமாம் மேலொளியைக் காணாமல்
அந்தரத்தே கோலெறிந்த அந்தகன்போ லானேனே! 36

விலையாகிப் பாணனுக்கு வீறடிமைப் பட்டதுபின்
சிலையார்கை வேடனெச்சிற் றின்றானைப் போற்றாமல்
அலைவாய்த் துரும்பதுபோ லாணவத்தி னலமுங்கி,
உலைவாய் மெழுகதுபோ லுருகினையே நெஞ்சமே! 37

## பூரணமாலை

மூலத் துதித்தெழுந்த முக்கோணச் சக்கரத்துள்
வாலைதனைப் போற்றாமல் மதிமறந்தேன் பூரணமே! 1

உந்திக் கமலத் துதித்துநின்ற பிரமாவைச்
சந்தித்துக் காணமற் றட்டழிந்தேன் பூரணமே! 2

நாவிக் கமல நடுநெடுமால் காணமல்,
ஆவிகெட்டு யானு மறிவழிந்தேன் பூரணமே! 3

உருத்திரனை யிருதயத்தி லுண்மையுடன் பாராமல்,
கருத்தழிந்து நாளுங் கலங்கினேன் பூரணமே! 4

விசுத்தி மகேசுரனை விழிதிறந்து பாராமல்,
பசித்துருகி நெஞ்சம் பதறினேன் பூரணமே! 5

நெற்றி விழியுடைய நிர்மல சதாசிவத்தைப்
புத்தியுடன் பாராமற் பொறியழிந்தேன் பூரணமே! 6

நாதவிந்து தன்னை நயமுடனே பாராமல்,
போத மயங்கிப் பொறியழிந்தேன் பூரணமே! 7

உச்சி வெளியை யுறுதியுடன் பாராமல்,
அச்சமுட னானு மறிவழிந்தேன் பூரணமே! 8

மூக்கு முனையை முழித்திருந்து பாராமல்,
ஆக்கைகெட்டு நானு மறிவழிந்தேன் பூரணமே! 9

இடைபிங் கலையின் இயல்பறிய மாட்டாமல்,
தடையுடனே யானுந் தயங்கினேன் பூரணமே! 10

ஊனுக்குள் நீநின் றுலாவினதைக் காணாமல்,
நானென் றிருந்து நலமழிந்தேன் பூரணமே ! 11

மெய்வாழ்வை நம்பி விரும்பிமிக வாழாமல்,
பொய்வாழ்வை நம்பிப் புலம்பினேன் பூரணமே ! 12

பெண்டுபிள்ளை தந்தைதாய் பிறவியுடன் சுற்றமிவை
உண்டென்று நம்பி உடலழிந்தேன் பூரணமே ! 13

தண்டிகைப்பல் லக்குடனே சகலசம் பத்துகளும்
உண்டென்று நம்பி புணர்வழிந்தேன் பூரணமே ! 14

இந்த வுடலுயிரை எப்போதுந் தான்சதமாய்ப்
பந்தமுற்று நானும் பதமழிந்தேன் பூரணமே ! 15

மாதர் பிரபஞ்ச மயக்கத்தி லேவிழுந்து
போத மயங்கிப் பொறியழிந்தேன் பூரணமே ! 16

சரியைகிரி யாயோகந் தான்ஞானம் பாராமல்
பரிதிகண்ட மதியதுபோற் பயனழிந்தேன் பூரணமே ! 17

மண்பெண்பொன் னாசை மயக்கத்தி லேவிழுந்து
கண்கெட்ட மாடதுபோற் கலங்கினேன் பூரணமே ! 18

தனிமுதலைப் பார்த்துத் தனித்திருந்து வாழாமல்,
அனியாய மாய்ப்பிறந்திங் கலைந்துநின்றேன் பூரணமே ! 19

ஈராறு தன்கலைக்குள் இருந்துகூத் தாடினதை
ஆராய்ந்து பாராம லறிவழிந்தேன் பூரணமே 20

வாசிதனைப் பார்த்து மகிழ்ந்துனைத்தான் போற்றாமல்,
காசிவரை போய்த்திரிந்து காலலுத்தேன் பூரணமே ! 21

கருவிகள்தொண் ணூற்றாறிற் கலந்துவிளை யாடினதை
இருவிழியாற் பாராமல் ஈடழிந்தேன் பூரணமே ! 22

உடலுக்குள் நீநின் றுலாவினதைக் காணாமல்
கடமலைதோ றுந்திரிந்து காலலுத்தேன் பூரணமே ! 23

எத்தேச காலமும்நாம் இறவா திருப்பமென்று
உற்றுனைத்தான் பாராமல் உருவழிந்தேன் பூரணமே ! 24

எத்தனைதாய் தந்தை யிவர்களிடத் தேயிருந்து
பித்தனா யானும் பிறந்திறந்தேன் பூரணமே ! 25

பெற்றலுத்தார் தாயார் பிறந்தலுத்தேன் யானுமுன்றன்
பொற்றுணைத்தாள் தந்து புகலருள்வாய் பூரணமே! 26

உற்றார் அழுதலுத்தார்; உறன்முறையார் சுட்டலுத்தார்;
பெற்றலுத்தார் தாயார்; பிறந்தலுத்தேன் பூரணமே! 27

பிரமன் படைத்தலுத்தான்; பிறந்திறந்து நானலுத்தேன்;
உரமுடைய அக்கினிதா னுண்டலுத்தான் பூரணமே! 28

எண்பத்து நானூறு யிரஞ்செனன முஞ்செனித்துப்
புண்பட்டு நானும் புலம்பினேன் பூரணமே! 29

என்னை யறியாம லெனக்குள்ளே நீயிருக்க,
உன்னை யறியாமல் உடலழிந்தேன் பூரணமே! 30

கருவாய் உருவாய்க் கலந்துலகெ லாம்நீயாய்
அருவாகி நின்ற தறிகிலேன் பூரணமே! 31

செம்பொற் கமலத் திருவடியைப் போற்றுமல்,
பம்பைகொட்ட ஆடும் பசாசானேன் பூரணமே! 32

எனக்குள்ளே நீயிருக்க, உனக்குள்ளே நானிருக்க,
மனக்கவலைதீர வரமருள்வாய் பூரணமே! 33

எழுவகைத் தோற்றத் திருந்துவிளை யாடினதைப்
பழுதறவே பாராமற் பயனழிந்தேன் பூரணமே! 34

சாதிபே தங்கள் தமையறிய மாட்டாமல்
வாதனையால் நின்று மயங்கினேன் பூரணமே! 35

குலமொன்றுய் நீபடைத்த குறியையறி யாமலியான்
மலபாண்டத் துள்ளிருந்து மயங்கினேன் பூரணமே! 36

அண்டபிண்ட மெல்லாம் அணுவுக் கணுவாய்நீ
கொண்ட வடிவின் குறிப்பறியேன் பூரணமே! 37

சகத்திரத்தின் மேலிருக்குஞ் சற்குருவைப் போற்றுமல்,
அகத்தினுடை யாணுவத்தா லறிவழிந்தேன் பூரணமே! 38

ஐந்து பொறியை அடக்கியுனைப் போற்றுமல்,
நைந்துருகி நெஞ்சம் நடுங்கினேன் பூரணமே! 39

என்னைத் திருக்கூத்தால் இப்படிநீ யாட்டுவித்தாய்,
உன்னை யறியா துடலழிந்தேன் பூரணமே! 40

நாம்புதசை தோலெலும்பு நாற்றத்துக் குள்ளிருந்து
வரம்பறிய மாட்டாமல் மயங்கினேன் பூரணமே! 41

சிலந்தியுடை நூல்போற் சிவசெந்துக் குள்ளிருந்த
நலந்தனைத்தான் பாராமல் நலமழிந்தேன் பூரணமே! 42

குருவாய்ப் பரமாகிக் குடிலைசத்தி நாதவிந்தாய்
அருவா யுருவான தறிகிலேன் பூரணமே! 43

ஒளியாய்க் கதிர்மதியாய் உள்ளிருளாய் அக்கினியாய்
வெளியாகி நின்ற வியனறியேன் பூரணமே! 44

இடையாகிப் பிங்கலையாய் எழுந்த சுழுமுனையாய்
உடலுயிராய் நீயிருந்த வுளவறியேன் பூரணமே! 45

மூலவித்தாய் நின்று முளைத்துடல்தோ றும்மிருந்து
கால னெனவழிக்குங் கணக்கறியேன் பூரணமே! 46

உள்ளும் புறம்புமா யுடலுக்குள் நீயிருந்த
தெள்ளளவும் நானறியா திருந்தேனே பூரணமே! 47

தாயாகித் தந்தையாய்த் தமர்கிளைஞர் சுற்றமெல்லாம்
நீயாகி நின்ற நிலையறியேன் பூரணமே! 48

விலங்குபுள்ளூர் வனஅசரம் விண்ணவர்நீர்ச் சாதிமனுக்
குலங்களெழு வகையினின்ற குறிப்பறியேன் பூரணமே! 49

ஆணாகிப் பெண்ணாய் அலியாகி வேற்றுருவாய்
மாணாகி நின்ற வகையறியேன் பூரணமே! 50

வாலையாய்ப் பக்குவமாய் வளர்ந்துகிழந் தானதும்
பாலையாய் நின்ற பயனறியேன் பூரணமே! 51

பொய்யாய்ப் புவியாய்ப் புகழ்வா ரிதியாகி
மெய்யாகி நின்ற வியனறியேன் பூரணமே! 52

பூவாய் மணமாகிப் பொன்னாகி மாற்றாகி
நாவாய்ச்சொல் லான நயமறியேன் பூரணமே! 53

முதலாய் நடுவாகி முப்பொருளாய் மூன்றுலகாய்
இதமாகி நின்ற இயலறியேன் பூரணமே! 54

ஊனாய் உடலுயிராய் உண்ணிறைந்த கண்ணொளியாய்த்
தேனாய் ருசியான திறமறியேன் பூரணமே! 55

வித்தாய் மரமாய் விளைந்தகனி காய்பூவாய்ச்
சித்தாகி நின்ற திறமறியேன் பூரணமே! 56

ஐவகையும் பெற்றுலக அண்டபகி ரண்டமெல்லாந்
தெய்வமென நின்ற திறமறியேன் பூரணமே! 57

மனமாய்க் கனவாகி மாய்கையாய் உள்ளிருந்து
நினைவாகி நின்ற நிலையறியேன் பூரணமே! 58

சத்தி சிவமிரண்டாய்த் தான்முடிவி லொன்றாகிச்
சித்திரமாய் நின்ற திறமறியேன் பூரணமே! 59

பொறியாய்ப் புலனாகிப் பூதபே தப்பிரிவாய்
அறிவாகி நின்ற அளவறியேன் பூரணமே! 60

வானிற் கதிர்மதியாய் வளர்ந்துபின்னொன் றானதுபோல்
ஊனுடலுக் குள்ளிருந்த வுயிர்ப்பறியேன் பூரணமே! 61

பொய்யும் புலையுமிகப் பொருந்திவீண் பேசலன்றி
ஐயோ வுனையுரைக்க அறிகிலேன் பூரணமே! 62

நிரந்தரமா யெங்கும் நின்றுவிளை யாடினதைப்
பரமதுவே யென்னப் பதமறியேன் பூரணமே! 63

கொல்வாய் ; பிறப்பிப்பாய் ; கூடவிருந் தேசுகிப்பாய் ;
செல்வாய் ; பிறர்க்குள் ; செயலறியேன் பூரணமே! 64

வாரிதியாய் வையமெல்லா மன்னுமண்ட பிண்டமெல்லாஞ்
சாரதியாய் நின்ற தலமறியேன் பூரணமே! 65

வித்தாய் மரமாய் வெளியாய் ஒளியாய்நீ
சத்தா யிருந்த தரமறியேன் பூரணமே! 66

தத்துவத்தைப் பார்த்துமிகத் தன்னை யறிந்தறிவால்
உய்த்துனைத்தான் பாராம லுய்வாரோ பூரணமே! 67

ஒன்றா யுயிராய் உடல்தோறும் நீயிருந்தும்
என்று மறியார்க ளேழைகள்தாம் பூரணமே! 68

நேற்றென்றும் நாளையென்றும் நினைப்புமறப் பாய்ப்படைத்து
மாற்றமாய் நின்ற வளமறியேன் பூரணமே! 69

மனம்புத்தி சித்தம் மகிழறிவாங் காரமதாய்
இனவாந் தலமான நிலையறியேன் பூரணமே! 70

உருப்பேத மின்றி யுயர்ந்தசத்த பேதமதாய்க்
குருப்பேத மாய்வந்த குணமறியேன் பூரணமே! 71

சட்சமய பேதங்கள் தான்வகுத்துப் பின்னுமொரு
உட்சமய முண்டென் றுரைத்தனையே பூரணமே! 72

முப்பத்தி ரண்டுப்பாய் முனைந்துபடைத் துள்ளிருந்த
செப்படி வித்தைத் திறமறியேன் பூரணமே! 73

என்ன தான் கற்றுலென்? எப்பொருளும் பெற்றுலென்?
உன்னை யறியாதார் உய்வரோ பூரணமே! 74

கற்றறிவோ மென்பார் காணுர்க ளுன்பதத்தைப்
பெற்றறியார் தங்களுக்குப் பிறப்பறுமோ பூரணமே! 75

வானென்பார் அண்டமென்பார் வாய்ஞான மேபேசித்
தானென்பார் வீணர்; தனையறியார் பூரணமே! 76

ஆதியென்பார் அந்தமென்பார் அதற்குள்நடு வாயிருந்த
சோதியென்பார் நாதத் தொழிலறியார் பூரணமே! 77

மூச்சென்பார உள்ளமென்பார் மோனமெனு மோட்சமென்பார்;
பேச்சென்பார் உன்னுடைய பேரறியார் பூரணமே! 78

பரமென்பார் பானுவென்பார் பாழ்வெளி யாய்நின்ற
வரமென்பார் உன்றன் வழியறியார் பூரணமே! 79

எத்தனை பேரோ எடுத்தெடுத்துத் தானுரைத்தார்;
அத்தனைபேர்க் கொன்றுன தறிகிலேன் பூரணமே! 80

நகார மகாரமென்பார் நடுவே சிகாரமென்பார்
வகார யகாரமென்பார் வகையறியார் பூரணமே! 81

மகத்துவமாய்க் காம மயக்கத்துக் குள்ளிருந்து
பகுத்தறிய மாட்டாமற் பயனழிந்தேன் பூரணமே! 82

உண்மைப் பொருளை உகந்திருந்து பாராமற்
பெண்மயக்கத் தாலே பிறந்திறந்தேன் பூரணமே! 83

வாயார வாழ்த்தி மகிழ்ந்துனைத்தான் போற்றுமல்
காய மெடுத்துக் கலங்கினேன் பூரணமே! 84

சந்திரனை மேகமது தான்மறைத்த வாறதுபோற்
பந்தமுற யானுமுனைப் பார்க்கிலேன் பூரணமே! 85

செந்தாமரைத்தாளைத் தினந்தினமும் போற்றாமல்,
அந்தரமாய் நின்றங் கலைந்தேனன் பூரணமே! 86

நீர்மேற் குமிழிபோல் நிலையற்ற காயமிதைத்
தாரகமென் றெண்ணிநான் தட்டழிந்தேன் பூரணமே! 87

நெஞ்ச முருகி நினைந்துனைத்தான் போற்றிநெடு
வஞ்சகத்தைப் போக்க வகையறியேன் பூரணமே! 88

எள்ளுக்கு ளெண்ணெய்போ லெங்கும் நிறைந்திருந்த
துள்ள மறியா துருகினேன் பூரணமே! 89

மாயாப் பிரபஞ்ச மயக்கத்தி லேவிழுந்தே
ஓயாச் சனன மொழித்திலேன் பூரணமே! 90

பூசை யுடன்புவன போகமெனும் போக்கியத்தால்
ஆசையுற்றே நானு மறிவழிந்தேன் பூரணமே! 91

படைத்து மழித்திடுவாய் பார்க்கிற்பிர மாவெழுத்தைத்
துடைத்துச்சிரஞ் சீவியாய்த் துலங்குவிப்பாய் பூரணமே! 92

மந்திரமாய்ச் சாத்திரமாய் மறைநான்காய் நீயிருந்த
தந்திரத்தை நானறியத் தகுமோதான் பூரணமே! 93

அல்லாய்ப் பகலாய் அனவரத காலமெனுஞ்
சொல்லாய்ப் பகுத்த தொடர்பறியேன் பூரணமே! 94

நரகஞ் சுவர்க்கமென நண்ணுமிரண் டுண்டாயும்
அரகரா வென்ப தறிகிலேன் பூரணமே! 95

பாவபுண் ணியமென்னும் பகுப்பாய்ப் படைத்தழித்திங்
காவலையுண் டாக்கிவைத்த அருளறியேன் பூரணமே! 96

சாந்தமென்றும் கோபமென்றுஞ் சாதிபே தங்களென்றும்
பாந்தமென்றும் புத்தியென்றும் படைத்தனையே பூரணமே!

பாச முடலாய்ப் பசுவதுவுந் தானுயிராய்
நேசமுடன் நீபொருளாய் நின்றனையே பூரணமே! 98

ஏதிலடி யாரிரங்கி யிகத்தினில் வந்துன்றன்
பாதமதில் தாழப் பரிந்தருள்வாய் பூரணமே! 99

நானேநீ நீயேநான் நாமிரண்டு மொன்றானால்
தேனின் ருசியதுபோற் றெவிட்டாய்நீ பூரணமே! 100

முடியிலொரு சூனியத்தை முடித்துநின்று பாராமல்
அடியிலொரு சூனியத்தி லலைந்தேனே பூரணமே! 101

பூரண மாலைதனைப் புத்தியுட னோதினர்க்குத்
தாரணியில் ஞானந் தழைப்பிப்பாய் பூரணமே! 102

## ஞானம்—100

### காப்பு :

### நேரிசை வெண்பா

நண்பான நெஞ்சுக்கே ஞானத்தால் நல்லபுத்தி
வெண்பாவாய் நூறும் விளம்பவே—பண்பாக்
ககனப் பதமுறவக் கன்ம மருகக்
ககனகதிர் வேல்முருகன் காப்பு.

நெஞ்சுடனே தாம்புலம்பி நீலநிறத் தாளீன்ற
குஞ்சரத்தை யாதரித்துக் கும்பிட்டால்—கஞ்சமுடன்
காமமுதல் மும்மலத்தின் கட்டறுத்து ஞானமுடன்
பூமிதனில் வாழ்வரெப்போ தும். 1

எப்போ திறைவன் எழுத்தைவிட்டுத் தப்புவோம்?
எப்போ தெழுத்திரண்டை ஏத்துவோம்?—எப்போது
காமன் வலையறுப்போம்? காரொளியைக் கண்டுநெஞ்சே!
ஏமன் வலையறுப்ப தென்று? 2

என்றும் பயமறவே ஈரெழுத்தும் ஓரெழுத்தாய்
நின்றசிவ லிங்கத்தை நெஞ்சே!கேள் :—உண்டுறங்கித்
தேசமெல்லாம் நின்றசைந்த தீயெழுத்தே லிங்கங்காண்
ஆசைவிந்தே ஆவுடை யாள். 3

ஆவுடையா ளோடிருந்தேன் அருளானந் தப்பெறவே
கோவுடையாள் நின்றதினங் கூடியே—பூவுடையாள்
கட்டழகி வைத்தான் கடந்து பெருவெளியில்
இட்டமுடன் நெஞ்சே! இரு. 4

இருவினைக்கு ளாகாதே என்னுடைமை எண்ணாதே
பெருகுசினங் கொண்டுபினற் றாதே—பருவுமலக்
கள்ளமெல்லாம் விட்டுக் கரைந்து கரைந்துருகி
உள்ளுணர்ந்து நெஞ்சேபார் ஒன்று. 5

ஒன்றும் அறியாதே ஓடி அலையாதே
சென்று மயங்கித் திரியாதே—நின்ற
நிலைபிரியா தேநெடிய நெஞ்சே! கொடிய!
புலைவினையு மாற்றும் பொருள். 6

பொருளுடைமை நம்பாதே பொய்வாழ்வை நத்தி
இருளுறவை நம்பி இராதே—பொருளுறவு
கொண்டறிவி னாலே குறித்து வெளியதனைக்
கண்டுபிடித் தேறுநெஞ்சே! காற்று. 7

காற்றுடனே சேர்ந்து கனலுருவைக் கண்டவழி
மாற்றி யினிப்பிறக்க வாராதே—ஏற்றபடி
ஓடி அலையாதே ஓங்காரத் துள்ளொளியை
நாடியிருப் போம்மனமே! நாம். 8

நானென தென்றுவினை நாடி அலையாதே
தானவனே யென்று தரியாய்நீ;—என்மனமே!
வீணாவல் கொள்ளாதே மேலாம் பழம்பொருளைக்
காணாவல் கொள்ளாய் கருத்து. 9

கருத்துவே றாகாதே கண்டிடத்தோ டாதே
விரித்துப் பலவேடம் மேவாப்—பெருத்ததொரு
சஞ்சலத்தை விட்டுச் சலமறிந்து காண்மனமே!
அஞ்செழுத் தாலொன் பது 10

ஒன்பதுவாய்க் கூட்டை யுறுதியென்று நம்பாதே
ஐம்புல னேயென் றணுகாதே—இன்பமுடன்
சிற்பரத்தி னுள்ளே தெளிந்தபர மானந்தத்
துட்பொருளே மெய்யென் றுணர். 11

மெய்யுணர்ந்து பாரா விரிந்தகன்று போகாதே,
அய்யன் திருவிளையாட் டாநெஞ்சே!—செய்யதோர்,
ஆணெழுத்தும் பெண்ணெழுத்து மாகி நடுநின்ற
காணும் பொருளுரைக்குங் கல். 12

கல்லான நெஞ்சே! கவலைக் கருத்தாகிப்
பொல்லாப் பவக்கடலில் போகாதே—எல்லாம்
செலக்குமிழி யென்றுநினை; செம்பொனம்ப லத்தைக்
கலக்கமறப் பார்த்தே கரை. 13

கரைதெரியா இன்பக் கடலில்மூழ் காதே
வரைகடந்த வாழ்வைநத் தாதே—உரையிறந்த
ஓசைவிந்து வேமனமே! உற்றசபை யாலறிந்து
நேசமுள்ள பாக்கியத்தி னில். 14

பாக்கியத்தைக் கண்டு பரிந்து மகிழாதே
தாக்குமிடி வந்தால் சலியாதே—நோக்குமே
ஒருத்தன் றிருவிளையாட் டென்றுணரு நெஞ்சே!
கருத்தாலே நின்று கருது. 15

கருகாதே மங்கையர்கள் காமவலைக் கேங்கி
உருகாதே நெஞ்சே! ஒருவன்—இருகாலைக்
காத்தயர்ந்து சேர்த்துக் கணலைக்கண் காட்டினகண்
போற்றிப்பார் ஒத்தநல்ல பொன். 16

பொன்னாசை மண்ணாசை பூங்குழலா ராசையெனச்
சொன்னாசை யென்றறிந்து சோராதே—எந்நாளும்
ஈசன் அமைத்தாங் கிருக்குங்கா ணிம்மூன்றும்
பாசமது நெஞ்சே பரிந்து. 17

பரிந்து திரியாதே பார்வினைக்கஞ் சாதே
அறிந்துருகிச் சிந்தித் தலையேல்—வருந்தி
கடந்துசித்ர நாடியிலே நாதமறி நெஞ்சே!
உடைந்திடு முன்னை உடம்பு. 18

உடம்பழிந்த பின்மனமே! ஒன்றுங் கிடையா
துடம்பழிவு முன்கண் டுணரா—துடம்பிற்
கருநிறத்தைச் சேர்ந்து கருமலைச்சிற் றற்றுப்
பருகு கலைமதியப் பால். 19

பாலிருக்கும் தோல்தனத்தைப் பாராதே மங்கையர்கள்
காலிடுக்கை நத்திக் கரையாதே—கோலெடுத்து
வீர மறலி வருமுன் வினையறுக்கும்
பாரவழி யின்னருளைப் பார். 20

பார்த்தவிட மெல்லாம் பரமென் றிருமனமே!
காற்றனல்மண் நீர்வெளியாம் கண்டவெல்லாம்-மாத்திரண்ட
ஐம்புலனு மில்லா ஆசைகளும் மில்லாவே
என்புடலும் மில்லா தினி. 21

இனியசுகம் ஐம்புலனென் றெண்ணுதே நெஞ்சே!
இனிய சுகமற வாதே—இனியசுகம்
கண்டதெல்லா மெவ்வுலகு காணுத இவ்வுலகில்
நின்றதோ நில்லா ததோ? 22

நில்லாமல் ஓடுகின்ற நெஞ்சே! நிலையில்லா
எல்லாம் பகையா யிருக்குங்காண்—பொல்லாக்
கருக்குழியி லேபிறந்த கன்மவினை யானுல்
திருக்கறுக்க வேண்டுந் தினம். 23

தினந்தினைப்போ தாகிலுந்தான் தீதறநில் லாமல்
இனம்பிரிந்த மான்போல் இருந்தாய—தினந்தினமும்
ஓங்காரத் துள்ளொளியை யுற்றுணர்ந்து நீமனமே!
ஆங்கார அச்சம் அறு. 24

அச்சத்தால் ஐம்புலனும் ஆங்காரத் தால்மேய்ந்த
கச்சத்தா னிச்சயமாய்க் கள்ளாதே—மெச்சத்தான்
அண்டமெல்லாம் ஊடுருவ ஆகாச முங்கடந்து
நின்ற நிலைதான் நிலை. 25

நிலையறிந்து நில்லாமல் நீபாவி நெஞ்சே!
அலைமதிபோ லேதினமு மானாய்;—கலையறிந்து
மாரனையுங் கூற்றினையும் மாபுரத்தை யும்புகைத்த
வீரனைத் தேட விரும்பு. 26

விரும்பித் தனித்தனியே மெய்யுணரா தேகமாய்
இரும்புண்ட நீர்போலே ஏகும்—கரும்பதனைத்
தின்றாலல் லோதெரியும் நெஞ்சே! நின் ஐம்புலனை
வென்றாலல் லோவெளிச்ச மாம்? 27

வெளிச்சமில்லா வீட்டே விளக்கேற் றினதாக்
களிசிறந்து நின்றதைக்கா நெஞ்சே!—வெளிச்சமற,
தொண்ணூற் றறுதத் துவமொன்றாய்த் தோன் றுங்காண்
எண்ணிலிவை காணா திருட்டு. 28

இருட்டனைய மாய்கையா லெவ்வுலகுந் தாய
பொருட்டனையே மூடைம் புலனால்—திருட்டுமன
வண்டருடன் கூடாதே வாழ்மனமே! நாமிருவோர்
கண்டுகொள்வோம் காணா தது. 29

காணா ததைக்கண்டால் கண்டதெல்லாங் காணாது
வீணாவல் கொண்டுள் மெலியாதே—நாணாதே
இந்திரியத் தோடு பிணங்காதே பாவிநெஞ்சே!
செஞ்சொல்மறை அக்கரத்தைத் தேடு. 30

தேடினா லந்துதிரு வக்கரத்தைச் சென்றுவெளி
நாடினால் நெஞ்சே! நலம்பெறலாம்;—வாடியே
பொல்லாப் புவிகாணப் போகமதை நம்பாதே!
எல்லாம் வெயில்மஞ்ச ளே. 31

மஞ்சனைய கூந்தல் மடவாரைக் கண்டுருகும்
பஞ்சமல நெஞ்சே! பகரக்கேள்;—மஞ்சள்
மயங்காணும் இந்தவுடல் மாயவாழ் வெல்லாம்
அயன்கா ணழிசூத் திரம். 32

சூத்திரத்சா லாடும் சுழுமுனையைத் தான்திறந்து
பார்த்திருந்தால் வாராது பாவமெலாம்—சூத்திரத்தைப்
பாராம லேயிருந்து பாவிமன மேபிறக்க
வாராம லேயிருக்க வா 33

வாசி தனைப்பிடித்து வன்கனலோ டேசேர்த்துச்
சீசி யெனவே திரியாமல்—மாசி
இருளா னதைச்சேர்ந் திருந்தாயே நெஞ்சே!
பொருளா னதைமறந்து போட்டு 34

போட்டுவிக்கும் பொல்லாப் புழுச்சொரியும் நாய்விடக்கே
கூட்டங் குலைந்து குலைந்திடுமுன்—காட்டிடிற்
தாழ்வுறுய் நெஞ்சே! தராதர மாயெங்கும்
மூழ்வா னதையுயிர்போம் முன். 35

முன்னே யயனெழுதும் மூன்றுவினை கண்டுழன்று
பின்னுந் தெரியலையே பேய்மனமே!—தன்னை
அறியா திருந்தால் அவனறி வானே!
குறியான புத்தியென்றே கொள். 36

கொள்ளைக்குட் பட்டுக் குடிகேட ரோடிருந்து
கள்ளக் கருத்தால் கருதாதே—மெள்ளமெள்ள
ஆய்ந்தாய்ந்து பார்த்துநீ ஆறுறுக் கப்பாலே
தேர்ந்தாய்ந்து பார்த்துத் தெளி. 37

தெளிந்தநீர் பட்டமுதம் சேர்ந்தால் தெளியா
தெளிந்தநீர் காட்டா தவைபோல்—தெளிந்தால்
சகல பொருள்தோற்றும் தாழ்வுறு தோன்றும்
பகலிரவில் லாத பதி. 38

பதிபசுபா சங்களையும் பற்றி யுருவப்
பதிதனிலே தங்கிப் பலரும்—கதிபெறவே
வீணுமோ நெஞ்சேகேள் வேதாந்தத் துட்பொருளைக்
காணும லாமோ கணக்கு? 39

கணக்கறியா மாயக் கருவிகர ணாதிப்
பிணக்கறியா மற்பேதை நெஞ்சே!—இணக்கம்
அறிந்திணங்க வேண்டும் அருள்வெளியி னுள்ளே
செறிந்தவிந்து நாதத்தைச் சேர். 40

சேராதே மாய்கைதனை; சேர்ந்து கருக்குழியைப்
பாராதே நெஞ்சே! பதையாதே;—சீரான
சித்திரத்தைப் பார்த்துத் தினமனமே சித்திரத்தில்
உத்திரத்தைக் கொள்ளா புகந்து. 41

உகந்துகந்து நெஞ்சமே! ஓரெழுத்தி னாலே
அகத்தனையே சுத்திபண்ணி யாய்ந்து—முகந்து
குடியாம லாமோ? குலவுமல மான
மிடியா னதுதீர வேண்டு. 42

வேண்டுந் திரவியமும் மேலுயர்ந்து பள்ளியெல்லாம்
ஆண்ட திரைநாடு மம்பலமும்—மாண்டுபெருங்
காடுயர்ந்தா ரேமனமே! கண்டாயோ மாயனவன்
தேடரிய ஈசன் செயல்? 43

செயமாகா நெஞ்சே! திருட்டுமலக் கோட்டைப்
பயமறவே வெட்டிப் பரப்பி—நயமான
வாசியினல் சுட்டு மதிமயங்கக் கண்டிருப்போர்
பேசியநாம் பேசாம லே. 44

பேசாத ஞானப் பெருமைக் கிடப்பதுதான்
ஆசாபா சங்களில்லா தார்க்கல்லோ?—கூசாமல்
தேசமெல்லாம் ஓடித் திரிகின்ற யேமனமே!
ஆசாபா சங்களும்நீ யாய். 45

பாசங் களைந்து பதியி லிருந்துகொண்டு
பேசரிய காலைப் பிடித்திருக்க—நேசமுடன்
நாமிருவ ருங்கூடி நாதாந்த ஞானத்தைத்
தாமொருவ னயிருக்கத் தங்கு. 46

தங்கு நெடுவெளியில் சாலங் களுங்கடந்து
எங்குநான் றானு யிருக்காமல்—மங்கு
கருவானாய் நெஞ்சே! கரிக்கால தூதன்
வருவானே யென்ன வகை? 47

என்னவகை செய்வோம் எமதூதன் வந்தாக்கால்
பின்னையென ஒட்டானே பேய்நெஞ்சே!—சொன்ன
படியேகேள் தூதன் பரிந்துவரு முன்னே
அடிதேடிக் கொண்டே அமர். 48

அமரும் மனம்புத்தி யாங்கார மேசித்
தமரும் பொழுதுவே றானோர்—அமரும்
கோவென் றுரைத்தநமன் கொண்டுபோம் போதறிவு
வாவென்றால் நெஞ்சேவா ராது, 49

வாராது நெஞ்சே! மயக்கம் வருமுன்னே
வேரா னதைப்பிடித்து மேலேறிப்—பாராமல்
பொய்யிலே நில்லாதே புத்திகெடா தேயிருந்தால்
மெய்யிலே நின்றறிவோம் மெய். 50

மெய்யாறு வீடுகளாய் மேலாம் படைவீடாய்
ஐயாறு மாறும் அறுபதாய்—மெய்யாகக்
கண்டதெல்லாம் நான்காண்; காணா தனைத்தேடிக்
கண்டுருகி நெஞ்சே கனி. 51

கனியருந்த மாட்டாமல் காயருந்துகின்றாய்
கனிருசிபோ லாகுமோ காய்தான்?—இனியதுகேள்;
நானும்நீ யுஙகணிகாண்; நடுவிருந்த தேருசிகாண்;
தேனும்பா லும்போல் சிவன். 52

சிவதலங்க ளைத்தேடிச் சீயெழுத்த றுத்துச்
சிவதலங்க ளைத்தேடிச் சேரா—தவதவங்கள்
பண்ணாதே நெஞ்சேகேள்; பாரவினை வந்தாக்கால்
எண்ணாதே அஞ்சியேங்கா தே. 53

ஏங்காதே நெஞ்சே! கேள்; எவ்வினைகள் வந்தாலும்
ஏங்காதே சற்றும் இளையாதே;—தாங்காமல்
கொண்டவனும் செத்தவனும் கூட்டத்தா னும்வந்தான்
இன்றுகுறித் துண்மையிதென் றெண். 54

எண்ணரிய நெஞ்சே ! இனியநற் பாலதனை
அன்னந்தண் ணீர்நீக்கி யேயருந்து—தன்மைபோல்
துன்பங் களைந்து தூயவெளி யூடுருவாய்
இன்பங் களைச்சேர்ந் திரு. 55

சேர்ந்திருவோ ரும்பாலும் தேனும்போ லேகலந்து
வார்ந்ததிலே யுள்ளுரிசி வாங்காமல்—போங்காலம்
வைத்தமறக் காலன் வருவானே வந்தக்கால்
எய்த்திடுவா னெஞ்சே ! எவன்? 56

எவனிருந்து நெஞ்சே! எதிர்ப்பாரு முண்டோ
கவனமற நின்று கருதின்—புவனமெல்லாம்
வித்துயிரெல் லாங்கமுண்டு விண்ணுடைந்த தேமனமே !
மற்றுடலை யுண்கிறதே மண் ! 57

மண்ணெழுந்தும் நீரெழுந்தும் வாய்வெழுந்துந் தீயெழுந்தும்
விண்ணெழுந்துங் கூடியொரு வீடாகி—நண்ணரிய
மாயமெல்லா முண்டாக்கி வைத்தான்காண் நெஞ்சே! இக்
காயமெல்லாம் நானுக் கரு. 58

கருவழிந்தால் வித்தையில்லாக் காரணம்போல் நெஞ்சே!
கருவழிந்தெல் லாம்கண்ட தெல்லாம்—கருதித்
திரியாதே நெஞ்சே ! சிவன்செயலே யல்லால்
மரியாரில் லாதக்கால் வந்து. 59

வந்துதவும் நாதாந்த வாசனைக்கண் டேவணங்கித்
தந்திரமாய்ச் சென்று தரியாமல்—அந்தரத்தில்
விட்டபட்டம் போலலைந்து வெவ்வினையி னால்மனமே !
தட்டுகெட்டுப் போகாதே தான். 60

தானந் தவமுயற்சி தாளாண்மை யோடுநெஞ்சே !
வானம் பிளந்து வழிகூடின்—நானுமதில்
நீயு மொருநிழலில் நின்றங் கிளைப்பாறித்
தோயுமதி தானே தொடங்கு. 61

தொடங்கு வினையறுத்துச் சுற்றமெலா நீத்தே
அடங்கு மிடத்திலடங் காமல்—கிடந்து
பருந்தெடுத்த குஞ்சாய்ப் பதைத்தாய் மனமே !
அருஞ்சரத் தம்மதன டி. 62

மதனசரத் தால்மனமே ! வையம் மயங்கி
விதனத் துறக்க மயங்குவதல்லால் வேறில்லை—யதனாலே
தத்துச் சுகத்தைநத்தித் தானலைய வேண்டாகாண்
மெத்த சுகத்தை வெறுத்து. 63

வெறுத்துவெருக் கொண்டதுபோல் வீணிலே நெஞ்சே !
பொறுத்த மயக்கிற்போ காதே—குறித்தடுத்துத்
தேடியே வாசிதனைச் சேர்ந்து கலந்த பொருள்
கூடினு லாமே குணம். 64

குணங்கள் பலவிதமாய்க் கொள்ளாதே நெஞ்சே !
வணங்குங் குணமாக வந்து—வணங்கியே
மண்டலமெ லாங்கடந்து மாவீடை நீதிறந்து
கண்டெடுத்துக் கொள்வாய் கனம். 65

கனதனத்து மாதர் கழிகாதல்கொண்டே
வினையார் நகைக்குருக வேண்டா—தினமனமே!
சோதித்தா னல்லால் சுபகா ரியமாகப்
போதித்தால் கொள்விலையோ புத்தி ? 66

புத்திதரும் வித்தைதரும் பொல்லாப்பில் லாமல்நெஞ்சே!
சித்திமுத்தி பேரின்பம் சேர்ந்திடலாம்;—நித்தநித்தம்
தானந்த மானதொரு சற்குருவோ டேபழகி
ஆனந்த முண்டிருந்தக் கால். 67

காலவழிச் சென்று கருப்பைக் குழிக்குக்கீழ்
மூலமற்ற நல்வழியே மூழ்கின்றி—மாலே
இருட்டறுத்துப் போடாமல் என்பாவி நெஞ்சே!
திருட்டுவித்தை செய்கிறாய் சென்று. 68

சென்று சிவனடியில் சேர்ந்த பெரும்பாம்பு
ஒன்றுமிக வாசியைத்தான் ஒட்டாமல்—நன்றாய்
நிலையாக நில்லா தலைவாய் மனமே!
அலைவாயி னில்துரும்ப தாய். 69

தாய்தந்தை பெண்டுபிள்ளை தானென் றிரங்கிநித்தம்
காய்பறிக்கி றாயே கனியிருக்க!—தாய்தந்தை
எத்தனைபேர் பெற்றாரோ என்மனமே ! நாமுந்தான்
எத்தனைபே ரைப்பெற்றோம் இங்கு ? 70

இங்குமங்கு மாய்மனமே! ஈடழிய வேண்டாகாண்;
அங்கம் பொருளா அறிந்துகொண்—டெங்கெங்கும்
நாமே சிவமாக நாடினால் ஞானமொழி
தாமே அருளைத் தரும். 71

அருளில்லா தார்க்கும் அருளறிவங் காமோ ?
அருளறிவு தானே ஆ னந்தம்?—அருளறிவு
தேடுவதுங் கூடுவதும் சிந்தையா னந்தமுடன்
நாடுவதுந் தானறிவி னால் 72

நாடிலெழுத் தாறும் நடுவெழுத் தீரைந்தும்
ஓடி னொருபதினொ லாகுமே—ஓடாய்நீ
ஓரெழுத்தைக் கண்டுறங்கி உன்னை டுறங்கிநெஞ்சே !
ஓரெழுத்தி லேசென் றுறை. 73

உறைகலத்தி னய்போலே உள்ளமல மெல்லாம்
அறுத்துடைத்து நெஞ்சே அறுதி—நிறைத்துப்
புளியம் பழத்தோடு போலிருக்க வேண்டும்
களியழியும் காலத்துக் கே. 74

காலங் கழித்துக் கடைவாயில் பாலுறுமுன்
வேலங் கனைய விழிமடவார்—ஏலக்
குழியில்வைத்து மாரடித்துக் கூப்பிடுமுன் மாய்கைக்
கழியெடுத்துப் போடுமுன்கண் ணல். 75

கண்ணலே ஞானம் கருதாமல் நெஞ்சே! நீ
எண்ணுத மாய்கையெல்லா மெண்ணுகிருய்—நண்ணுய்கேள்
பார்க்கவேண் டுந்தனையும் பத்தரைமாற் றுத்தங்கம்
ஆக்கப்போ காதோஉன் னல்? 76

உன்னலே நெஞ்சமே! ஊழ்வினை வந்தாலும்
எந்நாளும் பாம்பின்வாய்த் தேரைபோல்—முன்னல்
அம்பிட்டுப் போகாதே ஆனந்த மெய்விளக்கு
நம்பி துணைக்குமுற்றும் நம்பு. 77

நம்பினன் றன்னை நடுவணையி லேயிருந்து
குப்பிடா தார்க்குங் குறையுண்டோ?—நம்பிப்
பளிங்கொளிபோல் நெஞ்சே! பரந்திடலா மெங்கும்
விளங்கனலோ டேசேரு மே. 78

ஏமன்வரு முன்நெஞ்சே! எவ்வினையு மேவென் று
சாம நடுவதனில் சார்ந்ததிலே—சேமமுடன்
காலனையும் வென் றுசில காமனையும் வென் றுபின்பு
பாலிக்க லாமதுநாம் பார். 79

பாரயனும் மாலும் பரவவரு ருத்திரனும்
காரணைய வாரணத்தைக் கான்கண்டு—சீராய்மனமே
நக்கத் திடைநடுவே நற்ககனப் பொற்பதியில்
சொற்கனகத் தற்பதியில் தோன் று. 80

தோன் றுமே யெல்லாச் சுகமுற் றதில்மனமே!
தோன் றுமே ஆனந்தச் சுந்தரர்பின்—தோன் றும்
அச்சரச்சு ருக்கினெடு மக்கரப்பெ ருக்கமுடன்
உச்சரித்து ரைக்கிறவுண் மை. 81

உண்மை யிதுகாண் ; ஒளியிருந்த வீடதுகாண் ;
உண்மை சிவனிருக்கும் ஊருகாண் ;—உண்மை
கருமை ஒளியேழ் கதியுள் பதங்கள்
மருவுதங்கி நீவருந்து மாறு. 82

வருந்தும் பொழுதுகாண் மாயையாய் நெஞ்சே !
வருந்தும் குணமாக வந்து—வருந்தும்
இருவினைத்தொ டக்கறும் ஏழ்வகைப்பி றப்பாம்
கருமலத்தி ருக்கறுங் காண். 83

காண்மனமே ! சத்திசிவம் ஒன்றான காரணத்தை ;
காண்மனமே மாலயனுங் காணரிதை ;—காண்மனமே !
செம்பொன்னி னம்பலத்துள் சேருஞ்செஞ் சொல்லென்றும்
அம்பலத்தில் ஆடுநட னம். 84

நடனமது பார்மனமே ! நயனத் திடையே
நடனமது நாலாம் பதங்காண்—நடனம்
பதிமதிவித் தாய்மனமே ! பலகதிவித் தாயெனவே
அதிவிதசித் தாந்தமா டும். 85

ஆடும் பதிமனமே! அம்பலத்தைச் சுட்டுநடம்
ஆடும் பரமகுரு ஆனந்தம்—ஆடுகின்ற
கூத்தனைக் கூற்றிற்ற கூத்தபிரா னையசுத்தம்
நீத்தவனைச் சித்தம்வைத்து நில். 86

நில்லு நிலவறமாய் நேசமுட னேபதியில்
நில்லு பிறவியற நீநெஞ்சே !—நில்லு
கனல்மதியும் கார்மிடறும் கதிரும் மதியும்
புனலொடுசெஞ் சடையும் போற்றி. 87

போற்றித் தினமனமே ! பொல்லாக் குலங்கள்விட்டுக்
காற்றுங் கனலுங் கருத்தொன்றாய்ப்—பார்த்தறிவால்
சுத்தமலப் பித்தையற்றுச் சுற்றஒழி சுற்றலுற்றுச்
சத்தமறித் துற்றதிலே தங்கு. 88

தங்குநீ சென்று சதாசிவத்தி லேமனமே!
மங்குங் கருக்குழிக்குள் வாராமல்—தங்கும்
கருவும் புனலும் கதியும் கெதியும்
விதியும் திருத்தாள் வெளி. 89

வெளியில் வெளியாகி விண்ணவன் றானாய்
வெளியி லொளியா யிருக்க—வெளியிற்
கரியுரித்துப் போர்த்தவனைக் கார்மதிசென் றானைக்
கருவறுத்துப் பார்த்தாலே காண். 90

காணு மனமே! கரிகா லனைவதைத்துக்
காணுமுலகமெல்லாம் காணுருவாய்த்—தாணு
மனவிரக மானபுலி மன்றுள் நடனப்
பணவரவின் உற்றபா தம். 91

பாதத்தான் அஞ்செழுத் தானபர மன்சிங்க
நாதத்தா னென்றுநெஞ்சே! நன்றாகப்—போதத்தான்
ஆரணத்தி னேடடைந் தண்டமெல்லாம் சுட்டதிரு
நீறணிந்து கொண்டிருநித் தம். 92

நித்தனைய் நிர்மலனைய் நின்றுலகம் மூன்றுக்கும்
கர்த்தனைய் அஞ்செழுத்தின் காரணமாய்ப்—பெற்ற
குருவினிரு பாதங் குளிர நினைநீ
தருமதுபற் றாமனமே தான். 93

தானவனு காவிட்டால் சண்டாள னிற்றடிவான்
தானவனு மங்கே தரிக்கொட்டான்—மானார்
கலங்கும் கலவிக் கருத்திற்றால் தான்கொடுப்பான்
இலங்கும் அடிதேர்நெஞ் சே! 94

நெஞ்சே! உனக்கு நிலவறமாய்ச் சொன்னவெலாம்
எஞ்சாவென் சொல்லென் றிகழாதே;—நெஞ்சே!
கருத்திச்சை தள்ளிக் கருதென்று செப்பின்
கருத்திச்சை தள்ளுகருத் துள். 95

உள்ளிருந்து நெஞ்சே! உலவுஞ் சிவகுருவை
வெள்ளெருக்கின் பூச்சூடும் வேணியனை—உள்ளே
மனமுருகப் பார்த்தால் மலைசிலையாச் சென்றால்
உனதறிவால் பார்த்துநீ ஓது. 96

ஓதிநீ நெஞ்சே! கேள்; ஓரெழுத்து மந்திரத்தால்
ஆதியாய் எங்கும் அமர்ந்தானை—ஓதில்
கடிய மிடியும் கடிய பிணியும்
கடியவனு காமல்காக் கும். 97

காக்குந் தினமே கடிய பிறப்பறுத்துக்
காக்கும் பலபிணிநோய் காட்டாமல்—நோக்குமந்தி
வந்து பகல்வெளியில் வாராத மன்மதனை
உந்து மதையுணர்ந்தில் வாழ். 98

வாழுநீ நெஞ்சே! மயங்கித் திரியாதே
ஏழெழுத்துக் கப்பா லிருப்பானை—ஏழை
வருத்தந்தீர்த் தன்பன் மனமதனில் தங்கு
பருத்தரத்தி னதனைப் பணி. 99

பணிந்து துதிமனமே! பல்லுயிர்கட் கெல்லாம்
அணுவிலணு வாகியிருந் தானைத்—துணிவாய்ப்
பிறவா திருக்கவும் பேரின்ப வாழ்வைத்
திறமாக நம்பிச் செலுத்து. 100

# பத்திரகிரியார்

## மெய்ஞ்ஞானப் புலம்பல்

—::—

### கண்ணிகள்

முத்திதரும் வேத மொழியாம் புலம்பல்சொல்ல
அத்திமுக வன்றன் அருள்பெறுவ தெக்காலம் ? 1

ஆங்கார முள்ளடக்கி ஐம்புலனைச் சுட்டறுத்துத்
தூங்காமற் றூங்கிச் சுகம்பெறுவ தெக்காலம் ? 2

நீங்காச் சிவயோக நித்திரைகொண் டேயிருந்து
தேங்காக் கருணைவெள்ளந் தேக்குவது மெக்காலம் ? 3

தேங்காக் கருணைவெள்ளந் தேக்கியிருந் துண்பதற்கு
வாங்காமல் விட்டகுறை வந்தடுப்ப தெக்காலம் ? 4

ஓயாக் கவலையினு ளுள்ளுடைந்து வாடாமல்
மாயாப் பிறவி மயக்கறுப்ப தெக்காலம் ? 5

மாயாப் பிறவி மயக்கத்தை யூடறுத்துக்
காயா புரிக்கோட்டை கைக்கொள்வ தெக்காலம் ? 6

காயா புரிக்கோட்டை கைவசமாக் கொள்வதற்கு
மாயா அநுபூதி வந்தடுப்ப தெக்காலம் ? 7

சேயாய்ச் சமைந்து செவிடூமை போற்றிரிந்து
பேய்போ லிருந்துன் பிரமைகொள்வ தெக்காலம் ? 8

பேய்போற் றிரிந்து பிணம்போற் கிடந்துபெண்ணைத்
தாய்போ னினைத்துத் தவமுடிப்ப தெக்காலம் ? 9

கால்காட்டிக் கைகாட்டிக் கண்கள் முகங்காட்டி
மால்காட்டு மங்கையரை மறந்திருப்ப தெக்காலம் ? 10

பெண்ணினல்லா ராசைப் பிரமையினை விட்டொழிந்து
கண்ணிரண்டு மூடிக் கலந்திருப்ப தெக்காலம் ! 11

வெட்டுண்ட புண்போல் விரிந்தவல்துற் பைதனிலே
தட்டுண்டு நிற்கை தவிர்வதுவு மெக்காலம் ? 12

ஆறாத புண்ணி லழுந்திக் கிடவாமல்
தேறாத சிந்தைதனைத் தேற்றுவது மெக்காலம் ? 13

தந்தைதாய் மக்கள் சகோதரரும் பொய்யெனவே
சிந்தைதனிற் கண்டு திருக்கறுப்ப தெக்காலம் ? 14

மன்னுயிரைக் கொன்று வதைத்துண் டுழலாமல்
தன்னுயிர்போ லெண்ணித் தவமுடிப்ப தெக்காலம் ? 15

பாவியென்ற பேர்படைத்துப் பாழ்நரகில் விழாமல்
ஆவியென்ற சூத்திரத்தை அறிவதினி எக்காலம் ? 16

உளியிட்ட கல்லும் உருப்பிடித்த செஞ்சாந்தும்
புளியிட்ட செம்பும் பொருளாவ தெக்காலம் ? 1‥

வேடிக்கை யுஞ்சொகுசும் மெய்ப்பகட்டும் பொய்ப்பகட்டும்
வாடிக்கை யெல்லாம் மறந்திருப்ப தெக்காலம் ? 18

பட்டுடையும் பொற்பணியும் பாவனையுந் தீவினையும்
விட்டுவிட்டுன் பாதம் விரும்புவது மெக்காலம் ? 19

ஆமை வருமாட்கண் டைந்தடக்கஞ் செய்தாற்போல்
ஊமை யுருக்கொண் டொடுங்குவது மெக்காலம் ? 20

தண்டிகையுஞ் சாவடியுஞ் சாளிகையும் மாளிகையுங்
கண்டு களிக்குங் கருத்தொழிவ தெக்காலம் ? 21

அத்தன் இருப்பிடத்தை ஆராய்ந்து பார்த்துநிதஞ்
செத்த சவம்போற் றிரிவதினி எக்காலம் ? 22

ஒழிந்த கருத்தினைவைத் துள்ளெளுவம்பு வெள்ளெளுப்பாய்க்
கழிந்தபிணம் போலிருந்து காண்பதினி எக்காலம் ? 23

அற்ப சுகமறிந்தே அறிவையறி வாலறிந்து
கொப்பத்தில் வீழ்ந்துகொண்ட கோளறுப்ப தெக்காலம் ? 24

கருப்படுத்தி என்னையமன் கைப்பிடித்துக் கொள்ளாமுன்
உருப்படுத்தி யாள உடன்படுவ தெக்காலம் ? 25

தூண்டு விளக்கணையத் தொடர்ந்திருள்முன் சூழ்ந்தாற்போல்
மாண்டு பிழைத்துவந்த வகைதெரிவ தெக்காலம் ? 26

தூரியினில் மீன்போற் சுழன்றுமனம் வாடாமல்
ஆரியனைத் தேடி அடிபணிவ தெக்காலம் ? 26

எண்ணூ றுகமிருந்தும் எய்தாத வீடுபெற
வெண்ணீறு பூசி விளங்குவது மெக்காலம் ? 28

அவ்வேடம் பூண்டிங் கலைந்து திரியாமற்
சிவவேடம் பூண்டு சிறந்திருப்ப தெக்காலம்? 29

அண்டருக்கா நஞ்சருந்தி அம்பலத்தி லாடுசிவன்
தொண்டருக்குத் தொண்டனெனத் தொண்டுசெய்வ தெக்காலம்?

பன்றி வடிவெடுத்துப் பாரிடந்து மால்காணாக்
குன்றில் விளக்கொளியைக் கூறுவது மெக்காலம்? 31

தித்திக்குந் தெள்ளமிர்தைச் சித்தாந்தத் துட்பொருளை
முத்திக்கு வித்தை முதனினைப்ப தெக்காலம்? 32

வேதாந்த வேதமெல்லாம் விட்டொழிந்தே நிட்டையிலே
ஏகாந்த மாக இருப்பதினி யெக்காலம்? 33

மற்றிடத்தைத் தேடியென்றன் வாழ்நாளைப் போக்காமல்
உற்றிடத்தைத் தேடி யுறங்குவது மெக்காலம்? 34

இன்றுளோர் நாளை இருப்பதும் பொய்யெனவே
மன்றுளோர் சொல்லும் வகையறிவ தெக்காலம்? 35

கஞ்சா அபினியுடன் கள்ளுண்டு வாடாமற்
பஞ்சாமிர் தத்தைப் பருகுவது மெக்காலம்? 36

செஞ்சலத்தி னுற்றிரண்ட செனனமோட் சம்பெறவே
சஞ்சலத்தை விட்டுன் சரணடைவ தெக்காலம்? 37

கும்பிக் கிரைதேடிக் கொடுப்பா ரிடந்தோறும்
வெம்பித் திரிகை விடுப்பதினி எக்காலம்? 38

ஆடுகின்ற சூத்திரந்தான் அறுமளவு மேதிரிந்து
போடுகின்ற நாள்வருமுன் போற்றுவது மெக்காலம்? 39

நவசூத் திரவீட்டை நானென் றலையாமல்
சிவசூத் திரத்தைத் தெரிந்தறிவ தெக்காலம்? 40

பரந்து மலசலங்கள் பாயும்புழுக் கூட்டைவிட்டுக்
கரந்துன் அடியிணைக்கீழ்க் கலந்துநிற்ப தெக்காலம்? 41

இம்மைதனிற் பாதகனாய் இருவினைக்கீ டாயெடுத்த
பொம்மைதனைப் போட்டுன்னைப் போற்றிநிற்ப தெக்காலம்?

உப்பிட்ட பாண்டம் உடைந்துகருக் கொள்ளுமுன்னே
அப்பிட்ட வேணியனுக் காட்படுவ தெக்காலம்? 43

சேவை புரிந்து சிவரூபக் காட்சிகண்டு
பாவை தனைக்கழித்துப் பரமடைவ தெக்காலம்? 44

காண்டத்தை வாங்கிக் கருமேகம் மீண்டதுபோல்
பாண்டத்தை நீக்கிப் பரமடைவ தெக்காலம்? 45

சோற்றுத் துருத்திதனைச் சுமந்தலைந்து வாடாமல்
ஊற்றைச் சடம்போட் டுனையடைவ தெக்காலம்? 46

தொடக்கைச் சதமெனவே சுமந்தலைந்து வாடாமல்
உடக்கைக் கழற்றி உனையடைவ தெக்காலம்? 47

எவ்வுயிர்க்கும் தானாய் இருந்த படியிருக்க
மையிருக்கும் நெஞ்சமது மாள்வதினி எக்காலம்? 48

குரனெரிய நால்வேதங் கூப்பிட்டுங் காணாத
பரம ரகசியத்தைப் பார்த்திருப்ப தெக்காலம்? 49

புல்லாய் விலங்காய்ப் புழுவாய் நரவடிவாய்
எல்லாப் பிறப்பி னிருளகள்வ தெக்காலம்? 50

சினமாண்டு பேசும் செயல்மாண்டு நான்மாண்டு
மனமாண்டு முத்திநிலை வந்தடையவ தெக்காலம்? 51

புருவத் தலைவரொடும் புல்கியின்பங் கொள்வதற்குத்
தெரிவைப் பருவம்வந்து சிக்குவது மெக்காலம்? 52

தெரிவையுறும் பக்குவத்தின் சீராட்டெல் லாமறிந்து
குருவையறிந் தேநினைத்துக் கும்பிடுவ தெக்காலம்? 53

வப்படிக்கும் மாதருடன் வாழ்ந்தாலும் மன்னுபுளி
யம்பழமும் ஓடும்போல் ஆவதினி எக்காலம்? 54

பற்றற்று நீரிற் படர்தா மரையிலைபோல்
சுற்றத்தை நீங்கிமனந் தூரநிற்ப தெக்காலம்? 55

சல்லாப லீலையிலே தன்மனைவி செய்தசுகம்
சொல்லாரக் கண்டெனக்குச் சொல்வதினி எக்காலம்? 56

மருவும் அயற்புருடன் வருநேரங் காணாமல்
உருகுமனம் போலெனுளம் உருகுவது மெக்காலம்? 57

தன்கணவன் றன்சுகத்திற் றன்மனம்வே றானதுபோல்
என்கருத்தி லுன்பதத்தை ஏற்றுவது மெக்காலம்? 58

கூடிப் பிரிந்துவிட்ட கொம்பனையைக் காணுமல்
தேடித் தவிப்பவன்போல் சிந்தைவைப்ப தெக்கலாம்? 59

எவ்வனத்தின் மோகம் எப்படியுண் டப்படிபோல்
கவனத் தியானம் கருத்துவைப்ப தெக்கலாம்? 60

கண்ணு லருவி கசிந்துமுத்துப் போலுதிர
எண்ணும் பரம்பொருளை எண்ணுவது மெக்காலம்? 61

ஆகம் மிகவுருக அன்புருக என்புருகப்
போக வநுபூதி பொருந்துவது மெக்காலம்? 62

நீரிற் குமிழிபோல் நிலையற்ற வாழ்வைவிட்டுன்
பேரின்பக் கருணைவெள்ளம் பெருக்கெடுப்ப தெக்காலம்? 63

அன்பை யுருக்கி அறிவையதன் மேற்புகட்டித்
துன்பவலைப் பாசத் தொடக்கறுப்ப தெக்காலம்? 64

கருவின் வழியறிந்து கருத்தைச் செலுத்தாமல்
அருவி விழிசொரிய அன்புவைப்ப தெக்காலம்? 65

தெளியத் தெளியத் தெளிந்தசிவா னந்தத்தேன்
பொழியப் பொழியமனம் பூண்டிருப்ப தெக்காலம்? 66

ஆதார மூலத் தடியிற் கணபதியைப்
பாதார விந்தம் பணிந்துநின்ற தெக்காலம்? 67

மண்விளைந்த ராச்சியத்தில் விளைந்திருந்த வேதாவைக்
கண்வளைத்துப் பார்த்துள்ளே கண்டிருப்ப தெக்காலம்? 68

அப்புப் புரநடுவே அமர்ந்திருந்த விட்டுணுவை
உப்புக் குடுக்கையுள்ளே உணர்ந்தறிவ தெக்காலம்? 69

மூன்று வளையமிட்டு மூளைத்தெழுந்த வெண்ணெருப்பில்
தோன்றும் உருத்திரனைத் தொழுதுநிற்ப தெக்காலம்? 70

வாயுவறு கோணமதில் வாழும் மகேச்சுரனைத்
தோயும்வகை கேட்கத் தொடங்குவது மெக்காலம்? 71

வட்டவழிக் குள்ளே மருவுஞ் சதாசிவத்தைக்
கிட்டவழி தேடக் கிருபைசெய்வ தெக்காலம்? 72

உச்சிக் கிடைநடுவே ஓங்குங் குருபதத்தை
நிச்சயித்துக் கொண்டிருந்து நேர்வதினி எக்காலம்? 73

பாராகிப் பார்மீதிற் பஞ்சவன்னந் தானுகி
வேராகி நீமுளைத்த வித்தறிவ தெக்காலம்? 74

கட்டறுக்க வொண்ணுக் கருவிகர ணுதியெல்லாஞ்
சுட்டறுத்த நிட்டையிலே தூங்குவது மெக்காலம்? 75

கள்ளக் கருத்தையெல்லாம் கட்டோடு வேரறுத்திங்
குள்ளக் கருத்தை யுணர்ந்திருப்ப தெக்காலம்? 76

அட்டகா சஞ்செலுத்தும் அவத்தைச்சட லத்துடனே
பட்டபா டத்தனையும் பகுத்தறிவ தெக்காலம்? 77

அறிவுக் கருவியுட னவத்தைபடும் பாட்டையெல்லாம்
பிறிவு படநிறுத்திப் பெலப்படுவ தெக்காலம்? 78

பூதம் பொறிகரணம் போந்தவிந்து நாதமுமாய்ப்
பேதம் பலவிதமும் பிரித்தறிவ தெக்காலம்? 79

தோன்றுசை மூன்றுந் தொடர்ந்துவந்து சுற்றுமல்
ஊன்றுசை வேரையடி யூடறுப்ப தெக்காலம்? 80

புன்சனனம் போற்றுமுன்னே புரியட்டம் போகிலினி
என்சனன மீடேறு மென்றறிவ தெக்காலம்? 81

நட்ட நடுவினின்று நற்றிரோ தாயியருள்
கிட்ட வழிகாட்டிக் கிருபைசெய்வ தெக்காலம்? 82

நானேநா னென்றிருந்தால் நடுவினின்ற கட்டழகி
தானே வெளிப்படுத்தித் தருவளென்ப தெக்காலம்? 83

அடர்ந்த மனக்காட்டை அஞ்செழுத்தாம் வாளாலே
தொடர்ந்து தொடர்ந்துவெட்டிச் சுடுவதினி எக்காலம்? 84

ஐந்து பொறிவழிபோய் அலையுமிந்தப் பாழ்மனத்தை
வெந்து விழிப்பார்த்து விழிப்பதினி எக்காலம்? 85

இனமாண்டு சேர்ந்திருந்தோ ரெல்லாருந் தாமாண்டு
சினமாண்டு போகவருள் சேர்ந்திருப்ப தெக்காலம்? 86

அமையா மனமமையும் ஆனந்த வீடுகண்டங்
கிமையாமல் நோக்கி யிருப்பதினி எக்காலம்? 87

கூண்டுவிடுஞ் சீவன்மெள்ளக் கொட்டாவி கொண்டாற்போல்
மாண்டுவிடு முன்னேநான் மாண்டிருப்ப தெக்காலம்? 88

ஊனிறைந்த காய முயிரிழந்து போகுமுன்னம்
நானிறந்து போகவினி நாள்வருவ தெக்காலம்? 89

கெட்டு விடுமாந்தர் கெர்விதங்கள் பேசிவந்து
சுட்டுவிடு முன்னென்னைச் சுட்டிருப்ப தெக்காலம்? 90

தோலேணி வைத்தேறித் தூரகடந் தெய்க்காமல்
நூலேணி வைத்தேறி நோக்குவது மெக்காலம்? 91

வாயோடு கண்மூடி மயக்கமுற்று நில்லாமல்
தாயோடு விண்கூடித் தழுவிநிற்ப தெக்காலம்? 92

காசினியெ லாநடந்து காலோய்ந்து போகாமல்
வாசி தனிலேறி வருவதினி யெக்காலம்? 93

ஒலிபடருங் குண்டலியை உன்னியுணா வாலெழுப்பிச்
சுழிமுனையின் ருள்திறந்து தூண்டுவது மெக்காலம்? 94

இடைபிங் கலைநடுவே இயங்குஞ் சுழுமுனையில்
தடையறவே நின்று சலிப்பறுவ தெக்காலம்? 95

மூல நெருப்பைவிட்டு மூட்டிநிலா மண்டபத்தில்
பாலை யிறக்கியுண்டு பசியொழிவ தெக்காலம்? 96

ஆக வெளிக்குள்ளே அடங்காப் புரவிசெல்ல
ஏக வெளியி லிருப்பதினி எக்காலம்? 97

பஞ்சரித்துப் பேசும் பலகலைக்கெட் டாப்பொருளில்
சஞ்சரித்து வாழும் தவம்பெறுவ தெக்காலம்? 98

மலமுஞ் சலமுமற்று மாயையற்று மானமற்று
நலமுங் குலமுமற்று நானிருப்ப தெக்காலம்? 99

ஓடாம லோடி உலகைவலம் வந்துசுற்றத்
தேடாம லென்னிடமாய்த் தெரிசிப்ப தெக்காலம்? 100

அஞ்ஞானம் விட்டே அருண்ஞானத் தெல்லைதொட்டு
மெய்ஞ்ஞான வீடுபெற்று வெளிப்படுவ தெக்காலம்? 101

வெல்லுமட்டும் பார்த்து வெகுளியெலாம் விட்டகன்று
செல்லுமட்டுஞ் சிந்தை செலுத்துவது மெக்காலம்? 102

மேலாம் பதந்தேடி மெய்ப்பொருளை யுள்ளிருத்தி
நாலாம் பதந்தேடி நான்பெறுவ தெக்காலம்? 103

எண்ணாத தூரமெல்லாம் எண்ணியெண்ணிப் பாராமல்
கண்ணாடிக் குள்ளொளிபோற் கண்டறிவ தெக்காலம்? 104

என்னை அறிந்துகொண்டே எங்கோமா னோடிருக்கும்
தன்மை யறிந்து சமைத்திருப்ப தெக்காலம்? 105

ஆறாதாரங்கடந்த ஆனந்தப் பேரொளியைப்
பேறாகக் கண்டுநான் பெற்றிருப்ப தெக்காலம் 106

ஆணவ மாயத்தா லழிந்துடலம் போகாமுன்
காணுதலா லின்பமுற்றுக் கண்டறிவ தெக்காலம்? 107

மும்மலமுஞ் சேர்ந்து முளைத்தெழுந்த காயமிதை
நிர்மலமாய்க் கண்டுவினை நீக்கிநிற்ப தெக்காலம்? 108

முன்னை வினைகெடவே மூன்றுவகைக் காட்சியினால்
உன்னை வெளிப்படுத்தி உறுவதினி எக்காலம்? 109

கண்ணினொளி பாய்ந்ததுவுங் கருத்தறிந்து கொண்டதுவும்
விண்ணினொளி கண்டதுவும் வெளிப்படுவ தெக்காலம்? 110

கனவுகண்டாற் போலெனக்குக் காட்டிமன்றத் தேயிருந்த
நினைவைப் பரவெளிமேல் நிறுத்துவது மெக்காலம்? 111

ஆரென்று கேட்டதுவும் அறிவுவந்து கண்டதுவும்
பாரென்று சொன்னதுவும் பகுத்தறிவ தெக்காலம்? 112

நினைக்கும் நினைவுதொறும் நிறைந்தபரி பூரணத்தை
முனைக்குமேற் கண்டுகண்ணில் முத்துதிர்ப்ப தெக்காலம்? 113

மூப்பாழும் பாழாய் முதற்பாழுஞ் சூனியமாய்
அப்பாழும் பாழாய் அன்புசெய்வ தெக்காலம்? 114

சீயென் றெழுந்து தெளிந்துநின்ற வான்பொருளை
நீயென்று கண்டு நிலைபெறுவ தெக்காலம்? 115

வவ்வெழுத்தும் மவ்வெழுத்தும் வாளாகுஞ் சிவ்வெழுத்தும்
அவ்வெழுத்தி னுள்ளே அடக்கிநிற்ப தெக்காலம்? 116

எழுத்தெல்லாம் மாண்டிறந்தே ஏகமாய் நின்றதிலே
அழுத்தமாய்ச் சிந்தையைவைத் தன்புகொள்வ தெக்காலம்?

அருவாய் உருவாகி ஆதியந்த மாகிநின்ற
குருவாகி வந்தெனையாட் கொண்டருள்வ தெக்காலம்? 118

நானென் றறிந்தவனே நானறியாக் காலமெல்லாந்
தானென்று நீயிருந்த தன்மையறிவ தெக்காலம் ? 119

என்மயமாய்க் கண்டதெல்லாம் எண்ணியெண்ணிப் பார்த்தபின்பு
தன்மயமாய்க் கொண்டதிலே சார்ந்துநிற்ப தெக்காலம்? 120

ஒளியி லொளியாம் உருப்பிறந்த வாறதுபோல்
வெளியில் வெளியான விதமறிவ தெக்காலம் ? 121

ஒளியிட்ட மெய்ப்பொருளை உள்வழியி லேயடைத்து
வெளியிட்டுச் சார்த்திவைத்து வீடுறுவ தெக்காலம ? 122

காந்தம் வலித்திரும்பைக் கரத்திழுத்துக் கொண்டதுபோல்
பாய்ந்து பிடித்திழுத்துன் பதத்தில்வைப்ப தெக்காலம்? 123

பித்தாயங் கொண்டு பிரணவத்தை யூடறுத்துச்
செத்தாரைப் போலே திரிவதினி எக்காலம் ? 124

அப்பில் உறையுமுப்பும் அரனடியிற் சேர்ந்தோரும்
செப்பிலொன்றாய்த் தோன்றுமெனச் செப்புவதும் எக்காலம்? 125

ஆதி கபிலர்சொன்ன ஆகமத்தின் சொற்படியே
சாதிவகை யில்லாமற் சஞ்சரிப்ப தெக்காலம் ? 126

சூதுங் களவுந் தொடர்வினையுஞ் சுட்டிடக்காற்
றாதுந் துருத்தியைப்போட் டுனையடைவ தெக்காலம் ? 127

ஆசை வலைப்பாசத் தகப்பட்டு மாயாமல்
ஓசை மணித்தீபத் தொன்றிநிற்ப தெக்காலம் ? 128

கல்லாய் மரமாய்க் கயலாய்ப் பறவைகளாய்ப்
புல்லாய்ப் பிறந்தசென்மம் போதுமென்ப தெக்காலம் ? 129

தக்கும்வகைக் கோர்பொருளுஞ் சாராம லேநினைவில்
பக்குவமாய் நின்னருளைப் பார்த்திருப்ப தெக்காலம் ? 130

தூரோ டசைந்து சுழன்றுவருந் தத்துவத்தை
வேரோ டறுத்து விளங்குவது மெக்காலம் ? 131

பாக நடுமாறிப் பயந்தெழுந்த சித்திரத்தை
ஏக நடுமூலத் திருத்துவது மெக்காலம் ? 132

ஓரின்பங் காட்டும் உயர்ஞான வீதிசென்று
பேரின்ப வீடுகண்டு பெற்றிருப்ப தெக்காலம் ? 133

காரணமாய் வந்தென் கருத்தில் நிறைந்ததெல்லாம்
பூரணமா கக்கண்டு புகழ்ந்திருப்ப தெக்காலம்? 134

ஆயுங் கலைகளெல்லாம் ஆராய்ந்து பார்த்ததற்பின்
நீயன்றி யொன்றுமிலா நிசங்காண்ப தெக்காலம்? 135

குறியாகக் கொண்டு குலமளித்த நாயகனைப்
பிரியாமற் சேர்ந்து பிறப்பறுப்ப தெக்காலம்? 136

மத்தடுத்து நின்று மருளாடு வார்போலே
பித்தடுத்து நின்னருளைப் பெற்றிருப்ப தெக்காலம்? 137

சாவாமல் செத்திருந்து சற்குருவின் பொன்னடிக்கீழ்
வேவாமல் வெந்திருக்க வேண்டுவது மெக்காலம்? 138

என்னை யறியாம லிருந்தாட்டுஞ் சூத்திரியின்
றன்னை யறிந்து தவம்பெறுவ தெக்காலம்? 139

உள்ள மறியா தொளிந்திருந்த நாயகனைக்
கள்ள மனந்தெளிந்து காண்பதினி எக்காலம்? 140

வாசித்துங் காணாமல் வாய்விட்டும் பேசாமல்
பூசித்துந் தோன்றாப் பொருள்காண்ப தெக்காலம்? 141

பன்னிரண்டு காற்புரவி பாய்ந்துசில்லந் தட்டாமல்
பின்னிரண்டு சங்கிலிக்குட் பிணிப்பதினி யெக்காலம்? 142

நாட்டுக்கா லிரண்டும்விட்டு நடுவுக்கா லூடே போய்
ஆட்டுக்கா லிரண்டினுள்ளே அமர்ந்திருப்ப தெக்காலம்? 143

பாற்பசுவை ஒட்டிப் பதியில்வந்து சீராட்டிக்
காற்பசுவை ஒட்டியதிற் கட்டிவைப்ப தெக்காலம்? 144

பலவிடத் தேமனத்தைப் பாயவிட்டுப் பாராமல்
நிலவறையி னூடேபோய் நேர்படுவ தெக்காலம்? 145

காமக் கடல்கடந்து கரையேறிப் போவதற்கே
ஓமக் கனல்வளர்த்தி யுள்ளிருப்ப தெக்காலம்? 146

உதயச் சுடர்மூன்றும் உள்வீட்டி லேகொளுத்தி
இதயத் திருநடன மினிக்காண்ப தெக்காலம்? 147

வேதாந்த பேதமெல்லாம் விட்டேறி யேகடந்து
நாதாந்த மூல நடுவிருப்ப தெக்காலம்? 148

பட்டமற்றுக் காற்றிற் பறந்தாடுஞ் சூத்திரம்போல்
வெட்ட வெளியான விசும்பறிவ தெக்காலம் ? 149

அட்டாங்க யோகமதற் கப்பா லுக் கப்பாலாய்க்
கிட்டாப் பொருளதனைக் கிட்டுவது மெக்காலம் ? 150

ஒட்டாம லொட்டிநிற்கும் உடலுமுயி ரும்பிரித்தே
எட்டாப் பழம்பதிக்கிங் கேணிவைப்ப தெக்காலம் ? 151

பாசத்தை நீக்கிப் பசுவைப் பதியில்விட்டு
நேசத்தி னுள்ளே நினைந்திருப்ப தெக்காலம் ? 152

ஆசார நேய அனுட்டான மும்மறந்து
பேசாமெய்ஞ் ஞானநிலை பெற்றிருப்ப தெக்காலம் ? 153

பலலாயி ரங்கோடிப் பகிரண்ட மும்படைப்பே
அல்லாது வேறில்லையென் றறிவதினி எக்காலம் ? 154

ஆதிமுத லாகிநின்ற அரிவயன்ற அக்கரத்தை
ஓதி யறிந்துள்ளே உணர்வதினி எக்காலம் ? 155

சாத்திரத்தைச் சுட்டுச் சதுர்மறையைப் பொய்யாக்கிச்
சூத்திரத்தைக் கண்டு துயரறுப்ப தெக்காலம் ? 156

அல்லும் பகலுமென்றன் அறிவையறி வாலறிந்து
சொல்லும் முறைமறந்து தூங்குவது மெக்காலம் ? 157

இயங்குஞ் சராசரத்தில் எள்ளுமெண்ணெ யும்போல
முயங்குமந்த வேத முடிவறிவ தெக்காலம் ? 158

ஊனாகி யூனில் உயிராகி எல்வுலகுந்
தானாகி நின்ற தனையறிவ தெக்காலம் ? 159

என்னைவிட்டு நீங்காமல் என்னிடத்து நீயிருக்க
உன்னைவிட்டு நீங்கா தொருப்படுவ தெக்காலம் ? 160

இன்னதென்று சொல்லவொண்ணா எல்லையற்ற வான்பொருளைச்
சொன்னதென்று நானறிந்து சொல்வதினி எக்காலம் ? 161

மனத்தையொரு வில்லாக்கி வான்பொறியை நாணாக்கி
எனதறிவை அம்பாக்கி எய்வதினி எக்காலம் ? 162

என்னை இறக்கவெய்தே என்பழியை யீடழித்த
உன்னை வெளியில்வைத்தே ஒளித்துநிற்ப தெக்காலம் ? 1·3

கடத்துகின்ற தோணிதனைக் கழைகள்குத்தி விட்டாற்போல்
நடத்துகின்ற சித்திரத்தை நானறிவ தெக்காலம்? 164

நின்றநிலை பேராமல் நினைவிலொன்று சாராமல்
சென்றநிலை முத்தியென்று சேர்ந்தறிவ தெக்காலம்? 165

பொன்னும்வெள்ளியும்பூண்ட பொற்பதத்தை யுள்ளமைத்து
மின்னு மொளிவெளியே விட்டடைப்ப தெக்கலாம்? 166

கூட்டிலடை பட்டபுழுக் குளவியுருக் கொண்டதுபோல்
வீட்டிலடை பட்டருளை வேண்டுவது மெக்காலம்? 167

கடலில் ஒளித்திருந்த கனலெழுந்து வந்தாற்போல்
உடலில் ஒளித்தசிவம் ஒளிசெய்வ தெக்காலம்? 168

அருணப் பிரகாசம் அண்டமெங்கும் போர்த்ததுபோல்
கருணைத் திருவடியில் கலந்துநிற்ப தெக்காலம்? 169

பொன்னிற் பலவிதமாம் பூடணமுண் டானதுபோல்
உன்னிற் பிறந்ததுன்னில் ஒடுங்குவது மெக்காலம்? 170

நாயிற் கடைப்பிறப்பாய் நான்பிறந்த துன்பமற
வேயிற் கனலொளிபோல் விளங்குவது மெக்காலம்? 171

சூரிய காந்தியொளி சூழ்ந்துபஞ்சைச் சுட்டதுபோல்
ஆரியன் தோற்றத் தருள்பெறுவ தெக்காலம்? 172

இரும்பிற் கனல்மூட்டி இவ்வுருப்போய் அவ்வுருவாய்க்
கரும்பிற் சுவைரசத்தைக் கண்டறிவ தெக்காலம்? 173

கருக்கொண்ட முட்டைதனைக் கடலாமை தானினைக்க
உருக்கொண்ட வாறதுபோல் உனையடைவ தெக்காலம்? 174

வீடுவிட்டுப் பாய்ந்து வெளியில் வருவார்போல்
கூடுவிட்டுப் பாயுங் குறிப்பறிவ தெக்காலம்? 175

கடைந்தவெண்ணெய் மோரிற் கலவாத வாறதுபோல்
உடைந்து தமியேன் உனைக்காண்ப தெக்காலம்? 176

இருளை ஒளிவிழுங்கி ஏகவுருக் கொண்டாற்போல்
அருளை விழுங்குமிருள் அகன்றுநிற்ப தெக்காலம்? 177

மின்னெழுந்து மின்னொடுங்கி விண்ணில் உறைந்தாற்போல்
என்னுநின்ற தென்னுள்ளே யானறிவ தெக்காலம்? 178

கண்ட புனற்கடத்திற் கதிரொளிகள் பாய்ந்தாற்போல்
கொண்ட சொருபமதைக் கூர்ந்தறிவ தெக்காலம் ? 179

பூணுகின்ற பொன்னணிந்தாற் பொன்சுமக்கு மோவுடலே ?
காணுகின்ற என்கருத்திற் கண்டறிவ தெக்காலம் ? 180

செம்பிற் களிம்புபோற் சிவத்தை விழுங்கிமிக
வெம்பிற்நின்ற மும்மலத்தை வேறுசெய்வ தெக்காலம்? 181

ஆவியுங் காயமும்போல் ஆத்துமத்தில் நின்றதனைப்
பாவி யறிந்துமனம் பற்றிநிற்ப தெக்காலம் ? 182

ஊமன் கனுக்கண் டுரைக்கறியா இன்பமதை
நாமறிந்து கொள்வதற்கு நாள்வருவ தெக்காலம் ? 183

சாகாச் சிவனடியைத் தப்பாதார் எப்போதும்
போகா உடலகன்று போவரென்ப தெக்காலம் ? 184

நிட்டை தனைவிட்டு நினைவறிவு தப்பவிட்டு
வெட்ட வெளியில் விரவிநிற்ப தெக்காலம் ? 185

வெட்டவெளி தன்னில் விளைந்த வெறும்பாழைத்
திட்டமுடன் கண்டு தெளிவதினி எக்காலம் ? 186

எங்கும் பரைவடிவாய் என்வடிவு நின்வடிவாய்க்
கங்குல்பக லின்றியுனைக் கண்டிருப்ப தெக்காலம் ? 187

உண்டதுவும் மாத ருடன்கூடிச் சேர்ந்தின்பங்
கண்டதுவு நீயெனவே கண்டுதொள்வ தெக்காலம் ? 188

ஈமென்று கேட்டதுவும் என்னுள்ளே நின்றதுவும்
ஓமென்று சொன்னதுவும் உற்றறிவ தெக்காலம் ? 189

சத்தம் பிறந்திடமுஞ் தன்மயமாய் நின்றிடமும்
சித்தம் பிறந்திடமுந் தேர்ந்தறிவ தெக்காலம் ? 190

போக்கும் வரவும் புறம்புமுள்ளு மாகிநின்றும்
தாக்கும் ஒருபொருளைச் சந்திப்ப தெக்காலம் ? 191

நானெனவும் நீயெனவும் நாமிரண்டு மற்றென்றாய்
நீயெனவே சிந்தைதனில் நேர்படுவ தெக்காலம் ? 192

அறிவையறி வாலறிந்தே அறியும் அறிவுதனில்
பிறிவுபட நில்லாமல் பிடிப்பதினி எக்காலம் ? 193

நீடும் புவனமெல்லாம் நிறைந்துநின்ற சித்திரமாய்
ஆடுந் திருக்கூத்தை அறிவதினி எக்காலம் ? 194

தித்தியென்ற கூத்தும் திருச்சிலம்பி னோசைகளும்
பத்தியுடன் கேட்டுப் பணிவதினி எக்காலம் ? 195

நயனத் திடைவெளிபோய் நண்ணும் பரவெளியில்
சயனித் திருந்து தலைப்படுவ தெக்காலம் ? 196

அருவி மலைநடுவே ஆயிரக்கால் மண்டபத்தில்
திருவிளையா டற்கண்டு தெரிசிப்ப தெக்காலம் ? 197

மீனிரம்ப வுண்டுகக்கி விக்கிநின்ற கொக்கதுபோல்
தேனிரம்ப வுண்டு தெவிட்டிநிற்ப தெக்காலம் ? 198

பொல்லாத காயமதைப் போட்டு விடுக்குமுன்னே
கல்லாவின் பால்கறப்பக் கற்பதினி எக்காலம் ? 199

வெட்டவெளிக் குள்ளே விளங்குஞ் சதாசிவத்தைக்
கிட்டிவரத் தேடக் கிருபைசெய்வ தெக்காலம் ? 200

பேரறிவி லேமனத்தைப் பேராம லேயிருத்தி
ஓரறிவி லெந்நாளும் ஊன்றிநிற்ப தெக்காலம் ? 201

அத்துவிதம் போலுமென்றன் ஆத்துமத்தின் உள்ளிருந்து
முத்திதர நின்ற முறையறிவ தெக்காலம் ? 202

நானின்ற பாசமதில் நானிருந்து மாளாமல்
நீநின்ற கோலமதில் நிரவிநிற்ப தெக்காலம் ? 203

எள்ளுங் கரும்பும் எழில்மலரும் காயமும்போல்
உள்ளும் புறம்புநின்ற துற்றறிவ தெக்காலம் ? 204

அன்னம் புனலைவகுத் தமிர்தத்தை உண்பதுபோல்
என்னைவகுத் துன்னை இனிக்காண்ப தெக்காலம் ? 205

அந்தரத்தில் நீர்பூத் தலர்ந்தெழுந்த தாமரைபோல்
சிந்தைவைத்துக் கண்டு தெரிசிப்ப தெக்காலம் 206

பிறப்பும் இறப்புமற்றுப் பேச்சுமற்று மூச்சுமற்று
மறப்பும் நினைப்புமற்று மாண்டிருப்ப தெக்காலம் ? 207

மன்னும் பரவெளியை மனவெளியில் அடைத்தறிவே
என்னு ளொருநினைவை எழுப்பிநிற்ப தெக்காலம் ? 208

ஆசைகொண்ட மாதர் அடைகனவு நீக்கியுன்மேல்
ஓசைகொண்டு நானும் ஒடுங்குவதும் எக்காலம்? 209

தன்னுயிரைக் கொண்டு தான்பிரிந்த வாறதுபோல்
உன்னுயிரைக் கொண்டிங் கோங்குவது மெக்காலம்? 210

சேற்றிற் கிளைநாட்டுந் திடமாம் உடலையினிக்
காற்றிலுழல் சூத்திரமாய்க் காண்பதினி யெக்காலம்? 211

என்வசமுங் கெட்டிங் கிருந்தவச மும்மழிந்து
தன்வசமுங் கெட்டருளைச் சார்ந்திருப்ப தெக்காலம்? 212

தன்னை மறந்து தலத்து நிலைமறந்து
கன்மம் மறந்து கதிபெறுவ தெக்காலம்? 213

என்னையென்னி லேமறந்தே இருந்தபதி யும்மறந்து
தன்னையுந்தா னேமறந்து தனித்திருப்ப தெக்காலம்? 214

தன்னையுந்தா னேமறந்து தலைவாசற் றாழ்போட்டே
உன்னைநினைந் துள்ளே உறங்குவது மெக்காலம்? 215

இணைபிரிந்த போதலறி இன்பமுறும் அன்றிலைப்போல்
துணைபிரிந்த போதருள்நூல் தொடர்ந்துகொள்வ தெக்காலம்

ஆட்டமொன்று மில்லாமல் அசைவுசற்றுங் காணாமல்
தேட்டமற்ற வான்பொருளைத் தேடுவது மெக்காலம் 217

முன்னைவினை யாலறிவு முற்றுமறப் பின்மறைந்தால்
அன்னை தனைத்தேடி அமுதுண்ப தெக்காலம்? 218

கள்ளுண் டவர்போற் களிதருமா னந்தமதால்
தள்ளுண்டு நின்றாடித் தடைபடுவ தெக்காலம்? 219

தானென்ற ஆணவமுந் தத்துவமுங் கெட்டொழிந்தே
ஏனென்ற பேச்சுமிலா திலங்குவது மெக்காலம்? 220

நானவனைக் காண்பதெல்லாம் ஞானவிழி யாலறிந்து
தானவனாய் நின்று சரணடைவ தெக்காலம்? 221

தானந்த மில்லாத தற்பரத்தி னூடுருவி
ஆனந்தங் கண்டே அமர்ந்திருப்ப தெக்காலம்? 222

உற்ற வெளிதனிலே உற்றுப்பார்த் தந்தரத்தே
மற்ற மறமாய்கை மாள்வதினி எக்காலம்? 223

ஏடலர்ந்த பங்கயமும் இருகருணை நேத்திரமுந்
தோடணிந்த குண்டலமுந் தோன்றுவது மெக்காலம்? 224

ஐயாறும் ஆறும் அகன்று வெறுவெளியில்
மையிருளில் நின்றமனம் மாள்வதினி எக்காலம்? 225

காட்டும் அருள்ஞானக் கடலிலன்புக் கப்பல்விட்டு
மூட்டுகரு ணைக்கடலில் மூழ்குவது மெக்காலம்? 226

நானாரோ நீயாரோ நன்றும் பரமான
தானாரோ என்றுணர்ந்து தவமுடிப்ப தெக்காலம்? 227

எவரெவர்க ளெப்படிக்கண் டெந்தப் படிநினைத்தார்
அவரவருக் கப்படிநின் றுயென்ப தெக்காலம்? 228

உற்றுற்றுப் பார்க்க ஒளிதருமா னந்தமதை
நெற்றிக்கு நேர்கண்டு நிலைப்பதினி எக்காலம்? 229

விளங்குகின்ற தாரகையை வெய்யோன் மறைத்தாற்போல்
களங்கமற வுன்காட்சி கண்டறிவ தெக்காலம்? 230

என்னையே யானறியேன் இந்தவண்ணஞ் சொன்னதெல்லாம்
முன்னையோர் கைக்கொள்ள முன்பணிவ தெக்காலம்? 231

மாயத்தை நீக்கி வருவினையைப் பாழாக்கிக்
காயத்தை வேறாக்கிக் காண்பதுனை எக்காலம்? 232

அஞ்சு கரத்தானை அடியிணையைப் போற்றிசெய்து
நெஞ்சிற் பொருந்தி நிலைபெறுவ தெக்காலம்? 233

# பாம்பாட்டி சித்தர் பாடல்

### கண்ணிகள்

தெளிந்து தெளிந்து தெளிந் தாடுபாம் பே! சிவன்
சீர்பா தங் கண்டுதெளிந் தாடு பாம்பே!
ஆடுபாம் பே! தெளிந் தாடுபாம் பே! சிவன்
அடியிணை கண்டோமென் றாடு பாம்பே! 1

நீடுபதம் நமக்கென்றுஞ் சேர்ந்த தென்றே
நித்தியமென் றேபெரிய முத்தி யென்றே
பாடுபடும் போதுமாதி பாதம் நினைந்தே
பன்னிப்பன்னிப் பரவிநின் றாடு பாம்பே! 2

பொன்னிலொளி போலவெங்கும் பூர ணமதாய்ப்
பூவின்மணம் போலத்தங்கும் பொற்பு டையதாய்
மன்னும்பல உயிர்களில் மன்னிப் பொருந்தும்
வள்ளலடி வணங்கிநின் றாடு பாம்பே! 3

எள்ளிலெண்ணெய் போலவுயி ரெங்கு நிறைந்த
ஈசன்பத வாசமலர் எண்ணி யெண்ணியே
உள்ளபடி அன்புபத்தி ஓங்கி நிற்கவே
ஒடுங்கிய டங்கித்தெளிந் தாடு பாம்பே! 4

அண்டபிண்டந் தந்தவெங்கள் ஆதி தேவனை
அகலாம லேநினைத்தே அன்பு டன்பணிந்
தெண்டிசையும் புகழ்ந்திட ஏத்தி யேத்தியே
ஏகமன மாகநாடி யாடு பாம்பே! 5

சோதிமய மானபரி சுத்த வத்துவைத்
தொழுதழு தலற்றித்தொந் தொந்தோ மெனவே
நீதிதவ றாவழியில் நின்று நிலையாய்
நினைந்துநி னைந்துருகி யாடு பாம்பே! 6

அருவாயும் உருவாயும் அந்தி யாயும்
அந்தமாயும் ஒளியாயும் ஆகம மாயும்
திருவாயுங் குருவாயுஞ் சீவ னுயும்
செறிந்தவத் துவைப்போற்றி யாடு பாம்பே ! 7

சுட்டிக்காட்ட ஒண்ணுதபாழ்ச் சூனி யந்தன்னைச்
சூட்சமதி யாலறிந்து தோட மறவே
எட்டிப்பிடித் தோமென்ரு னந்த மாகப்பை
எடுத்து விரித்துநின் ருடு பாம்பே ! 8

எவ்வுயிரும் எவ்வுலகும் ஈன் று புறம்பாய்
இருந்து திருவிளையாட் டெய்தி யும்பின்னா
அவ்வுயிரும் அவ்வுலகும் ஆகியு நின்ற
ஆனந்த வெள ளங்கண் டாடு பாம்பே ! 9

## குரு வணக்கம்

சாற்றுமுடல் பொருளாவி தத்த மாகவே
தானம்வாங்கி நின்றவெங்கள் சற்கு ருவினைப்
போற்றிமனம் வாக்குக்காயம் மூன் றும் பொருந்தப்
புகழ்ந்துபு கழ்ந்துநின் ருடு பாம்பே ! 10

பொய்ம்மதங்கள் போதனைசெய் பொய்க்கு ருக்களைப்
புத்திசொல்லி நன்னெறியிற் போக விடுக்கும்
மெய்ம்மதந்தான் இன்னதென் று மேவ விளம்பும்
மெய்க்குருவின் பதபபோற்றி ஆடு பாம்பே ! 11

வேதப்பொருள் இன்னதென் றும் வேதங் கடந்த
மெய்ப்பொருளைக் கண்டுமனம் மேவி விரும்பிப்
போதப்பொருள் இன்னதென் றும் போதனை செய்யும்
பூரணசற் குருதாள்கண் டாடு பாம்பே ! 12

உள்ளங்கையிற் கனிபோல உள்ள பொருளை
உண்மையுடன் காட்டவல்ல உண்மைக் குருவைக்
கள்ளமனந் தன்னைத்தள்ளிக் கண்டு கொண்டன்பாய்க்
களித்துக்க ளித்துநின் ருடு பாம்பே ! 13

அங்கையிற்கண் ணாடிபோல ஆதி வத்துவை
அறிவிக்கும் எங்களுயி ரான குருவைச்
சங்கையறச் சந்ததமுந் தாழ்ந்து பணிந்தே
தமனியப் படமெடுத் தாடு பாம்பே! 14

காயநிலை அழகியைக் கண்டு கொண்டுபின்
கற்புநிலை யுள்ளிற்கொண் டெக் காலமும்வாழும்
தூயநிலை கண்டபரி சுத்தக் குருவின்
துணையடி தொழுதுநின் றாடு பாம்பே! 15

கூடுவிட்டுக் கூடுபாயுங் கொள்கை யுடைய
குருவின்வல் லபமெவர் கூற வல்லவர்?
வீடுபெறும் வகையைமேன் மேலுங் காட்டும்
மெய்க்குருவைப் பணிந்துநின் றாடு பாம்பே! 16

அட்டதிக்கும் அண்டவெளி யான விடமும்
அடக்கிய குளிகையோ டாடி விரைவாய்
வட்டமிட்டு வலம்வரும் வல்ல குருவின்
மலரடி தஞ்சமென் றாடு பாம்பே! 17

கற்பகாலம் கடந்தாதி கர்த்தா வோடுங்
கடமழி யாதுவாழுங் கார ணக்குரு
பொற்பதமே தஞ்சமென்று போற்று தல்செய்து
பூரணச் சிந்தையோ டாடு பாம்பே! 18

வச்சிரத்திற் கோர்பழுது வாய்க்கு மாயினும்
வல்லுடம்புக் கொருகுறை வாய்த்தி டாது
மெச்சுகட முள்ளவெங்கள் வேத குருவின்
மெல்லடி துதித்துநின் றாடு பாம்பே! 19

## பாம்பினது சிறப்பு

நாதர்முடி மேலிருக்கும் நாகப் பாம்பே!
நச்சுப்பையை வைத்திருக்கும் நல்ல பாம்பே!
பாதலத்திற் குடிபுகும் பைகொள் பாம்பே!
பாடிப்பாடி நின்றுவிளை யாடு பாம்பே! 20

வளைபுகும் போதேதலை வாங்கும் பாம்பே!
மண்டலமிட் டுடல்வளை வண்ணப் பாம்பே!
தலைக்கஞ்சி னின்றிடுஞ் சத்தியப் பாம்பே!
தலையெடுத் தேநீவிளை யாடு பாம்பே! 21

குற்றமற்ற சிவனுக்குக் குண்டல மானாய்;
கூறுந்திரு மாலினுக்குக் குடையு மானாய்;
கற்றைக்குழல் பார்வதிக்குக் கங்கண மானாய்;
கரவாமல் உளங்களித் தாடு பாம்பே! 22

மண்டலத்தைத் தாங்குமிக வல்லமை கொண்டாய்;
மாயனுக்குப் படுக்கைக்கு வண்ணப் பாயானாய்;
கண்டபடை நடுங்கிடக் காட்சியும் பெற்றாய்;
கண்ணேசெவி யாகக்கொண்டாய் ஆடு பாம்பே! 23

சந்திரனைச் சூரியனைத் தாவித் தீண்டினாய்;
சங்கரனுக் காபரணந் தானு மாகினாய்;
மந்திரத்துக் கடங்கினாய் மண்டல மிட்டாய்;
வளைந்து வளைந்துநின் றாடு பாம்பே! 24

## சித்தர் வல்லபம்

எட்டுநாகந் தம்மைக்கையா லெடுத்தே யாட்டுவோம்;
இந்திரனார் உலகத்தை இங்கே காட்டுவோம்;
கட்டுக்கடங் காதபாம்பைக் கட்டி விடுவோம்;
கடுவிடந் தனைக்கக்கி யாடு பாம்பே! 25

ஆதிசேடன் ஆயினுமெம் மங்கையி னாலே
ஆட்டிவிடு வோமெங்கள் ஆக்கி னைக்குள்ளே;
நீதியோடு படங்கியே நின்றிடச் செய்வோம்;
நின்றநிலை தவறாம லாடு பாம்பே! 26

தூணைச்சிறு துரும்பாகத் தோன்றிடச் செய்வோம்;
துரும்பைப் பெருந்தூணாகத் தோற்றச் செய்குவோம்;
ஆணைப்பெண்ணும் பெண்ணையாணும் ஆகச் செய்குவோம்;
ஆரவாரித் தெதிராய்நின் றாடு பாம்பே! 27

எட்டுமலை களைப்பந்தாய் எடுத்தெறி குவோம் ;
ஏழுகடலையுங்குடித் தேப்ப மிடுவோம் ;
மட்டுப்படா மணலையும் மதித்து விடுவோம் ;
மகாராசன் முன்புநீநின் றாடு பாம்பே ! 28

மண்டலமுற் றுமெங்கையால் மறைத்து விடுவோம் ;
வானத்தையு மேவில்லாக வளைத்து விடுவோம் ;
தொண்டருக்குச் சூனியஞ் சொல்லிக் காட்டுவோம் ;
தோன்றலுக்கு முன்புநீநின் றாடு பாம்பே ! 29

மூண்டெரியும் அக்கினிக்குள் மூழ்கி வருவோம் ;
முந்நீருள் இருப்பினும் மூச்ச டக்குவோம் ;
தாண்டிவரும் வன்புலியைத் தாக்கி விடுவோம் ;
தார்வேந்தன் முன்புநீநின் றாடு பாம்பே ! 30

செப்பரிய மூன்றுலகுஞ் செம்பொன் னாக்குவோம் ;
செங்கதிரைத் தண்கதிராய்ச் செய்து விடுவோம் ;
இப்பெரிய உலகத்தை இல்லாமற் செய்வோம் ;
எங்கள்வல்ல பங்கண்டுநீ யாடு பாம்பே ! 31

வேதன்செய்த சிருட்டிகள்போல் வேறு செய்குவோம் ;
வேதனையு மெங்கள்கீழே மேவச் செய்குவோம் ;
நாதனுடன் சமமாக நாங்களும் வாழ்வோம் ;
நாங்கள்செய்கை யாமிதுவென் றாடு பாம்பே 32

அறுபத்து நாலுகலை யாவு மறிந்தோம் ;
அதற்குமே லொருகலை யான தறிந்தோம் ;
மறுபற்றுச் சற்றுமில்லா மனமு முடையோம் ;
மன்னனே யாசானென் றாடு பாம்பே ! 33

சீறுபுலி யானையாளி சிங்க முதலாய்ச்
சிற்றடிக்குக் குற்றேவல் செய்யச் சொல்லுவோம் ;
வீறுபெருங் கடவுளை எங்க ளுடனே
விளையாடச் செய்குவோமென் றாடு பாம்பே ! 34

## சித்தர் சம்வாதம்

வாசுகியை ஒருபக்கம் மன்ன நிறுத்தி
மகத்தான பதுமனை மறுபக் கம்வைத்தே
தேசுலவு தக்கனைத்தன் திக்கினிற் சேர்த்துச்
செய்யபது மனைக்கொள்ளு சித்த னாரே! 35

அனந்தனை யொருபக்க மாக நிறுத்தி
அதன்பக்கங் குளிகனை யண்டச் சேர்ததுக்
கனங்கொண்ட கார்க்கோடகன் காணக் காட்டுங்
கடுஞ்சங்க பாலனைத்தான் சித்த னாரே! 36

அட்டதிக்குஞ் சக்கரங்க ளாகக் கீறி
அக்கோண நிலைகளி லக்கரஞ் சேர்த்துத்
திட்டமுடன் மந்திரத்தைச செபித்து நில்லும்
சித்தந்தடு மாறுதீர் சித்த னாரே! 37

அட்டதிக்குஞ் சக்கரங்க ளமைத்து விட்டோம்;
அவ்வவற்றிற் சக்கரங்க ளமைத்து விட்டோம்;
எட்டுநாக மிருக்கின்ற இடத்தில் விட்டோம்;
இனியென்ன செய்வம்சொல்லும் சித்த னாரே! 38

நடுவாக ஆதிசேடன் றன்னை நாட்டும்;
நான்குதிக்கும் மந்திரித்த நீறு தூவும்;
கடுவிடங் கக்கவேயக் கட்செ விகளைக்
கையிலெடுத காடுங்கள் சித்த னாரே! 39

## பொருளாசை விலக்கல்

நாடுநகர் வீடுமாடு நற்பொரு ளெல்லாம்
நடுவன்வ ரும்பொழுது நாடி வருமோ?
கூடுபோன பின்பவற்றாற் கொள்பய னென்னோ?
கூத்தன்பதங் குறித்துநின் றாடு பாம்பே! 40

யானைசேனை தேர்பரி யாவு மணியாய்
யமன்வரும் போதுதுணை யாமோ அறிவாய்;
ஞானஞ்சற்று மில்லாத நாய்கட் குப்புத்தி
நாடிவரும் படிநீயின் றாடு பாம்பே! 41

மாணிக்மா மணிமுடி வாகு வலயம்
மார்பிற்றுலங்கும் பதக்கங்கள் மற்றும் பணிகள்
ஆணிப்பொன்முத் தாரமம்பொன் அந்தக் கடகம்
அழிவான பொருளெனநின் றாடு பாம்பே! 42

மாடகூட மாளிகைகள் வண்ண மண்டபம்
மதில்சூழ்ந்த அரண்மனை மற்று முள்ளவை
கூடவாரா வென்றவந்தக் கொள்கை யறிந்தோர்
குலவாமல் வெறுப்பாரென் றாடு பாம்பே! 43

மலைபோன்ற செம்பொற்குவை வைத்தி ருப்பவர்
மறலிதான் வருகையில் வாரிச் செலவரோ?
அலையாமல் அகத்தினை அத்தன் பால்வைத்தோர்
அழியாரென் றேநீதுணிந் தாடு பாம்பே 44

பஞ்சணையும் பூவணையும் பாய லும்வெறும்
பாழ்ச்சுடு காடதிலே பயனைப் பெறுமோ?
மஞ்சள்மணம் போய்ச்சுடு நாறு மணங்கள்
வருமென்று தெளிந்துநின் றாடு பாம்பே! 45

முக்கனியுஞ் சர்க்கரையும் மோத கங்களும்
முதிர்சுவைப் பண்டங்களும் முந்தி யுண்டவாய்
மிக்கவுயிர் போனபின்பு மண்ணை விழுங்க
மெய்யாகக் கண்டோமென் றாடு பாம்பே! 46

வண்ணப்பட்டும் வாசனையும் வாய்த்த கோலமும்
வண்கவிகை ஆலவட்டம் மற்றுஞ் சின்னமும்
திண்ணமுடன் யமபுரஞ் செல்லுங் காலத்தில்
சேரவர மாட்டாவென் றாடு பாம்பே! 47

மக்கள்பெண்டிர் சுற்றமரு மக்கள் மற்றவர்
மாளும்போது கூடவவா மாள்வ திலலேயே!
தக்கவுல கனைத்தையுந் தந்த கர்த்தனைத்
தாவித்தாவித் துதித்துநின் றூடு பாம்பே! 48

கானலேமான் நீரெனவே கண்டு செல்லல்போல்
காசினிவாழ் வினைமூடர் கண்டு களிப்பார்;
மேனிலேகண் டார்கள்வீணாய் வீம்பு பேசிடார்;
மெய்யன்பதம் நாடுவாரென் றூடு பாம்பே! 49

## பெண்ணாசை விலக்கல்

வெயில்கண்ட மஞ்சள்போன்ற மாத ரழகை
விரும்பியே மேல்விழுந்து மேவு மாந்தர்
ஒயில்கண்டே இலவுகாத் தோடுங் கிளிபோல்
உடல்போனால் ஓடுவாரென் றூடு பாம்பே! 50

செண்டுமுலே வண்டுவிழி கொண்டதோகையைச்
சித்தப்பால் விழுங்கியே சீயென் றுறுதோம்;
குண்டுகட்டே டுமையேறுங் கூற்றுப் பருந்தைக்
கொன்றுதின்று விட்டோநாமென் றூடு பாம்பே! 51

வட்டமுலே யென்றுமிக வற்றுந் தோலே
மகமேரு என்றுவமை வைத்துக் கூறுவார்;
கெட்டநாற்ற முள்ளயோனிக் கேணியில் வீழ்ந்தார்
கெடுவரென் றேநீதுணிந் தாடு பாம்பே! 52

மலஞ்சொரி கண்ணேவடி வாளுக்கொப்பாக
வருணித்துச் சொல்வார்மதி வன்மை யில்லாதார்;
குலநலம் பேசுகின்ற கூகை மாந்தர்கள்
கும்பிக்கே யிரையாவரென் றூடு பாம்பே! 53

சிக்குநாறுங் கூந்தலேயே செழுமை மேகமாய்ச்
செப்புவார்கள் கொங்கைதனைச் செப்புக் கொப்பதாய்;
நெக்குநெக்கு ருகிப்பெண்ணே நெஞ்சில் நினைப்பார்
நிமலனை நினையாரென் றூடு பாம்பே! 54

நாரிவரும் எச்சில்தனை நல்லமு தென்றும்
நண்ணுஞ்சளி நாசிதனை நற்கு மிழென்றும்
கூறுவார்கள் புத்தியில்லாக் கூகை மாந்தர்கள்;
கோனிலையை யறியாரென் றாடு பாம்பே! 55

மயிலென்றுங் குயிலென்றும் மாணிக்க மென்றும்
மானேயென்றுந் தேனேயென்றும் வானமு தென்றும்
ஒயிலான வன்னமயிற் கொத்தவ ளென்றும்
ஓதாமற் கடிந்துவிட் டாடு பாம்பே! 66

மின்னற்கொடி யென்றுஞ்சோதி விளக்க மென்றும்
மெல்லியென்றும் வல்லியென்றும் மேனகை யென்றும்
கன்னற்கட்டி யென்றுஞ்சீனிக் கற்கண் டென்றும்
கழறுமற் கடிந்தோமென் றாடு பாம்பே! 57

பூவையென்றும் பாவையென்றும் பொன்னே யென்றும்
பூந்திருவே என்றுமென்றன் பொக்கிட மென்றும்
கோளையென்றுங் கோதையென்றுங் கோகில மென்றும்
கூறுமற்று றந்தோநாமென் றாடு பாம்பே! 58

மலக்குடம் மீதினிலே மஞ்சள் பூச்சென்றும்
மல்கும்புழுக் கூட்டின்மேல் வண்ணத் தோலென்றும்
சலக்குழிக் குள்ளேநாற்றஞ் சார்ந்த சேறென்றும்
தானறிந்து தள்ளினோமென் றாடு பாம்பே! 59

## சரீரத்தின் குணம்

ஊத்தைக் குழிதனிலே மண்ணை யெடுத்தே
உதிரப்பு னலினிலே யுண்டை சேர்த்தே
வாய்த்தகுய வனாவர் பண்ணும் பாண்டம்
வறையோட்டுக்கு மாகாதென் றாடு பாம்பே! 60

இருவர்மண் சேர்த்திட ஒருவர் பண்ண
ஈரைந்து மாதமாய் வைத்த சூளை
அருமையா யிருப்பினு மந்தச் சூளை
அரைக்காசுக் காகாதென் றாடு பாம்பே! 61

பரியாசம் போலவே கடித்த பாம்பு
பலபே ரறியவே மெத்த வீங்கிப்
பரியார மொருமாது பார்த்த போது
பையோடே கழன்றதென் றாடு பாம்பே! 62

சீயுமல முஞ்செறிசெந் நீரும் நிணமுஞ்
சேர்ந்திடுதுர் நாற்றமுடைக் குடம திடைந்தால்
நாயுநரி யும்பெரிய பேயுங் கழுகும்
நமதென்றே தின்றிடுமென் றாடு பாம்பே! 63

நீரிலெழும் நீர்க்குமிழி நிலைகெ டல்போல
நில்லாதுடல் நீங்கிவிடும் நிச்சய மென்றே
பாரிற்பல வுயிர்களைப் படைத்த வன்றனைப்
பற்றவே நீ பற்றித்தொடர்ந் தாடு பாம்பே! 64

நாறுமீனைப் பலதரம் நல்ல தண்ணீரால்
நாளுங்கழு வினுமதன் நாற்றம் போமோ?
கூறுமுடல் பலநதி யாடிக் கொண்டதால்
கொண்டமலம் நீங்காதென் றாடு பாம்பே! 65

காய்த்தமர மதுமிக்க கல்ல டிபடும்;
கன்மவினை கொண்டகாயங் கண்ட னைபெறும்;
வாய்த்ததவ முடையவர் வாழ்பவ ரென்றே
வத்துத்திரு வடிதொழு தாடு பாம்பே! 66

பேசரிய நவவாயிற் பீற்றல் துருத்தி
பெருங்காற்றுள் புகுந்ததாற் பேச்சுண் டாச்சே!
ஈசனிலை அறியாருக் கிந்தத் துருத்தி
எரிமண்ணிற் கிரையாமென் றாடு பாம்பே! 67

மரப்பாவை போலவொரு மண்ணுருச் செய்து
வளமான சீவனென்னுஞ் சூத்திரம் மாட்டித்
திரைக்குள்ளி ருந்தசைப்போன் தீர்ந்த பொழுதே
தேகம்விழு மென்றுதெளிந் தாடு பாம்பே! 68

தசநாடி தசவாயு சத்த தாது
சார்ந்தமரக் கப்பலது தத்தி விழுமே;
இசைவான கப்பலினை ஏக வெள்ளத்தில்
எந்நாளும் ஓட்டத்துணிந் தாடு பாம்பே! 69

## அகப்பற்று நீக்கல்:

தாமரையி னிலையிலே தண்ணீர் தங்காத
தன்மைபோலச் சகத்தாசை தள்ளி விட்டெங்கும்
தூமணியாய் விளங்கிய சோதி பதத்தைத்
தொழுது தொழுதுதொழு தாடு பாம்பே! 70

கள்ளங்கொலை காமமாதி கண்டித் தவெல்லாம்
கட்டறுத்து விட்டுஞானக் கண்ணைத் திறந்து
தெள்ளிதான வெட்டவெளி சிற்சொரூபத்தைத்
தேர்ந்துபார்த்துச் சிந்தைதெளிந் தாடு பாம்பே! 71

சொல்லும்புளி யம்பழத்தின் தோடு போல்வே
சுற்றத்திருந் தாலுமவர் தொந்தங் களற்று
நில்லுமன மேலீபர நின்ம லத்திலே
நின்றுணை தான் வெறும்பாழென் றாடு பாம்பே! 72

சேற்றிற்றிரி பிள்ளைப்பூச்சி சேற்றை நீக்கல்போல்
தேசத்தோ டொத்துவாழ்வார் செய்கை கண்டபின்
சாற்றுபர வெளிதனைச் சாரும் வழியே
தானடக்க வேணுமென் றாடு பாம்பே! 73

எண்ணெய்க்குந்தண் ணீர்க்குந்தொந்தம் இல்லா வாறுபோல்
எப்போதும் இப்புவியி லெய்த வேண்டும்;
கண் ணுக்குக்கண் ணனவொளி கண்டு கொள்ளவே
கட்டறுத்து வாழ்ந்திடநின் றாடு பாம்பே! 74

கக்கிவிட்ட சோறுகறி கந்தமூ லங்கள்
கண்களிக்க சுத்தமான காட்சி போலவே
சிக்கிக்கொண்ட சகத்தினைச் சீயென் றெழுத்துச்
சீர்பாதங் காணத்தெளிந் தாடு பாம்பே! 75

கோபமென்னும் மதயானை கொண்ட மதத்தைக்
கூர்கொள்புத்தி அங்குசத்தாற் கொன்றுவிட்டோங்காண்;
தீபமென்னுஞ் சிற்சொரூபச் செய்ய பொருளைச்
சேர்ந்துறவு கொண்டோமென் றாடு பாம்பே! 76

நித்தியமென் னுமலையில் நின்று கொண்டோம்யாம்;
நினைத்தபடி யேமுடித்து நின்மல மானோம்;
சத்தியமா யெங்கள்கடந் தானழி யாதே
சந்ததமும் வாழ்வோமென் றாடு பாம்பே! 77

மனமென்னுங் குதிரையை வாக னமாக்கி
மதியென்னுங் கடிவாளம் வாயினிற் பூட்டிச்
சினமென்னுஞ் சீனியின்மேற் சீரா யேறித்
தெளிவிடஞ் சாரிவிட் டாடு பாம்பே! 78

ஆசையென்னுஞ் செருப்பின்மேல் அடியை வைத்தே
ஆங்கார முட்காட்டை அறவே மிதித்தே
காசையெனுந் துர்க்குணத்திற் கனலைக் கொளுத்திக்
காலாகாலங் கடந்தோமென் றாடு பாம்பே! 79

காலனெனுங் கொடிதான கடும்ப கையைநாம்
கற்பமெனும் வாளினாலே கடிந்து விட்டோம்;
தாலமதிற் பிறப்பினைத் தானும் கடந்தோம்
தற்பரங் கண்டோமென் றாடு பாம்பே! 80

தேனில்வீழ்ந்த ஈயைப்போலச் சிந்தை குலைந்து
திகையாமற் சிற்சொரூப தெரிச னைகண்டு
வானிற்பறந் திடச்சூத வான்ம ணிதீர்ந்து
வாயிற்போட் டேகநின் றாடு பாம்பே! 81

தூக்கியநற் பா தங்கண்டேன் சோ தியுங் கண்டேன்;
சுத்தவெளிக் குள்ளேயொரு கூத்தனைக் கண்டேன்;
தாக்கிய சிரசின்மேல் தைத்த பாதம்
சற்குருவின் பாதமென் றாடு பாம்பே! 82

ஆலடிப் பொந்தினிலே வாழ்ந்த பாம்பே !
அரசடிப் பொந்தினிலே புகுந்து கொண்டாய் ;
வாலடி தன்னிலே பார்த்துப் பார்த்து
வாங்கியே தூங்கிநின் றாடு பாம்பே ! 83

நாலு தெருவினிலே நாலு கம்பம்
நடுத்தெரு வினிலேயோர் பொன்னுக் கம்பம்
போலும் விளங்குபொன்னுக் கம்பத்தி னுக்கே
பூமாலை சூடியேநின் றாடு பாம்பே ! 84

ஆழிபெயர்ந் தாலுமேரு மட்டே யலையும்
அடியோடு பெயர்ந்தாலு மன்றிக் கால
ஊழிபெயர்ந் தாலுமதி யுண்மைப் படிக்கே
உறுதி பெயராதுநின் றாடு பாம்பே ! 84

வாயுவினை யிரையாக வாங்கியுண்டே
வருடிக்கு நீரினை வாயுள் மடுத்தே
தேயுபிறை குளிர்காய்ந்து வெட்ட வெளியில்
திகைப்பறச் சேர்ந்துநின் றாடு பாம்பே ! 86

மாசில்கதி வளையிலே மண்டல மிட்டே
மதியான பெரும்பட மடலை விரித்தே
ஆசில்பரா பரமான ஆதி பாதத்தை
அடுத்தடுத் தேதுதித் தாடு பாம்பே ! 87

காடுமலை நதிபதி காசி முதலாய்க்
கால்கடுக்க ஓடிற்பலன் காண லாகுமோ ?
வீடுபெறும் வழிநிலை மேவிக் கொள்ளவே
வேதாந்தத் துறையினின் றாடு பாம்பே ! 88

எள்ளளவும் அன்பகத்தில் இல்லா தார்முத்தி
எய்துவது தொல்லுலகில் இல்லை யெனவே
கள்ளப்புலன் கட்டறுத்துக் கால காலனைக்
கண்டு தொழுதேகளித் தாடு பாம்பே ! 89

சூரியனைக் கண்டபனி தூர வோடல்போல்
சொந்தபந்தஞ் சிந்தபரி சுத்த தலத்தில்
ஆரியனைக் கண்டுதரி சித்தே யன்புடன்
அகலாமற் பற்றித்தொடர்ந் தாடு பாம்பே ! 90

காந்தம்வலி யிரும்புபோல் காசில் மனத்தைக்
காட்சியான வத்துவுடன் கலக்கச் சேர்த்துச்
சாந்தமுடன் தோண்டியும் தாம்பும் போலச்
சலியாமற் றொடர்ந்துநின் றாடு பாம்பே ! 91

உளியிட்ட கற்சிலையில் உண்டோ வுணர்ச்சி ?
உலகத்தின் மூடர்களுக் குண்டோ வுணர்ச்சி ?
புளியிட்ட செம்பிற்குற்றம் போமோ ? அஞ்ஞானம்
போகாது மூடருக்கென் றாடு பாம்பே ! 92

திரளான போரிலூசி தேடல் போல்முத்தி
சிக்காது தேசாசார தேசிகர் தம்மால்
அருளான மூலகுரு வையர் செயலால்
ஆனந்தங் கண்டோமென் றாடு பாம்பே ! 93

ஏட்டுச்சுரைக் காய்கறிக்கிங் கெய்தி டாதுபோல்
எண்டிசைதி ரிந்துங்கதி யெய்த லிலையே !
நாட்டுக்கொரு கோயிற்கட்டி நாளும் பூசித்தே
நாதன்பாதங் காணார்களென் றாடு பாம்பே ! 94

தன்னையறிந் தொழுகுவோர் தன்னை மறைப்பார் ;
தன்னையறி யாதவரே தன்னைக் காட்டுவார் ;
பின்னையொரு கடவுளைப் பேண நினையார்
பேரொளியைப் பேணுவாரென் றாடு பாம்பே ! 95

பாலிற்சுவை போலுமெங்கும் பாய்ந்த வொளியைப்
பற்றுப்பொன் பற்றவைத்த பான்மை போலே
காலிற்சுழு முனைநின்று கண்டு கொண்டு
களித்துக் களித்துநின் றாடு பாம்பே ! 96

தேக்கெடுத்தே ஓடும்வானத் தேனை யுண்டபின்
தேகபந்தம் கொண்டனமித் தேச வாழ்வினை
ஒக்காளமென் றெண்ணிமிகு மோகை யுடனீ
உள்ளந் தெளிந்துநின் றாடு பாம்பே ! 97

சதுர்வேதம் ஆறுவகைச் சாத்தி ரம்பல
தந்திரம் புராணங்கலை சாற்று மாகமம்
விதம்வித மானவான வேறு நூல்களும்
வீணான நூல்களேயென் றாடு பாம்பே ! 98

சமயபேதம் பலவான சாதி பேதங்கள்
சகத்தோர்க்கே யல்லாதுசற் சாதுக் களுக்கோ ?
சிமயத்தி லேறினபேர் சித்த மாறுமோ ?
சித்தர்சித் தாந்தந்தேர்ந் தாடு பாம்பே ! 99

பூசைசெய்த தாலேசுத்த போதம் வருமோ ?
பூமிவலஞ் செய்ததனாற் புண்ணிய முண்டோ ?
ஆசையற்ற காலத்திலே ஆதி வத்துவை
அடையலா மென்றுதுணிந் தாடு பாம்பே ! 100

மூலவேர றிந்துகொண்டால் மூன்று லகமும்
முன்பாகவே கண்டுநித்ய முத்தி சேரலாம் ?
சாலவேர றிந்ததாலே தான்பய னுண்டோ ?
சகத்தைப்பொய் யென்றுதெளிந் தாடு பாம்பே ! 101

சகத்தனாதி யென்றிடாது தான னாதியாற்
சமைந்ததென் றுரைப்பார்கள் சத்தை யறியார் ;
மகத்துவ நிலைகற்ப வன்மை யல்லாது
மற்றும்வன்மை யில்லையேயென் றாடு பாம்பே ! 102

ஆயிரத்தெட் டிதழ்வீட்டி லமர்ந்த சித்தன்
அண்டமெல்லாம் நிறைந்திடும் அற்புதச் சித்தன்
காயமில்லா தோங்கிவளர் காரணச் சித்தன்
கண்ணுளொளி யாயினனென் றாடு பாம்பே ! 103

நாற்பத்துமுக் கோணமிலே நாப்ப ணதாக
நாடுமக்க ரச்சொரூப நாய கன்றனை
மேற்படுத்திக் கொண்டாலந்த மேலு லகெலாம்
மெல்லடிக்குத் தொண்டேயாமென் றாடு பாம்பே! 104

கண்டவர்கள் ஒருக்காலும் விண்டி டார்களே;
விண்டவர்கள் ஒருக்காலும் கண்டி டார்களே;
கொண்டகோல முள்ளவர்கள் கோனிலை காணார்;
கூத்தாடிக்கூத் தாடியேநீ யாடு பாம்பே! 105

ஆறுகலைக் குச்சுக்குள்ளே ஆடு மொருவன்
அயல்வீடு போகுமுன்னே ஆண்கோ லிக்கொள்ளு;
வேறுபட்டால் அவன்றனை மீட்ட லரிதே;
மேவிமுன்னே விடாதுகொண் டாடு பாம்பே! 106

எண்ணரிய புண்ணியங்கள் எல்லாஞ் செய்துமென்
ஏகனடி நெஞ்சமதி லெண்ணு விடிலே
பண்ணரிய தவப்பயன் பத்தி யில்லையேற்
பாழ்படு மென் றுதுணிந் தாடு பாம்பே! 107

எவ்வுலகுஞ் சொந்தமதாய் எய்தும் பயனென்
எங்களாதி ப்தாம்புயம் எண்ணாக் காலையில்?
இவ்வுலக வாழ்வுதா னு மின்றே யறுமென்
றெண்ணிக்கர்த்தன் அடிநினைந் தாடு பாம்பே! 108

மணக்கோலங் கொண்டுமிக மனம கிழ்ந்துமே
மக்கள்மனை சுற்றத்தோடு மயங்கி நின்றாய்;
பிணக்கோலங் கண்டுபின்னுந் துறவா விட்டால்
பிறப்புக்கே துணையாமென் றாடு பாம்பே? 109

பிறப்பையும் இறப்பையும் அறுத்து விடயான்
பெருமருந் தொன் றுசொல்வேன் பெட்பு டன்கேளாய்;
திறப்புடன் மனப்பூட்டுஞ் சிந்தைக் கதவும்
திறந்திடும் வகையறிந் தாடு பாம்பே! 110

இறந்தவர் ஐவரவர் இட்ட மானவர்
எய்தும் அவ ரிறந்தாரென் றெல்ல வர்க்குஞ்சொல் ;
மறந்தவர் ஒருவரென்றே மண்ணினி லுள்ளோர்
வகையறிந் திடவேநின் றாடு பாம்பே ! 111

எண்சீர் விருத்தம்

ஆகார முதலிலே பாம்ப தாக
ஆனந்த வயலிலே படம்வி ரித்தே
ஊகார முதலிலே யொத்தொ டுங்கி
ஓடி வகாரத்தி னுவை நீட்டிச்
சிகாரங் கிடந்ததோர் மந்திரத்தைச்
சித்தப்பி டாரனுர் போதஞ் செய்ய
மாகாரப் பிறப்பையும் வேர றுத்து
மாயபந்தங் கடந்தோமென் றாடு பாம்பே ; 112

தந்திரஞ் சொல்லுவார் தம்மை யறியார் ;
தனிமந்திரஞ் சொல்லுவாங் பொருளை யறியார் ;
மந்திரஞ் செபிப்பார்கள் வட்ட வீட்டினுள்
மதிலினைச் சுற்றுவார் வாயில் காணுர் ;
அந்தரஞ் சென்றுமே வேர்பி டுங்கு
அருளென்னும் ஞானத்தால் உண்டை சேர்த்தே
இந்த மருந்தினைத் தின்பி ராகில்
இனிப்பிறப் பில்லையென் றாடு பாம்பே ! 113

களிமண்ணி னுலொரு கப்பல் சேர்த்தே
கனமான பாய்மரங் காண நாட்டி
அளிபுலந் தன்னையே சுக்கா னுக்கி
அறிவென்னு மாதாரச் சீனி தூக்கி
வெளியென்னும் வட்டத்தே யுள்ள டக்கி
வேதாந்தக் கடலினை வெல்ல வோட்டித்
தெளிவுறு ஞானியா ரோட்டுங் கப்பல்
சீர்பாதஞ் சேர்ந்ததென் றாடு பாம்பே ! 114

உள்ளத்துக் குள்ளேயே யுணர வேண்டும் ;
உள்ளும் புறம்பையு மறிய வேண்டும் ;
மெள்ளக் கனலை யெழுப்ப வேண்டும் ;
வீதிப் புனலிலே செலுத்த வேண்டும் ;
கள்ளப் புலனைக் கடிந்து விட்டுக்
கண்ணுக்கு மூக்குமேற் காண நின்று
தெள்ளு பரஞ்சோதி தன்னைத் தேடிச்
சீர்பாதங் கண்டோமென் றாடு பாம்பே ! 115

ஓங்காரக் கம்பத்தின் உச்சிமேலே
உள்ளும் புறம்பையு மறிய வேண்டும் ;
ஆங்காரக் கோபத்தை யறுத்து விட்டே
ஆனந்த வெள்ளத்தைத் தேக்கிக் கொண்டே
சாங்கால மில்லாமற் றூணு வோடே
சட்டதிட்ட மாய்ச்சேர்ந்து சாந்த மாகத்
தூங்காமல் தூங்கியே சுகம டைந்து
தொந்தோம் தொந்தோமென் றாடு பாம்பே ! 116

விரகக் குடத்திலே பாம்ப டைப்போம் ;
வேதாந்த வெளியிலே விட்டே யாட்டுவோம் ;
காரணங்க ளைப்பிடுங்கி இரைகொ டுப்போம் ;
காலக் கடுவெளியின் றூட்டு விப்போம் ;
துரகந் தனிலேறித் தொல்லுல கெங்கும்
சுற்றிவலம் வந்துநித்ய சூட்சங் கண்டும் ;
உரையற்ற மந்திரஞ் சொல்லி மீட்போம் ;
ஒருநான்கும் பெற்றேமென் றாடு பாம்பே ! 117

காயக் குடத்திலே நின்ற பாம்பைக்
கருணைக் கடலிலே தியங்க விட்டு
நேயச் சுழுமுனை நீடு பாய்ச்சி
நித்யமான வத்துவை நிலைக்க நாடி

மாயப் பெருவெளி தன்னி லேறி
மாசற்ற பொருளினை வாய்க்கத் தேடி
ஆயத் துறைகடந் தப்பாற் பாழின்
ஆனந்தஞ் சேர்ந்தோமென் றாடு பாம்பே! 118

மூலத் தலத்திலே நின்ற கருத்தை
முற்றுஞ் சுழுமுனை தன்னி லூடே
மேலத் தலத்திலே விந்து வட்டம்
வேலை வழியிலே மேவி வாழும்
பாலத் திருத்தாய்க் கருணை யதனால்
பரகதி ஞானசொ ரூப மாகி
ஆலச் சயனத்து மா லுட னின்றே
ஆனந்தஞ் சேர்ந்தோமென் றாடு பாம்பே! 119

புலனைந்து வீதியில் வையாளி பாயும்
புரவி யெனுமனத்தை ஒருமைப் படுத்தி
மலபந்த வுலகங் கடந்த தாலே
மன்னுகுரு பாதத்தி னிலையை நாடித்
தலைமைந்து பூலோகங் கடந்த தாலே
சந்திர மண்டிலமும் கடந்த தாகும்;
அலமந்து பூலோகக் கடலை நீக்கி
ஆனந்த மாகிநின் றாடு பாம்பே! 120

குருவென்னும் ஆசானி னுருவெ டுத்துக்
குறியான ஞானந்துப் பாக்கி யாக்கி
அருளென்னு மருளையே யுண்டை யாக்கி
ஆனந்த மாகவே யதைக்க டந்தே
மருளென்னு மாதர்மன நெறியைத் தொட்டு
வாங்காம லெரிந்திட நெட்டை யிட்டுப்
பருவலைக் குள்ளேயே பட்ட தென்றே
பற்றுனைப் பற்றிநின் றாடு பாம்பே! 121

கன்னன் குகையிலே கான்ம றிப்போம்;
கருமா னுலையிலே தீயை மூட்டுவோம்;
சொன்னூர் தலையிலே பொன்னை யாக்குவோம்;
சுருதி யருங்கல்வி ஒப்பஞ் செய்வோம்;
மின்னார்கள் பாசத்தை விட்டே யெரிப்போம்;
மெய்ப்பொருட் குறிகண்டு விருப்பை யடைவோம்;
பன்னாதே பன்னாதே சும்மா விருந்து
பராபரஞ் சேர்ந்தோமென் றாடு பாம்பே! 122

சாதிப் பிரிவினிலே தீயை மூட்டுவோம்;
சந்தை வெளியினிலே கோலை நாட்டுவோம்;
வீதிப் பிரிவினிலே விளையா டிடுவோம்;
வேண்டாத மனையினி லுறவு செய்வோம்;
சோதித் துலாவியே தூங்கி விடுவோம்;
சுகமான பெண்ணையே சுகித்தி ருப்போம்;
ஆதிப் பிரமர்கள் ஐந்து பேரும்
அறியார்க ளிதையென் றாடு பாம்பே! 123

நெட்டெழுத் ததனிலே நிலைபி டித்து
நீங்கா வெழுத்திலே வாலைமு றுக்கி
விட்டவ் வெழுத்திலே படம்வி ரித்து
விண்ணின் வழியிலே மேவி யாடிப்
பட்ட வெழுத்தையும் பதிந்தி ருப்போம்
பன்னிரண் டாமெழுத்திற் பன்னிக் கூடித்
திட்டமுட னெமக்கருள் தேசிக னார்தம்
சீர்பாதஞ் சேர்ந்தோமென் றாடு பாம்பே! 124

ஊசித்துளைக் குடத்தினிற் பாம்பை யடைப்போம்;
உலகெலாஞ் சுற்றியே யுலாவி வருவோம்;
மாசுள்ள பிறவியை மறந்தி ருப்போம்;
மனமொத்த வெளியிலே விட்டே யாட்டுவோம்;

மாசுப் புலன்களை இரைகொ டுப்போம் ;
மனமுற்ற உச்சியி லேறி யாடுவோம் ;
பேசு மெழுத்தையும் விழுங்கிவிடுவோம் ;
பிறப்பிறப் பற்றோமென் றாடு பாம்பே ! 125

ஆணிக் குடத்திலே பாம்ப டைப்போம் ;
அக்கினிக் கோட்டைமே லேறப் பார்ப்போம் ;
மாணிக்கத் தூணின்மேல் விட்டே யாட்டுவோம் ;
மனம்வாக்குக் காயத்தை இரைகொ டுப்போம் ;
நாணிக் கயிற்றையும் அறுத்து விடுவோம் ;
நமனற்ற நாதன்பதம் நாடியே நிற்போம் ;
ஏணிப் படி வழிகண் டேறி விடுவோம் ;
யாருமிதை யறியாரென் றாடு பாம்பே ! 126

வடக்குங் கிழக்குமாக நூலை யிழைப்போம் ;
மற்றுஞ் சுழலிலே பாவு பூட்டுவோம் ;
நடக்கும் வழியினிலே யுண்டை சேர்ப்போம் ;
நடவா வழியினிலே புடவை நெய்வோம் ;
குடக்குக் கரையினிலே கோலைப் போடுவோம்
கொய்ததை யெங்குமே விற்று விடுவோம் ;
அடக்கியே யேகத்துள்ளே வைக்கவும் வல்லோம் ;
ஆதிபதங் கண்டோமென் றாடு பாம்பே ! 127

சூத்திரக் குடத்திலே பாம்பை யடைப்போம் ;
சுழுமுனைக் குள்ளேயே சுகித்தி ருப்போம் ;
பாத்திரங் கொண்டுமே பலியி ரப்போம் ;
பத்தெட்டு மூன்று படிக டந்தோம் ;
ஊத்தைச் சடத்தினைப் புடமே யிடுவோம் ;
உளவ னெமக்குநல் லுறுதி சொல்லப்
பார்த்துரை யிதன்மெய் பலிக்க வெண்ணிப்
பதனம் பதனமென் றாடு பாம்பே ! 128

மவ்வக் குடத்திலே பாம்ப டைப்போம் ;
 மணிவட்ட வாசியை வாரி யுண்போம் ;
வவ்வக் குடங்களைத் தள்ளி விடுவோம் ;
 வக்கிர சொப்பனந் தாண்டி விடுவோம் ;
பவ்வ வெளியிலே விட்டே யாட்டுவோம் ;
 பஞ்ச கருவியைப் பலிகொ டுப்போம் ;
சிவ்வுரு வாகியே நின்றோ மென்றே
 சீர்பா தங் கண்டுதெளிந் தாடு பாம்பே ! 129

# இடைக்காட்டுச் சித்தர் பாடல்

—::—

காப்பு

## கலி விருத்தம்

ஆதி யந்தமில் லாதவ னாதியைத்
தீது றும்பவந் தீப்படு பஞ்சுபோல்
மோது றும்படி முப்பொறி யொத்துறக்
காத லாகக் கருத்திற் கருதுவாம்.

## தாண்டவராயக்கோனார் கூற்று

### கண்ணிகள்

எல்லா வுலகமு மெல்லா வுயிர்களும்
எல்லாப் பொருள்களு மெண்ணரிய
வல்லாள னாதி பரம சிவனது
சொல்லா லாகுமே கோனாரே! 1

வானியல் போல வயங்கும் பிரமமே
சூனிய மென்றறிந் தேத்தாக்கால்
ஊனிய லாவிக் கொருகதி யில்லையென்
றோர்ந்துகொள் ளுவீர்நீர் கோனாரே! 2

முத்திக்கு வித்தான மூர்த்தியைத் தொழுது
முத்திக் குறுதிகள் செய்யாக்கால்
சித்தியும் பத்தியுஞ் சத்தியு முத்தியுஞ்
சேரா வாகுமே கோனாரே! 3

தொல்லைப் பிறவியின் தொந்தமுற் றறவே
சோம்பலற் றுத்தவஞ் செய்யாக்கால்
எல்லையில் கடவு ளெய்தும் பதமுமக்
கில்லையென் றெண்ணுவீர் கோனாரே! 4

ஆரண மூலத்தை அன்புட னேபர
மானந்தக் கோலத்தைப் பண்புடனே
பூரண மாகவே சிந்தித்து மெய்ஞ்ஞானப்
போதத்தைச் சார்ந்திம் கோனாரே ! 5

காலா காலங் கடந்திடு சோதியைக்
கற்பனை கடந்த அற்புதத்தை
நூலாற் பெரியவர் சொன்ன நுண் பொருளை
நோக்கத்திற் காண்பது கோனாரே ! 6

சொல்லருஞ் சகள நிட்கள மானதைச்
சொல்லினாற் சொல்லாமல் கோனாரே !
அல்லும் பகலு மகத்தி லிருத்திடில்
அந்தகன் கிட்டுமோ கோனாரே ! 7

சூரியன் வாள்பட்ட துய்ய பனிகெடுந்
தோற்றம்போல் வெவ்வினை தூள்படவே
நாரியி டப்பாகன் தாணெஞ்சிற் போற்றியே
நற்கதி சேர்ந்திடும் கோனாரே ! 8

மும்மலம் நீக்கிட முப்பொறிக் கெட்டாத
முப்பாழ் கிடந்ததா மப்பாலைச்
செம்மறி யோட்டிய வேலை யமயத்துஞ்
சிந்தையில் வைப்பீரே கோனாரே ! 9

பஞ்ச விதமாயச் சஞ்சலம் பறக்கப்
பற்றற நின்றதைப் பற்றியன்பாய்
நெஞ்சத் திருத்தி யிரவு பகலுமே
நேசித்துக் கொள்ளுவீர் கோனாரே ! 10

## நாராயணக்கோனார் கூற்று

### தரவு கொச்சகம்

சீரார் சிவக்கொழுந்தைத் தெள்ளமுதைச் செந்தேனைப்
பாராதி வான்பொருளைப் பஞ்சவுரு வானவொன்றைப்
பேரான விண்ணொளியைப் பேரின்ப வாரிதியை
நேராக எந்நாளும் நெஞ்சிருத்தி வாழ்வேனே. 11

கண்ணுள் கருமணியைக் கற்பகத்தைக் காஞ்சனத்தைப்
பெண்ணுவப் பாதியனைப் பேசரிய முப்பொருளை
விண்ணின் அமுதை விளக்கொளியை வெங்கதிரைத்
தண்ணளியை யுள்ளில்வைத்துச் சாரூபஞ் சாருவனே. 12

## கண்ணிகள்

மனமென்னும் மாடடங்கிற் றண்ட வக்கோனே !-முத்தி
வாய்த்ததென் றெண்ணேடா தாண்ட வக்கோனே ! 13

சினமென்னும் பாம்பிறந்தாற் றண்ட வக்கோனே !-யாவுஞ்
சித்தியென்றே நினையேடா தாண்ட வக்கோனே ! 14

ஆசையெனும் பசுமாளின் தாண்ட வக்கோனே!-இந்த
அண்டமெல்லாங் கண்டறிவாய் தாண்ட வக்கோனே ! 15

ஓசையுள்ள டங்குமுன்னங் தாண்ட வக்கோனே !-மூல
ஓங்காரங் கண்டறிநீ தாண்ட வக்கோனே ! 16

மூலப் பகுதியறத் தாண்ட வக்கோனே !-உள்ளம்
முளைத்தவேர் பிடுங்கேடா தாண்ட வக்கோனே! 17

சாலக் கடத்தியல்பு தாண்ட வக்கோனே !-மலச்
சாலென்றே தேர்ந்தறிநீ தாண்ட வக்கோனே ! 18

பற்றே பிறப்புண்டாக்குந் தாண்ட வக்கோனே !-அதைப்
பற்றற அறுத்துவிடு தாண்ட வக்கோனே ! 19

சற்றே பிரமத்திச்சை தாண்ட வக்கோனே !-உன்னுள்
சலியாமல் வைக்கவேண்டுந் தாண்ட வக்கோனே ! 20

அவித்தவித்து முளையாதே தாண்ட வக்கோனே !-பத்தி
அற்றவர் கதியடையார் தாண்ட வக்கோனே ! 21

செவிதனிற்கேளாதமறை தாண்ட வக்கோனே !-குரு
செப்பில்வெளி யாமல்லவோ தாண்ட வக்கோனே ! 22

## கட்டளைக் கலித்துறை

மாடும் மனைகளும் மக்கஞ் சுற்றமும் வான்பொருளும்
வீடும் மணிகளும் வெண்பொன்னுஞ் செம்பொன்னும் வெண்கல
காடுங் கரைகளுங் கல்லாம் பணியுங் கரிபரியும் [மும்
தேடும் பலபண்டம் நில்லா; சிவகதி சேர்மின்களே ! 23

## நேரிசை வெண்பா

போகம்போம் போக்கியம்போம் போசனம்போம் புன்மைபோம்
மோகம்போம் மூர்க்கம்போம் மோசம்போம்—தாகம்போம்;
வேதமுத லாகமங்கள் மேலான தென்றுபல்கால்
ஓதுபிர மத்துற்றக் கால். 24

## தாண்டவராயக்கோனார் கூற்று

தாந்தி மித்திமி தந்தக்கோ னாரே!
தீந்தி மித்திமி திந்தக்கோ னாரே!
ஆநந்தக் கோனாரே!—அருள்
ஆநந்தக் கோனாரே!

ஆயி ரத்தெட்டு வட்டமுங் கண்டேன்;
அந்தவட் டத்துள்ளே நின்றதுங் கண்டேன்;
மாயிரு ஞாலத்து நூற்றெட்டும் பார்த்தேன்;
மந்த மனத்துறுஞ் சந்தேகந் தீர்த்தேன். (தாந்)

அந்தக் கரணமெ னச்சொன்ன லாட்டையும்
அஞ்ஞான மென்னு மடர்ந்தவன் காட்டையும்
சந்தத் தவமென்னும் வாளினால் வெட்டினேன்
சாவா திருந்திடக் கோட்டையுங் கட்டினேன். (தாந்)

மெய்வாய்கண் மூக்குச் செவியெனு மைந்தாட்டை
வீறுஞ் சுவையொளி யூறோசை யாங்காட்டை
எய்யாம லோட்டினேன் வாட்டினே னாட்டினேன்
ஏக வெளிக்குள்ளே யோக வெளிக்குள்ளே. (தாந்)

பற்றிரண் டும்மறப் பண்புற்றேன் நண்புற்றேன்
பாலையு முட்கொண்டேன் மேலையாங் கட்கண்டேன்
சிற்றின்பம் நீக்கினேன் மற்றின்பம் நோக்கினேன்
சிற்பரஞ் சேர்ந்திட்டேன் தற்பரஞ் சார்ந்திட்டேன். ()

அண்ணாக்கை யூடே படைத்தே யமுதுண்ணேன்
அந்தரத் தரத்தை யப்பொழு தேயெண்ணேன்
விண்ணாரு மொழியை மேவிப்பூ சைபண்ணேன்
மெய்ஞ்ஞான மொன்றன்றி வேதேயொன் றைநண்ணேன். ()

மண்ணாதி பூதங்க ளைந்தையுங் கண்டேனே
 மாயா விகாரங்கள் யாவையும் விண்டேனே
விண்ணொளி மொழியை மெய்யினுட் கொண்டேனே
 மேதினி வாழ்வினை மேலாக வேண்டேனே. (தாங்)

வாக்காதி யைந்தையும் வாகாய்த் தெரிந்தேனே
 மாயைசம் பந்தங்க ளைந்தும் பிரிந்தேனே
நோக்கரு யோகங்க ளைந்தும் புரிந்தேனே
 நுவலுமற் றைந்தியோக நோக்கம் பரிந்தேனே. (தாங்)

ஆறு தாரத்தெய் வங்களை நாடு
 அவர்க்கும் மேலான ஆதியைத் தேடு
கூறுன வட்டவா னந்தத்திற் கூடு
 கோசமைந் துங்கண்டு குன்றேறி யாடு. (தாங்)

## நாராயணக்கோனுர் கூற்று

ஆதி பகவனையே பசுவே!
 அன்பாய் நினைப்பாயேல்

சோதி பரகதிதான் பசுவே!
 சொந்தம தாகாதோ?

எங்கும் நிறைபொருளைப் பசுவே!
 எண்ணிப் பணிவாயேல்

தங்கும் பரகதியில் பசுவே!
 சந்ததஞ் சாருவையே.

அல்லும் பகலுநிதம் பசுவே!
 ஆதி பதந்தேடில்

புல்லும் மோட்சநிலை பசுவே!
 பூரணங் காண்பாயே.

ஒன்றைப் பிடித்தோர்க்கே பசுவே!
 உண்மை வசப்படுமே;

நின்ற நிலைதனிலே பசுவே!
 நேர்மை யறிவாயே.

எல்லா மிருந்தாலும் பசுவே !
ஈசர் அருளிலேயேல்

இல்லாத் தன்மையென்றே பசுவே !
எண்ணிப் பணிவாயே.

தேவனு தவியன்றிப் பசுவே !
தேர்ந்திடில் வேறென்றில்லை

ஆவிக்கு மாவியதாம் பசுவே !
அத்தன் திருவடியே.

தாயினும் அன்பனன்றோ பசுவே !
சத்திக்குள் ளானவன்றான் ?

நேய முடையவர்பால் பசுவே !
நீங்கா திருப்பானே.

முத்திக்கு வித்தானோன் பசுவே !
மூலப் பொருளானோன்

சத்திக் குறவானோன் பசுவே !
தன்னைத் துதிப்பாயே.

ஐயன் திருப்பாதம் பசுவே !
அன்புற்று நீபணிந்தால்

வெய்ய வினைகளெல்லாம் பசுவே !
விட்டோடுங் கண்டாயே.

சந்திர சேகரன்றாள் பசுவே !
தாழ்ந்து பணிவாயேல்

இந்திரன் மான்முதலோர் பசுவே !
ஏவல் புரிவாரே.

கட்புடலன் காணவொண்ணப் பசுவே !
கர்த்தன் அடியிணையை

உட்புலன் கொண்டேத்திப் பசுவே !
உன்னத மெய்வாயே.

சுட்டியுங் காணவொண்ணுப் பசுவே!
சூனிய மானவத்தை

ஒட்டிப் பிடிப்பாயேல் பசுவே!
உன்னை நிகர்ப்பவர்யார்?

தன்மனந் தன்னுலே பசுவே!
தாணுவைச் சாராதார்

வன்மரமொப்பாகப் பசுவே!
வையத் துறைவாரே.

சொல்லென்னு நற்பொருளாம் பசுவே!
சோதியைப் போற்றுக்கால்

இல்லென்று முத்திநிலை பசுவே!
எப்பொ ளுஞ்சொலுமே.

## பலரொடு கிளத்தல்

கண்ணுள் மணியைக் கருதிய பேரொளியை
விண்ணின் மணியை விளக்கொளியைப் போற்றீரே. 47

மனம்வாக்குக் காயமெனும் வாய்த்தபொறிக் கெட்டாத
தினகரனை நெஞ்சமதிற் சேவித்துப் போற்றீரே. 48

காலமூன் றுங்கடந்த கதிரொளியை யுள்ளத்தாற்
சாலமின் றிப்பற்றிச் சலிப்பறவே போற்றீரே. 49

பாலிற் சுவைபோலும் பழத்தில் மதுப்போலும்
நூலிற் பொருள்போலும் நுண்பொருளைப் போற்றீரே. 50

மூவர் முதலை முக்கனியைச் சர்க்கரையைத்
தேவர் பொருளைத் தெள்ளமுதைப் போற்றீரே. 51

தூய மறைப்பொருளைச் சுகவா ரிதியமிர்தை
நேய முடனுரு நிலைபெறவே போற்றீரே. 52

சராசரத் தைத்தந்த தனிவான மூலமென்னும்
பராபரத் தைப்பற்றிப் பவமறவே போற்றீரே. 53

மண்ணாதி பூதமுதல் வகுத்ததொரு வான்பொருளைக்
கண்ணாரக் காணக் கருத்திசைந்து போற்றீரே. 54

பொய்ப்பொருளை விட்டுப் புலமறிய வொண்ணாத
மெய்ப்பொருளை நாளும் விருப்புற்றுப் போற்றீரே. 55

எள்ளிற்றை லம்போல எங்கும் நிறைபொருளை
உள்ளிற் றுதித்தே யுணர்வடைந்து போற்றீரே. 56

## நெஞ்சொடு கிளத்தல்

பூமியெல்லா மோர்குடைக்கீழ்ப் பொருந்தவர சாளுதற்குக்
காமியம்வைத் தாலுனக்குக் கதியுளதோ கன்மனமே ! 57

பெண்ணாசை யைக்கொண்டு பேணித் திரிந்தக்கால்
விண்ணாசை வைக்க விதியிலையே கன்மனமே ! 58

மேயும் பொறிகடமை மேலிடவொட் டார்க்குவினை
தேயுமென்றே நல்வழியிற் செல்லுநீ கன்மனமே ! 59

பொன்னிச்சை கொண்டு பூமிமுற் றும்திரிந்தால்
மன்னிச்சை நோக்கம் வாய்க்குமோ கன்மனமே ! 60

பொய்யான கல்விகற் றுப் பொருண்மயக்கங் கொள்ளாமல்
மெய்யான ஞானக்கல்வி விரும்புவாய் கன்மனமே ! 61

பேய்க்குரங்கு போலப் பேருலகி லிச்சைவைத்து
நாய்நரிகள் போலலைந்தால் நன்மையுண்டோ கன்மனமே! 62

இரும்பையிழுக் குங்காந்தத் தியற்கைபோற் பல்பொருளை
விரும்பினதால் அவைநிலையோ ? விளம்புவாய் கன்மனமே!

கற்பநிலை யாலலவோ கற்பகா லங்கடத்தல் ?
சொற்பநிலை மற்றநிலை சூட்சங்காண் கன்மனமே ! 64

தேக மிழப்பதற்குச் செபஞ்செய்தென் தவஞ்செய்தென் ?
யோகமட்டுஞ் செய்தாலென் ? யோசிப்பாய் கன்மனமே ! 65

சாகா திருப்பதற்குத் தான்கற்ற கல்வியன்றோ
வாகான மெய்க்கல்வி ? வகுத்தறிநீ கன்மனமே ! 66

## அறிவோடு கிளத்தல்

எல்லாப் பொருள்களையு மெண்ணப் படிபடைத்த
வல்லாளன் றன்னை வகுத்தறிநீ! புல்லறிவே 67

கட்புலனுக் கெவ்வளவுங் காணு திருந்தெங்கும்
உட்புலனுய் நின்றவொன்றை உய்த்தறிநீ புல்லறிவே! 68

விழித்திருக்கும் வேளையிலே விரைந்துறக்க முண்டாகும்
செழித்திலங்கும் ஆன்மாவைத் தேர்ந்தறிநீ புல்லறிவே! 69

மெய்யிலொரு மெய்யாகி மேலாகிக் காலாகிப்
பொய்யிலொரு பொய்யாகும் புலமறிநீ புல்லறிவே! 70

ஆத்துமத்தின் கூறுன அவபவப்பேய் உன்னுடனே
கூத்துப் புரிகின்ற கோளறிவாய் புல்லறிவே! 71

இருட்டறைக்கு நல்வினக்காய் இருக்குமுன்றன் வல்லமையை
அருட்டுறையில் நிறுத்திவிளக் காகுநீ புல்லறிவே! 72

நல்வழியிற் சென்று நம்பதவி யெய்தாமல்
கொல்வழியிற் சென்று குறுகுவதேன் புல்லறிவே! 73

கைவிளக்குக் கொண்டு கடலில்வீழ் வார்போல
மெய்விளக்குன் னுள்ளிருக்க வீழ்குவதேன் புல்லறிவே! 74

வாசிக்கு மேலான வான்கதியுன் னுள்ளிருக்க
யோசிக்கு மேற்கதிதான் உனக்கரிதோ புல்லறிவே! 75

அன்னையைப்போ லெவ்வுயிரும் அன்புடனே காத்துவரும்
முன்னவனைக் கண்டு முத்தியடை புல்லறிவே! 76

## சித்தத்தொடு கிளத்தல்

### கண்ணிகள்

அஞ்ஞானம் போயிற்றென்று தும்பீபற-பர
மாநந்தங் கண்டோமென்று தும்பீபற!
மெய்ஞ்ஞானம் வாய்த்ததென்று தும்பீபற-மலை
மேலேறிக் கொண்டோமென்று தும்பீபற! 77

அல்லல்வலை யில்லையென்றே தும்பீபற-நிறை
ஆணவங்க ளற்றேமென்றே தும்பீபற!
தொல்லைவினை நீங்கிற்றென்றே தும்பீபற-பரஞ்
சோதியைக் கண்டோமெனத் தும்பீபற! 78

ஐம்பொறி யடங்கினவே தும்பீபற-நிறை
அருவே பொருளாமெனத் தும்பீபற!
செம்பொருள்கள் வாய்ந்தனவே தும்பீபற-ஒரு
தெய்வீகங் கண்டோமென்றே தும்பீபற! 79

மூவாசை விட்டோமென்றே தும்பீபற-பர
முத்திநிலை சித்தியென்றே தும்பீபற!
தேவாசை வைத்தோமென்று தும்பீபற-இந்தச்
செகத்தை யொழித்தோமென்று தும்பீபற! 80

பாழ்வெளியை நோக்கியே தும்பீபற-மாயைப்
பற்றற்றே மென்றேநீ தும்பீபற!
வாழ்விட மென்றெய்தோந் தும்பீபற-நிறை
வள்ளனிலை சார்ந்தோமே தும்பீபற! 81

எப்பொருளுங் கனவென்றே தும்பீபற-உல
கெல்லாம் அழியுமென்றே தும்பீபற!
அப்பிலெழுத் துடலென்றே தும்பீபற-என்றும்
அழிவில்லா தாதியென்று தும்பீபற! 82

## குயிலொடு கிளத்தல்

கரணங்கள் ஒருநான்கு மடங்கினவே கெட்ட
காமமுதல் ஓராறும் ஒடுங்கினவே;
சரணங்கள் ஒருநான்குங் கண்டனமென்றே-நிறை
சந்தோட மாகவே கூவுகுயிலே! 83

உலகமோக் காளமாமென் றூதுகுயிலே!-எங்கள்
உத்தமனைக் காண்பரிதென் றூதுகுயிலே!
பலமதம் பொய்ம்மையேயென் றூதுகுயிலே!-எழு
பவமகன் றிட்டோநாமென் றூதுகுயிலே! 84

சாதனங்கள் செய்தவர்கள் சாவார்குயிலே!-எல்லாத்
தத்துவங்கள் தேர்ந்தவர்கள் வேவார்குயிலே!
மாதவங்கள் போலும்பலன் வாயாகுயிலே!-மூல
மந்திரங்கள் தான்மகிமை வாய்க்குங்குயிலே! 85

எட்டிரண்ட றிந்தோர்க்கிட ரில்லைகுயிலே !-மனம்
ஏகாம னிற்கிற்கதி யெய்துங்குயிலே !
நட்டணையைச் சார்ந்தறிந்து கொள்ளுகுயிலே !-ஆதி
நாயகனை நினைவில்வைத் தோதுகுயிலே ! 86

## மயிலொடு கிளத்தல்

ஆடுமயி லோடட மாடுமயிலே !-எங்கள்
ஆதியணி சேடனைக்கண் டாடுமயிலே !
கூடுபோகு முன்னங்கதி கொள்ளுமயிலே !-என்றுங்
குறையாமல் மோனநெறி கொள்ளுமயிலே ! 87

இல்லறமே யல்லலாமென் றாடுமயிலே !-பத்தி
இல்லவர்க்கு முத்திசித்தி இல்லைமயிலே !
நல்லறமே துறவறங் காணுமயிலே !-சுத்த
நாதாந்த வெட்டவெளி நாடுமயிலே ! 88

காற்றாணைப் போன்மனத்தைக் காட்டுமயிலே !-வரும்
காலனையுந் தூரத்தி லோட்டுமயிலே !
பாற்றா டுருவவே பாயுமயிலே !-அகப்
பற்றுச்சற்று மில்லாமற் பண்ணுமயிலே ! 89

## அன்னத்தொடு கிளத்தல்

சிறுதவளை தான்கலக்கிற் சித்திரத்தி னிழல்மறையும்
மறுவாயைத் தான்கலக்கின் மதிமயங்கும் மடவனமே ! 90

காற்றின் மரமுறியுங் காட்சியைப்போல் நல்லறிவு
தூற்றிவிடி லஞ்ஞானந் தூரப்போம் மடவனமே ! 91

அக்கினியாற் பஞ்சுபொதி அழிந்திட்ட வாறேபோல்
பக்குவநல் லறிவாலே பாவம்போம் மடவனமே ! 92

குளவிபுழு வைக்கொணர்ந்து கூட்டிலுருப் படுத்தல்போல்
வளமுடைய வன்மனத்தை வசப்படுத்து மடவனமே ! 93

அப்புடனே யுப்புச்சேர்ந் தளவுசரி யானதுபோல்
ஒப்புறவே பிரமமுட னொன்றிநில்லு மடவனமே ! 94

காய்ந்த இரும்புநிறங் காட்டுதல்போல் ஆத்துமத்தை
வாய்ந்திலங்கச் செய்து வளம்பெறுநீ மடவனமே ! 95

## புல்லாங்குழலூதல்

### கண்ணிகள்

தொலலைப் பிறவி தொலைக்கார்க்கும் முத்திதான்
இல்லையென் றாதுகுழல்-கோனே!
இல்லையென் றாதுகுழல். 96

இந்திர போகங்கள் எய்தினுந் தொல்லையென்
றந்தமா யூதுகுழல-கோனே!
அந்தமா யூதுகுழல். 97

மோன நிலையினில் முத்தியுண் டாமென்றே
கானமா யூதுகுழல்- கோனே!
கானமா யூதுகுழல. 98

நாய்போற் பொறிகளை நாநாவி தப்விட்டோர்
பேயரென் றாதுகுழல்-கோனே!
பேயரென் றாதுகுழல் 99

ஓடித் திரிவோர் குணர்வுகிட் டும்படி
சாடியே யூதுகுழல்-கோனே!
சாடியே யூதுகுழல் 100

ஆட்டுக்கூட் டங்களை அண்டும் புலிகளை
ஓட்டியே யூதுகுழல்-கோனே!
ஓட்டியே யூதுகுழல்; 101

மட்டிக் குணமுள்ள மாரீச நாய்களைக்
கட்டிவைத் தூதுகுழல்-கோனே!
கட்டிவைத் தூதுகுழல். 102

கட்டாத நாயெல்லாங் காவலுக் கெப்போதும்
கிட்டாவென் றாதுகுழல்-கோனே!
கிட்டாவென் றாதுகுழல். 103

பெட்டியிற் பாம்பெனப் பேய்மன மடங்க
ஒட்டியே யூதுகுழல்-கோனே!
ஒட்டியே யூதுகுழல். 104

எனதென்றும் யானென்றும் இல்லா திருக்கவே
தனதாக வூதுகுழல்-கோனே!
தனதாக வூதுகுழல். 105

அற்ற விடமொன்றே யற்றதே யுற்றதைக்
கற்றதென் றூதுகுழல்-கோனே!
கற்றதென் றூதுகுழல். 106

## பால் கறத்தல்

சாவா திருந்திடப் பால்கற-சிரம்
தன்னி லிருந்திடும் பால்கற;
வேவா திருந்திடப் பால்கற-வெறு
வெட்ட வெளிக்குள்ளே பால்கற. 107

தோயா திருந்திடும் பால்கற-முனைத்
தொல்லை வினையறப் பால்கற;
வாயா லுமிழ்ந்திடும் பால்கற-வெறு
வயிறூற வுண்டிடப் பால்கற. 108

நாறு திருந்திடும் பால்கற-நெடு
நாளு மிருந்திடப் பால்கற;
மாறு தொழுகிடும் பால்கற-தலை
மண்டையில் வளரும் பால்கற. 109

உலகம் வெறுத்திடும் பால்கற-மிக
ஒக்காள மாகிய பால்கற;
கலசத்தி னுள்விழப் பால்கற-நிறை
கண்டத்தி னுள்விழப் பால்கற. 110

ஏப்பம் விடாமலே பால்கற-வரும்
ஏமன் விலக்கவே பால்கற;
தீப்பொறி போய்ந்திடப் பால்கற-பர
சிவத்துடன் சாரவே பால்கற. 111

அண்ணாவின் மேல்வரும் பால்கற-பேர்
அண்டத்தி லூறிடும் பால்கற;
விண்ணாட்டி லில்லாத பால்கற-தொல்லை
வேதனை கெடவே பால்கற. 112

## கிடை கட்டுதல்

இருவினையாம் மாடுகளை ஏகவிடு கோனே !-உன்
அடங்குமன மாடொன்றை யடக்கிவிடு கோனே ! 113

சாற்றிய நைட்டிகரே தற்பரத்தைச் சார்வார்-நாளும்
தவமவமாக் கழிப்பவரே சனனமதில் வருவார். 114

அகங்கார மாடுகண்மூன் றகற்றிவிடு கோனே !-நாளும்
அவத்தையெனும் மாடதைநீ யடக்கிவிடு கோனே ! 115

ஒருமலத்தன் எனுமாட்டை ஒதுக்கிக்கட்டுக் கோனே !-உடன்
உறையுமிரு மலந்தனையு மோட்டிக்கட்டுக் கோனே ! 116

மும்மலத்தன் எனுமாட்டை முறுக்கிக்கட்டுக் கோனே !-மிக
முக்கால நேர்மையெல்லாம் முன்பறிவாய் கோனே ! 117

இந்திரியத் திரயங்களை இறுக்கிவிடு கோனே !-என்றும்
இல்லையென்றே மரணங்குழ லெடுத்தூது கோனே ! 118

உபாதியெனும் மூன்றாட்டை ஓட்டிவிடு கோனே !-உனக்
குள்ளிருக்குங் கள்ளமெல்லாம் ஓடிப்போங் கோனே ! 119

முக்காய மாடுகளை முன்னங்கட்டுக் கோனே !-இனி
மோசமில்லை நாசமில்லை முத்தியுண்டாங் கோனே ! 120

கன்மபல மாடுகளைக் கடைக்கட்டுக் கோனே !-மற்றக்
கன்மத்திர யப்பசுவைக் கடையிற்கட்டுக் கோனே ! 121

காரணக்கோ மூன்றனையுங் கால்பிணிப்பாய் கோனே !-நல்ல
கைவசமாஞ் சாதனங்கள் கடைப்பிடிப்பாய் கோனே ! 122

## வேறு

பிரமாந்த ரத்திற் பேரொளி காணெங்கள் கோனே !-வாய்
பேசா திருந்து பெருநிட்டை சாரெங்கள் கோனே ! 123

சிரமதிற் கமலச் சேவை தெரிந்தெங்கள் கோனே !-முத்தி
சித்திக்குந் தந்திரஞ் சித்தத் தறியெங்கள் கோனே ! 124

விண்ணுடிவத்துவை மெய்யறி விற்காணுங் கோனே !-என்றும்
மெய்யேமெய் யிற்கொண்டு மெய்யறி விற்செல்லுங் கோனே!

கண்ணாடி யின்னுள்ளே கண்டுபார்த் துக்கொள்ளுகோனே-ஞானக்
கண்ணன்றிக் கண்ணாடி காணவொண் ணாதெங்கள் கோனே!

சூனிய மானதைச் சுட்டுவார் எங்குண்டு கோனே!-புத்தி
சூக்கும மேயதைச் சுட்டுமென் றெண்ணங்கொள் கோனே! 127

நித்திய மானது நேர்படி லேநில்லை கோனே!-என்றும்
நிற்குமென் றேகண்டு நிச்சயங் காணெங்கள் கோனே! 128

சத்தியும் பரமுந் தன்னுட் கலந்ததே கோனே!-நிட்டை
சாதிக்கி லிரண்டுந் தன்னுள்ளே காணலாங் கோனே! 129

மூகைபோ லிருந்து மோனத்தைச் சாதியெங் கோனே!-பர
மூல நிலைகண்டு முட்டுப் பிறப்பறு கோனே! 130

# அகப்பேய்ச்சித்தர் பாடல்

—::—

**கண்ணிகள்**

நஞ்சுண்ண வேண்டாவே அகப்பேய்!
நாயகன் தாள்பெறவே ;

நெஞ்சு மலையாதே அகப்பேய்!
நீயொன் றுஞ் சொல்லாதே

பராபர மானதடி அகப்பேய்!
பரவையாய் வந்ததடி ;

தராதல மேழ்புவியும் அகப்பேய்!
தானே படைத்ததடி.

நாத வேதமடி அகப்பேய்!
நன்னடங் கண்டாயோ ?

பாதஞ் சத்தியடி அகப்பேய்!
பரவிந்து நாதமடி.

விந்து நாதமடி அகப்பேய்!
மெய்யாக வந்ததடி ;

ஐந்து பெரும்பூதம் அகப்பேய்!
அதனிட மானதடி.

நாலு பாதமடி அகப்பேய்!
நன்னெறி கண்டாயே ;

மூல மானதல்லால் அகப்பேய்!
முத்தி யல்லவடி.

வாக்காதி யைந்தடியோ அகப்பேய்!
வந்த வகைகேளாய் ;

ஒக்கம தானதடி அகப்பேய்!
உண்மைய தல்லவடி.

சத்தாதி யைந்தடியோ அகப்பேய்!
சாத்திர மானதடி;

மித்தையு மாகுமடி அகப்பேய்!
மெய்யது சொன்னேனே.

வசனாதி யைந்தடியோ அகப்பேய்!
வண்மையாய் வந்ததடி;

தெசநாடி பத்தேடி அகப்பேய்!
திடனிது கண்டாயே.

காரண மானதெல்லாம் அகப்பேய்!
கண்டது சொன்னேனே.

மாரணங் கண்டாயே அகப்பேய்!
வந்தவி தங்களெல்லாம்

ஆறு தத்துவமும் அகப்பேய்!
ஆகமஞ் சொன்னதடி;

மாருத மண்டலமும் அகப்பேய்!
வந்தது மூன்றடியே.

பிருதிவி பொன்னிறமே அகப்பேய்!
பேதைமை யல்லவடி

உருவது நீரடியோ அகப்பேய்!
உள்ளது வெள்ளையடி.

தேயு செம்மையடி அகப்பேய்!
திடனது கண்டாயே;

வாயு நீலமடி அகப்பேய்!
வான்பொருள் சொல்வேனே.

வான பஞ்சடியோ அகப்பேய்!
வந்தது நீகேளாய்;

ஊனம தாகாதே அகப்பேய்!
உள்ளது சொன்னேனே.

அகார மித்தனையும் அகப்பேய்!
அங்கென் றெழுந்ததடி;

உகாரங் கூடியடி அகப்பேய்!
உருவாகி வந்ததடி;

மகார மாயையடி அகப்பேய்!
மலமது சொன்னேனே;

சிகார மூலமடி அகப்பேய்!
சிந்தித்துக் கொள்வாயே.

வன்னம் புவனமடி அகப்பேய்!
மந்திர தந்திரமும்;

இன்னமுஞ் சொல்வேனே அகப்பேய்!
இம்மென்று கேட்பாயே.

அத்தி வரைவாடி அகப்பேய்!
ஐம்பத்தோ ரட்சரமும்

மித்தையாங் கண்டாயே அகப்பேய்!
மெய்யென்று நம்பாதே.

தத்துவ மானதடி அகப்பேய்!
சகலமாய் வந்ததடி;

புத்தியுஞ் சொன்னேனே அகப்பேய்!
பூத வடிவலவோ?

இந்த விதங்களெல்லாம் அகப்பேய்!
எம்மிறை யல்லவடி;

அந்த விதம்வேறே அகப்பேய்!
ஆராய்ந்து காணுயோ?

பாவந் தீரவென்றால் அகப்பேய்!
பாவிக்க லாகாதே;

சாவது மில்லையடி அகப்பேய்!
சற்குரு பாதமடி.

எத்தனை சொன்னாலும் அகப்பேய்!
என்மனந் தேறுதே!

சித்தா மசித்தும்விட்டே அகப்பேய்!
சேர்த்துநீ காண்பாயே.

சமய மாறுமடி அகப்பேய்!
தம்மாலே வந்தவடி;

அமைய நின்றவிடம் அகப்பேய்!
ஆராய்ந்து சொல்வாயே.

ஆறாறு மாகுமடி அகப்பேய்!
ஆகாது சொன்னேனே;

வேறே யுண்டானால் அகப்பேய்!
மெய்யது சொல்வாயே.

உன்னை யறிந்தக்கால் அகப்பேய்!
ஒன்றையுஞ் சேராயே;

உன்னை யறியும்வகை அகப்பேய்!
உள்ளது சொல்வேனே.

சரியை யாகாதே அகப்பேய்!
சாலோகங் கண்டாயே;

கிரியை செய்தாலும் அகப்பேய்!
கிட்டுவ தொன்றுமில்லை;

யோக மாகாதே அகப்பேய்!
உள்ளது கண்டக்கால்;

தேக ஞானமடி அகப்பேய்!
தேடாது சொன்னேனே.

ஐந்தலை நாகமடி அகப்பேய்!
ஆதாயங் கொஞ்சமடி;

இந்த விடந்தீர்க்கும் அகப்பேய்!
எம்மிறை கண்டாயே.

இறைவ னென்றதெல்லாம் அகப்பேய்!
எந்த விதமாகும்?

அறைய நீகேளாய் அகப்பேய்!
ஆனந்த மானதடி.

கண்டு கொண்டேனே அகப்பேய்!
காதல் விண்டேனே;

உண்டு கொண்டேனே அகப்பேய்!
உள்ளது சொன்னாயே.

உள்ளது சொன்னாலும் அகப்பேய்!
உன்னாலே காண்பாயே;

கள்ளமுந் தீராதே அகப்பேய்!
கண்டார்க்குக் காமமடி.

அறிந்து நின்றாலும் அகப்பேய்!
அஞ்சார்கள் சொன்னேனே;

புரிந்த வல்வினையும் அகப்பேய்!
போகாதே யுன்னைவிட்டு,

ஈசன் பாசமடி அகப்பேய்!
இவ்வண்ணங் கண்டதெல்லாம்;

பாசம் பயின்றதடி அகப்பேய்!
பரமது கண்டாயே.

சாத்திர சூத்திரமும் அகப்பேய்!
சங்கற்ப மானதெல்லாம்

பார்த்திட லாகாதே அகப்பேய்!
பாழ்பலங் கண்டாயே

ஆறு கண்டாயோ அகப்பேய்!
அந்த வினைதீர?

தேறித் தெளிவதற்கே அகப்பேய்!
தீர்த்தமு மாடாயே.

எத்தனை காலமுந்தான் அகப்பேய்!
யோக மிருந்தாலென்?

முத்தனு மாவாயோ? அகப்பேய்!
மோட்சமு முண்டாமோ?

நாச மாவதற்கே அகப்பேய்!
நாடாதே சொன்னேனே;

பாசம் போனாலும் அகப்பேய்!
பசுக்களும் போகாவே.

நாண மேதுக்கடி அகப்பேய்!
நல்வினை தீர்ந்தக்கால்?

காண வேணுமென்றால் அகப்பேய்!
காணக் கிடையாதே.

சும்மா இருந்துவிடாய் அகப்பேய்!
சூத்திரஞ் சொன்னேனே;

சும்மா இருந்தவிடம் அகப்பேய்!
சுட்டது கண்டாயே.

உன்றனைக் காணாதே அகப்பேய்!
ஊனுள் நுழைந்தாயே!

என்றனைக் காணாதே அகப்பேய்!
இடத்தில் வந்தாயே!

வான மோடிவரில் அகப்பேய்!
வந்தும் பிறப்பாயே!

தேனை யுண்ணாமல் அகப்பேய்!
தெருவோ டலைந்தாயே.

சைவ மானதடி அகப்பேய்!
தானாய் நின்றதடி;

சைவ மில்லையாகில் அகப்பேய்!
சலம்வருங் கண்டாயே.

ஆசை யற்றவிடம் அகப்பேய் !
ஆசாரங் கண்டாயே ;

ஈசன் பாசமடி அகப்பேய் !
எங்ஙனஞ் சென்றாலும்.

ஆணவ மூலமடி அகப்பேய் !
அகாரமாய் வந்ததடி ;

கோணு முகாரமடி அகப்பேய் !
கூடப் பிறந்ததுவே.

ஒன்று மில்லையடி அகப்பேய் !
உள்ள படியாச்சே ;

நன்றில்லை தீதில்லையே அகப்பேய் !
நாணமு மில்லையடி.

சும்மா இருந்தவிடம் அகப்பேய் !
சுட்டது சொன்னேனே ;

எம்மாய மீதறியேன் அகப்பேய் !
என்னையுங் காணேனே ;

கலைக ளேதுக்கடி ? அகப்பேய் !
கண்டார் நகைபாரோ ?

நிலைக ளேதுக்கடி ? அகப்பேய் !
நீயார் சொல்வாயே.

இந்த மிர்தமடி அகப்பேய் !
இரவி விடமோடி

இந்து வெள்ளையடி அகப்பேய் !
இரவி சிவப்பாமே.

ஆணல பெண்ணலவே அகப்பேய் !
அக்கினி கண்டாயே ;

தாணுவு மிப்படியே அகப்பேய் !
சற்குரு கண்டாயே.

என்ன படித்தாலும் அகப்பேய்!
எம்முரை யாகாதே ;

சொன்னது கேட்டாயே அகப்பேய்!
சும்மா இருந்துவிடு.

காடும் மலையுமடி அகப்பேய்!
கடுந்தவ மானுலென் ?

வீடும் வெளியாமோ ? அகப்பேய்!
மெய்யாக வேண்டாவோ ?

பரத்தில் சென்றுலும் அகப்பேய்!
பாரிலே மீளுமடி ;

பரத்துக் கடுத்தவிடம் அகப்பேய்!
பாழது கண்டாயே.

பஞ்ச முகமேது அகப்பேய்!
பஞ்சு படுத்தாலே ?

குஞ்சித பாதமடி அகப்பேய்!
குருபாதங் கண்டாயே.

பங்க மில்லையடி அகப்பேய்!
பாத மிருந்தவிடம் ;

கங்கையில் வந்ததெல்லாம் அகப்பேய்!
கண்டு தெளிவாயே.

தானற நின்றவிடம் அகப்பேய்!
சைவங் கண்டாயே ;

ஊனற நின்றவர்க்கே அகப்பேய்!
ஊனமொன் றில்லையடி.

சைவம் ஆருக்கடி ? அகப்பேய்!
தன்னை யறிந்தவர்க்கே ;

சைவ மானவிடம் அகப்பேய்!
சற்குரு பாதமடி.

பிறவி தீரவென்றால் அகப்பேய்!
பேதகம் பண்ணாதே;

துறவி யானவர்கள் அகப்பேய்!
சும்மா இருப்பார்கள்.

ஆர லைந்தாலும் அகப்பேய்!
நீயலை யாதேயடி;

ஊர லைந்தாலும் அகப்பேய்!
ஒன்றையும் நாடாதே.

தேனாறு பாயுமடி அகப்பேய்!
திருவடி கண்டவர்க்கே;

ஊனாறு மில்லையடி அகப்பேய்!
ஒன்றையும் நாடாதே.

வெள்ளை கறுப்பாமோ? அகப்பேய்!
வெள்ளியுஞ் செம்பாமோ?

உள்ள துண்டோடி அகப்பேய்!
உன்னை கண்டாயே.

அறிவுள் மன்னுமடி அகப்பேய்!
ஆதார மில்லையடி.

அறிவு பாசமடி அகப்பேய்!
அருள துகண்டாயே.

வாசியி லேறியடி அகப்பேய்!
வான்பொருள் தேடாயோ?

வாசியி லேறினும் அகப்பேய்!
வாராது சொன்னேனே.

தூராதி தூரமடி அகப்பேய்!
தூரமு மில்லையடி

பாராமற் பாரடியோ அகப்பேய்!
பாழ்வினை தீரவென்றால்.

உண்டாக்கிக் கொண்டதல்ல அகப்பேய்!
உள்ளது சொன்னேனே ;

கண்டார்கள் சொல்வாரோ அகப்பேய்!
கற்பனை யற்றதடி.

நாலு மறைகாணு அகப்பேய்!
நாதனை யார்காண்பார் ?

நாலு மறைமுடிவில் அகப்பேய்!
நற்குரு பாதமடி

மூல மில்லையடி அகப்பேய்!
முப்பொரு ளில்லையடி ;

மூல முண்டானல் அகப்பேய்!
முத்தியு முண்டாமே.

இந்திர சாலமடி அகப்பேய்!
எண்பத் தொருபதமும் ;

மந்திர மப்படியே அகப்பேய்!
வாயைத் திறவாதே.

பாழாக வேணுமென்றால் அகப்பேய்!
பார்த்ததை நம்பாதே;

கேளாமற் சொன்னேனே அகப்பேய்!
கேள்வியு மில்லையடி.

சாதி பேதமில்லை அகப்பேய்!
தானுகி நின்றவர்க்கே ;

ஓதி யுணர்ந்தாலும் அகப்பேய்!
ஒன்றுந்தா னில்லையடி.

சூழ வானமடி அகப்பேய்!
சுற்றி மரக்காவில்

வேழம் உண்டகனி அகப்பேய்!
மெய்யது கண்டாயே.

நானு மில்லையடி அகப்பேய் !
நாதனு மில்லையடி ;

தானு மில்லையடி அகப்பேய் !
சற்குரு வில்லையடி.

மந்திர மில்லையடி அகப்பேய் !
வாதனை யில்லையடி ;

தந்திர மில்லையடி அகப்பேய் !
சமய மழிந்ததடி.

பூசை பசாசமடி அகப்பேய் !
போதமே கோட்டமடி

ஈசன் மாயையடி அகப்பேய் !
எல்லாமு மிப்படியே.

சொல்ல லாகாதே அகப்பேய் !
சொன்னாலுந் தோஷமடி ;

இல்லை யில்லையடி அகப்பேய் !
ஏகாந்தங் கண்டாயே.

தத்துவத் தெய்வமடி அகப்பேய் !
சதாசிவ மானதடி ;

மற்றுள்ள தெய்வமெல்லாம் அகப்பேய் !
மாயை வடிவாமே.

வார்த்தை யல்லவடி அகப்பேய் !
வாசா மகோசரத்தே

ஏற்ற தல்லவடி அகப்பேய் !
என்னுடன் வந்ததல்ல.

சாத்திர மில்லையடி அகப்பேய் !
சலனங் கடந்ததடி ;

பார்த்திட லாகாதே அகப்பேய் !
பாவனைக் கெட்டாதே.

என்ன படித்தாலென் ? அகப்பேய் !
ஏதுதான் செய்தாலென் ?

சொன்ன விதங்களெல்லாம் அகப்பேய் !
சுட்டது கண்டாயே.

தன்னை யறியவேணும் அகப்பேய் !
சாராமற் சாரவேணும் ;

பின்னை யறிவதெல்லாம் அகப்பேய் !
பேயறி வாகுமடி.

பிச்சை யெடுத்தாலும் அகப்பேய் !
பிறவி தொலையாதே ;

இச்சை யற்றவிடம் அகப்பேய் !
எம்மிறை கண்டாயே.

கோல மாகாதே அகப்பேய் !
குதர்க்க மாகாதே ;

சால மாகாதே அகப்பேய் !
சஞ்சல மாகாதே.

ஒப்பனை யல்லவடி அகப்பேய் !
உன்னுணை சொன்னேனே ;

அப்புட னுப்பெனவே அகப்பேய் !
ஆராய்ந் திருப்பாயே.

மோட்சம் வேண்டார்கள் அகப்பேய் !
முத்தியும் வேண்டார்கள் !

தீட்சை வேண்டார்கள் அகப்பேய் !
சின்மய மானவர்கள்.

பாலன் பிசாசமடி அகப்பேய் !
பார்த்தக்கால் பித்தனடி;

கால மூன்றுமல்ல அகப்பேய் !
காரிய மல்லவடி.

கண்டது மில்லையடி அகப்பேய்!
கண்டவ ருண்டானால்
உண்டது வேண்டடியோ அகப்பேய்!
உன்னுணை சொன்னேனே.

அஞ்சையு முண்ணாதே அகப்பேய்!
ஆசையும் வேண்டாதே;
நெஞ்சையும் விட்டுவிடு அகப்பேய்!
நிட்டையிற் சாராதே.

நாதாந்த வுண்மையிலே அகப்பேய்!
நாடாதே சொன்னேனே;
மீதான சூதானம அகப்பேய்!
மெய்யென்று நம்பாதே.

ஒன்றோ டொன்றுகூடில் அகப்பேய்!
ஒன்றுங் கெடுங்காணே;
நின்ற பரசிவமும் அகப்பேய்!
நில்லாது கண்டாயே.

தோன்றும் வினைகளெலாம் அகப்பேய்!
சூனியங் கண்டாயே;
தோன்றுமற் றோன்றிவிடும் அகப்பேய்!
சுத்த வெளிதனிலே.

பொய்யென்று சொல்லாதே அகப்பேய்!
போக்கு வரத்துதானே
மெய்யென்று சொன்னக்கால் அகப்பேய்!
வீடு பெறலாமே.

வேத மோதாதே அகப்பேய்!
மெய்கண்டோ மென்னாதே;
பாதம் நம்பாதே அகப்பேய்!
பாவித்துப் பாராதே.

# குதம்பைச் சித்தர் பாடல்

—::—

**கண்ணிகள்**

வெட்ட வெளிதன்னை மெய்யென் றிருப்போர்க்குப்
பட்டய மேதுக்கடி ?—குதம்பாய் !
பட்டய மேதுக்கடி ? 1

மெய்ப்பொருள் கண்டு விளங்குமெய்ஞ் ஞானிக்குக்
கற்பங்க ளேதுக்கடி ?—குதம்பாய் !
கற்பங்க ளேதுக்கடி ? 2

காணுமற் கண்டு கருத்தோ டிருப்பார்க்கு
வீணுசை யேதுக்கடி ?—குதம்பாய் !
வீணுசை யேதுக்கடி ? 3

வஞ்சக மற்று வழிதன்னைக் கண்டோர்க்குச்
சஞ்சல மேதுக்கடி ?—குதம்பாய் !
சஞ்சல மேதுக்கடி ? 4

ஆதார மான அடிமுடி கண்டோர்க்கு
வாதாட்ட மேதுக்கடி ?—குதம்பாய்
வாதாட்ட மேதுக்கடி ? 5

நித்திரை கெட்டு நினைவோ டிருப்போர்க்கு
முத்திரை யேதுக்கடி ?—குதம்பாய் !
முத்திரை யேதுக்கடி ? 6

தந்திர மான தலந்தனில் நிற்போர்க்கு
மந்திர மேதுக்கடி ?—குதம்பாய் !
மந்திர மேதுக்கடி ? 7

சத்திய மான தவத்தி லிருப்போர்க்கு
உத்திய மேதுக்கடி ?—குதம்பாய் !
உத்திய மேதுக்கடி ? 8

நாட்டத்தைப் பற்றி நடுவணை சேர்வோர்க்கு
வாட்டங்க ளேதுக்கடி ?—குதம்பாய் !
வாட்டங்க ளேதுக்கடி ? 9

முத்தமிழ் கற்று முயங்குமெய்ஞ் ஞானிக்குச்
சத்தங்க ளேதுக்கடி ?—குதம்பாய் !
சத்தங்க ளேதுக்கடி ? 10

உச்சிக்கு மேற்சென் றுயர்வெளி கண்டோர்க்கு
இச்சிப்பிங் கேதுக்கடி ?—குதம்பாய் !
இச்சிப்பிங் கேதுக்கடி ? 11

வேகாமல் வெந்து வெளியொளி கண்டோர்க்கு
மேகாந்த மேதுக்கடி ?—குதம்பாய் !
மேகாந்த மேதுக்கடி ? 12

சாகாமற் றூண்டித் தனிவழியே போவோர்க்கு
ஏகாந்த மேதுக்கடி ?—குதம்பாய் !
ஏகாந்த மேதுக்கடி ? 13

அந்தரந் தன்னி லசைந்தாடு முத்தர்க்குத்
தந்திர மேதுக்கடி ?—குதம்பாய் !
தந்திர மேதுக்கடி ? 14

ஆனந்தம் பொங்கி அறிவோ டிருப்பார்க்கு
ஞானந்தா னேதுக்கடி ?—குதம்பாய் !
ஞானந்தா னேதுக்கடி ? 15

சித்திரக் கூத்தைத் தினந்தினங் காண்போர்க்குப்
பத்திர மேதுக்கடி ?—குதம்பாய் !
பத்திர மேதுக்கடி ? 16

முக்கோணந் தன்னில் முளைத்தமெய்ஞ் ஞானிக்குச்
சட்கோண மேதுக்கடி ?—குதம்பாய் !
சட்கோண மேதுக்கடி ? 17

அட்டதிக் கெல்லாம் அசைந்தாடும் நாதர்க்கு
நட்டணை யேதுக்கடி ?—குதம்பாய் !
நட்டணை யேதுக்கடி ? 18

முத்திபெற் றுள்ளம் முயங்குமெய்ஞ் ஞானிக்குப்
பத்திய மேதுக்கடி ?—குதம்பாய் !
பத்திய மேதுக்கடி ? 19

அல்லலை நீக்கி அறிவோ டிருப்பார்க்குப்
பல்லாக் கேதுக்கடி ?—குதம்பாய் !
பல்லாக் கேதுக்கடி ? 20

அட்டாங்க யோகம் அறிந்தமெய்ஞ் ஞானிக்கு
முட்டாங்க மேதுக்கடி ?—குதம்பாய் !
முட்டாங்க மேதுக்கடி ? 21

வேகம் அடக்கி விளங்குமெய்ஞ் ஞானிக்கு
யோகந்தா னேதுக்கடி ?—குதம்பாய் !
யோகந்தா னேதுக்கடி ? 22

மாத்தானை வென்று மலைமே லிருப்போர்க்குப்
பூத்தான மேதுக்கடி ?—குதம்பாய் !
பூத்தான மேதுக்கடி ? 23

செத்தாரைப் போலத் திரியுமெய்ஞ் ஞானிக்குக்
கைத்தாள மேதுக்கடி ?—குதம்பாய் !
கைத்தாள மேதுக்கடி ? 24

கண்டாரை நோக்கிக் கருத்தோ டிருப்பார்க்குக்
கொண்டாட்ட மேதுக்கடி ?—குதம்பாய் !
கொண்டாட்ட மேதுக்கடி ? 25

காலனை வென்ற கருத்தறி வாளர்க்குக்
கோலங்க ளேதுக்கடி ?—குதம்பாய் !
கோலங்க ளேதுக்கடி ? 26

வெண்காய முண்டு மிளகுண்டு சுக்குண்டு
உண்காய மேதுக்கடி ?—குதம்பாய் !
உண்காய மேதுக்கடி ? 27

மாங்காய்ப்பா லுண்டு மலைமே லிருப்போர்க்குத்
தேங்காய்ப்பா லேதுக்கடி ?—குதம்பாய் !
தேங்காய்ப்பா லேதுக்கடி ? 28

பட்டணஞ் சுற்றிப் பகலே திரிவார்க்கு
முட்டாக் கேதுக்கடி ?—குதம்பாய் !
முட்டாக் கேதுக்கடி ? 29

தாவார மில்லை தனக்கொரு வீடில்லை
தேவார மேதுக்கடி ?—குதம்பாய்
தேவார மேதுக்கடி ? 30

தன்னை யறிந்து தலைவனைச் சேர்ந்தோர்க்குப்
பின்னாசை யேதுக்கடி ?—குதம்பாய் !
பின்னாசை யேதுக்கடி ? 31

பத்தாவுந் தானும் பதியோ டிருப்பார்க்கு
உத்தார மேதுக்கடி ?—குதம்பாய் !
உத்தார மேதுக்கடி ? 32

———

# கடுவெளிச்சித்தர் பாடல்

—::—

## ஆனந்தக்களிப்பு

பல்லவி

பாபஞ்செய் யாதிரு மனமே !-நாளைக்
கோபஞ்செய் தேயமன் கொண்டோடிப் போவான்.

சரணங்கள்

1. சாபங் கொடுத்திட லாமோ ?-விதி
தன்னைநம் மாலே தடுத்திட லாமோ ?
கோபந் தொடுத்திட லாமோ ?-இச்சை
கொள்ளக் கருத்தைக் கொடுத்திட லாமோ ? பாபஞ்

2. சொல்லருஞ் சூதுபொய் மோசம்-செய்தாற்
சுற்றத்தை முற்றாய்த் துடைத்திடும் நாசம்
நல்லபத் திவிசு வாசம்-எந்த
நாளும் மனிதர்க்கு நன்மையாய் நேசம். பாபஞ்

3. நீர்மேற் குமிழியிக் காயம் :-இது
நில்லாது போய்விடும் நீயறி மாயம் ;
பார்மீதில் மெத்தவும் நேயம்-சற்றும்
பற்று திருந்திடப் பண்ணு முபாயம். பாபஞ்

4. நந்த வனத்திலோ ராண்டி-அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்
கொண்டுவந் தானொரு தோண்டி ;-மெத்தக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி! பாபஞ்

5. தூடண மாகச்சொல் லாதே ;-தேடுஞ்
சொத்துக்க ளிலொரு தூசும்நில் லாதே ;
ஏடணை மூன்றும்பொல் லாதே ;-சிவத்
திச்சைவைத் தாலெம லோகம்பொல் லாதே. பாபஞ்

6. நல்ல வழிதனை நாடு ;-எந்த
நாளும் பரமனை நத்தியே தேடு ;
வல்லவர் கூட்டத்திற் கூடு ;-அந்த
வள்ளலை நெஞ்சினில் வாழ்த்திக்கொண் டாடு. பாபஞ்

7. நல்லவர் தம்மைத்தள் ளாதே ;-அறம்
நாலெட்டில் ஒன்றேனும் நாடித்தள் ளாதே ;
பொல்லாங்கில் ஒன்றுங்கொள் ளாதே ;-கெட்ட
பொய்ம்மொழிக் கோள்கள் பொருந்தவின் ளாதே. பாபஞ்

8. வேத விதிப்படி நில்லு ;-நல்லோர்
மேவும் வழியினை வேண்டியே செல்லு ;
சாத நிலைமையே சொல்லு ;-பொல்லாச்
சண்டாளக் கோபத்தைச் சாதித்துக் கொல்லு பாபஞ்

9. பிச்சையென் றென்றுங்கே ளாதே ;-எழில்
பெண்ணாசை கொண்டு பெருக்கமா ளாதே ;
இச்சைய துன்னையா ளாதே-சிவன்
இச்சைகொண் டவ்வழி யேறிமீ ளாதே. பாபஞ்

10. மெய்ஞ்ஞானப் பாதையி லேறு ;-சுத்த
வேதாந்த வெட்ட வெளியினைத் தேறு ;
அஞ்ஞான மார்க்கத்தைத் தூறு ;-உன்னை
அண்டினோர்க் கானந்த மாம்வழி கூறு. பாபஞ்

11. மெய்க்குரு சொற்கட வாதே ;-நன்மை
மென்மேலுஞ் செய்கை மிகவடக் காதே ;
பொய்க்கலை யால்நட வாதே ;-நல்ல
புத்தியைப் பொய்வழி தனில்நடத் தாதே. பாபஞ்

12. கூட வருவதொன் றில்லை ;-புழுக்
கூடெடுத் திங்ஙன் உலைவதே தொல்லை ;
தேடரு மோட்சம தெல்லை ;-அதைத்
தேடும் வழியைத் தெளிவோரு மில்லை. பாபஞ்

13. ஐந்துபேர் சூழ்ந்திடுங் காடு-இந்த
ஐவர்க்கும் ஐயர் அடைந்திடும் நாடு
முந்தி வருந்திநீ தேடு ;-அந்த
மூலம் அறிந்திட வாமுத்தி வீடு. பாபஞ்

14. உள்ளாக நால்வகைக் கோட்டை-பகை
ஓடப் பிடித்திட்டால் ஆளலாம் நாட்டை ;
கள்ளப் புலனென்னுங் காட்டை-வெட்டிக்
கனலிட் டெரித்திட்டாற் காணலாம் வீட்டை. பாபஞ்

15. காசிக்கோ டில்வினை போமோ ?-அந்தக்
கங்கையா டில்கதி தானுமுண் டாமோ ?
பேசுமுன் கன்மங்கள் சாமோ ?-பல
பேதம் பிறப்பது போற்றினும் போமோ ? பாபஞ்

16. பொய்யாகப் பாராட்டுங் கோலம்-எல்லாம்
போகவே வாய்த்திடும் யார்க்கும்போங் காலம் ;
மெய்யாக வேசுத்த சாலம்-பாரில்
மேவப் புரிந்திடில் என்னனு கூலம் ? பாபஞ்

17. சந்தேக மில்லாத தங்கம்-அதைச்
சார்ந்துகொண் டாலுமே தாழ்விலாப் பொங்கம் ;
அந்தமில் லாதவோர் துங்கம்-எங்கும்
ஆனந்த மாக நிரம்பிய புங்கம். பாபஞ்

18. பாரி லுயர்ந்தது பத்தி ;-அதைப்
பற்றின பேர்க்குண்டு மேவரு முத்தி ;
சீரி லுயரட்ட சித்தி-யார்க்குஞ்
சித்திக்கு மேசிவன் செயலினுல் பத்தி. பாபஞ்

19. அன்பெனும் நன்மலர் தூவிப்-பர
மானந்தத் தேவின் அடியிணை மேவி
இன்பொடும் உன்னுட லாவி-நாளும்
ஈடேற்றத் தேடாய்நீ இங்கே குலாவி. பாபஞ்

20. ஆற்றமும் வீடேற்றங் கண்டு-அதற்
    கான வழியை யறிந்துநீ கொண்டு
சீற்றமில் லாமலே தொண்டு-ஆதி
    சிவனுக்குச் செய்திடிற் சேர்ந்திடுங் கெண்டு பாபஞ்

21. ஆன்மாவா லாடிடு மாட்டந்-தேகத்
    தான்மா அற்றபோதே யாமுடல் வாட்டம்;
வான்கதி மீதிலே நாட்டம்-நாளும்
    வையி லுனக்கு வருமேகொண் டாட்டம் பாபஞ்

22. எட்டு மிரண்டையும் ஓர்ந்து-மறை
    எல்லா முனக்குள்ளே ஏகமாய்த் தேர்ந்து
வெட்ட வெளியினைச் சார்ந்து-ஆனந்த
    வெள்ளத்தின் மூழ்கி மிகுகளி கூர்ந்து. பாபஞ்

23. இந்த வுலகமு முள்ளு-சற்றும்
    இச்சைவை யாமலே யெந்நாளுந் தள்ளு;
செந்தேன்வெள் ளம்மதை மொள்ளு;-உன்றன்
    சிந்தைதித் திக்கத் தெவிட்டவுட் கொள்ளு. பாபஞ்

24. பொய்வேதந் தன்னைப்பா ராதே;-அந்தப்
    போதகர் சொற்புத்தி போதவா ராதே;
மைவிழி யாரைச்சா ராதே;-துன்
    மார்க்கர்கள் கூட்டத்தில் மகிழ்ந்துசே ராதே. பாபஞ்

25. வைதோரை கூடவை யாதே;-இந்த
    வையம் முழுதும்பொய்த் தாலும்பொய் யாதே:
வெய்ய வினைகள்செய் யாதே;-கல்லை
    வீணிற் பறவைகள் மீதிலெய் யாதே. பாபஞ்

26. சிவமன்றி வேறேவேண் டாதே;-யார்க்குந்
    தீங்கான சண்டையைச் சிறக்கத்தூண் டாதே;
தவநிலை விட்டுத்தாண் டாதே;-நல்ல
    சன்மார்க்க மில்லாத நூலைவேண் டாதே. பாபஞ்

27. பாம்பினைப் பற்றியாட்டாதே ;-உன்றன்
பத்தினி மாரகளைப் பழித்துக்காட் டாதே ;
வேம்பினை யுலகிலூட் டாதே ;-உன்றன்
வீறுப்புத் தன்னை விளங்கநாட் டாதே பாபஞ்

28. போற்றுஞ் சடங்கைநண் ணாதே ;-உன்னைப்
புகழ்ந்து பலரிற் புகலவெண் ணாதே ;
சாற்றுமுன் வாழ்வையெண் ணாதே ;-பிறர்
தாழும் படிக்குந் தாழ்வைப்பண் ணாதே. பாபஞ்

29. கஞ்சாப் புகைபிடி யாதே ;-வெறி
காட்டி மயங்கியே கட்குடி யாதே ;
அஞ்ச வுயிர்மடி யாதே ;-பத்தி
அற்றவஞ் ஞானத்தி னால்படி யாதே. பாபஞ்

30. பத்தி யெனுமேனி நாட்டித்-தொந்த
பந்தமற் றவிடம் பார்த்ததை நீட்டிச்
சத்திய மென்றதை யீட்டி-நாளுந்
தன்வச மாக்கிக்கொள் சமயங்க ளோட்டி. பாபஞ்

31. செப்பரும் பலவித மோகம்-எல்லாஞ்
சீயென் றொறுத்துத் திடங்கொள் விவேகம் ;
ஒப்பறும் அட்டாங்க யோகம்-நன்றாய்
ஓர்ந்தறி வாயவற் றுண்மைசம் போகம். பாபஞ்

32. எவ்வகை யாகநன் னீதி-அவை
எல்லா மறிந்தே யெடுத்துநீ போதி ;
ஒவ்வாவென் றபல சாதி-யாவும்
ஒன்றென் றறிந்தே யுணர்ந்துற வோதி. பாபஞ்

33. கள்ளவே டம்புனை யாதே ;-பல
கங்கையி லேயுன் கடம்நனை யாதே ;
கொள்ளைகொள் ளநினை யாதே ;-நட்புக்
கொண்டு புரிந்துநீ கோள்முனை யாதே. பாபஞ்

34. எங்குஞ் சயபிர காசன்-அன்பர்
இன்ப இருதயத் திருந்திடும் வாசன்
துங்க அடியவர் தாசன்-தன்னைத்
துதிக்கிற் பதவி அருளுவன் ஈசன். பாபஞ்

# அழுகணி சித்தர் பாடல்

—::—

### கலித்தாழிசை

மூலப் பதியடியோ மூவிரண்டு வீடதிலே
கோலப் பதியடியோ குதர்க்கந் தெருநடுவே
சாலப்பதிதனிலே தனலாய் வளர்ந்த கம்பம்
மேலப் பதிதனிலே என்கண்ணம்மா !
விளையாட்டைப் பாரேனே ! 1

எண்சாண் உடம்படியோ ஏழிரண்டு வாயிலடி
பஞ்சாயக் காரரைவர் பட்டணமுந் தானிரண்டு
அஞ்சாமற் பேசுகிறாய் ஆக்கினைக்குத் தான்பயந்து
நெஞ்சார நில்லாமல் என்கண்ணம்மா !
நிலைகடந்து வாடுறண்டி ! 2

முத்து முகப்படியோ முச்சந்தி வீதியிலே
பத்தாம் இதழ்பரப்பிப் பஞ்சணையின் மேலிருத்தி
அத்தை யடக்கிநிலை ஆருமில்லா வேளையிலே
குத்து விளக்கேற்றி என்கண்ணம்மா !
கோலமிட்டுப் பாரேனே ! 3

சம்பா அரிசியடி சாதஞ் சமைத்திருக்க
உண்பாய்நீ யென்றுசொல்லி உழக்குழக்கு நெய்வார்த்து
முத்துப்போ லன்னமிட்டு முப்பழமுஞ் சர்க்கரையுந்
தித்திக்குந் தேனமிர்தம் என்கண்ணம்மா !
தின்றுகளைப் பாரேனே ! 4

பைம்பொற் சிலம்பணிந்து பாடகக்கால் மேல்தூக்கிச்
செம்பொற் கலையுடுத்திச் சேல்விழிக்கு மையெழுதி
அம்பொற் பணிபூண் டறுகோண வீதியிலே
கம்பத்தின் மேலிருந்தே என்கண்ணம்மா !
கண்குளிரப் பாரேனே ! 5

எட்டாப் புரவியடி யீராறு காலடியோ
விட்டாலும் பாரமடி வீதியிலே தான்மறித்துக்
கட்டக் கயிறெடுத்துக் கால்நாலுஞ் சேர்த்திருக்கி
அட்டாள தேசமெல்லாம் என்கண்ணம்மா!
ஆண்டிருந்தா லாகாதோ! 6

கொல்லன் உலைபோலக் கொதிக்குதடி யென்வயிறு!
நில்லென்று சொன்னால் நிலைநிறுத்தக் கூடுதில்லை!
நில்லென்று சொல்லியல்லோ நிலைநிறுத்த வல்லார்க்குக்
கொல்லென்று வந்தநமன் என்கண்ணம்மா!
குடியோடிப் போகானோ! 7

ஊற்றைச் சடலமடி உப்பிருந்த பாண்டமடி;
மாற்றிப் பிறக்க மருந்தெனக்குக் கிட்டுதில்லை;
மாற்றிப் பிறக்க மருந்தெனக்குக் கிட்டுமென்றால்
ஊற்றைச் சடலம்விட்டே என்கண்ணம்மா!
உன்பாதஞ் சேரேனோ! 8

வாழைப் பழந்தின்றால் வாய்நோகு மென்றுசொல்லித்
தாழைப் பழந்தின்று சாவெனக்கு வந்ததடி;
தாழைப் பழத்தைவிட்டுச் சாகாமற் சாகவல்லோ
வாழைப் பழந்தின்றால் என்கண்ணம்மா!
வாழ்வெனக்கு வாராதோ! 9

பையூரி லேயிருந்து பாழூரி லேபிறந்து
மெய்யூரில் போவதற்கு வேதாந்த வீடறியேன்;
மெய்யூரிற் போவதற்கு வேதாந்த வீடறிந்தால்
பையூரும் மெய்யூரும் என்கண்ணம்மா!
பாழாய் முடியாவோ! 10

மாமன் மகளடியோ மச்சினியோ நானறியேன்!
காமன் கணையெனக்குக் கனலாக வேகுதடி!
மாமன் மகளாகி மச்சினியும் நீயானால்
காமன் கணைகளெல்லாம் என்கண்ணம்மா!
கண்விழிக்க வேகாவோ! 11

அந்தரத்தை வில்லாக்கி ஐந்தெழுத்தை யம்பாக்கி
மந்திரத்தே ரேறியல்லோ மான்வேட்டை யாடுதற்குச்
சந்திரருஞ் சூரியருந் தாம்போந்த காவனத்தே
வந்துவிளை யாடியல்லோ என்கண்ணம்மா !
மனமகிழ்ந்து பார்ப்பதென்றோ ! 12

காட்டானை மேலேறிக் கடைத்தெருவே போகையிலே
நாட்டார் நமைமறித்து நகைபுரியப் பார்ப்பதென்றோ !
நாட்டார் நமைமறித்து நகைபுரியப் பார்த்தாலுங்
காட்டானை மேலேறி என்கண்ணம்மா !
கண்குளிரக் காண்பேனோ ! 13

உச்சிக்குக் கீழடியோ ஊசிமுனை வாசலுக்குள்
மச்சுக்கு மேலேறி வானுதிரந் தானெடுத்துக்
கச்சை வடம்புரியக் காயலூர்ப் பாதையிலே
வச்சு மறந்தல்லோ என்கண்ணம்மா !
வகைமோச மானேனடி ! 14

மூக்கால் அரும்பெடுத்து மூவிரண்டாய்த் தான்தூக்கி
நாக்கால் வளைபரப்பி நாற்சதுர வீடுகட்டி
நாக்கால் வளைபரப்பி நாற்சதுர வீட்டினுள்ளே
மூக்காலைக் காணாமல் என்கண்ணம்மா !
முழுதுந் தவிக்கிறண்டி ! 15

காம மலர்தூவக் கருத்தெனக்கு வந்ததடி ;
பாம வலிதொலைக்கப் பாசவலி கிட்டுதில்லை ;
பாம வலிதொலைக்கப் பாசவலி நிற்குமென்றால்
காம மலர்மூன்றும் என்கண்ணம்மா !
கண்ணெதிரே நில்லாவோ ! 16

தங்காயந் தோன்றாமல் சாணகலக் கொல்லைகட்டி
வெங்காய நாற்றுவிட்டு வெகுநாளாய்க் காத்திருந்தேன் !
வெங்காயந் தின்னாமல் மேற்றோலைத் தின்றலவோ
தங்காயந் தோணாமல் என்கண்ணம்மா !
சாகிறண்டி சாகாமல் ! 17

பற்றற்ற நீரதிலே பாசி படர்ந்ததுபோல்
உற்றுற்றுப் பார்த்தாலும் உன்மயக்கந் தீரவில்லை !
உற்றுற்றுப் பார்த்தாலும் உன்மயக்கந் தீர்ந்தாக்கால்
பற்றற்ற நீராகும் என்கண்ணம்மா !
பாசியது வேறாமோ ! 18

சுற்றாரும் மற்றாருந் தொண்ணூற்றா றாறதிலே
உற்றாரும் பெற்றாரும் ஒன்றென்றே யானிருந்தேன் ;
உற்றாரும் பெற்றாரும் ஊரைவிட்டுப் போகையிலே
சுற்றாரு மில்லாமல் என்கண்ணம்மா !
துணையிழந்து நின்றதென்ன ? 19

கண்ணுக்கு மூக்கடியோ காதோர மத்திமத்தில்
உண்ணாக்கு மேலேறி உன்புதுமை மெத்தவுண்டு
உண்ணாக்கு மேலேறி உன்புதுமை கண்டவர்க்குக்
கண்ணுக்கு மூக்கடியோ என்கண்ணம்மா !
காரணங்கள் மெத்தவுண்டே ! 20

சாயச் சரக்கெடுத்தே சாதிலிங்கந் தான்சேர்த்து
மாயப் பொடிகலந்து வாலுழுவை நெய்யூற்றிப்
பொட்டென்று பொட்டுமிட்டாள் புருவத் திடைநடுவே
இட்ட மருந்தாலே என்கண்ணம்மா !
இவ்வேட மானேண்டி ! 21

பாதாள மூலியடி பாஷாணந் தான்சேர்த்து
வேதாளங் கூட்டியல்லோ வெண்சாரை நெய்யூற்றிச்
செந்தூர மையடியோ செகமெலாந் தான்மிரட்டித்
தந்த மருந்தாலே என்கண்ணம்மா !
தணலாக வேகுறண்டி ! 22

கள்ளர் பயமெனக்குக் கால்தூக்க வொட்டாமல்
பிள்ளை யழுதுநின்றால் பெற்றவட்குப் பாரமடி
பிள்ளை யழுவாமல் பெற்றமனம் நோகாமல்
கள்ளர் பயமெனக்கே என்கண்ணம்மா !
கடுகளவு காணாதோ ! 23

பட்டணத்தை யாளுகின்ற பஞ்சவர்கள் ராசாக்கள்
விட்டுப் பிரியாமல் வீரியங்கள் தாம்பேசி
விட்டுப் பிரிந்தவரே வேறு படுங்காலம்
பட்டணமுந் தான்பறிபோய் என்கண்ணம்மா !
படைமன்னர் மாண்டதென்ன ! 24

ஆகாப் புலையனடி அஞ்ஞானந் தான்பேசிச்
சாகாத் தலைபறியேன் தன்னறிவு தானறியேன் ;
வேகாத காலறியேன் விதிமோச மானேனடி !
நோகாமல் நொந்தல்லோ என்கண்ணம்மா !
நொடியில்மெழு கானேனடி ! 25

தாயைச் சதமென்றே தந்தையரை ஒப்பென்றே
மாயக் கலிவந்து மதிமயக்க மானேனடி !
மாயக் கலிவிட்டு மதிமயக்கந் தீர்ந்தக்கால்
தாயுஞ் சதமாமோ என்கண்ணம்மா !
தந்தையரு மொப்பாமோ ! 26

அஞ்சாத கள்ளனடி ஆருமற்ற பாவியடி !
நெஞ்சாரப் பொய்சொல்லும் நேயமில்லா நிட்டூரன் !
கஞ்சா வெறியனடி கைசேத மாகுமுன்னே
அஞ்சாதே யென்றுசொல்லி என்கண்ணம்மா !
ஆண்டிருந்தா லாகாதோ ! 27

உன்னை மறந்தல்லோ உளுத்த மரமானேன்?
தன்னை மறந்தார்க்குத் தாய்தந்தை யில்லையடி !
தன்னை மறக்காமற் றுயாரு முண்டானால்
உன்னை மறக்காமல் என்கண்ணம்மா !
ஒத்திருந்து வாழேனோ ! 28

காயப் பதிதனிலே கந்தமூ லம்வாங்கி
மாயப் பணிபூண்டு வாழுஞ் சரக்கெடுத்தே
ஆயத் துறைதனிலே ஆராய்ந்து பார்க்குமுன்னே
மாயச் சுருளோலை என்கண்ணம்மா !
மடிமேல் விழுந்ததென்ன ! 29

சித்திரத்தைக் குத்தியல்லோ சிலையை எழுதிவைத்து
உத்திரத்தைக் காட்டாமல் ஊரம்ப லமானேன்;
உத்திரத்தைக் காட்டியல்லோ ஊரம்ப லமானால்
சித்திரமும் வேறாமோ என்கண்ணம்மா!
சிலையுங் குலையாதோ! 30

புல்ல ரிடத்திற்போய்ப் பொருள்தனக்குக் கையேந்திப்
பல்லை மிகக்காட்டிப் பரக்க விழிக்கிறண்டி!
பல்லைமிகக் காட்டாமல் பரக்க விழிக்காமல்
புல்லரிடம் போகாமல் என்கண்ணம்மா!
பொருளெனக்குத் தாராயோ! 31

வெட்டுண்ட சக்கரத்தால் வேண தனமளித்துக்
குட்டுண்டு நின்றேண்டி கோடிமனு முன்னாலே
குட்டுண்டு நில்லாமற் கோடிமனு முன்னாக
வெட்டுண் பிணிநீக்கி என்கண்ணம்மா!
விழித்துவெளி காட்டாயோ! 32

---

கொங்கண நாயனர் அருளிச்செய்த

# வாலைக்கும்மி

—::—

காப்பு

## விநாயகர் துதி

### பின் முடுகு வெண்பா

கல்விநிறை வாலைப்பெண் காதலிபென் றேதுகின்ற
செல்வியின்பேற் கும்மிதனைச் செப்புதற்கே-நல்விசய
நாதனின்சொல் வேதனஞ்சு போதன்மிஞ்சி மானகஞ்ச
பாதம்வஞ்ச நெஞ்சினில்வைப் பாம். 1

## கும்மி

சத்தி சடாதரி வாலைப்பெண் ணுமந்த
உத்தமி மேற்கும்மிப் பாட்டுரைக்க
வித்தைக் குதவிய வொற்றைக்கொம் பாம்வாலை
சித்தி விநாயகன் காப்பாமே. 2

## சரஸ்வதி துதி

சித்தர்கள் போற்றிய வாலைப்பெண் ணுமந்தச்
சத்தியின் மேற்கும்மிப் பாட்டுரைக்கத்
தத்திமி தோமென ஆடுஞ் சரஸ்வதி
பத்தினி பொற்பதங் காப்பாமே. 3

## சிவபெருமான் துதி

எங்கும் நிறைந்தவள் வாலைப்பெண் ணும்மாலின்
தங்கையின் மேற்கும்மி பாடுதற்குக்
கங்கை யணிசிவ சம்புவாஞ் சற்குரு
பங்கயப் பொற்பதங் காப்பாமே. 4

## சுப்பிரமணியர் துதி

ஞானப்பெண் ணுமருள் சோதிப்பெண் ணுமாதி
வாலைப்பெண் மேற்கும்மி பாடுதற்கு
மானைப்பெண் ணாக்கிய வள்ளிக் கிசைந்திடும்
மால்முருகேசனுங் காப்பாமே. 5

## விஷ்ணு துதி

ஆண்டிப்பெண் ணும்ராச பாண்டிப்பெண் ணும்வாலை
அம்பிகை மேற்கும்மி பாடுதற்குக்
காண்டீப னும்பணி பூண்டவன் வைகுந்தம்
ஆண்டவன் பொற்பதங் காப்பாமே. 6

## நந்தீசர் துதி

அந்தரி சுந்தரி வாலைப்பெண் ணுமந்த
அம்பிகை மேற்கும்மி பாடுதற்குச்
சிந்தையில் முந்திநல் விந்தையாய் வந்திடும்
நந்தீசர் பொற்பதங் காப்பாமே. 7

## நூல்

தில்லையில் முல்லையி லெல்லையு ளாடிய
வல்லவள் வாலைப்பெண் மீதினிலே
சல்லாபக் கும்மித் தமிழ்பா டவரும்
தொல்லை வினைபோக்கும் வாலைப்பெண்ணே! 8

மாதா பிதாகூட இல்லாம லேவெளி
மண்ணும்விண் ணுமுண்டு பண்ணவென்று
பேதைப்பெண் ணுமுதல் வாலைப்பெண் ணுளென்று
புகுந்தா ளிந்தப் புவியடக்கம். 9

வேதமும் பூதமுண் டானது வும்வெளி
விஞ்ஞான சாத்திர மானதுவும்
நாதமுங் கீதமுண் டானது வும்வழி
நான்சொல்லக் கேளடி வாலைப்பெண்ணே! 10

முந்தச் செகங்களுண் டானது வும்முதல்
தெய்வமுந் தேவருண் டானதுவும்
விந்தையாய் வாலையுண் டானது வும்ஞான
விளக்கம் பாரடி வாலைப்பெண்ணே! 11

அரிக்கு முந்தின தவ்வெழுத்தாம்; பின்னும்
அரிக்குள் நின்றதும் அஞ்செழுத்தாம்;
தரிக்கும் முந்தின தஞ்செழுத்தாம் வாசி
பரிக்குள் நின்றது மஞ்செழுத்தாம். 12

ஆதியி லைந்தெழுத் தாயினுள் வாலைப்பெண்
ஐந்தெழுத் துமென்று பேரானாள்;
நாதியி னூமை யெழுத்திவள் தானல்ல
ஞான வகையிவள் தானானாள். 13

ஊமை யெழுத்தே யுடலாச்சு மற்றும்
ஓமென் றெழுத்தே யுயிராச்சு;
ஆமிந் தெழுத்தை யறிந்துகொண் டுவிளை
யாடிக் கும்மி யடியுங்கடி. 14

செகம்ப டைத்ததும் அஞ்செழுத்தாம் பின்னும்
சீவன் படைத்ததும் அஞ்செழுத்தாம்;
உகமு டிந்தது மஞ்செழுத் தாம பின்னும்
உற்பன மானது மஞ்செழுத்தாம். 15

சாத்திரம் பார்த்தா லுந் தானுமென்ன வேதந்
தானுமே பார்த்திருந் தாலுமென்ன?
சூத்திரம் பார்த்தல்லோ ஆளவேணு மஞ்சு
சொல்லை யறிந்தல்லோ காணவேணும்? 16

காணாது கிட்டாதே எட்டாதே அஞ்சில்
காரிய மில்லையென் றேநினைத்தால்;
காணாதுங் காணலா மஞ்செழுத் தாலதில்
காரிய முண்டு தியானஞ்செய்தால். 17

ஆயனு மைந்தா மெழுத்துக்குள் ளேயறி
வாயனு மைந்தா மெழுத்துக்குள்ளே ;
வாயனு மைந்தா மெழுத்துக்குள் ளேயிந்த
வாலையு மைந்தா மெழுத்துக்குள்ளே. 18

அஞ்செழுத் தானதும் எட்டெழுத் தாம்பின்னும்
ஐம்பத்தோர் அட்சரந் தானுச்சு ;
நெஞ்செழுத் தாலே நினையா மலந்த
நிசந்தெ ரியுமோ வாலைப்பெண்ணே ! 19

ஏய்க்கு தேய்க்கு தஞ்செழுத் துவதை
எட்டிப் பிடித்துக்கொ ளிரண்டெழுத்தை ;
நோக்கிக்கொள் வாசியை மேலாக வாசி
நிலையைப் பாரடி வாலைப்பெண்ணே ! 20

சிதம்பர சக்கரந் தானறி வாரிந்தச்
சீமையி லுள்ள பெரியோர்கள் ;
சிதம்பர சக்கர மென்றால் அதற்குள்ளே
தெய்வத்தை யல்லோ அறியவேணும் ? 21

மனமு மதியு மில்லாவி டில்வழி
மாறுதல் சொல்லியே யென்ன செய்வாள் ?
மனமு றுதியும் வைக்கவே ணும்பின்னும்
வாலை கிருபையுண் டாகவேணும். 22

இனிவெ ளியினிற் சொல்லா தேயெழில்
தீமட்டு திந்த வரிவழிக்கே
கனிமொ ழிச்சியீர் வாருங்கடி கொஞ்சங்
கருவைச் சொல்லுவேன் கேளுங்கடி ; 23

ஊத்தைச் சடலமென் றெண்ணா தேயிதை
உப்பிட்ட பாண்டமென் றெண்ணாதே ;
பார்த்த பேருக்கே ஊத்தையில் லையிதைப்
பார்த்துக்கொள் உன்ற னுடலுக்குள்ளே. 24

உச்சிக்கு நேராயுண் ணாவுக்கு மேல்நிதம்
வைத்த விளக்கும் எரியுதடி ;
அச்சுள்ள விளக்கு வாலைய டியவி
யாம லெரியுது வாலைப்பெண்ணே ! 25

எரியுதே அறு வீட்டினி லேயதில்
எண்ணெயில் லையமிழ் தண்ணீரில்லை ;
தெரியுது போக வழியுமில் லைபாதை
சிக்குது சிக்குது வாலைப்பெண்ணே ! 26

சிலம்பொ லியென்னக் கேட்கும டிமெத்த
சிக்குள்ள பாதை துடுக்கமடி ;
வலம்புரி யச்சங்க மூது மடிமேலே
வாசியைப் பாரடி வாலைப்பெண்ணே! 27

வாசிப் பழக்க மறியவே ணுமற்று
மண்டல வீடுகள் கட்டவேணும் ;
நாசி வழிக்கொண்டு யோகமும் வாசியும்
நாட்டத்தைப் பாரடி வாலைப்பெண்ணே ! 28

மூச்சுட ரான விளக்கினுள் ளேமூல
மண்டல வாசி வழக்கத்திலே
எச்சுட ராகி யந்தச் சுடர்வாலை
இவள்விட வேறில்லை வாலைப்பெண்ணே ! 29

சூடாமல் வாலை யிருக்கிற தும்பரி
சுத்த சிவனுக்குள் ளான தனல்
வீடாமல் வாசிப் பழக்கத்தைப் பாருநாம்
மேல்வீடு காணலாம் வாலைப்பெண்ணே ! 30

மேல்வீடு கண்டவன் பாணியடி விண்ணில்
விளக்கில் நின்றவன் வாணியடி
தாய்வீடு கண்டவன் ஞானிய டிபரி
தாண்டிக் கொண்டான்பட் டாணியடி. 31

அத்தியி லேகரம் பத்தியி லேமனம்
புத்தியி லேநடு மத்தியிலே
நெற்றி சதாசிவ மென்றுசொன் னேனுன்றன்
நிலைமையைப் பாரடி வாலைப்பெண்ணே ! 32

அழுத்தி லேசொல்லஞ் செழுத்தி லேநானும்
வழுத்தி னேன்ஞானப் பழத்திலே
கழுத்தி லேமயேஸ் வரனு முண்டுகண்
கண்டு பாரடி வாலைப்பெண்ணே ! 33

அஞ்சிலே பிஞ்சிலே வஞ்சிய ரேகிதம்
கொஞ்சி விளையாடும் வஞ்சியரே !
நெஞ்சிலே ருத்திரன் சூழிருப் பானவன்
நேருட னுமடி வாலைப்பெண்ணே ! 34

தொந்தியி லேநடுப் பந்தியி லேதிடச்
சிந்தையி லேமுந்தி யுன்றனுடன்
உந்தியில் விண்ணுவுந் தாமிருப் பாரிதை
உண்மையாய்ப் பாரடி வாலைப்பெண்ணே ! 35

ஆலத்தி லேயிந்த ஞாலத்தி லேவருங்
காலத்தி லேயனு கூலத்திலே
மூலத்தி லேப்ரமன் தானிருந் துவாசி
முடிக்கிறுன் பிண்டம் பிடிக்கிறுனே. 36

தேருமுண் டைஞ்ஞூறும் ஆணியுண் டேஅதில்
தேவரு முண்டுசங் கீதமுண்டே
ஆருண்டு பாரடி வாலைத்தெய் வம்மதில்
அடக்கந் தானடி வாலைப்பெண்ணே ! 37

ஒன்பது வாயில்கொள் கோட்டையுண் டேஅதில்
உள்ளே நிலைக்கார ரஞ்சுபேராம் ;
அன்புட னேபரி காரர்க ளாறுபேர்
அடக்கந் தானடி வாலைப்பெண்ணே ! 38

இந்த விதத்திலே தேகத்தி லேதெய்வம்
இருக்கையில் புத்திக்க றிக்கையினுல்
சந்தோட வாலையைப் பாராமல் மனிதர்
சாகிற தேதடி வாலைப்பெண்ணே! 39

நகார திட்டிப்பே ஆன த னுல்வீடு
வான வகார நயமாச்சு;
உகார முச்சி சிரசாச் சேஇதை
உற்றுப் பாரடி வாலைப்பெண்ணே! 40

வகார மானதே ஓசையாச் சேஅந்த
மகார மானது கர்ப்பமாச்சு;
சிகார மானது மாய்கையாச் சேஇதைத்
தெளிந்து பாரடி வாலைப்பெண்ணே! 41

ஓமென்ற அட்சரந் தானுமுண் டதற்குள்
ஊமை யெழுத்து மிருக்குதடி;
நாமிந்தெ ழுத்தை யறிந்துகொண் டோம்வினை
நாடிப் பாரடி வாலைப்பெண்ணே! 42

கட்டாத காளையைக் கட்டவே ணுமாசை
வெட்டவே ணும்வாசி யொட்டவேணும்;
எட்டாத கொம்பை வளைக்கவே ணுங்காய
மென்றைக்கி ருக்குமோ வாலைப்பெண்ணே! 43

இருந்த மார்க்கமாய்த் தானிருந் துவாசி
ஏற்காம லேதான டக்கவேணும்;
திரிந்தே ஓடி யலைந்துவெந் துதேகம்
இறந்து போச்சுதே வாலைப்பெண்ணே! 44

பூத்த மலராலே பிஞ்சுமுண் டேஅதில்
பூவில்லாப் பிஞ்சு மனேகமுண்டு
மூத்த மகனாலே வாழ்வுமுண் டுமற்ற
மூன்றுபே ராலே அழிவுமுண்டு. 45

கற்புள்ள மாதர் குலம்வாழ்க நின்ற
கற்பை யளித்தவ ரேவாழ்க !
சிற்பர னைப்போற்றிக் கும்மிய டிகுரு
தற்பர னைப்போற்றிக் கும்மியடி. 46

அஞ்சி னிலேரண் டழிந்ததில் லையஞ்
சா றிலே யுநாலொ ழிந்ததில்லை ;
பிஞ்சிலே பூவிலே துஞ்சுவ தாம்அது
பேணிப் போடலாம் வாலைப்பெண்ணே ! 47

கையில்லாக் குட்டையன் கட்டிக்கிட் டானிரு
காலில்லா நெட்டையன் முட்டிக்கிட்டான் ;
ஈயில்லாத் தேனெடுத் துண்டுவிட் டானது
இனிக்கு தில்லையே வாலைப்பெண்ணே ! 48

மேலூரு கோட்டைக்கே ஆதர வாய்நன்றாய்
விளங்கு கன்னனூர்ப் பாதையிலே
காலூரு வம்பலம் விட்டத னுலது
கடுந டையடி வாலைப்பெண்ணே ! 49

தொண்டையுள் முக்கோணக் கோட்டையி லேயிதில்
தொத்திக் கொடிமரம் நாட்டையிலே
சண்டைசெய் துவந்தே ஓடிப்போ னுள்கோட்டை
வெந்து தணலாச்சு வாலைப்பெண்ணே ! 50

ஆசை வலைக்குள் அகப்பட்ட தும்வீடு
அப்போதே வெந்தே அழிந்திட்டதும்
பாச வலைவந்து மூடிய தும்வாலை
பாதத்தைப் போற்றடி வாலைப்பெண்ணே ! 51

அன்ன மிருக்குது மண்டபத் தில்வினை
யாடித் திரிந்ததே ஆண்புலியும் ;
இன்ன மிருக்குமே யஞ்சுகி ளியவை
எட்டிப் பிடிக்குமே மூன்றுகிளி. 52

தோப்பிலே மாங்குயில் கூப்பிடு தேபுது
மாப்பிள்ளை தான்வந்து சாப்பிடவும்
ஏய்க்கு மிப்படி யஞ்சா ருங்கை
இருந்து விழிப்பது பாருங்கடி. 53

மீனு மிருக்குது தூரணி யிலிதை
மேய்ந்து திரியுங் கலசாவல் ;
தேனு மிருக்குது போரையிலே யுண்ணத்
தெவிட்டு தில்லையே வாலைப்பெண்ணே ! 54

காக்கை யிருக்குது கொம்பிலே தான்கத
சாவ லிருக்குது தெம்பிலேதான் ;
பார்க்க வெகுதூர மில்லை யிதுஞானம்
பார்த்தால் தெரியுமே வாலைப்பெண்ணே ! 55

கும்பிக் குளத்திலே யம்பல மாமந்தக்
குளக்க ருவூரில் சேறுமெத்த ;
தெம்பி லிடைகாட்டுப் பாதைக ளாய்வந்து
சேர்ந்ததா ராய்ந்துபார் வாலைப்பெண்ணே ! 56

பண்டுமே ஆழக் கிணற்றுக்குள் ளேரண்டு
கெண்டை யிருந்து பகட்டுதடி ;
கண்டிருந் துமந்தக் காக்கையு மேயஞ்சு
கழுகு கொன்றது பாருங்கடி. 57

ஆற்றிலே யஞ்சு முதலைய டியரும்
புற்றிலே ரண்டு கரடியடி ;
கூற்றனு மூன்று குருடன டிபாசங்
கொண்டு பிடிக்கிறான் வாலைப்பெண்ணே ! 58

முட்டை யிடுகு தொருபற வைமுட்டை
மோசம் பண்ணு தொருபறவை ;
வட்டமிட் டாளூர் கண்ணியி லிரண்டு
மானுந் தவிக்குது வாலைப்பெண்ணே ! 59

அட்டமா வின்வட்டம் பொட்டலி லேரண்டு
அம்புலி நிற்குது தேர்மேலே
திட்டமாய் வந்து அடிக்குதில் லேதேகம்
செந்தண லானதே வாலைப்பெண்ணே! 60

முக்கோண வட்டக் கிணற்றுக்குள் ளேமூல
மண்டல வாசிப் பழக்கததிலே
அக்கோண வட்டச் சக்கரத் தில்வாலை
அமர்ந்தி ருக்கிறுள் வாலைப்பெண்ணே! 61

இரண்டுகா லாலொரு கோபுர மாம்நெடு
நாளா யிருந்தே அமிழ்ந்துபோகும்;
கண்டபோ துகோபு ரமிருக் கும்வாலை
காணவு மெட்டாள் நிலைக்கவொட்டாள். 62

அஞ்சு பூதத்தை யுண்டுபண் ணிக்கூட்டி
ஆரா தாரத்தை யுண்டுபண்ணிக்
கொஞ்சு பெண்ணசை யுண்டுபண் ணிவாலை
கூட்டுருள் காலனை மாட்டுகிருள். 63

காலனைக் காலா லுதைத்தவ ளாம்வாலை
ஆலகா லவிட முண்டவளாம்;
மாளாச் செகத்தைப் படைத்தவ ளாமிந்த
மானுடன் கோட்டை யிடித்தவளாம். 64

மாதாவாய் வந்தே அமுதந்தந் தாள்மனை
யாட்டியாய் வந்து சுகங்கொடுத்தாள்;
ஆதர வாகிய தங்கையா னுள்நமக்
காசைக் கொழுந்தியு மாமியானுள். 65

சிரித்து மெல்லப் புரமெரித் தாள்வாலை
செங்காட்டுச் செட்டியைத் தானுதைத்தாள்;
ஒருத்தி யாகவே சூர்த மைவென்றுள்
ஒற்றையாய்க் கஞ்சனைக் கொன்றுவிட்டாள். 66

இப்படி யல்லோ இவள்தொழி லாமிந்த
ஈனு மலடி கொடுஞ்சூலி ;
மைப்படுங் கண்ணியர் கேளுங்கடி அந்த
வயசு வாலை திரிசூலி. 67

கத்தி பெரிதோ யுறைபெரி தோவிவள்
கண்ணு பெரிதோ முகம்பெரிதோ ?
சத்தி பெரிதோ சிவம்பெரி தோநீதான்
சற்றே சொல்லடி வாலைப்பெண்ணே ! 68

அன்னம் பெரிதல்லால் தண்ணீர் பெரிதல்ல
அப்படி வாலை பெரிதானால்
பொன்னு பெரிதல்லால் வெள்ளி பெரிதல்ல
பொய்யாது சொல்கிறேன் கேளுங்கடி. 69

மாமிச மானு லெலும்புமுண் டுசதை
வாங்கி யோடு கழன்றுவிடும் ;
ஆமிச மிப்படிச் சத்தியென் றேவிளை
யாடிக் கும்மி அடியுங்கடி. 70

பண்டு முளைப்ப தரிசியே யானாலும்
விண்டுமி போனால் விளையாதென்று
கண்டுகொண் டுமுன்னே அவ்வைசொன் னளது
வுண்டோ வில்லையோ வாலைப்பெண்ணே ! 71

மண்ணுமில் லாமலே விண்ணுமில் லைகொஞ்சம்
வாசமில் லாமலே பூவுமில்லை ;
பெண்ணுமில் லாமலே யாணுமில் லையிது !
பேணிப் பாரடி வாலைப்பெண்ணே ! 72

நந்த வனத்திலே சோதியுண் டுநிலம்
நத்திய பேருக்கு நெல்லுமுண்டு ;
விந்தையாய் வாலையைப் பூசிக்க முன்னாளில்
விட்ட குறைவேணும் வாலைப்பெண்ணே ! 73

வாலையைப் பூசிக்கச் சித்தரா னார்வாலைக்
கொத்தாசை யாய்ச்சிவ கர்த்தரானார் ;
வேலையைப் பார்த்தல்லோ கூலிவைத் தாரிந்த
விதந்தெ ரியுமோ வாலைப்பெண்ணே ! 74

வாலைக்கு மேலான தெய்வமில் லைமானங்
காப்பது சேலைக்கு மேலுமில்லை ;
பாலுக்கு மேலான பாக்கியமில் லைவாலைக்
கும்மிக்கு மேலான பாடலில்லை. 75

நாட்டத்தைக் கண்டா லறியலா குமந்த
நாலாறு வாசல் கடக்கலாகும் ;
பூட்டைக் கதவைத் திறக்கலா கும்மிது
பொய்யல்ல மெய்யடி வாலைப்பெண்ணே ! 76

ஆணும்பெண் ணுங்கூடி யானத னாற்பிள்ளை
ஆச்சுதென் றேநீரும் பேசுகின்றீர் ;
ஆணும்பெண் ணுங்கூடி யானதல் லோபேதம்
அற்றொரு வித்தாச்சு வாலைப்பெண்ணே ! 77

இன்றைக் கிருப்பதும் பொய்யல்ல வேவீடே
என்வாழ்க்கை யென்பதும் பொய்யல்லவே ;
அன்றைக் கெழுத்தின் படிமுடி யும்வாலை
ஆத்தாளைப் போற்றடி வாலைப்பெண்ணே ! 78

வீணாசை கொண்டு திரியா தேயிது
மெய்யல்ல பொய்வாழ்வு பொய்க்கூடு
காணாத வாலையைக் கண்டுகொண் டாற்காட்சி
காணலா மாகாய மாளலாமே. 79

பெண்டாட்டி யாவதும் பொய்யல்ல வோபெற்ற
பிள்ளைக ளாவதும் பொய்யல்லவோ ?
கொண்டாட்ட மான தகப்பன்பொய் யேமுலை
கொடுத்த தாயும் நிசமாமோ ? 80

தாயும்பெண் டாட்டியுந் தான்சரி யேதன்யம்
 தாமே யிருவருந் தாங்கொடுத்தார் !
காயும் பழமுஞ் சரியா மோஉன்றன்
 கருத்தைப் பார்த்துக்கொள் வாலைப்பெண்ணே ! 81

பெண்டாட்டி மந்தைமட் டும்வரு வாள்பெற்ற
 பிள்ளை மசானக் கரையின் மட்டும் ;
தெண்டாட்டுத் தர்மம் நடுவினி லேவந்து
 சேர்ந்து பரகதி தான்கொடுக்கும். 82

பாக்கிய மும்மகள் போக்கிய மும்ராச
 போக்கிய மும்வந்த தானுக்கால்
சீக்கிரந் தருமஞ் செய்யவேண் டுங்கொஞ்சந்
 திருப்ப ணிகள்மு டிக்கவேண்டும். 83

திருப்பணி களைமு டித்தோ ருஞ்செத்துஞ்
 சாகாத பேரி லொருவரென் றும்
அருட்பொ லிந்திடும் வேதத்தி லேயவை
 அறிந்து சொன்னளே வாலைப்பெண்ணே ! 84

மெத்தை தனிலே படுத்திருந் துநாமும்
 மெல்லிய ரோடு சிரிக்கும்போது
யுத்தகா லன்வந்து தான்பிடித் தால்நாமும்
 செத்த சவமடி வாலைப்பெண்ணே ! 85

ஏழை பணுதிக ளில்லையென் றுலவர்க்
 கிருந்தா லன்னங் கொடுக்கவேண்டும் ;
நாளையென் றுசொல்ல லாகா தேயென்று
 நான்மறை வேத முழங்குதடி. 86

பஞ்சை பணுதி யடியாதே யந்தப்
 பாவந் தொலைய முடியாதே ;
தஞ்சமென் றேரைக் கெடிக்கா தேயார்க்கும்
 வஞ்சனை செய்ய நினையாதே. 87

கண்டதுங் கேட்டதுஞ் சொல்லாதே கண்ணில்
காணாத வுத்தரம் விள்ளாதே ;
பெண்டாட்டிக் குற்றது சொல்லாதே பெற்ற
பிள்ளைக் கிளப்பங் கொடுக்காதே. 88

சிவன்ற னடியாரை வேதிய ரைச்சில
சீர்புல ஞானப் பெரியோரை
மவுன மாகவும் வையா தேயவர்
மனத்தை நோகவும் செய்யாதே. 89

வழக்க ழிவுகள் சொல்லா தேகற்பு
மங்கையர் மேல்மனம் வையாதே ;
பழக்க வாசியைப் பார்த்துக்கொண் டுவாலை
பாதத்தைப் போற்றடி வாலைப்பெண்ணே ! 90

கூடிய பொய்களைச் சொல்லாதே பொல்லாக்
கொலைக ளவுகள் செய்யாதே ;
ஆடிய பாம்பை யடியா தேயிது
அறிவு தானடி வாலைப்பெண்ணே ! 91

காரிய ஞகினும் வீரியம் பேசவும்
காணு தென்றவ்வை சொன்னுளே ;
பாரினில் வம்புகள் செய்யா தேபுளிப்
பழம்போ லுதிர்ந்து விழுந்தானே. 92

காசார் கள்பகை செய்யா தேநடுக்
காட்டுப் புலிமுன்னே நில்லாதே ;
தேசாந்தி ரங்களுஞ் செல்லா தேமாய்கைத்
தேவடி யாள்தனம் பண்ணுதே. 93

தன்வீ டிருக்க அசல்வீடு போகாதே
தாயார் தகப்பனை வையாதே ;
உன்வீட்டுக் குள்ளேயே யூக மிருக்கையில்
ஓடித் திரிகிறுய் வாலைப்பெண்ணே ! 94

சாதி பேதங்கள் சொல்லுகி றீர்தெய்வம்
தானென் றெருவுடல் பேதமுண்டோ ?
ஓதிய பாலதி லொன்றுகி பதிலே
உற்பத்தி நெய்தயிர் மோராச்சு. 95

பாலொடு முண்டிடு பூனையு முண்டது
மேலாகக் காணவுங் காண்பதில்லை ;
மேலந்த வாசையைத் தள்ளிவிட் டுள்ளத்தில்
வேண்டிப் பூசையைச் செய்திடுங்கள்: 96

கோழிக் கறுகா லுண் டென்றுசொன் னேன்குழக்
கூனிக்கு மூன்றுகா லென்றுசொன்னேன் ;
கூலிக்கு ரண்டெழுத் தென்றுசொன் னேன்முழுப்
பானைக்கு வாயில்லை யென்றுசொன்னேன் 37

ஆட்டுக் கிரண்டுகா லென்றுசொன் னேனம்
மானைக்குப் பானைக்கு நிற்குமேல்சூல்
மாட்டுக்குக் காலில்லை யென்றுசொன் னேன்கதை
வகையைச் சொல்லடி வாலைப்பெண்ணே ! 98

கோயிலு மாடும் பறித்தவ னுங்கன்றிக்
கூற்று மேகற் றிருந்தவனும்
வாயில்லாக் குதிரை கண்டவ னுமாட்டு
வகைதெ ரியுமோ வாலைப்பெண்ணே ! 99

இத்தனை சாத்திரந் தாம்படித் தோர்செத்தார்
என்று லுலகத்தார் தாம்சிரிப்பார் ;
செத்துப்போய்க் கூடக் கலக்கவேண் டுமவன்
தேவர்க ளுடனே சேரவேண்டும். 100

உற்றது சொன்னக்கா லற்றது பொருந்தும்
உண்டோ உலகத்தி லவ்வைசொன்னாள் ;
அற்றது பொருந்து முற்றது சொன்னவன்
அவனே குருவடி வாலைப்பெண்ணே ! 101

பூரண நிற்கும் நிலையறி யான்வெகு
பொய்சொல்வான் கோடிமந் திரஞ்சொல்வான்
காரண குருஅ வனுமல் லவிவன்
காரிய குருபொ ருள்பறிப்பான். 102

எல்லா மறிந்தவ ரென்றுசொல் லியிந்தப்
பூமியி லேமுழு ஞானியென்றே
உல்லாச மாக வயிறு பிழைக்கவே
ஓடித் திரிகிறார் வாலைப்பெண்ணே! 103

ஆதிவா லைபெரி தானு லும்மவள்
அக்காள் பெரிதோ சிவன்பெரிதோ!
நாதிவா லைபெரி தானு லும்மவள்
நாயக னல்ல சிவம்பெரிது. 104

ஆயுசு கொடுப்பாள் நீரிழி வுமுதல்
அண்டாது மற்ற வியாதியெல்லாம்
பேயும் பறந்திடுஞ் பில்லிவி னுடியில்
பத்தினி வாலைப்பெண் பேரைச்சொன்னால். 105

நித்திரை தன்னிலும் வீற்றிருப் பாளெந்த
நேரத்தி லும்வாலை முன்னிருப் பாள்;
சத்துரு வந்தா லும் தள்ளிவைப் பாள்வாலை
உற்றகா லனையுந் தானுதைப்பாள். 106

பல்லாயிர ங்கோடி யண்டமு தல்பதி
னுன்கு புவனமும் மூர்த்திமுதல்
எல்லாந் தானுய்ப் படைத்தவ ளாம்வாலை
எள்ளுக்கு ளெண்ணெய்போல் நின்றவளாம். 107

தேசம் புகழ்ந்திடும் வாலைக்கும் மித்தமிழ்
செய்ய எனக்குப தேசஞ்செய்தாள்
நேசவான் வீரப் பெருமாள் குருசாமி
நீள்பதம் போற்றிக்கொண் டாடுங்கடி 108

ஆறு படைப்புகள் வீடு கடைசூத்ர
அஞ்செழுத் துக்கும் வகையறிந்து
கூறு முயர்வல வேந்த்ரன் துரைவள்ளல்
கொற்றவன் வாழக்கொண் டாடுங்கடி. 109

ஆடுங்கள் பெண்டுக ளெல்லோ ருமந்த
அன்பான கொங்கணர் சொன்னதமிழ்
பாடுங்கள் சித்தர்க ளெல்லோ ரும்வாலை
பாதத்தைப் போற்றிக்கொண் டாடுங்கடி. 110

சித்தர்கள் வாழி சிவன்வா ழிமுனி
தேவர்கள் வாழி ரிடி வாழி
பத்தர்கள் வாழி பதம்வா ழிகுரு
பாரதி வாலைப்பெண் வாழியவே! 111

# உரோம ரிஷி ஞானம்

—::—

**எண்சீர் விருத்தம்**

மூலவட்ட மானகுரு பாதங் காப்பு;
முத்திக்கு வித்தான முதலே காப்பு;
மேலவட்ட மானபரப் பிரமங் காப்பு!
வேதாந்தங் கடந்துநின்ற மெய்யே காப்பு;
காலவட்டந் தங்கிமதி யமுதப் பாலைக்
கண்டுபசி யாற்றிமனக் கவடு நீக்கி
ஞாலவட்டஞ் சித்தாடும் பெரியோர் பாதம்
நம்பினதா லுரோமனென்பேர் நாயன் றானே. 1

கண்ணாடி சிலமூடித் தனுப்பி னாலே
கருவதனை யறியாமல் மாண்டு போனான்
விண்ணாட்டிப் பாராத குற்றம் குற்றம்
வெறுமண்ணாய்ப் போச்சுதவன் வித்தை யெல்லாம்;
ஒண்ணான மவுனமென்றே யோகம் விட்டால்
ஒருபோதுஞ் சித்தியில்லை! வாதந் தானும்
பெண்ணார்தம் ஆசைதன்னை விட்டு வந்தால்
பேரின்ப முத்திவழி பேசு வேனே. 2

பேசுவேன் இடைகலையே சந்த்ர காந்தம்;
பின்கலைதா னாதித்த னாதி யாச்சு;
நேசமதாய் நடுவிருந்த சுடர்தான் நீங்கி
நீங்காம லொன்றானா லதுதான் முத்தி;
காதலாய்ப் பார்த்தோர்க்கிங் கிதுதான் மோட்சம்;
காணாத பேர்க்கென்ன காம தேகஞ்
சோதனையாய் இடைகலையி லேற வாங்கிச்
சுழுமுனையில் கும்பித்துச் சொக்கு வீரே. 3

வாங்கியந்தப் பன்னிரண்டி னுள்ளே ரேசி
வன்னிநின்ற விடமல்லோ சூர்யன் வாழ்க்கை ?
ஓங்கியிந்த இரண்டிடமு மறிந்தோன் யோகி ;
உற்றபர மடிதானே பதினா றாகும் ;
தாங்கிநின்ற காலடிதான் பன்னி ரண்டு ;
சார்வான பதினாறில் மெள்ள வாங்கி
ஏங்கினதைப் பன்னிரண்டில் நிறுத்தி யூதி
எழுந்தபுரி யட்டமடங் கிற்றுப் பாரே. 4

பாரையா குதிரைமட்டம் பாய்ச்சல் போச்சு ;
பரப்பிலே விடுக்காதே சத்தந் தன்னை ;
நேரையா இரண்டிதழி னடுவே வைத்து
நிறைந்தசதா சிவனாரைத் தியானம் பண்ணு ;
கூரையா அங்குலந்தா னாலுஞ் சென்றால்
குறிக்குள்ளே தானடக்கிக் கொண்ட தையா !
ஆரையா உனக்கீடு சொல்லப் போறேன் !
அருமையுள்ள என்மகனென் றழைக்க லாமே. 5

அழைப்பதுவும் நல்லபிள்ளை யானால் நன்றே ;
ஆகாத சீடர்களைச் சேர்த்தல் தோடம் ;
பிழைப்பதற்கு வழிசொன்னால் பார்க்க மாட்டான்
பெண்டாட்டி மனங்குளிரப் பேசு மாடு ;
உழைப்பதற்குச் செனனமெடுத் தானே யல்லால்
உதவிதனக் கெவ்வளவு முண்டோ வில்லை ;
இளப்பமிவன் பேச்சையடிக் கடிதா னாகு
மேதுக்குஞ் சொல்லுகிறே னினிமேல் தானே 6

மேலென்ன இருக்கையிலும் நடக்கும் போதும்
வேறுரையால் சாரங்கள் விடாம லேற்று
நாலென்ன எட்டென்ன வெல்லா மொன்று
நவமான அட்டாங்க மப்பிய சித்துக்

காலென்னப் பிராணய முன்னே செய்யில்
கணக்காகப் பூரகங்கும் பகமே நாலு
கொலென்ன ரேகந்தா னென்று மூன்று
குறையாமற் சரபீசங் கூட்டித் தீரே. 7

கூட்டியே பழகினபின் சரபீ சத்தில்
குறையாமல் சாதித்தால் பிரம ரந்த்ரம்
காட்டுவிக்கு மல்லால்விழிக் குறியி னூலே
கண்மூக்கு மத்தியிலே கண்டு பாரு ;
மூட்டுவிக்கு மாதார மாறுந் தானே
மூலவட்டக் கணபதிநான் முகத்தோன் மாயன்
தாட்டிகமா மணிப்பூரங் கையன் வட்டங்
தணலான ருத்திரனுந் தணலு மாமே. 8

தணலாகும் விசுத்தியறு கோண வட்டஞ்
சதாசிவனர் வட்டமல்லோ குருபீ டந்தான் ;
மனையான பதியினிலே குறித்துப் பார்க்க
மத்யமுதல் கரிகொண்டு தூங்குந் தூங்குங்
கணலேறிக் கொண்டிருந்தா லெல்லா முண்டு ;
காற்றைவெளி விட்டக்கால் கருமந் தீதான்
புனலூறும் வழிபாதை யிந்த மார்க்கம்
பொல்லாத துரோகிக்குப் பொய்யா மன்றே? 9

செலுத்துவது முன்னுக்கி லண்ணுக் கையா!
சென்றேறிப் பிடரிவழித் தியானந் தோன்றும் ;
வலுத்ததடா நாலுமுனக் கமுத மாச்சு ;
மவுனமென்ற நிருவிகற்ப வாழ்க்கை யாச்சு ;
சொலித்திருக்கும் பன்னிரண்டி லிருத்தி யூது
சோடசமாம் சுந்தரகலை தேய்ந்து போச்சு ;
பலித்ததடா யோகசித்தி ஞான சித்தி
பருவமாய் நாடிவைத்துப் பழக்கம் பண்ணே. 10

மூடாமல் சிறிதுமனப் பாடம் பண்ணி
முழுதுமவன் வந்ததுபோல் பிரசங் கித்து
வீடேதிங் குடலேது யோக மேது
வீண்பேச்சாச் சொல்லியல்லோ மாண்டு போனார் ?
காடேறி மலையேறி நதிகளாடிக்
காய்கிழங்கு சருகுதின்று காமத் தீயால்
சூடேறி மாண்டவர்கள் கோடா கோடி
சொருபமுத்தி பெற்றவர்கள் சுருக்க மாச்சே. 11

சொருபமுத்திக் கடையாள மேதென் றக்கால்
சுடர்போலக் காணுமடா தூல தேகம் ;
அருபமுத்தி யிடமல்லோ பிரம ஞானம்
அபராட்ச மென்றுசொல்லுஞ் சிரவ ணந்தான்
பருபதத்தை அசைப்பனெனச் சிற்றெ றும்பின்
பழங்கதைபோ லாச்சுதிந்த யோகம் விட்டால்
வெறுங்கடத்தி வீப்புகுந்த வாறு போல
வேதாந்த மறியாத மிலேச்சர் தாமே. 12

ஓமென்ற கெட்டபுத்தி மாறு கேளே ;
உலகத்தில் மானிடர்க்காம் ஆண்டு நூறே ;
ஆமென்றே இருபத்தோ ராயி ரத்தோ
டறுநூறு சுவாசமல்லோ ஒருநா ளைக்குப்
போமென்று போனதனுல் நாள்கு றைந்து
போச்சுதுபோ காவிட்டால் போவ தில்லை ;
தாமொன்று நினைக்கையிலே தெய்வ மொன்று
தானினைந்த தன்மையல்லோ விதிகள் தாமே ? 13

# திருமூலநாயனர் ஞானம்

—::—

## எண்சீர் விருத்தம்

அடியாகி யண்டரண்டத் தப்பா லாகி
அகாரமெனு மெழுத்ததுவே பாத பாகி
முடியாகி நடுவாகி மூலந் தன்னில்
முப்பொருளுந் தானகி முதலு மாகிப்
படியாய்முப் பாழற்றுப் படிக்கு மப்பாற்
படிகடந்த பரஞ்சோதிப் பதியு மாகி
அடியாகு மூலமதே அகார மாகி
அவனளவாய் நின்றநிலை யணுவ தாமே. 1

அதுவாகி யவனவளா யெல்லா மாகி
அடிநடுவு முடிவாகி யகண்ட மாகிப்
பொதுவாகிப் பல்லுயிர்க ளனைத்துக் கெல்லாம்
புகலிடமா யெப்பொருட்கு மூல மாகி
மதுவாகி வண்டாகிச் சுவையு மாகி
மலராகி மணமாகி மதிக்க வொண்ணு
அதுவாகும் அகாரமதே மூல மாகி
அண்டமெல்லாந் தாங்கிநின்ற அம்மூ லம்மே. 2

மூலமெனு மாதார வட்டந் தானே
முச்சுடரு முக்கோண மூன்று காடிச்
சீலமெனுஞ் சிவலிங்க பாத தீர்த்தந்
திருவடியுந் திருமேனி நடமு மாகும்
கோலமுட னண்ட மெல்லாந் தாங்கிக் கொண்டு
கொழுந்துவிட்ட கம்பமதாய் மேலே நோக்கி
ஆலமுண்ட கண்டமெலாந் தானய் நின்ற
அகாரமுதல் அவ்வெழுத்தை அறிந்து பாரே. 3

அறிந்ததுவுந் தற்பரமே அகார மாகும்;
அறிவுடைய உகாரம்சிற் பரம தாகும்;
பிறந்ததுவு முலகமெலாஞ் சமயந் தானும்;
பேதமெனுங் கருவிவகை யெல்லா மாகும்;

அறிந்ததுவும் அகாரமெனும் பாதந் தன்னை ;
அடிமுடியென் றனுதினமு மறிந்து நோக்கே. 4

நோக்கமுடன் மூலமெனும் பாதந் தன்னை
நுண்பொருளாஞ் சிற்பரத்தி னூடே நோக்குந்
தீர்க்கமுட னாதார வகையுந் தாண்டித்
திருநயனம் நாசிநெற்றி நடுவே பார்த்துப்
போக்கறிந்திங் கிந்தநிலை நோக்க வல்லார்
புரிசடையோன் தன்னுடைய புதல்வ ராவார் ;
ஆக்கமுட னருட்சுடர்போற் குருவைத் தானே
அனுதினமும் நோக்கிநிற்பா ராசா னாமே. 5

ஆசானு மீசானு மொன்றே யாகும் ;
அவனவளு மொன்றாகும் ; அதுதா னாகும் ;
பேசாத மந்திரமு மிதுவே யாகும் ;
பேரொளியின் வடிவாகும் ; பேரு மாகும் ;
நேசாருங் கலைகளெலாந் தானே யாகும் ;
நிலையான ஓங்கார பீட மாகும் ;
ஈசானை ஆசானைக் காணும் பேர்க்கிங்
கின்பமுடன் கயிலாச மெய்த லாமே. 6

எய்தரிய பரசிவத்தின் மூலந் தன்னில்
இருசுடரு முதித்தொடுங்கு மிடமே யென்று
மெய்தொழியுஞ் சுழுமுனையே கம்ப மாகி
மெய்ப்பொருளாஞ் சோதியென மேவி நிற்கும் ;
இவ்வகையே மூலமெனும் பாதந் தன்னை
இருநேர மற்றிடத்தே யிறைஞ்சிக் காணே. 7

காண்பதுதான் பேரொளியின் காட்சி யாகும் ;
காணரிய பொருளாகுங் காட்டும் போதே
ஆண்பெண்ணாய் அலியாகி அடியு மாகி
அப்பாலைக் கப்பாலாய் அமர்ந்த சோதி

வீண்பயிலும் வேதமெல்லாந் தேடிக் காணு
 வெறும்பாழ தாகியே மேவி நின்றார்
சேண்பயிலும் செகசோதி மூலந் தன்னைத்
 தேடரிய பாதமென்றே தெளிந்து நோக்கே. 8

தெளிவரிய பாதமது அகார மாகிச்
 சிற்பரமுந் தற்பரமுந் தானே யாகி
அழிவரிய சோதியது தானே யாகி
 அடிநடுவு முடியாகி யமர்ந்து நின்று
மொழிவரிய முதலாகி மூலமாகி
 முச்சுடருந் தானாகி முடிந்த சோதி
சுழியினிலே முனையாகிக் கோப மாகிச்
 சொல்லரிய வெழுத்தென்றே தொகுத்துப் பாரீர். 9

தொகுப்பதுதாம் மந்திரங்கள் கருவி நூல்கள்
 சொல்லரிய தத்துவங்கள் தம்மை யெல்லாம்
வகுத்துடனே யிவற்றையெலாங் கண்டு நீங்கி
 வாகான உடலுயிரை வகையாற் கண்டு
பகுப்புடனே சேராமற் பாதந் தன்னைப்
 பரகதிக்கு வழியெனவே பற்றிக் கொண்டு
விகற்பமிலா மூலமதில் நின்ற சோதி
 மேலான பாதமென்றே மேவி நில்லே. 10

மேவியதோர் சற்குருவின் பாதந் தன்னை
 மெய்ஞ்ஞான மென்றதனை மேவிக் கொண்டு
ஆவியுடல் காயமெல்லா மறிந்து பார்த்தே
 அத்தனார் வடிவமென்றே அறிந்துகொண்டு

பாவனையு ளானவெல்லாம் விட்டு நீங்கிப்
பகலிரவு மற்றிடத்தே கருத்தை வைத்துச்
சிவனையுஞ் சிவந்தனையு மொன்றாய்த் தானே
திருமூலர் பாதமொன்றித் திடமாய்க் காணே. 11

## பிராணாயாமம்

ஐவர்க்கு நாயக னவ்வூர்த் தலைமகன்
உய்யக்கொண் டேறுங் குதிரைமற் றொன்றுண்டு
மெய்யர்க்குப் பற்றுக் கொடுக்குங் கொடாதுபோய்ப்
பொய்யரைத் துள்ளி விழுத்திடுந் தானே. 1

ஆரிய நல்லன் குதிரை யிரண்டுள
வீசிப் பிடிக்கும் விரகறி வாரில்லை
கூறிய நாதன் குருவி னருள்பெற்றால்
வாரிப் பிடிக்க வசப்படுந் தானே. 2

புள்ளினு மிக்க புரவியை மேற்கண்டாற்
கள்ளுண்ண வேண்டாந் தானே களிதருந்
துள்ளி நடப்பிக்குஞ் சோம்பு தவிர்ப்பிக்கும்
உள்ளது சொன்னோ முணர்வுடை யோருக்கே. 3

பிராணன் மனத்தொடும் பேரா தடங்கிப்
பிராண னிருக்கிற் பிறப்பிறப் பில்லை
பிராணன் மடைமாறி பேச்சறி வித்துப்
பிராண னடைபேறு பெற்றுண் டீரே. 4

ஏறுதல் பூரக மீரெட்டு வாமத்தால்
ஆறுதல் கும்பக மறுபத்து நாலதில்
ஊறுதல் முப்பத் திரண்டதி ரேசக
மாறுத லொன்றின்கண் வஞ்சக மாமே. 5

வளியினை வாங்கி வயத்தி லடக்கில்
பளிங்கொத்து காயம் பழுக்கினும் பிஞ்சாந்
தெளியக் குருவின் றிருவருள் பெற்றால்
வளியினும் வேட்டு வளியனு மாமே. 6

எங்கே யிருக்கினும் பூரி யிடத்திலே
அங்கே யதுசெய்ய வாக்கைக் கழிவில்லை
அங்கே பிடித்தது விட்டள வுஞ்செல்லச்
சங்கே குறிக்கத் தலைவனு மாமே. 7

* ஏற்றி யிறக்கி யிருகாலும் பூரிக்குங்
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாரில்லை
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாளர்க்குக்
கூற்றை யுதைக்குங் குறியது வாமே. 8

மேல்கீழ் நடுப்பக்க மிக்குறப் பூரித்துப்
பாலா மிரேசகத் தாலுட் பதிவித்து
மாலாகி யுந்தியுட் கும்பித்து வாங்கவே
ஆலால முண்டா னருள்பெற லாமே. 9

வாமத்தி லீரெட்டு மாத்திரை பூரித்தே
ஏமுற்ற முப்பத் திரண்டு மிரேசித்துக்
காமுற்ற பிங்கலைக் கண்ணாக விவ்விரண்
டோமத்தா லெட்டெட்டு கும்பிக்க வுண்மையே. 10

இட்டதவ் வீடிள காதிரே சித்துப்
புட்டி படத்தச நாடியும் பூரித்துக்
கொட்டிய பிராண னபானனுங் கும்பித்து
நட்ட மிருக்க நமனில்லை தானே. 11

* புறப்பட்டுப் புக்குத் திரிகின்ற வாயுவை
நெறிப்பட வுள்ளே நின்மல மாக்கில்

உறுப்புச் சிவக்கு முரோமங் கறுக்கும்
புறப்பட்டு போகான் புரிசடை யோனே. 12

கூட மெடுத்துக் குடிபுக்க மங்கையர்
ஓடுவர் மீளுவர் பன்னிரண் டங்குல
நீடுவ ரெண்விரற் கண்டிப்பர் நால்விரற்
கூடிக் கொளிற்கோல வஞ்செழுத் தாமே. 13

பன்னிரண் டானைக்குப் பகலிர வுள்ளது
பன்னிரண் டானையைப் பாக னறிகிலன்
பன்னிரண் டானையைப் பாக னறிந்தபின்
பன்னிரண் டானைக்குப் பகலிர வில்லையே. 14

## பிரத்தியாகாரம்

கண்டுகண் டுள்ளே கருத்துற வோங்கிடிற்
கொண்டுகொண் டுள்ளே குணம்பல காணலாம்
பண்டுகந் தெங்கும் பழமறை தேடியை
இன்றுகண் டிங்கே யிருக்கலு மாமே. 1

* நாபிக்குங் கீழே பன்னிரண் டங்குலந்
தாபிக்கு மந்திரந் தன்னை யறிகிலர்
தாபிக்கு மந்திரந் தன்னை யறிந்தபின்
கூவிக்கொண் டீசன் குடிபுகுந் தானே. 2

மூலத் திருவிரல் மேலுக்கு முன்னின்ற
பாலித்த யோனிக் கிருவிரற் கீழ்நின்ற
கோலித்த குண்டலி யுள்ளே செழுஞ்சுடர்
ஞாலத்து நாபிக்கு நால்விரற் கீழே. 3

* நாசிக் கதோமுகம் பன்னிரண் டங்குல
நீசித்தம் வைத்து நினையவும் வல்லையேன்

மாசித்தி மாயோகம் வந்து தலைப்பெய்துந்
தேகத்துக் கென்றுஞ் சிதைவில்லை யாகுமே. 4

சோதி யிரேகைச் சுடரொளி தோன்றிடிற்
கோதில் பரானந்த மென்றே குறிக்கொண்மின்
நேர்திகழ் கண்டத்தே நிலவொளி யெய்தினால்
ஓதுவ துன்னுட லுன்மத்த மாமே. 5

மூலத் துவாரத்தை முக்கார மிட்டிரு
மேலைத் துவாரத்தின் மேன்மனம் வைத்திரு
வேலொத்த கண்ணை வெளியில் விழித்திரு
காலத்தை வெல்லுங் கருத்தது தானே. 6

எருவிடும் வாச லிருவிரன் மேலே
கருவிடும் வாச லிருவிரற் கீழே
உருவிடு சோதியை யுள்கவல் லார்க்குக்
கருவிடுஞ் சோதி கலந்து நின்றானே. 7

ஒருக்கா லுபாதியை யொண்சோதி தன்னைப்
பிரித்துணர் வந்த வுபாதிப் பிரிவைக்
கரைத்துணர் வுன்னல் கரைதலுண் ணோக்கல்
பிரத்தியா காரப் பெருமைய தாமே. 8

புறப்பட்ட வாயுப் புகவிடா வண்ணந்
திறப்பட்ட நிற்சயஞ் சேர்ந்துட னின்றால்
உறப்பட்டு நின்றது வுள்ளமு மங்கே
புறப்பட்டுப் போகான் பெருந்தகை யானே. 9

குறிப்பினி னுள்ளே குவலயந் தோன்றும்
வெறுப்பிரு ணீங்கி விகிர்தனை நாடுஞ்
சிறப்புறு சிந்தையைச் சிக்கென் றுணரில்
அறிப்புறு காட்சி யமரரு மாமே. 10

## தாரணை

கோணு மனத்தைக் குறிக்கொண்டு கீழ்க்கட்டி
வீணுத்தண் டூடே வெளியுறத் தாணேக்கிக்
காணுக்கண் கேளாச் செவியென் றிருப்பார்க்கு
வாணு ளடைக்கும் வழியது வாமே. 1

மலையார் சிரத்திடை வானீ ரருவி
நிலையாரப் பாயு நெடுநாடி யூடுபோய்ச்
சிலையார் பொதுவிற் றிருநட மாடுந்
தொலையாத வானந்தச் சோதிகண் டேனே. 2

மேலை நிலத்தினுள் வேதகப் பெண்பிள்ளை
மூல நிலத்தி லெழுகின்ற மூர்த்தியை
யேல வெழுப்பி யிவளுடன் சந்திக்கப்
பாலனு மாவான் பார்நந்தி யாணையே. 3

கடைவா சலைக்கட்டிக் காலை யெழுப்பி
இடைவாச னேக்கி யினிது ளிருத்தி
மடைவாயிற் கொக்குபோல் வந்தித் திருப்பார்
உடையாம னூழி யிருக்கலு மாமே. 4

கலந்த வுயிருடன் கால மறியில்
கலந்தலை யாது காலி னெருக்கங்
கலந்த வுயிரது காலது கட்டிக்
கலந்த வுயிருடன் காலமு நிற்குமே. 5

வாய்திற வாதார் மனத்திலோர் மாடுண்டு
வாய்திறப் பாரே வளியிட்டுப் பாய்ச்சுவர்
வாய்திற வாதார் மதியிட்டு மூட்டுவர்
கோய்திற வாவிடிற் கோழையு மாமே. 6

வாழுலு மாம்பல காலு மனத்திடைப்
போழ்கின்ற வாயு புறம்படாப் பாய்ச்சுறில்
ஏழுசா லோக மிரண்டு பெருவாய்தல்
பாழி பெரியதோர் பள்ளி யறையிலே. 7

நிரம்பிய வீரைந்தி லேந்திவை போனல்
இரங்கி விழித்திரிந் தென்செய்வை பேதாய்
வரம்பினுட் கோலி வழிசெய்கு வார்க்குக்
குரங்கினைக் கோட்டைப் பொதியலு மாமே. 8

முன்னம் வந்தன ரெல்லா முடித்தனர்
பின்னை வந்தவர்க் கென்ன பிரமாண
முன்னுறு கோடி யுறுகதி பேசிடில்
என்ன மாய மிடிகரை நிற்குமே. 9

அரித்த வுடலையைம் பூதத்தில் வைத்துப்
பொருத்தவைம் பூதஞ்சித தாதியிற் போந்து
தெரித்த மனாதிசத் தாதியிற் செல்லத்
தரித்தது தாரணை தற்பரத் தோடே. 10

## தியானம்

வருமாதி யீரெட்டுள் வந்த தியானம்
பொருவாத புந்தி புலன்போக மேவல்
உருவாய சத்தி பரத்தியான முன்னுங்
குருவாய் சிவத்தியானம் யோகத்திற் கூறே. 1

கண்ணுக்கு மூக்குச் செவிஞானக் கூட்டத்துட்
பண்ணுக்கி நின்ற பழம்பொரு ளொன்றுண்டு
வண்ணுக்கி னுள்ளே யகண்ட வொளிகாட்டிப்
புண்ணுக்கி நம்மைப் பிழைப்பித்த வாறே. 2

ஒண்ணு நயனத்தி லுற்ற வொளிதன்னைக்
கண்ணாரப் பார்த்துக் கலந்தங் கிருந்திடல்
விண்ணாறு வந்து வெளிகண் டிடவோடிப்
பண்ணுமதின்றது பார்க்கலு மாமே. 3

ஒருபொழு துன்னு ருடலோ டுயிரை
ஒருபொழு துன்னு ருயிருட் சிவனை
ஒருபொழு துன்னார் சிவனுறை சிந்தையை
ஒருபொழு துன்னார் சந்திரப் பூவையே. 4

மனத்து விளக்கினை மாண்பட வேற்றிச்
சினத்து விளக்கினைச் செல்ல நெருக்கி
அனைத்து விளக்குந் திரியொக்கத் தூண்ட
மனத்து விளக்கது மாயா விளக்கே. 5

* எண்ணு யிரத்தாண்டு யோக மிருக்கினும்
கண்ணு ரமுதனைக் கண்டறி வாறில்லை
உண்ணாடி யுள்ளே யொளிபெற நோக்கிற்
கண்ணாடி போலே கலந்திருந் தானே. 6

* நாட்ட மிரண்டு நடுமூக்கில் வைத்திடில்
வாட்டமு மில்லை மனைக்கு மழிவில்லை
ஓட்டமு மில்லை யுணர்வில்லை தானில்லை
தேட்டமு மில்லை சிவனவ னாமே. 7

நயன மிரண்டு நாசிமேல் வைத்திட்
டுயர்விழா வாயுவை யுள்ளே யடக்கித்
துயரறு நாடியே தூங்கவல் லார்க்குப்
பயனிது காயப் பயமில்லை தானே. 8

மணிக்கடல் யானை வளர்குழன் மேக
முணிவண்டு தும்பி வீணைபேரி கையாழ்

தணிந்தெழு நாதங்க டாமிவை பத்தும்
பணிந்தவர்க் கல்லது பார்க்கவொண் ணாதே. 9

கடலொடு வேகக் களிறொடு மோசை
அடவொடு மவ்வினை யண்டாண் டத்துச்
சுடர்மன்னு வேணு சுரிசங்கி னோசை
திடமறி யோகிக்கல் லாற்றெரி யாதே. 10

ஈச னியல்பு மிமையவ ரீட்டமும்
பாச மிரங்கப் பரந்துயி ராய்நிற்கும்
ஓசை யதன்மணம் போல விடுவதோர்
ஓசையு மீச னுணரவல் லாருக்கே. 11

நாத முடிவிலே நல்லா ளிருப்பது
நாத முடிவிலே நல்யோக மிருப்பது
நாத முடிவிலே நாட்ட மிருப்பது
நாத முடிவிலே நஞ்சுண்ட கண்டனே. 12

உதிக்கின்ற வாறினு முள்ளங்கி யைந்துந்
துதிக்கின்ற தேசுடைத் தூங்கிரு ணீங்கி
அதிக்கின்ற வைவரு ணாத மொடுங்கக்
கதிக்கொன்றை யீசன் கழற்சேர லாமே. 13

பள்ளி யறையிற் பகலே யிருளில்லை
கொள்ளி யறையிற் கொளுந்தாமற் காக்கலாம்
ஒள்ளி தறியிலோ ரோசனை நீளிது
வெள்ளி யறையில் விடிவில்லை தானே. 14

கொண்ட விரதங் குறையாமற் றானென்றித்
தண்டுட னோடித் தலைப்பட்ட யோகிக்கு
மண்டல மூன்றினு மொக்க வளர்ந்தபின்
பிண்டமு மூழி பிறியா திருக்குமே. 15

* அவ்வவர் மண்டல மாம்பரி சொன்றுண்டு
அவ்வவர் மண்டலத் தவ்வவர் தேவராம்
அவ்வவர் மண்டல மவ்வவர்க் கேவரில்
அவ்வவர் மண்டல மாயமற் றோர்க்கே. 16

இளைக்கின்ற நெஞ்சத் திருட்டரை யுள்ளே
முளைக்கின்ற மண்டல மூன்றினு மொன்றித்
துளைப்பெரும் பாசத் துருவிடு மாகில்
இளைப்பின்றி மார்கழி யேற்றம தாமே. 17

முக்குண மூடற வாயுவை மூலத்தே
சிக்கென மூடித் திரித்துப் பிடித்திட்டுத்
தக்க வலமிட நாழிகை சாதிக்க
வைக்கு முயிர்நிலை வானவர் கோனே. 18

நடலித்த நாபிக்கு நால்விரன் மேலே
மடலித்த வாணிக் கிருவிர லுள்ளே
கடலித் திருந்து கருதவல் லார்கள்
சடலத் தலைவனைத் தாமறிந் தாரே. 19

அறிவாய சத்தென்னு மாறு றகன்று
செறிவான மாயை சிதைத்தரு ளாலே
பிறியாத பேரரு ளாயிடும் பெற்றி
நெறியான வன்பர் நிலையறிந் தாரே. 20

## சமாதி

சமாதி யமாதியிற் றான்சொல்லக் கேட்கிற்
சமாதி யமாதியிற் றானெட்டுஞ் சித்தி
சமாதி யமாதியிற் றங்கினோர்க் கன்றே
சமாதி யமாதி தலைப்படுந் தானே. 1

விந்துவு நாதமு மேருவி லோங்கிடிற்
சந்தியி லான சமாதியிற் கூடிடும்
அந்த மிலாத வறிவி னரும்பொருள்
சுந்தரச் சோதியுந் தோன்றிடும் தானே. 2

மன்மன மெங்குண்டு வாயுவு மங்குண்டு
மன்மன மெங்கில்லை வாயுவு மங்கில்லை
மன்மனத் துள்ளே மகிழ்ந்திருப் பார்க்கு
மன்மனத் துள்ளே மனேலய மாமே. 3

விண்டலர் கூபமும் விஞ்சத் தடவியுங்
கண்டுணா வாகக் கருதி யிருப்பார்கள்
சென்று வெளியிற் செழுங்கிரி யத்திடை
கொண்டு குதிரைக் குசைச்செறுத் தானே. 4

மூல நாடிமுக் கட்டல குச்சியு
ஞு வாச னடுவு ளிருப்பர்காள்
மேலை வாசல் வெளியுறக் கண்டபின்
காலன் வார்த்தை கனவிலு மில்லையே. 5

மண்டல மைந்து வரைகளு மீராறு
கொண்டிட நிற்குங் குடிகளு மாறெண்மர்
கண்டிட நிற்குங் கருத்து நடுவாக
உண்டு நிலாவிடு மோடும் பதத்தையே. 6

பூட்டொத்து மெய்யிற் பொறிப்பட்ட வாயுவைத்
தேட்டற்ற வந்நிலஞ் சேரும் படிவைத்து
நாட்டத்தை மீட்டு நயனத் திருப்பார்க்குத்
தோட்டத்து மாம்பழந் தூங்கலு மாமே. 7

உருவறி யும்பரி சொன்றுண்டு வானேர்
கருவரை பற்றிக் கடைந்தமு துண்டார்

அருவரை யேறி யமுதுண்ண மாட்டார்
திருவரை யாமனந் தீர்ந்தற்ற வாறே. 8

நம்பனை யாதியை நான்மறை யோதியைச்
செம்பொனி னுள்ளே திகழ்கின்ற சோதியை
யன்பினை யாக்கி யருத்தி யொடுக்கிப்போய்க்
கொம்பேறிக் கும்பிட்டுக் கூட்டமிட் டாரே. 9

மூலத்து மேலது முச்சதி ரத்தது
காலத் திசையிற் கலக்கின்ற சந்தினில்
மேலைப் பிறையினுள் நெற்றிநேர் நின்ற
கோலத்தின் கோலங்கள் வெவ்வேறு கொண்டதே. 10

* கற்பனை யற்றுக் கனல்வழி யேசென்று
சிற்பனை யெல்லாஞ் சிருட்டித்த பேரொளிப்
பொற்பினை நாடிப் புணர்மதி யோடுற்று
தற்பர மாகத் தகுந்தண் சமாதியே. 11

தலைப்பட் டிருந்திடத் தத்துவங் கூடும்
வலைப்பட் டிருந்திடு மாதுநல் லாளுங்
குலைப்பட் டிருந்திடுங் கோப மகலுந்
துலைப்பட் டிருந்திடுந் தூங்கவல் லார்க்கே. 12

சோதித் தனிச்சுட ராய்நின்ற தேவனும்
ஆதியு முண்ணின்ற சீவனு மாகுமால்
ஆதிப் பிரமன் பெருங்கடல் வண்ணனும்
ஆதி யடிபணிந் தன்புறு வாரே. 13

சமாதி செய்வார்க்குத் தகும்பல யோகஞ்
சமாதிகள் வேண்டா மிறையுட னேகிற்
சமாதி தானில்லைத் தானவ னாகிற்
சமாதி லெட்டெட்டுச் சித்தியு மெய்துமே. 14

# கருவூரார் பூஜா விதி

—::—

காப்பு

## எண்சீர் விருத்தம்

தெளிவுதனில் தெளிவுதரு மருளுங் காணும் ;
சௌணத்திலே சிவமயமுஞ் சேரத் தோணும் ;
வழியதனில் நல்லவழி ஞானங் கூடும் ;
மகத்தான வேதாந்தஞ் சித்தி காட்டும் ;
ஒளிவுதனி லொளிவுதரு முறுதி சொல்வார்
உற்பனத்தி லுற்பனமா யுறுதி தோணும் ;
வெளியதனில் வெளியாகி நாதத் துள்ளே
விளங்கிநின்ற வாலைப்பெண் ணுதி காப்பே !

## நூல்

ஆதியந்தம் வாலையவ ளிருந்த வீடே
ஆச்சரியம மெத்தமெத்த அதுதான் பாரு ;
சோதியந்த நடுவீடு பீட மாகிச்
சொகுசுபெற வீற்றிருந்தாள் துரைப்பெண் ணுத்தாள் ;
வீதியந்த ஆறுதெரு அமர்ந்த வீதி
விளையாடி நின்றதிரு மாளி கண்டாய்
பாதிமதி சூடியே யிருந்த சாமி
பத்துவய தாகுமிந்த வாமி தானே. 1

வாமியிவள் மர்மம்வைத்துப் பூசை பண்ண
மதியுனக்கு வேணுமடா அதிக மாக ;
காமிவெகு சாமிசிவ காமி ரூபி
காணரிது சிறுபிள்ளை கன்னி கன்னி
ஆமிவளை யறிந்தவர்கள் சித்தர் சித்தர்
அறிந்தாலு மனமடக்க மறிய வேணும் ;
நாமிவளைப் பூசைபண்ண நினைத்த வாறு
நாட்டிலே சொல்லவென்றால் நகைப்பார் காணே. 2

காணப்பா இவளுடைய கற்பு மெத்த
கண்டவர்க்குப் பெண்ணரசு நானே யென்பாள் ;
ஊனப்பா வமிர்தமிவ ளூட்டி வைப்பாள் ;
உள்வீட்டுக் குள்ளிருந்து மேலே யேறப்
பூணப்பா மனமுறைந்து வாவா வென்பாள் :
புத்திரனே யென்மகனே யென்று சொல்லி
வேணப்பா வேணதெல்லாந் தருவே னென்பாள் ;
வேதாந்த சூட்சமெல்லாம் விளங்குந் தானே. 3

தானென்ற வாலையிவள் ரூபங் காணச்
சமர்த்துண்டோ ஆண்பிள்ளை தானு முண்டோ ?
பானென்ற வாமத்துக் குள்ளே யப்பா
பராபரையாள் பலகோடி விதமு மாடித்
தேனென்ற மொழிச்சியிவள் சித்தர்க் கெல்லாஞ்
சிறுபிள்ளை பத்துவய துள்ள தேவி ;
ஊனென்ற வுடலுக்குள் நடுவு மாகி
உத்தமியாள் வீற்றிருந்த வுண்மை தானே. 4

உண்மையிவள் நாணமில்லா திருந்த வீடே
ஊருக்குள் நடுவீடே உற்றுப் பாரு ;
செம்மையாய்க் கண்டவர்க ளுண்டோ அப்பா !
செகசால வித்தையிவ ளாடும் வித்தை ;
உண்மையடா பஞ்சவண்ண மாகி நின்ற
உலகதனி லலைந்தவர்கள் கோடா கோடி
நின்மலமாய்க் கண்டவர்கள் சொல்லா ரப்பா !
நேசமுட னெனக்குரைத்த நிசங்கண் டேனே. 5

கண்டதொரு பூரணத்தின் மகிமை கேளு ;
கால்மேலுந் தலைகீழும் நடுவு மாகி
அண்டரொடு முனிவர்களுங் கண்டு போற்ற
ஆதவனு மம்புலியு மதிலே நின்று

தொண்டுபண்ணு மவர்களிலே நாலு பேர்கள்
சுகம்பெறலா மென்றுசொன்ன வாசல் நாலு
கொண்டவர்கள் கண்டுவந்த தொண்ணூற் ருறு
கொள்கையெனக் காத்திருந்த குறிப்பைப் பாரே. 6

பார்த்தவர்கள் செய்தொழிலும் மனமும் வேருய்ப்
பலநூலைப் படித்துப்படு குழியில் வீழ்வார் ;
ஏற்றபடி மனம்போனுற் புத்தி போச்சே ;
ஏழைமதி போகாதே ; என்தாய் பாதம்
போற்றுதற்கே ஐவரையு மனத்தி லொன்ருய்ப்
புத்திசித்த மோர்நிலையில் நிறுத்தி வாசம்
பூத்தமல ரெடுத்திருப் பாதம் போற்றப்
பொறியைந்து கருவிகர ணுதி போமே. 7

போச்சுதடா மனமாய்கை வீறு போச்சு ;
பொறியைந்து கருவிகர ணுதி போச்சு ;
ஏச்சுதடா வென்றுமன மிறக்க லாச்சு ;
எனக்கொருவ ரிணையில்லை யென்ற பேச்சு
வாய்ச்சுதடா மனமடங்க வங்கென் ருேர்சொல் ;
வாய்பேசா மவுனத்தை யதிலே சேர்க்கக்
காய்ச்சுதடா பூத்தமலர் கருத்தை யூன்று
கனியாகு மக்கனியைக் கண்டு கொள்ளே. 8

கொள்ளுதற்கிங் கின்னமொரு குறிப்பைக் கேளு ;
கோடியிடி மின்முழங்குங் கண்ணை மூடு ;
விள்ளுதற்கு மனமடங்காப் பூதங் காணும் ;
விள்ளாதே யுள்ளபடி சிங்கென் ருேர்சொல்
விள்ளவுமே யுபாயமதால் நடுவே நில்லு ;
வேகமெல்லா மொடுங்குமடா சத்தம் போச்சு ;
கள்ளரைப்போல் மயங்காதே மவுனத் தூன்று ;
கண்ணிணையுந் திறக்காதே கருதிப் பாரே. 9

பாரேது புனலேது அனலு மேது?
　　பாங்கான காலேது? வெளியு மாகும்
நாரேது பூவேது வாச மேது?
　　நல்லபுட்பம் தானேது பூசை யேது?
ஊரேது பேரேது சினமு மேது?
　　ஓகோகோ அதிசயந்தா னென்ன சொல்வேன்!
ஆறேது குளமேது கோயி லேது?
　　ஆதிவைத்தை யறிவதனு லறிய லாமே. 10

ஆமெனவும் ஊமெனவும் மிரண்டுங் கூட்டி
　　அப்பனே ஓமென்ற மூன்று மொன்றாய்
நாமெனவுந் தாமெனவு மொன்றே யாகும்;
　　நல்லவர்க ளறிவார்கள்; காமி காணுன்;
வாமம்வைத்துப் பூசைபண்ண இந்த மார்க்கம்
　　வந்தவர்க்குச் சத்திசிறு பிள்ளை வாலை
சோமநதி யமுதமுண்ண வாவா வென்பாள்;
　　சுகமுனக்குப் பரமசுக மருள்செய் வாளே. 11

செய்குவாய் பூசையது செய்யும் போது
　　செய்குறிகள் தவருமல் நடக்க வேண்டும்;
உய்குவாய் பெண்ணரவம் கடியா வண்ணம்;
　　ஊமையென்ற நடுத்தீயை யதிகங் கொண்டால்
பைகுவாய் அரவுவிடம் பொசுங்கிப் போகும்;
　　பங்கமுனக் கில்லையடா அங்க மீதில்
ஐகுவா யுள்ளடக்கிப் பேச்சை விட்டே
　　அழைத்திடவே யஞ்சுமது கொஞ்சுங் காணே. 12

காணுத காட்சியெல்லாங் கண்ணிற் காணும்
　　கலங்காதே மெய்ம்மயக்கம் மெத்த வாகும்;
பூணுத பணிபூண்டு சிறுபெண் ணுகப்
　　போதமெனும் பொருள்பறிக்க வருவாள் கண்டாய்;

வாணாளை மடக்கியிவள் ரூபங் கண்டு
மயங்காதே மவுனத்தில் நில்லு நில்லு ;
கோணாத முக்கோணக் குறியைப் பாரு ;
கூசாதே கண்கூசுங் கூசுங் காணே. 13

கூச்சமற்றுப் பார்க்கையிலே இருள்போல் மூடும் ;
கொள்ளிகொண்டு கொளுத்தியதை வெளிச்சம் போடு ;
வாய்ச்சமர்த்துப் பேசாதே மவுனத் தூன்று ;
வாவாவென் றேநீயும் வருந்திக் கூவச்
சூட்சமது விருந்தவிடஞ் சொல்ல லாமோ ?
சொல்லுதற்கு வாய்விட்டுச் சொல்ல லாமோ ?
தாய்ச்சமர்த்துப் பாராதே தாயைப் போற்று ;
சற்குருபோ லுற்பனத்தைத் தாய்சொல் வாளே. 14

சொல்வதற்கிங் கிவளையலால் சுகம்வே றுண்டோ ?
சூட்சமெல்லா மிவளைவிடச் சூட்ச முண்டோ ?
நல்லவர்க்கு நடுவில்விளை யாடும் வல்லி
நாதவிந் தோங்கார நிலையுங் காட்டி
வல்லவர்க்கும் வல்லவளும் நானே யென்பாள் ;
வரமவர்க்கு வேணதெல்லாம் வழங்கும் ரூபி ;
புல்லருக்கிங் காயுதமும் புல்லே யாகும் ;
புத்திகெட்ட லோபிகட்குப் புகலொணாதே. 15

புகலுவார் வேதமெல்லாம் வந்ததென்று
பொய்பேசிச் சாத்திரங்கள் மிகவுங் கற்றே
அகலுவார் பெண்ணாசை விட்டோ மென்றே ;
அறிவுகெட்டே ஊர்தோறுஞ் சுற்றிச் சுற்றிச்
சகலமுமே வந்தவர்போல் வேடம் பூண்டு
சடைமுடியுங் காசாயந் தன்னைச் சாற்றி
இகலுமன மடங்காமல் நினைவு வேறாய்
எண்ணமெலாம் பெண்ணாசை பூசை தானே. 16

பூசையது செய்வமென்று கூட்டங் கூடிப்
புத்திகெட்டுக் கைம்முறையின் போக்கை விட்டுப்
பாசையது மிகபேசிப் பாட்டும் பாடிப்
படிப்பார்கள் மந்திரத்தின் பயனைக் காணார் ;
ஆசையிலே பெண்ணாசை மயக்கத் தாலே
அங்கிருந்த வாமத்தைப் பங்கு போட்டுப்
பேசையிலே மனம்வேறாய் நினைப்பான் பாவி
புரட்டுருட்டாய் நினைவுதப்பிப் பேசு வானே. 17

பேச்சென்றால் வாய்ச்சமர்த்தாய்ப் பேசிப் பேசிப்
பின்னுமுன்னும் பாராமல் மதமே மீறி
நீச்சென்றும் நினைப்பென்றும் ஏதுங் காணார்
நிர்மூட ரனேகவித சாலங் கற்றே
ஆச்சென்று லதனாலே வருவ தேது ?
ஆத்தாளைப் பூசித்தோ னவனே சித்தன் ;
மூச்சென்ன செய்யுமடா நரகிற் றள்ளும் ;
மோசமது போகாதே முக்கால் பாரே. 18

முக்காலும் பொருந்துமென்று சொன்ன போதே
மோசமில்லை சூட்சமது மொழிந்து கூடும் ;
தக்காமற் போனபேர் ரனேக ருண்டு ;
சமர்த்தறிந்தா லவன்வாமி யவனே சித்தன் ;
எக்காலும் நடந்திருநீ காலுமுன்னி
இருந்தடங்கி யுள்ளிருந்து வெளியிற் போன
அக்காலக் காணும லலைந்தே யோடி
அழிந்துகெட்டுப் போனவர்கள் அறிந்து கொள்ளே. 19

அறிந்தகுறி யடையாளங் காண வேண்டும் ;
அக்குறியிற் சொக்கிமனந் தேற வேண்டும் ;
அறிந்தவன்போ லடங்கிமன மிறக்க வேண்டும் ;
அலகையது வழிபாதை அறிய வேண்டும் ;

மறைந்தவரை நிறைந்தவரை நீதான் காண
மயக்கத்தைக் கண்டுனையு மதிக்க வேண்டும் ;
நிறைந்தமதி குறைந்தவகை அறிய வேண்டும் ;
நிச்சயத்தை யறிவார்க்கு முத்தி தானே. 20

முத்திதரு மென்றுமனம் புத்தி யற்று
மோசமது போகாதே பாசங் கையில்
சித்தமதில் சந்திரனை நிறுத்திக் கொண்டு
செந்தீயி லுன்தீயை நடுவில் வாங்கிச்
சுத்தியுடன் ஆதியந்த மனத்தில் வைத்துச்
சொல்லாத மந்திரத்தின் தீயை மூட்டி
நித்யமல ரர்ச்சனைசெய் பாதம் போற்றி
நீயுமதி மதியுமதி லதிக மாமே. 21

மதிபெருகுங் கதிபெருகும் வாதம் வாதம்
வருந்தாதே யந்தமுறை யாகா தப்பா !
நிதிபெருகு மிவள்குறியே வாத மாகும் ;
நிர்மூட ரறியாமல் வகாரம் பேசி
நதிகள்தனை யறியாமல் சலத்தில் மூழ்கி
நானேநா னென்றுவாய் மதங்கள் பேசி
உரியபொரு ளுள்ளதெல்லாஞ் சுட்டுச் சுட்டே
உட்பொருளைப் பாராம லழிந்திட் டாரே ! 22

இட்டகுறி நாதவிந்து ரூபங் காண
இயலறியாச் சண்டாளர் சுட்டு மாய்வார் ;
விட்டகுறை வந்ததென்றால் தானே யெய்தும் ;
விதியில்லார்க் கெத்தனைதான் வருந்தினாலும்
பட்டுமன மாய்தலல்லால் வேறொன் றில்லை ;
பத்தியிலார்க் குரைத்தமனம் பாழ்போக் காதே ;
இட்டமதாய்ப் பாணம்வைத்துத் தேவி பூசை
சீர்பெற்றார் பதினெட்டுச் சித்தர் தாமே. 23

எட்டிரண்டு மொன்றுமது வாலை யென்பார் ;
இதுதானே பரிதிமதி சுழுனை யென்பார் ;
ஒட்டிமுறிந் தெழுந்ததுமுக் கோண மென்பார் ;
உதித்தெழுந்த மூன்றெழுத்தை யறியா ரையோ !
கொட்டுமொரு தேளுருவாய் நிற்கும் பாரு ;
கூட்டமிட்டுப் பாராதே குறிகள் தோன்றும் ;
சுட்டசுடு காடுமது வெளியு மாகும் ;
சொல்லுதற்கு வாய்விளங்காச் சூட்சந் தானே. 24

சூட்சமிவள் வாசமது நிலைத்த வீடு ;
சொல்லுதற்கே எங்குமாய் நிறைந்த வீடு ;
தேசமதில் போய்விளங்கு மிந்த வீடு :
சித்தாந்த சித்தரவர் தேடு வீடு ;
ஓசைமணிப் பூரமதி லுதிக்கும் வீடு ;
ஓகோகோ அதிசயங்க ளுள்ள வீடு;
ஆசுகவி மதுரமது பொழியும் வீடு ;
அவனருளுங் கூடிவிளை யாடும் வீடே. 25

வீடுமது தலைவாசல் அதுமேல் வாசல் ;
வெளியான சுழிக்கதவு அடைக்கும் வாசல் ;
தேடுகிற மூவருமே வணங்கும் வாசல் ;
திறமான பன்னிருவர் காக்கும் வாசல் ;
ஆடுகிற புலியாகி நின்ற வாசல் ;
அரகர சிவசிவா வாசி வாசல் ;
கூடுகிற முக்கோணப் பரங்க ளாகிக்
குறுகுமதி பெருகுமதி கூறுண் ணுதே. 26

ஒண்ணுகி இரண்டாகி விளைவு மாகி
உத்தமியா ளுட்கருத்தை யறியப் போமோ ?
தின்னுத விடக்கெடுத்துத் தின்னச் சொன்னுள் ;
செத்தசவம் போலிருந்து செபிக்கச் சொன்னுள் ;

பண்ணுத பணக்கோடிப் பண்ணி வைத்தாள் ;
பார்த்திருந்து கழுத்தறுக்கப் பார்த்தாள் பாவி !
எண்ணுது மெண்ணிமனம் ஏங்கி நாளும்
எனக்கபய மேதெனவே யெழுந்திட் டேனே. 27

எழுந்திட்ட திவள்பார்த்துத் தொடர்ந்து கூடி
என்னையுமே யிழுத்துமடி பிடித்துக் கொண்டு
கொழுந்துவிட்டு வளர்ந்தெரியு மனலை மூட்டிக்
குடிகேடி சத்துருப்போல் கூச்ச லிட்டாள் ;
அழுதேனே முந்தியினி யந்த வூரில்
அரகரா துணையெனக்கே யாரு மில்லை ;
எழுந்திட்டா ரெல்லோரு மோடிப் போனர் ;
என்னசெய்வேன் தனித்திருந்தே ஏங்கி னேனே ! 28

ஏங்கினேன் ஈடழிந்தேன் வீடும் அற்றேன் ;
என்னைத்தான் கண்டவர்கள் சீசீ யென்னத்
தூங்கினேன் காலறிந்து மடக்க மாட்டேன் ;
துணையெனக்கு யாருமில்லை சூழ்ச்சி யாக
வாங்கினேன் காலறிந்து மடக்க வேண்டும் ;
வகையான வெனக்கொருத்தி யுறுதி சொன்னள் ;
தேங்கினேன் முன்னுமவள் பின்னுமாகத்
திடமெனக்குச் சொன்னதிந்தத் தெளிவு தானே. 29

தெளிவதற்குச் சூட்சமிது தெளிவாய்ப் பாரு ;
சிவனிருந்து விளையாடுந் தெருவைப் பாரு ;
மொழிவதற்கிந் நூலைவிட வேறென் றில்லை ;
முன்னாதி யந்தமொடு நடுவுஞ் சொன்னேம் ;
சுழியதற்குள் சுழியிருந்த சூட்சம் சொன்னேம் ;
சொல்லாத மவுனமுதற் கருவுஞ் சொன்னேம் ;
ஒளிபிறக்கு முறுதியிந்த வுறுதி சொன்னேம் ;
உற்பனமாய்ப் பார்த்தவர்கள் சித்தர் தாமே. 30

பாலானந்த சுவாமிகள் அருளிய

# ஞானக்கும்மி

—::—

## காப்பு

சீர்மேவு ஞான வடிவான-பர
தேசிகன் சற்குரு தன்னருளாற்
பார்மீதில் ஞானக்கும் மிபாடச்-சிவ
பாலன் கணபதி காப்பாமே. 1

அம்பிகை வாலை பதம்போற்றி-அருள்
ஆனந்தக் கும்மித் தமிழ்பாடத்
தும்பி முகனுக் கிளையவ னுஞ்சிவ
சுப்பிர மண்யனுங் காப்பாமே 2

நாலாம் வேதமு மோரா றும்-வெகு
நாநா பேதமாய் நின்றானை
மேலாய்ப் போற்றிக்கும் மிபாடச்-செந்தில்
வேலவன் தன்பதங் காப்பாமே. 3

பாரி லுயர்மது ராபுரியில்-வாலை
சாமிசொல் லுங்கும்மிப் பாடலுக்கு
மேரு வதனடி மூலமுக் கோண
விநாயகன் தன்பதங் காப்பாமே. 4

ஆதியும் அந்தமு மொன்றாகி வளர்
அண்டபிண் டம்முமி ரண்டாகிச்
சாதி பலபல வேறா கிநின்ற
தத்துவங் கேளடி ஞானப்பெண்ணே! 5

தேகமா னதோர்ம லபாண்டம்-அதிற்
சிற்பணம் வந்திடு முற்பணத்தை
யோக மெனுந்தமிழ்ப் பாடலுக்கு-மனம்
உவந்து கேளடி ஞானப்பெண்ணே! 6

ஏகப் பெருவெளி பட்டணமாம்-அதில்
எவனே சித்த னொருவனுண்டாம்-அந்த
வாச னிலேபேசா வாயுமில்லே-அந்த
மாப்பிள்ளை பெண்ணென்று ஞானப்பெண்ணே! 7

சாட்சி யெனும்பிர மன்பிள்ளைக் குழலச்
சத்தியென் றவொரு பெண்ணுச்சு ;
சூட்சும காரண மிரண்டினுக் குமிலே
தூலநா மென்கிருள் ஞானப்பெண்ணே ! 8

ஊமையன் என்றே அறிந்துகொண் டாளந்த
ஊமைபேச் செல்லாமே நாமென்கிருள் ;
சீமையை ஆளத் துசங்கட்டி ளைந்தச்
சீமாட்டி தானடி ஞானப்பெண்ணே ! 9

பெண்ணர சானதி ரத்தின மாமதைப்
பெண்ணென்று சொல்லவுங் கேள்வியுண்டோ ?
மண்ணையும் விண்ணையுங் கூட்டிப் பயிர்செய்த
மார்க்கத்தை கேளடி ஞானப்பெண்ணே ! 10

பட்டணங் கட்டி மகரா சிதுரை
பாங்குடன் செய்த அதிகாரச்
சட்டமுஞ் சொல்லத் தொலேயா தேவிதைச்
சற்றே கேளடி ஞானப்பெண்ணே ! 11

அஞ்சூர் அஞ்சூர் வகுப்பாச் சாமதில்
அஞ்சூர் அஞ்சு பிரிவாச்சாம் ;
அஞ்சூ ருக்கொரு வித்தாச் சாமதற்
கான குளமுண்டு ஞானப்பெண்ணே ! 12

ஊரை யடுத்து மலேயுமுண்டாமதற்
குள்ளா யிருந்த நிலேக்காரர்
பேரை யுரைக்க இனிக்கே ளுமவர்
பெருமைதா னென்னடி ஞானப்பெண்ணே ! 13

தலைமன் னரிலி ருப்பவ ராமந்தச்
சட்டையப் பிள்ளையும் செட்டையராம் ;
நிலமு மான்யமு மென்னவென் றுளந்த
நிசந்தெ ரியுமோ ஞானப்பெண்ணே ! 14

கும்பகோ ணத்திலே அப்புப்பிள் ளையவர்
கூட்டமற் றுல்வெகு வாட்டமென் று
செம்பாதிப் பங்குதான் கேட்டுவந் தால்நியாயந்
தெளிவ தெப்படி ஞானப்பெண்ணே ! 15

மூலக் குடிவன்னித் தேவரை வரவர்
மூர்க்கமுந் தீர்க்கவு மார்க்கமுண்டோ ?
நாலு கரைப்பங்கு நாமென்கி றுரிந்த
ஞாயந் தெரியுமோ ஞானப்பெண்ணே ! 16

காத்தவ ராயக் கவுண்டனுக் குத்திசைக்
காவலும் மற்ற விசாரணையும்
பார்த்து வருவது நாமென்கி றுரிந்தப்
படிநி லைக்குமோ ஞானப்பெண்ணே ! 17

ஆகாய மான பரஞ்சோ தியவர்
அஞ்சுக் கரைப்பங்கும் தனக்குள்ளே
சேகர மாமென்றுஞ் சொல்லுகி றுரிந்தச்
சேதியைக் கேளடி ஞானப்பெண்ணே ! 18

அம்பலக் காரரும் மூன்றுபே ராம்பின்னும்
அத்தக னுட்டுக் கணக்கனென்றும் ;
வம்புசெய் தாலந்த மூன்னு ளனுப்படி
வகைதெ ரியுமோ ஞானப்பெண்ணே ! 19

ஒன்பது கூத்தரும் பங்காளி எந்த
ஊருக்கு ஞர்களும் அப்படியாம் ;
ஐம்பது சேருவைக் காரருக் குமவன்
அண்ண னொருவனும் ஞானப்பெண்ணே ! 20

கோயிற் குருக்க ளொருபார்ப் பான்தெப்பக்
குளத்தின் மேலே யவன்வீடு ;
தாவிக்கொண் டுதொடை தட்டுகி றுனிலஞ்
சாருமோ கேளடி ஞானப்பெண்ணே ! 21

செட்டி யொருவனும் பங்கா ளி அதிற்
சேர்ந்தவ னுக மிகவோங்கிக்
கட்டி வராகனைக் கொண்டுவந் தால்காணி
யாட்சி செல்லுமோ ஞானப்பெண்ணே ! 22

காரியக் காரரோ அஞ்சுபே ராமவர்
காரியம் பார்க்கவீ ரஞ்சுபோம்;
மாரீசக் காரர் சமாதிகண் மூன்றுபேர்
வார்த்தையைக் கேளடி ஞானப்பெண்ணே ! 23

ஊழியக் காரர் அனேகருண் டாமவர்க்
கும்பளஞ் சம்பளம் நிரம்பவுண்டாம் ;
பாளையங் கோட்டைக்குச் சாரிவைத் தாலிவர்
பதுங்கு வாரடி ஞானப்பெண்ணே ! 24

பாழூ ருக்கொரு மேல்மணி யாமவன்
பார்த்தாற் சின்னப் பயல்காணும்
வேளூ ரானவரைப் பங்குத் தனமுதல்
விற்றுக் கொடுக்கிறுன் ஞானப்பெண்ணே ! 25

ஆறா று குடியு முண்டா கும்மதில்
அந்யக் குடிமுப்பத் தைந்துமுண்டாம் ;
ஓரா று பத்துக் குடிதனி லேயஃது
ஓட்டுக் குடியடி ஞானப்பெண்ணே ! 26

இத்தனை பேரு மிருந்தா லும்மதில்
இரண்டே பேர்கள் சமுசாரி ;
அத்தனை பேரையுந் தள்ளிவைத் தாற்பயிர்
ஆரிடு வாரடி ஞானப்பெண்ணே ! 27

ஒற்றோர் ஒற்றை எருதா கும்மதில்
    ஒன்று பரம்புமுச் சாலடிக்கும் ;
கற்றுடன் காரணங் கண்டா யோஞானக்
    கண்கொண்டு பாரடி ஞானப்பெண்ணே ! 28

இரண்டு கரைக்குடி மானிய மாமதில்
    இட்ட விதையொட்டி ரட்டியுண்டாம் ;
பண்டு பழகின மேன்புள்ளிக் காரனும்
    பார்த்துப் போயினன் ஞானப்பெண்ணே ! 29

புள்ளிக் குறைச்சலும் வாரா மல்முன்னே
    போட்ட பலனுங்கை யாடாமற்
கொள்ளை யிடச்சொல்லி ஓலவந் தாலிது
    கொடுமை சொல்லடி ஞானப்பெண்ணே ! 30

வந்த விதியென்றி ருந்தா லும்வசக்
    கட்டு நிலுவையுங் கேட்கிறனே
இந்த மகிமை யவன்ற னேவிதற்
    கென்ன சுகமடி ஞானப்பெண்ணே ! 31

தரிசுக் கிடக்கிற பெட்டியி லேயேறித்
    தண்ணீர் பாய்ச்சவுஞ் சொல்லுகிறன் ;
வரிகொ டுக்கிற தில்லையென் றூற்பூசை
    மாட்டுகி றனடி ஞானப்பெண்ணே ! 32

ஊரிற்குடியதி ருக்கவொட் டானிருந்
    தூழியஞ் செய்யவும் வேலையிட்டான் ;
தீரமில் லையென்று சொன்ன லுமவன்
    தெண்டம் பிடிக்கிறன் ஞானப்பெண்ணே ! 33

அந்த இருபத்தோ ராயிரத் திருநூற்
    றுக்கல நெல்லுமே கண்டுமுதல்
வந்ததுண் டோவதில் மூன்றத் தொருபங்கு
    வாரம் பிடித்தாண்டி ஞானப்பெண்ணே ! 34

மிச்ச மிருந்தநெல் லுத்தொகை யில்வாரம்
விண்ணுறு நோய்கொண்ட பேயனுடன்
அச்சுதன் சேயனுந் துங்கக்கோ னுமாய்
அழித்துப்போட் டாரடி ஞானப்பெண்ணே! 35

நிலம்பி ளைந்ததுங் காணீ ரோவதிற்
செலவ ழிந்ததும் பாரீரோ?
அலமந் துதிரி யாம லேயருள்
ஆனந்தஞ் சேரடி ஞானப்பெண்ணே! 36

எண்சா ணீள மொருவீ டாமதில்
எட்டொரு பீற்றல் மலக்கூடாம்;
பஞ்சாயக் காரரீ ரைந்துபே ருந்தெய்வப்
பதியி தென்கிறுர் ஞானப்பெண்ணே! 37

தேக மென்னுஞ் சிவாலய மாமதிற்
சென்னி சிறுவாயிற் கோபுரமாம்;
காக மான விரண்டு கரக்கோடுங்
கையாங் கேளடி ஞானப்பெண்ணே! 38

உண்ணுக் கென்ற கொடிமர மாமதிற்
கோபுர சந்திர புட்கரணி
அண்ணுக் கென்ற வலப்புறத் திற்கண்ட
தக்கினி தீர்த்தமாம் ஞானப்பெண்ணே! 39

நாற்பத்து முக்கோண மண்டப மாமதன்
நடுவி ருக்குதாஞ் சிங்காரம்;
பார்ப்பது சக்கரக் கோட்டையி லேயிந்தப்
படியி ருக்குதாம் ஞானப்பெண்ணே! 40

பீட மிருப்பது மையத்தி லேபலி
பீட மிருப்பதுங் குய்யத்திலே;
மாட மிருந்த சிவாலயத் தின்மணி
விளக்கி ருக்குது ஞானப்பெண்ணே! 41

இப்படி யான திருக்கோ விலதற்
கெப்படி வாயி லிருக்காதோ
அப்படி யென் று தெரியா மற்றெரிந்
தலேகி றாடி ஞானப் பெண்ணே ! 42

பூட்டைத் திறப்பதுங் கையா லேமனப்
பூட்டைத் திறப்பது மெய்யாலே ;
வீட்டைத் திறக்க முடியா மல்விட்ட
விதியி தென்கிறுர் ஞானப்பெண்ணே ! 43

வாசலி லேயொரு மேல்வா சலந்த
வாசலி லேசிறு வாசலுண்டு ;
நேசமு டன்றிரு வாசலிற் பூட்டு
நெருக்கம் பாரடி ஞானப்பெண்ணே ! 44

அட்சர மாமௌ னட்சர மாவது
ஆனல் நல்ல திறவுகோலாம் ;
உச்சித மாகத் திறந்தா லேயந்த
உச்சி வழிகா ணும் ஞானப்பெண்ணே ! 45

கண்ணு லேமனக் கண்ணு லேயதைக்
கண்டா லேவழி யுண்டாகும் ;
பெண்ணுசை தன்னே யடுக்கா மல்வழி
பேணிப் பாரடி ஞானப்பெண்ணே ! 46

பார்த்து நடப்பது மேல்வா சலந்தப்
பாதை யறிவது மெவ்வா று ?
மாத்திரை நேரம் பிரியா மற்பாதை
மார்க்கங் கேளடி ஞானப்பெண்ணே ! 47

எருக்கி டந்த குழிதாண் டியதில்
இரண்டு விரற்கடை மேற்றூண்டிக்
கருக்கி டைக்கும் அடையா ளமதைக்
கண்டு கேளடி ஞானப்பெண்ணே ! 48

மாயன் அரண்மனை காணீரோவன்னி
மாமி ருப்பதுந் தோணீரோ ?
நேய மதுகடந் தப்பா லேயறு
கோணப் படியடி ஞானப்பெண்ணே ! 49

கோணத்தில் நின்று மயங்கா தேசுழிக்
காற்றை யடக்கிச் சிணுங்காதே ;
வீணுக் கலைந்து தியங்கா தேதூல
வேடத்தைத் தள்ளடி ஞானப்பெண்ணே ! 50

தூலத்தை விட்டு விடாயா கிலதிற்
சூட்சத்தைக் காண முடியாது ;
பாலத்தி லேறி நடந்தக் காற்பெரும்
பாதையி தல்லவோ ஞானப்பெண்ணே ! 51

பாதையா னபெரும் பாதையைக் கிட்டிடப்
பட்டண முண்டொரு வட்டமதாய் ;
நாதமுங் கீதமுங் கேட்குத டிதெய்வ
நாயகன் சந்நிதி ஞானப்பெண்ணே ! 52

சந்நிதி யென்னடி கண்டதுண் டோகண்டால்
தத்துவம் பேசத் திறமுமுண்டோ ?
முன்னேமுப் பாழுங் கடப்பதுண் டோஅதில்
முச்சுட ருண்டடி ஞானப்பெண்ணே ! 53

முச்சுடர் வட்டமே சக்கர மாமது
மூக்கு நுனியிற் சுழுமுனையாம் ;
அச்சுடர் வட்டத் திருந்தவ னேகுரு
ஆனந்த நந்தியாம் ஞானப்பெண்ணே ! 54

நந்தி யிருந்தது வன்னிவட் டம்மதில்
நாட்டம் புருவமத் யானதிட்டம் ;
சந்திர னுங்கதிர்ச் சூரிய னுமந்தத்
தலத்தில் நின்றனர் ஞானப்பெண்ணே ! 55

நாதவிந் தல்லவோ நால்யோ னிதச
நாதவிந் தல்லோ எழுதோற்றம்?
நாதவிந் தா னுட னும்முயி ரும்பரம்
நந்தியைப் போற்றடி ஞானப்பெண்ணே! 56

விந்து விருந்த தலந்தனி லேகுரு
நந்தி யிருந்தார் கொலுவாகி;
சிந்தை தெளிந்து மகாரம்வைத் தாலந்தச்
சீமானைக் காணலாம் ஞானப்பெண்ணே! 57

சீமான் கிட்ட அடுத்தக் கால்மேலேச்
சீமை நமக்குக் குடியாச்சு;
ஆமா மென்றுகும் மிப்பா டியருள்
ஆனந்தஞ் சேரடி ஞானப்பெண்ணே! 58

ஆனந்த மான தலந்தா னேஅது
அத்து விதமாந் தலந்தானே
தானந்த மான சதாசிவத் தைப்போற்றித்
தாண்டிக் கும்மி யடியுங்கடி. 59

ஞானமா மாயிரத் தெட்டிதழ்ப் பீடம்
நாட்டமாஞ் சந்திர னூர்வீடு
போன மிருந்த மகார மவுனத்தை
மூட்டிக் கும்மி யடியுங்கடி. 60

குண்டலி வாசி யகாரம டிபிடர்க்
கண்ட மதிலே யுகாரமடி
உண்டு சுழியின் மகாரம்வைத் தாற்சிவ
லோகமி தல்லவோ ஞானப்பெண்ணே! 61

ஓங்கார மான பிரணவத் தாள்எங்கும்
உயர்ந்த சோம கலைநிறத்தாள்
ரீங்கார மான பராசத்தி யைரீங்கள்
சேர்ந்து கும்மி யடியுங்கடி. 62

பூரக முப்பத்தி ரண்டா குமனப்
பூரண கும்ப மிரட்டியதாம்
கூறவே ரேசகம் எண்ணிரண் டாமந்தக்
குறிப்ப றிந்துகொள் ஞானப்பெண்ணே ! 63

பிங்கலை யாவதி ரேசகத் தைவளர்
பூரகந் தன்னி லிடத் தூதி
நங்கலை நந்தியிற் கும்பிக்க வேசிவ
நாட்டமி தல்லவோ ஞானப்பெண்ணே ! 64

அறிந்து கொள்ளு மெழுத்தோ டேபவு
ரணைமு தலமா வாசிமட்டும்
மறந்தி டாமற்செய் மாத்திரை யின்படி
வாசி வசமாகும் ஞானப்பெண்ணே ! 65

காலா லேகன லேற்றுங்க டிசுழி
மேலே கொண்டமு தூட்டுங்கடி
மூலா தாரத் தலங்கேச ரமென்று
முழங்கிக் கும்மி யடியுங்கடி. 66

சார்ந்து கொள்ளடி கேசரத் தைமுதற்
றன்னை யறியலாந் தானாகக்
கூர்ந்து மூலக் கணபதி பாதத்தைக்
கும்பிட்டுக் கொள்ளடி ஞானப்பெண்ணே ! 67

நவ்வெழுத் தேபிரம னூரா குமதில்
நாரணன் மவ்வெழுத் தானானே ;
சிவ்வெழுத் தேதெய்வ ருத்திர னுமின்னுஞ்
செப்புவன் கேளடி ஞானப்பெண்ணே ! 68

செப்பவே வவ்வு மகேசுர னும்வட்டஞ்
சேர்ந்துப சாரம் சதாசிவனும் ;
தப்பிலா வைந்தெழுத் தாலே சராசரந்
தங்கி யிருந்தது ஞானப்பெண்ணே ! 69

வாலையி னட்சர மூன்றாகும் அதை
வாய்கொண்டு சொல்பவ ரார்காணும்
மேலொன் றுங் கீழொன் றும் மத்திம முங்கூட்டி
விரைந்து பாரடி ஞானப்பெண்ணே ! 70

விரைந்து சொல்லுவன் மூன்றெழுத் தாற்சதம்
விரிந்து தானுயி ருண்டாச்சு ;
தெரிந்து கண்டவர் தங்களுக் காவலை
தீட்சையி தல்லவோ ஞானப்பெண்ணே ! 71

தீட்சை யெனுஞ்சிவ ச்க்கரத் தின்மையந்
தேவி யெழுத்தை நிரைநிறுத்திக்
காட்சி யுடன்சிவ பூசைசெய் தாற்சித்தி
கைவச மாமடி ஞானப்பெண்ணே ! 72

கள்ளுண்டு தள்ளுண்டு நில்லா தேபின்பு
கஞ்சா வுறக்கமுங் கொள்ளாதே ;
உள்ளுண்டு சோமக் கலையாதி பானத்தை
ஊட்டிக் கும்மி யடியுங்கடி ! 73

கும்மி அடிபெண்கள் அம்பலத் தையரைக்
கூட்டி யமுதங் குடியுங்கடி
அம்மென்று மும்மென்றுஞ் சொல்லா மல்நின்று
அத்விதம் பாரடி ஞானப்பெண்ணே ! 74

அத்வித மாவதுக் காதிய டிமதி
ஆயிரத் தெட்டிதழ்ப் பூசைபண்ண
முத்தி தருஞ்சோமப் பாலை யனுதினம்
மூட்டிக் கும்மி யடியுங்கடி. 75

மூட்டுவ தென்ன திரிகோண வட்ட
மூலத்தில் குண்டலி வாசியினால்
காட்டுவன் பூரண நாலையுங் கட்டினான்
ஞாயமி தல்லவோ ஞானப்பெண்ணே ! 76

கட்டிக்கொள் விந்துவைத் தள்ளா தேசுழிக்
காற்றை யடக்கிப் பெருக்காதே
சுட்டி மனப்பொரு ளுருதே காமச்
சோம்பலைத் தள்ளடி ஞானப்பெண்ணே ! 77

சோம்பலுந் தூக்கமு மாகா தேஅன்ன
சுகியுஞ் சோகமுங் கொள்ளாதே
சாம்ப சதாசிவ நாட்டத்தி லேநின்று
சார்ந்து கும்மி யடியுங்கடி. 78

சைவச மாவது சட்டிவித் தைஞானக்
கற்பமும் வந்து லபிக்குமடி ;
தெய்வ மிவரென்று சொன்ன ரோநல்ல
சித்தரு முத்தரு ஞானப்பெண்ணே ! 79

யோகத்துக் காதி யுமைதீட் சைமற்ற
போகத்துக் கெல்லா முதற்றீட்சை
போகத்தைக் கைவிட லாகா தேசுத்திப்
பூசையை வேண்டிக்கொள் ஞானப்பெண்ணே! 80

வேண்டிக்கொள் விந்து முதனு தஞ்சத்தி
மேவுஞ் சிவத்துட னேபரமாம்
தாண்டிக்கொ ளிந்த வகையா றும்யோக
சாதக சாக்கிரம் ஞானப்பெண்ணே ! 81

சாக்கிரம் விந்துக்கு மேலண்ட மாமதைச்
சார்ந்திடும் நிற்குண நிட்களந்தான்
பார்க்கில் நிரா தார மாமலத் தைஅதைப்
பாரா விடமந்தம் ஞானப்பெண்ணே ! 82

அந்த மடியிந்த மேலா றுங்கண்டே
ஆரறி வாரடி ஞானவழி ?
சிந்தை தெளிந்த பெரியோ ரைக்கண்டு
சேவித்துக் கும்மி யடியுங்கடி. 83

சேவிப்ப துந்தவ னந்தியடி யோக
மாய்நிற்ப தும்விந்து நாதமடி
ஆவிக் கிசைந்த சதாசிவ சாக்கிரம்
அவ்விட மாமடி ஞானப்பெண்ணே ! 84

அவ்விட்டே யுவ்விட்டே மேற்சுழி யிற்சுழி
அங்கி யைவிட்டுக் காலாலே
மவ்விட்டு நாதவிந் துட்பொரு ளைக்கண்டு
வாழ்த்திக் கும்மி யடியுங்கடி. 85

மூழக்க மென்ன பிரணவ மாமறை
மூட்டுச் சமாதியி லிரேசகத்தை
விளக்கு மாகு மிரவிகாந் திரித்தம்
வேண்டிக் கும்மி யடியுங்கடி. 86

பார்க்குஞ் சுழுமுனை காணு ரேபது
மூக்கு நுனியின் றறியாரே
மார்க்க மறிந்து பெரியோ ரைக்கண்டு
வாழ்த்திக் கும்மி யடியுங்கடி. 87

வாழ்த்தி யடிபெண்ணே ரேசகத் தைவினை
மாற்றி யடிபெண்ணே பூரகத்தை
தூற்று மகாமிய சஞ்சிதத் தைத்தொல்லை
தொலைத்துக் கும்மி யடியுங்கடி. 88

பாசமற் றவிடம் கேசர மாம்ஒரு
பாதியி னின்றிட யோகமுமாம் ;
நேசமற் றூர்பிர்ம ஞான சமாதியும்
நிருவி கற்பமாம் ஞானப்பெண்ணே ! 89

கற்ப மடியிது மெய்யா குமற்றைக்
கர்மமெல் லாமிக அற்பமடி
தற்பரா னந்த சதாசிவ மோனத்தைச்
சார்ந்து கும்மி யடியுங்கடி 90

பாசத்தைச் சொல்லு முடலாக அந்தப்
பசுவைச் சொல்லு முயிராக
நேசத்தி னிற்பது யாதது பிரம
நிட்டையென் பாரடி ஞானப்பெண்ணே ! 91

தேகத்துக் காதியா மைம்பூ தமற்றைச்
செயலுக் காதியாம் விட்சேபம்
மோகத்துக் காதியா மம்மா யையின்னும்
முழுதுங் கேளடி ஞானப்பெண்ணே ! 92

இன்னமுண் டந்த வியாகிரு தற்கும்
இரணிய கர்ப்பன் விண்ணுவுக்கும்
மின்னிய விராட்பு ருடனுக் குமின்னும்
மேலுண்டு சைதன்யம் ஞானப்பெண்ணே ! 93

சைதன்ய வத்துவே பிரமம டிஅந்தச்
சாட்சிக்குப் பிரதி பிம்பமடி
மெய்நின்ற சுத்த அறிவா னுல்ப்ரதி
பிம்பத்தைத் தள்ளலாம் ஞானப்பெண்ணே ! 94

ஆமடி யிந்தப் பதந்தா னேகண்டால்
ஆதியு மந்தமு நீதானே ;
நாமடி வாசிக் குதிரையி னுல்மிக்க
நல்ல கதியடி ஞானப்பெண்ணே ! 95

சாதிக் குதிரை வலுவே கஞ்சரு
தாரு இருக்கின்றான் மேலாக
வீதிக்கு வீதி சாரிவைத் தாற்பரி
வேடிக்கை பார்க்கலாம் ஞானப்பெண்ணே ! 96

கட்டுப்ப டாதந்த அச்சுமட் டம்அது
காலோ பன்னிரண் டாகையினுல்
எட்டுக் கயிற்றினுற் கட்டிக்கொண் டாலிது
மட்டுப் படுமடி ஞானப்பெண்ணே ! 97

கட்டுப் படுமோ மலவா யில்நடு
மையத்தின் குண்டலி வாசியினுல்
எட்டையும் நாலையுங் கட்டியே போற்றிடில்
ஏறி நடத்தலாம் ஞானப்பெண்ணே ! 98

சூட்சக் குதிரை யடங்கா துசுழிக்
கோட்டுக்குட் செல்ல முடியாது
மூச்சுக் காயிரங் காதவ ழிமிக
மூந்தி நடக்குதாம் ஞானப்பெண்ணே ! 99

குதிரை கட்டிய லாயத்தி லேமனக்
கோட்டையி லேசந்தைப் பேட்டையிலே
எதிரி தான்வந்து தட்டுகி றனதை
ஏதென்று கேளடி ஞானப்பெண்ணே ! 100

காம னெவருக்கும் மூத்தவ னுமவன்
கற்றிடும் வித்தைகள் மெத்தவுண்டாம் ;
தாமத மானகு ரோதனும் லோபனுந்
தம்பியாங் கேளடி ஞானப்பெண்ணே ! 101

மோக மதமிரு பிள்ளைக ளாம்ஒரு
மூர்க்க மமசியக் காரனெடு
சேகர வீரசை டம்பனுஞ் சம்பனுஞ்
சினேக மாமடி ஞானப்பெண்ணே ! 102

சினேகனுக் கேற்ற வுறவாளி பொல்லாத்
தீயவ னுகுமோ ராங்காரி
அனேகத்தைச் செய்யு மவதியில் ரோசனும்
அத்தை மகனடி ஞானப்பெண்ணே ! 103

பெண்ணே கேளு பதின்மூன் றுகிய
பேர்க ளுண்டு பகையாளர் ;
ஒன்றே யொன்று வசமா னுலவர்
ஒடுங்கு வாரடி ஞானப்பெண்ணே ! 104

ஒடுக்க மில்லை யிவரா லேபலன்
　　ஒட்டமெல் லாமனக் கோட்டையிலே
படுக ளத்துக்கு மேய்ந்துவ ரப்பசு
　　பற்றுகி றூரடி ஞானப்பெண்ணே ! 105

பாம்பி ருக்குது புற்றுக்குள் ளேசுக
　　பந்த மிருக்குது நெஞ்சுக்குள்ளே ;
வீம்பை யடக்கி யுயர்ந்தக் கால்பரி
　　வேடிக்கை பார்க்கலாம் ஞானப்பெண்ணே ! 106

பித்துப் பிடித்த மனக்குரங் குவெறிப்
　　பேயும் பிடித்துக்கொண் டாட்டமிட்டால்
அத்தை யடக்க மருந்துசெய் தாற்பரி
　　அன்று நடத்தலாம் ஞானப்பெண்ணே ! 107

நடத்த லாமே மனவா சிஒரு
　　நாலைந்து பீற்றலை மூடாமல்
திடத்தி னல்மனஞ் சித்தா னற்சித்தந்
　　தெளிந்து கொள்ளலாம் ஞானப்பெண்ணே ! 108

தெளிந்த சித்தகம் பூட்டிய திற்சேணத்
　　தேறு மறிவை யதிற்சேர்த்துக்
குளிர்ந்து ஞானவை ராக்கியக் குறடா
　　கொண்டு மாட்டடி ஞானப்பெண்ணே ! 109

மூலத் தெருவி லொருபாய்ச் சலந்த
　　முச்சந்தி வீதியி லோரபாய்ச்சல்
மேலைத் தெருவி லொருபாய்ச் சற்பரி
　　வேடிக்கை பார்க்கலாம் ஞானப்பெண்ணே ! 110

அந்த விதங்கள் அறியா மல்மணி
　　மந்திர மென்று திரிகின்றூர்
அந்தர மான வெழுத்தறிந் தால்மணி
　　மந்திர மல்லவோ ஞானப்பெண்ணே ! 111

மவுன மந்திரங் களினாலே தங்கள்
வாய்தனை மூடித் திரிவார்கள்
புவன சாரம் புசிப்பார்க் குமதி
போசன மாகுமோ ஞானப்பெண்ணே ! 112

தாயென்று சொல்லுவார் சொப்பனத் திற்காம
சன்னதம் வந்தால் நினைப்பாரோ ?
வாய்கொண்டு வேதம் படித்தா லுஞ்சுத்த
மௌனந் தங்குமோ ஞானப்பெண்ணே ! 113

தாடி வளர்த்துச் சடைவளர்த் துநல்ல
சந்யாசி யென்றொரு வேடமிட்டே
ஓடித் திரிந்த விளையாட் டையிங்கே
ஒப்புவ தாரடி ஞானப்பெண்ணே ! 114

பேசா திருக்கும் இடம்பார்த் தேஅதைப்
பெற்றே யிருப்பது மந்திரமாம் ;
ஆசானென் றேயுப தேசமிட் டாற்குரு
அல்லவென் றுகும்மி யடியுங்கடி. 115

சொற்குரு வாலே கதியா மோபொய்யைச்
சொல்லுவார் தங்க ளுறவாமோ ?
சற்குரு வானவ ரைச்சேர்ந் தேயவர்
தம்சொல்லைக் கேளடி ஞானப்பெண்ணே ! 116

நானென்ற ஆணவம் பேசார் கள்நல்ல
நாடென்றுங் காடென்றுஞ் சொல்லார்கள் ;
தானென் றியாவையுங் கண்டா ரேநல்ல
சற்குரு வாமடி ஞானப்பெண்ணே ! 117

குருவி ருப்பதும் உள்ளத்தி லேமனக்
கோணல் அறுப்பதுந் தனக்குள்ளே ;
பொருளி ருப்ப தறியா மற்புடம்
போடுவ தெப்படி ஞானப்பெண்ணே ! 118

வாதஞ் செய்ய அறியா மல்ரச
வாதஞ் செய்கிறோ மென்று சொல்லிச்
சூதங் கெந்தி புடத்திலிட் டாலதிற்
சொன்னம் விளையுமோ ஞானப்பெண்ணே! 119

லிங்க முருக்க அலைவார் கள்சாதி
லிங்க மிருப்ப தறியாமல் ;
வங்கமுந் தங்கமுஞ் சேர்த்து ருக்கினால்
பங்கமி தல்லவோ ஞானப்பெண்ணே! 120

பாசா ணங்குகை தன்னில்வைத் துவெள்ளைப்
பாலா லூட்டிக் குகைமூடி
ஈசானி யப்புட மிட்டா லுமதில்
இருப்ப தென்னடி ஞானப்பெண்ணே! 121

காரண மானது காரிய மாவதைக்
கட்ட அறியார் முழுமூடர் ;
பூரண மென்று திரிந்தா லுமதிற்
புண்ணிய முண்டாமோ ஞானப்பெண்ணே! 122

முப்பூ வென்று திரிவார் கள்அந்த
முப்பூ வந்த வகைகாணார் ;
அப்பூ வென்று மறிந்தக் காற்சித்தி
ஆமென்று கும்மி அடியுங்கடி. 123

காரத்தைக் கட்ட அறியார் கள்கடுஞ்
சாரத்தை நீற்றினஞ் செய்யாமல்
வீரத்தைப் பூரத்தைச் சேர்த்தத னாலது
வீணல்ல வோசொல்லு ஞானப்பெண்ணே! 124

கோசவித் தையை யறியா மல்லோக
வேசத்தி னின்று மலைவார்கள் ;
கோச பீசம றிந்தா லேவாதங்
கோசா மாமடி ஞானப்பெண்ணே! 125

வாதத் திறவுகோல் காணு ரேபஞ்ச
பூதச் சரக்கையுந் தோணுரே ;
ஏதுக்குக் கண்புகைந் தூதுகின் றூரிதை
ஏதென்று கேளடி ஞானப்பெண்ணே ! 126

துருசு சுன்ன முடிந்தாச் சே அதைச்
சோதிக்க எட்டரை மாற்றூச்சு ;
பொருளைச் சொல்லிப் பணம்பறிப் பாரிவர்
பொய்க்குரு அல்லவோ ஞானப்பெண்ணே ! 127

கவனி சூத முடிந்ததென் பார்ஊசி
காந்தத்தைக் கிண்ணமுஞ் செய்தோமென்பார் ;
புமனி வாதப் புரட்டா லேயவர்
பிழைக்கி றூரடி ஞானப்பெண்ணே ! 128

பிழைக்க முத்தி யறியா மற்சென்ம
பூர்வக் கியானந் தெரியாமல்
தழையைத் தின்று சருகா கித்திசை
தயங்கு றூரடி ஞானப்பெண்ணே ! 129

தயங்கி யென்ன பலனு மோமனஞ்
சாதித்து நிற்கத் திறமாமோ ?
மயங்கி டாதே அழலே மகத்துவம்
வருவ தெப்படி ஞானப்பெண்ணே ! 130

உப்பை யறிந்தவ னேவா திசகத்
துப்பை யொழிந்தவனேயோகி ;
தப்பிலே பேபூமி நாத மகிமையைச்
சார்ந்து பாரடி ஞானப்பெண்ணே ! 131

வீட்டி லிருக்குதொருமூ லம்வெளிக்
காட்டி லிருக்கு திருமூலம் ;
மாட்டி லிருக்கும் பெரியோர்க் குரச
வாதமி தல்லவோ ஞானப்பெண்ணே ! 132

தோணு தென்ற சரக்கெடுத் துக்கருஞ்
சூரா சூரையில் வைத்தெடுப்பச்
சாணுன் கண்ட பொருள்போ லேசித்தி
தானென் று கும்மி யடியுங்கடி. 133

நெல்லி யிருக்குது காட்டுக்குள் ளேகரு
நெல்லி யிருக்குது வீட்டுக்குள்ளே ;
கொல்லி மலைக்குத் திரிந்தா லும்குரு
கொண்டு வருவாரோ ஞானப்பெண்ணே ! 134

காயாம் பட்டிக்கு ளத்துக்குள் ளேவெள்ளைக்
காயா வேரு முளைத்திருக்கும் ;
வாயாற் றின் று நிமிர்ந்தக் கா லுடல்
மாயா தல்லவோ ஞானப்பெண்ணே ! 135

கற்ப நிலையறிந் தெண்ணு மல்வெறிக்
கஞ்சா வுண்டு விழிப்பார்கள் ;
அற்பர் குகைமலை சென்று லும்வத்தை
அறிய லாகுமோ ஞானப்பெண்ணே ! 136

கொங்கணர் சொன்ன கடைக்காண் டம்அதிற்
சங்கை யறிவது பிரமாண்டம் ;
எங்கள் குருசட்டை மாமுனி யாரிரு
நூறும் பாரடி ஞானப்பெண்ணே ! 137

நூறி லுரைத்தது மெய்ஞ்ஞா னந்திரு
மூல ருணர்ந்தது வேஞானம்
பூரண கும்ப முனிசொன்ன சூத்திரம்
பூண்டவம் பாரடி ஞானப்பெண்ணே ! 138

தீட்சையில் மச்ச முனிதீட் சையவர்
செப்பின ஞான மொருநூறும்
தாழ்ச்சிவா ராது பெரியோ ரைக்கண்டு
சாட்சி கேளடி ஞானப்பெண்ணே ! 139

ரேசக பூரக கும்பகத் தால்வாசி
நேரிட்டுச் செய்வதும் ஆசையடி ;
சேகர மாகிய அத்வித பிரமத்தைக்
கிட்டிக் கும்மி யடியுங்கடி. 140

உப்பை விடுவதும் ஆசையடி அன்னம்
ஓர்பொழு துண்பதும் ஆசையடி ;
செப்பவொண் ணாத மனோன்மணி தேவனைச்
சேர்ந்து கும்மி யடியுங்கடி.. 141

வாசலி லேயொரு மேல்வா சலந்த
வாசலி லேசிறு வாசலுண்டு ;
நேசமு டன்சிறு வாசலிற் பூட்டியே
நெருக்கம் பாரடி ஞானப்பெண்ணே ! 142

தேசங்கள் போவதும் ஆசைய டிகுல
தெய்வமுண் டென்பதும் ஆசையடி ;
நேச மெம்பிர மஞான சோதியைச்
சேர்ந்து கும்மி யடியுங்கடி. 143

சமய பேதமும் ஆசைய டிகங்கா
ஸ்நான பூசையும் ஆசையடி ;
மமதை யற்றிருக் கின்ற மமதையை
வாழ்த்திக் கும்மி யடியுங்கடி. 144

பால்கற வாப்பசு தள்ளுங்க டிபதி
பாசத்தை யும்விட்டுத் தீருங்கடி ;
மேல்வி ளங்கிய தற்பர சோதியை
வேண்டிக் கும்மி யடியுங்கடி. 145

தத்துவக் குப்பையைத் தள்ளுங்க டிவேத
சாத்திரப் பொத்தலை மூடுங்கடி ;
முத்தி தருஞான வத்துவை வாவென்று
மூட்டிக் கும்மி யடியுங்கடி. 146

ஆரூ தாரமுந் தொல்லைய டியதற்
கப்பா லேயொன்று மில்லையடி ;
சீராய் நின்ற நிலைபார்த் துப்பெண்கள்
சேர்ந்து கும்மி யடியுங்கடி. 147

சித்தர் சொற்படி சித்தானந் தங்கண்டு
தெளிந்து கொள்ளடி வேதாந்தம் ;
தத்துவ மாகிய வுற்பத்தி சூக்குமச்
சார்பு கேளடி ஞானப்பெண்ணே ! 148

சார்புதா னென்னடி வேதாந் தஞ்சொல்லுந்
தத்துவந் தானிவ் வகையுடனே
கார ணாதி அவத்தை நிலைகளின்
கணக்கு ரைக்கிறேன் ஞானப்பெண்ணே ! 149

உரைக்குந் தத்துவம் நாலே ழிற்கண்டே
ஓதுஞ் சித்துரு நாலாறும் ;
மறைக்குட் சொல்லிய சித்துரு நாலாகும்
மகிமை பாரடி ஞானப்பெண்ணே ! 150

மகிமை யாகிய தொம்பத மாமதில்
வந்த வுபாதி யுணர்த்துகிறேன் ;
தகைமை யென்னமுன் சொன்ன வசித்திருத்
தன்செயல் கேளடி ஞானப்பெண்ணே ! 151

வாசல் மிகுந்த உடம்போ டுப்ராண
வாயுவோ டிந்திரிய மானதொன்று ;
காசலை யாமதி சேர்ந்து வளர்ந்ததன்
காரணம் நாலடி ஞானப்பெண்ணே ! 152

காரண மென்ப திவையே ழும்வந்து
கலந்த தாமடி தொம்பதத்தைத்
தாரண தொம்பத மான துரியத்தில்
தன் னுட லாச்சுதாம் ஞானப்பெண்ணே ! 153

தன்னுட லாகிய சாக்கிரத் தைத்தன
தாக விருந்திடும் ஆத்துமற்குப்
பின்சொல்வ தாம்விசு வனென்ற பிமானப்
பேரல்லோ சொல்லடி ஞானப்பெண்ணே ! 154

பேர்பெறும் எந்த்ரமு பாதியு டன்கூடப்
பெற்றிடு சூட்சுமச் சொப்பனத்தின்
சார்பி லிருந்த துரியற்கு நாமமுஞ்
சைதன் யமடி ஞானப்பெண்ணே ! 155

ஆகும் பிராணனல் ஆயுவு டன்கூடி
அடங்கி மூலத்து டன்சேர்ந்து
சேகர மாவந்த நாத துரியத்தைச்
சேர்ந்திடிற் காரண தேகமடி. 156

சேர்ந்த அவத்தை சுழுத்திய டியதைச்
சேர்ந்தவ னும்பிராக்ஞ னுகுமடி
கூர்ந்த மூன்றையுங் கண்ட துரியத்தைக்
கும்பிட்டுக் கும்மி யடியுங்கடி. 157

கும்பிட்டுத் தொம்பதச் சித்தார்த் தங்கண்டு
கூறிய ஞாய மிதுபோல
அம்பிட்டுத் தற்பத மான விவேகத்தை
அறியச் சொல்லுவேன் ஞானப்பெண்ணே ! 158

அறிவ தென்னடி தொம்பத மாம்பொருள்
ஆன வுபாதியும் ஆனதுபோல்
சருவ தற்பர மான பொருளுக்குத்
தன்னுடைச் சீவன் துரியமடி. 159

சர்வஞ்ஞ னுஞ்சரு வக்கார னுஞ்சரு
வேந்திரி யாமிசர் வேசுரனுஞ்
சர்வ சிருட்டி சர்வதி திசர்வ
சங்கார னும்பேராம் ஞானப்பெண்ணே ! 160

பேரான தென்ன இவையே மூமிகப்
பேசிடில் வேதம் துரியமடி ;
தோரா வுபாதியைப் பெற்றத னுல்முத்தி
தூசண முண்டாச்சு ஞானப்பெண்ணே ! 161

தூசணச் சீவ னிவையே மூங்கண்டு
சொல்லும் பரனுக் குடலாச்சு ;
சாசுவ தமென்ற தானத்தி னற்சாயா
கிரக மென்றுபேர் ஞானப்பெண்ணே ! 162

சாக்கிரந் தன்னேத்தா னென்றுசொல் லியப்பால்
தானபி மானித் தருந்தாக்காற்
சேர்க்க விராட்டெனச் சொல்லுவார் நாமந்
தெரிந்து கொள்ளடி ஞானப்பெண்ணே ! 163

தெரிந்த மூன்றனு பாதியு மாமதிற்
சேர்ந்த பரன்பர சொப்பனமாம் ;
பிரிந்தி டாதபி மான னிரணிய
கற்பனென் பாரடி ஞானப்பெண்ணே ! 164

பாரு மிதிலொரு பாதியு டன்பரா
பரனுக் கல்லவோ பார்சுழுத்தி
சேரும் பொழுது வியாகிரு தனெனச்
சிந்தையிற் காணடி ஞானப்பெண்ணே ! 165

காணடி தற்பர சத்தார்த் தமதைக்
கண்டு தெரிந்த வகைபோலே
ஊனடி ஞான சிவப தார்த்தத்தில்
உண்மையைக் கேளடி ஞானப்பெண்ணே ! 166

உண்மையாந் தற்பர நற்றுரி யங்கண்டு
உற்றுப்பா ராதொரு தோடமதால்
தண்மைச் சிவபத சுத்தனுக் குப்பரன்
தன்னுட லாச்சுது ஞானப்பெண்ணே ! 167

ஓதும் பரம்விஸ்வ கிராசம டியுப
சாந்தமெ னும்வகை மூன்றிலொன்றைச்
சா தனை செய்த சிவத்துக்கல் லோபர
சாக்கிர மாகுமே ஞானப்பெண்ணே ! 168

ஆகும் பொருள்சிவ சாக்கிர தையபி
மானித்தி ருந்த சிவதுரியம்
சேகர மாயிடிற் சிற்சொ லிதையென்று
செப்பிடும் வாக்கியம் ஞானப்பெண்ணே ! 169

வாக்கிய மாம்விஸ்வ கிராசம டியந்த
மார்க்கமென் னசிவ சொப்பனத்தைப்
பாக்கி யனபி மானிடத் திற்பிரசா
பத்த னென்றுசொல் ஞானப்பெண்ணே ! 170

சொல்வது மென்ன வுபசாந் தஞ்சிவ
சுழுத்தி தானென்றி ருந்தக்கால் ?
நல்லது பொற்புறு சாந்தனென் றூலது
நாமம தல்லவோ ஞானப்பெண்ணே ! 171

நாமச் சிவதுரி யத்தில டியபி
மான மிழந்து தனித்ததனுல்
நேமமி தல்லவோ வாதி துரியத்தின்
நிலைமை கண்டிலர் ஞானப்பெண்ணே ! 172

கண்டறி யாதது முற்றிரி யமதைக்
கண்டு சுழுன் றுமே லானதடி ;
பண்டு பிரமவா னந்த சொரூபத்தைப்
பணிந்து கும்மி யடியுங்கடி. 173

பணிந்த ஞான மதுதாண் டிபர
மானந்த மான திதுதாண்டி ;
துணிந்து பாருமா னந்தசொ ரூபனைத்
தொழுது கும்மி யடியுங்கடி. 174

தொழுது கொள்ளுஞ் சுகசீ வபர
 சுத்தப் பொருளு மிதுதாண்டி ;
பழுதி லாதசொ ரூபக்கு ருவுடைப்
 பாதமி தல்லவோ ஞானப்பெண்ணே ! 175

பாதமி தாகிய தொம்பத மாம்அதிற்
 பாதமுந் தற்பர மானதடி ;
பேதவு பாதி யவத்தைக ளும்பல
 பேர்களு மானது ஞானப்பெண்ணே ! 176

பேருக்குச் சாந்த துரியம டியதைப்
 பேசவுந் தற்பிர காசமடி;
யாருக்குங் கண்டறி யாத பொருளைக்கண்
 டகங்தெளிந் துகும்மி யடியுங்கடி. 177

முத்தி பெறுந்தேவ தத்தனைப் போற்சக
 முழுதுந் தன்மய மானதடி ;
நத்தியே விட்டுவி டாதேயி லக்கண
 ஞானமி தல்லவோ ஞானப்பெண்ணே ! 178

ஞானமாம் மோட்சம் இதுதாண் டிமற்ற
 ஞாயமெல் லாமன மாயமடி ;
தானசங் கற்ப விகற்ப சமயமுந்
 தன்மய மானது ஞானப்பெண்ணே ! 179

தூர தூரமு மில்லைய டியதைச்
 சொல்வதுங் கேட்பது மில்லையடி ;
தாரார் பிரம நிலைபார்த் துப்பெண்கள்
 தாண்டிக் கும்மி யடியுங்கடி 180

அண்டமும் பிண்டமும் பாழாச் சேஅதற்
 கப்பா லும்பெரும் பாழாச்சே ;
உண்டில்லை யென்று பராபரப் பிரமத்தை
 உவந்து கும்மி யடியுங்கடி. 181

சொல்லினுங் கல்லினும் மில்லா தேபிர
சோதியை யாதியைத் தூவெளியை
வல்லதத் தற்பிர காச மவுனத்தை
வகைய றிந்துகொள் ஞானப்பெண்ணே ! 182

பிருதிவி தூய்மை மயமாச் சேயதில்
பேதம் பலபல வுண்டாச்சே ;
சுருதி முடிவைக் குருசொல்லு வா ரந்தச்
சூட்சந் தெரியுமோ ஞானப்பெண்ணே ! 183

அறிந்து கொண்ட பெரியோர் பாதங்கள்
அர்ச்சனை செய்துகும் மித்தமிழைப்
பிரிந்தி டாமனூற் றெண்பத்தைந் துகண்ணி
பேசினேன் சற்குரு தாள்வாழி ! 184

சற்குரு பாத மிகவா ழிவாலை
சாமி தமிழ்நிதந் தான்வாழி !
நற்குண ஞானக்கும் மித்தமிழ் கற்றவர்
ஞான நெறியே மிகவாழி ! 185

# சுப்பிரமணியர் ஞானம்

—::—

காப்பு

எண்சீர் விருத்தம்

ஒழியாத சுழுமுனையி லொடுங்கி நல்ல
உற்றகலை வாசிசிவ யோகத் தேகி
வழியான துறையறிந்து மவுனங் கொண்டு
மகத்தான அண்டவரை முடிமேற் சென்று
தெளிவான ஓங்கார வடிவேல கொண்டு
தெளிந்துமன அறிவாலே தன்னைக் கண்டு
வெளியான பரவெளியில் வாச மாகி
வேதாந்த சத்திசிவ ஆதி காப்பே.

நூல்

ஆதியிலே பராபரத்திற் பிறந்த சத்தம்
அருவுருவாய் நின்றபர சிவமு மாகிச்
சோதியென்ற சிவனிடமாய்ச் சத்தி யாகித்
தொல்லுலகி லெழுவகையாந் தோற்ற மாகி
நீதியென்ற அறிவதனால் தானாய் நின்று
நிறைந்தபரி பூரணகிட் களமு மாகிச்
சாதியென்ற சத்திசிவ மருள் தன்னாலே
சண்முகனுங் கணபதியுந் தாமுண்டாச்சே. 1

உண்டான சத்திசிவம் ஏக மாகி
உளங்கனிந்து பூரணமாய் நிற்கும் போது
குண்டான மாங்கனியைக் கையில் வாங்கிக்
குமரனுடன் கணபதியைக் குணமாய்ப் பார்த்து

நன்றாகக் கிரிவலமாய் வந்த பேர்க்கு
நல்லகனி தானீவோம் என்று சொன்னார்;
பன்றான கனியறிந்து குமரன் றானும்
பாய்ந்துமயி லேறிகிரி வலஞ்சென் றானே. 2

சென்றபின்பு கணபதியும் ஆலோ சித்துத்
தீர்க்கமுள்ள மேருகிரி தீர்தா மென்று
கண்டவுடன் சிவனுமையாள் பாதந் தன்னைக்
கருத்துடனே சுற்றிவந்து கனியை வாங்கிக்
கொண்டந்த சிவனுமையைத் தியானஞ் செய்து
குறியறிந்து நெறிதமக்குள் திருவைப்போற்றித்
தின்றுருசி கண்டறிந்து நிற்கும் போது
தீர்க்கமுள்ள கணபதியை வாவென் றாரே. 3

வாவென்றே எடுத்தணைத்தங் கருட்பா லீந்து,
மகத்தான ஐவருக்கும் பீட மாகி
ஆவென்று மூலமதற் கரசாய் நின்றே
ஐந்தெழுத்திற் குயிரான ஆதி யாகிக்
கூவென்ற சத்துசித்த சுத்த மாகிக்
குவிந்தெழுந்த வாதிகுரு தேசி யாகிப்
பூவென்ற வாயிரத்தெண் மலருக் குள்ளே
பொருந்திமன அறிவாலே யிருந்து வாழே. 4

இருந்துவா ழென்றுரைத்த வேளை தன்னில்
ஏகாந்த மயில்வீர னெதிரில் வந்தே
அருந்தவமாய் நின்றநிலை தன்னைப் பார்த்தே,
அருமையுள்ள கண்மணியே வாவென் றேதான்
வருந்தியே மாங்கனியொன் றீந்து நல்ல
மகத்தான அண்டரண்ட வரைகள் சுற்றித்
திருந்தியே தீர்க்காயுள் பெற்று வாழ்ந்து
தீர்க்கமுடன் மலைக்கரசா யிருந்து வாழே. 5

வாழென்று சொன்னவுடன் மயில்வீ ரன்தான்
மகத்தான சிவசத்தி பதமேற் கொண்டே
ஆவென்று மயிலேறிக் கயிலா சத்தை
ஆவலுடன் சுற்றிவரும் போதி லேதான்
சூழென்றே இமயகிரி வடபா கத்திற்
சுத்தசித்த மானதபோ தனர்கள் கண்டு
தாள்பணிந்து வணக்கமதாய் நிற்கும் போது
தபோ தனர்கள் ரிஷிகளுமே தாம்வந் தாரே. 6

வந்தவரைத் தான்பார்த்து வரையில் நிற்க
மகத்தான சற்குருவென் றடிப ணிந்தே,
இந்தமலைச் சாரலிலே வெகுநா ளாக
இன்பமுடன் தவஞ்செய்து வாழ்ந்தோ மையா!
அந்தரமா ராட்சதர்க ளண்டி வந்தே
அலங்கோலஞ் செய்துமே துரத்து கின்றார்!
சுந்தரமா யிருந்துதவங் காவாய்! என்று
சுத்தசித்த மாய்த்தவதைத் தொடங்கி னரே. 7

தொங்கிமன மடங்கிநிலை தன்னைக் காத்துச்
சுத்தமுட னின்றுவிளை யாடும் போதில்
அடங்கிமன மடங்காத அசுரர் தாமும்
அஞ்சாமல் அழும்புசெய்யு மகத்தைப் பார்த்துத்
திடங்கொண்டு மயிலேறிச் செவ்வேல் கொண்டு
சிவந்துவரும் அசுரர்களை மாள வென்று
படங்குவித்து வேல்முனையைத் தியானம் பண்ணிப்
பாயவிட அசுரர்களை பறந்து போச்சே! 8

பறந்துபோய்ப் பலவிதமாய் ரூபங் கொண்டு
பந்திபந்தி யாயசுரர் பறந்து வந்தார்;
சிறந்துவந்த சேனைகளை நன்றாய்ப் பார்த்துத்
தீர்க்கமுள்ள மயிலேறித் தெளிந்து நின்றே

அறந்தழைக்க வேணுமென்று தூல சூட்சம்
அரூபமெனுங் காரணமாய் ரூபங் கொண்டு
நிறந்தரமாய் வந்தபொலா அசுரர் தம்மை
நிர்த்தூளி செய்துதவம் நிலைகொண் டானே. 9

நிலைகொண்டு நின்றசெயங் கொண்டு சிந்தை
நேர்மையுடன் தவஞ்செய்யு முனிவர் கண்டு
கலைகொண்டு மனந்தெளிந்து மகிழ்ச்சி யாகிக்
கானமயில் வீரனடி கருதிப் போற்றித
தலைகொண்டு தாள்பணிந்தே அருட்கண் பெற்றுத்
தபோதனரும் ரிஷிகளுமே தாம்ப ணிந்து
சிலைகொண்டு நின்றவடி வேலன் தன்னைத்
தெரிசித்தே அவரவர்கள் பதிசென் றாரே. 10

பதிதேடி யவரவர்கள் செல்லும் போது
பத்தியுள்ள அகத்தியமா முனிவன் வந்து,
விதியறிந்தே அசுரர்களை மாள வென்று
வெற்றியுள்ள வடிவேலைத் தியானம் பண்ணிக்
கெதியறிந்து தூலமுடன் சூட்ச மாகிக்
கிருபையுள்ள காரணமாம் ரூபங் கொண்டு
சதியறிந்து சங்காரஞ் செய்தா யையா!
சண்முகமே! என்குருவே! சரணந் தானே. 11

சரணமென்ற அகத்தியமா முனியைப் பார்த்துச்
சண்முகமாய் நின்றவடி வேலன் தானும்
திரணமதாய்த் தானறிந்து நீயார்? என்னத்
திருவடியைப் பூசைசெய்யுஞ் சேயன் என்றார்;
கரணமந்தக் கரணமதாய் வந்த தேதோ?
கருணையுடன் வாஎன்று கடாட்சம் நல்கித்
தருணமறிந் துதவுவது தரும மென்று
சங்கையுடன் தான்வந்த வகைசொல் வாயே. 12

சொல்லென்று மயில்வீரன் கேட்க வந்த
சோதிமய மானஅகத் தியர்தாம் சொல்வார்;
சல்லென்று வந்தபொலா அசுரர் தம்மைச்
சண்முகமாய் நின்றுவடி வேலுங் கொண்டு
செல்லென்று சங்காரஞ் செய்தா யந்தத்
திருவுருவாய் நின்றகா ரணத்தைக் காட்டி
உள்ளென்ற ஆகார தூல சூட்சம்
உண்மையென்ற காரணமு முரைசெய் வாயே. 13

உரைசெய்வா யென்றுசொன்ன வுறுதி கேட்டே
உண்மையென்று மயில்வீரன் உறுதி யாகி
நிரைசெய்தே எக்கியங்கள் தாமுண் டாக்கி
நேமமுடன் அகத்தியமா முனிவர் என்றே
அரையறிந்தே அருகிருத்தி ஓம குண்டம்
ஆதியென்ற மந்திரத்தி லங்கி யாக்கிப்
புரையறிந்து மந்திரங்கள் செபிக்கும் போது
பூரணமாய்க் கும்பமதில் தானுண் டாச்சே. 14

உண்டான பூரணமாய்க் கும்பம் வாங்கி
உண்மையென்ற மாமுனிக்கே அபிடே கித்து
நன்றான நவக்கிரக மொன்ப துக்கும்
நலமான அனுக்கிரக நிலையுங் காட்டிக்
குன்றான அனுக்கிரக வாசல் காணக்
குவிந்துமன அறிவதனல் விண்ணென் றானே. 15

விண்ணென்று விசையுடனே முனைநா வுள்ளே
மெய்ஞ்ஞான வாசலது திறக்கு மப்போ
நன்னென்ற கபாடவழிக் குள்ளே நின்று
கலையறிந்து வாசியினல் கமலம் நோக்கி

உன்னென்று மூலமதில் வங்கென் பூரி
உறுதியென்ற சமாதியிலே சிங்கென் ரேசி
என்றென்று மிப்படியே கொண்டு நின்றால்
ஏகமுள்ள தசதீட்சை யுண்மை கேளே; 16

உண்மையுடன் சுழுமுனையில் விண்ணென் றாணி
உறுதியுடன் ஆதார தீட்சை கேளு;
நன்மையுடன் ஓங்-ரீங்-அங்-உங்கென் றோதி
நாட்டமுடன் பதினாறும் உருவே செய்தால்
தண்மையுடன் கணபதியும் பிரகா சிப்பார்
தானமென்ற சுழுமுனையில் தன்னைப் பார்த்து
நுண்மையுடன் ஓம்நமசி வாய மென்றால்
நோக்குமுன்னே பிரமந்தரி சனமு மாமே. 17

ஆமப்பா நமசிவா யநம வென்றே
அதன்பின்வய நமசிவய நமசி யென்று
தாமப்பா தலைகாலால் மாறிக் கொண்டு
சங்கையுடன் கால்தலையால் மாறிக் கொள்ளு;
ஆமப்பா நமசிவய சிவயநம வென்றும்
அதன்பிறகு சிவயநம சிவாம வென்றும்
ஓமப்பா நமசிவய வென்று மாற
உண்மையென்ற ஆதாரஞ் சித்தி யாமே. 18

சித்தமுட னைந்தெழுத்தை மைந்தா! நீயும்
செம்மையுடன் தாலைகால்கால் தலையாய் மாறச்
சுத்தமுடன் ஆதரதே வதைகள் வந்து
சொன்னபடி யிருதயத்தில் சுகமாய் நின்று
பத்தியுட னிப்படியே தியானம் பண்ணிப்
பதிவாக விபூதியையுந் தளமாய்ப் பூசி
நித்தியமு மிப்படியே செய்து நின்றால்
நிலையில்லாத் தூலசடம் நிலைக்கும் பாரே. 19

பாரப்பா கலையறிந்து நிலையில் நின்று
பத்தியுட னுதார சூட்சங் கேளு;
நேரப்பா ஓம்கிலி அங் கென்றென் றோது
நிலையறிந்தே அங்கிலிநங் கென்றென் றோது
காரப்பா வங்கிலிசிங் கென்றென் றோது
கருணையுடன் சிங்கிலிவங் கென்றென் றோது
சாரப்பா வங்கிலியங் கென்றென் றோது
சலுதியாம் அங்கிலிமங் கென்றென் றோதே. 20

ஓதியபின் வங்கிலிசிங் கென்றென் றோது
உண்மையுடன் அங்கிலிசிங் கென்றென் றோது
நீதியுடன் அங்கிலிமங் கென்றென் றோது
நிலையறிந்து மங்கிலிரீங் கென்றென் றோது
ஆதியுடன் ரீங்கிலிஓ மென்றென் றோது
அப்பனே தலைகாலாய் மாறி யோது
சோதியுடன் சுழுமுனையில் மனக்கண் சார்த்திச்
சுத்தமுடன் விபூதியைநீ தரித்துக் கொள்ளே. 21

கொள்ளப்பா விபூதியைநீ தரித்துக் கொண்டு
கூர்மையுடன் கால்தலையாய் மாறிக் கொண்டு
சொல்லப்பா ஓங்கிலிரீங் கென்றென் றோது
சுத்தமுடன் ரீங்கிலிமங் கென்றென் றோது
வில்லப்பா மங்கிலிசிங் கென்றென் றோது
விவரமதாய்த் தோற்றுமடா செய்கை யாவும்;
உள்ளப்பா மங்கிலிங் கென்றென் றோது
உத்தமனே சிங்கிலிமங் கென்றென் றோதே. 22

ஓதியபின் வங்கிலிசிங் கென்றென் றோது
வுத்தமனே சிங்கிலிமங் கென்றென் றோது
நீதியுடன் மங்கிலிநங் கென்றென் றோது
நிலையறிந்து நங்கிலியங் கென்றென் றோது

சோதியுடன் மங்கிலிஉ மென்றென் றோது
சுத்தமுடன் ஈராறு தவமுஞ் சித்தி
வீதியென்ற ஆதார மேலா தாரம்
விண்ணடங்கிக் கண்ணடங்கி மேவி நில்லே. 23

நில்லப்பா கண்ணடங்கி விண்ணென் றானி
நிலையறிந்து பிராணயஞ் செய்தால் மைந்தா !
கல்லப்பா தேகமது கால னேது ?
காலனென்னும் வியாதியெல்லாங் காணு தோடும்
உள்ளப்பா வாசியது முறுதி யாகும்
ஓதுகின்ற மந்திரமுஞ் சித்தியாகும் ;
சொல்லப்பா தூலமுடன் சூட்சஞ் சொன்னேன்
துலங்கிநின்ற தூலத்தின் சுருக்கங் கேளே. 24

சுருக்கமுடன் ஆதார தூல சூட்சஞ்
சொன்னபடி பிராணயஞ் செய்து கொண்டே
உருக்கமுடன் செபதபங்கள் பூசை யாலும்
உண்மையா யுனக்குள்ளே கண்டு தேறிப்
பெருக்கமுடன் தானிருந்து சிவான் மாவே
பிரணவமாய் நின்றபரம் நீரு மாகி
நெருங்கியந்த அண்டவெளிக் குள்ளே சென்று
நேமமுடன் பிராணயம் நினைவாய்ச் செய்யே 25

செய்யப்பா பிராணயம் நினைவாய்ச் செய்யச்
சிவசிவா கருமானஞ் செப்பக் கேளு ;
பொய்யப்பா போகாது பிராண வாயு
பொருந்திநின்று விளையாடும் புதுமை கேளு ;
பையப்பா சுழுமுனையில் விண்ணென் றாணிப்
பதியாக மூலமதில் வங்கென் பூரி
மெய்யப்பா சுழுனையில்சிங் கென்று ரேசி
வேகமுடன் கண்டப் அங் கென்று கும்பே. 26

அங்கென்று கண்டமதில் கும்பித்தேதான்
அசையாது வாசிதிரு வாசிதானும்
செங்கமல மானசுழி பிண்டத் தேறும்
திரும்பியந்தப் பிண்டமதில் சென்று வாழும்
சங்கையுடன் தன்னகத்தில் தானே தானுய்த்
தன்மையுடன் நின்றுவிளை யாடும் வாசி
மங்களமாய்ச் சுழுனையிலே விண்ணென் றாணி
மார்க்கமுடன் இகபரமா யிருந்து காணே. 27

காணவே சத்தியவள் தியானம் கேளு
கருவாகச் சொல்லுகிறேன் கருத்தாய்க் கேளு;
பூணவே யுரைத்திடுவாய் அங்கிங் கென்று
புத்தியுடன் பதினாறு வுருவே செய்து
தோணவே விபூதிதூ ளிதமே பூசித்
சுத்தமுடன் பராசத்தி நிர்த்தஞ் செய்வாள்;
ஊணவே யிப்படியே தியானம் பண்ணி
உண்மையுடன் பிராணுய வுறுதி பாரே. 28

உறுதியுள்ள அகத்தியமா முனியே! கேளாய்;
உண்மையுள்ள சத்தியைநீ தியானம் பண்ணிப்
பருதிமதி சுடரொளிபோல் பஞ்ச கர்த்தாள்
பதியறிந்து பிராணுயம் பதிவாய்ச் செய்து
சுருதிபொரு ளானதொரு பொதிகை மேவிச்
சுகசிவ பிராணகலை வாசி யேறிக்
கருதிமன மொன்றுகிச் சுழியில் நின்று
கலக்கமற்ற அமிர்தபா னங்கைக் கொள்ளே. 29

பானமென்ற மதியமிர்த பானங் கொள்ளப்
பரபிரம மானசுழி வழியுங் காட்டித்
தானமென்ற ஆதார மேலா தாரந்
தனையறியும் பிராணுயச் சங்கை சொல்லி

ஞானமென்ற நிலைகாட்டி மூலங் காட்டி
நாதாந்த ஆறுமுக நிலையுங் காட்டி
மோனமென்ற வடிவேலின் முனையுங் காட்டி
முனையறிந்து கலைநிறுத்தி முடிமேல் நில்லே 30

நில்லப்பா சதுரகிரி முடியிற் சென்று
நிலையான பொதிகையிலே வாச மாகி
உள்ளப்பா தானாகி விண்ணென் றாணி
உன்மனத்தில் நினைத்ததொரு மந்த்ரந் தன்னைச்
சொல்லப்பா தியானமுடன் செபிக்கும் போது
சுத்தமுடன் சித்திக்கும் சும்மா நின்று
செல்லப்பா அட்டாங்க யோகத் தேகிச்
சிவாயகுரு பாதமதில் தெளிவாய் நில்லே. 31

தெளிவான தெளிவதனால் தன்னைக் கண்டு
தீர்க்கமுட னிருந்துதவஞ் செய்ய வென்றும்
அழியாத அனுக்கிரக வரமு மீந்தே
ஆர்வமுடன் மயில்வீரன் வடிவேல் கொண்டே
அழியாத அண்டவரை முடிமேற் சென்றே
அட்டகிரி பர்வதத்திற் கரசு மாகி
ஒழிவாகி அண்டவெளி யெங்குந் தானாய்
ஓங்கார வடிவேலை யுவந்தான் முற்றே 32

வால்மீகர் அருளிய

# சூத்திர ஞானம்-16

—::—

## எண்சீர் விருத்தம்

இருள்வெளியாய் நின்றசிவ பாதம் போற்றி
எழுத்ததனின் விவரத்தை விரித்துச சொல்வேன் ;
அருவுருவாய் நின்றதுவே எழுத்த தாகும ;
ஆதியந்தம் அண்டபிண்ட மதுவே யாகும் ;
திருவுருவாய் ரவிமதியாய் நின்ற ரூபம்
சிவசத்தி திருமாலின் ரூப மாகும் ;
வருமுருவே சிவசத்தி வடிவ மாகும் ;
வந்ததிலும் போனதிலும் மனத்தை வையே. 1

வந்ததுவும் போனதுவும் வாசி யாகும் ;
வானில்வரும் ரவிமதியும் வாசி யாகும் ;
சிந்தைதெளிந் திருப்பவனு ரவனே சித்தன் ;
செகமெலாஞ் சிவமென்றே யறிந்தோன் சித்தன் ;
நந்தியென்ற வாகனமே தூல தேகம் ;
நான்முகனே கண்மூக்குச் செவிநாக் காகும் ;
தந்திமுகன் சிவசத்தி திருமூச் சாகும் ;
தந்தைதாய் ரவிமதியென் றறிந்து கொள்ளே. 2

அறிந்துகொள்ளு 1 பூரகமே சரியை மார்க்கம் ;
அடங்குகின்ற 2 கும்பகமே கிரியை மார்க்கம் ;
பிரிந்துவரும் 3 ரேசகமே யோக மார்க்கம் ;
பிசகாமல் நின்றதுவே ஞான மார்ககம் ;
மறிந்துடலில் புகுகின்ற பிராண வாயு
மகத்தான சிவசத்தி அடங்கும் வீடு ;
சிறந்துமனத் வெளிவாகிச் சேர்ந்தோன் சித்தன்
சிவசிவா அவனவனென் றுரைக்க லாமே. 3

---

1 பூரகம் - இழுக்கிறது. 2 கும்பகம் - அடக்கிறது.
3. ரேசகம் - விடுகிறது.

ஆமப்பா வுலகத்தில் பெருநூல் பார்த்தோர்
அவரவர்கண் டதையெல்லாம் சரிதை யென்பார்
ஓமப்பா கல்செம்பைத் தெய்வ மென்றே
உருகுவார் பூசிப்பார் கிரியை யென்பார் ;
வாமப்பா யோகமென்று கனிகாய் தின்று
வாய்ப்பேசா வூமையைப்போல் திரிகு வார்கள் ;
காமப்பா ஞானமென விண்டு மேலும்
காக்கைபித்தன் மிருகம்போல் சுற்று வாரே. 4

சுற்றுவார் பெருநூலைப் பார்த்துப் பார்த்துத்
தூடிப்பா ருலகத்தில் சிற்சில் லோர்கள் ;
தெற்றுவா ரவர்பிழைக்க அனேக வேடம்
தேகத்தி லணிந்துகொண்டு திரிகு வார்கள் ;
பற்றுவார் குருக்களென்பார் சீட ரென்பார் ;
பையவே தீட்சைவைப்பார் தீமை யென்பார் ;
கத்துவார் திரிமூர்த்தி தாமே யென்று
காரணத்தை யறியாத கசடர் தானே. 5

தானென்ற வுலகத்தில் சிற்சில் லோர்கள்
சடைப்புலித்தோல் காசாயம் தாவ டம்பூண்
டூனென்ற வுடம்பெல்லாம் சால்பல் பூசி
உலகத்தில் யோகியென்பார் ஞானி யென்பார் ;
தேனென்ற சிவபூசை தீட்சை யென்பார் ;
திருமாலைக் கண்ணாலே கண்டோ மென்பார் ;
கானென்ற காட்டுக்கு ளலைவார் கோடி
காரணத்தை யறியாமல் கதறுவாரே. 6

கதறுகின்ற பேர்களையா கோடா கோடி ;
காரணத்தைக் கண்டவர்கள் கொஞ்சம் கொஞ்சம்
பதறுகின்ற பேர்களெல்லாம் பராப ரத்தைப்
பற்றிநின்று பார்த்தவர்கள் சுருக்க மப்பா !

உதறுகின்ற பேர்களெல்லா முலகத் துள்ளே
உதித்தகலை தம்முள்ளே யறிய மாட்டார்;
சிதறுகின்ற பேர்களைப்போல் சிதறி டாமல்
சிவசத்தி வரும்போதே தன்னில் நில்லே. 7

நில்லென்ற பெரியோர்கள் பாடை யாலே
நீடுலகம் தன்னுள்ளே நாலு வேதம்
வல்லமையாய்ச் சாத்திரங்க ளிருமூன் றாக
வயிறுபிழை புராணங்கள் பதினெட் டாகக்
கல்லுகளைக் கரைப்பதுபோல் வேதாந் தங்கள்
கட்டினா ரவரவர்கள் பாடை யாலே;
தொல்லுலகில் நாற்சாதி யனேகஞ் சாதி
தொடுத்தார்க ளவரவர்கள் பிழைக்கத் தானே. 8

தானென்ற வுலகத்தி லில்லா விட்டால்
தன்பெருமை யாலழிந்து சகத்தில் வீழவார்;
ஊனென்ற வுடம்பெடுத்தா லெல்லாம் வேணும்;
உலகத்தி லவரவர்கள் பாடை வேணும்;
மானென்ற சிவகாமி சிவனுங் கூடி
மாமுனிவர் முகம்பார்த்து மறைநூல் சொன்னார்;
தேனென்ற சிவகாமி யருளி னாலே
திரட்டினார் வெகுகோடி தேச பாடை 9

தேசத்தின் பாடைதனை யறிந்தி டாமல்
தெளிவாகத் தாமுரைப்பார் பாடை பார்த்தோர்;
ஆசிப்பா ருலகத்தில் கண்ட தெல்லாம்;
ஆச்சரியந் தனைக்கண்டு மறந்து போவார்;
வாசிதனை யறியாத சண்டி மாண்பர்
வார்த்தையினால் மருட்டிவைப்பர் வகையி லாமல்;
நாசிநுனி யதனடுவில் சிவத்தைக் கண்டோர்
நான்முகனும் திருமாலும் சிவனுந் தாமே. 10

சிவசிவா பதினெண்பேர் பாடற் கெல்லாம்
திறவுகோல வால்மீகன் பதினு றுகும் ;
சிவம்பெத்த சித்தரெல்லா மென்னுல் பார்த்துச்
சிவனோடே கோள்சொன்னர் சினந்தான் நாதன் ;
அவமாகிப் போகாமல் சிவனுத் தார
அருளினுல் திறந்துசொன்னேன் உலகுக் காக ;
நவபான நவக்கிரகந் தன்னுள் ளேயே
நாக்குவாய் செவிமூக்கு மத்திக் கப்பால். 11

நாக்குவாய் செவிமூக்கு மத்திக் கப்பால்
நடுவீதி குய்யமுதல் உச்சி தொட்டுத்
தாக்குவாய் அங்கென்றே அதிலே முட்டுத்
தாயாரைப் பூசித்து வேதம் ஓது ;
வாக்குவாய் அசையாமல் மவுனங் கொண்டு
வாசிவரு மிடத்தில்மனம் வைத்துக் காத்து
நீக்குவாய் வாசியொடு மனந்தான் புக்கு
நினைவதனி லடங்கிவரும் வரிசை காணே. 12

காணரிதே பெவாறு மிருசு வாசம் ;
காண்பவனே சிவசித்த னவனே யாகும் ;
பூணரிதிவ் வுலகத்தி லிந்நூல் கிட்டில்
பூபோல சித்தனென வுரைக்க லாகும் ;
காணரிது சிவசத்தி திருமூச் சாகும் ;
காட்டாதே மூடருக்குகே யிந்நூல் தன்னை ;
தோணரிது விழிமயக்கம் சும்மாப் போமே
சொல்லரிய சூட்சுமத்தைச் சொன்னே னப்பா ! 13

சூட்சமிந்நூல் சொல்லுகிறேன் வாசி காண ;
சூட்சாதி சூட்சத்தைத் துறக்கப் போகா ;
சாட்சியில்லை துணையில்லை கேள்வி யில்லை ;
சந்தேக மொன்றுமில்லை விழியைக் காணக்

காட்சியென்ன கற்பகத்தில் வசிக்கு மாப்போல்
காரணத்தைக் கண்ணாலே கண்டிருக்க
ஆட்சிதரு முலைமயாளப் படியே கண்டேன் ;
ஆனந்தத் திருக்கூத்தின் நடக்கை காப்பே. 14

காப்பதற்குப் பத்தியத்தைச் சொல்லக் கேளு ;
காய்கனிகள் பஞ்சரசம் பரமான் னங்கள்
ஏற்கையுட னுண்டுகொண்டு சிவத்தைக் காத்தே
என்மகனே சித்தருடைக் குருநூல் பாராய் ;
ஆத்துமத்துக் கழிவில்லா திருக்க வேணும் ;
அவரவர்கள் நித்யகர்மம் நடக்க வேணும் ;
தீர்க்கமுட னின்றவர்க்கு வாசி சித்தி
சிறப்புடனே பதினாறும் பலிக்குந் தானே. 15

தானவனா யிருக்கவென்றால் வாசி வேணும் ;
தனக்குள்ளே தானிற்க இடமும் வேணும் ;
வானவனாய் நின்றவர்கட் கெல்லாஞ் சித்தி
வானுக்குள் மனமிருக்க மதிபோல் காணும் ;
தேனவனுஞ் சித்தருக்குத் தெவிட்டா மூலி
சிரசப்பா வுடலுக்குப் பதியே யாகும்
கோனவனா யிருக்கவென்று குறியைச் சொன்னேன்
குவலயத்தில் பதினாறுங் குறுகத் தானே. 16

---

# ராமலிங்க சுவாமிகள் ஞானம்

—:○:—

## பாங்கியர்க்கு அறிவுறுத்தல்

### கண்ணிகள்

அம்பலத்தில் ஆடுகின்றார் பாங்கிமாரே !-அவர்
ஆட்டங்கண்டு நாட்டங்கொண்டேன் பாங்கிமாரே ! 1

ஆடுகின்ற சேவடிமேற் பாங்கிமாரே !-மிக
ஆசைகொண்டு வாடுகின்றேன் பாங்கிமாரே ! 2

இன்பவடி வாய்ச்சபையிற் பாங்கிமாரே !-நடம்
இட்டவர்மே லிட்டம்வைத்தேன் பாங்கிமாரே ! 3

ஈனவுடற் கிச்சைவையேன் பாங்கிமாரே !-நட
னேசர்தமை எய்தும்வண்ணம் பாங்கிமாரே ! 4

உத்தமர்பொன் னம்பலத்தே பாங்கிமாரே !-இன்ப
உருவாகி ஓங்குகின்றார் பாங்கிமாரே ! 5

ஊனவுல கைக்கருதேன் பாங்கிமாரே !-மன்றில்
உத்தமருக் குறவானேன் பாங்கிமாரே ! 6

கற்பனையெல் லாங்கடந்தார் பாங்கிமாரே !-என்றன்
கற்பனைக்குட் படுவாரோ பாங்கிமாரே ! 7

கண்டிலர்நான் படும்பாடு பாங்கிமாரே !-மூன்று
கண்ணுடைய ரென்பாரையோ பாங்கிமாரே ! 8

கன்மனமெல் லாங்கரைப்பார் பாங்கிமாரே !-மனம்
கரையாரென் னளவிலே பாங்கிமாரே ! 9

கள்ளமொன்று மறியேனான் பாங்கிமாரே !-என்னைக்
கைவிடவுந் துணிவாரோ பாங்கிமாரே ! 10

கற்பழித்துக் கலந்தாரே பாங்கிமாரே !-இன்று
கைநழுவ விடுவாரோ பாங்கிமாரே ! 11

கண்டவரெல் லாம்பழிக்கப் பாங்கிமாரே !-என்றன்
கன்னியழித் தேயொளித்தார் பாங்கிமாரே ! 12

காமனைக்கண் ணலெரித்தார் பாங்கிமாரே !-என்றன்
காதலைக்கண் டறிவாரோ பாங்கிமாரே ! 13

காவலையெல் லாங்கடந்து பாங்கிமாரே !-என்னைக்
கைகலந்த வள்ளலவர் பாங்கிமாரே ! 14

காணவிழைந் தேனவரைப் பாங்கிமாரே !-கொண்டு
காட்டுவாரை யறிந்திலேன் பாங்கிமாரே ! 15

கிட்டவர வேண்டுமென்றார் பாங்கிமாரே !-நான்
கிட்டுமுன்னே எட்டிநின்றார் பாங்கிமாரே ! 16

கின்னரங்கே ளென்றிசைத்தார் பாங்கிமாரே !-நான்
கேட்பதன்முன் சேட்படுத்தார் பாங்கிமாரே ; 17

கிள்ளையைத்தூ தாவிடுத்தேன் பாங்கிமாரே !-அது
கேட்டுவரக் காணேனையோ மாங்கிமாரே ! 18

கீதவகை பாடிநின்றார் பாங்கிமாரே !-அது
கேட்டுமதி மயங்கினேன் பாங்கிமாரே ! 19

கீழ்மைகுறி யாமலென்னைப் பாங்கிமாரே !-மனக்
கேண்மைகுறித் தாரேயன்று பாங்கிமாரே ! 20

கீடமனை யேனென்னையும் பாங்கிமாரே !-அடிக்
கேயடிமை கொண்டாரன்று பாங்கிமாரே ! 21

குற்றமெல்லாங் குணமாகப் பாங்கிமாரே !-கொள்ளும்
கொற்றவரென் கொழுநாகாணீர் பாங்கிமாரே ! 22

குற்றமொன்றுஞ் செய்தறியேன் பாங்கிமாரே !-என்னைக்
கொண்டுகுலம் பேசுவாரோ பாங்கிமாரே ! 23

குஞ்சிதப்பொற் பாதங்கண்டார் பாங்கிமாரே !-உள்ளக்
குறையெல்லாந் தீருங்கண்டீர் பாங்கிமாரே ! 24

கூற்றுதைத்த பாதங்கண்டீர் பாங்கிமாரே !-எங்கள்
குடிக்கெல்லாங் குலதெய்வம் பாங்கிமாரே ! 25

கூறரிய பாதங்கண்டு பாங்கிமாரே !-களி
கொண்டுநிற்க விழைந்தேனன் பாங்கிமாரே ! 26

கூடல்விழைந் தேனவரைப் பாங்கிமாரே !-அது
கூடும்வண்ணங் கூட்டிடுவீர் பாங்கிமாரே ! 27

# வெண்ணிலா

## கண்ணிகள்

தன்னையறிந் தின்பமுற வெண்ணிலாவே !-ஒரு
தந்திரம்நீ சொல்லவேண்டும் வெண்ணிலாவே ! 1

நாதர்முடி மேலிருந்த வெண்ணிலாவே !-அங்கே
நானும்வர வேண்டுகின்றேன் வெண்ணிலாவே ! 2

சச்சிதானந் தக்கடலில் வெண்ணிலாவே !-நானுந்
தாழ்ந்துவிழ வேண்டுகின்றேன் வெண்ணிலாவே ! 3

இராப்பகலில் லாவிடத்தே வெண்ணிலாவே !-நானும்
இருக்கவெண்ணி வாடுகின்றேன் வெண்ணிலாவே ! 4

தேசுநிற மாய்நிறைந்த வெண்ணிலாவே !-நானுஞ்
சிவமயமதாய்விழைந்தேன் வெண்ணிலாவே ! 5

போதநடு வூடிருந்த வெண்ணிலாவே !-மலப்
போதமற வேண்டுகின்றேன் வெண்ணிலாவே ! 6

ஆருமறி யாமலிங்கே வெண்ணிலாவே !-அரு
ளாளர்வரு வாரோசொல்வாய் வெண்ணிலாவே ! 7

அந்தரங்க சேவைசெய்ய வெண்ணிலாவே !-எங்கள்
ஐயர்வரு வாரோசொல்வாய் வெண்ணிலாவே ! 8

வேதமுடி மேலிருந்த வெண்ணிலாவே !-மல
வேதையுள வேதுசொல்வாய் வெண்ணிலாவே ! 9

குண்டலிப்பால் நின்றிலங்கும் வெண்ணிலாவே !-அந்தக்
குண்டலிப்பால் வேண்டுகின்றேன் வெண்ணிலாவே ! 10

ஆதியந்த மென்றுரைத்தார் வெண்ணிலாவே !-அந்த
ஆதியந்த மாவதென்ன வெண்ணிலாவே ! 11

வித்திலாம லேவிளைந்த வெண்ணிலாவே !-நீதான்
விளைந்தவண்ண மேதுசொல்வாய் வெண்ணிலாவே ! 12

முப்பொருளு மொன்றதென்பார் வெண்ணிலாவே!-அந்த
மூன்றுமொன்றாய் முடிந்ததென்ன வெண்ணிலாவே! 13

நானதுவாய் நிற்கும்வண்ணம் வெண்ணிலே !-ஒரு
ஞானநெறி சொல்லுகண்டாய் வெண்ணிலாவே ! 14

ஞானமய மாய்விளங்கும் வெண்ணிலாவே !-என்னை
நானறியச் சொல்லுகண்டாய் வெண்ணிலாவே ! 15

வாசிவாசி யென்றுரைத்தார் வெண்ணிலாவே !-அந்த
வாசியென்ன பேசக்கண்டாய் வெண்ணிலாவே ! 16

ஐந்தலைப்பாம் பாட்டுகின்றார் வெண்ணிலாவே !-அவர்
அம்பலத்தில் நின்றதென்ன வெண்ணிலாவே ! 17

ஓரெழுத்தில் ஐந்துண்டென்பார் வெண்ணிலாவே !-அது
ஊமையெழுத் தாவதென்ன வெண்ணிலாவே ! 18

அந்தரத்தி லாடுகின்றார் வெண்ணிலாவே !-அவர்
ஆடுகின்ற வன்னமென்ன வெண்ணிலாவே ! 19

அம்பலத்தி லாடுகின்றார் வெண்ணிலாவே !-அவர்
ஆடும்வகை எப்படியோ வெண்ணிலாவே ! 20

அணுவிலணு வாயிருந்தார் வெண்ணிலாவே !-எங்கும்
ஆகிநின்ற வண்ணமென்ன வெண்ணிலாவே ! 21

அண்டபகி ரண்டமெல்லாம் வெண்ணிலாவே !-ஐயர்
ஆட்டமென்று சொல்வதென்ன வெண்ணிலாவே ! 22

அம்பரத்தி லாடுகின்றார் வெண்ணிலாவே !-என்னை
ஆட்டுகின்றா ரிப்பரத்தே வெண்ணிலாவே ! 23

## காட்சிக் கண்ணி

ஆணிப்பொன் னம்பலத் தேகண்ட காட்சிகள்
அற்புதக் காட்சியடி-அம்மா !
அற்புதக் காட்சியடி !

சோதி மலையொன்று தோன்றிற் றதிலொரு
வீதியுண் டாச்சுதடி-அம்மா !
வீதியுண் டாச்சுதடி ! (ஆணிப்)

வீதியிற் சென்றேனவ் வீதி நடுவொரு
மேடை இருந்ததடி-அம்மா !
மேடை இருந்ததடி ! (ஆணிப்)

மேடையி லேறினேன் மேடைமே லங்கொரு
கூட மிருந்ததடி-அம்மா !
கூட மிருந்ததடி ! (ஆணிப்)

கூடத்தை நாடவக் கூடமே லேழ்நிலை
மாட மிருந்ததடி அம்மா !
மாட மிருந்ததடி ! (ஆணிப்)

ஏழ்நிலைக் குள்ளு மிருந்த அதிசயம்
என்னென்று சொல்வனடி-அம்மா !
என்னென்று சொல்வனடி ! (ஆணிப்)

ஓர்நிலை தன்னில் ஒளிர்முத்து வெண்மணி
சீர்நில மாச்சுதடி-அம்மா !
சீர்நில மாச்சுதடி ! (ஆணிப்)

பாரோர் நிலையிற் கருநீலஞ் செய்ய
பவளம தாச்சுதடி-அம்மா !
பவளம தாச்சுதடி ! (ஆணிப்)

மற்றோர் நிலையில் மரகதப் பச்சைசெம்
மாணிக்க மாச்சுதடி-அம்மா !
மாணிக்க மாச்சுதடி ! (ஆணிப்)

பின்னோர் நிலையிற் பெருமுத்து வச்சிரப்
பேர்மணி யாச்சுதடி-அம்மா !
பேர்மணி யாச்சுதடி ! (ஆணிப்)

வேறோர் நிலையில் மிகும்பவ ளத்திரள்
வெண்மணி யாச்சுதடி-அம்மா !
வெண்மணி யாச்சுதடி ! (ஆணிப்)

புகலோர் நிலையிற் பொருந்திய பன்மணி
பொன்மணி யாச்சுதடி-அம்மா
பொன்மணி யாச்சுதடி ! (ஆணிப்)

பதியோர் நிலையிற் பகர்மணி யெல்லாம்
படிகம தாச்சுதடி-அம்மா!
படிகம தாச்சுதடி! (ஆணிப்)

பொற்றம்பங் கண்டேறும் போதினில் நான்கண்ட
புதுமையென் சொல்வனடி-அம்மா!
புதுமையென் சொல்வனடி! (ஆணிப்)

ஏறும்போ தங்கே எதிர்ந்த வகைசொல
என்னள வல்லவடி-அம்மா!
என்னள வல்லவடி! (ஆணிப்)

ஆங்காங்கே சத்திகள் ஆயிர மாயிரம்
ஆகவந் தார்களடி-அம்மா!
ஆகவந் தார்களடி! (ஆணிப்)

வந்து மயக்க மயங்காமல் நானருள்
வல்லபம் பெற்றேனடி-அம்மா!
வல்லபம் பெற்றேனடி! (ஆணிப்)

வல்லபத தாலந்த மாதம்பத் தேறிநான்
மணிமுடி கண்டேனடி-அம்மா!
மணிமுடி கண்டேனடி! (ஆணிப்)

மணிமுடி மேலோர் கொடுமுடி நின்றது
மற்றது கண்டேனடி-அம்மா!
மற்றது கண்டேனடி! (ஆணிப்)

கொடுமுடி மேலா யிரத்தெட்டு மாற்றுப்பொற்
கோயி லிருந்ததடி-அம்மா!
கோயி லிருந்ததடி! (ஆணிப்)

கோயிலைக் கண்டங்கே கோபுர வாயிலிற்
கூசாது சென்றேனடி-அம்மா
கூசாது சென்றேனடி! (ஆணிப்)

கோபுர வாயிலுட் சத்திகள் சத்தர்கள்
கோடிபல் கோடியடி-அம்மா!
கோடிபல் கோடியடி! (ஆணிப்)

ஆங்கவர் வண்ணம்வெள் வண்ணம்செவ் வண்ணமுன்
ஐவண்ண மாகுமடி-அம்மா !
ஐவண்ண மாகுமடி ! (ஆணிப்)

அங்கவ ரெல்லாமிங் காரிவ ரென்னவும்
அப்பாலே சென்றேனடி-அம்மா !
அப்பாலே சென்றேனடி ! (ஆணிப்)

அப்பாலே சென்றேனங் கோர்திரு வாயிலில்
ஐவ ரிருந்தாரடி-அம்மா !
ஐவ ரிருந்தாரடி ! (ஆணிப்)

மற்றவர் நின்று வழிகட்டா மேலோர்
மணிவாயி லுற்றேனடி-அம்மா !
மணிவாயி லுற்றேனடி ! (ஆணிப்)

எண்ணுமவ் வாயிலிற் பெண்ணோ டாணுக
இருவ ரிருந்தாரடி-அம்மா !
இருவ ரிருந்தாரடி ! (ஆணிப்)

அங்கவர் காட்ட அணுகத் திருவாயில்
அன்பொடு கண்டேனடி-அம்மா !
அன்பொடு கண்டேனடி-அம்மா ! (ஆணிப்)

அத்திரு வாயிலி லானந்த வல்லியென்
அம்மை யிருந்தாளடி-அம்மா !
அம்மை யிருந்தாளடி ! (ஆணிப்)

அம்மையைக் கண்டேன் அவளருள் கொண்டேன்
அமுதமு முண்டேனடி-அம்மா !
அமுதமு முண்டேனடி ! (ஆணிப்)

தாங்கும் அவளரு ளாலே நடராசர்
சந்நிதி கண்டேனடி-அம்மா !
சந்நிதி கண்டேனடி ! (ஆணிப்)

சந்நிதி யிற்சென்று நான்பெற்ற பேறது
சாமி யறிவாரடி-அம்மா !
சாமி யறிவாரடி ! (ஆணிப்)

ஆணிப்பொன் னம்பலத் தேகண்ட காட்சிகள்
அற்புதக் காட்சியடி-அம்மா!
அற்புதக் காட்சியடி!

## அக்கச்சி

### கண்ணிகள்

வானத்தின் மீது மயிலாடக் கண்டேன்
மயில்குயி லாச்சுதடி—அக்கச்சி!
மயில்குயி லாச்சுதடி!

துள்ளலை விட்டுத் தொடங்கினேன் மன்றாடும்
வள்ளலைக் கண்டேனடி—அக்கச்சி!
வள்ளலைக் கண்டேனடி!

சாதி சமயச் சழக்கைவிட் டேனருட்
சோதியைக் கண்டேனடி—அக்கச்சி!
சோதியைக் கண்டேனடி!

பொய்யை ஒழித்துப் புறப்பட்டேன் மன்றாடும்
ஐயரைக் கண்டேனடி—அக்கச்சி!
ஐயரைக் கண்டேனடி.

# அகஸ்தியர் ஞானம்-9

—::—

### எண்சீர் விருத்தம்

சத்தியே பராபரமே ஒன்றே தெய்வம்
சகலவுயிர் சீவனுக்கு மதுதா னுச்சு ;
புத்தியினு லறிந்தவர்கள் புண்ணி யோர்கள்
பூதலத்தில் கோடியிலே யொருவ ருண்டு;
பத்தியினுல் மனமடங்கி நிலையில் நிற்பார்
பாழிலே மனத்தைவிடார் ; பரம ஞானி ;
சுத்தியே யலைவதில்லைச் சூட்சஞ் சூட்சம்
சுழியிலே நிலையறிந்தால் மோட்சந் தானே. 1

மோட்சமது பெறுவதற்குச் சூட்சஞ் சொன்னேன் ;
மோகமுடன் பொய்களவு கொலைசெய் யாதே ;
காய்ச்சலுடன் கோவத்தைத் தள்ளிப் போடு ;
காசினியிற் புண்ணியத்தைக் கருதிக் கொள்ளு ;
பாய்ச்சலது பாயாதே ; பாழ்போ காதே,
பலவேத சாத்திரமும் பாரு பாரு ;
ஏச்சலில்லா தவர்பிழைக்கச் செய்த மார்க்கம்
என்மக்கா ளெண்ணியெண்ணிப் பாரீர் நீரே. 2

பாரப்பா நால்வேதம் நாலும் பாரு ;
பற்றுசை வைப்பதற்கோ பிணையோ கோடி ;
வீரப்பா ஒன்றென்றுக் கொன்றை மாறி
வீணிலே யவர்பிழைக்கச் செய்த மார்க்கம் ;
தேரப்பா தெருத்தெருவே புலம்பு வார்கள்
தெய்வநிலை ஒருவருமே காணுர் காணுர் ;
ஆரப்பா நிலைநிற்கப் போரு ரையோ !
ஆச்சரியங் கோடியிலே யொருவன் தானே. 3

ஒருவனென்றே தெய்வத்தை வணங்க வேணும்,
உத்தமனாய்ப் பூமிதனி லிருக்க வேணும்;
பருவமதிற் சேறுபயிர் செய்ய வேணும்;
பாழிலே மனத்தைவிடான் பரம ஞானி;
திரிவார்கள் திருடரப்பா கோடா கோடி;
தேசத்திற் கள்ளரப்பா கோடா கோடி;
வருவார்க ளப்பனே அனேகங் கோடி
வார்த்தையினால் பசப்புவார் திருடர் தானே. 4

தானென்ற தானேதா னென்றே தெய்வம்;
தகப்பனுந் தாயுமங்கே புணரும் போது
நானென்று கருப்பிடித்துக் கொண்டு வந்த
நாதனை நீ எந்நாளும் வணங்கி நில்லு;
கோனென்ற திருடனுக்குந் தெரியு மப்பா
கோடானு கோடியிலே யொருவ னுண்டு;
ஏனென்றே மனத்தாலே யறிய வேணும்
என்மக்காள் நிலைநிற்க மோட்சந் தானே. 5

மோட்சமது பெறுவதற்குச் சூட்சங் கேளு;
முன்செய்த பேர்களுடன் குறியைக் கேளு;
ஏய்ச்சலது குருக்களது குலங்கள் கேளு;
எல்லாருங் கூடழிந்த தெங்கே கேளு;
பேச்சலது மாய்கையப்பா வொன்று மில்லை;
பிதற்றுவா ரவரவரும் நிலையுங் காணார்;
கூச்சலது பாளையந்தான் போகும் போது
கூட்டோடே போச்சுதப்பா மூச்சுத் தானே. 6

மூச்சொடுங்கிப் போனவிடம் ஆருங் காணார்;
மோட்சத்தின் நரகாதி யிருப்புங் காணார்;
வாச்சென்றே வந்தவழி யேற்றங் காணார்;
வளிமாறி நிற்குமணி வழியுங் காணார்;

வீச்சப்பா வெட்டவெளி நன்றாய்ப் பாரு ;
வேதங்கள் சாத்திரங்கள் வெளியாய்ப் போச்சே ;
ஆச்சப்பா கருவுதனில் அமைத்தாற் போலாம் ;
அவனுக்கே தெரியுமல்லா லறிவாய்ப் பாரே. 7

பாரப்பா வுலகுதனிற் பிறவி கோடி ;
படைப்புகளோ பலவிதமாய்க் கோடா கோடி ;
வீரப்பா அண்டத்திற் பிறவி கோடி ;
வெளியிலே யாடுதப்பா வுற்றுப் பாரு ;
ஆரப்பா அணுவெளியி லுள்ள நீதான்
ஆச்சரியம் புழுக்கூடு வலேமோ தப்பா
கூரப்பா அண்டத்திற் பிண்ட மாகும்
குணவியவா னெனக்காற் சத்திய மாமே. 8

சத்தியமே வேணுமடா மனித னானல் ;
சண்டாளஞ் செய்யாதே தவறி டாதே ;
நித்தியகர் மம்விடாதே நேமம் விட்டு
நிட்டையுடன் சமாதிவிட்டு நிலேபே ராதே ;
புத்திகெட்டுத் திரியாதே ; பொய்சொல் லாதே ;
புண்ணியத்தை மறவாதே ; பூசல் கொண்டு
கத்தியதோர் சள்ளிட்டுத் தர்க்கி யாதே
கர்மியென் று நடவாதே கதிர் தான் முற்றே. 9

## ஞானம்-5

### அறுசீர் விருத்தம்

மனமது செம்மை யானல் மந்திரஞ் செபிக்க வேண்டாம் ;
மனமது செம்மை யானல் வாயுவை வுயர்த்த வேண்டாம் ;
மனமது செம்மை யானல் வாசியை நிறுத்த வேண்டாம் ;
மனமது செம்மை யானல் மந்திரஞ் செம்மை யாமே 1

## உயர் ஞானம்

உண்ணும்போ தயிரெழுத்தை வுயர வாங்கி
உறங்குகின்ற போதெல்லா மதுவே யாகும் ;
பெண்ணின்பா லிந்திரியம் விடும்போ தெல்லாம்
பேணிவலம் மேல்நோக்கி அவத்தில் நில்லு ;
திண்ணுங்கா யிலேமருந்து மதுவே யாகும் ;
தினந்தோறும் அப்படியே செலுத்த வல்லார்
மண்ணூழி காலமட்டும் வாழ்வார் பாரு ;
மறலிகையில் அகப்படவு மாட்டார் தாமே. 2

## தனி ஞானம்

ஒண்ணான உச்சிவெளி தாண்டி நின்று
உமையவளுங் கணபதியு முந்தி யாகி
விண்ணொளியாம் அம்பரம்ஓம் அவ்வும் உவ்வும்
விதித்தபரம் ஒருவருக்கு மெட்டா தப்பா !
பண்ணான உன்னுயிர்தான் சிவம தாச்சு ;
பாற்கடலில் பள்ளிகொண்டோன் விண்டு வாச்சு ;
கண்ணான கணபதியைக் கண்ணில் கண்டால்
கலந்துருகி யாடுமடா ஞானம் முற்றே. 3

## தனி ஞானம்-2

விந்துநிலே தனியறிந்து விந்தைக் கண்டால்
விதமான நாதமது குருவாய்ப் போகும் ;
அந்தமுள்ள நாதமது குருவாய்ப் போனால்
ஆதியந்த மானகுரு நீயே யாவாய் ;
சந்தேக மில்லேயடா புலத்தி யன்னே !
சகலகலே ஞானமெல்லா மிதற்கொவ் வாவே ;
முந்தாநாள் இருவருமே கூடிச் சேர்ந்த
மூலமதை யறியாட்டால் மூலம் பாரே. 4

மூலமதை யறிந்தக்கால் யோக மாச்சு ;
முறைமையுடன் கண்டக்கால் வாத மாச்சு ;
சாலமுடன் கண்டவர்முன் வசமாய் நிற்பார் ;
சாத்திரத்தைச் சுட்டெறிந்தா லவனே சித்தன் ;
சீலமுள்ள புலத்தியனே ! பரம யோகி
செப்புமொழி தவறுமல் உப்பைக் கண்டால்
ஞாலமுள்ள எந்திரமாஞ் சோதி தன்னை
நாட்டினுல் சகலசித்தும் நல்கும் முற்றே. 5

## ஞானம்-6

### எண்சீர் விருத்தம்

பூரணமே தெய்வமென உரைத்தா ரையா !
பூரணத்தை யின்னதென்று புகல வேண்டும்
காரணத்தைச் சொல்லுகிறேன் ; நினைவாய்க் கேளு ;
கலையான பதினுறும் பூரணமே யாகும் ;
மாரணமா மூலகத்தில் மதிம யங்கி
மதிகெட்டுப் பூரணத்தை யிகழ்ந்தா ரையா !
வாரணத்தை மனம்வைத்துப் பூரணத்தைக் காத்தால்
வாசியென்ற சிவயோக வாழ்க்கை யாச்சே. 1

ஆச்சப்பா இந்தமுறை பதினெண் பேரும்
அயன்மாலும் அரனேடுங் தேவ ரெல்லாம்
மூச்சப்பா தெய்வமென்றே யறியச் சொன்னர் ;
முனிவோர்கள் இருடியரிப் படியே சொன்னர் ;
பேச்சப்பா பேசாமல் நூலைப் பார்த்துப்
பேரான பூரணத்தை நினைவாய்க் காரு ;
வாச்சப்பா பூரணத்தைக் காக்கும் பேர்கள்
வாசிநடு மையததுள் வாழ்வார் தானே. 2

தானென்ற பெரியோர்க ளுலகத் துள்ளே
தாயான பூரணத்தை யறிந்த பின்பு
தேனென்ற அமுதமதைப் பானஞ் செய்து
தெவிட்டாத மவுனசிவ யோகஞ் செய்தார் ;

ஊனென்ற வுடலைநம்பி யிருந்த பேர்க்கே
ஒருநான்கு வேதமென்றும் நூலா றென்றும் ;
நானென்றும் நீயென்றும் சாதி யென்றும்
நாட்டினா ருலகத்தோர் பிழைக்கத் தானே. 3

உத்தார மிப்படியே புராணங் காட்டி
உலகத்தில் பாரதம்போல் கதையுண் டாக்கிக்
கர்த்தாவைத் தானென்று தோண வொட்டாக்
கபடநா டகமாக மேதஞ் சேர்த்துச்
சத்தாக வழியாகச் சேர்ந்தோர்க் கெல்லாஞ்
சதியுடனே வெகுதர்க்கம் பொருள்போற் பாடிப்
பத்தாகச் சைவர்க்கொப் பனையும் செய்து
பாடினார் சாத்திரத்தைப் பாடி னாரே. 4

பாடினதோர் வகையேது ? சொல்லக்கேளு ;
பாரதபு ராணமென்ற சோதி யப்பா !
நீடியதோர் ராவணன் தான் பிறக்க வென்றும்
நிலையான தசரதன்கை வெல்ல வென்றும்
நீடியவோ ரரசனென்றும் முனிவ ரென்றும்
நிறையருள்பெற் றவரென்றுந் தேவ ரென்றும்
ஆடியதோர் அரக்கரென்றும் மனித ரென்றும்
பாடினார் நாள்தோறும் பகையாய்த் தானே. 5

கழிந்திடுவார் பாவத்தா லென்று சொல்லும்
கட்டியநால் வேதமறு சாத்தி ரங்கள்
அழிந்திடவே சொன்னதல்லால் வேறென் றில்லை ;
அதர்மமென்றுந் தர்மமென்றும் இரண்டுண் டாக்கி
ஒழிந்திடுவா ரென்றுசொல்லிப் பிறப்புண் டென்றும்
உத்தமனைப் பிறப்பனென்று முலகத் தோர்கள்
தெளிந்திடுவோர் குருக்களென்றுஞ் சீட ரென்றும்
சீவனத்துக் கங்கல்லோ தெளிந்து காணே. 6

## ஞானம்-16

### எண்சீர் விருத்தம்

பாரப்பா சீவன்விட்டுப் போகும் போது
 பாழ்த்தபிணங் கிடக்குதென்பார் ; உயிர்போச் சென்பார ;
ஆரப்பா அறிந்தவர்கள் ? ஆரும் இல்லை ;
 ஆகாய சிவத்துடனே சேரு மென்பார் ;
காரப்பா தீயுடன்தீச் சேரு மென்பார் ;
 கருவறியா மானிடர்கள் கூட்ட மப்பா !
சீரப்பா காமிகள்தா மொன்றாய்ச் சேர்ந்து
 தீயவழி தனைத்தேடிப் போவார் மாடே. 1

மாடுதா னானும் ஒருபோக் குண்டு ;
 மனிதனுக்கோ அவ்வளவுந் தெரியா தப்பா !
நாடுமெத்த நகரமென்பார் ; சொர்க்க மென்பார் ;
 நல்வினையோ தீவினையோ எண்ண மாட்டார் ;
ஆடுகின்ற தேவதைகள் அப்பா ! கேளு ;
 அரியதந்தை யினைஞ்சேரு மென்றுந் தோணார் ;
சாடுமெத்த பெண்களைத்தான் குறிப்பா யெண்ணித்
 தளமான தீயில்விழத் தயங்கி னாரே. 2

தயங்காமற் பிழைப்பதற்கே இந்த ஞானம ;
 சார்வாகப் பாராட்டும் ஞானம் வேறே;
மயங்குதற்கு ஞானம்பார் முன்னோர் கூடி
 மாட்டினார் கதைகாவ்ய புராண மென்றும்
இயலான ரசந்தனிலீப் புகுந்தாற் போலும்
 இசைத்திட்டார் சாத்திரங்க ளாறென் றேதான் ;
வயலான பயன்பெறவே வியாசர் தாமும்
 மாட்டினார் சிவனுருத் தாவி னாலே. 3

பிழைப்பதற்கு நூல்பலவுஞ் சொல்லா விட்டால்
பூரணத்தை யறியாம லிறப்பா ரென்றும்
உழைப்பதற்கு நூல்கட்டிப் போடா விட்டால்
உலகத்திற் புத்திகெட்டே யலைவா ரென்றும்
தழைப்பதற்குச் சாதியென்றும் விந்து வென்றும்
தந்தைதாய் பிள்ளையென்றும் பாரி யென்றும்
உழைப்பதற்குச் சொன்னதல்லாற் கதிவே றில்லை ;
உத்தமனே யறிந்தோர்கள் பாடி னாரே. 4

பாடினா ரிப்படியே சொல்லா விட்டால்
பரிபாடை யறியார்க ளுலக மூடர் ;
சாடுவார் சிலபேர்கள் பலநூல் பார்த்துத்
தமைமறந்து படுகுழியில் விழுவார் சாவார் ;
வாடுவார் நாமமென்றும் ரூப மென்றும்
வையகத்திற் கற்செம்பைத் தெய்வ மென்றும்
நாடுவார் பூரணத்தை யறியார் மூடர் ;
நாய்போலே குரைத்தல்லோ வொழிவார் காணே. 5

காணாமல் அலைந்தோர்கள் கோடா கோடி
காரணத்தை யறிந்தோர்கள் கோடா கோடி ;
வீணாகப் புலம்பினதா லறியப் போமோ ?
விஞ்ஞானம் பேசுவதும் ஏதுக் காகும் ?
கோணாமற் சுழுமுனையில் மனத்தை வைத்துக்
குருபாத மிருநான்கில் நாலைச் சேர்த்து
நாணாம லொருநினைவாய்க் காக்கும் போது
நாலுமெட்டு மொன்றாகும் நாட்டி யூதே. 6

ஊதியதோ ரூதறிந்தா லவனே சித்தன் ;
உத்தமனே பதினாறும் பதியே யாகும் ;
வாதிகளே யிருநான்கும் பதியின் பாதம்
வகைநான்கு முயிராகும் மார்க்கங் கண்டு

சோதிபரி பூரணமும் இவைமூன் றுந்தான்
தூங்காமற் றூங்கியங்கே காக்கும் போது
ஆதியென்ற பராபரையு மானு மொன்றாய்
அண்ணாக்கின் வட்டத்துள் ளாகும் பாரே. 7

பாரப்பா வுதயத்தி லெழுந்தி ருந்து
பதறாமற் சுழுமுனையில் மனத்தை வைத்துக்
காரப்பா பரிதிமதி யிரண்டு மாறிக்
கருவான சுழுமுனையி லுதிக்கும் போது
தேரப்பா அண்ணாக்குள் நின்று கொண்டு
தியங்காமற் சுழுமுனைக்குள் ளடங்கும் பாரு;
சீரப்பா பதினாறில் எட்டும் நான்கும்
சிதறாமல் மூன்றுமொன்றாய்ச் சேர்ந்து போமே. 8

ஒன்றான பூரணமே யிதுவே யாச்சு;
உதித்தகலை தானென்று மிதுவே யாச்சு;
நன்றாகத் தெளிந்தவர்க்கு ஞானஞ் சித்தி
நாட்டாமற் சொன்னதனால் ஞான மாமோ?
பன்றான வாதிகுரு சொன்ன ஞானம்
பரப்பிலே விடுக்காதே பாவ மாகும்:
திண்டாடு மனத்தோர்க்குக் காணப் போகா;
தெளிந்தவர்க்குத் தெரிவித்த வுகமை தானே. 9

உகமையின்னஞ் சொல்லுகிறே னுலகத் துள்ளே
உவமையுள்ள பரிகாசம் நனிபே சாதே;
பகைமைபண்ணிக் கொள்ளாதே; வீண்பே சாதே;
பரப்பிலே திரியாதே; மலையே றாதே;
நகையாதே சினங்காதே யுறங்கி டாதே;
நழுகாதே சுழுமுனையிற் பின்வாங் காதே;
செகமுழுதும் பரிபூரண மறிந்து வென்று
தெளிந்துபின் புலகத்தோ டொத்து வாழே. 10

வாழாம லுலகம்விட்டு வேடம் பூண்டு
வயிற்றுக்கா வாய்ஞானம் பேசிப் பேசித்
தாழ்வான குடிதோறு மிரப்பான் மட்டை ;
தலைமயறியாச் சண்டாளர் முழுமா டப்பா !
பாழாகப் பாவிகளின் சொற்கே ளாதே ;
பதறாதே வயிற்றுக்கா மயங்கி டாதே ;
கேளாதே பேச்செல்லாங் கேட்டுக் கேட்டுக்
கலங்காதே யுடலுயிரென் றுரைத்தி டாதே. 11

உடலுயிரும் பூரணமும் மூன்று மொன்றே ;
உலகத்திற் சிறிதுசனம் வெவ்வே றென்பார் ;
உடலுயிரும் பூரணமு மேதென் றக்கால்
உத்தமனே பதினாறு மொருநாள் கெட்டும்
உடலுயிரும் பூரணமும் அயன்மா லீசன் ;
உலகத்தோ ரறியாமல் மயங்கிப் போனார் ;
உடலுயிரும் பூரணடி முடியு மாச்சே ;
உதித்தகலை நிலையறிந்து பதியில் நில்லே. 12

பதியின்ன இடமென்ற குருவைச் சொல்லும்
பரப்பிலே விள்ளாதே தலைரண் டாகும்
விதியின்ன விடமென்று சொல்லக் கேளு ;
விண்ஞான விண்ணுக்கு ளண்ணாக் கப்பா !
மதிரவியும் பூரணமுங் கண்வாய் மூக்கும்
மகத்தான செவியோடு பரிச மெட்டும்
பதியவிடஞ் சுழுமுனையென் றதற்குப் பேராம் ;
பகருவார் சொர்க்கமும்கை லாச மென்றே. 13

கைலாசம் வைகுந்தம் தெய்வ லோகம்
காசிகன்யா குமரியென்றுஞ் சேது வென்றும்
மயிலாடு மேகமென்றும் நாக மென்றும்
மாய்கையென்றும் மின்னலென்றும் மவுன மென்றுந்

துயிலான வாடையென்றும் சூட்சமென்றும்
சொல்லற்ற இடமென்றும் ஒடுக்கம் என்றும்
தயிலான பாதமென்றும் அடிமுடி என்றும்
தாயான வத்துவென்றும் பதியின் பேரே. 14

பேருசொன்னேன் ; ஊர்சொன்னேன் ; இடமும் சொன்னேன் ;
பின்கலையும் முன்கலையும் ஒடுக்கம் சொன்னேன் ;
பாருலகிற் பலநூலின் மார்க்கஞ் சொன்னேன் ;
பலபேர்கள் நடத்துகின்ற தொழிலும் சொன்னேன் ;
சீருலகம் இன்னதென்று தெருட்டிச் சொன்னேன் ;
சித்தான சித்தெல்லாம் சுருக்கிச் சொன்னேன் ;
நேருசொன்னேன் வழிசொன்னேன் நிலையுஞ் சொன்னேன்,
நின்னுடம்பை யின்னதென்று பிரித்துச் சொன்னேன்.

பிரித்துரைத்தேன் சூத்திரமீ ரெட்டுக் குள்ளே
பித்தர்களே ! நன்றாகத் தெரிந்து பார்க்கில்
விரித்துரைத்த நூலினது மார்க்கஞ் சொன்னேன் ;
விள்ளாதே இந்தநன்னூ லிருக்கு தென்று
கருத்துடனே அறிந்துகொண்டு கலைமா றாதே
காரியத்தை நினைவாலே கருத்திற் கொள்ளு ;
சுருதிசொன்ன செய்தியெல்லாம் சுருக்கிச் சொன்னேன் ;
சூத்திரம்போற் பதினாறும் தொடுத்தேன் முற்றே 16

## ஞானம்-13

### எண்சீர் விருத்தம்

கற்பமென்ன வெகுதூரம் போக வேண்டா ;
கன்மலையில் குவடுகளில் அலைய வேண்டா ;
சர்ப்பமென்ன நாகமதோர் தலையில் நின்று
சாகாத கால்கண்டு முனையி லேறி

நிற்பமென்று மனமுறுத்து மனதில் நின்று
நிசமான கருநெல்லிச் சாற்றைக் காணு;
சொற்பமென்று விட்டுவிட்டால் அலைந்து போவாய்;
துரியமென்ற பராபரத்திற் சென்று கூடே. 1

கூடப்பா துரியமென்ற வாலை வீடு
கூறிய நாதர்மகேச் சுரியே யென்பார்;
நாடப்பா அவள்தனையே பூசை பண்ணும்;
நந்திசொல்லுஞ் சிங்காரந் தோன்றுந் தோன்றும்;
ஊடப்பா சிகாரவரை யெல்லாந் தோன்றும்;
ஊமையென்ற அமிர்தவெள்ளம் ஊறலாகும்;
தேடப்பா இதுதேடு காரிய மாகும்;
செகத்திலே இதுவல்லோ சித்தி யாமே. 2

ஆமென்ற பூர்ணஞ்சுழு முனையிற் பாராய்;
அழகான விந்துநிலை சந்த்ர னிற்பார்;
ஓமென்ற ரீங்காரம் புருவ மையம்
உத்தமனே வில்லென்ற வீட்டிற் காணும்;
வாமென்ற அவன்பாதம் பூசை பண்ணு;
மற்றொன்றும் பூசையல்ல மகனே! சொன்னேன்;
பாமென்ற பரமனல்லோ முதலெ ழுத்தாம்;
பாடினேன் வேதாந்தம் பாடினேனே. 3

பாடுகின்ற பொருளெல்லாம் பதியே யாகும்;
பதியில்நிற்கும் அட்சரந்தான் அகார மாகும்;
நாடுகின்ற பரமனதோங் கார மாகும்;
நலம்பெரிய பசுதானே உகார மாகும்;
நீடுகின்ற சுழுமுனையே தாரை யாகும்;
நின்றதோர் இடைகலையே நாத விந்தாம்;
ஊடுகின்ற ஓங்கார வித்தை யாகும்
ஒளியான அரியெழுத்தை யூணிப் பாரே. 4

ஊணியதோர் ஓங்காரம் மேலு முண்டே
உத்தமனே சீருண்டே யூணிப் பாரே ;
ஆணியாம் நடுநாடி நடுவே மூட்டும்
ஆச்சரிய வெழுத்தெல்லாம் அடங்கி நிற்கும்
ஏணியா யிருக்குமடா அஞ்சு வீடே
ஏகாந்த மாகியவவ் வெழுத்தைப் பாரு ;
தோணிபோற் காணுமடா அந்த வீடு ;
சொல்லாதே ஒருவருக்குந் துறந்திட் டேனே. 5

துறந்திட்டேன் மேல்மூலங் கீழ்மூ லம்பார் ;
துயரமாய் நடுநிலையை யூணிப் பாராய் ;
அறைந்திட்டேன் நடுமூலம நடுநா டிப்பார் ;
அப்பவல்லோ வரைதாக்கும் தாரை காணும் ;
உறைந்திட்ட ஐவருந்தான் நடனங் காணும் ;
ஒளிவெளியும் சிலம்பொலியு மொன்றாய்க் காணும் ;
நிறைந்திட்ட பூரணமு மிதுதா னப்பா !
நிசமான பேரொளிதா னிலைத்துப் பாரே. 6

சும்மாநீ பார்க்கையிலே மனத்தை யப்பா
சுழுமுனையி லோட்டியங்கே காலைப் பாராய் ;
அம்மாநீ தேவியென்று அடங்கிப் பாராய் ;
அப்பவல்லோ காயசித்தி யோக சித்தி ;
உம்மாவும் அம்மாவும் அதிலே காணும் ;
ஒருமனமாய்ச் சுழுமுனையில் மனத்தை யூன்று ;
நம்மாலே ஆனதெல்லாஞ் சொன்னோ மப்பா !
நாதர்களி லிதையாரும் பாடார் காணே. 7

காணுகின்ற ஓங்கார வட்டஞ் சற்றுக்
கனலெம்பிக் கண்ணினிலே கடுப்புத் தோன்றும் ;
பூணுகின்ற இடைகலையில் பரம்போ லாடும் ;
பொல்லாத தேகமென்று லுருகிப் போகும் ;

ஆணவங்க ளானவெல்லா மழிந்து போகும் ;
　　அத்துவிதத் துரியாட்ட மாடி நிற்கும் ;
ஊணியதோ ரெழுத்தெல்லாந் தேவி யாகும் ;
　　ஓங்காரக் கம்பமென்ற உணர்வு தானே. 8

உணர்வென்றாற் சந்திரனி லேறிப் பாரு
　　ஓடியங்கே தலையென்ற எழுத்தில் நில்லே ;
அணுவென்றால் மனையாகுஞ் சிவனே யுச்சி
　　ஆகாரமென்ன பதியுமென்ன சூட்ச மாகும் ;
கணுவென்ன விற்புருவ மகண்ட வீதி ;
　　கயிலாய மென்றதென்ன பாரத்தின் வீடு ;
துணுவென்ற சூரியன்றன் னெருப்பைக் கண்டு
　　தூணென்ற பிடரியிலே தூங்கு தூங்கே. 9

மூவெழுத்தும் ஈரெழுத்தும் மாகி நின்ற
　　மூலமதை யறிந்துரைப்போன் குருவு மாகும் ;
ஊவெழுத்துக் குள்ளேதா னிருக்கு தப்பா
　　உணர்வதுவே கண்டறிந்தோ னவனே யாசான் ;
யாவருக்குந் தெரியாதே அறிந்தோ மென்றே
　　அவரவர்கள் சொல்வார்க ளறியா மூடர் ;
தேவரொடு மாலயனுந் தேடிக் காணார்
　　திருநடனங் காணமுத்தி சித்தி யாமே. 10

ஈரெழுத்து மோரெழுத்து மாகி யாங்கே
　　இரங்கிநிற்கும் சபையப்பா மூலத் துள்ளே
வேரெழுத்தும் வித்தெழுத்து மிரண்டுங் கொண்டு
　　வித்திலே முளைத்தெழுந்து விளங்கி நிற்கும்
சீரெழுத்தை யூணிநல்ல வாசி யேறித்
　　தெருவீதி கடந்தமணி மண்டபத்துச்
சாரெழுத்தி னுட்பொருளாம் பரத்தை நோக்கிச்
　　சார்ந்தவர்க்குச் சித்திமுத்தி தருமே தானே. 11

ஏகமெனு மோரெழுத்தின் பயனைப் பார்த்தே
　　எடுத்துரைத்து மிவ்வுலகி லெவரு மில்லை
ஆகமங்கள் நூல்கள்பல கற்றுக் கொண்டே
　　அறிந்தமென்பார் மவுனத்தை அவனை நீயும்
வேகாச்சா காத்தலைகால் விரைந்து கேளாய்;
　　விடுத்ததனை யுரைப்பவனே ஆசா னாகும்;
தேகமதி லோரெழுத்தைக் காண்போன் ஞானி;
　　திருநடனங் காணமுத்தி சித்தி யாமே. 12

குருவாக உமையாக னெனக்குத் தந்த
　　கூறறிய ஞானமது பத்தின் மூன்று
பொருளாகச் சொல்லிவிட்டே னப்பா நீதான்
　　பொருளறிந்தார் பூரணமும் பொருந்திக் காணே
அருளாகா திந்நூலைப் பழித்த பேர்கள்
　　அருநரகிற் பிசாசெனவே அடைந்து வாழ்வார்;
அருளாக ஆராய்ந்து பார்க்கும் பேர்கள்
　　ஆகாயம் நின்றநிலை அறிய லாமே; 13

# சட்டை முனி ஞானம்

—::—

## பூசை செய்யும் முறை

### எண்சீர் விருத்தம்

காணப்பா பூசைசெய்யும் முறையைக் கேளாய் ;
கைம்முறையாய்ச் சுவடிவைத்துப் பூசை செய்வார்
பூணப்பா சிலபேர்தான் தீபம் வைத்துப்
புகழாகப் பூசைசெய்வார் பெண்ணை வைத்தும் ;
நாளப்பா சக்கரத்தைப் பூசை செய்வார்
நம்முடைய பூசையென்ன மேருப் போலே
ஓதப்பா நாற்பத்துமுக் கோணம் வைத்தே
உத்தமனே ! பூசைசெய்வார் சித்தர் தானே. 1

தானென்ற மேருவைத்தான் பூசை செய்வார்
சாபமிட்டால் அண்டரண்டம் தீயா வேகும் ;
தேனென்ற மேருவுக்குத் தீட்சை வேண்டும் ;
சிறுபிள்ளை யாமொருவன் தீண்டப் போகா ;
வானென்ற மேருவைத்தான் பூசை செய்தோர்
வாய்திறந்தே உபதேசம் சொன்ன ராகிற்
கோனென்ற வாதசித்தி கவன சித்தி
கொள்ளையிட்டான் அவன்சீடன் கூறி னானே. 2

கூறியதோர் வாலையின்மூன் றெழுத்தைக் கேளாய் ;
குறியறிந்து பூசைசெய்து பின்பு கேளாய் ;
மாறியதோர் திரிபுரையெட் டெழுத்தைக் கேளாய் ;
மைந்தனே ! இவளைநீ பூசை பண்ணத்
தேறியதோர் புவனை தனின் எழுத்தைக் கேளாய் ;
திறமாகப் புவனையைநீ பூசை பண்ணு ;
ஆறியதோர் யாமளையா றெழுத்தைக் கேளாய் ;
அவளுடைய பதம்போற்றிப் பூசை பண்ணே. 3

பண்ணியபின் யாமளையைந் தெழுத்தைக் கேளாய் ;
        பண்பாகத் தீட்சையைந்தும் முடிந்த பின்பு
வண்ணியதோர் வாசியென்ற யோகத் துக்கு
        மைந்தனே வைத்துப்ராணா யாமந் தீரும் ;
கண்ணியதோர் இத்தனையும் அறிந்தி ருந்தாற்
        காயசித்தி விக்கினங்கள் இல்லை யில்லை ;
உண்ணியதோர் உலகமென்ன சித்த ரென்ன
        உத்தமனே விட்டகுறை எடுக்கும் காணே. 4

கைலாயக் கம்பளிச் சட்டை முனி நாயனர்

அருளிச்செய்த

# முன் ஞானம்–100

—::—

### எண்சீர் விருத்தம்

அகண்டபரி பூரணமாம் உமையாள் பாதம்
அப்புறத்தே நின்றதோர் ஐயர் பாதம்
புகன்றுநின்ற கணேசனெடு நாதாள் பாதம்
புகழ்பெரிய வாக்குடைய வாணி பாதம்
நிகன்றெனவே யெனையாண்ட குருவின் பாதம்
நிறைநிறையாய்ச் சொருபத்தில் நின்றோர் பாதம்
முகன்றெனையீன் றெடுத்தசின் மயத்தின் பாதம்
மூவுலகு மெச்சுதற்குக் காப்புத்தானே. 1

தாங்கிநின்ற சரியையிலே நின்றுசடம் வீழில்
தப்பாது கிரியையுள்ளே சாரப் பண்ணும்
வாங்கிநின்ற கிரியைவிட்டு விழுந்த தானல்
மகத்தான வுடலெடுத்து யோகம் பண்ணும்
ஓங்கிநின்ற கிரியைவிட்டு விழுந்த தானல்
உத்தமனே! உயர்ந்துநின்ற ஞானந் தோற்றும்
பாங்கில்நின்ற அச்சென்மம் மவுன முத்தி
பரிவாக வாய்ந்தவர்கள் அறிந்து கொள்ளே 2

அறிந்திருந்த நான்கும் விக்கின முண்டாம்
அப்பனே ! ஆகாமியஞ் சித்தி ஞேடே
மறிந்துநின்ற பிராரத்தந் தோயத் தோடு
மகத்தான நாலுக்கும் விக்கின மாச்சு ;

பிரிந்துநின்ற நாலினுற் செய்வ தென்ன ?
பேரான வறுமையொடு கிலேசந் துக்கஞ்
செறிந்துநின்ற பெண்பொன்னும் மண்ணி னலே
சேத்துமத்தி லீப்போலத் தியங்கு வாரே. 3

தியங்கினல் கொர்ச்சித்துத் துரத்துச் சண்ணுஞ்
சிறியர் மிலேச்சரையே சகத்தி னுள்ளே
மயங்கினர் நாலுபா தத்தி னுள்ளும்
மனஞ்செவ்வை யாவதெப்போ தறிவ தெப்போ ?
தயங்கின ருலகத்திற் கோடி பேர்கள் ;
சாவதும் பிறப்பதுங்கா வடிபோ லாசசு
துயங்கினர் துயரத்தால் ஞானம் போச்சு ;
சுடுகாட்டில் அறிவதுபோல் சுத்தப் பாழே. 4

பாழான மாய்கைசென் றெழிவ தெப்போ ?
பரந்தமனஞ் செவ்வையாய் வருவ தெப்போ ?
வாளான விழியுடைய பெண்ணைச் சேரும்
மயக்கமற்று நிற்பதெப்போ ? மனமே ! ஐயோ !
பாழான வுலகமத னசை யெல்லாங்
கருவறுத்து நிற்பதெப்போ? கருதி நின்ற
கோளான கருவிவிட்டு மேலே நோக்கிக்
கூடுவது மேதென்றல் மூலம் பாரே. 5

மூலமதி லாறுதலங் கீழே தள்ளி
முதிர்ந்துநின்ற மேலாறு மெடுத்து நோக்கிக்
கோலமுட னுன்மனையைத் தாண்டி யேறிக்
கொடியதொரு ஞானசத்திக் குள்ளே மைந்தா !
பாலமென்ற கேசரியாம் மவுனத் தூன்றிப்
பராபரமாம் மந்திரத்தில் ஞானம் முற்றிக்
காலமொடு பிறப்பிறப்புங் கடந்து போகுங்
கைவிட்ட சூத்திரம்போல் சடமு மோங்கே. 6

ஓங்கார முதற்கொண்டைந் தெழுத்தோ டாறும்
 உற்றுநின்ற பஞ்சகர்த்தா ளிருந்தி டம்பார்
ஆங்கார மாணவம்நா னெனலும் போனல்
 அப்பவலோ அகாரமுத லுகாரங் காணும் ?
பாங்கான மகாரமொடு விந்து நாதம்
 பரவியதன் மேல்நிற்கும் பராப ரந்தான்
வாங்கான மவுனத்தைப் பற்றி யேறு
 மருவிநின்ற லகிரியைத்தா னெத்துக் காணே. 7

ஒத்துநின்ற ஓங்காரம் மண்ணை யுண்ணும்,
 உருவியந்த மண்சென்று சலத்தை யுண்ணும் ;
பத்திநின்ற சலமதுதான் தீயை யுண்ணும் ;
 பாங்கான தீச்சென்று காலை யுண்ணும் ;
வெத்திநின்ற கால்சென்று விண்ணை யுண்ணும் ;
 விழுந்ததப்பா சடமென்வே தாந்தப் பேச்சு ;
முத்திகண்டு கூடுவது மெந்தக் காலம் ?
 மூடரே மதுவையுண்டு மேல்பா ரீரே. 8

பாரப்பா அகாரமுத லுகாரங் கொள்ளும் ;
 பாங்கான உகாரமது மகாரம் கொள்ளும் ;
நேரப்பா மகாரமது விந்து கொள்ளும் ;
 நேரான விந்துவது நாதம் கொள்ளும் ;
சேரப்பா நாதமுற்றுச் சத்தி கொள்ளும் ;
 சேர்ந்துநின்ற சத்தியல்லோ சிவத்தைக் கொள்ளும் ;
ஆரப்பா சிவந்தன்னைப் பரந்தான் கொள்ளும் ;
 அப்பரத்தைக் கொண்டவிடம் அறிந்தே யுன்னே, 9

உன்னிநின்ற மூலமுத லாறும் பார்த்தே
 உருகிநின்ற சுழுமுனையை யறிந்து பின்பு
மன்னிநின் ற மதிமேல்சாம் பவியைக் கண்டு
 மருவிநின் று மனமுறைந்து தேர்ந்த பின்பு

பன்னிநின்ற இவ்வளவும் யோக மார்க்கம் ;
பகலிரவு மற்றவிடம் ஞான மார்க்கம் ;
கன்னிநின்ற விடங்கண்டா லவனே ஞானி
காட்டுவான் கேசரியைக் காட்டு வானே. 10

காட்டுவான் கிரியுன்னை மேலே யேற்றிக்
கைவிட்டாள் கிரியைத்தான் கீழே தள்வாள்
மூட்டுவாள் குளிகைவிட்டால் கணத்துக் குள்ளே
மூதண்ட புவிகடந்து தெளிவுங் காணும்
ஆட்டுவா ளண்டரண்ட மாலை பூண்டாள்
ஆதிவத்து அனாதிவத்து இரண்டு மொன்றே
ஊட்டுவாள் நிர்க்குணத்தி னமுர்த வல்லி
உயர்ந்துநின்ற ஞானசத்தி யுறவு தானே. 11

உறவென்னத் தாயைவிட வுறவு முண்டோ ?
உலுத்தரையோ வாமத்தைத் தூடிப் பார்கள்
குறைவென்ன திரோதாயி சமயந் தோறுங்
கூடியல்லோ மாயவலை கூட்டி யாட்டி
மறவென்ன ஞானமென்ன மங்கித் தள்ளி
மகத்தான சமுசார வலையிற் போட்டாள்
நிறவென்ன வாமத்தால் ஞான மாச்சு
நின்றவனே சிவயோகி வாசி பாரே! 12

வாசியென்றும் மவுனமென்றும் இரண்டும் வித்தை
மகத்தான சாம்பவிகே சரியும் ரண்டு
தேசியென்றால் யோகத்துக் காதி வித்தை
திறமான மவுனமென்றால் ஞான வித்தை
மாசியென்ற மனமுடைத்தா லிரண்டு மாகா ;
மருவிநின்றே அறிவறிந்தா லிரண்டு மாகும் ;
தூசியென்ற வெளியல்லோ அண்ட வீதி
சொக்காமல் கிரிகொண்டே ஆக்கி யேறே. 13

ஆக்கிநின்ற பரிசத்தால் கொசுவி றந்த
தாச்சரியம் ரூபத்தால் வண்டி றந்த
பாக்கிநின்ற மணியொலியால் மானி றந்த
பாழான வுரிசையினல் மீனி றந்த
தாக்கிநின்ற கெந்தியினு லெறும்பு சென்று
சாதகமாய் மாண்டதிந்த ஐந்தும் பாரு ;
பாக்கின்ற இந்திரிய விடயத் துள்ளே
பாழான மனஞ்சிக்கிப் படுகு வாரே. 14

வாரான வுலகத்தில் மனிதர் கோடி
மருவிநின்றே யுண்டுடுத்துச் சைபோ கித்துந்
தாரான கஜதுரங்க ரதங்க ளேறிச்
சகலரத்ன பூடணங்கள் தரித்து விம்மி
மாரான வாழ்வடைந்தோர் இறந்தா ரையா !
மாண்டவர்கள் வெகுகோடி மாய வாழ்க்கை
கூரான சிவபோக ஞானம் வந்தால்
கூடழிந்து போகாது கூடு கூடே. 15

கூடுவதம் பரமோகே சரமோ வென்னில்
கூர்மையுள்ள வானேவ தீதமோ வென்னில்
ஆடுவதாச் சரியநின் மலமோ வென்னில்
அருமையுள்ள நிர்க்குணமோ நிரஞ்சனமோ என்னில்
பாடுவது பதங்கடந்த பூரணமோ வென்னில்
பகலிரவு மற்றிடமோ பராபரமோ வென்னில்
ஊடுவதெங் கேபின்னை யெங்கு மில்லை
உம்மென்று லூமவெள்ள மோகங் காணே. 16

மோகமென்ற வுரலுக்குள் மனந்தான் சிக்கி
முசியாம லிடிப்பதற்கைம் பொறியுங் கோல்தான்
பாகமென்ற கோபம்வந்தே யுருவாய் நின்று
பதையாமற் சண்ணிச்சே யுலக மெல்லாந்

தாகமென்ற ஞானம்வந் தென்ன செய்யும் ?
சண்டாள இந்திரியச் சார்பி னாலே
வேகமென்ற மனலகரி யைத்தான் கொண்டு
விண்ணுக்கு ளேகிற்க வெளியாய்ப் போமே. 17

வெளியேது வெளிக்குள்ளே வெளியங் கேது ?
வேதாந்த வெளிகடந்த வொளியங் கேது ?
அளியேதவ் வளிகடந்த அண்ட மேது ?
அப்புறத்தே தோற்றுகின்ற சோதி யேது ?
நெளியேது நினைவெதுமிர்க் குணர்ந்தா னேது ?
நேரான பூரணத்தின் நாத மேது ?
சுழியேது ? சுழியடக்குஞ் சூட்ச மேது ?
தோற்றுமப்பா வானத்தை யொத்துப் பாரே. 18

ஒத்துநின்ற சரியையொடு கிரியை ரண்டும்
உறவாதி செய்தவப்பா நன்றாய்க் கேளு ;
பத்திநின்ற யோகமுதல் ஞானம் ரண்டும்
பாங்காகச் சித்தருக்கே அடுத்த வாறே
அத்திநின்ற ஆகாம்யசஞ் சிதமாம்பிரா ரத்வம்
ஆருக்கு மடுக்குமென்றால் யோக மெய்தி
முத்திநின்ற ஞானத்திற் புகுந்தோர்க் கையா
மூன்றுமிலைப் பிரபஞ்ச முழுதும் போச்சே, 19

போச்சென்பர் முக்காலம் பிறகே நின்று
புரிமுருக்குப் போலேறிப் புணர்ந்து கொல்லும்
ஆச்சப்பா காலமென்ன வென்று சொல்லி
அவரவர்கள் சபஞ்செய்வா ரறிந்த மட்டும் ;
நீச்சப்பா அகாலவெள்ளம் கடப்பா ரென்றால்
நேரான ஞானியல்லோ கடந்து நின்றார்
மூச்சப்பா அற்றிடத்தைப் பாரு பாரு
மூட்டுவிக்கு முகிடந்தான் ஞானத் தீயே. 20

தீக்குள்ளே வெந்துநின்ற பற்பம் போலச்
செகசால முதற்கொண்டு காலம் போகும்;
தீக்குள்ளே விழுந்தெழுந்த நெய்யைப் போலச்
சிறப்பான ஞானமது திரண்டே யேறும்;
தீக்குள்ளே காட்டமொடு கோலுங் கூடித்
திரண்டாற்போற் கருவியெல்லாம் கணத்தில் மாளும்;
தீக்குள்ளே பராபரந்தா னிருந்த தாயின்
செகமெல்லாம் வித்தையென்று தெளிந்து போமே. 21

தெளிந்தவிடங் கண்டாரார் சித்தர் யோகி
செகமெல்லாம் நானெனன்பார் திருட்டு ஞானம்
ஒளிந்துவிட முனைத்தால்கே சரிக்குள் நிற்பாள்
உற்றுப்பார் மகாரம்வைத்தே யூதி யூதே
அளிந்தவிடம் நிர்க்குணந்தா னதிலே கேளு;
ஆச்சரிய மகாரமென்றே யுண்ட துண்டு;
களிந்தவிடம் நிராகார மொன்று மில்லைக்
காட்டுந்தா ரறிவுகொண்டே யுற்றுக் காணே. 22

உற்றுநின்றே உலகத்தோர் ஞானம் பார்த்தே
ஊனுக்குக் கிடையாமல் புரட்டுப் பேசிப்
பற்றுகின்ற மோகத்தாற் பெண்ணைக் கூடிப்
பரந்துநின்ற திரோதாயி தலையிற் சிக்கிக்
கொத்துகின்ற விடங்காண்பார் கண்ணை மூடிக்
கும்மென்றே யிருளாகு மறிவும் பொய்யாம்
மற்றுநின்ற லகரியினல் கொண்டே யேற
மாட்டார்கள் அறுசமய மாடு தானே. 23

சமயமெல்லாஞ் சத்தியுண்டு சிவமு முண்டு;
சண்டாளர் பிரித்தல்லோ தள்ளி னார்கள்;
சமயமெல்லாம் வேதாந்தசித் தாந்த முண்டு;
சாதகத்தைப் பாருமற் றயங்கி னார்கள்;

சமயமெல்லாம் நாதமுண்டு விந்து முண்டு ;
காக்காமற் கெட்டார்க ளுலகத் தோர்கள் ;
சமயமெல்லாம் அம்பரமாம் ஞான முண்டு ;
தாயைவிட்ட பாவத்தால் தவறிப் போச்சே. 24

போச்சப்பா ஆறுறும் பானத் தாலே
புத்தியுள்ளோர் பானத்தாற் கண்டா ரையா !
ஆச்சப்பா வாமமென்ன நிசித மென்பார்
அதன்குணமோ திரோதாயி யனுட்டா னந்தான்
ஓச்சப்பா நாதாக்கள் ரிடிகள் சித்தர்
உயர்ந்தவரைக் கண்டவர்பா னத்தா லன்றோ ?
காய்ச்சமரம் பட்டதென்ன வேரற் றுற்போல்
கசடரென்ற அறுசமயங் கேட்ட பாங்கே. 25

பாங்கான குண்டலிக்குள் மூல மொன்று;
பாரப்பா கண்டத்தில் மூல மொன்று ;
போங்கான புருவமைய மூல மொன்று ;
புகழான விந்துவிலே மூல மொன்று ;
வாங்கான சத்தியிலே மூல மொன்று
மருவிநின்ற பராபரத்தில் மூல மொன்று ;
தேங்காம லிவையாறுங் கண்ட ஞானி
சேர்ந்துநின்ற மும்மூல யோகி யாமே. 26

ஆமப்பா நகாரமுதல் யகாரம் நிற்கும்
அவ்வளவும் யோகத்தின் மூல மாச்சு ;
தாமப்பா அகாரமுதல் உகாரந் தொட்டுச்
சாதகமாய் மகாரவரை ஞான மூலம்
ஓமப்பா திசைநாத மவுனத்திற் காணும்
உற்றேற வுற்றேற அகண்ட வீதி
காமப்பா வுண்டக்கால் யோகசித்தி
கடுங்கானற் பாலுண்ட ஞான மாச்சே. 27

ஆச்சிந்த வரிசைவிட்டே யுலக ஆசான்
    ஆதி அந்த மொன்றுரவி மதிதா னென்பான் ;
மூச்சற்ற விடங்காட்டத் தெரியா நின்று
    முன்னேது பின்னேது சாங்க மென்பான் ;
வாச்சிந்த மயக்கத்தா லுலகோர் கேட்டார்
    மதுவைவிட்டே யியல்லோசை யத்தோர் கேட்டார்
ஓச்சிந்த விதமறிந்தோன் யோகஞானி
    உம்மென்று ஆகுமென்ற நாத மாமே. 28

நாதமப்பா யோகத்தி லேந்து நாதம்
    நலமான மவுனத்தி லேந்து நாதம்
வேதப்பா கடந்திடத்தே சுத்த நாதம்
    வெட்டவெளிக் குள்ளேயொரு நாத முண்டு
போதமப்பா கடந்திடத்தே யந்த நாதம்
    புகலாகச் சேவித்து நிற்கு மென்றும்
காதமப்பா தூரமல்ல அந்தோ அந்தோ !
    கண்ணிமைக்குள் விண்ணுக்குள் கலந்து காணே. 29

விண்ணேது வெளியேது வொளியங் கேது ?
    விரைந்திந்த மூன்றுங்கே சரிதா னுச்சு ;
கண்ணேது காதேது மூக்கங் கேது ?
    கண்டிப்பாய்க் கண்டவெல்லாம் அழிந்து போச்சே ;
ஒண்ணிரண் டேதுசம ரசந்தா னேது ?
    உற்றுப்பார் வெட்டவெளி யொன்று மில்லை ;
எண்ணேது நினைவேதிங் கறிவு மேது ?
    ஏகமாய்க் கலந்துத்தி யிடத்தைக் காணே. 30

உத்திகொண்டு ஞானநூல் பார்த்துப் பார்த்தே
    உலகத்தோர் ஞானமெல்லாம் வந்த தென்று
பத்திகொண்டே அலைவார்கள் விண்ணைப் பாரார்
    பாழான மனத்தையங்கே நிறுத்த மாட்டார்

மூத்திகண்ட விடமெங்கே யென்று காணார்
மூச்சற்று நின்றிடத்தை நோக்கிப் பாரார்
சித்திகண்டால் சித்திகொண்டு செய்ய மாட்டார்
சேர்ந்துமதா யிருக்கறியார் திருடர் தானே! 31

தானென்ற ஆணவத்தை நீக்க மாட்டார்
சண்டாள கோபத்தைத் தள்ள மாட்டார்
ஊனென்ற சுகபோக மொழிக்க மாட்டார்
உற்றுநின்ற சையோகம் விடுக்க மாட்டார்
பானென்ற ஞானவெள்ள முண்ண மாட்டார்
பதறாமல் மௌனத்தே யிருக்க மாட்டார்
வானென்ற பொருளென்ன வெளிதோ மைந்தா!
மகத்தான மனமடங்க எய்யுங் காணே. 33

காணிந்த வுலகத்தில் மாயக் கூத்துங்
கண்மூக்குச் செவியோடிந் திரியக் கூத்தும்
பூணந்த வாசியினுல் வறுமைக் கூத்தும்
புகழான செனனமொடு மானக் கூத்தும்
ஆணிந்த அண்டமெல்லாம் படைத்த கூத்தும்
ஆங்காரம் மனம்புத்தி யான கூத்தும்
தோணிந்தப் படிபடைத்த பரமே யையா!
சொற்பெரிய பூரணமே யென்று கூவே. 33

கூவையிலே யாத்தாளைத் தொழுது கூவக்
குறையாத கருணையினுல் திரும்பிப் பார்த்துத்
தாவையிலே மதலைத்தான் தாய்தான் சென்று
சார்வாக எடுத்ததுபோ லுன்னை மைந்தா!
தேவையிலே யெடுத்தணைத்தே யுயிரை வைப்பாள்
செகசால மாடுகிற திருட்டுத் தாய்தான்
பாவையிலே மனஞ்சென்று பரவா விட்டால்
பாராது போலிருப்பாள் பாரு பாரே. 34

பாரப்பா செகமனைத்தும் அண்ட மெல்லாம்
பாங்கான சூழ்ச்சியில்வைத் திருந்த கன்னி
நேரப்பா இவளைவிட்டு யோகம் பார்த்தேன்
நேராக அண்டத்தில் ஞானம் பார்த்தேன்
சேரப்பா சுத்தவிழல் மனமே பேயாம்
செகசாலக் கூத்தைவிட்டுத் தெளிய மாட்டார்
ஆரப்பா அவளைவிட்டு ஞானங் கண்டோர்
அலைக்கழிக்கு மாசையென்ற பாம்பு தானே. 35

பாம்பையல்லோ ஆபரணம் பூண்ட ஈசன்
பரிவாக மதியோடு கொன்றை சூடிப்
பாம்பையல்லோ முந்நூலாய்ப் போட்ட கூத்தன்
பாங்கான கரியுரித்த பாணி பாணி
பாம்பையல்லோ கங்கணமாய்த் தரித்துக்கொண்டு
பரியுழுவைத் தோலுடுத்துப் பாதந் தூக்கிப்
பாம்பையல்லோ மனைக்குமோ திரமாய்ப் போட்டுப்
பாரென்றே அகண்டத்தி லாடி னாரே. 36

ஆடினதோர் கூத்தெல்லா மாத்தாள் மெச்சி
அண்டையிலே யழைத்தானை யிருத்திக்கொண்டாள்
நாடினதோ ரவளருகி லரனு மெய்வான்
நாமறியோ மவனவளு மொன்றே யொன்றே
ஊடினதோ ரிடமெங்கே? ஒலிகேட் பெங்கே ?
ஒன்றாகக் காணுகிற நடன மெங்கே?
கூடினதோ ரகண்டத்தின் சோதி யெங்கே?
கூசாமல் மவுனத்திற் கூடிக் காணே. 37

## மெய்ஞ்ஞான குரு

காணப்பா மகாரவரை நாத வோசை
கன்னிக்குப் பீடமடா மவுன ஞானம்
ஊணப்பா வூணப்பா நாதத் தோடே
ஒருமுனையா யொருவழியா யொன்று யோடும

தோணப்பா தோற்றுவதங் கொன்று மில்லை
சுத்தவெளி ரவிகோடி சூழ வன்னி
ஆணப்பா மாகோடி கண்கொள் ளாதே
ஆச்சரிய மதிகமென்ற மகாரங் காணே. 38

மகாரமல் லோமுந்தி யாசான் சுட்டி
வழிகாட்டு முறைமையது ஞான மார்க்கம்
மகாரமல்லோ அடங்கியந்த நாதந் தாண்டி
மருவிநின்ற இடமல்லோ கேசரி மைந்தா !
மகாரமென்ன மேலெழுத்தே யென்பார் மாண்பர்
மாட்டுவதை யூன்றெழுத்த தென்று காணார்
மகாரமென்ன மகாரவித்தை யதீத வித்தை
வாய்திறந்து பேசாதே மௌன மாமே. 39

மௌனவித்தை யாதெனில்மூன் றெழுத்தே யென்பார்
மாட்டுகிற இனங்காணார் மார்க்கங் காணார்
மௌனவித்தை யாவதென்வாய் மூட லென்பார்
மாடுமுதற் குதிரையினை லாவ தென்ன ?
மௌனவித்தை கேட்டார்கூட் டுறவு காணார்
வாய்மூடி வழியோடே நாதங் கேளார்
மௌனவித்தை யாசான்மூன் றூண்டிக் காட்டில்
மணிமுதலாய்த் திசைநாதங் கேட்குந் தானே. 40

கேட்கையிலே மதியினிட மமிர்தஞ் சிந்துங்
கெடியான துவாசமுர் தங் கடந்து தோன்றும்
வாழ்க்கையிலே யாசையறும் நினைவும் போகும்
வாரிதிபோ லண்ணாக்கி லமிர்த மோடும்
தாக்கையிலே ரவிகோடி காந்தி காணும்
சச்சிதா னந்தவொளி தானே தோன்றும்
மூட்கையிலே மேலமிர்த லகரி மீறும்
மூன்றுகமும் கணமாகு மூட்டிப் பாரே. 41

மூட்டையிலே யுலககிரி கொண்டு மூட்டு
முதிர்ந்தபின்பு விண்ணுள்கிரி வந்து காக்கும்
கூட்டையிலே மகாரத்தை யறிந்து கூட்டுங்
கும்மென்ற நாதத்தில் கூடி யேறும்
மாட்டையிலே யறிவோடு மனத்தை மாட்டும்
மறுகாலும் நாதத்தைக் கூர்ந்து கேளே
ஒட்டையிலே யொருவழியா யோடிற் றானல்
உத்தமனே யச்சின்ன முத்தி யையா! 42

ஏறுகிற துறை

ஐயனே! குறுவான அகண்ட மூர்த்தி!
அதிதமென்ற ஞானமெல்லாம் அருளிச் செய்தாய்;
மெய்யனே! ஏறுகிற சாத கஞ்சொல்
வேதாந்த லட்சியத்தை விளங்கச் சொல்லு
துய்யனே! நிலேதோறு மெழுத்தைச் சொல்லு
சொற்பெரிய பிராணுப சூட்சஞ் சொல்லு
தையனே! தையமென்ற நிர்த்தஞ் சொல்லு
சாதகமாய் லட்சியத்தைச் சாற்றி டாயே. 43

சாற்றிடென்று கேட்டமா ணுக்க னேகேள்:
சந்தோட மாச்சுதிப்போ கார்பு சொல்வேன்;
ஏற்றமென்ற மூலத்தில் வாசி வைத்தே
எளிதாகப் பிராணுயம் பண்ணித் தேறி
ஆற்றுமென்ற குண்டலிக்குள் நடனங் கண்டால்
ஆதித்தன் கோடியைப்போல் காந்தி காணும்
மாற்றுமென்ற கண்டத்தி லங்கென் றாணு
வாய்திறக்க வொட்டாது வழிசெய் வாயே 44

வழியோடே நின்றுரைத்துப் பழக்க மாகி
மனேன்மணியாம் புருவமையத் தூடே சென்றே
ஒழியோடே மவுனத்தை யோட்டி யூதாய்
உத்தமனே! சாம்பவியைக் கண்டு கொள்வாய்

தெளிவோபோ யிவ்வளவும் யோக மார்க்கம்
நின்றவனே சிவயோகி நினைவாய்க் கேளு :
தெளிவோடே விந்துவென்ற குருப தத்தில்
தேக்கப்பா மவுனத்தைத் தாரை யாமே 45

ஆமப்பா விந்துரவி மதியோர் கூடி
ஆச்சரியங் கண்கூசி மயக்க மாகி
ஓமப்பா நாதத்திற் செவிடு பட்டே
ஊமையென்ற வெழுத்துடைய வுருவங் காணும்
தாமப்பா சத்தியிலே வன்னி யோடு
சதகோடி ரவிமதியு மொவ்வா வொவ்வா
வாமப்பா லுண்டவர்க்கித் தனையுங் காணும்
வாய்ப்பேசா ஞானிக்கு மாயந் தானே. 45

தானென்ற சிவத்துக்குள் மௌனஞ் சென்றால்
சதகோடி நவகோடி வன்னிரவி சோமன்
பானென்ற பரத்தின்கீழ் மூப்பா மூண்டு
பார்மகனே அகாரமொன் றுகார மொன்று
வானென்ற மகாரமொன்று மூப்பா மாக
வழங்கிற்றே அதனொளியைச் சொல்லப் போகா
தேனென்ற மொழியுடைய னமனுந் தத்தைத்
தேவிபத மென்றருகே சரிதான் காணே 47

காணிந்தக் கேசரத்தின் தாயின் காந்தி
கண்கொள்ளா விண்கொள்ளா கரையுங் கொள்ளா
ஆணிந்தப் பரையென்பார் அம்பரந்தா னென்பார்
அவளுக்குள் மவுனமுண் டறிவாற் பாராய்
ஊணிந்த மௌனந்தை நிட்களமாய்ப் போவாய்
ஓகோகோ அம்பரத்தி லேதோ வேதோ
தோணிந்தப் படியிருந்தால் லயத்தின் நேர்மை
சொல்லரிதாம் அப்புறத்தே சோதி தானே. 48

சோதியென்று பராபரத்தி லறுவரை யுண்டு
சொல்லையிலே கேட்டிருப்போம் சொல்லிக் காணும்
ஆதியென்ற மூலகுரு பேரால் மைந்தா
ஆண்பிள்ளைச் சிங்கமென்ற கொங்க ணர்கேள்
வாதியென்று லவர்வாதி ஞான வாதி
மகத்தான குளிகையிட்ட சித்தன் வாதி
பேதியென்றால் மேருப்போ லேயும் பண்ணும்
பெருவாதி ரசவாதி பேருள் ளோனே. 49

பேருள்ள கொங்கணர் தாம் குளிகை யிட்டுப்
போரான பூரணத்தி லறுவரை கண்டார்
ஆருள்ளா ருலகத்தில் வரைகுரு சொல்ல
ஆச்சரியஞ் சித்தருக்குக் கீர்த்தி வைத்தார்
நேருள்ள ரிடிகளொடு முனிவ ரையா
நேராகச் சமாதியிலே கண்டோ ருண்டு
தாருள்ள சலத்தோடுஞ் சென்று ரில்லை
சமர்த்தான மனத்தினிடச் சத்தி தானே. 50

சத்தியுள்ள வாசனையாங் குரங்கு கேளு
தாண்டியல்லோ இந்திரியக் கொம் புக் குள்ளே
பத்தியுள்ளே யலைத்தடித்துப் பேய்க்கூத் தாக்கிப்
பாங்கான மனத்தையல்லோ சின்னம் பண்ணி
முத்தியுள்ள வாசலுக்கே யேறொட் டாது
முழுமோசச் சனியனப்பா ஞானத் துக்குக்
கொத்தியுள்ள வாசனையை யடக்கிப் பார்த்தால்
குருடனுக்கும் ஞானவழி கூடுங் காணே. 51

கூடுவதும் எப்படியோ ஞான மூர்த்தி!
குரங்கைவிட்டே அகலுகிற வழியைச் சொல்க;
நாடுவது முலகத்து வாதம் வந்தால்
நன்மனமுண் டானல்சாத் திரத்திற் சொல்வார்

ஊடுவது சாதுசங்கம் வேதாந் தம்பார்
உத்தமனே வாசனையாங் குரங்கு போகும்;
ஆடுவது தொய்தவா சனையி லேற்றும்
அப்படியே யுலகத்தி லனேகம் பேரே. 52

போரான வுலகத்தில் ஞான முற்றும்
பேசாம லருகிருந்த விடத்தில் மைந்தா !
வாரான மோதத்தி லிங்க மாகும்
வாரிதிக்கு மேருவுக்கும் நடுவே கோடி
காரான காமத்தால் பாண்டி லிங்கம்
கைவிட்ட சமாதியினுல் சுந்தர லிங்கந்
தாரான மலைதோறும் பூமி தோறுஞ்
சாற்றரிது சாற்றரிது சார்ந்து பாரே. 53

பாரப்பா சுபம்பில்வந்து பிட்சை யேற்றால்
பலித்ததப்பா ஞானசித்தி மவுன சித்தி ;
நேரப்பா வொன்பதுவே ரிவரு ளாறு
நிகராகப் பெலிகொண்டோர் நீடு மூவர்
காரப்பா விண்ணையென்றால் காவார் கர்த்தர்
காத்தாலே ஞானசித்தி கலந்து கூடும் ;
ஊரப்பா வாதியைப்போல் நீங்கள் கெட்ட
உலுத்தரென்பார் சித்தர்கள்தா முரைத்தி டரே. 54

உரைக்கவல்லோ ராசயோகம் வைத்தா னீசன் ?
உண்டுடுத்துத் திரிவதற்கோ சொன்னு னையன் ?
மறைக்கவா சனைலகிரி கொள்ளு மென்றான்
மகத்தான தெட்சணு மூர்த்தி யாசான்
நிறைக்கவல்லோ யோகமுதல் ஞானஞ் சொன்னான்
நிற்கவிட மற்றநிர் மலமாஞ் சோதி
இறைக்கவல்லோ வீறினதோர் கேணி யைப்போல்
எடுக்கெடுக்க வெழும்புவா சனைதான் காணே. 55

எழும்பாமல் வாசனையைக் கொன்றேன் ஞானி ;
ஏகாமல் வாசனையை யடித்தோன் சித்தன் ;
எழும்பாமல் கருவிகளை யிருக்கச் சாடி
இருத்தினவன் சிவயோகி வாத யோகி ;
எழும்பாம லடிப்பதற்குச் சூட்சஞ் சொல்வேன் ;
என்மக்காள் ! மவுனத்தே யிருந்தாற்போகும் ;
எழும்பாமல் வாசனைதான் போச்சு தானல்
ஏதுமில்லை சுத்தவெளி யிருளும் போச்சே. 56

போச்சென்றே இருக்கிறதோர் ஞானத் துக்குப்
புகழான வல்லமைதா னென்ன மைந்தா !
வாச்சென்ற அகண்டத்துள் வரைக ளாறு
மருவினல் சடத்தோடு யவனே சித்தன் ;
நீச்சென்ற வரைபார்த்து வாரேன் மக்காள் !
நில்லுங்கோள் குகையினுள்ளே யென்று சொல்லித்
தோச்சென்ற பூரணத்திற் சொக்கி நின்ற
சுந்தரா னந்தன்வந்து தொழுதிட் டானே. 57

தொழுதுகொண்டு பதம்பிடித்த அகண்டத் துள்ளே
சொக்குகிறே மென்றுசொன்ன சுந்தரமே யையா !
விழுதுகொண்ட ஆலைப்போல் நெட்டிட் டேறி
வெளிகடந்தே ஆறுகலங் கண்டு வாரேன் ;
முழுதுகண்டா னென்பிள்ளை யென்று கீர்த்தி
மூட்டிவைப்பேன் சித்தத்தில் கோபம் வேண்டாம் ;
பழுதுகொண்டு வருகிறேன் திரும்பா விட்டால்
பர்பாத்தில் லயிச்சிடுவேன் பண்பு பாரே. 58

பாரப்பா அகண்டவெளி சுத்தக் கானல்
பார்ப்பதற்கோ அங்கொன்று மிடமே யில்லை ;
நேரப்பா ரவிகோடி வன்னி கோடி
நேரான மதிகோடி கண்ணே கூசும் ;

ஆரப்பா அளவிட்டோர் கண்டோர் வீதி
அதற்குள்ளே சொல்லரிது மைந்தா போபோ ;
காரப்பா குகையென்று பட்டங் கட்டிக்
கடுங்குளிகைச் சோளிட்டுக் கலந்திட் டேனே. 59

கலந்திட்டே ஞெருவரையில் நாத வோசை
கண்கொள்ளா வெளிக்குள்ளே கலக்க மாச்சு ;
கலந்திட்டேன் மறுவரையி லிடியோ கோடி
கண்கெட்டேன் மதிகெட்டேன் காதுங் கெட்டேன் ;
கலந்திட்டேன் மூவரையிற் காந்திக் குள்ளே
கடுகவந்தேன் கொங்கணரை யழைத்திட் டீரே. 60

அழையுமென்ற சொற்கேட்டுச் சுந்த ரானந்
தன்கணத்திற் கொங்கணரை யதிசீக் ரத்தில்
விழைவுடனே யோடிவந்து தெண்ட னிட்டு
விரைவுடனே கொங்கணர்தா னிக்க ணத்தில்
அழையுமென்று ரெங்களைய ருங்க ளைத்தான்
ஆச்சரியஞ் சொல்லுதற்கே யடியேன் வந்தேன் ;
அழையுமென்ற சீடனுக்குப் பின்னே வந்தே
அடியேன்தான் வந்ததென்று பணிந்திட் டாரே. 61

பணிந்திட்ட கொங்கணரை வாரி மோந்து
பராபரமே நிர்க்குணமே பண்புள் ளோனே !
அணிந்திட்ட அறுவரையிற் சொக்கிச் சென்ற
ஆதியென்ற பராபரமே யையா வையா !
மணியிட்ட சிலம்பொலியைக் கேட்ட மூர்த்தி
மார்க்கத்தை யெப்படித்தா னேறி னீரோ
கணியிட்ட நிர்மலமா மனத்தி னாலே
கைலாய தேகமென்ன தங்க மாச்சு. 62

ஆச்சப்பா அப்படியே வரணு மென்றே
ஆசைகொண்டே யிருக்கவலைத் தனுப்பு வித்தீர் ;
வாச்சப்பா மனுவொன்ற வடியே னுக்கு
மைந்தன்மேல் கடாட்சத்தால் சொல்ல வேணும்
ஓச்சப்பா கொங்கணரே யுபசார மென்ன
ஓங்கினதை யுரைக்கின்றேன் கேளு கேளு ;
காச்சப்பா வுலகத்தி லெடுத்த தேகங்
கைலாயச் சட்டையாங் கருவைச் சொல்லே. 63

கருவென்ன வொன்றுமில்லை மேரு நேரே
காணப்பா வீசானங் கைலாய மாச்சே ;
உருவென்ன வெடுத்ததுகை லாய தேகம்
உத்தமனே நிராகார ஞான சித்தி
குருவென்ன நிர்க்குணத்தின் மவுனத் துள்ளே
குவிந்துரைத்த பெருமையின்கை லாய மாச்சே ;
அருவென்ன மகாரவித்தை முட்டிக் கொண்டு
ஆதிவிர்த்த கற்பமது வுண்டு பாரே. 64

பாரப்பா சூதமுண்டு மவுனந் தாக்கப்
பளிச்சென்ற ஏழுசட்டை பண்ணும்போ தும்
நேரப்பா அச்சடங்கை லாய தேகம்
நிமிடத்தே சித்தியாமுன் னினைவுக் கையா
ஆரப்பா வுனைப்போலே நினைத்த பண்ணல்
அரிதரிது கூடாது மூடர் பேரால்
சேரப்பா சொல்லிவிட்டே னென்ற பேச்சு
சொல்லுமுன்னே கைலாய முற்றுப் பாரே. 65

உற்றுநின்ற பலநூலைப் பார்த்துப் பார்த்தே
உரையாவே தாந்தசித் தாந்த மென்று
பற்றிநின்ற பரவசந்தா னென்றே உன்னிப்
பாராம லலைந்துகெட்டா ரனந்தங் கோடி ;

முற்றிநின்ற விடமெங்கே ஞான மெங்கே?
கொற்றிநின்ற மேல்மூலத் துரிய மெங்கே?
கூடுவார் மெய்ஞ்ஞானக் குறைவி தாமே 66

குறைவேது வாசனையாந் தொய்தத் தோடு
கூடவல்லோ மெய்ஞ்ஞானம் புனைந்து நிற்கும்;
மறைவேது மறையதனின் அந்த மேது?
மறைவற்று நின்றதொரு வெளியங் கேது?
துறையேது துறைக்குள்ளே சோதி யேது?
சூட்டியிந்த விவரமெல்லாம் மூனந் தோன்றும்
அறையேது? அல்லவென்று சமுசா ரத்துள்
அழுத்துமம்மா தொய்தத்தி னுண்மை தானே. 67

ஆண்மையென்றால் தொய்தத்தி னுண்மை யல்லோ
அகண்டமுத லண்டமெலாம் ஞானந் தோற்றம்
மாண்மையென்றால் வாய்ப்பேச்சாம் ஞானி வாயில்
மண்ணியள ளிக் கூறுகொண்டு மலங்கப் பார்த்துக்
கேண்மைக்கொண்டே யுலகமெல்லாங் கெடுத்தே ஆட்டிக்
கொடியான பெண்ணுபொன் னுணி னாலே
தாண்மையென்ற பிறப்பிறப்பை மீறப் பாய்ந்து
சண்டாளக் கோபத்தைத் தள்ளு தள்ளு. 68

தள்ளுகின்ற வுருப்புவந்தால் கருவைக் கேளு;
சாதகமாய்க் குண்டலிக்குள் வாசி வைத்துத்
தெள்ளுகிற பிராணயம் பண்ணித் தீருந்
திரண்டொலியுஞ் சிலம்பொலியுங் காணும் காணும்;
நள்ளுகிற கண்டத்தே யங்கெங் றாணும்
நலம்பெரிய புருவமைந் திறந்து போகும்
அள்ளுகிற கனிபோலே யமிர்தம் வீழும்
அப்பொழுது காயசித்தி யறிந்து கொள்ளே 69

அறிந்திந்த மதியான விந்து விட்டும்
அப்பனே யோகமிதே யறிந்து கொள்ளு ;
பரிந்திந்த விந்துமுதல் நாதஞ் சித்தி
பாங்கான சிவத்தோடு பரந்தான் கேளு :
அறிந்திந்தப் பராபரத்தோ டாறு கேளு
அப்பனே மவுனத்தைத் தூக்கிக் கொண்டால்
செறிந்துநின்ற ஞானத்தின் யோக மாச்சு ;
செயல்தம்ப மவுனத்தைச் சென்று காணே. 70

காணப்பா பராபரத்தின் மேலே யாறு
கைவிட்ட அகண்டமுநிர்க் குணந்தா னென்று
பூணப்பா நிர்க்குணந்தான் நிராகா ரந்தான்
புகழான நிர்மலந்தான் போதத் தந்தம்
தோணப்பா விவையாறுங் காணப் போகச்
சொல்லுகிற வார்த்தையென்றால் கேட்டி ருப்போம்
ஊணப்பா சடம்விட்டே அறிவு விட்டே
உற்றுநின்ற அண்டத்தே யறிந்து கொள்ளே. 71

அறிந்துகொள்ளு மதியளவு பிண்டத் துள்ளே
அப்பனே யாறுதலம் அறிந்து காணும் ;
அறிந்துகொள்ளு விந்துவின்மேல் பரத்தின் மட்டும்
அறிவுக்குள் சக்கரந்தா னப்பா கேளு ;
அறிந்துகொள்ளு பரத்தின்மேல் போத மட்டும்
ஆதார நிர்மலத்தின் வரைக ளாறும்
அறிந்துகொள்ளு மேலாறுங் காணப் போகா
ஆச்சரியம் கொங்கணரை விட்டுக் காணே. 72

காணப்பா தசதீட்சை கடந்த பின்பு
கைவிட்ட சூத்திரத்தை யாசான் காட்ட
ஊணப்பா அதுமவுனம் மற்ற தெல்லாம்
உரவார்த்தை அகாரமுத லுகார மென்பார்

வீணப்பா சிரமேல்வே தாந்தக் காட்சி
விரைந்ததிலே யும்மென்றே ஊனென் பார்கள்
பூணப்பா வும்மென்ற நாத மாமோ
போக்கறியான் சொல்லுகிற ஞானந் தானே? 73

தானென்ற விடங்காட்டி நாதங் காட்டிச்
சாற்றுகிற மவுனத்தின் சார்பு காட்டி
வானென்ற வெளியொடாறு தலமுங் காட்டி
வாய்மூடி ஞுதிக்க வகையும் காட்டி
ஊனென்ற வுடம்பைவிட்டுக் கேசரியுங் காட்டி
ஊமைநின்ற விடங்காட்டி யுரைக்கப் பண்ணிக்
கோனென்ற குருவெனும்வாய் பேச லாமோ
குறும்பரே குருசொல்ல விரண்டு மாமே. 74

ஆமிந்த வுலகத்தோர் ஞான வீதி
அறிந்தேறிக் கூடுவதும் அரிது மெத்த
ஓமிந்தக் குண்டலியைத் தொட்ட ரற்ற
ஊதுவது கடினமெத்த யோக மார்க்கம்
வாமிந்த வாமத்தே நின்று கொண்டு
மகத்தான பானமுண்ண வாய்க்கும் ரண்டும்
சோமிந்தச் சடைவைத்துச் சின்மயம் காட்டும்
சொற்பெரிய பூரணந்தான் சொன்ன வாறே 75

வாருன குருவினுடை வாழ்க்கை கேளு
மகத்தான சடையின்மேல் மதியுஞ் சூட்டித்
தாருன நெற்றியிலே தீயை வைத்துச்
சர்ப்பமல்லோ ஆபரண மாகப் பூண்டு
வீருன கரித்துகிலை மேலே போர்த்து
விளங்கியதோர் புலித்தோலை யிடையிற் கட்டிக்
கூருன சுடுகாட்டிற் குடியு மாகிக்
கொள்கின்றூர் பலியெடுக்கக் கொள்கின் றூரே. 76

பலியெடுத்த குருவினிட வாம பாகம்
பகுந்துநின்ற என்தாயின் பரிசு கேளு ;
பொலியெடுத்த அட்டமா சித்தி நிற்கப்
புகள்பெரிய ரத்னவகை யாரம் பூண்டு
நலிவில்லா யோகாப்பி யாசஞ் செய்து
நண்ணுமிரு பதச்சேவை காண்ப தற்கே
ஒலியெடுத்த நவகோடி தேவர் சித்தர்
ஒன்றாகக் கணநாதா போற்று வாரே. 77

அறிந்துகொள் என்தாயே துரைப்பெண் ணப்பா !
அப்பனோ எருதேறு மேழை யேழை
அறிந்துகொள் இவளைமுன்னே யையா வைத்தே
ஆதரித்துக் கேட்டதெல்லா மருளிச் செய்வாள்
அறிந்துகொள் அகண்டத்தே ஞான சத்தி
ஆத்தாளைப் பூசித்தா லறுப தீவாள்
அறிந்துகொள் சடமெல்லா மவளே யாச்சே
அப்பனுக்கு மெலும்போடு நரம்பி ரண்டே. 78

இரண்டான வாயுவிதி லொன்று சத்தி
ஈராகச் சிவமேது பிராண வாயு
ஒன்றாக நாடிநின்றால் சுழுனை யாச்சு
யோகமுமாம் ஞானமுமா முற்றே யேறு
தண்டான சுழுமுனைதா னடுவில் நிற்குஞ்
சாதகமா யிதற்குள்முக் கிரந்தி யுண்டு
நன்றான சுழுமுனையிற் பிராண னேரில்
நாதாந்த யோகமிது நாடிக் காணே. 79

காணப்பா நெஞ்சினுள்ளே பிராண யோகங்
கண்டுகொள்ளு தாமரையில் நூல்போ லாடும் ;
ஊணப்பா அதிலிரட்டி யபான வாயு
உற்றுநின்றி ரண்டையுநீ கண்டா யானால்

பூணப்பா விதற்குள்ளே ஞான யோகம்
புசுண்டருக்குச் சித்திகை லாய தேகம்
தோணப்பா நவகோடி மானு கண்டார்
சுகயோக மாவதிந்தத் துறையு மாமே 80

ஆமப்பா ஆசைவிடக் கருவைச் சொல்வேன்
அறிந்துகொண்டே அறிவாலே நின்று பாரு ;
சேமப்பா திரோதாயி யாரென் றக்கால்
செகமெல்லாம் பெண்ணுன வுருத்தா னப்பா !
ஓமப்பா பொன்மண்வா சனையி னுசை
ஒற்றிநின்ற விந்திரிய மயக்கத் தாசை
நாமப்பா வென்றுசொன்ன ஆண்மை யாசை
நல்வினைக்குந் தீவினைக்கும் வித்து மாச்சே. 81

வித்துக்குள் பாவமென்ன புண்ய மென்ன
வெகுகோடி புண்ணியத்தால் புருட சன்மம்
பத்துக்குள் வெகுகோடி பாவ புண்யம்
பாழான பெண்செனன மெடுத்த வாறு
கொத்துக்கு ளிவையறிந்து பாவ மான
குழிக்குள்ளே வீழ்ந்தாரே கோடி யையோ !
எத்துக்கு ளிவையறிந்து வேறாய் நின்றே
இகழ்ந்தவனே மெய்ஞ்ஞான வீச னுமே. 82

பூரணமே யகண்டமே யகத்தி னந்தம்
பொங்கின்ற நிர்க்குணமே யென்னை யீன்ற
காரணமே யுலகிற்பெண் ணுசை போலக்
கலந்துநின்ற சுகமில்லை கருதிக் கொண்டேன் ;
ஆரணமே யதீதத்தில் சுகந்தா னென்ன
அப்பவே சொல்லுகிறே னறிந்து கொள்ளு ;
வாரணமாங் குவிமுலையா ளாசை விட்டால்
மகத்தான மூவுலகும் விடுக்கும் நேரே. 83

நேரான பெண்ணாசை நீங்கிற் றானல்
　　நிலையான திரோதாயி பாய்கை போச்சு ;
தூரான வேதாந்த வெளியிற் சொல்வார்
　　சும்மென்ற சகஞ்சொல்வா யோகி யல்லே
வாராய்நீ யென்மகனே பெண்ணாற் சிக்கி
　　மகத்தான ரிஷிகள்சித்தர் கோடி கெட்டார் ;
தாரான சித்தரொடு பஞ்ச கர்த்தாள்
　　தயங்கிநின்று படும்பாடு சாற்று வேனே 84

சாற்றுவேன் வீதிபடு குழிதா னுண்டு
　　தன்மேலே புல்லோடு செடியு மூடி
மாற்றுவேன் வீதியிலே நடந்தோன் வீழ்ந்த
　　வாறொக்கும் பெண்ணான மாயக் கூபம்
ஆற்றுவே னென்றாலு மாற்றப் போகா
　　அரகரா பெண்ணரவு கடித்த தானல்
போற்றுவே னென்றாலும் பொல்லாக் காமம்
　　பொறிவிட்ட நெய்போலப் பொங்கும் பாரே. 85

பொங்குகின்ற காமமென்ன ? சிவத்தின் கூறு ;
　　பொல்லாத ஆசையென்ன ? மாலின் கூறு ;
மயங்குகின்ற மோகமென்ன ? மகேசன் கூறு ;
　　மருவியந்த மூன்றாலு முலகம் பாழாய்த்
தங்குகின்ற யோகம்போய் ஞானம் பாழாய்ச்
　　சமாதியெல்லா மிந்திரியச் சார மூடித்
தொங்குகின்ற மோட்சத்தின் தரைபோ லாகச்
　　சூனிபமாய் ஞானமெல்லாந் தோற்று மாறே. 86

மாறான பெண்ணாசை விட்டே னென்பார் ;
　　மருவியவள் தனிப்பட்டால் சரணஞ் செய்வார் ;
தாறான சயனத்திற் பெண்தான் சொல்லில்
　　சதாசிவனால் முடியாது ;மற்றோ ரேது ?

கூருன விந்துவிடக் கோப மோகங்
குறியழிக்கும் வினைவழிக்குங் கூட்டைக் கொல்லும்
வீருன விந்துவுக்கு மேலே நின்று
விருதுபெற்ற மௌனியல்லோ வெட்டி ளுரே. 87

வெட்டினுர் மௌனியந்த விந்து பாம்பை
வேதாந்த மென்றதொரு வாளி ளுலே;
தட்டினுர் மாய்கையைத்தான் சண்ணிக் கீழே
சச்சிதா னந்தவெள்ளச் சார்பி ளுலே;
ஒட்டினு ரொட்டினவிர்க் குணத்தின் மட்டும்
உத்தமனே யதுவல்லோ ஞான வீதி?
தெட்டினுர் தெட்டினுர் சகல ரெல்லாம்
செகசால வித்தையென்று தெளிந்து பாரே. 88

தெளிவதுதா னெளிதல்ல வாய்ப்பேச் சல்ல;
சிங்காரப் பெண்கண்டால் ஞானம் போச்சே;
அழிவதுதான் சடத்துக்கே யடுத்த கூறும்;
அதாமுண்டு கூடுவது போக மென்பார்;
கழிவதுதான் காலேது வாசி யேது
கைவிட்ட மைதுனத்திற் கலப்ப தேது?
ஒழிவதுதா னெந்நாளோ வென்று லோகர்
ஒருகோடி மாண்டார்க ளுன்றிக் காணே 89

காணப்பா பிறப்பிறப்புப் பெண்ணு லாச்சு;
கைகடந்த மாயமெல்லாம் பெண்ணு லாச்சு;
பூணப்பா இந்திரியம் பெண்ணு லாச்சு;
புகழ்பெரிய வாசனையும் பெண்ணு லாச்சு;
தோணப்பா மனம்புத்தி யாங்கா ரத்தில்
சொக்கிச்சுப் பெண்ணுலே சூட்டிப் பாரு;
ஊணப்பா வூணப்பா வுரைக்கச் சொன்னேன்;
உலகத்திற் றிரியாதே விண்ணி லாடே. 90

ஆடையிலே விண்ணுக்குட் சித்தர் கோடி
அந்தந்த மலைகளினல் தாக்க வோடி
ஊடையிலே யண்டத்தில் முனிவர் கோடி
உற்றுநின்ற பதமளவும் ரிஷிகள் கோடி
தேடையிலே சதாசித்தம் வேதம் பாரு
சேர்ந்துநின்ற வோசையிலே தெளியச் சொல்வார்
நாடையிலே யெந்நேரம் மவுனம் நாடு
நரகமாம் வாசனைதான் நன்றாய்க் கேளு. 91

கேளப்பா இதைவிட்டே யுலக ஞானி
கேட்டதெல்லாஞ் சொல்லுகிறேன் மக்காள் மக்காள்!
நாளப்பா செகமெல்லாஞ் சாங்க மென்பான்
நலமான நூல்பாரான் தீட்சை யாவான்
காளப்பா மவுனமென்பான் விண்ணைப் பார்ப்பான்
காதகத்தை விட்டுச்சீ வனத்திற் செல்வான்
நாளப்பா தினந்தோறுந் தர்க்கம் பேசி
நலமான பெண்ணோடு மயங்கு வானே. 92

மயங்குவான் பொன்தேடப் புரட்டுப் பேசி
மகத்தான ஞானமெல்லாம் வந்த தென்பான்;
தயங்குவான் மண்ணாலே சார்வு காணன்;
சாதகமா யோகத்திற் சார்ந்தே னென்பான்;
தியங்குவான் நோய்வரிற்பூ ரணமே யென்பான்;
செகசால திரோதாயி சிரிப்பாள் பார்த்து;
முயங்குவான் சமாதிவிட்டே னையோ வென்பான்
மூடமொற்ற ஞானமெல்லா முலகிற் பாரே. 93

பாரப்பா சீரமிது சமாதிக் காக!
பாழான தூலமிது வென்பார் கோடி
நேரப்பா வாதம்வந்தால் ஞானம் என்று
நேராக அலைந்தவர்கள் கோடா கோடி;

ஆரப்பா வுலகத்தில் ஞானி யுண்டோ ?
  ஆராய்ந்து நான்கண்டே னென்பார் கோடி ;
ஏரப்பா வுழுதலோவெள் ளாமை யாகும் ?
  ஏரில்லா னறுத்தடித்த கதையு மாச்சே. 94

கதையாச்சே யுலகத்தில் ஞானம் வாதங்
  கைகண்டாற் சொல்வாரே கல்போல் நெஞ்சே ;
அதையாச்சே யிதையாச்சே யென்று சொன்னால்
  அவன்கையி லொன்றுமில்லை யறிந்து கொள்ளே ;
உதையாச்சே அரனுடனே தொழிலே நித்தம்
  உதுவான வன்வாதி யுண்மை கேளு ;
சுதையாச்சே ஆனாலும் பொங்கி யுள்ளம்
  சுடுவான்பார் ரசயோகி ஞானி தானே. 95

தானென்ற வாதியிலே யிருவ ருண்டு ;
  சண்டாள வாதியென்று முண்டு டுத்து
வானென்ற ஞானமென்ன வேதை பின்பு
  மகத்தான பெண்ணோடே கூடி யாடிக்
கானென்ற ராககே ளிக்கை பார்த்துக்
  கண்டபெண்ணைத் தாய்போலக் கருதிச் சென்றே
ஊனென்ற உடம்பெடுத்துப் போக வென்பான்
  உலுத்தனுக்குச் செனனமென்ற நரகந் தானே. 96

நரகமென்ற பெண்மேலே யாசை விட்டு
  நாதாந்த வேதாந்த சித்தாந் தம்பார்
நரகமென்ன வுலகமெலா மனத்தில் வைத்து
  நலமான தேவிகிரி யையிலே நின்று
நரகமென்ன சடமுதல்நா மல்ல வென்று
  நாட்டினுள்ளே தசதீட்சை கடந்த பின்பு
நரகமென்ற சிவசொத்தை வறுமை தின்று
  நாமறியோம் வாதமென்றே யிருப்பார் காணே. 97

இருக்கையிலே சதகோடித் தொழிலைச் செய்வார் ;
இத்தனைக்கும் பொருளேதிவன் வறுமைக் கென்பார் ;
இருக்கையிலே செயநீர்செந் தூரஞ் சுன்னம்
எடுத்தெடுத்தே யடுக்கிவைப்பார் அநேகங் கோடி ;
இருக்கையிலே தொழிலெடுப்பா ரார்க்குங் காட்டார் ;
இல்லையென்பா ருண்டென்பா ரனேகம் பேர்கள் ;
இருக்கையிலே சதாநித்த மறிவா லூட்டி
இருப்பார்கள் மவுனமுத்த வாதி தானே. 98

வாதியென்று லவன்வாதி மவுன வாதி
மகத்தான பிரபஞ்சத் திருந்தா லென்ன
வாதியென்றால் ரசவாதி ஞான வாதி
வாங்காமற் சமாதியிலே யிருந்த வாதி
வாதியென்றால் நிசவாதி நிர்மல வாதி
வாய்திறக்க அண்டத்தே வாழ்ந்த வாதி
வாதியென்று லவரிடத்தே சித்தர் செல்வார்
மயக்குகின்ற செனனமில்லை முத்தி தானே. 99

முத்தியிந்த வாதிக்கு வருகு மென்று
மூச்சுமுதற் சிவன்சொன்ன ரென்று சொல்லிப்
பத்தியிந்தச் சிவசொத்தைப் பெண்ணுக் கீந்து
பாழான விடயமெல்லாம் பண்ணிப் பண்ணி
அத்தியென்ற பஞ்சகத்தைப் பண்ணிப் பாவி
ஆங்காரத் தால்திரிந்தும் வேதை போட்டு
மற்றுநின்றே அலைந்தவர்க்கு நரக மெய்தி
மாளுவார் கோடிசென்ம மருளு வாரே. 100

மருளாம லிருக்கவல்லோ வாதஞ் சொன்னர் ?
மாண்டிறந்து மாண்டிறந்து பிறக்கை நன்றோ ?
வெருளாமல் மனம்பிடித்த வாதி யானல்
வெகுசுளுக்கே யேறுதற்கு ஞான வீதி

அருளாமோ பொருளாமோ வென்றே யெண்ணி
அலையாமல் நின்றவனே ஆதி யோகி
இருளாமோ வெளியாமோ வென்றே யெண்ணி
ஏகவெளி சுத்தவிரு ளாகிப் போமே. 101

ஆகவப்பா விருபத்தோ டஞ்சு நூறும்
அறைந்திட்டேன் வாதத்தை யறிந்து கொள்ளு;
ஆகவப்பா இதற்குள்ளே ஞானம் நூறு
அப்புறத்தே சொன்னதொரு ஞானம் நூறு
ஆகவப்பா இருபத்தோ டெழுநூ றுந்தான்
அறிந்தமட்டும் சொல்லிவந்தேன் வல்லோ ருண்டோ
ஆகவப்பா பார்த்தேயிக பரமுஞ் சித்தி
ஆதியென்ற குருவருளால் சொன்ன முற்றே. 102

# பின் ஞானம்–100

—::—

## எண்சீர் விருத்தம்

கைலாயப் பரம்பரத்தி லென்னை யாண்ட
கடவுளெனுந் தெட்சணா மூர்த்தி பாதம்
கைலாயத் தெனையீன்ற ஆயி பாதங்
கருணையுடன் போற்றிநித்தம் ஞானம் சொல்வேன்;
கைலாய நிர்க்குணநிர் மலமே தேவர்
காட்டுகின்றீர் கேசரிசின் மயமாய்க் கையில்
கைலாய பரம்பரையாய் வந்த பேர்க்குக்
கடைப்பிள்ளை ஞானத்தைப் பாடு வேனே; 1

பாடுகின்றேன் சரியையென்ன ? தேவி தீட்சை;
பரிவாகக் கிரியையென்ன ? தேவி பூசை;
பாடுகிறேன் யோகமென்மா சற்ற அமுதம்;
பாங்கான ஞானமென்ன? மௌனத் தந்தம்;

பாடுகிறேன் திடத்திரனு யீதோ கீதம் ;
    பாங்கான அஞ்சலிதான் மனமாங் தேகம்
பாடுகிறேன் பரன்முனிவ ஞக்கே யென்றால்
    பரிவானல் ஞானவித்தை பலிக்குந் தானே. 2

தானென்ற ஞானத்தின் பூமி கேளு ;
    சாதகமா யோகமென்ற அபர வீடு ;
வானென்ற பூமியிலே வித்தை கேளு ;
    அறிவிற்கு மறிவான வுகார விந்து ;
வேனென்ற வெளியெல்லாம் படைத்து நின்று
    வேதாந்த அண்டமென்ற மகார மாச்சு ;
கோனென்ற நாதமங்கே குமுறி யாடும் ;
    கூப்பிட்டாற் கேளாது கண்ணும் போச்சு. 3

போச்சப்பா தத்துவங்க ளனித்தியப் பட்டுப்
    புலன்கெட்டு நிலங்கெட்டுப் பொறியுங் கெட்டே
ஆச்சப்பா மனவரையில் மயங்கி நின்றே
    ஆடுவதோர் படம்போல அசைந்து தள்ளு ;
நீச்சப்பா கடனீச்சுத் திரோதாயி வெள்ளம்
    நிலையேது கரையேது தவணை யேது ?
மூச்சப்பா அடங்குமுன்னே மாயை வந்து
    முற்றிமுதிர்ந் தறிவுதள்ளு மோசங் கானே. 4

காணப்பா மனவரையா மாறுக் குள்ளே
    கடைத்தேறப் போகாது கலக்க மெத்த
ஊணப்பா வென்றுசொன்னல் மனமூ ணுதே
    உற்றுமெள்ளப் பிடித்தாலும் மாயை கட்டும் ;
வீணப்பா வுலகத்தோர் ஞான மெல்லாம் ;
    வேதாந்த சித்தாந்த மென்பார் கோடி ;
தோணப்பா ஞானமென்ன கண்டிப் பில்லைச்
    சுடர்கோடி யொளிபோலத் தோன்றுந் தானே 5

தானென்ற நிர்மலமா மனத்தின் வீதி
தாண்டரிது தாண்டினு லறிவு போற்றும்
கானென்ற மனத்தின்சா தகத்தைக் கேளு ;
கற்பமுண்ண வத்துண்ணல் வாசி தோறும்
பானென்ற பாணத்தின் பாதை நில்லு
பகலாலுங் கேசரத்தில் மனந்தா னெட்டும்
வானென்ற வெட்டவெளி வடிவு காணும்
மாச்சல்மெத்த மாச்சல்மெத்த மருவி கூடே. 6

கூடுவது நிமைக்குமுன்னே குளிகை கூட்டுங்
கூப்பிட்டால் பூரணந்தான் கூடப் பேசும் ;
ஆடுவது மனவரையில் மாயம் போக்கும்
அருவிலே சொக்கின்றி ஆட்டு விக்கும்
நாடுவது பூரணத்தி லேற்றிக் காட்டும்
நலமான சாணையார் கெவுனஞ் சூதம்
தேடுவது சித்தருக்குக் குளிகை கெட்டுச்
செகத்தோர்க்கு வாதமென்ற தேட்டுக் காணே. 7

தேட்டான வரைகடந்து மனமுந் தாண்டித்
தெளிவான அறிவினுடை வரையுந் தாண்டி
நீட்டான பூரணத்தின் வரைகா ணென்று
நேரான மூன்றுவரை யேறிச் சொக்கிப்
பூட்டான பூட்டிறங்கி விட்டேன் மைந்தா !
புகழான வெறுவெளியி லேறப் போகா
ஆட்டான கைலாயப் பரம்பரை வந்த
ஆச்சரிய மூலகுரு வாக்குங் கேளே. 8

கேளப்பா மூலர்க்குகா லாங்கி பிள்ளை ;
கெடியான காலாங்கி மைந்தர் போகர் ;
நீளப்பா போகர்பிள்ளை கொங்க ணர்தான் ;
நேராக நான்குமுறை பேர ணுகித்

தாளப்பா மேருவிலே தவசு பண்ணிச்
சாதகமாய்க் கைலாய வர்க்க மானூர் ;
ஆளப்பா பிள்ளையென்று லவரே பிள்ளை ;
ஆச்சரிய மின்னமுண்டு சொல்லு வேனே. 9

சொல்லுகிறேன் சிங்கென்று முன்னே யூன்றிச்
சோதிகண்ட பின்பதிலே மனத்தை யூன்றிச்
சொல்லுகிறேன் அங்கென்று பின்னே யூன்றிச்
சோதியிலே அக்கரங்கள் தனமுங் கண்டு
சொல்லுகிறேன் பின்பல்லோ மவுன முன்னித்
தொடர்ந்தேறித் தளமெல்லாம் பார்த்துக் கண்டு
சொல்லுகிறேன் புருவமை யத்திற் கூடித்
துரியமென்ற அறிவினுள்ளே சொக்கி னூரே. 10

சொக்கியல்லோ அறிவைவிட்டே அகண்ட மேறித்
துயரறவே சமாதியுள்ளே கற்ப முண்டு
சொக்கியல்லோ மூன்றுவரை சடத்தோ டொக்கச்
சுருபவரை காணவென்று துணிந்து பொங்கிச்
சொக்கியல்லோ ஏறுதற்கிவ் விதமா மென்று
சோதித்துக் குளிகையெல்லாம் பார்த்துப் பார்த்துச்
சொக்கியல்லோ ஏற்றிவைக்குஞ் சுருபமணி யொன்று
சூட்சமாய் மூலருடை நூல்பார்த் தாரே. 11

பார்த்தறிந்தா ரிந்தமணி வாத மென்று
பரிவான கயிலாய தெட்சணா மூர்த்தி
சேர்த்தறிந்த தம்முடைய வர்க்க மான
சீடரிலே திருமூலர் சண்டி கேசர்
மாத்தறிஞ்ச சனகாதி நால்வ ரோடு
மருவிநின்ற வியாக்ரபதஞ் சலியி னோடு
போக்கறிந்த வடியெனொடொன் பதுபேர் பிள்ளை
புகழான பூரணத்தி லெழும்பென் றூரே 12

எழும்பையிலே நிர்மலம்போற் சடமோ காணு
தேனென்றாற் பூரணந்தா னெதுக்குப் பேசும்
எழும்பையிலே குளிகைமுதற் காட்டிற் பத்தே
ஏற்றியதோர் தீபத்தின் சுடர்போற் காணும்
எழும்பையிலே தேகமில்லை கோடா கோடி
எடுத்தசடஞ் சூட்சுமமா யிருந்த தென்றால்
எழும்பையிலே மேலெழும்பி மௌன முற்றும்
இருந்துரைத்த சமாதியுடைப் பலந்தான் காணே. 13

காணப்பா சொருபமொன்று கலிதா னென்று
கையடங்கா தட்டமா சித்தி யொன்று
பூணப்பா கைகொடுசின் மயமாந் தேவர்
பொருளோடே அருளான போக்குக் காட்டித்
தோணப்பா தோன்றிநிற்கும் சும்மா அம்மா
சுபமாக இசைந்ததிலே சொக்கு மென்பார்;
வீணப்பா மற்றதென்சின் மயத்தைக் காட்டி
வேதாந்த மூலத்தை விளம்பென் றாரே. 14

விளம்பினார் சனகாதி வேதங் கோடி;
விதத்தாரே மவுனத்தைச் சண்டி கேசர்
விளம்பினார் பதஞ்சலியு மனந்தங் கோடி;
விரித்தல்லோ திருமூல ரனேகஞ் சொன்னார்;
விளம்பினார் வாவாதா மென்று யானும்
விரியாம லிருநூறு ஞானஞ் சொன்னேன்;
விளம்பினார் வெகுவாக என்னால் கொஞ்சம்
வேதாந்த மிருநூறும் விரைந்து காணே. 15

காணப்பா மும்மணிகை லாய வர்க்கம்
கழியாமற் பிள்ளைகட்கே மற்றோர்க் கில்லை,
தோணப்பா இவைமூன்றுஞ் சித்தர் சொல்லார்
சொற்பெரிய பூரணமே சொல்ல வேணும்;

வீணப்பா ஆரானுஞ் சொல்லக் கூடா
வேதாந்த அந்தத்தில் வெளியிற் கூட்டும்
ஆணப்பா அறுபத்துநால் மரபுக் குள்ளே
ஆருமே யில்லையதை அறியார் காணே. 16

அறியாத குளிகையுடன் சாரணையிற் குத்து
அதன்பெருமை காணக்கொங் கணரைக் கேளு ;
அறியாத அண்டமுதற் புவனம் பார்த்து
அருவியதோர் பதம்பார்த்துத் திரிந்தே ஆடிக்
குறியாகக் கற்பமெல்லா மேறி பார்த்துக்
கூறுத பூரணத்தைக் காண்பே னென்று
நெறியாக மனமுரைக்கக் குளிகை கட்டி
நேராக மனவரையி லேறி னாரே. 17

ஏறினா றுவரையி னியல்புங் கண்டே
இதமாக அறிவுடைய வரையிற் சென்று
தேறினர் மனமுரைத்தார் கண்டத் தேறச்
சேர்ந்தேறச் சேர்ந்தேறி வரையிற் றாண்டிக்
கூறினா ரிவ்வளவு மொன்றே வென்றார்
கூசாமல் மருவரையில் குதிரைப் போட்டார்
மாறினல் சென்றுமணம் பிடித்துச் சென்றார்
வரைமூன்றுங் கடக்கவொரு கற்ப மாச்சே. 18

ஆச்சப்பா நாள்தரையி லேறும் போது
அரகரா வெழுகோடி யிடிபோல் நாதம்
மூச்சப்பா வோடாது முன்பின் றேணு
முதிர்ந்தமன மாயையினல் பின்னுஞ் சென்றார்
கூச்சப்பா ஐவரையிற் போக்கி நின்று
குருகுரென மொழிந்ததிலே மனமுந் தேறிப்
போச்சப்பா சடமொன்று நிராசை யாகிப்
புக்கினர் அறுவரையிற் புக்கி னாரே. 19

புக்கியல்லோ சுழல்காற்றின் றுரும்பு போலே
புலம்பினர் மூலருடைப் பேரன் பேரன்
மக்கியல்லோ மனம்போச்சுக் குளிகை போச்சு ;
மாறுத மௌனமுன்னே மாண்டு போச்சு ;
ஒக்கியல்லோ சிலம்பொலிதா னுள்ளே வாங்கி
ஓகோகோ குளிகையது கீழே வாங்கு
சொக்கியல்லோ யென்செய்வே னென்றே யேங்கித்
துரியத்தை விட்டுமெள்ளக் கீழ்க்கொண் டாரே. 20

கீழ்க்கொண்டார் கீழ்க்கொண்ட கொடியாஞ் சித்தர்
கேசரத்தை விட்டுமெள்ள அறிவில் நின்று
நாட்கொண்ட பாடெல்லாம் நினைத்துக் கொண்டு
நான்பிழைத்தே னுன்பிழைத்தே னென்று சொல்லி
ஆட்கொண்ட என்குருபூ ரணத்தில் நின்றீர்
ஆச்சரிய மெனையீன்று மிவரை யையா !
வேட்கொண்டா யென்றவத்தை யீந்த னையா
வெறுவெளியாஞ் சிலம்பொலியை மேவென் றாரே. 21

மேவென்று சொல்லுமுன்மேற் கண்ட போகர்
வேதாந்த சிரோமணியைப் பெறுதி மைந்தா !
கோனென்ற குருவுக்கும் அவரே சீடர்
கோடிலட்சத் தொருசீட ருண்டோ காணேன் ;
பானென்ற வேதாந்தஞ் சித்தாந் தம்பார்
பறக்கிறதோர் குளிகைமுதல் வாதம் பார்த்துத்
தேனென்ற கைலாய வர்க்க மாகிச்
சித்தருக்குச் சித்தராய் ரிஷியா னாரே 22

ரிஷியென்ன சிலம்பொலியைக் கண்டா ருண்டோ
நேராக வதற்குள்ளே சேர்ந்தா ருண்டோ
ரிஷியென்ன ரசவித்தை யறிந்தா ருண்டோ
நிமிடத்தில் சுவனமுற்றுத் திரிந்தா ருண்டோ

ரிஷியென்ன அண்டமுதற் புவனந் தாண்டி
நின்றநிறை யாய்க்கண்டு வந்தா ருண்டோ
ரிஷியென்ன மவுனமுற்றுச் சமாதிக் குள்ளே
நின்றதனல் திகைமையாய் நினைவாய்க் காணே. 23

காணப்பா ரிஷியாட்டுஞ் சித்த ராட்டுங்
காரணமாய் மவுனத்தே நின்றோ ராட்டும்
பூணப்பா பூரணத்தே நின்றோ ராட்டும்
பொன்னுகை மரமுதலாய்ப் புகழ்ந்தோ ராட்டும்
ஓணப்பா வாசியுடைக் குதிரை யாட்டும்
ஒன்றுமற்றுத் தன்மயமாய் நின்றோ ராட்டும்
தோணப்பா யிவையெலாங்கொங் கணர்க்கே யல்லால்
சூழுலகிற் சித்தருண்டோ சொல்லி டீரே. 24

சொல்லிடமாய் ஞானமுண்டோ குளிகை யுண்டோ?
சூட்சித்த கற்பமுண்டோ வாசி யுண்டோ?
மல்சுட்ட வாதமுண்டோ சுன்ன முண்டோ?
மகத்தான சிக்கியுண்டோ செயநீ ருண்டோ?
வெல்லிடீர் விடமுண்டோ சாரணை யுண்டோ?
வெவ்வேறே கூட்டுகிற குடோரி யுண்டோ?
அல்லிடீர் வேதைசகு வணந்தா னுண்டோ?
அப்பனே பதினேழு மமைத்திட் டாரே. 25

அமைத்தவர்முக் காண்டம்பா டியதோ ரங்கம்
வந்தித்த பிள்ளைக்கு மறிவு தோன்றும்
அமைத்தவர் பாடினபொற் கம்பி போல
அறிவுகெட்ட மிலேச்சருக்கும் வாத சித்தி
அமைத்தவர் கருவெட்ட வெளியதாக
அங்கங்கள் மறையாமற் சொன்னார் சொன்னார்
அமைத்தவர்பாட் டுக்குநம் முடைய நூல்தான்
அருகாக மறைப்பென்றே அறைந்திட் டாரே. 26

அறைந்திட்டா ரைந்நூறு பிள்ளை வேண்டி
அப்பப்பால் வெகுதெளிவு சாத்திரந்தான்
நிறைந்திட்ட ஆரணம்போல் வெளிய தாக
நீங்காமற் றுறந்துவிட்டா ரருளொடு பொருளும்
குறைந்திட்ட புத்தியல்லிட் களமாம் புத்தி
கூறுத பொருளையெல்லாங் கூறி விட்டார்
வறைந்திட்ட மவுனமெல்லாம் வெளிய தாக
வாய்திறக்கா வித்தையெல்லாம் விளக்கி னாரே. 27

விளங்கியதோர் கொங்கணரால் மூல வர்க்க
மகத்துவந்தா னுண்டாச்சு மக்காள் மக்காள்!
விளங்கியதோர் கீர்த்தியுண்டோ வுங்க ளாலே
வெட்டவெளிக் கப்புறத்தே செல்ல மாட்டீர்:
முளங்கியதோர் குளிகையென்ன காய சித்தி
மூச்சுற்ற விடத்திலே நோக்க மென்ன
பிளங்கியதோர் சித்தருட வர்க்க மென்ன
பேய்மக்கள் மூவைந்து பேரிற் றானே. 28

தானென்று சொன்னதென்ன என்னைப் பெற்ற
சச்சிதா னந்தவெள்ளத் தயவுள் ளாரே
கோனென்ற முக்குளிகை நமக்குண் டையா
கொடியதொரு மவுனவித்தை நமக்குண் டையா
பானென்ற வாசிவித்தை நமக்குண் டையா
பாங்கான காயசித்தி நமக்குண் டையா
வாவென்ற வெட்டவெளி யேறி யாடி
வருகிறேன் விடைகொடுத்து வாழ்த்தி டீரே. 29

வாழ்த்தியுன்னை யனுப்பினல் பூர ணந்தான்
வரைகடந்தே ஆறுவரை யேறு வாயோ?
வாழ்த்தியுன்னை யனுப்பினல் நகரத் துள்ளே
மயங்காமற் செல்லுவையோ மைந்தா சொல்லு

வாழ்த்தியுள்ளே யனுப்பினு லிடியிற் குள்ளே
மயங்காமல் றியங்காமல் மருவு வாயோ ?
வாழ்த்தியுன்னே யனுப்பினு லென்ன முன்னால்
வாய்ப்பேச்சோ வரைநடக்கும் மார்க்கந் தானே ? 30

மார்க்கமென்ன எனையீன்கை லாய மூர்த்தி !
மகத்தான சமாதியுள்ளே கற்பம் வாழ்ந்தேன்
சேர்க்கமென்ன சிவாலயங்கள் பலியேற் றுண்டேன்
சிவமேது நீரன்றி வேறு காணேன்
ஆர்க்கமென்ன குளிகையிட்டுச் சென்று போறேன்
அங்கங்கே மனந்தேறிப் போறேன் போறேன்
தீர்க்கமென்ன சொக்கினுற் சொக்கிப் போறேன்
திரும்பினுல் சடத்தோடே திரும்பு வேனே. 31

திரும்புவையோ என்மகனே திடந்தா னுண்டோ
சிறுபிள்ளை புத்தியல்லோ செப்பு றுய்நீ
வளர்பிறையோ தேய்பிறையோ ரவியி னுள்ளே
வருவதுபோ லல்லவது மாட்டி வாங்கும்
பரும்பிறையோ யோகமது பிறவி கோடி
பாங்கான வொளிக்குள்ளே கண்ணே கூசும்
அரும்பிறையோ மனந்தளும்பு மேவொட் டாதே
அரகரா என்மகனே யறிவாய் நீயே. 32

அறியாத வரைபார்க்க நான்தா னேறி
அய்யனே மூன்றுவரைக் குள்ளே சிக்கி
நெறியாக நால்வரையி லேறொட் டாமல்
நிமிடத்தி லறிவினிலே வந்து நின்றே
மறிவானம் படைத்தகொங் கணரே சித்தர்
மற்றோரை யான்காணேன் மைந்தா சொல்லு
பொறியான வழியடக்கிச் சூட்ச மாகிப்
போனவரார் போகருடைப் பிள்ளை தானே. 33

பிள்ளையென்று லவரல்லோ போக ருக்குப்
புகழான ரிஷிகளெல்லாஞ் சித்த ரென்பார்
தள்ளையென்று லவர்தாமூ லரிடம் போன
சசிதா னந்தவின்ப மான பிள்ளை
கொள்ளையென்று லவர்கொள்ளை ஞான வீதி
கொடிதான சிலம்பொலியைக் கேட்டு மீண்டார்
விள்ளையென்று வந்ததனல் கீர்த்தியாச்சு
வேதாந்த அந்தமெல்லாம் வெளியாய்ப் போச்சே. 34

போச்சென்று சொல்வதென்ன போய்வா னையா
புத்திசொன்ன புத்தியெல்லாம் போட்டிட் டாயோ ?
வாச்சென்று நின்வயிற்றிற் பிறந்த பிள்ளை
வந்தாலென் கெட்டாலென் மகத்வ முண்டோ ?
கோச்சென்ற நாவமென்ன விடிந்தா லென்ன
கோடிரவி காந்தியென்ன பயமுண் டாமோ ?
ஓச்சென்ற சிலம்பொலியைக் கண்டு வாரேன்
ஒருமனமாய்ப் பூரணத்தி லுன்னி டீரே 35

உன்னிடீர் அண்டமுதற் புவனந் தாண்டி
ஒருநொடிக்குட் பதந்தாண்டி முப்பாழ் தாண்டி
மன்னுதிரு வருள்மனையைக் கண்டு போற்றி
மருவியதோர் பூரணத்திற் சென்றே யேறிப்
பன்னிடுவீர் தினந்தோறும் பழக்க மையா
பாயுடனே யதுநடந்து வரைக ளாறும்
தன்னிடிர்யோ கறியேனும் தருளாற் போறேன்
தயாநிதியே கடாட்சித்தே அனுப்பு வீரே. 36

அனுப்புவது பிறகுனையான் சென்று வாரேன்
அவ்வளவுங் குகைக்குள்நீ பட்ட மாய்நில்
தனுப்பிறந்த தனிபோலச் சென்று தாண்டிச்
சாதகமாய்ச் சொருபமணி மூன்றுங் காட்டிக்

கணுப்பிறந்த கமலியது பூண்டுங் காட்டிக்
காட்டிலே யட்டமாசித் தியினல் காட்டி
உணுப்பிறந்தோர் தாண்டிலொரு வரையி லேறி
உற்றுமறு வரையதனி லோடி னேனே. 37

ஓடினேன் மூவரையி லிடியோ கோடி
ஓகோகோ ரவிகோடி வன்னி கோடி
வாடினேன் மனமிளைத்தேன் மயக்க மானேன்
வாயிலிட்ட குளிகைசென்றே யேறிப் போறேன்
நாடினேன் கற்பமொன்று மூவ்வரையிற் ருண்டி
நலமாக நாலுவரைக் குள்ளே சென்றேன்
ஆடினே னுடினே னறிவு கெட்டேன்
அரகரா மோசமென்றே யிறங்கி னேனே. 38

இறங்கினே னல்வரைக்கப் புறமே போக
என்னுலே முடியாதே யேதோ அஞ்சில்
இறங்கினே னென்மக்கா ளும்மா லாமோ
ஏதுசொன்னுய் பேய்ப்பிள்ளா யென்ன பேச்சு
இறங்கினே னிந்நாள்பின் னையார் சொல்லார்
ஏகவெளி திக்காடு மிடியோ கோடி
இறங்கினே னென்னுலே முடிவு காணேன்
ஏறினர் கொங்கணர்தா மேறி னரே. 39

## கொங்கணர் மகத்துவம்

ஏறியதோர் கொங்கணரைப் போலே யில்லை
ஏகவெளி தீக்காட்டைப் படியோ போனா
மாறியதோர் மனம்பிடித்தார் யோக மானர்
மாளுவது நிசமென்று வாய்மை பூண்டார்
கூறினதோ ரறுவரையைக் கண்டு முட்டக்
குமுறியதோர் சிலம்பொலியைக் கேட்டு மீண்டார்
ஆறியதோர் மனங்கண்டா ரவரே சித்தர்
ஆச்சரியங் கொங்கணர்போ லார்கா னேனே. 40

காணரிது காணரிது கோடா கோடி
கண்டோன் பாபருட்ச சித்தர்க் குள்ளே
பூணரிது பூணரிதே அகண்ட வீதி
புக்கல்லோ சிலம்பொலியைக் கேட்க மாட்டார்
ஊணரிது ஊணரிது வெளியிற் பார்த்து
ஓடுவரோ வென்றீர்கள் மக்காள் நீங்கள்
தோணரிது தோணரிதாய் நின்ற ஞானம்
சீடருக்குள் ளோடுறது துரியந் தானே. 41

சாங்கத்தார்

தானென்ற பூரணத்தைச் சாங்கத் தோர்கள்
சகமெல்லாம் நிர்க்குணமாய் நின்றதென்பார்
வானென்ற வெளியென்பா ரில்லை யென்பார்
வாய்பேசார் சொன்னக்காற் போமோ சொல்லு
கோனென்ற குருவருளால சமாதி கூட்டிக்
குவிந்துநின்று மவுனத்தின் நிலையைப் பற்றி
ஊனென்ற வுடம்பைவிட்டே அறிவாய் நின்று
உலாவுறதே சாங்கமென்றே யுரைத்திட் டாரே. 42

உரைத்திட்ட காரமென்ற பிருதிவி போக்கு
ஓடுகிற வாசியினுல் யோகம் பார்த்து
மறைத்திட்ட மவுனத்துடன் மவுன மூட்டி
மருவியந்த வறிவோடே வாச மாகி
நிறைத்திட்ட அகண்டத்திற் சென்றே ஆடி
நேரான அண்டமுதற் புவனம் பார்த்து
முறைத்திட்டந் தப்பாமற் சமாதி நின்றல்
முழுயோகி முழுஞானி முமூட்சா வாயே. 43

ஆமப்பா விதற்குமுன்னப் பியாச மார்க்கம்
அறைகுவே னட்டாங்கம் நன்றாய்க் கேளு ;
ஓமப்பா வகையாக விரித்துச் சொல்வேன்
உத்தமனே சாட்சிநித் திரையைப் போக்கு :

தாமப்பா சதாசித்தம் தார கத்தே
சார்ந்துநின்ற கேசரிலே சதாசித் தம்பார்
சோமப்பால் சுழித்தோடுங் கேசரியைக் கண்டால்
சொல்லாத முத்திரையைச் சொல்லு றேனே. 44

சொல்லுறேன் ரவிமதியும் வன்னி கூடிச்
சொலித்துநின்ற விடமல்லோ கேசரிதா னப்பா
சொல்லுறே னதைப்பார் மனஞ் செயசீ ராகுஞ்
சுத்தவெளி யடியோடே தாக்கி பேத்தும்
சொல்லுறேன் மனம்புத்தி சித்த மென்பார்
தொடர்ந்துநின்ற குருபதத்தைச் சூட்டிக் கேளு
சொல்லுறே னறிந்தமட்டும் புருவ மையம்
சூட்சந்தொட் டேறியட்டாங் கத்துறை கேளே. 45

கேளப்பா ஏமத்தைச் சொலவே நானுங்
கெடியான நேமமுட னாசங் கொண்டு
வாளப்பா பிராணயம் பிரத்யா காரம்
மகத்தான தியானமொடு தாரணை கேளு
தாளப்பா சமாதியுடை நிட்டை பங்கம்
தனித்தனியே சொல்லுகிறேன் நன்றாய்ப் பாரு
வேளப்பா ஏமமென்ற பத்துஞ் சொல்வேன்
வேதாந்த பொறியறிந்தோர் பெரியோர் தாமே. 46

பெரியோர்கள் ரண்டமென்ற ஆன்மா நோக்கிப்
பேரான பரிச்சின்ன மனமு மாகி
அறியோர்கள் சாதியென்ற ஆச்சிரம் விட்டே
ஆசையென்ற விகற்பமெல்லா மடித்துத் தள்ளிப்
பரியோங்க ளிங்கிசையை நீக்கிப் போட்டுப்
பராபரத்தை நோக்குவதங் கிசம தாகும்
சரியோரா வதுஞ்சகல மதத்தி னாலுந்
தனித்தனியே கண்டிக்கப் படாதென் பாரே. 47

என்பார்க ளிங்கிசையா யிருக்கு மாண்பர்
    எங்கெங்கும் நிறைந்திருந்த சுரூப மூர்த்தி
அன்பார்க ளிதுவல்லோ சத்தி யந்தான்
    ஆரதிக ஆன்மசரீ ராதி சுபாவம்
வன்பார்க ளபகரிப்பை விட்டு விட்டு
    மனமுரைத்தா லூரதிக மென்று பேரு
தன்பார்கள் பிறசரீ ராதி சுபாவந்
    தானென்ற தற்குலலட் சணந்தான் பாரே. 48

பாரப்பா பிரமமது சுபாவ மாகப்
    பரவியது நிரந்தரமுஞ் சரித்தா லன்று
நேரப்பா பிரமசரிய மிதுவாங் கண்டால்
    நிரந்தரமுந் தயவினுடை நினைவு கேளு
தாரப்பா சரீரத்தில் வருத்தம் நீங்கிச்
    சகலசனம் நம்மைப்போ லென்றே யெண்ணி
ஆரப்பா சுபானுபவ போதஞ் செய்வார்
    அவரல்லோ தயவுடையோ ரறிந்து காணே. 49

காணப்பா வேதாந்த சாத்திரம் செம்மை
    கரைகற்ற சமயம்பொய் யென்று தள்ளி
ஆணப்பா திடப்பட்டாட் சேப யென்பார்
    வீட்சணமுஞ் சீதளமுஞ் சுகதுக் கத்தால்
வீணப்பா மானுபி மானம் வந்து
    வெறும்வெளிபோற் சொப்பனமா மென்று தள்ளித்
தோணப்பா தாங்காம லகண்டத்துள்ளே
    சொக்குவது சமயமென்று சொல்ல லாமே. 50

சொல்லலாம் வேதாந்தத் துள்ளே முத்தி
    தொடுகுறியாஞ் சாத்திரத்தின் முத்தி யில்லை
வெல்லலா மதனாலே சொன்ன வெல்லாம்
    வேறில்லை நாமதுதான் எனலே முத்தி

அல்லெலாஞ் சொப்பனம்போ லவத்தை யாண்டு
அகிலபிர பஞ்சமெல்லா மடுத்து மூழ்கி
கில்லலா மற்புதமாய் கிற்பிட மற்று
கிர்மலமாய் கிற்கிறபூ ரணந்தா னென்னே. 51

தானென்ற பூரணந்தான் நாமென் றெண்ணிச்
சதாகித்தம் மறவாம லிருந்தா னாகில்
வானென்ற கலிதகரி யாச்சு தாச்சு
மருவியதோர் சாத்திரத்தி னாலே யப்பா
கோனென்ற தன்னிடத்திதே யொன் றுமில்லை
கூடிநின் று போனதில்லை யென்றே யெண்ணி
வேனென்ற நிர்க்குணமும் வேறுன் றில்லை
வேதாந்தசித் தாந்தமென்றார் கௌச மாச்சே. 52

ஆச்சப்பா நேமத்தைச் சொல்லக் கேளு
அறைகுவேன் நன்றாகப் பூர ணந்தான்
வாச்சப்பா சத்யமென்ன மித்தை யென்ன
மருவியதோர் நானேதான் என்ற தாரு
வீச்சப்பா நமக்குவந்த பந்த மேது
வேதாந்த சாத்திரத்தால் விளங்கப் பார்த்துக்
கூச்சப்பா திடப்பட்டார் தவசென் பார்கள்
குலாமரிட்ட விடமெல்லாங் குருட்டு நோக்கே. 53

நோக்கப்பா பிரமமதி லோகத் துள்ளே
நுகர்ந்துநின்ற காமியத்தை நரகென் றெண்ணி
வாக்கான வெறுப்பதுசொப் பனம்போ லெண்ணி
மசகமிது வென் றுதள்ளி மனமீ தேறித்
தாக்கான பொருளல்லோ சச்சிதா னந்தம்
தடைபெறவே தானுனர் சந்தோஷ மாச்சு
போக்கான வேதாந்தப் பிரம சாரம்
புகட்டுகிற குருச்சொல்பூ ரணமென் றெண்ணே. 54

எண்ணியதோர் மூன்றையுந்தா னுண்மை யென்றே
　　எண்ணியிருக் கிறதாரென் றியம்பு வார்கள்
தண்ணியதோர் குருவுரைத்த வுபதே சத்தைத்
　　தானறிந்து பூரணமாய் முத்த னாகிப்
பண்ணியதோ ரபராதம் குருவுக் கீந்து
　　பராபரத்தைத் தன்தேகம் போலே யெண்ணி
அண்ணியதோர் சுகமுடனே துக்க மெல்லாம்
　　ஆர்செய்துந் தனக்குவரம் போ லுங் காணே 55

காணப்பா விப்படியே தீர்த்தி யானால்
　　கைகடந்த சிவபூசை யென் று சொல்வார்
வீணப்பா சகநூலென் று தள்ளி
　　விரைந்துநின்ற விரத்தியெல்லாம் விட்டே யோடி
ஊணப்பா குருபிறகே நிழலைப் போலே
　　உத்தமனே சச்சிதா னந்த னானைப்
ஆணப்பா தேவிக்குப சரித்து வென் று
　　அறிகிறதே சிரவணமென் றறிந்து கொள்ளே. 56

அறிந்திந்த வேதநிலை விட்டு நீயும்
　　அப்பனே வாசனைப்ர பஞ்சந் தாண்டி
மறிந்திந்த புத்ராதி பாசத் தாலே
　　மாயம்வந்து மூட்டையிலே கலச்சை யாக்கிச்
செறிந்தவதை யடிச்சகவே தாந்தம் பார்த்துச்
　　சீராக நிற்கிறதே செம்மை யாகும்
நெறிந்துநின்ற வேதாந்தப் பிரமந் தன்னில்
　　நினைவோடு வருகிறதே யாசை தானே. 57

ஆசையென் றும் மதியென் றும் அதற்கு காமம்
　　அப்பனே தான்பிரம மென்றே ஆசான்
நேசையென்ற வுபதேசப் படியே யென் றும்
　　நேராக வேதாந்தப் பொருளென் றெண்ணிப்

பூசையென்று மற்றதெல்லாந் தள்ளி விட்டால்
உத்தமனே சிவமென்று சொல்லு வார்கள்
காசையென்றே என்னென்ன கார்யம் வந்துங்
கைவிட்ட துக்கம்வந்துங் கலங்கி டாரே. 58

கலங்காமல் நாம்பிரம மென்றே யெண்ணிக்
கவடற்று நிரந்தரம்வே தாந்தம் பார்த்தே
மலங்காமல் நிற்கிறதே விரத மப்பா
மகத்தான நேமமென்ற பத்து மாச்சே
இலங்காம லிருபதையு மனுட்டித் தக்கால்
என்மகனே மனந்திடமா யில்லா விட்டால்
துலங்காத சுவரில்சித் திரம்போ லாகும்
கழியததா னடிப்படைமுன் றென்றும் வாறே. 59

வாறுகச் சுகாசனமா யிருந்து கொண்டு
மருவியதோர் மூலத்தில்வங் கென்று பூரி
கூறுகக் கும்பித்துத் திரையை யேற்றிக்
குறியோடே சிகாரத்தால் ரேசி ரேசி
சாறுக விப்படியங் கென்று கும்பி
சாதகமா யிவைமூன்றுந் தீர்ந்த பின்பே
ஆறுக அகாரமுத லுகாரங் காட்டி
அப்பனே மவுனத்தாற் கும்பித் தேறே. 60

கும்பித்து மௌனந்தான் குவிந்த பின்பு
கொள்கியதோர் மூலத்தை விட்டு நீயும்
தம்பித்துக் கண்டத்தே நின்றே யூது
தாலடங்கி யுரைத்தபின்மேல் மூலம் நின்று
சொம்பித்தே யறிவோடே மௌனம் பூரி
சுகமாகப் பூரணத்தை யதற்குட் கும்பி
தம்பித்து மனந்தொடுரே சகத்தைப் பண்ணு
தலமான பிரமமென்று பிராண னுச்சே. 61

ஆச்சப்பா இதுவல்லோ பிராணு யாமம் ?
அறிந்தவனர் சிவயோகி யறியார் மற்ருேர்
ஓச்சப்பா பிரபஞ்ச வாசை விட்டே
ஒன்றையுந்தான் மனத்தினுள்ளே சங்கி யாமல்
வாச்சப்பா வந்ததென்ற காரண மாக
மருவியதோர் ஞானமென்ற மார்க்கத் தூடிக்
கூச்சப்பா காமியத்தை நசகென் றெண்ணிக்
கூருன கர்மமெல்லாம் விடுக்க நன்றே. 62

நன்ருக வேதாந்த சாத்தி ரத்தால்
நாம்சாட்சி யென்றுநித்த முரைத்து நின்று
பன்ருன மற்றவைநாம் அல்ல வென்று
பாவிநின்றே யுலகமெல்லாம் மித்தை யென்று
கன்ருக வுரைப்புநிரந் தரமு நினைவாய்க்
காரணகா ரியங்களெல்லாந் தவிர்த்து போட்டு
ஒன்ருன வொருபொருளாய் நின்ரு யானல்
உத்தமனே பிரத்தியா கார மாச்சே. 63

ஆச்சப்பா மாயையொடு மாய வின்பம்
அப்பனே சுத்தசை தன்ய மூன்றும்
போச்சப்பா ஆகாயம் போலே யெங்கும்
ஓடியெங்கும் மறைந்திருக்குங் கண்டா லுந்தான்
ஆச்சப்பா அவர்களைத்தான் தீர்த்த மூர்த்தி
யாகநனி தோத்திரமாய்த் தியானம் பண்ண
வீச்சப்பா பிரமமென்றே தியான மாச்சு
விளம்புகிறே னைந்துவகைச் சமாதி தானே. 64

தானென்ற அதிட்டான சைதன் யத்தைத்
தனையளித்து நிலவறையில் தீபம் போல
ஆனென்ற அலைவற்றுத் திடம தாக
அப்பனே அகண்டமது தாளுய் நின்று

வேனென்ற தோற்றமற்றே யிருந்தா யானல்
விளங்கியதோர் தத்வலயச் சமாதி யாச்சு
வானென்ற சவ்விகற்பச் சமாதி கேளு
மருவியதோர் தத்வலயச் சமாதிக் குள்ளே. 65

உள்ளாக இருக்கையிலே பேசுஞ் சுற்றம்
உறவாகக் கேட்டாக்காந் தானு வித்தை
தள்ளாகச் சவ்விகற்பச் சமாதி யென்று
தாமுரையார் பெரியோர்கள் கேளு கேளு
விள்ளாகத் திரிசானு வித்தை மார்க்கம்
விாவியந்தச் சமாதியிலே நிற்கும்போது
தள்ளாகத் தன்னையனு சந்தா னித்துத்
தலமான சந்தானந் திரிசான மாச்சே. 66

ஆச்சப்பா இதன்பேர்சவ் விகற்ப மென்பார்
அருளியதோர் நிருவிகற்பச் சமாதி கேளு !
ஓச்சப்பா தத்வலயச் சமாதி முத்தி
உத்தமனே சாத்தனுத்தங் கேம றந்து
ஆச்சப்பா துக்கமுற்று மிருகம் போல
ஆச்சரியஞ் சத்தமெல்லாங் கேளா விட்டால்
கூச்சப்பா சித்தமது சொருபத் துள்ளே
கொண்டாற்பூ ரணத்தில்நிரு விகற்ப மாமே. 67

ஆமப்பா சமாதிவிட்டுச் சரிக்கும் போதும்
அப்பனே சாத்திரங்கள் பார்க்கும் போதும்
ஓமப்பா காலமென்ற நிறையு மில்லை
உத்தமனே பிரபஞ்ச மில்லை யென்று
சோமப்பா விகாரந்தோற் றும்ப்ர பஞ்சஞ்
சொப்பனம்போல் பாசமென்ற மதிய டக்கில்
ஆமப்பா தீவிரமாம் பிறவி யார்க்கும்
அகத்தான காரணமு மென்றே யெண்ணே 68

எண்ணியல்லோ மனத்துள்ளே படாதே நீக்கி
ஏக்கமாய் நிருவிகற்ப மாகி நின்றே
அண்ணியல்லோ பிரபஞ்ச விகற்பந் தள்ளி
அநுபோக நிருவிகற்பச் சமாதி யாச்சே
ஒண்ணியல்லோ சொருபத்தில் லயிச்சு நின்றே
உற்றிருந்த அகண்டவிர்த்தி காற்றில் தீபந்
தண்ணியல்லோ வுப்புண்டாற் போலே மைந்தா!
சாதகமா யுன்னுருவங் கெட்டுப் போச்சே. 69

போச்சதுவுங் கடிகையொன்று தானுய் நின்றாற்
புகழான பெருமைசொல்ல வென்றாற் கூடா
ஆச்சதுவு மவுனமுற்று வாயை மூடி
ஆசையற்றே இருந்தல்லோ அகண்ட வீதி
வாச்சதும்ப்ர பஞ்சத்திற் கண்ட தெல்லாம்
வாலையுட னுரைபோலும் மலைபோற் காணும்
கோச்சதுவுஞ் சிலந்தியுடை நூலும் போலக்
கூறுமத னங்கம்போற் குறியைக் காணே. 70

குறியான விண்ணுதித்த மேகம் போலுங்
கோதியதோர் சொப்பனப்ர பஞ்சம் போலும்
நெறியான அகண்டம்நம் மிடத்தே மைந்தா!
நேராக வுண்டாகில் இற்றுப் போச்சு
பறியான வெவ்வேறு நாம மாகிப்
பாழுலகு நம்மிடத்தே தோன்றுந் தோன்றும்
மறியாக வழிந்துபோம் நாமே பிரமம்
மற்றொன்று மில்லையென்று மயக்கந் தீரே. 71

மயக்கமற்று நானொருவ னெனக்கு ளெல்லாம்
மற்றொன்று மில்லையென்று தீர னாகித்
தியக்கமற்றெந் நேரமுமுள் ளிட்டுக் கொண்டு
சேர்ந்துவருஞ் சந்தோடந் துக்கந் தள்ளி

முயக்கமற வருட்செய்து முன்னே வந்து
முன்னின்று விகற்பங்கள் பண்ணி னாலும்
அயக்கமற்று மனதிடமாய்ச் சதமாய்த் தள்ளி
ஆராதி கொண்டகறித் தானாய் நில்லே. 72

நில்லப்பா சஞ்சாரத் தாலத் துள்ளும்
நேராகச் சமாதியிலே யிருக்கும் போதே
அல்லப்பா தொய்தம்வந்தா லாதரவு பண்ணி
அசையாத மலேபோல விருக்க நன்று
சொல்லப்பா கற்பமது கண்டத் தெய்துஞ்
சுட்டிநின்று திடப்படுதல் மெத்த நன்று
வெல்லப்பா வாசனையை விண்டா யானல்
மேவியதோ ராரூடச் சமாதி யாச்சே. 73

## மாயை யுத்தி

ஆச்சப்பா மாயையுத்தி சொல்ல வென்றால்
அனேகமுண்டு; சூட்சுமமாய்ச் சொல்லக் கேளு:
வாச்சப்பா தேசத்திற் பேதா பேதம்
மருவியதோர் கிராமத்தில் கிராம பேதம்
ஒச்சப்பா திறங்களிலே திறங்கள் பேதம்
ஓகோகோ சனங்களிலே யனேக பேதம்
வீச்சப்பா புத்திகளிற் பேதா பேதம்
வெகுமோக மாயத்தாற் றேன்றுங் காணே. 74

## ஞானவான்

காணப்பா வின்னமய மாகி நின்று
கலந்துநின்ற புராணமய கோச மாச்சே!
ஊணப்பா விக்யான மயமு மாகி
உத்தமனே மனோபயமாங் கோச மாச்சு;
பூணப்பா வானந்த மயமு மாகப்
பொங்கிற்றே யஞ்சுதிரை போதத் துக்குத்
தோணப்பா திரையஞ்சு மாயை மாயை
சொல்லுகிறேன் சூட்சத்தைப் பூட்டிப் பாரே. 75

பூட்டியதோர் விசிட்டனென்றும் விராட னென்றும்
புகழ்பெரிய ஏமகற்பப் போக்கே தென்றும்
நீட்டியதோ ரண்டமென்றும் புவன மென்றும்
நேரான பதங்களென்றும் மாயை யாச்சே
ஆட்டியதோ ராட்டமெல்லாம் மாயை யாட்டே
அறிந்துகொள்ளு முன்மனமே மட்டை மாயை
மூட்டியதோர் மனமும்வந்த வரைக்கே நிற்கும்
மூதண்ட மனங்கடக்க முடியா வாறே 76

வாறான வுலகத்திற் சுத்தவீரன்
மனத்தோடே போராடி யருவில் மாள்வான்
கூறான ஞானியென்றால் லிங்கம் புக்குக்
குறியான அம்பலத்தில சேர்வா னப்பா
தாறான வுலகத்தோர் கடுத்த ஞானஞ்
சகத்திரமாங் கோடியிலே யொருவர் சொல்வார்
வீறான சிலபேய்கள் சாங்கம் பேசி
விழிந்திறந்து விழிந்திறந்து திரிவர் தானே. 77

தானென்ற பிரமருமோ ரறிவிற் சென்றார்
சாதகமாய் மாலென்று லறிவிற் றேனென்றும்
கோனென்ற ருத்திரனோ ரருவி லந்தங்
கொள்கின்ற மகேச்சுரனோ கறிவிற் றேனென்றும்
வானென்ற சதாசிவனோ மணியைக் காண்பான்
மகத்தான ஐவருந்தா னுக்கிப் பீடம்
வேனென்ற பஞ்சகர்த்தாள் மட்டுஞ் சென்றால்
வேதாந்தி யெனமட்டுஞ் சொல்வார் பாரே. 78

பாரப்பா சித்தரென்றார் குளிகை போட்டுப்
பகுத்தறிவா ருள்மனையைப் பரிந்து போற்றி
நேரப்பா தம்மொடுபூ ரணத்தி னின்று
நோரக வோடம்போல் நீஞ்சி யாடிச்

சேரப்பா திரும்பிவந்து புகுது வார்கள்
செகத்திலுள்ள சித்தருக்கே அடுத்த வாறு
கூறப்பா பூரணத்தில் நாதந் தாண்டிக்
கொங்கணர் தாம் சிலம்பொலியைக் கூடி னாரே. 79

கூடினார் மூலகுரு பேர னென்று
கோடானு கோடிசித்த ராடிப் பார்த்தார்
ஆடினா ராடினா ரேற மாட்டார்
ஆச்சரியங் கொங்கணர் தா மகண்டில் சித்தர்
ஓடினா ரோடினா ரனேகங் கோடி
ஓங்கிநின்ற காகத்தி லொன்றிப் போட்டுத்
தேடினார் தேடினார் குளிகை தன்னைச்
சித்தருக்குச் சொருபனிது இட்டும் வாறே. 80

வாறான சுருபமணி யாரின் வர்க்கம்
மகத்தான தெட்சணா மூர்த்தி வர்க்கம்
கூறான தொன்றாய்நிட் களங்க மாகிக்
குவிந்துநின்ற பொருளாகிக் கூறொ ணாத
தாரான தற்பதமாய் அதுவு மற்றுச்
சச்சிதா னந்தத்தில் நின்ற ஆசான்
பேரான பிள்ளைகட்கு மணியு மீந்து
பெரும்பாதை மகாரமென்று பேசி னாரே. 81

பேசியதுர்க் கந்தமென்ன வென்று கேட்டால்
பெருவிரலே நீயாய்மெய் விரலே போத
மாசியது வற்றக்காற் கவிக்கு முன்னே
மக்களே யிந்தப்பா ரென்று காட்டித்
தேசியது மகாரவித்தை சென்று கூட்டிச்
செப்பாதே மகாரவித்தை குளிந்த ஞானம்
வாசியதுக் கருகாகுங் கண்டு கொள்ளும்
மக்களே சின்முகத்தில் கடுப்பா லாமே. 82

நடுவென்ன வெட்டவெளி யொன்று மில்லை
நானுமில்லை நீயுமில்லை யகண்ட வீதி
கடுவென்ன லகுவென்ன மனஞ்செவ் வானல்
கண்டுகொள்ளு மென்றுசொல்லிக் கரத்திற் காட்டிச்
சுடுவென்ன தாபமென்ற முளையை முந்திச்
சுடுகின்ற துத்தியென்ன மௌனத் தீதான்
விடுவென்ன இந்திரியப் பாம்பை நீயும்
விட்டகன்றே யறிவோடே மேவு மேவே. 83

மேவுமென்கை லாயபரம் பரையா மாணு
வெகுகோடி ரிஷிகளுக்கு முபதே சித்தார்
மேவுமென்று சித்தரிலே யனேகங் கோடி
மேருவிலே யிருந்தார்க்கு முபதே சித்தார்
மேவுமென்றென் னேடுபதி னாறு பேர்க்கு
விளங்கியவர் பதம்பிடிக்க வுபதே சித்தார்
மேவுமென்றே யெழுவருடன் திருமூ லர்க்கு
விளம்பினர் மெய்ஞ்ஞானம் விளம்பி னாரே 84

விளம்பியநா மெல்லாங்கை லாய வர்க்கம்
மேருவிலே யெடுத்தவுட லெமக்கு மக்காள்
அளம்பினதோர் சனகாதி யையர் விட்டே
அரைக்கணமும் பிரியார்க ளடியை விட்டுத்
தளம்பினதோர் கொடிக்குக்கொழு கொம்பு போலே
சதாசித்தங் காத்திருந்தோ மையா கிட்டக்
கிளம்பினதோர் பந்துபோ லனேகம் பிள்ளை
கெடியிட்டு பாட்டியங்கே கிட்டி னாரே. 85

கிட்டினங்கை லாயபரம் பரையி னாலே
கேளுமாச் சரியங்கொங் கணர்தாய் சென்று
கிட்டினே மென்றுசொல்லி யீசா னத்தே
கெடியான ரசமுண்டு சட்டை போக்கிக்

கிட்டினே மீசானங் துதித்தோ மென்று
கெட்டியாகத் தவசிருந்து முத்த ராகிக்
கிட்டினே மென்றுசொல்லித் தட்சிணமூர்த்தி
கெட்டியான பதம்பிடித்துப் பணிந்திட் டாரே. 86

பணிந்திட்ட கொங்கணரைப் பார்த்து நாதன்
பாருலகிற் பிறந்தவனிப் படிதா னுனல்
மணிந்திட்ட சடம்போக்கிக் கைலாயத் தேக
மானதுதான் வெகுகடின மதிக மெத்தக்
கனிந்திட்ட கனிவாலே வீரத் தாலே
கலங்காமற் சமாதியுற்றுக் கயிலா யத்திற்
றணிந்திட்ட புத்திகொண் டிங்கே வந்தாய்
சாதகமா யொருவரையுங் கண்டி லேனே 87

கண்டிலே னுச்சரியங் குமார னேபார்
கலந்தநற் சென்மமிவர் கைலாய மானுர்
ஒண்டிலே நாலதுக்கு மகத்வ மென்ன
உற்றசிவ விந்துவிலப் படிதா னுச்சு ;
கண்டிலே னிவரைப்போற் சித்தர் காணேன்
காரணமா யிவனுக்குத் தீட்சிப் பேனுன்
பண்டிலேன் கொங்கணரே மயங்க வேண்டா
பரம்பரமாய் வயதுதந்த மௌனந் தானே 88

மௌனவித்தை மூலருக்கு முன்னே சொன்னேன்
மருவியவர் காலாங்கிக் கதுவே சொன்னுர்
மகத்தான போகருந்தா னுமக்குச் சொன்னுர்
மௌனவித்தை யகண்டாதி யறிந்துகொள்ளும் ;
மற்றென்று மயக்கமற்று மௌனத் தார்க்கு
மௌனவித்தை யெய்தியக்கா லவனே ஞானி
பற்றென்றும் வையாதே பலருங் காண
வாய்திறந்து பேசாதே மகாரம் நன்றே. 89

நன்றான மௌனத்திற் கடிகை சேர
நல்வினையுந் தீவினையுந் நாச மாகும்
நன்றான மௌனமென்று நினைக்க முத்தி
நல்லோர்கள் நினைப்பார்கள் மற்றோர் காணார்
நன்றான மௌனமல்லோ ரிஷிகள் சித்தர்
நாலுதிக்குஞ் சொருபமல்லோ ஞானி யானார்
நன்றான மௌனத்தைக் கண்டார் முன்னே
நலமாகக் கூப்பிடுது கண்டி லாரே. 90

கண்டிலார் மோனத்தி லனேக சித்தி
காணுமப்பா சொல்லுகிறேன் நன்றாய்க் கேளே
அண்டிலார் மந்திரங்கள் செபிக்கும் போது
அப்பனே மௌனமென்றே தீட்சை கேளு;
ஒண்டியாய் வாய்மூடிப் பேச்சு மற்றே
ஒருசேரச் சமைத்துண்ணு ஒருபோ தப்பா
விண்டிலா தெங்கேரஞ் செபித்தா யானல்
விளங்கியதோ ரேழுலட்ச மந்த்ரஞ் சித்தே. 91

சித்தாகுஞ் சித்தியுமா மெட்டெட் டாகுந்
திறமாக நின்றவர்க்கு மந்த்ரஞ் சித்தி
சத்தாகும் வேதமந் திரத்தைப் பாவி
சலசலெனப் பேசிச்சே விப்பார் கோடி
கத்தாதும் நாய்போலே கத்தி யென்ன
காசுக்கு மாகாது சித்தி யில்லை
முத்தான மௌனம்விட்டால் மனம்பா ழாச்சு
மோசமிந்த வேதமெல்லாம் பொய்யென் பாரே. 92

பொய்யென்றே யெண்ணியெண்ணி யுலகங் கெட்டுப்
போச்சதனு லேயுகத்தின் பேத மாச்சு;
கையென்று யோகத்தில் மௌன முட்டக்
கடுஞ்சித்தி யறிவுமட்டுங் கலந்து தாக்கு

சையென்ற நிர்த்தமப்பா ஆறிற் காணுஞ்
சாதகமாய் மேல்மூலந் தாண்டிக் காணும்
மெய்யென்று பிடித்தக்கா லவனே யோகி
விரைந்திதனை யறியாட்டால் விருதா மாடே. 93

விருதன்றோ வுலகத்தி லாசா னென்று
வேடமிட்டு வேடமிஞ்சி மோடி யேற்றி
விருதன்றோ பணம்பறித்துப் பிழைப்பா யையோ
வேதாந்த மொன்றுமில்லை சாங்க மென்பார்
விருதன்றோ கெடுத்துவிட்டா ருலகத் தோரை
வேடமென்று மயக்காலே மயங்கிப் போனார்
விருதன்றோ சீடருடைப் பாவ மெல்லாம்
விளையாட்டுப் போல்வாங்கி விழுந்திட் டாரே. 94

விழுந்திட்டா ரென்றறிந்து கொங்கண ரேநீர்
வெகுபிள்ளை பெற்றீர்மூன் றூறு பிள்ளை
நழுந்திட்ட பிள்ளையுண்டோ திறந்தா னுண்டோ
நலமாக வுமைப்போலா ருரு முண்டோ ?
அழுந்திட்ட சமாதியுண்டோ தியான முண்டோ
ஆகாத பிள்ளையுண்டோ சொல்லுஞ் சொல்லும்
கொழுந்திட்ட தேவரீர் கருணை யாலே
கொஞ்சமறப் பிள்ளையிலே கூடி லேனே. 95

கூடாத நலலபுத்தி சித்தர் வென்றார்
கொள்கியே வரங்கள்பூ மியிலே தட்டி
நீடாகத் தெண்டனிட்டே வழைத்துக் கொண்டு
நிமிடத்திற் குகையினுள்ளே நேர்ந்து போனார்
ஆடானு லதுமாட்டு வன்றே சித்தர்
ஆனந்த போகமுண்ட ஆண்மை யாண்மை
ஓடானு லோட்டுமிக் குணத்தின் வீதி
ஒருமனமாய் நின்றுபுத்தி யுரைப்புத் தானே. 96

தானென்ற கொங்கணர்போல் பிள்ளை பெற்றால்
தங்குமடா குட்டென்கை லாயமூர்த்தி
வானென்ற சுந்தரா னந்தன் விந்து
வரவற்ற பூரணமே தாப மென்னக்
கானென்ற வெளிகடக்க அறிவோம் நாங்கள்
கரையற்ற போகத்தைப் பானஞ் செய்வோம்
கோனென்ற கைலாய பூரணமே தேவர்
கொள்கியதோ ருற்பனமும் லயமுஞ் சொல்லே. 97

சொல்லுகிறேன் கேளுங்கள் மக்காள் நீங்கள்
சுகமாக வாரிதியில் மேக நீர்போல்
அல்லுகிற துவலையைப்போற் பிறப்புண் டாச்சே
அதுவோங்கும் விவரமென்ன சொல்வீ ரையா;
பல்லுகிற சந்திரனும் நீரை வாங்கு
பாங்கான ரவியங்கே நன்றாய்ப் பாரு
சொல்லுகிற கெற்பத்தில் விந்து வுன்னிச்
சிந்தூளி பரஞ்சத்தாற் சின்ன மாச்சே. 98

ஆச்சப்பா சனனமிந்தப் படியே யாகில்
அடங்கிறதக் கினியும்ரவி மதியுங் கூடி
வாச்சப்பா சந்திரனிற் கலந்து போனால்
மாளுகிற விதமிதுதான் குளிர்ந்து போகும்
நீச்சப்பா சின்னமொடு பாணம் ரண்டும்
நேராக மனோன்மணியைத் தொட்டு மீறும்
ஓச்சப்பா லக்கமில்லை பெழுவகைத் தோற்றம்
உத்தமனே நாலுவகை யோனி காணே. 99

காணிந்தப் படியெல்லாங் கண்டு கொண்டு
கலங்காம லிருக்காமல் யுகமே கோடி
வானிந்த சாயமட்டே சால மெல்லாம்
மனந்தாண்டி அறிவில்வந்த தெல்லாம் போச்சே

ஆணிந்தப் படிநீங்கள் சமாதி கொண்டே
அரைவிட்டால் குளிகையிட் டோடிப் பாரு
தோனிந்தப் படிசொன்னேன் முன்னேத் தூக்குச்
சுழல்காற்றுத் திரும்பதுபோல் மவுன மாமே. 100

மௌனமென்றீ றெனையாண்ட தட்சிணு மூர்த்தி
மலர்பணிந்தே ஞானமது நூறுஞ் சொன்னேன்
மௌனமென்ற நாதாக்கன் பதத்தைப் போற்றி
வகையோடே நிகண்டாக வாதஞ் சொன்னேன்
மௌனமென்றீர் ஞானம்பொய் யென்று சொல்லி
வாகான செயமண்டி போட்டே நூற்றில்
மௌனமென்ற சமரசத்தான் மக்காள் மக்காள்
வாகான ஞானமுறை முற்றுங் காணே. 101

---

# காகபுசுண்டர் ஞானம்—80

—::—

காப்பு

**எண்சீர் விருத்தம்**

சிறந்தபரா பரமாகி யெங்குந் தானுய்த்
தீர்க்கமுடன் ரவிமதியுஞ் சுடர்மூன் ருகிப்
பறந்தருளும் ஐம்பூத மாயை தோன்றிப்
பல்லாயிரங் கோடிஅண்டம் படைத்த போதம்
வரம்பெருகி யனந்தனந்தம் உயிரு மாகி
மதபேத மாகவுந்தான் வடிவைக் காட்டிச்
சரம்பெருக அண்டத்தி லெழுந்தே நின்ற
சச்சிதா னந்தமதைப் பணிகு வோமே 1

ஓமென்ற சுழுனையடா அண்ட வுச்சி
ஓமுடிந்த பட்டணத்துக் கப்பாற் சென்று
நாமென்று சொல்லற்று யோக ஞானம்
காட்டுகிறேன் அஞ்சனமுந் திலதப் போக்கும்
வாமென்ற வயித்தியமும் அட்ட கர்மம்
வாதமென்ற வித்தையெல்லாந் தெளிவ தாகக்
காமென்ற பீடமதிற் கண்டு தேறிக்
காட்டுகிறேன் மெய்ஞ்ஞானக் கருவைப் பாரே 2

பாரேநீ யோகமென்ற வழியைச் சொல்வேன் ;
பத்தடா ஐம்புலனைப் பரத்தி னூடே
சீரொருவர் தெரியாமல் மதங்கள் பேசித்
திருவான வுச்சியிலே சேரா மற்றுன்
ஆரொருவன் ஆதாரம் வெவ்வே றென்றே
அடுக்கடுக்காய்ப் பன்னிரண்டு தலங்க ளென்று
வீரேதான் பெசியே மெலிந்து போவான்
விடமுண்ட அண்டமதை விரும்பிக் காணே. 3

காணப்பா தலமெல்லாம் அண்ட வுச்சி
கமலமடா பதினெட்டாங் கோட்டிற் சென்று
பூணப்பா மனத்தையுந்தான் பிசகொட் டாமற்
பூட்டடா பிரமத்திற் புகுந்தெங் நாளும்
வீணப்பா மந்திரங்க ளொன்று மில்லை
விதியில்லை மதியில்லை கெதியு மில்லை
தோணப்பா தோணுமடா மனமொன் றுன
சுத்தமுடன் நீயிருந்து தவஞ்செய் வாயே. 4

செய்யப்பா வாசிமுனி மகனே கேளு
தீர்க்கமுடன் முன்னுரைத்த ஆயிரத்தில்
மெய்யப்பா சரக்குநீத் துவகை யெல்லாம்
மேன்மையுடன் கட்டினங்கள் உருக்கி னங்கள்
பொய்யப்பா சொல்லவில்லை ரத்னப் போக்குப்
புனிதமுடன் சரியாகச் சொல்லிப் போட்டேன்
வையப்பா இந்நூலில் மவுன மெல்லாம்
வகையாகச் சொல்லுகிறேன் பணிந்து கேளே. 5

கேளப்பா கேசரமே அண்ட வுச்சி
கெட்டியாய்க் கண்டவர்க்கே மவுன மாகும்
ஆளப்பா பரப்பிரம யோக மென்றே
அடுக்கையிலே போதமுந்தான் உயரத் தூக்கும்
வாளப்பா கெவுனமணி விந்து நாதம்
வலுத்ததடா கெட்டியாய்த் திரண்டு போகும்
நாளப்பா அண்டமெல்லாஞ் சத்தி யோடு
நடனமிடுஞ் சிலம்பொலியுங் காண லாமே. 6

காணலாம் பிரமத்தில் நிர்ண யந்தான்
காட்டுகிறேன் வாசிமுனி கருவாய்க் கேளு
பூணலாம் அண்டவுச்சி தன்னில் நின்று
பொறிகளையு முண்டாக்கிப் புவனந் தன்னில்

தோணலாம் உயிர்ப்பயிரைப் படைத்தெந் நாளுந்
தொந்தமென்னும் ஏழுவகைத் தோற்ற மாகி
ஆணலாம் நாலுவகை யோனி யாகி
அண்டமடா அவந்தனந்த மான வாறே. 7

வாறான பிரமத்தில் நடுவே மைந்தா!
வந்ததடா ரவிமதியுஞ் சுடர்மூன் றாகிக்
கூறாகப் பின்னிபடா கீழே பாயுங்
கூறுகிறேன் இருகண்ணில் ஒளிவைக் கேளு;
வீறான அண்டவுச்சி முனைக்கப் பாலே
வெற்றியுடன் நரம்பதுதான் விழுது போலே
நேராக இருகண்ணிற் பின்ன லாகி
நிச்சயமா யொளிவாகி நிறைந்தார் பாரே. 8

பாரப்பா பரப்பிரமம் ஒளிவி னாலே
பத்தியே நரம்புவழி பாயும் போது
ஆரப்பா இருகண்ணில் ஒளிவ தாகி
அண்டமெல்லாம் ஏகமாய்த் தெரியலாச்சு
காரப்பா நரம்பென்ற விழுது வட்டம்
கபாலத்தில் முக்கூறாய்ச் சுழுனை யாச்சு
வீரப்பா காதுக்கும் நாக்குக் குந்தான்
வெற்றிபெற இன்னமுந்தா னுரைக்கக் கேளே; 9

கேளப்பா மூலமடா லிங்கந் தன்னில்
கிருபையுடன் தண்டுக்குங் கீழமே லாக
நாளப்பா தமர்போலே பிடரி மார்க்கம்
நன்றாக ஓடுமடா நரம்பி னூடே
வாளப்பா அண்டமுட்டி வுயர மைந்தா!
வலுவாக முன்சொன்ன நரம்பி னூடே
தேளப்பா சேர்ந்துமிகப் பின்ன லாகிச்
சிறந்திடவே புருவமத்தி யாகும் பாரே. 10

பாரடா புருவமத்தி யேதென் றக்கால்
    பரப்பிரம மானதோர் அண்ட வுச்சி
நேரடா முன்சொன்ன நரம்பு மத்தி
    நிலைத்ததடா சுழுனையென்று நினைவாய்ப் பாரு
வீரடா அண்ணாக்கில் நேரே மைந்தா!
    மேவடா மனந்தனையுஞ் செலுத்தும் போது
காரடா சுழுமுனையிலே மனந்தான் பாய்ந்து
    கலந்தைந்து பூதமுந்தான் ஒன்றாய்ப் போமே. 11

போமடா முன்சொன்ன நரம்பி னூடே
    பூரித்து ரவிமதியுஞ் சுடர்தாம் மூன்றும்
ஆமடா பின்னியுங் கீழே பாயும்
    அந்தரங்கந் தனைப்பார்க்க அடங்கிப் போகும்
நாமடா வெளிதிறந்து சொல்லி விட்டோம்
    நாதாந்த பரப்பிரம நாட்டந் தன்னை
ஓமடா விந்துவுந்தான் அண்ட வுச்சி
    உறுதியுடன் சித்தமதை யூன்றிப் பாரே. 12

பாரான சாகரமே அண்ட வுச்சி
    பதினாலு லோகமெல்லாம் பரத்தி னூடே
சீராகத் தெரியுமடா மவுன மார்க்கஞ்
    சித்தான சித்துவிளை யாடி நிற்கும்
வீரான மந்திரங்கள் பிறந்த தெப்போ?
    விண்ணுவென்றும் பிரமனென்றும் வந்த தெப்போ?
கூரான முக்குணங்க ளுதித்த தெப்போ?
    கூறாத அட்சரத்தின் குறியைக் காணே. 13

காணார்கள் பிரமமுந்தா னுதிக்கு முன்னே
    கருணையுள்ள மந்திரங்கள் பிறந்த துண்டோ?
தோணாமல் மந்திரங்க ளனந்தங் கற்றுச்
    சுழுனையென்ற மூக்குநுனி தன்னைப் பார்த்து

வீணாகத் திரிந்துமிகப் பித்தர் போலே
வேரோடே கெட்டுழல்வான் விருதா மாடு ;
கோணாம லண்ணாக்கின் நேரே மைந்தா !
குறிப்பறிந்து பார்த்தவர்க்கே முத்தி தானே. 14

முத்தியடா மந்திரத்தை நினைக்கும் போது
மோசமடா மனந்தானும் இரண்டாய்ப் போகும் ;
சத்தியடா மனந்தானே யேக மாகத்
தனித்திருந்து நித்திரையைத் தள்ளி மைந்தா !
புத்தியடா பிரமத்திற் புகுந்து கொண்டாற்
பூலோக மெல்லாந்தான் பணியு முன்னே ;
எத்தியே திரியாமற் பிடரி மார்க்கம்
ஏறுகின்ற வாசியுந்தான் கற்பந் தானே. 15

தானென்ற கற்பமடா மதுவுண் டக்கால்
சஞ்சார சமாதியென்ப ததற்குப் பேரு
ஊனென்ற பசிதீரும் கோபம் போகும்
உதயகிரி தனிற்சென்றா டுருவிப் பார்க்கத்
தேனென்ற திரைபேழுந் தீய்ந்து போகுந்
திரிவாரே உச்சிநடுச் சென்ற போது
கோனென்ற கருவியெல்லா மொடுங்கிப் போகுங்
கூற்றுவனு ராட்டமதைப் பார்க்க லாமே 16

பார்க்கலாம் ஒருகாலை உயரத் தூக்கிப்
பாடுவா னொருகாலைத் தாழ விட்டே
ஏர்க்கையிலே மேல்நோக்குங் காலைக் கேளாய்
என்மகனே மதியென்ப ததற்குப் பேரு
கார்க்கையிலே கீழ்நோக்குங் காலை மைந்தா !
கண்டுபார் ரவியென்று கருத லாகும் ;
மார்க்கமுடன் அண்டவுச்சி மேலே தானும்
மகத்தான வன்னியிருப் பிடந்தான் பாரே. 17

பாரப்பா இதையறியார் சித்தர் கூடிப்
பார்தனிலே அறுபத்து நாலு போகம்
ஆரப்பா இருக்குமென்று வெவ்வேறாக
அலைந்தலைந்து கெட்டவர்கள் அனந்தங் கோடி
நேரப்பா ராசாங்க யோகம் பார்த்து
நிலையறிந்து கண்டவனே கோடிக் கொன்று
வீரப்பா பேசாமல் மனக்கண்ணாலே
விந்துவடா பாய்ந்ததலம் வெளியைக் காணே. 18

காணாத காட்சியெல்லாங் கண்ணிற் கண்டு
காகமடா புசுண்டரென்று பேரும் பெற்றேன்
தோணாமல் நானலைந்து சிறிது காலம்
துருவமென்ற பிரமத்தை யடுத்துக் கேட்க
நாணாமல் அண்டவுச்சி தன்னிலேதான்
நாடியே மனத்தாலே நாட்ட மாகக்
கோணாமல் பாருமென்றே எனக்குச் சொல்லக்
கூசாமல் மனமொன்றா யிருத்தினேனே 19

இருத்தியே இருதயத்தில் மனமொன்றாக
ஏகபா மாம்பொருளை யிருத்தி யொன்றாய்
நிருத்தியே வெகுகோடி கால மட்டும்
நிருவிகற்பச் சமாதியிலே நிறைந்தேன் நாளும்
பொருத்தியே லலாடக்கண் திறந்து பார்க்கப்
பூலோக மெங்குமொன்றாய் நிறைந்தேன் மைந்தா!
கருத்தொன்றாய் நிறுத்தியடா கபாடம் நீக்கிக்
காரணத்தைக் கண்டுவிளை யாடு வாயே. 20

விளையாடிப் போதமய மாக வுந்தான்
வெட்டாத சக்கரத்தின் வெளிச்சம் பார்த்து
நிலையான அண்டமதில் நெற்றிக் கண்ணை
நீயறிந்தே அரவுவிடந் தன்னைப் போக்கி

அலையாம லாரொருவ ருறவு மற்றே
ஆயிழையாள் மோகமதை யதட்டித் தள்ளி
மலையாமற் பிரமமே துணையென் றெண்ணி
மவுனமென்று மனந்தனையு மடக்கி நில்லே. 21

நில்லென்றால் லோகத்தில் மனிதர் தாமும்
நிட்டையுடன் சமாதியுமே பொருந்தா மற்றான்
வல்லவர்போல் வேதபுரா ணங்காவ் யங்கள்
மந்திரங்கள் கோடானு கோடி யென்றும்
செல்லுவார் கோவிலென்றுந் தீர்த்த மென்றுந்
திருடர்கள்தா னலைந்தலைந்து திரிவார் மட்டை
வெல்வதொரு பிரமநிலை யறியா மற்றான்
வேற்ற மரம்போலே விழுவார் பாரே. 22

பாரப்பா மலரெடுத்து லிங்கம் வைத்துப்
பார்த்தீப லிங்கத்தைப் பணியா மற்றான்
வீரப்பா நீரோட்டிப் பூசை செய்து
வீணர்கள்தாம் கத்தபம்போற் கதறு வார்கள்
தேரப்பா மலரதனைக் கிள்ளும் போது
செத்தசனம் போலாச்சுத் தெளிந்து பாரு
காரப்பா மனங்கொண்டு பரத்தி னூடே
கண்டவரே கயிலாசத் தேகந் தானே. 23

தானென்ற பிரமத்தை யடுத்தி டாமல்
தாரணியில் தெய்வமடா அனந்த மென்றும்
ஊனென்ற குருவென்றுஞ் சீட னென்றும்
உதயகிரி பாராத வுலுத்த மாடு
வேனென்ற பொய்களவு கொலைகள் செய்து
வேசையர்மே லாசைவைத்து வீண னாகிக்
கோனென்ற குருபாதம் அடைய மாட்டான்
கூடுவான் நரகமதில் வீழ்வான் பாரே. 24

பாரப்பா நாக்கையுந்தான் அண்ணாக் கேத்திப்
    பார்தனிலே பார்த்தவர்க்குப் பலித மில்லை
ஆரப்பா கண்வெடிக்குந் தேகம் போகும்
    அடயோக மென்பார்க ளாகா தப்பா!
சாரப்பா மனந்தனையண் ணாக்கில் நேரே
    சார்ந்துமிகப் பார்க்கையிலே வாசி தானும்
வீரப்பா மேலடங்குங் கீழ்நோக் காது
    வெட்டாத சக்கரத்தை யறிய லாமே. 25

அறியலாம் மனந்தானே உயிர்தா னாகும்
    அண்டத்திற் சேர்ந்திடவே ஆகும் முத்தி
பரியேறிச் சவாரியுமே நடத்த லாகும்
    பஞ்சமா பாதங்கள் பறந்தே போகும்
விரிவான மனந்தனையும் அணுவ தாக்கி
    விட்டகுறை தொட்டகுறை விதியைப் பார்த்துக்
குறியான குண்டலியா மண்ட வுச்சி
    கூறுகிறேன் முக்கோண நிலைய தாமே 26

தாமென்ற உலகத்தில் மனித ரோடே
    சஞ்சாரஞ் செய்யாமற் றனித்து நில்லே
ஓமென்ற ஊண்மிகுந்து உண்டி டாதே
    ஓரமாய் வழக்கதனை உரைத்தி டாதே
ஆமென்ற அட்சரத்தை மறந்தி டாதே
    ஆயாச மாகவுந்தான் திரிந்தி டாதே
காமப்பேய் கொண்டவனோ டிணங்கி டாதே
    காரணத்தைக் கண்டுவிளை யாடு வாயே. 27

விளையாடிக் கருநெல்லி பறித்தே உண்ணு
    வேகாத தலையாகும் விரும்பிப் பாரு
மலையாமல் வெண்சாரை பிடித்தே யுண்ணு
    மைந்தனே சாகாக்கா லதுவே யாகும்;

அலையாமல் சோதியதன் பாலை யுண்ணே
அக்கினியாங் கம்பமடா சுழனை யாச்சுக்
கலைநா லு போகிறதை யெட்டிற் சேரு
கபடமற்ற தேகமடா கண்டு பாரே. 28

கண்டுகண்டு மனந்தானே அண்டஞ் செல்லக்
கலைநாலும் எட்டிலையுஞ் சேர்ந்து போகும்
தண்டுமுண்டு செய்யாதே மனம்வே றானால்
தற்பரத்தை யெப்போதும் அறிய மாட்டாய்
தொண்டுசெய்து பெரியோரை யடுத்து மைந்தா
தொழுதுநீ யென்னூலை யன்பாய்க் கேளு
விண்டுமவர் சொலாவிட்டா லிந்நூல் சொல்லும்
வெற்றிபெற மனவடக்கம் வைத்துப் பாரே. 29

பாரப்பா விஞ்சைமந்த்ரம் என்பார் வீணர்
பாயடா விஞ்சைகிரி தன்னில் மைந்தா!
ஆரப்பா சென்றேறிப் பார்க்கும் போது
அதீதமுள்ள விஞ்சைமந்த்ரம் அனந்தங் காட்டும்;
நேரப்பா சிருட்டிப்புச் சங்கா ரங்கள்
நிமிடத்திற் செய்திடுவாய் நிலையைக் கண்டால்
வீரப்பா அமிர்தமுந்தான் குமிழி பாயும்
வேறில்லாக் கனிதனையு முண்கலாமே. 30

உண்கலாம் பிரமத்தி லடங்கும் போதே
உறுதியுள்ள அண்டத்தி லுருகிப் பாயுந்
திங்கலாந் தோணுமடா அமர்தச் சீனி
தித்திப்புப் பாலுடனே திடமாய் மைந்தா!
தங்கலாந் தேகமது அழியா மற்றான்
சட்டையுமே கழன்றுமிகத் தங்கம் போலே
பொங்கலாம் மெய்ஞ்ஞானத் தீபத் தாலே
பூரித்துப் பார்த்திடவே புவன மொன்றே. 31

ஒன்றான பிரமமே வெவ்வே றாக
உலகத்தி லளந்தமடா கூத்து மாச்சு ;
நன்றாச்சுத் தீதாச்சு நா லு மாச்சு
ஞாயிறு திங்களென்ற பேருண் டாச்சு ;
குன்றாச்சு ஊர்வனகள் அனந்த மாச்சு ;
குருக்களென் றுஞ் சீடனென் றுங் குறிக ளாச்சு
நன்றாச்சு நா தவிந்தும் அடங்கி நின்ற
நா தனையு மொருமனமாய் நாட்டு வாயே 32

நாட்டுவார் சித்தரெல்லாம் பேத மாக
நலம்போலே சாத்திரங்கள் கட்டி னார்கள் ;
பூட்டியே மனிதரெல்லாம் நூலைப் பார்த்துப்
பூரணமாய் அண்டமதைப் பாரா மற்றான்
காட்டிலே திரிந்தலைந்த மானைப் போலே
கபடமாய் வாய்ஞானம் பேசுவார்கள் ;
கூட்டிலே அடைத்திருக்குங் குயிலைப் பாரார்
கூறாத மந்திரத்தின் குறியைப் பாரே. 33

குறியென்ற உலகத்திற் குருக்கள் தானும்
கொடியமறை வேதமெல்லாங் கூர்ந்து பார்த்தே
அறியாமற் பிரமத்தைப் பாரா மற்றான்
அகந்தையாய்ப் பெரியோரை அழும்பு பேசி
விரிவான வேடமிட்டுக் காவி பூண்டு
வெரும்பிலுக்காய் அலைந்திடுவான் நாயைப் போலே
பரியாச மாகவுந்தான் தண்டு மேந்திப்
பார் தனிலே குறடிட்டு நடப்பான் பாரே. 34

பாரப்பா சீடர்களை அழைப்பான் பாவி ;
பணம்பறிக்க வுபதேசம் பகர்வோ மென்பான் ;
ஆரப்பா பிரமனிலே காட்டா மற்றான்
ஆகாசப் பொய்களையு மவன் தான் சொல்வான் ;

நேரப்பா சீடனுக்குப் பாவ மாச்சு ;
நிட்டைசொல்லுங் குருக்களுக்குத் தோட மாச்சு ;
வீரப்பா அடங்குகின்ற இடத்தைப் பாரான்
விதிபோலே முடிந்ததென்று விளப்பு வானே. 35

வாவென்ற அண்டமதிற் சென்று புக்கு
வடவரையி னுச்சிநடுத் தீபங் கண்டு
தேனென்ற சுத்தசிவ கங்கை தன்னில்
தீர்த்தங்க ளாடித்திரு நாம மிட்டுக்
கோனென்ற மனமன்பாய் மலராய்ச் சார்த்திக்
கொடியமறை வேதமுந்தா னடக்கங் கண்டு
தேனென்ற சித்தமே புத்தி யாகத்
தெளிந்தவரே மெய்ஞ்ஞானி யாவர் பாரே. 36

பாரண்ட மதையொன்றாய்ப் பார்க்கும் போது
பலபேத மாயையெல்லாம் மருண்டே யோடுஞ்
சீரண்டம் அகிலாண்ட பிரமாண் டங்கள்
செனித்தவகை யுயிர்தோறும் நீயாய் நிற்பாய்
காரண்ட லலாடக்கண் திறந்த போது
கண்கொள்ளாக் காட்சியெல்லாங் கலந்தே காட்டும் ;
வீரண்ட மேல்வட்டம் விரிந்த சக்ரம்
மெய்ஞ்ஞான வெளியதனிற் றொடர்ந்து கூடே. 37

கூடுவதென் குணமறிந்து மனமொன் றாகக்
கூத்தாடித் திரியாமற் கெவுன மாகப்
பாடுவது பலநூலைப் படத்தி டாமற்
பராபரத்தி னுச்சிநடு வெளியே சென்றே
ஆடுவது தொந்தோமென் றாட்டைப் பார்த்தே
அடுக்கடுக்கா யாயிரத்தெட் டிதழுங் கண்டு
வாடுகிற பயிர்களுக்கு மழைபெய் தாற்போல்
வாடாத தீபத்தை யறிந்து பாரே. 38

பாரென்று மெய்ஞ்ஞானம் பகர்ந்து சொன்னீர்
பராபரத்து நிலையினுடைப் பாதஞ் சொன்னீர்
வீரென்ற அண்டமெல்லாம் பாழ தாகி
விராட்பிரம மொன்றியா யிருக்கும் போது
சீரென்ற வுயிர்களெல்லா மிருப்ப தெங்கே?
சித்தருடன் திரிமூர்த்தி யிருப்ப தெங்கே?
கூறென்று நீர் தங்கு மிடந்தா னெங்கே?
குருபரனே! இந்தவகை கூறு வீரே. 39

கூறுகிறே னென்மகனே வாசி நாதா
குணமான வீச்சுரனுர் சபையிற் கூடித்
தேறுகின்ற பிரளயமாம் காலந் தன்னிற்
சீவசெந்து சித்தருடன் முனிவர் தாமும்
வீருடனே யெங்கேதா னிருப்பா ரென்று
விமலருந்தான் விண்ணுவையும் விவரங்க கேட்கக்
கார்மேக மேனியனங் கவரை நோக்கிக்
கண்டுமிகப் பணிந்துமினிக் கருது வானே. 40

கருதுவான் ஆலிலைமேற் றுயில்வேன் யானுங்
கனமான சீவசெந்தும் அனந்த சித்தர்
உறுதியா யென்றனுடைக் கமலந் தன்னில்
ஒடுங்குவா ராதரித்து மிகவே நிற்பேன்;
வருதியாய்ப் புசுண்டருந்தான் வருவா ரென்று
வலவனுடன் மாலானும் உரைக்கும் போது
சுருதியா யென்னையழைத்தே சிவன்றான் கேட்கச்
சூத்திரமாய் நல்வசனம் மொழிந்தேன் பாரே. 41

பாரென்று சிவனுடைய முகத்தைப் பார்த்துப்
பல்லாயிரங் கோடியண்ட வுயிர்க ளெல்லாஞ்
சீரென்ற சித்தருடன் முனிவர் தாமுந்
திருமாலும் ஆலிலைமேற் றுயிலும் போது

கூரென்ற வுந்தியிடக் கமலந் தன்னிற்
கூடியே அடைந்திருப்பார் குணமதாக
வீரென்ற ஐவரையுந் தாண்டி யப்பால்
வெகுசுருக்காய் வீதிவழி வந்தேன் பாரே. 42

பாரப்பா ஆகாயஞ் செல்லும் போது
பாலகனே சக்கரந்தான் சுற்றி யாட
ஆரப்பா சக்கரத்தைப் பிசகொட் டாமல்
அதன்மேலே யேறியுந்தா னப்பாற் சென்றேன்;
நேரப்பா நெடுந்தூரம் போகும்போது
நிச்சயமாய்க் கம்பத்தின் நிலையைக் கண்டேன்;
வீரப்பா அக்கினிபோல் படர்ந்து நிற்கும்
வெளியொன்றுந் தெரியாம லிருக்குந் தானே. 43

இருக்குமடா எங்குமொன்றாய் அக்கினிக் கம்பம்
என்மகனே கம்பத்தின் நடுவே மைந்தா!
உருக்கமுடன் பெண்ணரசி யொன்றி நிற்பாள்;
ஓகோகோ அவள்முகத்தைப் பார்க்கும் போது
பொருக்கமுடன் முன்பார்த்தாற் புருட ரூபம்
புத்திரனே பின்பார்த்தாற் பெண்போல் ரூபம்
மருக்கமுடன் யான்றானுங் கம்பத் தூடே
வத்தோடே வத்தாக இருந்தேன் பாரே. 44

பாரப்பா இப்படியே அனந்த காலம்
பராபரத்தி னூடேதா னிருந்து வாழ்ந்தேன்;
ஆரப்பா பிரமமுந்தான் மனமி ரங்கி
அகண்டமதைப் படைப்பதற்கே அருளும் போது
வீரப்பா கம்பத்தி லிருந்த பெண்ணும்
விமலரென்றும் உமையென்றும் மிகவே தோன்றிச்
சீரப்பா சக்கரத்தி லிருந்துக் கொண்டு
திருமாலைத் தானழைக்கத் தீர்க்கம் பாரே. 45

பாரப்பா திருமாலுங் கமலந் தன்னில்
　　பல்லாயிரங் கோடிஅண்ட வுயிர்க ளெல்லாம்
நேரப்பா அழைத்துமுக் குணத்தைக் காட்டி
　　நிலையான சமுத்திரங்கள் பூமி தானும்
சேரப்பா ரவியோடு திங்கள் தானுஞ்
　　சிறந்தெழுந்த மலைகாடு சீவ செந்து
வீரப்பா நவக்கிரகம் நட்சத் ரங்கள்
　　வெற்றியுடன் நால்வேதம் வகுத்த வாறே. 46

வாறான தெய்வமென்றும் பூதமென்றும்
　　வையகத்தில் வானமென்றும் பூமி யென்றும்
கூறான மாமேரு கிரிக ளென்றும்
　　கோவிலென்றுந் தீர்த்தமென்றுங் குளமுண் டாக்கி
நேராகப் பிரமமே சாட்சி யாக
　　நிலத்தெங்கும் உயிர்தோறும் நிறைந்தா ரையா !
வீராகத் திரியாமல் மவுனம் பார்த்து
　　வெற்றிபெற இன்னமுந்தான் உரைக்கக் கேளே. 47

கேளப்பா இப்படியே பிரள யந்தான்
　　கிருபையுடன் ஏழுலட்சங் கோடி யானால்
ஆளப்பா அரியயனும் சீவ செந்தும்
　　அகண்டமென்ற பிரமத்தி லடங்கு வார்கள் ;
நாளப்பா நானுமந்தப் படியே செல்வேன் ;
　　நலமாக இன்னமுந்தான் அகண்ட மானால்
வாளப்பா காகமென்ற ரூப மானேன்
　　வடவரையின் கூடுதொத்தி யிருந்தேன் பாரே. 48

பாரடா இப்படியே யுகங்கள் தோறும்
　　பார்தனில்நா னிருந்தேனெத் தனையோ கோடி
ஆரடா எனைப்போல அறிவா ருண்டோ ?
　　ஆதியென்ற சித்தருக்கும் ஆதி யானேன் ?

வீரடா விமலரிடஞ் செல்லும் போது
    வெற்றியுட னெனையெடுத்து முத்த மிட்டார்;
காரடா கைலையின்மே லிருக்கச் சொன்னார்
    காகமென்ற ரூபமா யிருந்தேன் பாரே. 49

காகமென்ற ரூபமா யிருந்து கொண்டு
    காரணங்கள் அத்தனையும் கருவாய்ப் பார்த்து
வேகமுடன் வெளியோட்ட நிலையாய்ப் பார்க்க
    வெகுதூரம் சுற்றியின்னம் விவரங் காணேன்;
மோகமுடன் பரந்தமனம் அணுவ தாக்கி
    மூர்க்கமுடன் பரவெளியை மனவெளி தாக்க
நாகரிக மாகவுந்தா னண்ட மேவி
    நடுவணைய முச்சிநடு மத்தி தானே. 50

மத்தியமாம் வானதிலே வளர்ந்த லிங்கம்
    மகாமேரு வுச்சியிலே வளர்ந்த லிங்கம்
சத்தியும் ஆவிடையு மான லிங்கம்
    சஞ்சாரச் சமாதியிலே நிறைந்த லிங்கம்
புத்தியால் மனமொன்றாய்ப் புகழ்ந்த லிங்கம்
    பூவருந் தன்னில்தான் முளைத்த லிங்கம்
எத்திசையும் புகழ்ந்திடவே வந்த லிங்கம்
    ஏகபர மானதொரு லிங்கந் தானே. 51

தானென்ற சிறுவீட்டுக் குள்ளே சென்று
    தலைமாறிப் போனதொரு வாசி வைத்தான்
கோனென்ற பிரமத்தி லடக்க மாகக்
    குறித்திடுவாய் மனமடங்கிக் கூர்ந்து பார்க்க
வானென்றிப் போகுமடா பாணம் பாணம்
    மைந்தனே! உண்டிடவே பசிதான் தீரும்;
தேனென்ற சட்டைகளுங் கழன்று போகும்;
    தேவனுக்குந் தேவனா யிருக்க லாமே. 52

இருக்கலாம் எந்தெந்த யுகங்க ளுக்கும்
ஏகாந்த மானதொரு பிரமந் தன்னில்
பெருக்கவே மனமனடங்கி மவுனம் பெற்றும்
பேராசை யாகவுந்தான் பிரமத் துள்ளே
குருக்களைப்போல் அரசனைப்போ லிந்த்ர னைப்போல்
குணமான மூவரைப்போற் பிரமத் தூடே
திருக்கெடுத்தே யெந்தெந்த அவதா ரங்கள்
செய்திடலாம் நிலையறிந்த பெரியோர் தானே. 53

தானவனே யென்குருவே புசுண்ட நாதா
தாரணியில் சீவசெந்தாம் அகண்ட மெல்லாம்
தோணவே மும்மூர்த்தி யிவர்கள் தாமுந்
துடியாகப் பிரமத்தி லடங்கு மென்றீர்
கோனவனே பின்னுந்தா னகண்ட மெல்லாங்
குறிப்புடனே படைக்கும்வகைக் குறியுஞ் சொன்னீர்
தானவனே மதுவுண்ணச் சொன்னீ ரையா
சத்தியமா யதன்விவரஞ் சாற்று வீரே. 54

சாற்றுகிறே னென்மகனே வாசி நாதா!
சத்தியமா யண்டத்திற் செல்லும் போது
போற்றுகிற அக்கினியும் பிரவே சித்துப்
புலன்களைந்துஞ் சேர்ந்ததனாற் போத மாகும்;
மாற்றிலையும் அதிகமடா வுன்றன் தேகம்
மைந்தனே! அபுரூப மாகு மப்பா!
வாற்றியே நிழற்சாய்கை யற்றுப் போகும்
வலுத்ததடா காயசித்தி யாச்சுப் பாரே. 55

ஆச்சென்ற அபுரூப மான போதே
அட்டமா சித்திவகை யெட்டு மாடும்;
மூச்சென்றி யடங்கிப்போம் பிரமத் தூடே
முன்னணியும் பின்னணியு மொன்றாய்ப் போகும்;

காச்சென்று காச்சிவிடு மவுனங் கண்டு
கலைமாறி நின்றிடமே கனக பீடம்
நீச்சொன்று மில்லையடா வுன்னைக் கண்டால்
நிலைத்ததடா சமாதியென்ற மார்க்கந் தானே. 56

மார்க்கமுடன் தவசிநிலை யறியா மற்றோன்
மனந்தளர்ந்து திரிவார்கள் லோகத் துள்ளே
ஏக்கமுடன் முப்பதுக்குள் மவுனங் கண்டே
இளவயசா யிருப்பார்கள் பெரியோர் மைந்தா !
காக்கவே சற்குருவின் பாதங் கண்டு
கருணையுடன் அவர்பதத்தை வணங்கிப் போற்றித்
தீர்க்கமுடன் பிரமத்தில் மனந்தான் செல்லச்
சீவனுக்குச் சீவனா யிருக்க லாமே. 57

இருக்கலாஞ் செடியூடு கற்ப மில்லை
ஏகாந்த மானதொரு பிரமந் தன்னில்
உருக்கியே மனமடங்கிப் பார்க்கும் போதே
உத்தமனே காயமது வுறுதி யாச்சு ;
மருக்கியே திரியாமல் மதம்பே சாமல்
வண்டரோ டிணங்கியடா மருவி டாமல்
குருக்கியே கோளரிடஞ் சேர்ந்தி டாமற்
குருபாதங் கண்டுமிகப் பணிந்து பாரே. 58

பாரென்று சொல்லியமெய்ஞ் ஞான மூர்த்தி !
பரத்தினுடை அடிமுடியும் பகுந்து சொல்லும்
சீரென்று சொப்பனங்க ளதிக மாகத்
திடப்படவே காணுமிடந் தீர்க்கஞ் சொல்லும்
காரென்று மணம்பிறந்த இடந்தான் சொல்லும்
கதிர்மதியுஞ் சுற்றிவரு மார்க்கஞ் சொல்லும்
வீரென்றே உயிர்பிறந்த இடந்தான் சொல்லும்
வெற்றிபெற இந்தவகை விளம்பு வாயே 59

வாயாலே சொல்லுகிறேன் மகனே கேளு ;
மகத்தான பிரமத்தின் பாதந்தன்னில்
ஓயாமல் முன்சொன்ன நரம்பு பின்னி
உத்தமனே ரவிமதியுஞ் சுற்றி யாடும் ;
மாயாமல் வாசியுந்தன் நடுவே நின்று
மார்க்கமுடன் சுழுத்தியிடம் மனந்தான் சென்றால்
காயான சுழுத்தியென் றிதற்கு நாமம்
கண்டுபார் கண்கொள்ளாப் போதந் தானே. 60

தானென்ற பலரூப மதிகங் காணுந்
தன்னுடைய தேவதைபோற் பின்னுங் காட்டும்
ஊனென்ற பெண்ணைப்போ லுன்னைக் கூடி
உத்தமனே சையோகஞ் செய்தாற் போலே
தேனென்று மயக்கிவைக்குஞ் சுழுத்தி யாலே
தித்திப்புப் போலேதான் ருசியைக் காட்டும்
கோனென்ற குருவருளைப் பணிந்து கொண்டு
குறிப்பறிந்து பூரணத்தின் நிலையைப் பாரே. 61

நிலையாத சமுத்திரமே சுழுத்தி யாச்சு ;
நின்றிலங்கும் வாசியைத்தான் வெளியிற் சேரு ;
தலையான அக்கினியப் படியே சேரு ;
சத்தியமாய் ரவிமதியைக் கூடச் சேர்த்து
மலையாமல் ஏகபரா பரனே யென்று
மனமடங்கி அண்டவுச்சி தன்னைப் பார்க்க
அலையாது மனந்தானும் பரத்திற் சென்று
ஆகாய வீதிவழி யாட்டும் பாரே. 62

ஆட்டுமடா ஆசையற்று ரோச மற்றே
அன்னைசுற்றந் தனைமறந்தே அகண்ட மேவும்
பூட்டுமடா நவத்துவா ரங்கள் தம்மைப்
பொறிகளைந்துஞ் சேருமடா புனித மாகக்

காட்டிலென்ன நாட்டிலென்ன மவுனங் கண்டால்
        காமதேனு கற்பகமும் உனக்கே சித்தி
வீட்டிலே தீபம்வைத்தாற் பிரகா சிக்கும்
        வெளியேறி னுற்றீபம் விழலாய்ப் போமே. 63

போமடா புத்திசித்தம் என்ற தாக்கிப்
        புசுண்டனென்று பேரெடுத்துப் புவனந் தன்னில்
ஆமடா வடசாளி மைந்த னென்றும்
        அருமையாங் கன்னியுடை மைந்த னென்றும்
நாமடா ஐந்துபேர் தம்பி லேதான்
        நாட்டமுடன் முன்பிறந்தேன் நான்தான் மைந்தா!
வாமடா சாண்முழத்திற் காட்சி பார்க்க
        வத்துவுந்தான் ஈச்சுரனு ரென்றார் பாரே. 64

பாரப்பா என்குலந்தான் சொல்லக்கேளு;
        பார்தனிலே பிரமனுடை விந்து வாலே
ஆரப்பா பிறந்துவிட்டோம் ஐந்து பேரும்;
        ஆகாய அண்டமதை யடுத்தே சென்றேன்;
நேரப்பா வெகுகோடி காலம் வாழ்ந்தேன்
        நிட்டையிலே மனந்தவறு திருந்து கொண்டேன்;
வீரப்பா பேசுவோர் லோகத் தோர்கள்
        விட்டவிடந் தொட்டவிடம் விரும்பிக் காணே. 65

காணப்பா சாதிகுலம் உங்கட் கில்லை;
        கருத்துடனே என்குலஞ்சுக் குலந்தான் மைந்தா!
தோணப்பா தோணுமற் சாதி பேசஞ்
        சொல்லுவான் சுருக்கமாச் சுருண்டு போவான்;
வீணப்பா பிரமத்தில் ஆதி காலப்
        வீரமுடன் பிறந்ததடா உயிர்க ளெல்லாம்;
நானப்பா அப்படியே உதித்தேன் முன்னே,
        நன்றாக வுதித்த விடம் நாடி னேனே. 66

நாடியே யுதித்தவிடம் அறியாத் தோடம்
நடுவாக வந்தவிடம் பாராத் தோடம்
கூடியே பிறந்தவிடங் காணுத் தோடம்
குருபரனை நிந்தனைகள் செய்த தோடம்
வாடியே வத்தோடே சேராத் தோடம்
வம்பரோ டிணங்கியே திரிந்த தோடம்
கூடியே வுறவற்றே யிருந்த தோடம்
கும்பியுங்கற் சிப்பியையும் அறியான் பாவி. 67

அறியாத பாவிக்கு ஞான மேது?
ஆறுமுகன் சொன்னதொரு நூலைப் பாரு;
பரிபாடை யாகவுந்தான் சொல்ல வில்லை;
பராக்கிரமம் என்னுடைய நூலைப் பாரு;
விரிவாகச் சித்தர்சொன்ன நூலை யெல்லாம்
வீணுக மறைப்பாகச் சொன்னு ரையா!
குறியான அண்டமதை யொளித்தே விட்டார்
கூறினர் வெவ்வேருய்க் குற்றந் தானே. 68

குற்றமது வையாமல் அண்டத் தேகிக்
கூருத மந்திரத்தின் குறியைப் பார்த்துக்
சித்தமொன்ருய் அந்திசந்தி யுச்சிக் காலம்
தேவனுக்குப் பூசைசெய்து தெளிவு பெற்றுக்
குற்றமது வையாமல் மனமன் பாலே
குருபரனை நோக்கியடா தவமே செய்து
பற்ருசை வைத்துமிகப் பார்க்கும் போது
பராபரையுங் கைவசமே யாகு வாளே. 69

ஆகுவா ளந்திசந்தி யுச்சி யென்ருல்
அப்பனே ரவிமதியுஞ் சுடர்மூன் ருகும்
ஏகுவாய் மூன்றுமொன்ருய்ப் பின்ன லாகி
இருந்திடமே பிரமாண்ட நிலைய தாகும்;

போகுமே நீசெய்த கர்மமெல்லாம்
புவனை திரி சூலியுடைக் கிருபை யாலே ;
வாகுமே வழியோடே சேர்த்தா யானால்
வாணியுந்தான் நாவில்நடஞ் செய்வாள் பாரே. 70

பாரடா வாணியுந்தா னிருந்த வீடு
பாலகனே சொல்லுகிறேன் பண்பாய்க் கேளாய் ;
ஆரடா அண்ணாக்கின் கொடியி னூடே
அண்டத்தைப் பற்றியடா விழுது போலே
நேரடா நரம்பதுதான் பொருந்தி நிற்கும்
நிலையான அக்கினியின் மத்தி தன்னில்
வீரடா அதுவழியே அருள்தான் பாய்ந்து
விண்ணுலகில் வேணதமிழ் சொல்லு வாளே. 71

சொல்லுவா ளனந்தமறை வேத மெல்லாம்
சுருதியடா முடிந்தெழுந்த பிரமத் தாலே
வெல்லுவார் தனையறிந்த பெரியோ ரெல்லாம்
வீருண்மை பேசார்கள் மவுன மாகி
அல்லுபக லற்றதொரு பிரமந் தன்னை
ஆரறிவா ருலகத்தி லையா பாரு
சொல்லடங்கு மிடந்தனையுங் கண்டு தேறிச்
சூத்திரமாய்க் கல்லுப்பு வாங்கு வாங்கு. 72

வாங்கியே அண்டத்தில் மூளை சேர்த்து
வளமாக வப்பிலையும் பிசறு மைந்தா !
தாங்கியே திருகுகள்ளிக் குள்ளே வைத்துத்
தமர்வாயைத் தான்மூடிச் சாபந் தீர்த்தே
ஓங்கியே திங்களுந்தான் மூன்று சென்றால்
உத்தமனே கள்ளியைத்தான் தரித்துக்கொண்டு
சாங்கமினிச் செய்யாமற் சீலை மண்ணுஞ்
சத்தியமாய்ச் செய்தபின்பே உலர்த்திப் பாரே. 73

பாரப்பா வுலர்ந்ததன்பின் எடுத்து மைந்தா !
பத்தியுடன் கசபுடத்திற் போட்டுப் பாராய் ;
ஆரப்பா ஆறவைத்தே யெடுக்கும் போதில்
அருணனிறம் போலிருக்குஞ் செந்தூ ரந்தான் ;
நேரப்பா அணுப்போலே சரக்குக் கெல்லாம்
நிச்சயமாய்ப் பூசியுந்தான் புடத்திற் போடு ;
வீரப்பா நீருமடா நவலோ கந்தான்
வேதையென்ற வித்தையெல்லாங் கைக்குள் ளாச்சே.

ஆச்சடா வுடம்பிலுள்ள வியாதி யெல்லாம்
அணுப்போல வுண்டிடவே பறந்து போகும் ;
வாச்சடா தேகசித்தி யதிக மாச்சு
வத்துடனே கூடியுந்தான் வாழ லாச்சு ;
மூச்சடா தலைப்பிண்டங் கொடியு மாவும்
முத்தியடா வாங்கியபின் தயிலம் வாங்கி
ஏச்சடா தரியாமல் சூடன் சேர்த்தே
இன்பமுடன் வத்துவையும் பூசை செய்யே. 75

பூசையடா செய்துமிகப் பதனம் பண்ணு
புத்திரனே பேய்ப்பீர்க்குத் தயிலம் வாங்கி
ஆசைபுல்லா மணக்கதவு மதுபோல் வாங்கி
அப்பனே கேசரியின் நெய்யுஞ் சேர்த்தே
ஓசையுடன் தேவாங்கு பித்துஞ் சேர்த்தே
உத்தமனே தலைப்பிண்டந் தயிலஞ் சேர்த்துப்
பாசையடா பேசாம லரைத்து மைந்தா !
பாலகனே சவாதோடு புனுகு சேரே. 76

சேரடா அணுப்போலே புருவத் திட்டுத்
தீர்க்கமுடன் நீதானுஞ் செல்லும் போதில்
ஆரடா வுன்னைத்தான் ஆர்தான் காண்பார் ?
அண்டமெனும் பிரமத்தி னருளி னாலே

நேரடா திகைப்பூண்டு கொண்டு வந்து
நிச்சயமாய் முன்சொன்ன தயிலம் விட்டு
வீரடா அரைத்தபின்பு புருவத் திட்டால்
வேசையர்கள் வெகுபேர்கள் மயங்கு வாரே. 77

வாரான தில்லைப்பால் கருந்துளசியும்
வவ்வாலின் பித்துடனே மந்திப் பித்துஞ்
சீராக முன்சொன்ன கருவை விட்டுத்
திடமாக அரைத்திடுவாய் சாம மொன்று
நேராக அரைத்ததையு மெடுத்து மைந்தா!
நிச்சயமாய்ப் புருவ நதி லிட்டுப் பார்க்க
வீராகப் பாதாளம் பிளங்தே யோடும்
வேதாந்த சாரணையை விரும்பிப் பாரே. 78

பாரடா பரப்பிரமத் தூடே சென்று
பரிதிமதி அக்கினியும் மூன்று மொன்றாய்
நேரடா ஆதியுந்தான் எதிரி தன்னை
நிச்சயமாய்ப் பார்த்திடவே நீறிப் போவான்
கூரடா கோடானு கோடி சித்துக்
குறித்திடவே ஆகுமடா பிரமத் தாலே
வீரடா இந்நூலைக் கொடுத்தி டாதே
வெற்றியுடன் எண்பதுமே விளங்க முற்றே. 79

# காகபுசுண்டர் உபநிடதம்—31

—::—

### காப்பு

### எண்சீர் விருத்தம்

ஆதியெனை யீன்றகுரு பாதங் காப்பு ;
அத்துவிதம் பிரணவத்தி னருளே காப்பு ;
நீதியா மாரூட ஞானம் பெற்ற
நிர்மலமாஞ் சித்தருடைப் பாதங் காப்பு ;
சோதியெனப் பாடிவைத்தேன் முப்பத் தொன்றிற்
றுரியாதீ தப்பொருளைத் துலக்க மாகத்
தீதில்லா குணமுடைய பிள்ளை யானார்
சீவேச ஐக்யமது தெரியுந் தானே.

### நூல்

தானென்ற குருவினுப தேசத் தாலே
தனுகரண அவித்தையெல்லாந் தவறுண் டேபோம் :
வானென்ற சுவானுபவ ஞான முண்டாம் ;
மவுனாதி யோகத்தின் வாழ்க்கை யெய்தும் ;
நானென்ற பிரபஞ்ச வுற்பத் திக்கு
நாதாதீ தக்யானம் நன்றா யெய்தும் ;
கோனென்ற கொங்கணவர் தமக்குச் சொன்ன
குறிப்பான யோகமிதைக் கூர்ந்து பாரே. 1

பாருநீ பிரமநிலை யார்தான் சொல்வார் ?
பதமில்லை யாதெனினும் பவ்ய மில்லை !
சேருமிந்தப் பிரமாணந் தானு ணர்ந்து
தெரிவிக்கப் படாதருளிற் சிவசொ ரூபம் ;

ஊருகின்ற காலத்ர யங்க ளாலே
உபாதிக்கப் பரதத்வ முற்பத் திக்கும்
சாருமிந்த வுபாதான கார ணத்தின்
சம்பந்த மில்லாத சாட்சி தானே. 2

சாட்சிசத்தா யதீதகுண தீத மாகிச்
சட்சுமனத் தாலறியத் தகாது யாதும்
சாட்சியதே யேதுசா தனமுந் தள்ளிச்
சகலவந்தர் யாமித்வ சர்வபூத
சாட்சியினை யிவ்வளவவ் வளவா மென்று
தனைக்குணித்து நிர்ணயிக்கத் தகாது யோகம்
சாட்சியதே ஞாதுர்ஞான ஞேய ரூபஞ்
சத்தாதி பிரமாகி தானே சொல்வாம். 3

சொல்லுமெனக் கேட்டுகந்த மாணுக் காவுன்
தூலகா ரணப்பிரமந் துரியா தீதம்
அல்லுமல்ல பகலுமல்ல நிட்க ளங்கம்
அம்சோகம் அசபாமந் திரத்தி யானம்
செல்லுமவ னேநானென் றபிமா னிக்குச்
சித்தவிர்த்தி நிரோதகமாம் யோகத் தாலே
வெல்லறிஞர் பலபோக விர்த்தி யோகி
விவேகதியா னுதிகளே மேலாம் பிர்மம். 4

பிர்மசுரோத் ராதிஞானேந் திரிய மைந்தும்
பேசுதர்க்க வாக்காதியிந் திரிய மைந்தும்
கர்மமெனுஞ் சத்தாதி விடய மைந்தும்
கரணாதி நான்குபிரா ணாதி யைந்தும்
வர்மமிவை யிருபத்து நான்குங் கூடி
வருந்தூல சீரவிராட் டெனவே சொல்லும்
தர்மவத்தைச் சாக்கிரபி மானி விசுவன்
தனக்குவமை யாங்கிரியா சத்தி தானே 5

சத்தியுடன் ரசோகுணந்தான் நேத்ரத் தானம்
தனிப்போக மிதனோடே சார்ந்த ஆன்மா
வெற்றிபெறும் சீவாத்மா அகார மாச்சு
விவகார சீவனிதை விராட்டென் பார்கள் ;
வித்தையெனு மவித்தையிலே பிரதி விம்பம்
விலாசமிந்தத் தூலசூக்க விருத்தி யாச்சு ;
தத்வமசி வாக்குச்சோ தனையி னாலே
தான்கடந்து சூட்சுமத்திற் சார்ந்து கொள்ளே. 6

கொள்ளடா ஞானேந்த்ரி யங்க ளைந்து
கூடினவை கர்மேந்த்ரி யங்க ளைந்து
தள்ளடா பிராணாதி வாயு வைந்து
சார்வான மனம்புத்தி தானி ரண்டு
விள்ளடா பதினேழு தத்து வங்கள்
விர்த்திபெனுஞ் சூட்சுமமாம் இரண்ய கர்ப்பத்
துள்ளடா அபிமானி சைதன்ய னாகுஞ்
சொப்பன வத்தையெனச் சொல்லும் நூலே. 7

நூலான சாத்மிகமா மகங்கா ரத்துள்
நுழைந்தவிச்சா சத்தியல்லோ நுணுக்க மாச்சு ?
காலான கண்டமெனுந் தானத் துள்ளே
கலந்திருக்கும் போகமல்லோ இச்சா போகம் ?
நாலான ஆன்மாவே அந்த ரான்மா
ஞானமிந்தப் படியறிந்தா லுகார மாச்சு ;
தூலமெனுஞ் சூட்சமத்தைக் கடந்து நின்று
சொல்லுகிறேன் காரணத்தின் சுயம்பு தானே. 8

தானவ்யாக் கிருதமெனுஞ் சரீரத் துக்குத்
தானமதே இதயமா ஞான சத்தி
வானமதே அகங்காரம் வித்தை யாகில்
வருஞ்சுழுத்தி யபிமானி பிராக்ஞ னாகும்

கோனிதற்கே ஆனந்த போக மாகும்
கூடுகின்ற ஆன்மாவே பரமான் மாவாம்
கானிதற்குப் பரமான்மா சிவ னிந்தக்
காரணமே மகாரமெனக் கண்டு கொள்ளே. 9

கொள்ளுமந்தப் பொருள்தானே சத்து மல்ல
கூறுன அசத்துமல்ல கூர்மை யல்ல
உள்ளுநிரா மயமல்சர் வமய மல்ல
உற்றுப்பார் மூன்றெழுத்தும் ஏக மாச்சே ;
தள்ளுகின்ற பொருளல்ல தள்ளா தல்ல
தான்பிரம ரகசியஞ்சந் தான முத்தி
விள்ளுமந்தப் படிதானே வேத பாடம்
விசாரணையாற் சமாதிசெய்ய விட்டுப் போமே. 10

விட்டுப்போம் சமுசார வியாபா ரங்கள்
விடயசுக இச்சைவைத்தால் விவேகம் போச்சு ;
தொட்டுவிட லாகாது ஞான மார்க்கந்
துரியநிலை நன்றாகத் தோன்று மட்டும்
எட்டுகின்ற பரியந்தம் சுருதி வாக்யத்
தெண்ணமெனுந் தியானத்தா லெய்தும் முத்தி ;
தட்டுகின்ற சிவத்வம் தனக்கில் லாமற்
சமாதியுற்றால் நாமதுவே சாட்சாத் காரம் 11

சாட்சாதி பிரமத்தால் பூர்வ கர்மம்
தத்வாதி வாசனைகள் தாமே போகும் ;
சூட்சாதி பிராந்தியெனும் மாயா சத்தி
தொடாமற் தேர்வதுவே சொரூப ஞானம் ;
தீட்சையினாற் பிரமாண்டம் பிண்டான் டங்கள்
சிருட்டிமுதல் யாவற்றுந் தெரியும் நன்றாய் ;
காட்சியென்ன ஏகவத்து வொன்றல் லாமற்
காண்பதெலலாம் வியர்த்தமெனக் கண்டு கொள்ளே 12

கண்டுபார் மூடமெனும் அஞ்ஞா னிக்குக்
காணாது சீவான்மா பரமான் மாவும் ;
தொண்டுபட்டுக் குருமுகத்தில் விசேட மாகச்
சுருதியெனும் வேதாந்தம் அப்பிய சித்தே
உண்டுமனு பவஞானங் கிர்த்யா கிர்த்யம்
யோகிதனக் கேதேனுந் தேவை யில்லை ;
விண்டுசெல்வோம் நதிகடக்க வோட மல்லால்
விடயத்தாற் சாதனங்கள் வீணு மென்றே. 13

வீணல்லோ சாதனப்ர யோச னங்கள்
மெய்ஞ்ஞான அபரோட்சம் வந்த போது ?
வீணல்லோ வேதபா டத்தி னிச்சை
வியோமபரி பூரணத்தில் மேவி நின்றால் ?
வீணல்லோ இருட்டறையிற் பொருளைக் காண
விளக்கதனை மறந்தவன்கை விடுதல் போலும்
வீணல்லோ தியானதா ரணைக ளெல்லாம் ?
மெய்ப்பிரகா சிக்கும்வரை வேணுந் தானே. 14

வேணுமென்று மெள்ளுக்கு ளெண்ணெய் போலும்
வித்தினிடத் தடங்கிநின்ற விருட்சம் போலும்
காணுகின்ற பூவிலுறை வாசம் போலும்
கன்றாவின் பாலிலுள்ள நெய்யைப் போலும்
தோணுமயில் முட்டையின்மேல் வன்னம் போலும்
தூலமதிற் சூட்சமநதான் துலங்கி நிற்கும் ;
ஆணவத்தாற் சாதனத்தை மறந்தா யானால்
அபரோட்ச ஞானமுத்தி யரிது தானே. 15

அரிதில்லை பிரமவியா கிருத சீவன்
ஐக்யமெனுஞ் சந்த்யானம் அப்ய சித்துச்
சுருதிகயிற் றால்மனமாம் யானை தன்னைச்
சுருக்கிட்டுச் சிக்கெனவே துறையிற் கட்டிக்

குருவுரைத்த சிரவணத்தின் படியே நின்றால்
குதியாகு பிரபஞ்ச கோட்டிற் றானும்
திரிவதில்லை திரிந்தாலும் மதமி ராது;
சீவவை ராக்யமெனுந் திறமி தாமே. 16

திரமென்ன ஹற்சோகம் மந்த்ரா தீதம்
திருசியசூன் யாதிகளே தியான மாகும்;
சரமென்ன சாக்ரசத்தாம் வித்தை சூன்யம்
சாதனையே சமாதியெனத் தானே போகும்;
வரமென்ன விபரீத விர்த்தி மார்க்கம்
வாசனையே சாதனமாய் வகுத்துக் காட்டும்;
அரமென்ன இதையறிந்தால் யோகி யாவான்
அஞ்ஞான மவனிடத்தி லணுகா தென்னே. 17

என்னவே அஞ்ஞானி உலகா சாரத்
திச்சையினற் றார்மார்த்த வியாபா ரங்கள்
முன்னமே செய்ததன்பின் மரண மானல்
மோட்சமதற் கனுபவத்தின் மொழிகேட் பீரேல்
வின்னமதா யாங்கார பஞ்ச பூத
விடயவுபா திகளாலே மேவிக் கொண்டு
தன்னிலைய இலிங்கசரீ ரத்தோ டொத்துச்
சதாகாலம் போக்குவரத் தாகுந் தானே. 18

தானிந்தப் படியாகச் சீவ ரெல்லாஞ்
சகசபிரா ரத்தவசத் தாகி னர்கள்;
ஏனிந்தக் கூரபிமா னத்தி னலே
இத்தியாதி குணங்களெல்லாம் வியாபிக் கும்பார்
வானிந்து போன்மெலிந்து வளர்ந்து போகும்
வர்த்திக்கு மஞ்ஞானம் மாற்ற வேண்டி
ஞானிந்தப் பிரமவுபா சனையைப் பற்றி
நாட்டம்வைத்தே வித்தையெல்லாம் நாச மாச்சே. 19

ஆச்சப்பா எத்தனையோ கோடி காலம்
அந்தந்தப் பிரளயத்துக் கதுவாய் நின்றேன் ;
மூச்சப்பா வோடவில்லை பிரமா தீத
முத்திபெற்றேன் பிரமாண்ட முடிவிற் சென்றேன் ;
கூச்சப்பா வற்றபிர்ம சாட்சாத் காரம்
குருபாத மாகியகோ சரமாய் நின்றேன் ;
பேச்சப்பா சராசரங்க ளுதிக்கும் போது
பின்னுமந்தப் புசுண்டனெனப் பேர்கொண் டேனே.

பேர்கொண்டேன் சொரூபசித்தி யனேகம் பெற்றேன்
பெரியோர்கள் தங்களுக்குப் பிரிய னானேன் ;
வேர்கண்டே னுயிரத்தெட் டண்ட கூட
வீதியெல்லா மோர்நொடிக்குள் விரைந்து சென்றேன்
தார்கண்டேன் பிருதிவியின் கூறு கண்டேன் ;
சாத்திரவே தங்கள்வெகு சாயுங் கண்டேன் ;
ஊர்கண்டேன் மூவர்பிறப் பேழுங் கண்டேன் ;
ஓகோகோ இவையெல்லாம் யோகத் தாட்டே. 21

யோகத்தின் சாலம்ப நிராலம் பந்தான்
உரைத்தாரே பெரியோர்க ளிரண்டா மென்றே ;
ஆகமத்தின் படியாலே சாலம் பந்தான்
அநித்யமல்ல நித்தியமென் றுரைய லாகும் ;
சோகத்தைப் போக்கிவிடும் நிராலம் பந்தான் ;
சூன்யவபிப் பிராயமதே சொரூப முத்தி ;
மோகசித்த விருத்திகளைச் சுத்தம் பண்ணி
மும்மூட்சு பிரமைக்ய மோட்ச மென்னே. 22

மோட்சசாம் ராச்யத்தில் மனஞ்செல் லாத
மூடர்களுக் கபரோட்சம் மொழிய லாகா ;
சூட்சமறிந் தாலவனுக் கனுசந் தானம்
சொரூபலட்ச ணந்தெரியச் சொல்ல லாகும்;

நாட்சியில்லை சாதனைச துட்ட பத்தில்
சட்சேந்த்ரி யாநாதா தீத மாகும் ;
மூச்சுலயப் படுவதல்லோ பிரம நிட்டை
மூலவிந்து களாதீத மொழிய லாமே. 23

மொழிவதிலே அகாரமெனும் பிரண வத்தின்
மோனபிரா ணுதியதே நாத மாச்சு ;
தெளியுமிந்த ஓங்காரத் தொனிவி டாமற்
சிற்ககனத் தேலயமாய்ச் சேர்க்க வேணும் ;
ஒளிதானே நிராலம்பம் நிர்வி சேடம்
உத்கிருட்ட பரமபத வுபகா ரத்தான்
வெளியோடே வெளிசேர்ந்தால் வத்து வாச்சு
விரோதசத் ராதியெலாம் விருத்த மாச்சே 24

விருத்தமா மனுதிபிரா ரத்வ கர்மம் ;
விடயாதிப்ர பஞ்சவீட் டுமங்க ளெல்லாம்
ஒறுத்தவனே யோகியென்பா னவனு ரூடன்
உலகமெலாந் தானுவ துண்மை யாகும் ;
நிறுத்தவென்றால் நாசிகாக் கிரக வான்மா
நிலைபுருவ மத்தியிலே நிட்ட னுகிக்
கருத்தழிந்து நின்றவிடம் சாட்சாத் காரம்
கண்மூக்கு மத்தியிலே கண்டு பாரே. 25

பார்ப்பதற்கு நீண்டதுவாம் குறுகி வட்டம்
பரிதிமதி யுதயமெனப் பளிங்கா காசம்
தாப்பதற்கு மூன்றுசுழி பின்னுய் நிற்கும்
சாக்கிரத்தி னடையாளந் தாக்கிப் பாரு ;
சேர்ப்பதற்குச் சுழுமுனையென் றிதற்கு நாமம் ;
திரிகோணக் குண்டலியே சிவசொ ரூபம் ;
காப்பதற்கு நடுநாடி யூடே சென்று
கால்நிறுத்திப் பிடரிவழிக் கண்ணைப் பாரே. 26

கண்ணுள பிடரிமுது கோடு ரந்த்ரம்
கால்கூட்டிப் பார்த்தாலே தலைமே லாகும் ;
விண்ணான பெருவெக்கு ளீன மானல்
விமோசனமாம் நிராலம்பமெனத்தான் சொல்லும் ;
ஒண்ணான யோகமல்லோ இந்த நிட்டை
உபதேசம் பெற்றவர்க்கே உண்மை யாகும் ;
அண்ணாந்து பார்த்திருந்தால் வருமோ ஞானம் ?
அசபாமந் திரத்யானம் அறைகின் றேனே ; 27

அறைகின்றேன் அசபையெனும் பிராணன் மாவை
அகண்டபரா பரத்தினுள்ளே ஐக்கஞ் செய்யக்
குறைவில்லை ஓங்கார மூல வட்டக்
குண்டலியாய் நின்றிடத்திற் குணதீ தந்தான்
நிறைகின்றேன் நாசிகா ரந்த்ர வாயு
நீக்காம லேகமாய் நிர்ண யித்துப்
பறைகின்றே னட்சரசா தனமுந் தள்ளிப்
பந்தமற்ற மாமோட்சப் பதிபெற் றேனே. 28

பதிபுருவத் தடிமுனைக்கீழ் அண்ணாக் கென்னும்
பவளநிறம் போன்றிருக்குந் திரிகோ ணந்தான்
துதிபெறுசிங் குவையுபத்த சுகந்தி யாகச்
சுபாவசா தனையினல் மவுன மாச்சு ;
விதிவிகிதப் பிராரத்வ கர்மம் போச்சு ;
விடயபோ கத்தினிச்சை விட்டுப் போச்சு ;
மதியெனும்மோர் வாயுவது அமிர்த மாச்சு ;
வத்துவதே காரணமா மகிமை யாச்சே. 29

மகிமையென்று யோகசா தனையி னாலே
மகாகாச நிருவிகற்ப வாழ்க்கை யாச்சே ;
அகமகமென் றுணவத்தை நீக்க லாச்சே ;
அத்துவிதப் பிரமசித்தா னந்த காரம்

சகளாதீ தங்களந்து களாதீ தத்தில்
சாதித்தேன் தன்மனமாய்ச் சார்ந்து போச்சு !
பகலிருளில் லாதவெளிக் கப்பா லாச்சு ;
பந்தமற்ற மாமோட்சப் பதம்பெற் றேனே. 30

பெற்றதனைச் சொல்லிவிட்டேன் வடநூல் பாடை
பிரித்துமுப்பத் தொன்றினிலே பிரம ஞானம்
தத்துவத்தைச் சொல்லிவைத்தேன் யோகி யானால்
சாதனைசெய் வானறிவான் சைதன் யத்தில்
முத்தியடை வானதிலே நிருத்தஞ் செய்வான்
மும்மூட்சுத் துவமறிந்த மூர்த்தி யாவான்
நித்யமெனு முபநிடதப் பொருள்தான் சொல்லும்
நிலவரத்தால் யோகநிட்டை நிறைந்து முற்றே. 31

# காகபுசுண்டர் காவியம்–33

—::—

காப்பு

### எண்சீர் விருத்தம்

கணபதியே அடியாகி அகில மாகிக்
காரணத்தின் குருவாகிக் காட்சி யாகிக்
குணபதியே கொங்கைமின்னாள் வெள்ளை ஞானக்
குருநிலையாய் அருள்விளங்குங் கோமபே ஞானக்
கனவினிலும் நினைவினிலும் ஒளியாய் நின்ற
காரணத்தின் வடிவாகிக் கருத்துள் ளாகிப்
பணியரவம் பூண்டசிவ வாசி நேர்மை
பாடுகின்றேன் காவியந்தா னெண்ணிப் பாரே.

### நூல்

எண்ணியெண்ணிக் காவியத்தை யெடுத்துப் பாராய் ;
எந்நேரங் காமசிந்தை யிதுவே நோக்கும்
பண்ணிபன்றி பலகுட்டி போட்டா லென்ன,
பதியானைக் குட்டியொரு குட்டி யாமோ ?
சண்ணியுண்ணி யிந்நூலை நன்றாய்ப் பாரு
சக்கரமு மக்காரமும் நன்றாய்த் தோணும் ;
தண்ணிதண்ணி யென்றலைந்தால் தாகம் போமோ ?
சாத்திரத்தி லேபுகட்டித் தள்ளி யேறே. 1

புகட்டினாள் தசதீட்சை மகிமை தன்னைப்
பூரிப்பா லெனக்களித்தே அகண்டந் தோறும்
சகட்டினாள் சகலசித்து மாடச் சொன்னாள்
சந்திரபுட் கரணிதனில் தானஞ் சொன்னாள்

பகட்டினு லுலகமெல்லாம் முக்கோ ணத்திற்
பரஞான சிவபோதம் பண்பாய்ச் சொன்னாள்
அகட்டினு லைவர்களை யீன்றா ளம்மன்
அந்தருமை சொல்லவினி அடியான் கேளே. 2

கேளப்பா ஈசனொரு காலந் தன்னிற்
கிருபையுடன் சபைகூடி யிருக்கும் போது
வாளப்பா மாலயர்தம் முகத்தை நோக்கி,
வந்தவா றெவ்வகையோ சென்ற தேதோ ?
கோளப்பா செயகால லயந்தா னெங்கே ?
குருநமசி வாயமெங்கே ? நீங்க ளெங்கே ?
ஆளப்பா ஐவர்களு மொடுக்க மெங்கே ?
அறுத்தெனக்கு இன்னவகை யுரைசெய் வீரே. 3

இன்னவகை ஈசரவர் கேட்கும் போதில்
எல்லோரும் வாய்மூடி யிருந்தா ரப்போ
சொன்னவகை தனையறிந்து மார்க்கண் டேயன்
சொல்லுவான் குழந்தையவன் கலக லென்ன
அன்னை தனை முகம்பார்த்து மாலை நோக்கி,
அரகரி ! ஈசர்மொழிக் குரைநீர் சொல்வீர் ;
பின்னைவகை யாருரைப்பார் மாயை மூர்த்தி
பேசாம லிருந்துவிட்டால் மொழிவா ரெங்கே ? 4

எங்கென்று மார்க்கண்ட னெடுத்துச் சொல்ல
என்னசொல்வா ரேகவெளிச் சிவனை நோக்கிக்
கங்கைதனைப் பூண்டானே ! கடவு ளோனே !
காரணமே ! பூரணமே ! கண்ணே ! மின்னே !
சங்கையினி யேதறிவேன் மகுடச் சோதி
சந்திரனைப் பூண்டிருந்து தவம்பெற் றோனே !
மங்கையிடப் பாகம்வைத்த மகுடத் தோனே !
மாமுனிகள் ரிஷிசித்தர் அறிவார் காணே. 5

அறிவார்கள் ரிஷிசித்தர் முனிவோ ரையா!
அரகரா! அதுக்குக்கோ ளாறென் றக்கால்
பொறியாகப் புசுண்டமுனி சொல்வா ரையா!
போயழைக்கக் கோளாறி வசிட்ட ராகும்
நெறியாக இவ்வகைநா னறிவே னையா!
நிலைத்தமொழி புசுண்டராலால் மற்றோர் சொல்லார்;
புரிவாரு மிவ்வளவென் றுரைத்தார் மாயர்
பொருள்ஞானக் கடவுளப்போ மகிழ்ச்சி பூண்டார். 6

மகிழ்ச்சியுடன் மார்க்கண்டா வாராய் கண்ணே!
வரலாறு நீயெவ்வா றறிவாய் சொல்வாய்;
சுகட்சியுடன் கருதிப்பார் யுகங்கள் தோறும்
சூட்சமிந்த மாலோன்றன் வயிற்றிற் சேர்வான்
அகட்சியுடன் ஆலிலைமே லிருப்பா ரையா!
அப்போதே இவரிடத்தி லெல்லா ஞானம்
இகழ்ச்சியுட னிவற்குப்பின் எவரோ காணேன்
இவ்வார்த்தை நானறியே னவரைக் கேளீர். 7

கேளுமென்றான் மார்க்கண்டன் சிவன்தா னப்போ
கிருபையுட னிவ்வளவு மறிவா யோடா?
ஆளுகின்ற ஈசனுமா மறியோ மிந்த
அருமைதனை நீயறிந்தா யருமைப் பிள்ளாய்!
காளகண்டர் மாயோனைச் சொல்வீ ரென்றார்
கருவேது நீயறிந்த வாறுமேது!
பாளுகின்ற முப்பாழுந் தாண்டி நின்ற
பரஞான சின்மயமுன் பகர்ந்தி டீரே. 8

பரமான பரமகயி லாச வாசா!
பார்த்திருப்போ மாலிலைமேற் பள்ளி யாகித்
தரமான புசுண்டமுனி யந்த வேளை
சக்கரத்தைப் புரளவொட்டார் தவத்தி னாலே

தூரமாக எவ்வாருே திரும்பப் போவார்
சூட்சமதை நாமறிவோம் பின்னே தோதான்
வரமான வரமளித்த சூரன் வாழவே
வசிட்டர்போ யழைத்துவரத் தருமென் ருரே. 9

தருமென்ற வார்த்தைதனை யறிந்தே யீசர்
தவமான வசிட்டரே புசுண்டர் சாகை
அகமகிழ அங்கேகி அவர்க்கு ரைத்தே
அவரையிங்குச் சபைக்கழைத்து வருவா யென்ன,
செகமான செழுழுது மாண்ட சோதி
திருவடிக்கே நமக்கரித்துத் திரும்பி ஞர்பின்
உகமானந் தனையறிந்தும் அரனார் சொன்ன
உளவுகண்டார் புசுண்டரெனுங் காகந் தானே. 10

காகமென்ற வேடமதாய் விருட்ச மீதிற்
காத்திருந்தார் வசிட்டரவர் கண்டார் நாதர்
ஏகமதா யெட்டான வசிட்டரே நீர்
எங்குவந்தீர்? வாரும்.' என்றே இடமு மீயத்
தாகமுடன் ஈசருமை யழைக்கச் சொன்னார்:
சங்கதியைத் தங்களிடஞ் சாற்ற வந்தேன்;
பாகமுடன் எட்டான விவரந்தன்னைப்
பத்துமெய்ஞ் ஞானபொரு ளருள்பெற் ருரே! 11

பெற்ருரே யென்றுரைத்தீர் வசிட்டரே!நீர்
பிறந்திறந்தே எட்டாங்காற் பிறந்து வந்தீர்;
சத்தான சத்துகளு மடங்கும் காலம்
சக்கரமுந் திரும்பிவிட்டாற் சமயம் வேறும்
சித்தான பஞ்சவாக ளொடுங்கும் போது
சேரவே ரிஷிமுனிவர் சித்த ரோடு
முத்தாகப் பஞ்செழுத்தி லொடுக்க மாவார்
முத்துமணிக் கொடியீன்ருள் முளைத்திட் டீரே. 12

முளைத்திட்டி ரித்தோடெட் டுவிசை வந்தீர்
    முறையிட்டி ரிவ்வண்ணம் பெருமை பெற்றீர்;
களைத்திட்டுப் போகாதீர் சொல்லக் கேளும்;
    கண்டமதில் விடம்பூண்டார்க் களுவ லென்ன ?
கிளைத்திட்டுப் போனக்கால் மறந்து போவார்
    கிளர்நான்கு யுகந்தோறு மிந்தச் செய்கை
பிழைத்திட்டுப் போவமென்று லங்கே போவோம்
    பேய்பிடித்தோர் வார்த்தைசொல்ல நீர்வந் தீரே. 13

வந்தீரே வசிட்டரே! இன்னங் கேளும்;
    வளமைநான் சொல்லிவந்தேன் வேடம் நீங்கி
இந்தமா மரக்கொம்பி லிருந்தே னிப்போ
    திதுவேளை யெவ்வளவோ சனமோ காணும்
அந்தமோ ஆதியோ இரண்டுங் காணார்
    அவர்களெல்லாம் ரிஷியோகி சித்த ரானார்;
சந்தேக மும்மக்குரைக்கப் போகா தையா!
    சாமிக்கே சொல்லுமையா இதோவந் தேனே' 14

வந்தேனே யென்றுரைத்த வாறு கொண்டு
    வசிட்டருமே வாயுலர்ந்து காலும் பின்னி
இந்தேனே முனிநாதா! சரணங் காப்பீர்,
    என்றுசிவன் சபைநாடி முனிவர் வந்தார்;
மைந்தனையே யீன்றருளுங் கடவுள் நாதா;
    மாமுனிவன் வாயெடுக்கப் புசுண்டர் சொல்வார்;
சிந்தனைசெய் ஈச்சுரனே வந்தே னையா
    சிவசிவா இன்னதென்று செப்பி டீரே, 15

செப்புமென்ற புசுண்டமுனி முகத்தை நோக்கிச்
    சிவன்மகிழ்ந்தே ஏதுமொழி சொல்லு வார்கேள்;
கொப்புமென்ற யுகமாறிப் பிறழுங் காலம்
    குருநமசி வாயமெங்கே பார்த்தா னெங்கே?

அப்புமெத்தப் பஞ்சகணத் தேவ ரெங்கே ?
அயன்மா லும் சிவன்மூல ரடக்க மெங்கே ?
ஒப்புமிந்த யுகமாறிப் பிறந்த தெங்கே ?
ஓகோகோ முனிநாதா வுரைசெய் வீரே ? 16

உரையென்றீ ருத்தமருக்குப் புத்தி போச்சு ;
உம்மோடே சேர்ந்தவர்க்கும் மதிகள் போச்சு ;
பரையென்றால் பரைநாடி நிலைக்க மாட்டீர் ;
பரமசிவன் தானமென் னும் பேரும் பெற்றீர் ;
இரையென்றால் வாய்திறந்த பட்சி போல
எல்லோரு மப்படியே இறந்திட் டார்கள் ;
நிறையென்ற வார்த்தைகளைச் சொன்னே னானால்
நிசங்கொள்ளா தந்தரங்கம் நிசங்கொள்ளாதே. ; 17

கொள்ளாமற் போவதுண்டோ மவுன யோகி ;
கோடியிலே உனைப்போலே ரிஷியோ காணேன் ;
உள்ளாக ரிஷியொருவ ரில்லா விட்டால்
யுகவார்த்தை யாருரைப்பா யானுங் காணேன் ;
விள்ளாமற் றீராது முனிவ னே!கேள் ;
மெய்ஞ்ஞான பரம்புகுந்த அருள்மெய்ஞ் ஞானி
தள்ளாமற் சபையிலுள்ளோ ரெல்லோர் கெட்கச்
சாற்றிடாய் முனிநாதா! சாற்றி டாயே.’ 18

சாற்றுகிறே னுள்ளபடி யுகங்கள் தோறும்
தமக்குவந்து சொல்லுவதே தவமாய்ப் போய்ச்சு ;
மாற்றுகிறேன் கணத்தின்முன் னுரைந்துப் போனேன் ;
வாதாட்ட மெனதாச்சே இனியென் சொல்வேன் ?
சேற்றிலே நாட்டியதோர் கம்பம் போலத்
திரும்பினது போலாச்சு யுகங்கள் தோறும்
ஆற்றுகிறே னந்தமது ஆகும்போது
அரகரா அந்நேரம் நடக்கை கேளே 19

கேளப்பா நடந்தகதை சிவமே யுண்மை
கெடியாகச் சக்கரங்கள் திரும்பும் போது
பாரப்பா தசநாதம் மவுனம் பாயும் ;
பரமான மவுனமது பரத்திற் சாடும் ;
ஏனப்பா அடுக்குகளும் இடிந்து வீழும் ;
இருந்தசதா சிவமோடி மணியில் மீளும் ;
கேளப்பா இதுகேளா யெவருஞ் சொல்வார்
கோகோகோ அண்டமெல்லாங் கவிழ்ந்து போமே. 20

கவிழ்ந்துபோ மப்போது அடியே னங்கே
கருத்துவைத்துத் தியானமொரு தியான முண்டு
தவழ்ந்துபோங் காலமப்போ நிறுத்து வேன்யான்
சமையமதி லக்கினிபோல் தம்பங் காணுஞ்
சிவந்தவண்ணம் நீலவுருச் சுடர்விட் டேகும் ;
சிவசிவா அக்கினிபோற் கொழுந்து வீசும் ;
நவந்துஅத னருகேநான் சென்று நிற்பேன் ;
நகாரமுத லஞ்செழுத்தும் வரக்காண் பேனே. 21

காண்பேனே நகாரமது மகாரம் புக்கும்
கருத்தான மகாரமது சிகாரம் புக்கும்
தேண்பேனே சிகாரமது வகாரம் புக்கும்
சிவசிவா வகாரமது யகாரம் புக்கும்
கேண்பேனே வகாரமது சுடரிற் புக்கும்
குருவான சுடரோடி மணியிற் புக்கும்
நாண்பான மணியோடிப் பரத்திற் புக்கும்
நற்பரந்தான் சிவம்புக்குஞ் சிவத்தைக் கேளே. 22

கேளப்பா சிவமோடி அண்டம் பாயும்
கிருபையா யண்டமது திரும்பிப் பாயும்
கேளப்பா அண்டமது கம்பத் தூண்தான்
குருவான தசதீட்சை யொன்று மாச்சு

மீளப்பா தம்பமது விளங்குஞ் செய்கை
மேலுமில்லை கீழுமில்லை யாதுங் காணேன் ;
ஆளப்பா நரைத்தமா டேறு வோனே !
அன்றளவோ வின்றளவோ அறிந்தி லேனே, 23

அறிந்திலே னென்றுரைத்த புசுண்ட மூர்த்தி !
அரகரா உன்போல முனியார் காணேன் ;
தெரிந்திலே னென்றுரைத்தால் மனங்கே ளாது
சிவனயந்து கேட்கவும்நீ யொளிக்க வேண்டாம் ;
பொருந்திலேன் பூருவத்தில் நடந்த செய்கை
பூரணத்தா னுள்ளபடி புகழ்ந்து சொல்லும்
பரிந்திலேன் மிகப்பரிந்து கேட்டே னையா !
பழமுனியே கிழமுனியே பயன்செய் வாயே ; 24

பழமுனிவ னென்றுரைத்தீர் கடவு ளாரே !
பருந்தீப தம்பத்தைப் பலுக்கக் கேளும் ;
குழுவுடனே தம்பமதில் யானும் போவேன்
கோகோகோ சக்கரமும் புரண்டு போகும் ;
தழும்பணியச் சாகரங்க ளெங்குந் தானுய்ச்
சத்தசா கரம்புரண்டே யெங்கும் பாழாய்
அழகுடைய மாதொருத்தி தம்பத் துள்ளாய்
அரகரா கண்ணுடி வீலை தானே. 25

வீலைபோற் காணுமுகப் போலே காணும்
நிலைபார்த்தால் புருடரைப்போற் றிருப்பிக் காணும் ;
ஆலைபோற் சுழன்றாடுங் கம்பத் துள்ளே
அரகரா சக்கரங்க ளாறுங் காணும்
வாலைபோற் காணுமையா பின்னே பார்த்தால்
மகத்தான அண்டமது கோவை காணுஞ்
சோலையா யண்டமதிற் சிவந்தான் வீசும்
சிவத்திலே அரகரா பரமுங் காணே 26

பரத்திலே மணிபிறக்கும் மணியி னுள்ளே
பரம்நிற்குஞ் சுடர்வீசும் இப்பாற் கேளும் ;
நிரத்திலே சடமதனில் யகாரங் காணும்
நிச்சயமாம் யகாரமதில் வகாரங் காணும்
வரத்திலே வகாரமதிற் சிகாரங் காணும்
வரும்போலே சிகாரத்தில் மகாரங் காணும்
நரத்திலே மகாரத்தில் நகாரங் காணும்
நன்றுமப் பூமியப்போ பிறந்த தன்றே. 27

பிறந்ததையா இவ்வளவு மெங்கே யென்றால்
பெண்ணொருத்தி தூணதிலே நின்ற கோலம்
சுறந்ததையா யிவ்வளவும் அந்த மாது
சூட்சமதே அல்லாது வேறொன் றில்லை :
கறந்ததையா உலகமெல்லாங் காமப் பாலைக்
காலடியிற் காக்கவைத்துச் சகல செந்தும்
இறந்ததையா இவ்வளவுஞ் செய்த மாது
எங்கென்று னுன்னிடத்தி லிருந்தாள் கன்னி; 28

இடப்பாக மிருந்தவளு மிவளே மூலம்
இருவருக்கும் நடுவான திவளே மூலம்
தொடக்காக நின்றவளு மிவளே மூலம்
சூட்சமெல்லாங் கற்றுணர்ந்த திவளே மூலம்
அடக்காக அடக்கத்துக் கிவளே மூலம்
ஐவருக்குங் குருமூல மாதி மூலம்
கடக்கோடி கற்பமதில் நின்ற மூலம்
கன்னியிவள் சிறுவாலை கன்னி தானே. 29

கன்னியிவ ளென்றுரைத்தார் புசுண்ட மூர்த்தி
கர்த்தரப்போ மனஞ்சற்றே கசங்கி னார்பின்
மண் ணுள்ள தேவர்களும் பிறப்பித் திந்த
மார்க்கத்தி லிருப்பதுவோ மவுனப் பெண்ணே !

உண்ணிதமா யுண்கருணை யெங்கே காண்போம்
    ஓகோகோ ஐவருந்தான் வணங்கி னார்கள்
கொன்னியவள் வாக்குரையாள் சிவமே கன்னி
    கொலுமுகத்தில் நால்வரும்போய் வணங்கி னாரே. 30

வணங்கியவர் வாய்புதைத்து நின்றார் பின்னே
    மாதுகலி யாணியென வசனித் தார்கள்
வணங்கினார் தேவரொடு முனிவர் தாமும்
    மற்றுமுள்ள தேவர்களும் நவபா டாளும்
வணங்கினா ரட்டகசந் திகிரி யெட்டும்
    வாரிதியுஞ் சேடனுமா லயனு மூவர்
வணங்கினா மிகவணங்கித் தொழுதா ரப்போ
    வாலையவள் மெய்ஞ்ஞானம் அருளீ வாளே. 31

அருளீவாள் திருமணியை மாலை பூண்டாள்
    அரகரா சின்மயத்தி னீறு பூசிப்
பொருளீவா ளவரவர்க்கும் ஏவல் சொல்லிப்
    பொன்றாத பல்லுயிர்க்கைக் கிடங்கள் வேறாய்த்
தெருளீவாள் சிவயோகந் தெளிவ தற்குச்
    செயலுறுதி யாகவல்லோ தெரிய வேண்டித்
திருளீவாள் தாயான சிறிய வாலை
    சிவசிவா சூட்சம்பூ ரணமு முற்றே. 32

பூருவத்தில் நடந்தகதை இதுதான் என்று
    புகன்றுவிட்டுப் புசுண்டருந்தம் பதிக்குச் சென்றார் ;
காரணத்தி லேவகுத்தே னிந்த ஞானங்
    கம்பமணி வாலைகொலுக் கூட்டமப்பா
காரணத்தில் நின்றிலங்கும் மவுன வாலை
    நாட்டினாள் சிவராச யோகங் கேளு
ஆரணத்தி பூரணத்தி யருள்மெய்ஞ் ஞானி
    ஆதிசத்தி வேதமுத்தி யருள்செய் வாளே. 33

# காகபுசுண்டர் குறள்-16

—::—

## குறள் வெண்பா

சின்மயத்தைப் போற்றிச் சிவராச யோகத்தில்
நன்மை பராபரத்தை நாடு. 1

அண்டமுடிமீதி லங்கி ரவிமதியைக்
கண்டுதெரி சித்தல் கதி. 2

வலமிடமாய் நின்ற மதிரவியை மாறி
விலகா தடியினிற்பின் வீடு 3

அறுபத்து நால்யோக மவ்வளவுத் தள்ளி
ஒருபொழுது முண்டுநிலே யோர். 4

உலகமே மாயமென வுன்மனத்திற் கண்டு
நலமாக நாதனடி நம்பு. 5

சித்தர் பதினெண்மர் செய்கையிற் றேன்றூத
அத்தனரு ளும்புசுண்டன் யான். 6

சொன்னே னறிந்து சுகமா யுலகோருக்
கென்னாளும் வாழ்கவென் றே யான். 7

கண்ணுள் மணியாகிக் காரண மாய்நின்றான்
மண்ணு முயிர்பதியு மாறு. 8

விண்டேனே ஞானம் வெளியாக முப்பத்தி
ரண்டி லறிவீர் நலம். 9

நேத்திரத்தைக் காகம்போல் நிச்சய மாய்நிற்க
ஆத்துமத்தி லானந்த மாம். 10

உலகி லறிந்தோ ரொருநாளும் மாளார்
பலநினைவை வீட்டுநீ பார் 11

கண்டோருஞ் சொல்லார் கருத்தாற் பெரியோரைத்
தொண்டுசெய்து பெற்ற சுகம். 12

ஆதியிற் சொன்னவிய ரண்ட மதையெடுத்து
மாதுசிவன் பூசைசெய்து வை. 13

முப்பொருளைச் சுட்டு முழுதமுது நீருக்கித்
தப்பாம லுண்டுநிலை சார். 14

யோகமுடன் கற்ப முரைத்தேனீ ரெட்டினில்
வேகமுடன் கண்டுணரு வீர். 15

வாசிமுனி மைந்தா மருவு பிரமத்தில்
மோசம்வா ராகுறள்முற் றும். 16

# ஔவையார் ஞானம்

—::—

## வீட்டு நெறிப்பால்

ஆதியாய்நின்ற வறிவு முதலெழுத்
தோதிய நூலின் பயன். 1

பரமாய சத்தியுட் பஞ்சமா பூதந்
தரமாறிற் றோன்றும் பிறப்பு. 2

ஓசை பரிச முருவஞ் சுவைநாற்ற
மாசை படுத்து மளறு. 3

தருமம் பொருள் காமம்வீடெனு நான்கு
முருவத்தா லாய பயன். 4

நிலமைந்து நீர் நான்கு நீடங்கி மூன்றே
யுலவை யிரண்டொன்று விண். 5

மாயன் பிரமனு ருத்திரன் மகேசனே
டாயுஞ்சிவ மூர்த்தி யைந்து. 6

மாலய னங்கி யிரவிமதி யுமையோ
டேழுந் திகழ்சத்தி யாறு. 7

தொக்குதிரத் தோடூன் மூளை நிணமென்பு
சுக்கிலந் தாதுக்க ளேழு. 8

மண்ணொடு நீரங்கி மதியொடு காற்றிரவி
விண்ணெச்ச மூர்த்தியோ டெட்டு. 9

இவையெல்லாங் கூடி யுடம்பாய வொன்றி
னவையெல்லா மானது விந்து. 10

## உடம்பின் பயன்

உடம்பினைப் பெற்ற பயனாவ தெல்லா
முடம்பினி லுத்தமனைக் காண். 1

உணர்வாவ வெல்லா முடம்பின் பயனே
யுணர்க உணர்வுடை யார். 2

ஒருபயனுவ துடம்பின் பயனே
தருபயனுஞ் சங்கரனைச் சார். 3

பிறப்பினுற் பெற்ற பயனுவ வெல்லாந்
துறப்பதாந் தூநெறிக்கட் சென்று. 4

உடம்பினு லன்றி யுணர்வுதா னில்லை
யுடம்பினு லுன்னியதே யாம். 5

மாசற்ற கொள்கை மனத்தி லடைந்தக்கால்
ஈசனைக் காட்டு முடம்பு. 6

ஓசை யுணர்வுக ளெல்லாந் தருவிக்கும்
நேசத்தா லாய வுடம்பு. 7

உயிர்க்குறுதி யெல்லா முடம்பின் பயனே
அயர்ப்பின்றி யாதியை நாடு. 8

உடம்பினுற் பெற்ற பயனுவ வெல்லாம்
திடம்பட வீசனைத் தேடு. 9

அன்னத்தா லாய உடம்பின் பயனெல்லா
முன்னேனைக் காட்டி விடும். 10

## உள்ளுடம்பின் நிலைமை

கற்கலாங் கேட்கலாங் கண்ணாரக் காணலா
முற்றுடம்பா லாய வுணர்வு. 1

வெள்ளி பொன்மேனிய தொக்கும் வினையுடைய
வுள்ளுடம்பி னுய வொளி. 2

சென்றுண்டு வந்து திரிதரு முள்ளுடம்பு
என்றுங் கெடாத திது. 3

வருபய னுண்டு மகிழ்ந்துடனு நிற்கு
மொருபயனைக் காட்டு முடம்பு. 4

அல்லற் பிறப்பை யகற்றுவிக்கு மாய்த்தாய
தொல்லை யுடம்பின் றொடர்பு. 5

நல்வினையுந் தீவினையு முண்டு திரிதருஞ்
செய்வினைக்கும் வித்தா முடம்பு. 6

உள்ளுடம்பின் வாழ்வன வொன்பது மேழைக்
கள்ளவுடம் பாகி விடும். 7

பொய்க்கெல்லாம் பாசனமா யுள்ளதற்கோர் வித்தாகு
மெய்க்குள்ளா மாய வுடம்பு. 8

வாயுவினு லாய வுடம்பின் பயனே
ஆயுவி னெல்லை யது. 9

ஒன்பது வாசலு மொக்க வடைத்தக்கா
லன்பதி லொன்று மரன். 10

## நாடிதாரணை

எழுபத்தீ ராயிர நாடி யவற்றுள்
முழுபத்து நாடி முதல். 1

நரம்பெனு நாடி யிவையுனுக் கெல்லா
முரம்பெறு நாடியொன் றுண்டு. 2

உந்தி முதலா யுறுமுடிகீழ் மேலாய்ப்
பந்தித்து நிற்கும் பரிந்து. 3

காலொடு கையி னடுவிடத் தாமரை
நூல்போலு நாடி நுழைந்து. 4

ஆதித்தன் றன்கதிர் போலவங் நாடிகள்
பேதித்துத் தாம்பரந்த வாறு. 5

மெய்யெல்லா மாகி நரம்போ டெலும்பிசைந்து
பொய்யில்லை நாடிப் புணர்பு. 6

உந்தி முதலாகி யோங்காரத் துட் பொருளாய்
நின்றது நாடி நிலை. 7

நாடிகளூடு போய்ப் புக்க நலஞ்சுடர்தான்
வீடுதருமாம் விரைந்து. 8

நாடி வழக்க மறிந்து செறிந்தடங்கி
நீடொளி காண்ப தறிவு. 9

அந்றிதடங்கி நிற்குமங் நாடிகடோறுஞ்
செறிந்தடங்கி நிற்குஞ் சிவம். 10

## வாயுதாரணை

மூலத்திற்றோன்றி முடிவிலிரு நான்காகிக்
கால்வெளியிற் பன்னிரண்டாங் காண். 1

இடைபிங் கலைக ளிரேசக மாற்றி
லடையு மரனா ரருள். 2

அங்குலியான் மூடி முறையா லிரேசிக்கிற்
பொங்குமாம் பூரகத்தினுள். 3

எண்ணிலி யூழி யுடம்பா யிரேசிக்கி
னுண்ணிலமை பெற்ற துணர்வு. 4

மயிர்க்கால்வழி யெல்லா மாய்கின்ற வாயு
வுயிர்ப்பின்றி யுள்ளே பதி. 5

இரேசிப்பது போலப் பூரித்து நிற்கிற்
றாசுமுனை நாக்கதுவே யாம். 6

கும்பகத்தி னுள்ளே குறித்தானைத் தானோக்கிற்
றும்பிபோ னிற்குந் தொடர்ந்து 7

இரேசக பூரக கும்பக மாற்றிற்
றாசுபோ னிற்குந் தலை 8

வாயு வழக்க மறிந்து செறிந் தடங்கி
லாயுட் பெருக்க முண்டாம். 9

போகின்ற வாயு பொருந்திற் சிவமொக்குந்
தாழ்கின்ற வாயு வடக்கு. 10

## அங்கிதாரணை

அந்தத்தி லங்கி யழல்போலத் தானோக்கிற்
பந்தப் பிறப்பறுக்க லாம். 1

உள்ளும் புறம்பு மொருங்கக் கொழுவூறிற்
கள்ள மல மறுக்கலாம். 2

எரியுங் கழல்போல வுள்ளூற நோக்கிற்
கரியுங்கண னுருவ மாம். 3

உள்ளங்கி தன்னை ஒருங்கக் கொழுவூறில்
வெள்ளங்கி தானும் விரைந்து. 4

உந்தியி னுள்ளே பொருங்கச் சுடர்பாய்ச்சி
லந்தி யழலுருவ மாம். 5

ஐயைந்து மாய வகததுளெரி நோக்கிற்
பொய்யைந்தும் போகும் புறம். 6

ஐம்பது மொன்றுமழல் போலத்தா னோக்கி
லும்ப ரொளியாய் விடும். 7

தூண்டுஞ் சுடரைத் துளங்காமற்று னோக்கில்
வேண்டுங் குறை முடிக்கலாம். 8

உள்ளத்தா லங்கி யொழுங்கக் கொழுவூறில்
மெள்ளத்தான் வீடாம் விரைந்து 9

ஒள்ளிதா யுள்ள சுடரை யுறநோக்கில்
வெள்ளியா மாலை விளக்கு. 10

## அமுததாரணை

அண்ணாக்குத் தன்னை யடைத்தங் கமிர்துண்ணில்
விண்ணோர்க்கு வேந்தனு மாம். 1

ஈரெண் கலையி னிறைந்தவமிர் துண்ணில்
பூரண மாகும் பொலிந்து. 2

ஓங்கா ரமான கலசத் தமிர் துண்ணில்
போங்கால மில்லை புரிந்து. 3

ஆனகலசத் தமிர்தை யறிந் துண்ணில்
போனகம் வேண்டாமற் போம். 4

ஊறு மமிர்தத்தை யுண்டியுறப் பார்க்கில்
கூறும் பிறப்பறுக்க லாம். 5

ஞான வொளிவிளக்கா னல்லவமிர் துண்ணில்
ஆன சிவயோகி யாம். 6

மேலை யமிர்தை விளங்காமற்று னுண்ணில்
காலனை வஞ்சிக்க லாம். 7

காலன லூக்கங் கலந்த வமிர் துண்ணில்
ஞான மதுவா நயந்து. 8

எல்லையி லின்னமிர்த முண்டாங் கினிதிருக்கில்
தொல்லை முதலொளியே யாம். 9

நிலா மண்டபத்தி னிறைந்த வமிர் துண்ணில்
உலாவலா மந்தரத்தின் மேல. 10

## அர்ச்சனை

மண்டலங்கள் மூன்று மருவ வுடனிறுத்தி
அண்டரனை யர்ச்சிக்கு மாறு. 1

ஆசனத்தைக் கட்டி யரன்றன்னை யர்ச்சித்து
பூசனைசெய் துள்ளே புணர். 2

உள்ளமே பீட முணர்வே சிவலிங்கந்
தெள்ளிய ரர்ச்சிக்கு மாறு. 3

ஆதாரத் துள்ளே யறிந்து சிவனுருவைப்
பேதமற வர்ச்சிக்கு மாறு. 4

பூரித் திருந்து புணர்ந்து சிவனுருவைப்
பாரித்தங் கர்ச்சிக்கு மாறு. 5

விளக்குறு சிந்தையான் மெய்ப்பொருளைக் கண்டு
துளக்கற வர்ச்சிக்கு மாறு. 6

பிண்டத்தி னுள்ளே பேரா திறைவனைக்
கண்டுதா னர்ச்சிக்கு மாறு. 7

மந்திரங்க ளெல்லா மயங்காம லுண்ணினைந்து
முந்தரனை யர்ச்சிக்கு மாறு. 8

பேராக் கருத்தினாற் பிண்டத்தி னுண்ணினைந்
தாராதனை செய்யு மாறு. 9

உள்ளத்தி னுள்ளே யுறப்பார்த்தங் கொண்சுடரை
மெள்ளத்தா னர்ச்சிக்கு மாறு. 10

## உள்ளுணர்வு

எண்ணிலி யூழி தவஞ்செய்திங் கீசனை
உண்ணிலைமை பெற்ற துணர்வு. 1

பல்லூழி காலம் பயின்றரனை யர்ச்சித்து
நல்லுணர்வு பெற்ற நலம். 2

எண்ணற் கரிய வருந்தவத்தா லன்றே
நண்ணப் படுமுணர்வு தான். 3

முன்னைப் பிறப்பின் முயன்ற தவத்தினால்
பின்னைப் பெறுமுணர்வு தான். 4

காயக் கிலேச முணர்ந்த பயனன்றே
ஓயா வுணர்வு பெறல். 5

பண்டைப் பிறவிப் பயனாந் தவத்தினால்
கண்டதங் குணர்வு பெறல். 6

போராத் தவத்தின் பயனும் பிறப்பின்மை
ஆராய்ந் துணர்வு பெறின். 7

ஞானத்தா லாய வுடம்பின் பயனன்றே
மோனத்தா லாய வுணர்வு. 8

ஆதியோ டொன்று மறிவைப் பெறுவதுதான்
நீதியாற் செய்த தவம். 9

காடு மலையுங் கருதித் தவஞ்செய்தால்
கூடு முணர்வின் பயன். 10

## பத்தியுடைமை

பத்தியா லுள்ளே பரிந்தரனைத் தானோக்கில்
முத்திக்கு மூல மது. 1

பாடியு மாடியும் பல்கா லும் நேசித்துத்
தேடுஞ் சிவசிந்தை யால். 2

அன்பா லழுது மலறியு மாள்வானை
யென்புருகி யுள்ளே நினை. 3

பூசனை செய்து புகழ்ந்து மணங்கூர்ந்து
நேசத்தா லீசனைத் தேடு. 4

கண்ணு லுறப்பார்த்துக் காதலாற் றுணுக்கில்
உண்ணுமே யீச னொளி. 5

நல்லானைப் பூசித்து நாத னெனவுருகில்
நில்லாதோ வீச னிலே. 6

அடியார்க் கடியரா யன்புருகித் தம்முள்
படியொன்றிப் பார்த்துக் கொளல். 7

ஈச னெனக்கருதி யெல்லா வுயிர்களையும்
நேசத்தால் நீநினைந்து கொள். 8

மெய்ம் மயிர் கூர விருப்புற்று வேர்த்தெழுந்து
பொய்ம்மையி லீசனைப் போற்று. 9

செறிந்தறிந்து நாடிச் செவ்விதா யுள்ளே
அறிந்தரனை யாய்ந்து கொளல். 10

## திருவருட்பால்

அருளினு லன்றி யகத்தறி வில்லை
அருளின் மலமறுக்க லாம். 1

இருளைக் கடிந்தின் றிறைவ னருளால்
தெருளும் சிவசிந்தை யால. 2

வாய்மையாற் பொய்யா மனத்தினல் மாசற்ற
தூய்மையா மீச னருள். 3

ஒவ்வகத்து ணின்ற சிவனருள பெற்றக்கால்
அவ்வகத்து ளானந்த மாம் 4

உன்னுங் கரும முடிக்கலா மொள்ளிதாய்
மன்னு மருள்பெற்றக் கால். 5

எல்லாப் பொருளு முடிக்கலா மீசன்றன்
தொல்லை யருள்பெற்றக் கால். 6

சிந்தையு ணின்ற சிவனருள் பெற்லக்கால்
பந்தமாம் பாச மறும். 7

மாசற்ற கொள்கை மதிபோலத் தான்றோன்றும்
ஈசனருள் பெற்றக் கால். 8

ஆவாவென் றோதி யருள்பெற்றார்க் கல்லாது
தாவாதோ ஞான வொளி. 9

ஓவாச் சிவனருள் பெற்றா லுறையின்றித்
தாவாத வின்பந் தரும். 10

## நினைப்புறுதல்

கருத்துறப் பார்த்துக் கலங்காம லுள்ளத்
திருத்திச் சிவனை நினை. 1

குண்டலியி னுள்ளே குறித்தரனைச் சிந்தித்து
மண்டலங்கள் மேலாகப் பார். 2

ஓர்மின்கள் சிந்தையி லொன்றச் சிவன்றன்னைப்
பார்மின் பழம்பொரு ளேயாம். 3

சிக்கெனத் தேர்ந்துகொள் சிந்தையி லீசனை
மிக்க மலத்தை விடு. 4

அறிமின்கள் சிந்தையி லாதாரத்தைச் சேர்ந்
துறுமின்க ளும்முளே யோர்ந்து. 5

நித்தம் நினைந்திரங்கி நின்மலனை யொன்றுவிக்கில்
முற்றும வனொளியே யாம். 6

ஓசையுணர்ந் தங்கே யுணர்வைப் பெரும்பரிசால்
ஈசன் கருத்தா யிரு. 7

இராப்பக லன்றி யிருசுடர்ச் சிந்திக்கில்
பராபரத்தோ டொன்றலு மாம். 8

மிக்க மனத்தால் மிகநினைந்து சிந்திக்கில்
ஒக்கச் சிவனுருவ மாம். 9

வேண்டுவோர் வேண்டும் வகைதான் விரிந்தெங்கும்
காண்டற் கரிதாஞ் சிவம். 10

## தெரிந்து தெளிதல்

தேறித் தெளிமின் சிவமென்றே யுள்ளுணர்வில்
கூறிய பல்குணமு மாம். 1

உண்டில்லை யென்று முணர்வை யறிந்தக்கால்
கண்டில்லை யாகுஞ் சிவம். 2

ஒருவர்க் கொருவனே யாகுமுயிர்க் கெல்லாம்
ஒருவனே பல்குணமு மாம். 3

எல்லார்க்கு மொன்றே சிவமாவ தென்றுணர்ந்த
பல்லோர்க்கு முண்டோ பவம் 4

ஆயு மிரவியு மொன்றே யனைத்துயிர்க்கும்
ஆயுங்கா லொன்றே சிவம். 5

ஓவாத தொன்றே பலவா முயிர்க்கெல்லாந்
தேவான தென்றே தெளி. 6

தம்மை யறியாதார் தாமறிவோ மென்பதென்
செம்மையா வீசன் றிறம். 7

எல்லா வுலகத் திருந்தாலு மேத்துவர்கள்
நல்லுலக நாத னடி. 8

உலகத்திற் பட்ட உயிர்க்கெல்லா மீசன்
நிலவுபோ னிற்கும் நிறைந்து. 9

உலகத்தில் மன்னு முயிர்க்கெல்லா மீசன்
அலகிறந்த வாதியே யாம். 10

## கலை ஞானம்

சத்தியாஞ் சந்திரனைச் செங்கதிரோ னூடுருவில்
முத்திக்கு மூல மது. 1

அயனங்கொள் சந்திரனு லாதித்த னென்றில்
நயனமா முத்திக்கு வீடு. 2

அஞ்சாலு மாயா தறம்பொரு ளின்பமுந்
துஞ்சா தவர் துறக்கு மாறு. 3

ஈசனோ டொன்றி லிசையாப் பொருளில்லை
தேசவிளக் கொளியே பாம். 4

தாஞ்செய் வினையெல்லாந் தம்மையற வுணரில்
காஞ்சனமே யாகுங் கருத்து. 5

கூடக மான குறியெழுத்தைத் தானறியில்
வீடக மாகும் விரைந்தது. 6

வீடக மாக விழைந்தொல்லை வேண்டுமேல்
கூடகத்திற் சோதியோ டொன்று. 7

பூரித்து நின்ற சிவனைப் புணரவே
பாரித்த தாகுங் கருத்து. 8

இரேசக மாற்றி யிடையறாதே நிற்கில்
பூரிப்ப துள்ளே சிவம். 9

சிந்தையில் நின்ற நிலைவிசும்பிற் சாக்கிரமாம்
சந்திரனிற் றோன்று முணர்வு. 10

## உருவொன்றி நிற்றல்

எள்ளகத் தெண்ணெ யிருந்ததனை யொக்குமே
உள்ளகத் தீச னொளி. 1

பாலின்க ணெய்போற் பரந்தெங்கு நிற்குமே
நூலின்க ணீச னுழைந்து. 2

கரும்பினிற் கட்டியுங் காய்பாலி னெய்யும்
இரும்புண்ட நீரு மியல்பு! 3

பழத்தி னிரதம்போற் பரந்தெங்கு நிற்கு
மழுத்தினா லீச னிலை. 4

தனுவொடு தோன்றுமே தானெல்லா மாகி
யணுவதுவாய் நிற்கு மது. 5

வித்து முளைபோல் விரிந்தெங்கு நிற்குமே
ஒத்துளே நிற்கு முணர்வு. 6

அச்ச மாங்கார மகத்தடக்கி னாற்பின்னை
நிச்சயமா மீச னிலை. 7

மோட்டினீர் நாற்றமுளே முட்டை போலுமே
வீட்டுளே நிற்கு மியல்பு. 8

நினைப்பவர்க்கு நெஞ்சத்துள் நின்மலனாய் நிற்கும்
அனைத்துயிர்க்குந் தானா மவன். 9

ஓசையி னுள்ளே யுதிக்கின்ற தொன்றுண்டு
வாசமலர் நாற்றம்போல் வந்து. 10

## முத்தி காண்டல்

மனத்தோ டுறுபுத்தி யாங்காரஞ் சித்தம்
அனைத்தினு மில்லை யது. 1

வாக்குங் கருத்து மயங்குஞ் சமயங்கள்
ஆக்கிய நூலினு மில். 2

உருவமொன் றில்லை யுணர்வில்லை யோதும்
அருவமுந் தானதுவே யாம். 3

தனக்கோ ருருவில்லை தானெங்கு மாகி
மனத்தகமாய் நிற்கு மது. 4

பெண்ணா ணலியென்னும் பேரொன் றிலதாகி
விண்ணாகி நிற்கும் வியப்பு. 5

அனைத்துருவ மாய வறிவை யகலில்
தினைத்துணையு மில்லை சிவம். 6

துணிமுகத்துக் காதியாத் துன்னறி வின்றி
அணிதா ரிரண்டு விரல். 7

மயிர்முனையிற் பாதி மனத்தறி வுண்டேல்
அயிர்ப்புண்டங் காதி நிலை. 8

தற்பர மான சதாசிவத்தோ டொன்றில்
உற்றறி வில்லை யுயிர்க்கு. 9

உறக்க முணர்வு பசிகெடப் பட்டால்
பிறக்கவும் வேண்டா பிறப்பு 10

## உருபாதீதம்

கருவின்றி வீடாங் கருத்துற வேண்டில்
உருவின்றி நிற்கு முணர்வு. 1

பிறத்தலொன் றின்றிப் பிறவாமை வேண்டில்
அறுத்துருவ மாற்றி யிரு. 2

உருவங்க ளெல்லா மறுத்துற மாற்றில்
கருவேது மில்லை தனக்கு 3

கறுப்பு வெளுப்பு சிவப்புறு பொன்பச்சை
யறுத்துருவ மாற்றி யிரு. 4

அனைத்துருவ மெல்லா மறக்கெடுத்து நின்றால்
பினைப்பிறப் பில்லையாம் வீடு. 5

நினைப்பு மறப்பற்று நிராகரித்து நின்றால்
தனக்கொன்று மில்லை பிறப்பு. 6

குறித்துருவ மெல்லாங் குறைவின்றி மாற்றில்
மறித்துப் பிறப்பில்லை வீடு. 7

பிதற்று முணர்வை யறுத்துப் பிரபஞ்ச
விகற்ப முணர்வதே வீடு. 8

பிறப்பறுக்க வீடாம் பேருவமை யின்றி
அறுத்துருவ மாற்றி யிரு. 9

ஓசை யுணர்வோ டுயிர்ப்பின்மை யற்றக்கால்
பேசவும் வேண்டா பிறப்பு 10

## பிறப்பறுதல்

தன்னை யறியு மறிவு தனைப்பெறில்
பின்னைப் பிறப்பில்லை வீடு. 1

அறம்பாவ மாயு மறிவுதனைக் கண்டால்
பிறந்துழல வேண்டா பெயர்ந்து 2

சிவனுருவந் தானாய்ச் செறிந்தடங்கி நிற்கில்
பவநாச மாகும் பரிந்து. 3

உறக்க முணர்வோ டுயிர்ப்பின்மை யற்றால்
பிறப்பின்றி வீடாம் பரம். 4

நினைப்பு மறப்பு நெடும்பசியு மற்றால்
அனைத்துலகும் வீடா மது. 5

உடம்பிரண்டுங் கெட்டா லுருபய னென்றுண்டு
திடம்படு மீசன் றிறம். 6

தன்னை யறிந்து செறிந்தடங்கித் தானற்றால்
பின்னைப் பிறப்பில்லை வீடு. 7

மருளன்றி மாசறுக்கின் மாது வெளியாய்
இருளின்றி நிற்கு மிடம். 8

விகாரங் கெடமாற்றி மெய்யுணர்வு கண்டால்
அகாரமாங் கண்டீ ரறிவு. 9

சிந்தை யாங்காரஞ் செறிபுல னற்றக்கால்
முந்தியே யாகுமாம் வீடு. 10

## தூயவொளி காண்டல்

தோன்றிய தெல்லாந் தொடக்கறுத்துத் தூய்வெளியாய்த்
தோன்றியக்காற் றூய வொளி. 1

தெளிவாய தேச விளக்கொளியைக் காணில்
வெளியாய வீடதுவே யாம். 2

மின்போ லுருவ விளக்கொளிபோல் மேற்காணில்
முன்போல மூலம் புகும். 3

பளிங்கு வலம்புரி பானிகர்த்த தாகில்
துளங்கொளியாந் தூய நெறி. 4

சங்கு நிறம்போற் றவள வொளிகாணில்
அங்கையி னெல்லியே யாகும். 5

துளங்கிய தூண்டா விளக்கொளி காணில்
விளங்கிய வீடாம் விரைந்து. 6

மின்மினி போன்ற விளக்காகத் தான்றோன்றில்
அன்னப் பறவையே யாம். 7

உள்ளொளி தோன்றி லுணரி லருளொளி
அவ்வொளி யாதி யொளி. 8

பரந்த விசும்பிற் பரந்த வொளிகாணில்
பரம்பரமே யாய வொளி. 9

ஆதி யொளியாகி யாள்வானுந் தானாகி
ஆதி யவனுருவு மாம். 10

## சதாசிவம்

பத்துத் திசையும் பரந்த கடலுலகும்
ஒத்தெங்கும் நிற்குஞ் சிவம். 1

விண்ணிறைந்து நின்று விளங்குஞ் சுடரொளிபோல்
உண்ணிறைந்து நிற்குஞ் சிவம். 2

ஆகமுஞ் சீவனு மாசையுந் தானாகி
ஏகமாய் நிற்குஞ் சிவம். 3

வாயுவாய் மன்னுயிராய் மற்றவற்றி னுட்பொருளாய்
ஆயுமிடந் தானே சிவம். 4

எண்ணிறந்த யோனி பலவாய்ப் பரந்தெங்கும்
உண்ணிறைந்து நிற்குஞ் சிவம். 5

ஒன்றேதா னூழி முதலாகிப் பல்லுயிர்க்கும்
ஒன்றாகி நிற்குஞ் சிவம். 6

மூலமொன் றாகி முடிவொன்றா யெவ்வுயிர்க்கும்
காலமாய் நிற்குஞ் சிவம். 7

மண்ணிற் பிறந்த வுயிர்க்கெல்லாந் தானாகி
விண்ணகமே யாகுஞ் சிவம். 8

தோற்றமது வீடாகித் தொல்லைமுத லொன்றாகி
ஏத்தவரு மீச னுளன். 9

நிற்கும் பொருளும் நடப்பனவுந் தானாகி
உற்றெங்கும் நிற்குஞ் சிவம். 10

## தன்பால்

தன்பா லறியுந் தவமுடையார் நெஞ்சகத்துள
அன்பா யிருக்கு மரன். 1

சிந்தை சிவமாகக் காண்பவர் சிந்தையில்
சிந்தித் திருக்குஞ் சிவம். 2

குருவி னடிபணிந்து கூடுவ தல்லார்க்
கருவமாய் நிற்குஞ் சிவம். 3

தலைப்பட்ட சற்குருவின் சந்நிதியி லல்லால்
வலைப்பட்ட மானதுவே யாம். 4

நெறிப்பட்ட சற்குரு நேர்வழி காட்டில்
பிரிவற் றிருக்குஞ் சிவம். 5

நல்லன நூல்பல கற்பினுங் காண்பரிதே
எல்லை யில்லாத சிவம். 6

நினைப்பு மறப்பு மில்லாதவர் நெஞ்சந்
தனைப்பிரி யாது சிவம். 7

ஒன்றி லொன்றில்லாத மனமுடையா ருடல்
என்று மொன்றாது சிவம். 8

நாட்ட மில்லாவிடம் நாட்ட மறிந்தபின்
மீட்டு விடாது சிவம். 9

பஞ்சமா சத்த மறுப்பவர்க் கல்லாஅல்
அஞ்ச லென்னுது சிவம். 10

## அங்கியிற் பஞ்சு

அங்கியிற் பஞ்சுபோ லாகாயத்தே நினையில்
சங்கிக்க வேண்டாஞ் சிவம். 1

மெய்ப்பா லறியாத மூடர்தம் நெஞ்சத்தின்
அப்பால தாகுஞ் சிவம் 2

நெஞ்சகத்து ணோக்கி நினைப்பவர்க் கல்லாஅல்
அஞ்சலென் னுது சிவம். 3

பற்றிலா தொன்றினைப் பற்றினு லல்லது
கற்றதனு லென்ன பயன். 4

தம்மை யறிவாரைத் தாமறிந்து கொண்டபின்
தம்மை யறிவாரோ தான். 5

அசபை யறிந்துள்ளே யழலெழ நோக்கில்
இசையாது மண்ணிற் பிறப்பு. 6

இமையாத நாட்டத் திருந்துணர் வாருக்
கமையாத வானந்த மாம். 7

துரியங் கடந்த சுடரொளியைக் கண்டால்
மரணம் பிறப்பில்லை வீடு. 8

மதிபோ லுடம்பினை மாசற நோக்கில்
விதிபோ யகல விடும். 9

சீவன் சிவலிங்க மாகத் தெளிந்தவர் தம்
பாவ நசிக்கும் பரிந்து. 10

## மெய்யகம்

மெய்யகத்தி னுள்ளே விளங்குஞ் சுடர்நோக்கில
கையகத்தி னெல்லிக் கனி. 1

கரையற்ற செல்வத்தைக் காணுங் காலத்தில்
உரையற் றிருப்ப துணர்வு. 2

உண்டு பசிதீர்ந்தார்போ லுடம்பெல்லா அங்
கண்டுகொள் காதல் மிகும். 3

உரைசெயு மோசை யுரைசெய் பவர்க்கு
நரைதிரை யில்லை நமன். 4

தோன்றுத தூயவொளி தோன்றியக்கா லுன்னைத்
தோன்றுமற் காப்ப தறிவு. 5

வாக்கு மனமு மிறந்த பொருள்காணில்
ஆக்கைக் கழிவில்லை யாம். 6

கண்ணகத்தே நின்று களிதருமே காணுங்கால்
உண்ணகத்தே நின்ற வொளி. 7

ஆனந்த மான வருளை யறிந்தபின்
தானந்த மாகு மவர்க்கு. 8

மறவாமற் காணும் வகையுணர் வாருக்
கிறவா திருக்கலு மாம். 9

விண்ணிறைந்து நின்ற பொருளே யுடம்பதன்
உண்ணிறைந்து நின்ற வொளி. 10

## கண்ணாடி

கண்ணாடி தன்னி லொளிபோ லுடம்பதனுள்
உண்ணாடி நின்ற வொளி. 1

அஞ்சு புலனின் வழியறிந்தாற் பின்னைத்
துஞ்சுவ தில்லை யுடம்பு. 2

நாபி யகத்தே நலனுற நோக்கிடில்
சாவது மில்லை யுடம்பு. 3

கண்டத் தளவிற் கடிய வொளிகாணில்
அண்டத்த ராகு முடம்பு. 4

சுந்திர னுள்ளே தழலுற நோக்கினால்
அந்தர மாகு முடம்பு. 5

ஆர்க்குந் தெரியா வுருவந்தனை நோக்கில்
பார்க்கும் பரமா மவன். 6

வண்ண மில்லாத வடிவை யறிந்தபின்
விண்ணவ ராகு முடம்பு. 7

நெற்றிக்கு நேரே நிறைந்த வொளிகாணில்
முற்று மழியா துடம்பு. 8

மாதூ வெளியின் மனமொன்ற வைத்தபின்
போதக மாகு முடம்பு. 9

சுத்தமோ டொன்றி மனமு மிறந்தக்கால்
முற்று மழியா துடம்பு. 10

## சூனியகால மறிதல்

இரவி யழலுருவாய் நீண்ட வெளிகாணில்
அரவணையா னுகு முடம்பு. 1

உருவந் தழலாக வுள்ளத்தே சென்று
புருவத் திடையிருந்து பார். 2

புருவத் திடையிருந்து புண்ணியனைக் காணில்
உருவற்று நிற்கு முடம்பு. 3

அகம்புறம் போராப் பொருளை யறியில்
உகம்பல காட்டும் உடம்பு. 4

ஆவி பாழ்போகா தடக்கி யிருந்தபின்
ஓவிய மாகு முடம்பு. 5

அஞ்சு மடக்கி யறிவோ டிருந்தபின்
துஞ்சுவ தில்லை யுடம்பு 6

தீயாக வுளளே தெளிவுற நோக்கினல்
மாயாது பின்னை யுடம்பு. 7

தானந்த மின்றித் தழலுற நோக்கிடில்
ஆனந்த மாகு முடம்பு. 8

ஒழிவின்றி நின்ற பொருளை யுணரில்
அழிவின்றி நிற்கு முடம்பு. 9

பற்றற்று நின்ற பழம்பொருளைச் சிந்திக்கில்
முற்று மழியா துடம்பு. 10

## சிவயோக நிலை

அடிமிசை வாயு வடுத்தடுத் தேகி
முடிமிசை யோடி முயல். 1

உண்ணுடி வாயு வதனை யுடனிறப்பி
விண்ணேடு மெள்ள விடு 2

மெள்ள விரேசித்து மெய்விம்மிப் பூரித்துக்
கொள்ளுமின் கும்பங் குறித்து. 3

இரேசக முப்பத்தி ரண்டது மாத்திரை
பூரகம்பத் தாறு புகும். 4

கும்பக நாலோ டறுபது மாத்திரை
தம்பித் திடுவது தான். 5

முன்னமி ரேசி முயலுபின் பூரகம்
பின்னது கும்பம் பிடி. 6

ஈரைந் தெழுபத்தீ ராயிர நாடியுஞ்
சேருமின் வாயுச் செயல். 7

வாசலீ ரைந்து மயங்கிய வாயுவை
ஈசன்றன் வாசலி லேற்று. 8

தயாவினில் வாயு வலத்தி லியங்கில்
தியான சமாதிகள் செய். 9

ஆதியா மூல மறிந்தஞ் செழுத்தினைப்
பேதியா தோது பிணை 10

## ஞான நிலை

தற்புருட மாமுகந் தன்னிற் றனியிருந்
துற்பன மஞ்சை யுரை. 1

தற்புருட மாமுகமேற் றாரகைதன் மேலே
நிற்பது பேரொளி நில். 2

ஓதிய தற்புரு டத்தடி யொவ்வவே
பேதியா தோது பிணை. 3

கொழுந்துறு வன்னி கொழுவுற வொவ்வில்
எழுந்தா ரகையா மிது. 4

மறித்துக் கொளுவிடு வன்னி நடுவே
குறித்துக் கொளுஞ்சீலைக் கூட்டு. 5

காலுந் தலையு மறிந்து கலந்திடில்
சாலவும் நல்லது தான். 6

பொன்னொடு வெள்ளி யிரண்டும் பொருந்திடில்
அன்னவன் றாள துவே யாம். 7

நின்ற வெழுத்துட னில்லா வெழுத்தினை
யொன்றுவிக்கி லொன்றே யுள. 8

பேசா வெழுத்துடன் பேசு மெழுத்துறில்
ஆசான் பரநந்தி யாம். 9

அழியா வுயிரை யவனுடன் வைக்கில்
பழியான தொன்றில்லை பார். 10

## ஞானம் பிரியாமை

பிறந்திட மாலிடம் போரா திருப்பின்
இறந்திடம் வன்னி யிடம் 1

சாகா திருந்த தலமே மவுனமது
ஏகாந்த மாக விரு. 2

வெளியில் விளைந்த விளைவின் கனிதான்
ஒளியி லொளியா யுறும். 3

மறவா நினையா மவுனத் திருக்கில்
பிறவா ரிறவார் பினை. 4

குருவாம் பரநந்தி கூடல் குறித்தாங்
கிருபோது நீங்கா திரு. 5

சுந்திரச் சோதி துலங்கு மிடமது
மந்திரச் சக்கரமு மாம். 6

தூராதி தூரஞ் சொல்லத் தொலையாது
பாராப் பராபரம் பார். 7

ஈரொளி யீதென் றிறைவ னுரைத்தனன்
நீரொளி மீது நிலை 8

அந்தமு மாதியு மில்லா வரும்பொருள்
சுந்தர ஞானச் சுடர். 9

இதுமுத்தி சாதனமென் றேட்டில் வரைந்து
பதிவைத் தனன்குரு பார். 10

## மெய்ந்நெறி

செல்லல் நிகழல் வருங்கால மூன்றினையுஞ்
சொல்லு மவுனத் தொழில். 1

பஞ்சிற் படுபொறி போலப் பரந்திருந்து
துஞ்சாது ஞானச் சுடர். 2

இமைப்பிற் பரந்தங் கொடுங்கு மின்போல்
நமக்குட் சிவன்செயல் நாடு. 3

குவித்து மனத்தைக் குவித்துள்ளே யோங்கில்
செவித்துப் பெறுவ தெவன். 4

காலுந் தலையு மொன்றாகக் கலந்திடம்
நாலா நிலையென நாடு. 5

மூல நிலமிசை மூன்று நிலத்தினில்
ஆல மருந்துஞ் சிவம். 6

எழுஞ்சுட ருச்சியின் மேன்மனம் வைக்கத்
தொழிலொன் றிலாத சுடர். 7

அடைத்திட்ட வாசலின் மேன்மனம் வைத்துப்
படைத்தவன் தன்னையே பார். 8

அறுபதொ டாறு வருட மிதனை
உறுதிய தாகயுணர் 9

அட்டமா சித்தி யடையுமோ ராண்டினில்
இட்ட மிதனைத் தெளி. 10

## துரிய தரிசனம்

வன்னிய தெட்டு மதியம் பதினாறு
முன்னிய பன்னிரண்டு முள். 1

சூரியன் வன்னியொன் றாகிடிற் சோமனும்
பாரு மினிது பயன். 2

மதியொடு வன்னியொன் றாகவே வந்தால்
கதிரவ னுமென்று காண். 3

மதிக்குட் கதிரவன் வந்தங் கொடுங்கில்
உதிக்குமாம் பூரணைச் சொல். 4

தோற்றுங் கதிரவ னுண்மதி புக்கிடில்
சாற்று மமாவாசை தான். 5

வன்னி கதிரவன் கூடிடி லத்தகை
பின்னிவை யாகு மெலாம் 6

அமாவாசை பூரணை யாகு மவர்க்குச்
சமனு முயிருடம்பு தான். 7

அண்டத்திலு மிந்த வாறென் றறிந்திடு
பிண்டத்திலு மதுவே பேசு. 8

ஏறு மதிய மிறங்கிடி லுறங்கிடும்
கூறுமப் பூரணை கொள். 9

உதிக்கு மதியமுங் கண்டங் குறங்கில்
மதிக்கு மமாவாசை யாம். 10

## உயர்ஞான தரிசனம்

கொண்டிடு மண்டல மூன்றங்கி தன்னையிப்
பிண்டமு மூழி பிரியா. 1

வெள்ளி புதனொடு திங்களிட மெனத்
தள்ளுமின் கால சரம். 2

செவ்வாய் சனிநா யிறுவல மாகவே
கொள்ளிலிவ் வாறிடரு மில். 3

வளர்பொன் னிடம்பிறைத் தேய்வு வலமாம்
வளர்பிறை யென்றே மதி. 4

வலத்திற் சனிக்கே யிராப்பகல் வாயு
செலுத்து போரா து செயல். 5

இயங்கும் பகல்வல மிராவிடம் வாயு
தயங்குறல் நாடிக்குட் டான். 6

அரசறி யாம லவன்பே ருறைந்துத்
தரைதனை யாண்ட சமன். 7

கல்லாத மூடர் திருவுருக் கொண்டிடச்
செல்லாத தென்ன செயல். 8

திருவருட் பாலைத் தெரிந்து தெளியில்
குருவிருப் பாமென்று கொள். 9

கற்கிலுங் கேட்கிலும் ஞானக் கருத்தற
நிற்கில் பரமனை வீடு. 10

---

சூரியானந்தர் அருளிச்செய்த

# சூரியானந்தர் சூத்திரம்–13

—::—

## எண்சீர் விருத்தம்

சீர்கொண்ட அருமறையின் பொருளாய் நின்ற
தெட்சிணா மூர்த்தியுடைப் பாதங் காப்பு ;
பேர்கொண்ட சூத்திரமே பதின்மூன் றுக்குள்
பிரித்துவைப்பேன் பூவழலை பெருமை யெல்லாம்
நீர்கொண்ட வூசரத்தின் மகிமை தன்னை
நிசமாகச் சொல்லாமல் மறந்து விட்டார்
ஆர்கொண்ட வேணியனா ருமக்குச் சொன்னார்
ஆத்தாளு மடியேனுக் கறைந்திட் டாளே. 1

அறைந்திட்ட வகையேது வுப்பே ஆதி
ஆகாச விந்துவினால் செனித்த பிண்டம்
மறைந்திட்டா வுப்பதுவே காரங் காரம்
மண்ணான வுப்பதுவே சாரஞ் சாரம்
கறைந்திட்ட வூசருத்துக் கேற்ற வுப்பைக்
காணாமற் போனதினாற் கலக்க மாச்சு
இறைந்திட்ட மலசலமாய்க் காண லாகும்
இந்தவிரண் டோரிடத்தி லிருக்கும் பாரே. 2

இருக்கின்ற வுப்பினுக்கு மூலா தாரம்
இந்துவொன் றிரவியொன்று வன்னி யொன்று
பெருக்கின்ற வீசனுக்குச் சூட்ச முந்தான்
பிருதிவியே தூலமெனப் பேச லாகும்
கருக்கொண்ட யோனியிலே நாலு பேதம்
கருதையிலே யெழுதோற்றங் காண லாகும்
உருக்கொண்ட சீவசெந்தும் அனேக முண்டாம்
உற்றுப்பா ரண்டபிண்ட முண்மை தானே. 3

தானாக நின்றதுவே பாரு மாச்சு
சகலசித்துப் பிரகிருதி யுயிரு மாச்சு
வானாகி நின்றதுவே சாட்சி யாகும்
மன்னுயிரெல் லாஞ்சோதி மயமு மாச்சு
ஊனாகப் பிறந்த சடம் பிறவா முத்திக்
குதவியல்லோ பிரகிருதி யோனி யோனி
கோனாக நின்றகுரு வுபதே சத்தாற்
குழிபுகுந்தே யுப்பெடுத்துக் கொள்ளு வாயே. 4

கொள்ளுவார் முப்பூவின் முதலா மங்கம்
கூர்ந்துபா ருசரத்தைக் கொள்கிக் கொண்டு
விள்ளுவார் யோனியின் படிவி டாமல்
மேலேற்ற மேலுதவி மேவிற் றூனல்
துள்ளுவா ரிந்துப்புச் சிவமு மாச்சு
துருசுப்புப் பணவிடையாற் றெருந்த மேற்றித்
தள்ளுவார் பிரளயமோர் கோடி காலம்
சகலசித்தும் மூலவுப்புத் தன்னி லாச்சே 5

ஆச்சப்பா மூலவுப்புக் கஞ்சு தீட்சை
ஆதியுப்புக் கப்படியே தீட்சை யாகும்?
மூச்சப்பா தசதீட்சை யார்தான் செய்வார்?
மூலகுரு செய்வார்பின் னூர்தான் செய்தார்!
ஏச்சப்பா கொங்கணவர் தீட்சை மார்க்கம்
ஏற்றிவிட்டார் முப்பத்தி ரண்டா மென்று
பேச்சப்பா பேசினதி லாவ துண்டோ
பிண்டவுப்புக் கேழுவிதம் பேச லாமே. 6

பேசுகின்ற வுப்பினுக்கு மேலே அங்கம்
பெருமையுள்ள சித்தர்கள்தாம் செய்யும் மார்க்கம்
வீசுகின்ற சூதத்தின் துறைக ளெல்லாம்
மிஞ்சவில்லை மூன்றுநா லஞ்சா னூம்

பாஷையினாற் சொன்னாகள் வெளிதோன் றாது
பாலனுக்குந் தோன்றுமிந்த நூலைப் பார்த்தால்
கூசல்மிஞ்சிப் போடுதென்று என்றன் நூலைக்
குகைக்குள்மறைத் திட்டதனாற் கூறுவேண் ணாதே. 7

ஒண்ணான நூலாகு மிருநூற் றைந்தில்
ஓதிவைத்த கருத்தெரியு மிருபத் தைந்திற்
கண்ணாகு மிந்தநூல் பதின்மூன் றுக்குள்
கருவையொரு கற்பமுறை காட்டி வைத்தேன்
வண்ணானை யறியாத பேருக் கெல்லாம்
வாதியென்ற பேரேது வாத மேது ?
பெண்ணாணின் சுரோணிதமும் விந்துங் கண்டால்
பேரான பூரணத்தின் பெருமை தானே. 8

பெருமையென்ற காயசித்தி பண்ண விட்டாற்
பேரான அடியோடு முடியும் போச்சு
அருமையென்ற குண்டலிக்குள் வராகி பூசை
அப்பனே கண்டமதி லங்கென் றாணு
விருவமையத் துள்ளேவும் மென்று கும்பி
போதமென்ற மவுனவித்தை கைக்குள் ளாச்சு
தருமவித்தை பிரகிருதி மூச்சா டாது
சகத்திரத்தெண் மலர்ப்பதத்திற் சார்ந்து நில்லே. 9

நில்லாத மூலிகையாற் காய சித்தி
நிட்டைமவு னத்தாலே யோக சித்தி
கெல்லாத மூலமதில் அபான சுத்தி
கூடாம லிருந்துவிட்டா லேது முத்தி ?
சொல்லாத வீசனுப்பு மதிசூ தத்திற்
சூட்டினேன் வெள்ளையென்ற சூடன் வித்தை
எல்லாரு மிருந்தவிதம் பாட மாட்டார்
இதமான சூதகத்தின் வெடியுப் பாச்சே 10

உப்பான வெடியுப்புச் செயநீ ராலே
ஒருகோடி வித்தையெல்லா மாட லாகும்
அப்பான கல்லுப்பு நீரி னாலே
ஆடலாந் தருசினுடை அங்க மெல்லாம்
செப்பாத யோனிருது செந்நீர் மட்டாற்
சிவன்வேறு தானுண்டே யிவனல் லாமல்
தப்பாமற் செய்தென்ன சவுக்கா ரந்தான்
சட்டிமுதற் பவுரணையுந் தாக்கிப் பாரே 11

தாக்கிப்பா ராகாசஞ் சருவ சாட்சி
சதாசித்தம் அந்தரமே சாடி நின்றால்
நோக்கிப்பார் வாயுலயப் படுவ தற்கு
நூதனமாய் வன்னியதிற் கூட வேணும்
மூக்கிற்று ணோடுவது பிராண வாயு
மூலமெனும் வளையமது நகாரந் தன்னைத்
தூக்கித்தான் விட்டவர்க்கு யோக மெய்தும்
சூரியா னந்தனிவை சொல்லும் நூலே 12

சொல்வதென்ன ரேசகத்தை வெளிவி டாதே
துடியான பூரகத்தைப் பின்னி டாதே
வெல்வதென்ன கும்பகத்தை யடிவி டாதே
மேலேற்று மாத்திரையை மறந்தி டாதே
செல்வதென்ன கற்பத்தை மறந்தி டாதே
செந்தூரஞ் சேர்க்கையிலே சிதறி டாதே
கொல்வதென்ன அமுர்தயிலே பிறக்கு மிந்தக்
குளிகைக்குச் சாரணைசெய் குணமு முற்றே. 13

———

# காய கப்பல்

ஏலேலோ ஏகரெதம் சர்வரெதம்
பிரமரெதம் ஏலேலோ ஏலலிலோ.

பஞ்சபூதப்பலகை கப்பலாய்ச் சேர்த்து
பாங்கான ஓங்குமரம் பாய்மரங்கட்டி
நெஞ்சுமனம்புத்தி ஆங்காரஞ் சித்தம்
மானுபிமானங் கயிறாகச் சேர்த்து
ஐந்தெழுத்தைக்கட்டி சாக்காக யேற்றி
ஐம்புலன் தன்னிலே சுக்கானிறுத்தி
நெஞ்சு கடாட்சத்தால் சீனிப்பாய்தூக்கி
சிவனுடைய திருப்பொருளை சிந்தையில்நினைந்து
தஞ்சலானவெள்ளத்தில் தானே அகண்டதரம் போகுதடா
· ஏலேலோ ஏலேலோ. 1

களவையுங் கேள்வையுந் தள்ளுடா தள்ளு
கருணைக்கடலிலே தள்ளுடா கப்பல்
நிற்குணந் தன்னிலே தள்ளுடா தள்ளு
நிறைந்தபரி பூரணத்தால் தள்ளுடாகப்பல்
மூக்கணை மூன்றையுந் தள்ளுடா தள்ளு
முப்பாழுக் கப்பாலே தள்ளுடாகப்பல்
திக்குத் திசையெங்கும் தள்ளுடா தள்ளு
திருமந்திரஞ்சொல்லி தள்ளுடா கப்பல்
பக்கமுடன் கீழ்மேலும் தள்ளுடா தள்ளு
பரவெளிக் கப்பாலே போகுதடாகப்பல்
ஏலேலோ ஏலேலோ. 2

தந்தைதாய் சுற்றமும் சகலமும்மறந்து
தாரம் சகோதரம் தானதும்மறந்து
பந்தமும் நேசமும் பாசமும்மறந்து
பதினாலு லோகமும் தனையும்மறந்து
இந்திரியர்கள் இரட்சித்த கப்பலிலேறி
ஏகாந்த மானதொரு கடலிலேதள்ளி
அந்திரமானவெளி அருளானந்த வெள்ளத்தில்
அழுந்துதையோகப்பல் ஏலேலோ ஏலேலோ. 3

# திருவள்ளுவர் ஞானம்

—::—

## காயசித்தி

காயம்வலுத்தது மாய்கைமறைந்தது
கவலெதெளிந்தது சகலமொழிந்தது
நேயனருள்பணிந் தாக்கைவலுத்தது
நீயென்றுநானென்று நேசமொழிந்தது—காயம். 1

கூற்றுவனென்கிற கொடூரமழிந்தது
கோடானகோடி வியாதிபிறந்தது
யேற்றியிருந்த இகழ்ச்சிமறந்தது
என்னுள்ளேயீஸ்பரன் தன்னையறிந்தது—காயம். 2

வாசமாய்நித்திரை பாசமறந்தது
வையகத்தோர்கள் வசியம்பிறந்தது
தூஷணையற்றது பூசைநைவேத்தியஞ்
சொல்லுமந்திரசெபஞ் சொக்கியும்போச்சுது—காயம். 3

தத்துவந்தொண்ணூற்று றும்பிரிந்தது
தாதுகள்நாடி சடமும்வேறுச்சுது
சுத்தசலமென்ற முரிதேனுச்சுது
சுகஞானதீபச்சுழியைக் காணலாச்சுது—காயம். 4

காமப்பாலுண்ட கருத்துமழிந்தது
காமக்குரோதலோபங் கண்டிதமாச்சுது
வாமப்பால்கொண்டு மதியொளிகண்டு
மகிச்சியடைந்து வச்சிரதேகமாச்சுது—காயம். 5

மூலத்தினுள்ள முப்பாழும்மழிந்தது
முன்னமேயன்ன மயமும்பிரிந்தது
ஞானத்திலேறவும் வாசிவளரவும்
ஞானசிரோமய கியானவானுண்டையே—காயம். 6

ஓராண்டுக்குள்ளே யுடல்வெவ்வேறுச்சுது
ஓங்காரத்துள்ளே யுயிருறவாச்சுது
நீங்காதவாசி நிராமயமாச்சுது
நின்னுள்ளேநின்மயம் நேசமதாச்சுது—காயம் 7

பிராணபவாசியும் பின்னிட்டிழுக்காமல்
பேசுமூலாதாரம் வாசம்பொருந்திட
வீறுனவாயுவுந்தச பத்துங்கூடியு
மேவியொருமித்துத் தாவியுமொன்றதாய்—காயம். 8

பத்துமொருமித்துப் பாய்ந்திடுநாடிதான்
நித்தம்வாசியது நேர்பிசகாமலும்
சத்துஞ்சித்தானந்த முத்தியருள்தருஞ்
சித்தியனுக்கிரக சுத்தமதிமலர்—காயம். 9

நித்தம்வாசியூதி நின்றுருசாதியும்
மற்றதுகைப்பு அப்புவஞ்சுன்னமாம்
பெற்றபேரிப்படிப்பேர் பெறுஞானிகள்
உத்தமர்சொல்லு முண்மையிதாண்டையே—காயம். 10

வாசிநிலையாதேன் மாண்டிடுந்தேகமும்
பாசம்வைத்து விசுவாசித்துஊதிடும்
பேசப்பேச வெகுகோடிரகசியம்
ஈசனருள்படி யனுக்கிரகநிலையினில்—காயம். 11

இந்தவாசியூதி எத்தேசகாலமும்
அந்தப்படி யனுக்கிரகநிலையினில்
சிந்தைவைக்காமலுஞ் செய்கைவிதப்படி
விந்தையதாக விளங்கினாராண்டையே—காயம். 12

கட்டும்வாசியறுகால் பன்னிரண்டினால்
நெட்டிட்டேறுமலும் நீஞ்சிடநீஞ்சிட
மட்டுப்படுமிந்த அம்பிகாயோகமுங்
தட்டுப்படுங்கனம் பலசோதியில—காயம். 13

அட்டியில்லாமலு மாண்டையினிக்கேளும்
ஓட்டிக்கண்டதாரை ஓயாமலூதிடுங்
கெட்டிகெட்டிவச்சிர தேகமதாகிவிடும்
நெட்டிநெட்டியேற நிர்மலசுரூபமே—காயம். 14

நாளுநாளுக்கு வினடிவினடிகொண்
டாளுந்தினந்தின மப்படியேறினால்
ஏழுமேழும்பதி னாலுலகங்களும்
சூழுஞ்சூழுஞ் சுகாதீதங்காணுமே—காயம் 15

———

# பொருளடக்கம்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | சிவ வாக்கியர் பாடல் | .... | 1 |
| 2. | பட்டினத்தார் பாடல் | .... | 79 |
| 3. | பத்திரகிரியார் மெய்ஞ்ஞானப் புலம்பல் | .... | 121 |
| 4. | பாம்பாட்டி சித்தர் பாடல் | .... | 137 |
| 5. | இடைக்காட்டுச் சித்தர் பாடல் | .... | 159 |
| 6. | அகப்பேய்ச் சித்தர் பாடல் | .... | 174 |
| 7. | குதம்பைச் சித்தர் பாடல் | .... | 187 |
| 8. | கடுவெளி சித்தர் பாடல் | .... | 191 |
| 9. | அழுகணி சித்தர் பாடல | .... | 196 |
| 10. | வாலைக் கும்மி | .... | 202 |
| 11. | உரோம ரிஷி ஞானம் | .... | 219 |
| 12. | திருமூல நாயனர் ஞானம் | .... | 228 |
| 13. | கருவூரார் பூஜா விதி | .... | 237 |
| 14. | ஞானக் கும்மி | .... | 246 |
| 15. | சுப்பிரமணியர் ஞானம் | .... | 273 |
| 16. | வால்மீகர் சூத்திர ஞானம்-16 | .... | 283 |
| 17. | இராமலிங்க சுவாமிகள் ஞானம் | .... | 288 |
| 18. | அகஸ்தியர் ஞானம் | .... | 296 |
| 19. | சட்டைமுனி ஞானம் | .... | 311 |
| | ,, முன் ஞானம்-100 | .... | 313 |
| | ,, பின் ஞானம்-100 | .... | 342 |
| 20. | காகபுசண்டர் ஞானம்-80 | .... | 372 |
| | ,, உபநிடதம் | .... | 395 |
| | ,, காவியம் | .... | 405 |
| | ,, குறள் | .... | 415 |
| | ஔவையார் ஞானம் | .... | 417 |
| | சூரியானந்தர் சூத்திரம் | .... | 441 |
| | காயகப்பல் | .... | 445 |
| | திருவள்ளுவர் ஞானம் | .... | 446 |


வாகீஸ்வரி அச்சகம், சென்னை-1. (1967)

# மாயாஜால மர்மங்கள்

[நான்குபாகங்கள் அடங்கியது]

## விலை ரூ. 3–00

இந்நூலில் வேண்டிய அதர்வண வித்தைகளும், மோடி வித்தைகளின் இரகசியங்களும், மற்றும் யாவரும் பிரமிக்கத தக்க பல ஜாலங்கள், பல சித்துகள் விளையாடும் மை வகைகளும், அஞ்சண மைகளும், சிங்கிவித்தை, சொக்குப்பொடியின் சூக்ஷி, அஷ்டகர்ம கரு மை, மற்றும் முனிவர்கள், வாராகி, ஜாலக்காள், குட்டிச்சாத்தான், யக்ஷணி, அநுமான், மாடன், பகவதி, இருளிகாட்டேரி வசியங்களும், அதற்கு வேண்டிய மந்திரங்களும் மற்றும் கோகர்ன கஜகர்ன இந்திர மகேந்திர ஜாலங்களும், குழந்தைகளின் சகல தோஷங்களுக்கும் விபூதிபிடித்தல், வேப்பிலையடித்தல், பேய்பிசாசுகளை ஓட்டுதல், பில்லி சூனியங்களை அகற்றல், சதிபதிகள் பிரியாதிருத்தல், ஈடுமருந்தை முறித்தல், மற்றும் பாம்பு, தேள், நாய், பூனை, எலி இதுபோன்ற பல விஷஜெந்துக்களின் கடி விஷங்களை யொழித்தல், இன்னும் ஜாலக்காளின் ஜெகஜால வித்தைகள், முள்ளின்மீது படுத்தல், நெருப்பை கையிலள்ளுதல், நெருப்பு மிதித்தல். நெருப்புசட்டி ஏந்தும் சூக்ஷம், நெருப்பை மடியில் கட்டுதல், ஜலத்தின்மீது படுத்தல், ஜலத்திலுட்காருதல், வயிற்றில் ஈட்டிபாய்ச்சுதல், மோடியின் மும்முரமான வித்தைகள், வனவிலங்குகளை அடக்கி ஆளுதல், உடுக்கையை உடைத்தல், கன்றுகுட்டியின் தலை கத்துதல், உண்ணுவிரதமிருத்தல், ஆட்டுமத்தையை மாட்டுமத்தையாக்குதல், அந்தரமாக நிற்குதல், குளத்திலுள் சென்று லிகிதம் எழுதுதல், பந்தயம் கெலித்தல், பாணுகொம்பு பாட்டு பாடுதல், இதுபோன்ற எண்ணிலடங்காத ஏராளமான ஜால வித்தைகள் இதில் அடங்கியுள்ளது.

எமது விலாசம்:—

ஆர். ஜி. பதி. கம்பெனி,

4, வெங்கட்ராமய்யர் தெரு,

சென்னை-1.